
3L
3rm 211,N09PR
N091
161402

சை நோக்கி, க், ங் ஆக, மலித்தல் விகாரம்
பெற்றதெனக் கூறுவன். சார்பெழுத்தென்பது
மரபாயினும், ஆய்தம் இடைசார்ந்தல்லது ஏனை
யக்குற்றியலுகரம் குற்றியலிகரம் போலாது
கடைசார்ந்துவராதெனவும், கடைசார்வது மற்
றிரண்டுமே எனவும், உணர்த்தற் பொருட்டு,
"கடையே சார்ந்து வரன் மரபின் மூன்று +
அலம்," "அலம் = பகை, முரண்," மூன்
றென்பது முரணும் எனவுமுணர்த்தற்கென்க.
"மூன்று + அல" எனக்கொளினு மிழுக்கா
தென்க. "எனப்படுப," "என்ப" இவையநு
வதித்தல் எனமட்டும் விடுத்து, நச்சினார்க்கினி
யர் முதலினர் கூறிய உரையினைப், போலியுரை
யெனத்துணிந்துரைத்தனர். 'எழுத்து' என்பது
ஒரு பொருளெனக்கொண்டு, அ, ஆ என்பன
பெயரென்றல் பொருந்தாதென்றார். சப்தரூபப்
பொருளுணர்வினாசிரியருரைத்த அநுவாத ஏது
வை யோசித்து, சப்தப்பெயரு முறையுந்தொ
கையும் வகுக்கி, னிழுக்காவதெவ்வாறோ அறிகி
லன். சப்தமேற்க ரூபமும், ரூபமேற்கப்பெய
ரும், பெயரேற்க முறையும், முறையேற்கத்தொ
கையும், இன்றியமையாவாம். அக்கினியிருப்
புழிப் புகையும், புகையிருப்புழி யக்கினியும்,
இன்றியமையாவாகலின். இம்மாயா உடம்பாடி
லாத நன்னூலார் "அணுத்திரளொலி எழுத்து"
என்றதானுமுணர்க. "சார்ந்துவரன்மரபினெ"
ன்பதை ஆசிரியர் கொண்டு கூட்டி யுளராகலா
னும் அறிக. தவிர மேற்கூறிய 'அக்ஷரம்' அகா
ராதிக்ஷகாராந்தம் என விற்பத்தியாயதுள் பெ
யருமுறையுந் தொகையு மமையாக் கிடந்தமை
யும் அறிக.

5. "எழுதப்படுதலி னெழுத்தே" என்
புழி, எழுதப்படும் சித்திரமும் எழுத்தாமென்ன
முரண்படுமாகையால், இருசு
மிருது, கண்டியம், ஜிஃவம், ஓ
ரேபம், அநுதாத்தம், உதா
இலட்சணம் வாய்ந்து பாஷா துவா,
எழுதப்படுவதே எழுத்தெனக்கொள்க.
தன்றியும், கிளவியாக்கம் "செயற்கைப்பொரு
யாக்கமொடுகூறல்" என்றமையானே, எழுத்
ஆனது = எழுத்தம் என, அழுத்தம், இழுத்
திருத்தம், பொருத்தம், என்றாற் போல, அ
விகுதிபெற்று, செயற்கைப் பொருள்தந்து, வி
குதிகெட்டு, பொருத்து, மருத்து, என்பபோல
எழுத்து எனச்செயற்கைத் தொழிலாகு பெய
ராக முடிக்க. காலெழுத்து, சத்தமெழுத்து,
என்பது மரபு. நிலம்செய், நீர்பாய்ச்சு, தீமூட்டு
என்பது மரபு. நிலமெழுத்து, நீரெழுத்து, தீ
யெழுத்து என்பது மரபு வழுஉவாம். ஆன
யால், காரண இடுகுறி மரபு முறையான், எ
தென்பது, சப்தத்திற்கே யுரித்தாயது ம
தவிர, இயல்பின் எழ அல்லது இயங்க ஆன
தும், எழுத்த அல்லது இயக்கவானதும் சப்த
மேயாம். ஒலி அல்லது சப்தமென்பது வாயு
விற்குப்பெயரானது முணர்றபாற்று.

(இன்னும் வரும்) பிரசுரகர்த்தா.

II. லௌகிக தந்திர தர்மம்.

நான்முகம்.

லௌகிக சம்மந்தமான ஒவ்வொரு பரியா
யத்திலும், சுவபாவமானது சாஸ்திரத்தினுமுந்
தினது: பிரபஞ்ச ரீதியின் நியமவிசாரமானது,
நெடுநாட்பட்ட அநுஷ்டான சாதிரிசியத்தைப்
பயக்கும். இந்த லௌகிக யுக்தியை, சாஸ்திர
சம்மதமாக்கினது மிக நூதனம்; ஆனால், ர

தொன்றுதொட்டு மனு ...யற்பட்டுளதுமன்றி, ஒவ்வொ ...மனிதரின் முக்கிய பிரேரபணை ...வ் இரு[ந்]தது.

இவ்விஷயமானது, ஐசுவரியார்த்தமென் ... இவ்வைசுவரியார்த்த உபாயத்தைக் கற் ...வாவது விசாரிக்கவாவது வரைந்துளா ...லாம், ஐசுவரியமின்னதென்றும், அதைத் தேடியநுபவிக்கு முறைமையினையுங், குறிப்பிக்கின்றனர்: பாரம்பரியமாக மனுஷியாவஸ்தையிலனைவரும், பிரகிருதத்தில் சிலரும், இவ்வாஞ்சையால் சுகாநுபவங்களை யடையச் செய்யுங் காரண ஏதுக்கள் பலவற்றையுங், குறிக்கின்றனர். இக்காரணங்களனைத்தையும் ஆட்சேபித்து விவகரிக்க, யாதொரு வரையறையும் சாத்திய ...ல்ல; ஆனால், அக்காரணங்கள், இவ்விதமான ...யத்தையும் நோக்கங்களையும் அநுசரித்து, ...நுபவ சித்தமாகுமென்று, தெரிந்தமட்டிற் சொல்லக்கூடும்.

ஐசுவரியமின்னதென்பது, சாதாரணமாக, எவர்க்கும் தெரிந்த விஷயம். இதைப்பற்றிய விசாரமானது, மனுஷியரின் சிலாக்யமான இதர விஷயங்களுக்கு, பாதகமாகுமென்பது இல்லை. பணக்காரனாயிருப்பது ஒரு விஷயம்; ஞானவானாகவும், திடவனாகவும், தர்மவானாகவுமிருப்பது, வேறு விஷயம் என்பதை, யாவரும் அறிவர். ஆகவே, ஓர்வகுப்பார் ஐசுவரியமடைவதெப்படி, சுவாதீனமடைவதெப்படி, வித்தியா புத்தியுத்த சாதுரிய சுசீலராவதெவ்விதம், என்னுங்கேள்வி முற்றிலும் வெவ்வேறு விஷயம். அவ்விஷயங்கள், பரஸ்பரப் பிரதிபந்தமானவையல்லாமல், திருஷ்டாந்தமானவையல்ல. ஒரு ...ப்பார் பண மிகுதியாற் சுயாதீனமானதும் உண்டு; அப்படிக்கன்றிச் சுயாதீனம் பெற்று பணக்காரரானதுமுண்டு, ஒவ்வொரு வகுப்பாரின் மதக்கோட்பாடுகளே, அவர்களுடைய சங்கிரக நிலைமையைப் பிரபலப்படுத்தும்; இதே நிலைமை, சிலசமையம் புத்திப் பிராபல்யத்தையும் ஐக்கியமுறைமையும் அளித்து, மதக்கோட்பாடுகளை பேதிக்கச்செய்யும். இவ்விஷயங்கள் நெருங்கி நடைபெறுமாயினும், வாஸ்தவியமாக வேறுவேறானவை; அவ்வாறன்றி, ஒருக்காலும் பிரதியுக்தமாக பாவிக்கப்பட்டவையன்று.

ஐசுவரியம் இன்னதென்று அநுபவசித்தமாகவிருக்க, அதை வியாக்கியானிக்கவேண்டுவதில்லை. இந்தவியக்தமான விஷயசிந்தனை அபிப்ராய பேதத்தாற் சிதைவுறுதாகையால், மேற்படியபிப்பிராய பேதங்கள் குடிகொண்டு, ஆராய்ச்சியினையும் அநுபவத்தையுஞ் சிதைத்து, பேய் பிடித்தன்னப் பலதேசத்தாரைப்பல்காலாக பங்கப்படுத்தின சரித்திர விசாரணையே, லௌகீக தந்திரோபாயமாம். மேலுபாயத்தை வணிக முறையெனத், தப்பாக மாறுகொளக்கூறினாருமுளர்.

இம்முறையை யநுஷ்டிப்பதில், சனங்களெல்லாம் பிரத்யட்சமாயாவது, நிதானமாயாவது, ஐசுவரியமென்றால் பணமென்றே எண்ணியிருந்தார்கள். சிறந்தலோகங்கள் பணமாக இல்லாவிடினும், பணத்திற்கு மாற்றக்கூடிய தன்மையால், ஐசுவரியமென்றே பாவிக்கப்பட்டன. அக்காலத்திய சித்தாந்தப்படி பணத்தையாவது லோகத்தையாவது குப்பல் குப்பலாகக்கொழிப்பனவெல்லாம், தேசத்தின் ஐசுவரியார்த்தமென்றே யெண்ணப்பட்டன. சிறந்த லோகங்களைப்போக்கடிப்பனவெல்லாம், தேசத்தின் தரித்திர நிலைமையென பாவிக்கப்பட்டன. எந்தத்தேசத்தில்

தங்கம் வெள்ளி வெட்டியெடுக்க அகப்படாதோ அத்தேசத்தின் ஐசுவரியம், பணங்கிடைக்கக்கூடிய பிறதேச வியாபாரமென்றே இருந்தார்கள். வியாபாரத்தில் சுபிட்சமும் மதிப்புமுள்ளவையென்னகிடைத்தாலும், பணவரவு குறைந்தும் போக்கு ...மாகில், அது நஷ்டவியாபாரமென்றே ...த்தார்கள். இத்தனை விளைவுண்டோவென்னச் சரக்குகளை யபரிமிதமா யேற்றுமதி செய்வதையே அநுகூலித்து வர்த்தனை செய்து, சரக்குகளின் கிரய நலத்தால், தங்கமும் வெள்ளியுமே கொண்டு வரலாமென அலகிட்டார்கள். சிறந்தலோகங்களைத்தவிர வேறு எவ்வித இறக்குமதியும், அதன் விலையளவு நஷ்டத்தைத்தந்ததாகவே மதிக்கப்பட்டது. இறக்குமதிச்சரக்குகள் லாபோத்தேசமாகவும், சுவற்ப சிலவில்மதிப்புள்ள ஏற்றுமதிச்சரக்குகளை ஏராளமாகச் செய்யக்கூடிய சுதேசத்தொழிற் கருவிகளாகவும், இருந்தாலொழிய, நஷ்டத்தைத்தருவதாகவெண்ணினார்கள். உலகோர்செய்யும் வியாபாரமெல்லாம், யார் யார் அதிகமாகத் தங்கம் வெள்ளி கொள்வாரெனும், போட்டித்தொழிலென்றும், இதனால் ஒருவர் தமக்குக்கிடைத்தளவு மற்றொருவரையிழக்கச்செய்வதாவது லாபமடையாமற்றடை செய்வதாவது சபலமென்றும் நினைத்திருந்தார்கள்.

அதி புத்தியாலும் மனோதிடத்தினாலும், நீப்பினும் நீங்காத ஒவ்வொரு காலத்திய ஏகைக்கிய மானுஷியபாவமானது, பிற்காலங்களிற் றப்பென்றே வியக்தமாகிறது. தவிர, இப்படித்தப்பானவொன்றை உசிதமென எவ்வாறுகொள்ளக்கூடுமென நினைக்கவும் பிரயாசமே. பணம் என்றால், ஐசுவரியம் என்ற கொள்கையு, மவ்வாறே. இம்மோசத்தினுண்மை நிலை, நினைப்பினும் விபரீதம். குழந்தைகள் சேஷ்டையானது மூதுரையொன்றால் தட்சணம் திருந்தினாற்போலாகிறது. ஆனால், அக்காலத்திருந்திருந்தா, லெவனும் அவ்வியாஜத்தினின்றும் தப்புவானென்றெண்ணவேண்டாம். உலகமே, அவ்வியாஜத்தை அனுஷ்டானத்தினாலும் காரியாதிகளாலும், சாதாரணமாக ஊர்ஜிதப்படுத்திவந்தது. இவ்விஷயம், சகவாச ரீதியிலேயே பிரத்தியட்சமாகவிருந்ததால், இப்பொழுது நாம் வியாஜமென்பது, அக்காலத்தில் உண்மையென்றிருந்தது. தர்க்கித்தாலதனுண்மை புலப்படும்; சிலர் வற்புறுத்தினபடி சொல்வதும் நினைப்பதுமே ஆசாரணையாயிருந்ததால், லௌகீக உபாயங்களைத் தர்க்கித்தறிவோரொருவருமிருக்கவில்லை.

சாதாரணமாய்ப் பேசும்பொழுது, ஐசுவரியமென்பது, பணத்தாற்சொல்லப்படுகிறது. ஏட வன் எவ்வளவு செல்வவானென்று கேட்டான். இத்தனையாயிரம்முதலாளி எனச்சொல்வார்கள். எல்லா வரவு சிலவுகளும், எல்லா லாபநஷ்டங்களும், ஒருவன் செல்வவானாகவும் தரித்திரனாகவும் ஏற்படுமனைத்தும், இவ்வளவு பணம் லேவாதேவியுள்ளவனென்னுங் குறிப்பினாலறியப்படும். ஒருவனுடைய பாக்கியநிலைமையை அறியவேண்டுமானால், அவன் கையிருப்பும், வரவேண்டின பணமும், விலைபெற்ற மற்ற சொத்துக்களும், உண்மையாகவே சேர்க்கப்படும். இச்சொத்துக்கள், அவற்றின் சுவபாவ நலத்தாலன்றி, இவ்வளவு பணம் பொறும் எனும் மதிப்பாற் சேர்க்கப்படும். சொத்துக்கள் ஒரே ரீதியிலிருக்க, அவைகள் குறைந்துவிற்கப்பட்டால், முத... வவானென்றும் விளங்குவான். பணத் ...கும் சுயநலத் துக்கொண்டிருந்தாற், செல்வமிகுவ... பது உண்மை. வர்த்தனை செய்யவே

செலாவணி செய்யவேண்டும். வியாபாரத்தாற் பொருளடைவோ ரெல்லாம், பணத்திற்காகச் சரக்குக் கொள்வதும், சரக்கிற்காகப்பணங்கொள்வதும், செய்கிறார்கள். இவ்விதம்செய்தல், திரவியந்தேடுதற்கின்றியமையாதது. ஆனால், லாபமடைவதற்காகச் சரக்குக்கொள்பவன், தான் போட்ட முதலினும் அதிகமான வரவெண்ணிக் கிரயப்படுத்த உத்தேசித்து, அச்சரக்கைக்கொள்கிறான். இதன் முடிவான நோக்கமெல்லாம், பணம் கிடைப்பதொன்றேயென்று, அவனுக்குங் கூடப்புலப்படுகிறது. சிலவேளை, பணங்கிடைப்பதற்கு பதிலாக மற்றேதேனுங் கிடைக்கிறது; அதே மதிப்புப்பொறுமான சரக்குகளை வாங்குகிறான். இவ்வளவுபணம் பொறுமென மதிப்பிட்டுக்கொண்டு, தான் கொண்ட மதிப்பினுமதிகமாய் விற்றுப்பணம்பெறலாமென்று, நம்புகிறான். ...வ்விதம் ஏராளமாக வர்த்தகஞ்செய்யுங் காலத்...ர், கைம்முதலையடிக்கடி பிறட்டவேண்டி வரு...தாற், சிலசமயம், முதல் அற்பமாகவே கையி...ப்பாகிறது. சரக்கிருப்பதுபற்றி, முதலிருப்ப...இ...கவறிகிறான். அதை விற்று, முதலெடுப்போ, ...புள்ளிபாக்கி தீர்மானமோ, ஆனாலொழிய, வியாபார முடிந்ததென்று, நினைப்பதில்லை. வியாபாரத்தை நிறுத்துங்காலத்தில், சரக்கெல்லாம் விற்றுப்பணமானாலொழிய தனக்கு லாபங்கிடைத்ததென்று, திருப்தியடைகிறதில்லை. பணமென்பது ஐசுவரியமென்றாற்போலவே, யதன் வருவாயும் பணத்தின் மதிப்பாகிறது. இப்பொழுது, ஒருவனுடைய குறை நிறைகளுக்குதவினாலொழியப் ...நபபரி பல...பிரயோசனமென்னவென்றாற், பண...ன்போர்க்கியாதொரு மயக்கமுமேற்...வையனைத்தும் ஐசுவரியத்தின் பல...இல்வாழ்க்கைச் சிறப்பைத்தருவதற்கேற்ற சாதகமென்றுஞ், சொல்லப்படும். ஏனென்றால், ஒருவன்தான்சிலவழிக்குமளவு, தன்னினத்தாரை ஐசுவரியமடையச் செய்வதாம். தன்னிஷ்ட சுகத்திற்காக, எவ்விதத்தில் தனமளித்தாலும், தனம் சுகமாகமாட்டாது. தனத்தினுதவியாலும், மொத்தவரும்படியாலும், அச்சுகத்தையடைவதாம்.

மேற்கண்ட பல காரணங்களாற் பணமே ஐசுவரியமென்று சொல்ல ஆஸ்பதமாயினும், பணத்திற்கும், பணம் பொறும்படியான உடைமைக்குங், கிஞ்சித்தாகிலும் வித்தியாசமுண்டென்று சொல்ல, அதிநுட்ப காரணமொன்றுளது. உண்மையாகவும் நியாயமாகவும், பலான மனுஷியன் ஐசுவரியவானென்பது, அவன் அனுபவிக்கும் நற்பொருள்களைப்பற்றிச்சொல்வதில்லை: அவ்விதப்பொருள்களை யனுபவிக்கவுரிய எஜமானத்துவத்தைப்பற்றியும், ஆபத்காலங்களில் நிர்வகிக்கக்கூடிய வன்மையைப்பற்றியும், அபீஷ்டங்களை நிறைவேற்றக்கூடிய சாமர்த்தியத்தைப் பற்றியுமே, ஐசுவரியவானென்பார்கள். இதனால், பணமேயதன் பெலமென்று ஏற்படுகிறது. இதரவுடைமைகளெல்லாம், அப்பணத்திற்கு விற்கக்கூடியவளவு, பெலத்தைக் கொடுக்கிறது. ஐசுவரியத்தைக் கொடுக்கும் வேறெவ்விதப் பொருளுடைமையும், அப்பொருளுடைமையாது வேறில்லை. அப்பொருட்கு பதிலாக வேறுபொருள் வேண்டுமானால, முதல் முதல், அப்பொருளை விற்றேயாகவேண்டும். இல்லாவிடில், அப்பொருள் தேவையுள்ளவிடமும், அவ்விடத்தில் தனக்குத்தேவையான பொருளுள்ள விடமும்; தன் பொருளைப் பெற்றுத்தனக்குத்தேவையான பொருளைக்கொடுக்க மனமுள்ளவிடமும், நோக்கித் திரிந்து, மெத்தத் தாமதமும் அசௌகரியமும்

அடையநேரிடும். ஆனால், பணத்தினால் விற்பனை செய்யுமெப்பொருள்களையும், உடனே வாங்கலாம். ஆகையால், அதிருஷ்ட வசத்தாலொருவனிடம் பணமாவது, உடனே பணமாகும் பொருளாவதிருக்குமானால், அவன், அவற்றை மாத்திரமல்ல, வேறு எவ்விதப் பொருளையும், பெறக்கூடியவனாகிறான். கொஞ்சங் குறைய, ஐசுவரியத்தின் பயனெல்லாம், அதனாலடையுமபீஷ்டமன்று; அடைவதற்கேதுவாகிய தன்கையிற் சித்தமாயிருக்கும் சங்கிரக பெலமேயாம். இவ்வித ஐசுவரியபெலப்பிராப்தி பணத்தைப்போல, அவ்வளவு சீக்கிரமாகவும், நிச்சயமாகவும், வேறெவ்விதப் பொருளுடைமையுங், கொடுப்பதில்லை. ஆகையாற், பணமுள்ள ஐசுவரியத்தன்மையே, ஒரு உபயோகத்துக்கல்ல, எல்லாவிதவுபயோகத்துக்கும், ஏற்றசாதனமாகிறது. இந்தபேதார்த்தமானது, ராஜதர்மத்திற்கு மிகவும் அவசியமானது. ஒரு தர்மராஜாங்கத்திற்குறிய கந்தாயம், பணத்தினாலேயே செலுத்தப்படவேண்டும். யுத்தவிஷய மாகவோ, கப்பங் கட்ட வேண்டியோ, திடீரெனச்சிலவு நேரிட்டால், பணத்தைத்தவிர வேறு யாதொரு மார்க்கமும், செல்வதல்ல. இத்தியாதி காரணங்களாற், பிரஜைகளும், அரசர்களும், தங்கள் நிலைமையைச் சிலவழிவிற்கேற்கப், பணத்தாலேயே மதிப்பிடுகிறார்கள்; இதர உடைமைகளெல்லாம், தத்பிரயோஜனமல்லவென்றும், இன்னவிதமென்னாது பலவிதத்திலும் தத்யுசிதபலப் பிராப்தியைத் தருவனவல்லவென்றுங், கொள்கிறார்கள்; இதனாலேயே, ஐசுவரியபாவமினிதுவிளங்கும்.

ஒரு கசுமலமானது, இன்னகாரணகாரியத்தினாற், கசுமலமானதென்று வியக்தமாகையில், அது கசுமலமென்று விஸ்தரிக்கப்படாமல், நீக்கத்தகுந்ததன்று. ஐசுவரியம் வணிகமுறையோ? அதன் உண்மையென்ன? என்று, மனிதர், பக்குவமின்றி யாராய்ந்தவிடத்தும், சாதாரண வாக்கியரீதியால் திருப்தியடையாமல், அதன் உற்பவத்தையும் பயனையும், ஆலோசிக்கத்தொடங்கினார்கள். பணமென்றாலென்ன? அதன் குணமென்ன? அதன் பரிபக்குவகாரியாதிகள் என்ன? என்றவிசாரம் மேலிட்டு, மற்ற பொருள்களைப் போலவே பணமென்பது, அதன் பிரயோஜன நிமித்தம், அவசியமானதென்றறிந்தனர். அதன் பிரயோஜனமும், விவிதமாயிருப்பினும், அந்த யோகிய சௌகரியத்துக்கேற்ற கிரியாபலன்களை சீக்கிரம் வியாபரிக்கச்செய்வது தான் என்றறிந்தனர். மறுபடியும் சற்று ஆலோசிக்கையில், பணத்தைப்பெருக்குவதினாலேயே; அதன் பிரயோஜனமும் பெருகாதென்றும், அற்பசங்கியையாலும் அபீஷ்டமடையக்கூடுமென்றும், அறிந்தனர். லட்சக்கணக்கான தானியம், அதிலிரட்டிப்பான மனிதர்க்கு ஆகாரமாகப் போதாதென்றும், ஆனால், லட்சநாணயம், அத்தகைய வியாபார நலத்தால், இரண்டுலட்சம் ஜனங்களுக்குத் தேவையான ஆகாரத்தை மலிபக்கொள்ளுங் குணமுடைத்தென்றும், விளங்குகிறது. பணம் ஒன்றாலேயே, தேவை நிறைவேறுகிறதில்லை. அதனால் சார்த்தகமடையவேணுமானால், தனக்குறிய பலவரும்படி விஷயங்களிற் சிலவழித்து, அவ்வரும்படியால் தனக்கு வேண்டிய பிரயோஜன சாதனங்களாக, மாற்றிக்கொள்ளவேண்டும். ஒரு ஊரின் சௌகரியம், எப்படி ராஜபாட்டைகளாலமைகிறதோ, அவ்வாறு அதன்செல்வமும், சௌகரிய நிமித்தமாகிறதேயன்றி அச்செல்வமே சௌகரியமாகாது.

பணமானது பொது நலத்திற்கும் சுயநலத்

திற்கும் காரணபூதமாகையால், ஐசுவரியமென்றே விகிதமாக எண்ணப்படுகிறது. ஆனால், இயற்கையாயமையாத தன்னலப்பொருள்களும் ஐசுவரியமாகும். ஐசுவரியமடைவதென்றால், சுகானுபவத்திற்குறிய சாதன நிறைவும், அச்சாதனங்களைப்பெறக்கூடிய சக்தியும், உடைமையாகும்.

ஆகையாற், கிரய நயமுள்ள எப்பொருளும் ஐசுவரியத்தின் ஓர் அங்கமாகிறது. அவற்றால் இஷ்டகாமியங்களைப் பிரதிக்கிரகிக்கலாம். அப்படிப் பிரதிக்கிரகிக்க அமையாத யாதொருபொருளும், அதிப்பிரயோஜனமானதும் அத்தியாவசியகமானதுமானாலும், லௌகீகதர்ம நிதானத்தில், ஐசுவரியமாகமாட்டாது. திருஷ்டாந்தமாக, வாயுவானது எல்லாவர்க்கும் வேண்டினதுதான். ஆனால், அதற்கு விலையில்லை. ஏனென்றால், அது எங்கும் வியாபகமாயிருக்கிறது. தெய்வ சங்கற்பத்தால், அதனை எல்லாவரு மடைந்திருக்கிறார்கள். அதைச்சங்கிரகிப்பதால், லாபமாவது பிரயோஜனமாவது இல்லை. அதன் உற்பவமும் வியாபகமும் அறியவேண்டிய நியாயம், லௌகீகதர்ம விஷயமல்ல. வாயுவானது ஐசுவரியமாகாவிடினும், சும்மாக்கிடைப்பதால், எல்லாவரும் அவ்விஷயத்தில் சம்பன்னராயிருக்க அதைச்சேகரிக்கும் சமையத்தையும் முயற்சியினையும், தேவையான இதர விஷயங்களைச் சங்கிரகிக்க உபயோகிக்கலாம். வாயுவானது சம்பத்தென்னக்கூடிய, சில சந்தர்ப்பங்களையும் ஊகித்தறியலாம். அது சாதாரணமாய் வியாபிக்காத சிலவிடங்களிலுழலுவதால், வீட்டுக்குக் கொண்டுவரும் தண்ணீர் விலையாவதுபோல, ச்சமுத்திரங்களில் முத்துக் குளிக்குமிடத்து வாயுவை சங்கிரகித்தளித்தால் விலைபொறும். தெய்வீகமாக வாயுட்சோபம் நேரிட்டால், வாயுவிற்கு விலைகிடைக்கும். அப்பொழுது, வேண்டிய அளவிற்கதிகமாக ஒருவன் சங்கிரகித்திருப்பானானால், ஐசுவரியவானாவான். ஆகையால், ஐசுவரியமானது, முதல்முதல், வறுமையாலேற்படுகிறதென, நினைக்கக்கூடும். ஆனால் வாயுவைச் சங்கிரகித்த ஐசுவரியவான், அதனை விற்பதில், இதுபரியந்தம் சும்மாப்பெற்றிருந்த மற்றவரிடமிருந்து என்னென்ன பொருள்களைப் பெற்று அவர்களை அவ்விஷயத்தில் ஏழைகளாக்கிறான் என்று ஆலோசித்தால், அதன் உண்மை புலப்படும் இதனால், தான் ஐசுவரியமடைவதிலும், தன்னினத்தார் ஐசுவரியமடைவதிலும், உலகோர் ஐசுவரியமடைவதிலும், தாரதம்மியம் ஏற்படுகிறது. உலகோர்க்கு, இன்பமாவது உபகாரமாவது அளிக்காத எப்பொருளும் ஐசுவரியமாவதில்லை. தனக்குத் தன் பொருள் பயனற்றிருப்பினும், தனக்கு வேண்டின பொருள்களைப் பிறரிடமிருந்து தேடும் ஆற்றலுடைமையால், எவ்வகைப்பொருளும் ஐசுவரியமாகிறது. ஒருவன், ஒரு பூஸ்திதிமேல் ஆயிரம்ரூபாய் கொடுத்திருந்தால், அப்பூமியின் பலானுபவத்தால், ஐசுவரியவானாகிறான். அதனால், அப்பூஸ்திதியுள்ள தேசத்தார்க்கு, ஆகவேண்டின தொன்றுமில்லை. அந்த தஸ்தாவேசு ரத்தானால், ஒருவனுக்கு ஆயிரம் போயிற்று, மற்றவனுக்கு ஆயிரம் வாய்த்தது. அந்த தேசத்தார்க்கு, மொத்தமாக, வரவும் இல்லை, அழிவும்இல்லை. ஆஸ்தியை சர்க்கார் நிதிக்குட்படுத்தவரும், சர்க்கார் கடன்களை நிர்வகித்தவரும், மேற்சொன்ன ரீதியாகவே யாகிறார்கள். அவர்கள், ராஜ்ஜியப்பொது ஐசுவரியத்தை, அடகு பிடித்தவராகின்றனர். அக்கடன் ரத்தானால், ஐசுவரியம் போகவில்லை. ஒருவனிடமிருந்து மற்றொருவர்க்கு வியாபித்தது. சர்க்கார் நலத்துக்காகக்குடியானவனிடமிருந்து அநி

யாயமாக அபகரித்ததாகிறது. ஆகையால், பண்டாகிய சொத்து, தேசத்தின் ஐசுவரிய நிலைக்கு, அலகுகாரியம்பெறா. இதை, ராஜாங்க விஷயத்திலலகிடுவோர், ஞாபகத்தில் வைப்பதில்லை. ஒரு தேசத்தின் மொத்த வருமானவரி வரவு அலகிடுங்கால், பண்டுகளால் வந்த வரி வரவைத்தள்வழி செய்வதில்லை. வரியானது மொத்த வரும்படிமேலேற்படுவதால், பண்டுடையார், தங்கள் பண்டின் வரும்படிமேலேற்படும் வரியைச், சுதமே தள்வழிசெய்ய சம்மதம் பெறுவதில்லை. இப்படி மொத்தமிடுவதால், தேசத்தின் ஒருபான்மைய வரவு, இருகாலலகிடப்பெற்று, சுமார் முப்பது லட்சத்துக்கதிகம் தொகையாக ஏற்படுத்தப்படுகிறது. இதற்கீடாகத், தேசதனத்தில், குடிகளின் பிறதேச பண்டுடைமையும் வரும்படியும், அலகிடப்படுகிறது. ஆனால் இதுவும், பிறர் முதலிற் பங்கீடாகிற தன்மேயாகிறது. இது, உலக ஐசுவரியத்தொகையின் பாகமாகிறதில்லை. ஆகையால் இது, பொது ஐசுவரியப்பொருள்களிலொன்றாக ஏற்படாமல், அவ்வைசுவரியத்தை வியாபிக்கச்செய்யும் சாதனமாகிறது.

ஐசுவரியமானது உபாதானக் கருவியென்னப்பொருள்படுமாறு, வியாக்கியானிக்க யோசித்தார்கள். ஆயுதமும் எந்திரமும் போல்வனவல்ல. தனுங்கடையவும் தம்மினத்தாருடையவும் அபீஷ்ட சித்திக்காக அவர்களுடைய மொத்த உபாதான சாதனம் என்பதே. தானியமடையச்செய்வதால், ஒருவயலும் உபாதானக்கருவியாம். மாவைக்கொடுப்பதால், தானியமும் அக்கருவியாம். அப்பமுதவலால், மாவும் அக்கருவியாம். அப்பமும், பசியைத் தணிப்பதால், அக்கருவியாம். இவ்விதமாகக்கடைசியில், உபாதானக்கருவிகளல்லாத பல பொருள்கள் ஏற்பட்டு, அவ்வவற்றின் பலானுபவத்திற்கன்றி, இதர பலப்பிராப்திகளுக்குதவாதனவாகிறது. இவ்விஷயம், தத்வரீதியாகச் சரியானதுதான். இம்மாதிரி வியாக்கியானம், மற்று சிலவற்றிற்கும் நன்றாகப் பொருந்தும். பொது அபிப்பிராயத்திற்கு மாறான வியாக்கியானமென்றல்ல. அவ்வபிப்பிராயத்தை, உண்மையாகவும் ஸ்பஷ்டமாகவும், உதகரிக்கக்கூடும் என்பதுதான். ஆகிலும், அவ்வியாக்கியானம், பாஷா மரபுக்கு மெத்த விழுக்காகலால், பெரும்பான்மையோர் ஆட்சேபிக்க ஆஸ்பதமாகும். தவிர, சமயோசிதத்திருஷ்டாந்தத்துக்கன்றி, மற்றொரு காரியத்துக்கும் பயன்படாது.

இனத்தார்க்கைசுவரிய மாகாது தனக்கே ஐசுவரியமாகும் பொருளுடைமைக்கு, 'அடிமைகள்,' வேறு திருஷ்டாந்தம். அடிமைத்தொழிலைப்பராமரிக்கும் ஓர் தேசத்தின் ஐசுவரியத்தையலகிடுங்கால், அடிமைகளையும் தலைக்கிவ்வளவென்று மதித்துத், தனமாகவே மதிக்கின்றனர். விலைபொருளாகப் பாவித்து, ஒரு மனிதனை, அம்மனிதர்க்குறிய ஐசுவரியமென்று நினைக்கையில், அத்தன்மை மற்றொருவனுக்கும் அமையுமானால், அவனும், ஐசுவரியத்தின் ஒருபாகமாகிறான். அவன், தன்னுடைய எஜமானனால் எவ்வளவு பொறுவான் என்று மதிக்கப்படுகிறானோ, அந்த மதிப்புத்தனத்தைத் தன் மதிப்பினால், தானே தேடிக்கொண்டாற்போலாகிறது. அவ்விதத்தேட்டத்தால், அவ்விருவருடையவும், அத்தேசத்தாருடையவும், ஐசுவரியம் அதிகமாகிறதில்லை. ஐசுவரியத்தின் விவிதங்களை, அவற்றின் பலப்பிராப்திக்கேற்க, வகுத்துக்கூறினால், ஒரு தேசத்தின் ஜனசமூகத்தை, அத்தேச ஐசுவரியமாக, எண்ணப்படாது. தேச ஐசுவரியம், அத்

தேச ஜனங்களுக்காக ஏற்படுகிறது. ஐசுவரியம் என்பது, அவர்களுக்குத் தேவையான பொருளுடைமையைக் குறிக்கிறது. அவ்வுடைமையில், அவர்களையும் சேர்க்கப்படாது. அவர்கள் ஐசுவரியந்தேட ஏதுவாகிறார்களேயொழிய, அவ்வவர் ஐசுவரியம் அவர்களேயாகார்கள்.

ஆகையால், ஐசுவரியமென்பது, உபயோகமானதும் விகிதமானதுமான விலை மதிப்புள்ள யாவத்பொருளுமாம்.

(இன்னும் வரும்) பிரசுரகர்த்தா.

III. ஓர் சுவப்நாவஸ்தை.

உலகத்திலுள்ள கடபடாதி சமஸ்தகோடிகளும் உயிர்பெற்றிலங்குமாறு, மித்திரன் என்னும் பெயர்பெற்ற சூரிய பகவானானவர், தன் கிரணங்களாகிய கைகளால் விம்மலை நீவிக்களைந்து, தன்மகிமையை விளக்கியருள்வர். அவ்வைபவ சுவரூபத்தாற் பிரபஞ்சம் விளங்கினும், அச்சுவரூபத்தைப் பிரபஞ்சம் இப்படிப்பட்டதென்று அறிகிறதில்லை. இதுமெத்த அற்புதம். இது நிற்க; அவருடை மகிமையால், உயிர்பெற்றாற்போல் எழுந்தவனைத்தும், தத்தம் நித்திய கர்மானுஷ்டானங்களை முடித்து, ஜீவனோபாயங்களைத்தேடிப்பிழைக்க, நாலாவிடமும்விரைந்து செல்லுதல் இயற்கையன்றோ? ஆகையால், யானும், அவ்வாறே ஒருநாள், ஒரு கிராமத்துக்குச் சென்றேன். அவ்விடத்தில் யான் முடிக்கவேண்டிய காரியங்களை முடித்த பிறகு, ஆகாராதிகள் உட்கொண்டு, மற்றோர் கிராமத்துக்குப் போகவேண்டியிருந்ததால், இரவுக்குவேண்டிய ஆகாரத்தினைக்கொஞ்சம், கருதிக்கொண்டேன். அக்கிராமத்திற்செய்யவேண்டிய காரியங்களாற்றுமதமாகுமென்று நினைத்து, ஓர் புறத்துள்ள தெருத்திண்ணைப்பெருமாள் கோயிலில் நான் கொண்டுபோயிருந்த சாமான்களை வைத்துவிட்டு, என்னுடைய சேவகனை, நான் வரும்வரையில், ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள்ளச் சொன்னேன்.

ஜாக்கிரதையாகப்பார்க்கச்சொன்ன விஷயத்திற் பிரபஞ்சம் என்னை மன்னிக்குமென்று நம்புகிறேன். ஏனெனில், அதற்கு முகாந்திரம் இன்னதென்பது பிரபஞ்சம் அறிந்த விஷயமாயினும், இதில் எழுதுவது இன்றியமையாதது. இரண்டொரு காரணங்களை மட்டுஞ்சுருக்கி வரைவன்.

ஒன்று, சாப்பாட்டு விஷயம். இரண்டு, கூடார அதிகாரமில்லாதது பற்றி மண்டபக் கட்டளையுத்தியோக விஷயம். மூன்று, சேவகரது விஷயவிஷயம். இது இங்ஙனம் நிற்க; எனது காரியங்களைமுடிக்கப்போய், அசமையமாகத்திரும்பி வந்தபோழ்து திண்ணையில், ஏதோஒன்று கருத்த நிறமாகப் படுத்திருந்ததை, என்னுடனிருந்த மற்றோர் சேவகன் கண்டு, நாகப்பா! எசமான்! எசமான்! எழுந்திரு! என்னத்தட்டினான். அப்பொழுது நாகப்பன் குரைமுகனைகப்பல்லிளித்து அம்மட்டில் நீங்கி, மரியாதை செய்தான். என்னுடைய முகாந்திரம், பரபஞ்ச சம்சய நிவாரணார்த்தம், இதனால் ஏற்றுக்கொள்ளப்படுமென்று, இன்னும் எதிர்பார்க்கிறேன். உடனே மெழுகுவர்த்திக் கண்ணாடிவிளக்கொன்று பாதையில் நிறுத்தியிருந்த என் வண்டியிற்றூக்கப்பட்டு, கீழே விழுந்துடைந்து கெடவே, "சீச்சீ! உன்னை நம்பியாநான்இருட்டில்வந்தேன்! பெருமாளுஉ!" என்றொரு சத்தம் கேட்டேன். அடுத்தாற்போலெதிர் வீட்டிற், குயக்கலங்களிற் சிறுவர்கள் பட்டாஸ் திறுசுகள் கொளுத்திக்கவிழ்த்தனைய சத்தமும், ஓர் ஸ்திரீயின் கூக்குரலுங்கேட்டேன்.

நாகப்பனை யெழுப்பிய சேவகன் வண்டியிடம் ஓடவே, அக்கூக்குரலும் எதிரோடிவந்த ரகசியம், பின்வரும் சிலேஷாலங்காரத்தால் விரியும். "பெருமாளுஉ! இந்தச்சிறுமையைக் கண்டீங்களா! நாகப்பன் இப்படிச்செய்யலாமா? வீட்டுத்திண்ணெலெ சும்மாக்குக்கியிருந்தவுகளைக் கடக்கிக்கூட்டிக்கிட்டுப்போயி, சோத்துப்பானையுமொடஞ்சுபோச்சு!" என்று கூவினாள். அப்பொழுது சேவகன், "சேச்சே! சும்மாயிரு; எசமானனிருக்காகோ! நான் விளக்குப்பருத்திக்கிட்டு வாரே" னென்று ஓடிப்போனான். சற்று நேரத்திற்கெல்லாம் விளக்குவரவே, பெருமாள் கோயிலில் நாகப்பன் கருணையால் சிவராத்திரியுற்சவம் நடந்தேறிற்றென்றும், அவ்விசேஷத்திற்காக 4 அ. 6 பை. விலைபெற்ற கண்ணாடிவிளக்கொன்று சன்மானமளிக்கப்பெற்று நாகப்பன் தன் பல்லைக்காட்டி மரியாதை செய்தானென்றும், மண்டபத்தில், இவ்வுற்சபக்கட்டளை நடக்க, கடவாத்திய கோஷத்துடன் அமைந்த, சிலேஷாரகசியரஸாநந்த நாட்டியத்தை விட,ப் பிரபஞ்சம் சாமானியமல்லவென்றும், தெரியவரும். இத்தியாதி வைபவங்களை நான் சொல்வதற்குச்சக்தியற்று, நாகப்பன் செய்த மரியாதையே சிலாக்கியமென்றெண்ணி, மாலைக்கடனை முடித்துவரச், சமீபத்தில் நான்கு புன்செய்க்காட்டிற்கப்பாலுள்ள, ஏரிக்குப்போனேன். எதிரில் கரையருகில் ஒரு வெளிச்சம் எரியத்தெரிந்து, மாலைக்கடனை முடிக்கையில், அவ்வெளிச்சத்தின் மீது புகை போல் ஒன்று நீண்டு வெண்மையாக மேனோக்கிச் சென்றது. அப்பொழுது, இது ஸ்மசானகட்டமென்று ஞாபகம் வர, உடனே கோயில்வந்து, விரதமநுஷ்டித்தேன்.

(நண்பர்களே! சிவராத்திரி விருதம் அநுஷ்டிக்கையில் மௌநமாக இருக்க நேரிடுகிறபடியால், ஸ்மசான கட்டவரலாறு பின்னால் வரும்.)

(இன்னும் வரும்.) பிரசுரகர்த்தா.

கீசகவதம்.

முதலங்கம். முதற்களம்.

காமியவனம்.

வேதப்பிராமணர், தௌமியர், திரௌபதை, பாண்டவர் பிரவேசிக்க.

தருமபுத்திரர் — மலரி லொளிக்கு மலர்தரு முகமு,
மலரி லொளிக்கு மற்புத முகிலு,
முளரி யொளிக்கு மொய்தவ முதலு,
முளறி யொளிக்கு முரனு முகக்கலே,
பதும நாபப் பாவலன் போற்றிட,
ஈரா ருண்டு, மின்பமா வான்வண
மேக, லேகின, வெல்லையோ ராயனம்
நகர்கரந் துறையு நன்னு ளடுத்ததா,
லாரிய குலோத்தம வையர்காள் ! ஏதற்
பரியந்த முற்ற பரிபவந் தீர
நாடு சேரு நன்மனத் தா,லெமக்
காசி கூறிடு மநுக்கிரகத் தா,லுமை
வெளிப்படு நாளினில் வணங்கிப்,
பிரிந்த வெமதுசிர்ப் பாக்கியந் தவிர்வமே.

வேதியர் — நீதி வழுவா நெறியினி ராதலா,
லேத மேது மில்லா துமது
நிச்சயப் படியே,யஞ்ஞாத வாசந்
தீர்ந்து தேர்ந்து தெவ்வர்ச் செகுத்துத்
தீரமும் புகழுந் தருமமு நாட்டிப்
பல்லாண் டாகப் பார்புரந் திடுமினே.
விரைவி னேக விடையருள் வேந்தகேள்,
குலேவர்ர் தமக்குக் கொழுகொம் பானுய் !
சின்னாட் டென்னுஞ் சிறுமை, பெருமைத்
தவத்தா ருன்னு, தவமாச் செகுத்துப்
பொறைபூண் டொழுகிப் போழ்தூண் டிப்பரா,
லழுங்கேன் மன்ன, வன்புட னேகுவம்.

தருமர் — எம்முடன் கூடி யின்னற் கானகந்
துன்னித் தொடர்ந்த தோழர்காள் ! தோழிகாள் !
நீவிரு மகல நல்கூர்ந் தொழித்தெங்
கடவ நாள்கள் கழித்து மீள்வமே.

பரிவாரஜனம் — தருமப்பிரபுவே ! நாங்களிதுகாறுமுமது சேயதிருவடிகட்கன்புகூர்ந்து பணிவிடை புரியப்பாக்கியம் பெற்றனம். இன்னுமஃதெமக் கெக்கா லுறுமோ வறிகிலம். வினைப்பயன் வெல்வார் யாருமிலர். ஆகையால் நாங்கள் பிரிந்துபோனாலும், எமதிதய மும்மோடு கூடியிருக்கும். ஆயி னுங், கண்கொண்டு காணுமாநந்த மிழந்தோமே ! என் செய்வோம் ? தர்மமே ஜபம் ! யாம் போகிறோம். (ஏக)

தருமர் — ஊழ்வினைப் பயனோ ? யான்செய் தருமமோ ?
பகைவர் பெருமையோ ? பண்ணவர் பரீட்சையோ ?
இக்கா லென்னை யிகல்கொண் டெதிர்த்து,
முக்கா லுமுன்னு மூண்ட வெம்பழிக்
காளா வென்னை வாளாச் சமைத்துக்,
கிளைதான் வெறுப்பினுங் கேள்கடிந் தொழியக்,
கானிலு மென்னைக் கைகண் டலைப்பதே !

தௌமியர் — உண்மை கைவிடா வுயர்பெரு ஞானமே
திருமேனி யாகிய தேவரீர் துயருறல்,
நொந்துறை யல்லா னென்பிற் கழகல ;
வாகலி, னியாதனை சிந்தனை செய்யா,
தகமகிழ் வோடு மாவ தாய்ந்து,
செய்வது செய்தல், சிலாக்கிய மாமே.

வீமன் — எந்தன் கதையு, மெம்பியர் கைச்சிலையும்,
வழிப்பட் டெமதருள் வாக்கினை,
வேண்டி வேண்டி வெம்மை மிகுந்து,
துட்டர்த் தொலைத்துத், தொலைபா மகுடம்
புனைய நிற்கக்,
கடைக்கணித் தருளுங், காருணிய முதலே.

தருமர் — அடக்க மமரரு ளுய்க்கு, மடங்காமை
யாரிரு ளுய்த்து விடுமா, லிளவ !
பன்னீ ராண்டும் பட்ட துயருட,
னோராண் டுறுவது பெரிதல, பின்னர்

அரவ கேதன னவையிற் கூறிய
வாய்மை யின்படி வதியா னாகிற்,
படைக ளெல்லாம் பரிந்தே யிருக்க,
விப்போழ் தெண்ண லேத, மதனாற்
கரந்துறை நகர மியாதென
வெண்ணி, யந்நக ரேகுதல் கடனே.

அருச்சுனன் — நமது நன்னாட்டு நாற்புறம் பலவள
மேம்பட நின்ற மிகநன் னாடுள ;
வாயினு, மவற்று ளடியே னுக்கு
மச்ச மச்ச மகன்றுள, தென்னிற்,
றீமை சிறுத்து, நன்மை பெருத்துக்,
கொடுமை குன்றின குடிவள மோங்கிச்,
செங்கோல் செழிக்குஞ் செந்நக, ரதான்றுந்
துரியோ தனன்றன் றாத ரவனூர் ;
ஏனைய நாட்டி லெய்துவ ; ரதனால்
நாமுறை கரவு நலமே தெரியும் ;
புரவல னும்மெம் பூர்வ வுரிமையன் ;
ஆகலி, னந்நக ரன்றி வேறே
கண்டில னடியேன் காவல !
தேவரீர் திருவுளந் தெரிந்திலன் சிறுவனே.

தருமர் — தொன்னூ லாய்ந்த தொல்குலத் தேசிக !
பார்த்தன் சொன்னது பழுதல, வதுவே
என்றுணி விடமு மென்னி, லாங்குறு
முறையீ தென்று, முறைவித முடனே
மீள்வும் விளங்க, மெய்ப்பொரு ளறிவா
லெமக்குறை செய்து,ட னிகபர மிரண்டுஞ்
சார்த்தக மாகுஞ் சாதுரிய மறியக்,
கடாட்சித் தருளுங் காருணிய முனிவர !

தௌமியர் — தரும நந்தனா ! விறைவா ! கேட்டி !
யஞ்ஞாத வாச மாரு மறியா
துறைவ தாகலி, னோர்நகர் மேவி
யின்னா ரென்னு மையம் பிறர்கொளா
வகையில் வதிந்து, மீளல் வேண்டும்.

இன்றே, வின்னு மீரா றாண்டு
காடு போதல் கடனா, மதனான்,
மனமொழி மெய்களின் மகிமை தவிர்ந்து,
கோலங் கரந்து, கோட்டியிற் றொண்டா,
யுரிய தொழில்செய் துய்வது நலமே.

வீமன் — புரவலர் பெருமா னாகி வையமோர்
குடைக்கு ளாளும் புண்ணிய முதல்வ !
நுமதுட் பட்ட நுண்ணிய வரசாம்
விராட வீறைக்கு வழிப்பட் டூழியம்
செய்யின், மரபின் மாண்பு சிதைவுறும்;
ஏளன முண்டா ; மென்செய் கோயான் ?
களங்க மில்லாக் காம்பிரிய நும்மனம்
நோக நோக நோக்கி நின்று
வழிபடல் வினையே ! விதியே ! கதியே !

தருமர் — தென்றிசைக் கோமான் றிருமந் திரத்தாற்
சுந்திர வேதிய னாகு சூட்சும
மடைந்துள; னதனா லாகுலம் வேண்டாம் ;
வேத மோதிடு வாயுட னேகிற்,
காவல ரெல்லாங் காற்கீ ழிறைஞ்ச,
வாசீர் வதித்தவ, ரனைவரு மவாக்கொள,
வெண்ணுறு விஞ்சையா லெழிலுப தேசமும்,
வல்வினை யாட்டால் வாஞ்சையும் விஞ்சவே,
யவையிற் பூச்சியனா, யாண்டு கழிப்பனே.
சோதர வீமா ! சூரர் நால்வரும்
மணிமா னார்தான் மடிய வென்று
விடமுண்டு வந்த வீரிய வண்மையு,
மரக்குச் சூதினி லன்னையு முன்னையும்
பின்னையுந், தாங்கிய பெரும்பணைத் தோள்களாற்
பணிவிடை புரியப் பார்க்கச் சகியேன் ;
இங்கித மறியா; யிகலுங் காலமுந்
தேசமு நிகழ்வுந் தேரா; யாத்திர
மாகி யெங்கருத் தழிய வாவா ;
யென்செய் வேன் ? என்பவமே ! யவமே

வீமன் — பஞ்ச பட்சிய பரமான் னத்துட
னமுதடு தொழிலுக் கதிபதி யாவதும்,
பெருமர மாயினும் பெயர்த்துக் கையா
லிந்தன மாக்கு மிகலோ னவதும்,
மல்லே யெனினு மலைவே னவது,
மிதமாக் கூறி, யேதம் படாது,
மடைய னென்ன மாணுவன் மன்னே !

தருமர் — வனமெரிந்த கொடுமரத்தின் மனமெரிந்த கோல்கொண்டு,
புனல்விண்ட போனகத்தி னினந்தெண்டு, மிளைஞனே !
வனமென்ன மனமென்ன புனலென்ன போனகத்து
இனமென்ன வேணு மெனக்கு?
விண்டு கொண்டு தெண்டு மெளிமையினே !

அருச்சுனன் — ஊர்வசி சாப முபகார மாகப்,
பேடி யுருவம் பிறங்கப், பெண்களை
யரங்கு பயிற்று மறிவின ளாகி,
வேத்தவை தன்னில் வியப்புறச் சென்று,
விராட னுக்கு வழிப்பட், டவனருள்
அடைந்,தவ் வரச னரங்க மணைந்து,
நடனம் பயிற்றி, நாட்கள் கழிப்பனே.

தருமர் — நன்று நன்று ! நகுலா கேண்மோ !
இளைஞ நீதா, னேது மறியாய்,
என்னை விட்டெங்கு மேகாய், தனியே
ஏதும் புரியா, யெப்படி யாண்டு
கரந்து கழிப்பா? யறியே னையனே.

நகுலன் — அசுவ சாத்திர மறிவே; னதனாற்
குதிரைக் கணமுங், குணமுங், கதியு,
மனைத்து, மறிந்த வதிபதி யென்ன,
மச்ச நாடன் மாணவை புக்கு,
முறண்டு மாறு மாவினை யாற்றி,
வயக்கி, வேண வரிசை பெற்று,
வற்சரங் கழிவேன் ; வாய்மைக் கரசே !

சகாதேவன் — யானும் பசுபதி யாகி, யங்ஙகர்
மேவு சிந்தைய னனே; னதனாற்,

றுயரம் வேண்டாங், தூய முதலே !

தருமர் — மந்திர முற்று முணர்ந்த மகிமையாற்,
பஞ்சா யுதன்றன் பரிசு பெற்றாய்.
மானே ! துருபதன் பாவாய் கேண்மோ !
பாங்கியர் பலரும் பணிவிடை புரியச்,
சிறப்புற் றேங்குஞ் சீறடி நோவப்,
பஞ்சணை மேவும் பணைத்தோ ளேவக்,
காடு கடந்து, நாட்டிடை யேவல்
செயலெவ் விதமோ? வறிகில னந்தோ !
ஒருவர்க் கிடிகல் லொத்த வைவரைப்
பெற்றும், பெண்ணின் பாவங் கொளத்
தெருவி லலையத் தேர்ந்து விடுத்தா,
ரென்று வைய மிகழ்ச்சி செயுமே !

திரௌபதை — மன்னர்க் கெல்லா மந்திர மிருக்க,
வென்னர்க் கெல்லா மந்தப் புரமே
யாக வேணுமா, லரசிக் குரிய
வண்ண மகளாய், வேண மலர்கள்
கொண்டு வந்து, கோமனைக் குதவிக்,
கொண்டை யணைந்து, கூரிய திலகந்
தீட்டன் முதலாத் தெரிந்த மட்டும்
புரிந்,தெனை வேட்டோர் புலவ ரென்ன,
வேற்றோர் வேண்டி னேற்றே யழிமெனு
மாற்ற மோதி, மகிழுந் தவமே
விரத மாகி, வதிவன் ; விமலமே !

தருமர் — ஆருயி ரமுதே ! யறிவே நிறையே
பெண்மைக் குரிய பேணு காவலாற்,
சொற்படி நின்று, சோர்விலா வுரிமை
செய்து மீளல், சிலாக்கிய மாமே.

திரௌபதை — தலைமேற் கொண்டேன் றரும வாக்கியம் ;
பிழையா துறைவன் பெண்மட மகன்றே.

தௌமியர் — பொய்யா விரதம் பூண்ட மகிப !
மெய்யா கியநும் மேனி மாற்றி,
யாறு பேரு மங்கர் புகுந்து,

விராட வரசை விரும்பிக் கோடி,
யிறையி னோக்கிற் கெதிர்நோக் கின்றி,
யேவின செய்தலி னிகழ்வில ராகி,
மேம்பட வொழுகி, மேவின காலங்
கழித்து நீங்கிக், காவல ராகிச்,
சிறக்க வோங்கிச், சீர்பெற வாழ்கவே !

தருமர் — விப்பிர வாரிய ! வேண்டின வாறே
விராடம் புகுந்து மீள்வம் ; விரும்பி
யைவர்க் குளவெம் மௌபா சனாக்கினி
கைக்கொண், டாண்டு கானக மேவி,
நற்றவம் புரிதி யையா !
திருவடி தொழுதனந், தேறுத லருள்கவே.

தௌமியர் — வாழ்க வாழ்க ! வாய்மை வாழ்க !
விரும்ப வனைத்தும் விமல னருளாற்
சிறக்க வோங்கிச் சீர்பெற வாழியே.

சகாதேவன் — மாலைக் கடனை முடிக்கப் போக,
வாலய மொன்றுள ; தந்த விடத்திற்
குளமு மொன்று ; குளிர்நன் னீரதிற் ;
புறமே வீங்கிய பெருமரந் தோன்றப்,
பாங்கர் விராடப் பெயர்பொறி சிலையுங்
கண்டு மகிழ்ந்து, கோயிற் புகவே,
சிவந்த மேனியுஞ், சேந்த வுடையுஞ்,
சிவந்த பொன்னால் நிவந்த குழையுங்,
கனலுமிழ் முகமுங், கனிந்த பார்வையுங்,
கோரைத் தந்தமுங், குமுறு சிரிப்புங்,
கபாலக் கையுங், களேபர மாலையு,
முத்தலைச் சூலமு, முளைவெண் பிறையு,
மெத்தலை யானு மிதுவே தோற்றப்,
பெற்ற மாதா பேரரி போற்றப்,
பற்றல ரெல்லாம் பிராணனை நல்க,
விருந்த விருப்பு, மெழிலுறு நிலையும்,
பார்க்கப் பார்க்கப், பதினா யிரங்கண்
போதுமோ ? பார்த்த ! புகலொணா தென்னால் !

அருச்சுனன் -- இதுவே போது, மெம்பி சகாயமே!
கோயில் புக்குக், கொதித்த தாயைக்
குளிர வாட்டிக், குறையெலாங் கூறி,
வரப்பி ரசாதம் வரையறப் பெற்றுக்,
கவலை நீங்கிக், காவலன் பதியிற்
செல்லு மாறும், சிலைமுதற் படையுந்
துறக்கு மாறுந் துணியத், துணையா
வென்னைப் போற்றி, யெந்தா யாணையி
னிற்கப் போவம், நிலவு வரவே.

சகாதேவன் — ஆயுத மனைத்து மறிவுறு வகைப்
பெருத்த மரத்தின் பொந்தரிற் புதைத்து,
மகத்தாந் தாயே மகிழ்ந்து புரக்க
வேண்டிப் போற்றி, வெவ்வினை போகப்,
பின்னை விராட புரத்துட் போவமே.

அருச்சுனன் — பெருமர மென்ன பெயரின தஃது ?
மிருப்பிட மெனக்குத் தெரியச் சொல்லே.

சகாதேவன் — வன்னி யெந்தாய் வலப்புற மாக
மன்னி முளைத்தது துன்னிய கற்பம்;
வன்னி வன்னி யென்னா வுலகந்
துன்னித் துன்னித் தொடர்தரு வாமம் ;
கட்டு தந்திரங் ; கனமுறு மேமம் ;
வசிய மனைத்தும் வகித்த முதல்வனாம் ;
போனக வமுதின் பொருட்குலங் கட்டித்,
தன்னைக் கட்டித் தரணியுங் கட்டுமே.

அருச்சுனன் — பின்னை யென்ன பேசுவ துளதோ ?
மூச்சு விடாமன் மொழிந்த மொழிப்படி
யாகுது மாக, வனைவரு மின்னே
ஏகுது மாக, வெழில்பெறு மாறே. (ஏக)

(இரண்டாங்களம் பின்னால் வரும்.) பிரசுரகர்த்தா.

லோகோபகாரிகள்.

CHAPTER I.

யாரடா சேவகன் வெளியில்! இந்தா! இதோ என்பல், தேய்த்துக்கொண்டு வா சீக்கிரம்! உப்புமாச்சாப்பிட்டுக்காப்பி குடிக்கவேண்டும் என்பர்; சென்ற ஜன்மத்தில் ஸ்ரீயை நன்கு உபாஸித்ததால், இச்சன்மத்தில் ஐசுவரியத்தை அடைந்து பொய்ப்பல்லோடு கூடிய கனவான், காலையில் படுக்கையை விட்டெழுந்ததும்: ஆனால் பிரபுவுக்கும், பிச்சைக்காரனுக்கும், பொதுச் சேவகனாகிய சூரியன் ஒரு நாட் காலையில் கிழக்கு திக்கில் உதித்து வெளிக்கிளம்பினான். நம் லோகோபகாரச் சங்கத்தின் அக்கிராசனாதிபதியும், தன் படுக்கையினின்றும் வெளிக்கிளம்பினார். லோகோபகார துரந்தரர்கள் உடுத்தல் குளித்தல் முதலிய காரியங்களில் அதிகமாய்ப் பொழுதை வீணாக்கச் சம்மதிக்க மாட்டார்கள் அன்றோ! நம் அக்கிராசனாதிபதியும் ஒரு உடுப்பில் நுழைந்துகொண்டார். சில உடுப்புக்களை ஒரு சஞ்சிகையில் நுழைத்தார். தானும் சஞ்சிகையுமாக வெளிக்கதவின் திட்டி வாசலின் வழியாய்ப்புகுந்து வெளிக்கிளம்பினார். வண்டி! என்று ஒரு சத்தம்போட்டார். ஒருவன் அவர் பக்கம் வந்து நின்றான். அவன்கழுத்தில் ஒருபித்தளைப் பட்டமும், அதில் ஒரு நம்பரும் போடப்பட்டிருந்தது. பேர் ஒட்டிய அபூர்வமான வஸ்துக்களில் ஒன்று போலும்! இவன்தான் தூது போவோன். சர்க்காரால் தூது செல்ல அதிகாரம் பெற்றவர்களில் ஒருவன். பித்தளைப்பட்டம்தான் அவ்வுத்தரவு. ஜனங்களின் நன்மைக்காக நியமிக்கப்பட்டவர்களில் ஒருவன். வண்டிவேண்டுமென்றால் ஓடோடியும் ஒன்று கொண்டுவந்து விடுவன். அல்லது வண்டிப்பேட்டை போகவேண்டுமென்றாலும், மூட்டைகளைத் தலையிற் சுமந்துகொண்டுபோய், வண்டி திட்டம் செய்து ஏற்றி அனுப்புவான். இவன் நம் அக்கிராசனாதிபதிக்கு வந்தனம் செய்து, யாது தேவை? என்றான். நம்மவரும், ஒருவண்டி சீக்கிரம்கொண்டு வா என்றார். அவனும் ஓட்டமாய்ஓடி, ஒருவண்டி திட்டம் செய்துவந்தான். ஏறினார் வண்டியில்! போட்டார் ஒருமூலையில் சஞ்சிகையை! விடுத்தார் கையைச் சட்டைப்பைக்குள்! எடுத்தார் அணா ஒன்றை! கொடுத்தார் சர்க்கார்த் தூதன் கையில்! படுத்தார் வண்டிப்பலகையின் மேல்! தொடுத்தார்மனோராச்சியப்பந்தலை. முடிந்ததும், விடுத்தார் வண்டிக்காரன் கேள்விக்குப்பதிலை! அவனும் முறுக்கினான் மாட்டின் வாலை! ஆனால் மாடு மாத்திரம், நடுச்சாவடிக்கு அடிமேலடியெடுத்துவைத்துத்தான் போய்க்கொண்டிருந்தது! அதைப் பார்த்ததும் அக்கிராசனாதிபதி, நண்பனே! இம்மாட்டின் வயதென்னவென்றார். வண்டிக்காரன், பக்கப்பார்வையோடு 45 என்றான்.

அக்கிராசனாதிபதி:— ஆ! அப்படியா! என்று சொல்லி நோட்டுப்புத்தகத்தைச் சட்டை ஜேப்பினின்றும் வெளியெடுத்தார். பரிஹாசத்திற்காகச் சொன்னதாயிருக்குமோவென்று நினைத்து, வண்டிக்காரன் முகத்தை உற்று நோக்கினார்; ஆனால் அவனது முகத்தில், யாதொரு, பரிஹாசக்குறியையும் காணோம். மறுபடியும் வற்புறுத்திக்கேட்டார் மாட்டின் வயதை; அவனும் முன்னைய பதிலையே அளித்தான் இப்பொழுதும்! வரைந்தார் மாட்டின்வயது 45 என்று லோகோபகார நோக்கமாய்! பிறகு வண்டிக்காரனோடு பின்வருமாறு சம்பாஷித்து, பதில்களை அச்சிட்டு, ஜனங்களது நன்மைக்காகப் பிரசுரம்

செய்யும் நிமித்தம் தொடர்ச்சியாய் வரைந்துகொண்டார்.

அக்கிராசனாதிபதி:— நண்பனே! ஒரே தடவையில் மாட்டை எவ்வளவு நேரம், வண்டியில் பூட்டி ஓட்டுவாய்?

வண்டிக்காரன்:— இரண்டு மூன்று வாரங்கள்.

அக்கிராசனாதிபதி:—ஆச்சரியத்துடன் வாரங்களா! என்று சொன்னார். சொன்னதும் வெளிக்கிளம்பிற்று நோட்டுப்புஸ்தகமும்.

வண்டிக்காரன்:— ஆம் வாரங்கள் தான். மாடு சக்தியற்றதால், அதை வண்டியை விட்டு அவிழ்ப்பதேயில்லை என்றான்.

அக்கிராசனாதிபதி:— மாடு சக்தியற்றிருந்தால் வண்டியில் பூட்டப்பட்டு, அவிழ்க்கப்படாமலிருப்பதாற் சக்தியை விர்த்தி பண்ணுவதெப்படி? புலப்படவில்லையே என்றார்.

வண்டிக்காரன்:— சக்தியை விர்த்திபண்ணுவதொன்றுமில்லை. வண்டியை விட்டு எடுத்தால் மாடு கீழே விழுந்து விடும். இதற்காக வண்டியை விட்டு அவிழ்ப்பதில்லை. ஒரு தரம் வண்டியில் பூட்டிவிட்டால் அது அப்படி விழமுடியாது. சக்கிரத்தின் கனமும் அதை விழுந்துவிடாமல் தாங்கிவரும் என்றான்.

நம் அக்கிராசனாதிபதியும் மிக்க ஆச்சரியத்தை அடைந்து, அத்தியந்த கஷ்டநிலைமையிலிருந்தபோதிலும், வண்டி மாடுகளின் ஜீவனது அற்புதமான மனவுறுதியை லோகோபகாரமாகப் பிரசுரம் செய்ய நோட்டுப் புத்தகத்தில் தெளிவாய் வரைந்துகொண்டார். இதற்குள் வண்டியும் நடுச்சாவடி வந்துசேர்ந்தது.

குதித்தான் வண்டியினின்றும் வண்டிக்காரன். வந்தார் வண்டியினின்றும் வெளியில், நம் அக்கிராசனாதிபதி. இந்தா உன் சத்தமென்று போட்டார் நான்கு அணாவை வண்டிக்காரன் கையில். இதற்குள் லோகோபகாரச் சங்கத்தின், முக்கிய மெம்பர்களாகிய கவிவாணர், ஸ்திரீப்பிரியர், வேட்டைவீரர் முதலியவர்களும் வந்து சூழ்ந்துகொண்டார்கள். வண்டிக்காரனும் வாங்கின சத்தத்தை வீசி எறிந்துவிட்டு, வாய்யா பாக்கலாம்! உமக்காச்சு! எனக்காச்சு! ஒருகை பார்த்துவிடுகிறேன்! என்ன கிள்ளுக்கீரையாய்ப்போச்சு! என்று ஆரம்பித்துவிட்டான்.

உனக்குப் பைத்தியம் பிடித்திருக்கிறதென்றார் வேட்டை வீரர்.

குடிவெறி என்றார் ஸ்திரீப்பிரியர்.

இரண்டும் சேர்ந்திருந்தாலுமிருக்கலாமென்றார் கவிவாணர்.

இதற்குள் வண்டிக்காரனும், வாங்கோய்யா பார்க்கலாம்! ஒத்தொத்தராய் வந்தாலும் சரி! ஒருமிக்க வந்தாலும் சரி! ஒருகை பார்த்துவிடுகிறேன் என்றான்.

இதற்குள் இன்னொருவண்டிக்காரனும் அவ்விடம் வந்து, ஏண்டா வீரா! என்ன விசேஷம் என்றான்.

வீரன்:— விசேஷமா! இவன் என் நெம்பரைக் குறித்துக் கொள்வானேன்! எதற்காகக் குறித்துக்கொண்டான் என்றான்.

அக்கிராசனாதிபதி:— ஆச்சரியத்தோடு:— உன் நம்பர் எனக்கேதுக்கு! நான் அப்படி ஒன்றும் குறித்துக்கொள்ளவுமில்லை ஒன்றுமில்லை என்றார்.

வீரன்:— இதை யார் தான் நம்புவார்கள்! சர்க்கார் கோட்சொல்லி! என் வண்டியில் ஏறி வந்ததுமன்னியில், என் நெம்பரையும், என் வாயினின்றும் வந்த ஒவ்வொரு சொல்லையும், எழு

திக்கொண்டது மன்னியில், முழுப்பூசுணைக்காயைச் சோற்றில் மறைக்கப்பார்க்கிறானே! என்ன ஆச்சரியம்! என்றான். இப்பொழுது, தான் காரணம் கோட்டுப்புத்தகமென்று நம் அக்கிராசனாதிபதிக்கு விளங்கியது. இதற்குள் அவ்விடம், ஒரு பெருத்த கும்பல் கூடிவிட்டது. வீரனது கூட்டாளி வண்டிக்காரனொருவன், அப்படியா! கோட்சொல்லியா இவன்! அப்படியானால் வாயாலேன் பிதற்றுகிறாய்! கையால் ஒரு கை பாரேனென,

வீரன்:— பார்க்காமலா விடப்போகிறேன்! எரிகிற புண்ணில் எண்ணெயைக்காய்ச்சி ஊற்றினாற்போல் வழிநெடுக என் வயிற்றெரிச்சலைக் கொட்டிக்கொண்டு விட்டு இப்பொழுது ருசுவுக்கு, மூன்று சாக்ஷிகளையும் கொண்டு வருகிறானே! பாரேன் இவனது ஆணவத்தை! ஜெயிலுக்கு ஆறுமாதம் போனாலும் சரி! ஒருகை பார்த்துவிடுகிறதே சரி! அன்றைக்குக்கச்சேரியில் ஒருவனை ஜோட்டால் அடித்தற்காக, ஒருவனுக்கு ரூபாய் 5 அபராதம் போட்டார்கள். குற்றவாளி கையில் ரூபாய் 10 நோட்டாயிருந்தது. உடனே காலிலிருந்த ஜோட்டைக்கழற்றிக்கொண்டு, பிராது செய்தவனைத் தலையில் இரண்டடி அடித்துவிட்டு, கோர்ட்டாரைப்பார்த்து, கையில் சில்லரையில்லை. தங்கள் தீர்மானப்படி ரூ. 5-க்கு இரண்டடிவீதம், பாக்கி ரூ. 5-க்கும் கொடுத்துவிட்டேன். இந்தப்பத்து ரூபாயையும் அபராதமாக வைத்துக் கொள்ளுங்கள் என்று சொன்னான், என்று சொல்லிக் கொண்டு, தன் சொத்துப்போகிறதே என்றஎண்ணம் கொஞ்சங்கூடவில்லாமல், தனது தலைக்குட்டையைக்கழற்றிப்பக்கத்துச் சாக்கடையில் எறிந்து விட்டு, புலிபோலப்பாய்ந்து, நம் அக்கிராசனாதிபதியது பொன் கட்டட மூக்குக்கண்ணாடியைத்துகளாக்கி, வேட்டை வீரரது மூக்கை உடைத்து, கவிவாணரது மூளையைத்திறந்து, ஸ்திரீப்பிரியரது கண்களை ஒரு அறையில் அப்பம்போல் உப்பச் செய்துவிட்டான்.

இதற்குள், கோட்சொல்லிகள் என்ற சமாசாரத்தால் கோபமூண்ட ஜனங்களில் ஒருவன், இவர்களைக் கழுத்தைத் திருகிச் சாக்கடையில் போட்டாலென்ன! என்றான் மற்றொருவன். இவர்களைச் சித்திரவதை செய்து கொல்லவேண்டும். கோட்சொல்லிகளைக்காக்கைகளுக்கல்லவோ உபமானமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. காக்கைகளோ செத்த பிணத்தை மாத்திரம் பிடுங்கித் தின்கின்றன. கோட்சொல்லிகளோ, உயிரோடல்லவோ பிடுங்கித் தின்னப்பட்டவர்கள் என்றான். இதற்குள் நம்மவர்களது நிலைமையை நன்கு அறிந்துள்ள ஒருவர் அவ்விடம் வந்திராவிடில், நம் லோகோபகாரச்சங்க, சிகாமணிகளது பொதுநன்மை யாத்திரையும் நிறுத்தப்பட்டிருக்கும். நம்கதையும் அத்துடன் நின்றுபோக நேர்ந்திருக்கும். இதற்குள் அங்குவந்த பச்சைச் சட்டைதாரி, என்ன விசேஷம்? என்ன ஆர்ப்பாட்டம்? என்னகூட்டம்? என்றார். கோட்சொல்லிகள் என்றார்கள் கூட்டத்தார்கள்.

நாங்கள் கோட்சொல்லிகள் அல்லவென்று வற்புறுத்திக்கூறினார்கள், நம் அக்கிராசனாதிபதி அண்டுகோ.

வந்தபச்சைச்சட்டைதாரியும், முண்டாக்கொடுத்துக்கொண்டு, முழங்கை லாகவத்தால் வழி செய்துகொண்டு நம்மவர்களது கிட்ட நெருங்கிப்போய் அப்படியா! நீங்களா! என்ன விசேஷம்! ஏது இங்குவந்தது என்று வினவ, நம் அக்கிராசனாதிபதியும், சமாசாரங்களை விளக்கி

உரைத்தார். இதைக் கேட்டதும் அவர், ஏய் 304! சத்தப்பணத்தை எடுத்துக்கொண்டு ஓட்டம் பிடி! இவர்கள் தக்க மனிதர்கள். எனக்கு நன்குதெரியும். இப்படிவாருங்கள்! சிநேகிதர்கள் எங்கே! எல்லாம்தப்பிதம்! போராதகாலம்! போக்கிரிப் பையன்கள்! யாரடா சாவடிகாப்போன்! இங்குவா! நல்ல சாப்பாடு சீக்கிரம் தயாராகவேண்டும். என்ன தெரிந்ததா? என்று சள சள வென்று பேசிக்கொண்டிருந்தான். சீக்கிரத்தில் சமையலும் முடிந்தது. எல்லோரும் போஜனம் முடிந்த பிறகு சாவடியின் கூடத்தில் உட்கார்ந்து தாம்பூலந்தரித்துக்கொண்டிருந்தார்கள். கொஞ்சநேரத்திற்கெல்லாம், திம்மன்கோட்டை போகும் வண்டி தயாராயிருப்பதாய்த் தெரிவிக்கப்பட்டது. நம் நால்வரும், பச்சைச் சட்டைதாரியும், திம்மன் கோட்டை போகவேண்டித் தற்செயலாய் ஒத்துக்கொண்ட படியால், கிளம்பினார்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து. புகுந்தார்கள் ஒருங்கு கூடி வண்டியில். ஆனால் உட்கார இடமில்லை. கிளம்பினார்கள் மறுபடி வெளியில். பிரயாணத்தை நிறுத்திவிடலாமாவென்று பார்த்தார்கள். ஆனால் ஒருநாள் தாமதத்தால் எவ்வளவு லோகோபகாரம் முடியாமற் போய்விடும்! ஆகையால் ஏறினார்கள் வண்டிக் கூண்டின் மேல் ஐவரும்! அடித்துமுடுக்கினான் மாட்டை, வண்டிக்காரனும். வண்டி, கோட்டைவாசற்படியண்டை வந்ததும், நம் பச்சைச்சட்டைப் பிரபுவும், "குனியுங்கோள் தலையை" என்றார்! இம்மரியாதைக்குக்காரணம் கேட்கப்பட்டதும் பின்வருமாறு சொல்லலாயினர்.

சில நாளுக்கு முன் நான் இவிடம் நின்று சுருட்டுக் குடித்துக்கொண்டிருந்தேன். ஒருவண்டி வந்தது, நம்போல் கூண்டின்மேல் ஒரு தாயாரும், இரண்டு குழந்தைகளும் சவாரி செய்து வந்தார்கள். தாயார் முறுக்குத் தின்றுகொண்டிருந்தாள். வாசற்படியின்கமானை, முறுக்கு சுவாரசியத்தால் மறந்தாள்! சதக்கென்று சத்தம்கேட்டது! குழந்தைகள் திரும்பிப் பார்த்தார்கள்! தாயார் தலையைக்காணோம்! கையில் மாத்திரம் முறுக்கிருக்கிறது, போட வாயைக்காணோம்! குடும்பத்தலைவியின் தலைபோய்விட்டது! எவ்வளவு பரிதாபமான காரியம்! என்று சொல்லி முடித்தார். இதற்குள் நம் அக்கிராசனாதிபதியும், மனிதனது நிலைமையும் வாழ்வும், நீர்மேல் குமிழி போல் எவ்வளவு ஸ்திரமற்றதாயிருக்கிறது என்று சொன்னார்.

கவிவாணர்:— ஒருநாள் கதவின் வழியாய் வருவது மறுநாள் ஜன்மாவின் வழியாய்ப் போய் விடுவது ஜகத்தில் வழக்கந்தானே என்று நம் அக்கிராசனாதிபதியது வாக்கியத்திற்கு வியாக்கியானங் கூறினார்.

தாங்கள் தத்துவசாஸ்திரிகள்போலும் என்றார் பச்சைச்சட்டைதாரி.

நான் ஜனங்களது ஸ்வபாவங்களைப்பற்றிப் படிப்பதில் நோக்கமுள்ளவன் என்றார் அக்கிராசனாதிபதி.

பச்சைச்சட்டைதாரி:— நானும் அப்படித்தான். வேலையற்று வரும்படியற்றவர்கள் சாதாரணமாய்ச் செய்வதுதானே!

கவிவாணரை நோக்கி. கவிதா போலும்?

கவிவாணர்:— அதில் கொஞ்சம் அநுபவமுண்டு.

பச்சைச்சட்டதாரி:— நானும் அப்படியே. பத்தாயிரம் புஸ்தகங்கள் எழுதியிருக்கிறேன்! மைமன் சிங் குழப்பம், தூத்துக்குடித் தெருச்சண்டை, பொன்வண்டு, முதலியவைகளைப்பற்றி

நின்ற நிலையிலேயே எழுதினேன்.

கவிவாணர் :— தூத்துக்குடிக்குழப்பத்தின் போதுதாங்கள் அவ்விடமிருந்தீர்கள் போலும்?

பச்சைச்சட்டைதாரி:— ஆஹா ! குழப்பத்தையும் கூட்டத்தையும் பார்த்ததும், விஷயம் மனத்தில் உதிக்கும். போவேன் உள்ளில் ! எழுதுவேன் கவி ! வருவேன் வெளியில் ! இன்னொரு விஷயம் உதிக்கும் மனத்தில் ! மறுபடியும் புகுவேன் உள்ளில் ! வரைவேன் காகிதத்தில் !

வேட்டைவீரரை நோக்கி, வேட்டைப்பிரியர் போலும் ?

வேட்டைவீரர் :— கொஞ்சம் சபலம் அதில் உண்டு.

பச்சைச்சட்டைதாரி :— நல்ல தொழில் ! நாய்கள் உண்டோ ?

வேட்டைவீரர் :— இப்பொழுது இல்லை.

பச்சைச்சட்டைதாரி :— அப்படியல்ல. நாயிருத்தல் வேண்டும். நேர்த்தியான பிராணிகள். மிக்க அறிவுள்ள ஜந்துக்கள். நான் ஒருக்கால் ஒரு நாய் வைத்திருந்தேன் கறுத்த மயிரடர்ந்துள்ளது. பருத்த தலையுள்ளது. செண்டென்று பேரிடப்பட்டிருந்து. வெகு அறிவுள்ளது. ஒருதரம் வேட்டைக்குச் சென்றேன். வேலிபோடப்பட்டிருந்த காட்டினுட் புகுந்தேன். நாயைக்கூப்பிட்டேன். வரமாட்டேனென்றுவிட்டதே ! மேல் நோக்கிப் பார்த்தேன் ! பலகை போடப்பட்டிருந்தது. அப்பலகையில் வேலிக்குட்புறம் வரும் நாய்கள் சுடப்படுமென்று எழுதப்பட்டிருந்தது. என்ன அற்புதமான நாய்?

அக்கிராசனாதிபதி:— ஆஹா ! மிக்க அற்புதமானது தான் ! தயவு செய்து இதை எனது நோட்டுப்புத்தகத்தில் எழுதிக்கொள்ள அநுமதி தருவீரா ?

பச்சைச்சட்டைதாரி:— ஆஹா! இதற்கென்ன இதைப்போல ஆயிரம் உதாரணங்கள் வேண்டுமானாலும் தருவேனே என்று சொல்லி அவ்விடம் போய்க்கொண்டிருந்த ஒரு மங்கையைக் கடைக்கண்ணால் பார்த்த ஸ்திரீப்பிரியரை நோக்கி, அதி சவுந்தரியமான பெண் ! இவ்விடத்துப் பெண்களே அப்படி ! கறுத்த குழல் ! அகன்ற கண் ! மெலிந்த இடை ! வண்டினது போன்றது! பொன் நிறம் ! அங்புதமான அமைப்பு.

ஸ்திரீப்பிரியர்:- மிக்க அற்புதமானது தான்!

பச்சைச்சட்டைதாரி:— மலையாளம் சென்றிருக்கிறீரோ ? அவ்விடத்துப் பெண்கள் இவ்விடத்திய பெண்களைப்போல் அவ்வளவு நாகரீகமுள்ளவர்களல்ல. ஆனால் வியக்கத்தக்க அழகு!

ஸ்திரீப்பிரியர்:— தாங்கள் அவ்விடம் சென்றிருக்கிறீர்கள் போலும் ?

பச்சைச்சட்டைதாரி:— ஆஹா ! சென்றிருந்தது மாத்திரமல்ல ! வசித்துமிருக்கிறேன் வெகு காலம் !

ஸ்திரீப்பிரியர்:— வசியங்கள் உண்டோ ?

பச்சைச்சட்டைதாரி:— ஆஹா ! ஆயிரம் ! ஒருத்தி! பெயர் சந்திரகலை! என்மேல்பிராணன்! அவளது தகப்பனாருக்கிஷ்டமில்லை ! வெகு பெருந்தன்மையுள்ள பெண் ! என் செய்வள் ! அளவற்ற விசாரம் ! பாஷாணம் வாங்கிக்கொண்டாள்! சங்கதி தெரிந்ததும் என் செய்தேன் தெரியுமா ? சஞ்சிகையில் ஆயுதம் வைத்திருந்தேன்! எடுத்துக்கொண்டு ஓடோடியும் சென்றேன்! வயிற்றைக் கிழித்தேன் ! எடுத்தேன் வெளியில் பாஷாணத்தை ! வந்துவிட்டது சந்தோஷம் அவள் தகப்பனாருக்கும் ! சேர்த்தார் எங்கள் இருவரது கைகளையும் ! நனைத்தார் அக்கைகளை ஆனந்த பாஷ்பத்தால்! ஆச்சரிமானதல்லவா இது !

மேற்கூறிய வர்ணனையினால் சொக்கிப்போன ஸ்திரீப்பிரியர் ஆஹா! அத்தியாச்சரியமானது தான்! சந்தேகமென்ன ? இப்பொழுது அவள் இவ்விடமிருக்கிறாளோ ?

பச்சைச்சட்டைதாரி :— சல்லடைக்கண்கள்போன்ற துவாரங்களோடுகூடின ஒரு கைக்குட்டையால் வரண்டிருந்த தனது கண்களைத் துடைத்துக்கொண்டு, அதி ஹீனஸ்வரத்துடன் போய்விட்டாளய்யா! போய்விட்டாள்! இறந்து போய்விட்டாள்! வயிற்றுப்புண் ஆறவேயில்லை! நாளுக்கு நாள் உடம்பு க்ஷீணித்து வந்து சென்றாளையோ ! காலம் !

கவிவாணர் :— வர்ணனையில் பற்றுள்ளவராய், அவள் தகப்பனாரோ ? என்றார்.

பச்சைச்சட்டைதாரி :— மிக்க மனோவியாகூலத்தோடு இருந்த அவரை ஒருநாட்காணோம். எங்கும் தேடிப்பார்த்தார்கள் ! அகப்படவில்லை ! ஊரின் மதகில் ஜலம் ஓடுவது நின்றுவிட்டது ! காரணம் தெரியவில்லை! பயிர்களுக்கு ஜலமில்லை! சோதித்தார்கள்மதகை! அகப்பட்டார் மாமனார்! பெருத்த சுழல்! தலைகீழாய்க் கொண்டுபோய்ச் சொருகப்பட்டிருந்தார் ! சட்டைப்பையில் காகிதமிருந்தது ! அவர் கைப்படத் தற்கொலைக்குக் காரணம் வரையப்பட்டிருந்தது !

கவிவாணர், மனம் உருகிப்போய்க்கவியொன்றில் இதை வர்ணிக்கப் பிரியமுள்ளவராய் குறித்துக்கொள்ளலாமோ இதை ? என்றார்.

பச்சைச்சட்டைதாரி :— ஆஹா ! தாராளமாய்ச் செய்யலாம் ! இதைப்போல் இன்னம் அநேக கதைகள் வேண்டுமானாலும் தருகிறேன் என்றார்.

இதற்குள் வண்டியும் திம்மன் கோட்டை வாராவதி வந்துசேர்ந்தது. அக்கிராசனாதிபதி, கவிவாணர், இவர்களது நோட்டுப்புத்தகங்கள் சமாசாரங்களால் முடிந்துபோனதால், வாராவதியின் அமைப்பினால், வியப்படைந்து, மனோராச்சியம் மாத்திரம் செய்துவந்தார்கள். வண்டியும், ஊரின் சத்திரம் வந்துசேர்ந்ததும், தங்களுக்கு அன்றையதினம் அவ்வளவு உதவி புரிந்த பச்சைச்சட்டைதாரிக்கு வந்தனமளித்து, இராத்திரி போஜனத்துக்கு வரவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள், நம் சங்கத்தவர்கள். எந்நேரத்துக்கென்றார், சட்டைதாரி. சரியாய் எட்டு மணிக்கென்றார், அக்கிராசனாதிபதி. சரி, சம்மதமென்றார், சட்டைதாரி. சொன்னதும் மறைந்தார் மின்னலைப்போல், அவர்கள்முன்னின்றும் ! அவர் சென்றதும் நம் அக்கிராசனாதிபதி, அநேக தேசங்களின் யாத்திரை செய்திருப்பவராகக் காண்கிறது. தவிர உலகில் நன்கு அடிபட்டவர் என்றார்.

கவிவாணர்:— அவர் கவிகளிற் சிலதைப் பார்க்க விருப்பமிருக்கிறது என்றார்.

வேட்டைவீரர்:— நான், அவர் சொன்ன நாயைப் பார்க்கவேண்டுமென்றார்.

ஸ்திரீப்பிரியர், சந்திரகலையையும், சட்டைதாரியிடம் அவளுக்கிருந்ததாகச்சொல்லப்பட்ட அன்பையும், மதகில் மடிந்த அவளது தகப்பனாரையும், மனத்தில் நினைத்து நினைத்து மௌனமாய் மனமுருகினார். இதற்குள், சத்திரத்தில் ஒரு அறை திட்டப்படுத்தப்பட்டு, எல்லோரும் சென்று உட்கார்ந்தார்கள். சொன்னபடி சரியாய் 8 மணிக்கு வந்துசேர்ந்தார் நம்பச்சைச்சட்டைதாரியும். போட்டான் இலைகளைச் சமையற்காரனும், சத்திரத்தின் கூடத்தில்வரிசையாய். பரிமாறினான் பரிசாரகனும் ஆஹாராதிகளை. முடித்தார்கள்போஜனத்தை நம்மவர்களும். எடுத்தார்

கள் தட்டத்தினின்றும் தாம்பூலத்தை. தரித்தார்கள் எடுத்ததை வாய் நிரம்ப. படுத்தார்கள் கூடத்தில் விரித்திருந்த கம்பளத்தின்மேல். விடுத்தார்கள் குறட்டை, ஸ்திரீப்பிரியரும்சட்டைதாரியும் தவிர, மற்றயாவரும். இதற்குள்எதிராயுள்ள கொட்டகையில் வாத்திய சப்தம்கேட்க, நம் ஸ்திரீப்பிரியரும் பரிசாரகனை நோக்கி எதிர் கொட்டகையில் யாது விசேஷமென்றார்.

ஆட்டம்! தாராசசாங்கம்! ரமாமணி தாரைவேஷம் போடப்போகிறாளாம்! எள்ளுப் போட்டால்எள்ளுவிழாது, கூட்டம் கொட்டகையில் என்றான், அவனும்.

ரமாமணி தாரைவேஷம் என்றதும், ஸ்திரீப்பிரியரது மனம் இளகிவிட்டது போவோமாவென்றார் சட்டைதாரியை நோக்கி! சரியென்றார் சட்டைதாரியும். ஆனால் இவருக்கோ அரையில் உடுத்தியிருந்த கந்தைத்துணியோடு போக வெட்கமாயிருந்தது. ஸ்திரீப்பிரியர் தனது சஞ்சிகையில்வைத்திருந்த வேட்டைவீரரது துகிலி உடை பத்தாறொன்றை எடுத்துக்கொடுக்க, உடுத்திக்கொண்டு கிளம்பினார். இருவரும் சீட்டு விற்போனிடம்சென்று ஆளொன்றுக்கு எவ்வளவென்றார்கள். அரை ரூபாயென்றான் அவனும். ஸ்திரீப்பிரியரிடத்தில் ஒரு ரூபாயிருந்தது. சட்டைதாரியிட பணமெல்லாம் பணக்காரர்களிடமிருந்தது. இருட்டில் சில்லரை வாங்கினால் ஈயப்பணத்தையும் தேசற்காசையும் கொடுத்துவிடுவானல்லவா! ஒரு ரூபாய்க்கும் இரண்டு சீட்டாய் நம் சட்டைதாரிக்கும் சேர்த்துவாங்கப்பட்டது. இருவரும் உள்ளே சென்று ஒருபலகையின்மேல் உட்கார்ந்தார்கள். உட்கார்ந்தகொஞ்ச நேரத்திற்கெல்லாம், சட்டைதாரியும் தன் ஜேப்பினின்றும் ஒரு பட்டையை எடுத்தார். அதில் ஒருவித லேகியம் கொஞ்சமிருந்தது. அதென்னவென்றுகேட்டார் ஸ்திரீப்பிரியரும். இதுதான் கஞ்சாலேகியம்; கொஞ்சம் தூக்கமுண்டாக்கும் குணம் இதற்குண்டு. ஆயினும், உடம்பிற்கு உற்சாகத்தை உண்டாக்கும். உங்களுக்கு அப்பியாசமில்லை. கொஞ்சமாய்ப் போட்டுப்பாரும் என்று ஒரு பாக்கவ்வளவு எடுத்துக்கொடுத்தார். ஸ்திரீப்பிரியரும் கொஞ்சம் வாயில்போட்டுப்பார்க்க ருசியாயிருந்தது. அவ்வளவையும் விழுங்கிவிட்டார். கொஞ்சநேரத்திற்கெல்லாம் எல்லோரும் தலைகீழாக நிற்கக்கண்டார். ஒருவிளக்கு ஆயிரமாய்க் காணப்பட்டது. உற்சாகத்தால் பாட ஆரம்பித்துவிட்டார். சட்டைதாரிக்கு அனுபவப்பட்ட அமிர்தமானதால் அவ்வளவு மயக்கமுண்டாகவில்லை. ஆயினும் உண்டாயிருந்த கொஞ்சம் வெறியாலும், வேட்டைவீரரது போராத காலத்தினாலும், அவ்விடம் வந்திருந்த ஒரு பெரியமனிதரது கோபத்துக்குக்காரணமானார். பக்கத்தில் உட்கார்ந்திருந்த இப்பெரிய மனிதர், சட்டைதாரிக்குக் கஞ்சா லேகியத்தின் மகிமையால் ஒரு அத்தியந்த நேசராய்க்காணப்பட்டார். ஆகையால் அவரிடம் சென்று, தனது ஸ்நேகத்தைக்காட்டப்போக, அவரும் வெறுப்பால் அப்புறம் போடாவென, இவரும் ஸ்நேகிதரை அவ்வளவோடு விட்டுப்போக இஷ்டமில்லாமல், சென்று ஆலிங்கனம் செய்துகொள்ள, எல்லோரும் தாரையைப் பார்ப்பதைவிட்டு இவர்களைப்பார்த்துக்கொல்லென்று நகைக்க ஆரம்பித்துவிட்டார்கள். இதற்குள் அப்பெரியவரும் சட்டைதாரியினது ஆலிங்கத்தினின்றும் விடுவித்துக்கொண்டு, வெட்கித்தலை குனிந்தவராய், அவரைப் பார்த்து நான் யார் தெரியுமா? என்பேர் வைத்திய வீரசிகாமணி. இப்பொழுது எனக்கு நீர் உண்டாக்கின அவமானத்திற்கு உம்மை என்ன செய்யப் போகிறேன் பாருமென,

பச்சைச்சட்டைதாரி:— அப்படியா! வைத்தியரா தாங்கள்! வைத்தியரா! மெத்த சந்தோஷம்! இப்பொழுது எனக்கு உடம்பு சரியாய்த்தானிருக்கிறது என்றார்.

வைத்தியசிகாமணி :— உமக்குப் போதை மீறியிருக்கிறது. நீர் எதிர்வீட்டில்தான் இறங்கியிருப்பதாய்க் காண்பதால், நீரும் உமது சிநேகிதருமாய்ச்சென்று, தூங்கி மயக்கத்தைத் தெளியவைத்துக்கொள்ளும். காலமே பேசிக்கொள்கிறேன் என்றார். இதற்குள் சட்டைதாரியும் ஸ்திரீப்பிரியரது கையைப் பிடித்துக்கொண்டு, இருவரும் குடிவெறி நடையோடு, தாங்களிறங்கியிருந்தவிடம் வந்து படுத்துக்கொண்டார்கள்.

மறுநாட் காலையில் 6 மணிக்கு ஒருவன் நம் அக்கிராசனாதிபதி படுத்திருக்குமிடம் வந்து, ஐயா! என்றான்.

அக்கிராசனாதிபதி :— யாரதுவென்றார், அரைத்தூக்கத்தோடு!

நான்தான் இளம்வெயில் என்றான் வந்தவனும்; நித்திராதேவியால் முற்றும் விடுபடாத நம் அக்கிராசனாதிபதியும், என்னவென்று தூக்கக் கலக்கத்தோடு கேட்டார்.

இளம்வெயில் :— துகிலி உடை பத்தாறு தரிப்பவர் உங்களுள் யார்? தயவுசெய்து சொல்வீரா?

அக்கிராசனாதிபதி :— சுருக்கமாய், வேட்டை வீரர் என்றார்.

இளம்வெயிலும் பக்கத்தில் படுத்துக்குறட்டைவிட்டுத் தூங்கிக்கொண்டிருந்த ஸ்திரீப்பிரியரைத்தட்டி எழுப்பித் தாங்கள் வேட்டைவீரரோவென!

ஸ்திரீப்பிரியர் :— அரைத்தூக்கத்தோடு அப்பொழுதுதான் விழித்து சோம்பல் முறித்துக்கொண்டிருந்த வேட்டைவீரரைச் சுட்டிக்காட்டின வண்ணமாய், அதோயிருக்கிறாரே அவர்தான். ஐயா! வேட்டைவீரரே! இன்று காலமே உமக்குஎதோ யோகம் வந்திருக்கிறதுபோல் காண்கிறது. நல்ல வேட்டைதான் என்றுசொல்லி, ராத்திரிக் கண்விழித்திருந்ததால், மறுபடி மூக்கினால் வாத்தியம் வாசிக்க ஆரம்பித்துவிட்டார்.

இதற்குள் இளம் வெயிலும் வேட்டைவீரரிடம் சென்று, வேட்டைவீரரென்ற நாமதேயமுடையவர் தாங்கள்தானே என, அவரும் ஆம் என்று பதிலளித்தார்.

(இன்னும் வரும்.)

எம். என். கணேசய்யர்.

VI. ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம்.

பாலகாண்டம்.

உலகெலா முன்ன முடமை மன்னிய
மன்பதி யளித்த மன்ன ராண்மையால். 1.
சாகர மென்ன சீர்த்திச் சகரன்
சந்ததி யறுபதி னாயிரர் சார்வரும். 2.
இட்சு வாகுவி னிலகிய வமிசத்
துச்சித மூளரா மாயண மிதுவும். 3.
அக்கதை யறைய வகில மனைத்தும்
அறம்பொரு ளின்பி னருமையினீங்கும். 4.
கோசல முதித்த கொம்மைச் சனபதம்
நிறைசர யூநதி செற்றன நிறைகரை. 5.
அயோத்தி யென்னு முலகறி நகரம்
மன்பதை யிந்திர மனுவா லாயதாம். 6.
இரண்டும் பத்து மியோசன மாநகர்
இலகிய மூன்றி னிடம்பெறு மெழிலாம். 7.
இராச பாட்டையு மெழிலின் வகுத்து
மலர்நன் னீரொடு மழைத்துள நிதமும். 8.
அதனிறை தசரத னளிமகி மையினான்
மன்னு மாநகர் மகபதி மானும். 9.
உவளக தோரண முள்வகுத் திலகும்
வாயு மாயுதம் வயப்பொறி சிற்பம். 10.
சூதர் மாகதர் சூழ்திரு நிகரிலாக்
கொடி யுயர்மாடங் கொல்சதப் பொறிகுலம். 11.
வதுவை நாடகம் வயங்கு ஞான்புரம்
மாபொழில் சூழு மகத்தாஞ் சாலையும். 12.
மதில்புனை யகழி மன்னர் மருவறும்
வாசிகரிநிறை வேசரி யொட்டகம். 13.
மன்னர் சாமந்தர் மருவு பலிமிதம்
தேசாந் தேச வணிகர் வயங்கவாம். 14.
குவிவகை ரத்நங் குன்றினின் மானும்
கூட நிறைந்தது கோநகர் மானும். 15.
சித்திரச் சதுக்கஞ் சீர்பெறு மாயம்
மணியெலா மணிவகுத் திலகுமே நிலையும். 16.
மனைநிலை மயங்காச் சமநில னாகும்
சாலிதண் டுலமலிந் திக்குநீர்ச் சலிலமாம். 17.
துந்துபி வீணையொடு மத்தளம் பணவமல்கும்
பொறையெனிற் புநித மாந்தரின் மிகுமாம். 18.
விமானம் வேண்டிய தவமிகு நிதமும்
வேயா வினிமையின் வேய்மனை மன்குழூஉம். 19.
ஏகப் பகழியி னிலக்கே விலகா
ஓசை வழிபடு லாகவ வசிதரும், 20.
பன்றியும் புலியும் ஆளியும் பயில்வனம்
தேடி யழிக்குந் திரள்புய பலத்தரும் 21.
அன்னா ராயிர மருமகா ரதரும்,
மன்னிய பதியின் தசரதன் மன்னும். 22.
எரிவள ரரண மிலகுறு மந்தணர்
இருடிக ளென்னரு மிருடிகளுமுளார். 23.

(ஐந்தாம் சருக்க முற்றும்)

பிரசுரகர்த்தா.

இராமகதையை எத்தனையோ மகான்கள் செய்திருக்கிறார்கள் என்பது எல்லாவருக்கும்தெரிந்தவிஷயம். ஆகிலும் வால்மீக ராமாயணம் படிக்கப்படிக்க நூதன ஆனந்தத்தை அளிக்கிறதென எல்லாவரும் ஒத்துக்கொள்கிறார்கள். இதில் பக்தி மாதுரியரசம் இனிமையாகவமைந்துளது. ஆனால் இதில் இன்னும் விசேஷமென்னவென்றால் நவரசாலங்காரமானது கால ருசிக்கேற்க வமைந்திருக்கிறது. திருஷ்டாந்தமாக இப்பொழுதுமுன்சிபாலிடியிற்பட்டநகர்களில்வேனிற்காலத்து ரோடுகளுக்குச்சலம்தெளிப்பது வழக்கம். அதுபோல அயோத்தியாபுரியில் சலத்தோடு சுவாசனையுள்ள புஷ்பங்களைக்கலந்துதெளித்தார் என்று வால்மீகர் சொல்லியிருப்பதும், வெகு தேசத்திய வியாபாரிகள் நிறைந்திருந்தார் என்றும். கோவேறுகழுதை ஒட்டகம் இவற்றை வளர்த்தார் என்றும், வீதிகள் விசாலமாயும் சதுக்கம் சமமாகவும் வகுத்துளதென்றும், சாலை மரங்கள் வைக்கப்பட்டிருந்தனவென்றும், "சதக்நீ" என்னும் பீரங்கிபோன்ற கருவி காப்பினிடம் வைத்திருந்ததென்றும், இவைபோல்வன பலவும் சொல்லியிருக்கிறார். இது இதரகவிகள் பாடியபடி அதிசயோக்தியாகாது. அக்காலத்திய நாகரீகம் இக்கால நாகரீகத்திலும் சிறந்ததாகவேஇருந்ததென்பதற்குஅநுகூலமாக, உள்ளது உள்ளபடி எழுதினாரென்றே எண்ணவேண்டியிருக்கிறது. இது தான் அலங்கார விசேஷம். தவிர ஒட்டகம் கோவேறு கழுதையிவற்றைப்பற்றி எழுதின கவிகள் மிகவும் குறையும். ஆகையால், மேற்படி மிருகங்கள் முற்காலத்தில் நமது தேசத்து வனங்களில் இருந்தது என்றாகிலும், அல்லது இதர தேச வியாபாரிகள் அரேபியா போன்றதேசங்களிலிருந்துகொண்டுவந்திருக்கக் கூடுமென்றாகிலும் அறிவதற்கிடமாகிறது. இதன்றியில், நகர் வகுத்திருப்பது சமமாகவும் சதுக்கமாகவும் இனிமைபெற வாய்ந்திருந்ததெனவே, இக்காலத்து சர்வே ஒருக்கால் முன்னமும் ஏற்பட்டிருந்ததோவென்றும், இரைச்சல்கேட்டு அது வந்தவழி யந்திரப்பிரயோகம்செய்வர் என்றதால் இக்காலத்து யுத்தத்தேர்ச்சியும் இருந்ததோவென்றும் சந்தேக ஆஸ்பதமாகிறது. இவையெல்லாம் யுக்தியல்ல. சந்திர சூரியகதியை மாடகூடங்கள் தடுப்பதால் சந்திர சூரியர்களுடைய உடல் தேய்ந்து போகிறதென்று வர்ணிப்பது யுக்தி. உள்ளது உள்ளபடி சொல்வதே நயவர்ணனை என்பதும், அவ்வர்ணனை தான் மனோகரமென்பதும், வியாபக சக்தியென்பதும் எளிதில் விளங்கும். ஆகையால் இதுகாறுமிந்தக்காவியத்தை உள்ளதுரைத்தாற்போலபாடாயோக்கியமாய்த்தமிழ்க்கவியால் பாடினாரில்லை. ஏதோதெய்வசங்கற்பத்தால் பாடத்துணிந்த எனது சிற்றறிவை மன்னிக்கவும். பிரசுரகர்த்தா.

(ஆறும் சருக்கம் பின்னால் வரும்.)

VII.

இந்தியா சட்டநிரூபண விருத்தாந்தம்.

32-வது புஸ்தகம் 1-வது சஞ்சிகை. } 1909-ஹு ஜனவரி மாசத்திய மதிராஸ் கோர்வை.

முதற்பக்கம்: — புல்பெஞ்சு சிவில் அப்பீல்: —

வாதி - ராந்துப்புரையில் குஞ்ஞாசார்:

பிரதிவாதி - நேரத்துக்குஞ்ஞிக்கண்ணன்.

மலையாள தேசத்து குழிக்கூறு அபிவிருத்திப் பிரதி பல விஷயமாக, ஷை அபிவிருத்தியானது 1887 வருஷத்திய சட்டம் ஜாரிக்கு வருமுன்னேயாவது வந்த பின்னாவது செய்யப்பட்டிருந்தாலும், அவ்விஷயத்தில் 1886-வருஷம் ஜனவரி-மீ 1-உக்கு முன் செய்யப்பட்ட கராரானது சாதகமாகுமென்பது.

மூன்றாம்பக்கம்:-கிரிமினல் அப்பீல்: வாதிகள் சிதம்பரம்பிள்ளை, சுப்பிரமணியசிவ:-இ. சி. கி. 124-எ.

1. 'இந்தியன் சிக்ஷாநியமம்' 124. எ. வகுப்பினைச்சார்ந்த நடவடிக்கைக்கு, 'கிருமினல் நடவடிக்கை' 196-வது வகுப்பின்படி கவர்ன்மெண்

டாரால் கொடுக்கப்பட்ட உத்தரவேபோதும்; பிராது விஷயசம்மதம் தேவையில்லை என்பது.

5. போலீஸ் உத்தியோகஸ்தனால் கொடுக்கப்படும் பிராது, 'கிருமினல் நடவடிக்கை' 4-பி. வகுப்பினையநுசரித்து, போலீஸ் ரிப்போர்ட்டாகாதென்பது.

3. குற்றஸ்தாபன நிமித்தம், இவ்வித ராஜநிந்தனை வசனங்கள் பிரயோகிக்கப்பட்டனவென்று, பிராதில்காணவேண்டியதில்லை; எதிரிக்கு நீதித்தவறு நேர்ந்தாலொழிய, ஷை பிராது, 'கிருமினல் நடவடிக்கை' 537. எ. வகுப்பால் பரிகரிக்கப்படுவதால், சாதகமாகும் என்பது.

4. 'கிருமினல் நடவடிக்கை' 200-வது வகுப்பின்படி தாக்கல் செய்துகொண்ட பிராதைக், கோர்ட்டாரவர்கள் நியம விரோதமான போலீஸ் விசாரணைக்கு உட்படுத்தினாலும், பிறகு அவர்கள் செய்யும் நடவடிக்கை ரத்தாகாதென்பது.

5. 'இந்தியன் சிக்ஷாநியமம்' 124. எ. வகுப்பின்படி குற்ற ஸ்தாபனத்துக்கு ராஜநிந்தனை விவரணம் ஆவசியமாயினும், அஃதின்மையால் கோர்ட்டார் நடவடிக்கை ரத்தாகாதென்று 'கிருமினல் நடவடிக்கை' 537, 225-வது வகுப்புகளினால் விளங்கும் என்பது.

6. ராஜநிந்தனை அடங்கிய பிரசங்கங்கள் ஒரு விஷயத்தைப்பற்றி அடிக்கடி செய்யப்பட்டால், பிரசங்கியாரின் அபிப்பிராயத்தை விளக்கும் பொருட்டு, அப்பிரசங்கங்கள் அனைத்தும் 'ருசுச்சட்டம்' 14-வதுவகுப்பின்படி ருசுவாக அங்கீகரிக்கத்தக்கது என்பது.

7. 'இந்தியன் சிக்ஷாநியமம், 109-வது வகுப்பின்படி தூண்டுதல் குற்றத்துக்கு பாத்தியமானவன், குற்றம் நடக்குங்காலத்தில் ஆஜரிருந்தால் அந்தக்குற்றத்துக்கும் பாத்தியப்பட்டவனாகிறான் என்பது 114-வது வகுப்பால் விளங்க, 124 எ. வகுப்பின்படி குற்ற நடவடிக்கைக்கு கொடுக்கப்பட்ட சாங்க்ஷன் உத்திரவு 114-வது வகுப்பிற்கேற்கவே சாதகமாகுமென்பது.

8. ஒரு விஷயமாகப்பிரசங்கிக்க உடன்படும் உபயகக்ஷிகளின் நோக்கத்தை விளக்கும் பொருட்டு அப்பிரசங்கங்கள் ருசுவாக யேற்கத்தகுந்தவை என்பது.

9. எதிரி எழுதுவித்து தாக்கல் செய்வித்த வாக்குமூலமானது 'கிருமினல் நடவடிக்கை' 287-வது வப்பின்படி சாதகமாகுமென்பது.

10. 'இந்தியன் சிக்ஷாநியமம்' 124. எ.வகுப்புக்குற்றஸ்தாபனத்துக்கு ராஜநிந்தனையால் கலகம் நேரவேண்டுமென்பது அனாவசியம்; கலகம் நேரும்படியான மனவெழுச்சியிருந்தால் போதுமென்பது.

47-வது பக்கம்—சர்க்கார் அப்பீல் - எதிரி மாதிக நல்லவாடு.

கவர்ன்மெண்டு தரப்பில் விண்ணப்பம் செய்யப்படாலொழிய 'கிருமினல் நடவடிக்கை' 339 (3) வகுப்பின்படி ஹைகோர்ட்டாரவர்கள் சாங்க்ஷன் உத்திரவு கொடுக்கமாட்டார்கள் என்பது.

(பிரசுரகர்த்தா.)

NEWS AND NOTES.

வர்த்தமானங்கள்.

கோயமுத்தூர் போத்தனூர் டிண்டுக்கல் ரயில்வே. இந்த ரயில்வே விஷயத்திற்க்காக லாண்டு ஆக்விஸிஷன் ஆக்ட் பிரகாரம் நடவடிக்கை நடத்த அதிகாரிகளை ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

ஈரோடு ஜஞ்சன்கூட் ரயில்வே.

இந்த ரயில்வே விஷயத்திற்கு சர்வே நடந்து கொண்டிருக்கிறது லாண்டு அக்விகேஷன் ஆக்டு பிரகாரம் நடவடிக்கைகள் நடத்த அதிகாரிகளை ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

சேலம் ஜில்லா பரமதியில் ஒரு லஞ்சக் கேஸ்.

ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டரும் ஒரு சப் இன்ஸ்பெக்டரும் ஒரு எட் கான்ஸ்டேபிலும் 150 ரூபாய் லஞ்சம் வாங்கினதாககேஸ் 10-6-09தில் விசாரணைவாய்தா கோயமுத்தூர் ஹெட் குவார்ட்டர் டிப்டி மாஜிஸ்திரேட் கோர்ட்டில் போடப்பட்டிருந்ததை 28-உ வாய்தா தள்ளிப்போடப்பட்டிருக்கிறது.

வாதிபக்ஷத்தில் வக்கீல்கள். கவர்ண்மெண்டு வக்கீல் மக-ா-ஸ்ரீ பாலகிருஷ்ணய்யரும் மகா-ா-ஸ்ரீ சேலம் விஜியராகவாசாரியாரும்.

எதிரிபக்ஷத்தில் மதிரூஸ் மகா-ா-ஸ்ரீ கோபாலாசார் அவர்களும் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

கரடிவாவி ராமசாமி நாயுடு இ. பி. கோட் 420 வது செக்ஷன்படி மோசடிசெய்ததாக கோயமுத்தூர் ஹெட் குவார்ட்டர் டிப்டி மாஜிஸ்திரேட் கோர்ட்டில் விசாரணையாகி குற்றம் சாட்டப்பட்டு இன்றயதினம் 6 மாத தண்டனையும் 500 ரூ. அபராதமும் விதிக்கப்பட்டது.

கோயமுத்தூரில் பாரஸ்ட்டு காலேஜுக்காக கட்டடம்கட்ட எஸ்டிமேட் தயார்செய்யும்படி கவர்மெண்டாரால் சாங்க்ஷன் செய்யப்பட்டிருக்கிறது.

ஜூலை மாசம் 14 தேதி மகாகனம் பொருந்திய மதிராஸ் கவர்னரவர்களால் அக்கிரிகல்சர் காலேஜ் திறக்கப்படுவதாக வதந்தி.

கோயமுத்தூரில் ஜனரல் ஆஸ்பத்திரிக்கட்டடம் முடிவாய்வருகிறது. அநேகமாய் ஜூலை மாதத்திற்குள் முடிவாய்விடுமென்பதே.

போலீஸ் ரிக்ரூட் ஸ்கூல் கோயமுத்தூரில் ஸ்தாபிப்பதாக பிளான் எஸ்டிமேட் வகைரா கவர்மெண்டுக்கு போயிருக்கிறது.

காளீஸ்வரர் மில் அநேகமாய் கட்டடவேலை முடிந்துவிட்டது 2, 3 மாதத்தில் வேலை துவக்குவார்கள்.

மால்மில்ஸ் கட்டடவேலைக்கு ஆரம்பத்திருக்கிறார்கள்.

ஜூன் ௴ 26 தேதிமுதல் சப்கோர்ட்டு 6 மாதத்திற்கு கோயமுத்தூரில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது.

ஜூன் மாதம் 10 தேதிமுதல் அடிஷனல் செஷன் ஜட்ஜி Mr. I. J. காடன் துரை அவர்கள் செஷன்கேசுகளை நடத்திவருகிறார்.

செஷன் ஜட்ஜ சிவில் அபீல்களை நடத்திவருகிறார்.

லாண்டு ரிவினியூ செட்டில்மெண்டு டிபார்ட்மெண்டில் புதிதாக அசிஸ்டெண்டு கமிஷனர் J சந்திரமையர் என்பவரை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அவர் இப்போது சத்தியமங்கலம்தாலூகாவில்செடில்மெண்டு சம்மந்தமான வேலை செய்துவருகிறார்.

காலநிலை

சென்ற ஒரு வாரமாய் மழைகாற்று விசேஷமாயில்லை ஆற்றில்ஜலம் வந்துகொண்டிருக்கிறது. ஏரிகளுக்கும் தண்ணீர் வந்துகொண்டிருக்கிறது. ஆனால் நரசாம்பதி கிருஷ்ணாம்பதி ஏரிகள் ரிபேரில்லாமல் குடிகளுக்கு தண்ணீர் தவக்கப்படுகிறது.

சென்ற 2 வாரமாய் பிளேக்நோய் குறைந்தாற்போலிருந்து இந்தவாரம் அதிகரித்திருகிறது. இதுபரியந்தம் அக்கிராரத்திலில்லாதிருந்து நேற்றயதினம் ராஜ வீதியில் ஒருகேஸ் ஆயிருக்கிறது.
நேற்றயதினம் பிளேக்நோய் 10 பேருக்குககண்டு அதில் 6 பேர் சுவர்க்கப்பிராப்தியடைந்தார்கள். இதுவரை கோயமுத்தூரில் 250 பேருக்கு பிளேக் வியர்திகண்டு அதில் 190 பேர் மரணமடைந்தார்கள் இது பரிதாபம்!.

The Coimbatore Friends' Association (Limited.) Printers.

கோயமுத்தூர் பிரண்ட்ஸ் அசோஸியேஷன் (லிமிடெட்.) அச்சுயந்திரசாலை.

இக்கம்பெனியின் மூலதனம் ரூ. (20,000) பங்கு 1 க்கு 5-ரூபாய் வீதம் (4000) பங்குகளாகப்பிரித்து, இந்தியன் கம்பெனீஸ் 1882 வருஷத்திய 6-வது ஆக்டுப்படி 1908 வருஷம் மே மாதத்தில் ரிஜிஸ்தர் செய்து நடத்தப்பட்டு வருகிறது.

இக்கம்பெனியில் இங்கிலிஷ் தமிழ் இரண்டு பாஷைகளில், நேர்த்தியாய் பல கலர்களில் அச்சிடுவதும் கில்ட்செய்வதும்பாங்குகளுக்கும்மண்டிகளுக்கும் கணக்குப்புத்தகங்கள் முதலானதும் தயார்செய்து தோல்காலிகோமுதலிய பயிண்டும் செய்யப்படும். இப்போது அனேக பங்குகள் சேர்ந்திருக்கிறது, கொஞ்சம் பங்குகள்தான் பாக்கியிருக்கிறது, இஷ்டமுள்ளவர்கள் ஷை கம்பெனியின் மானேஜருக்கு எழுதி அப்ளிகேஷன் பாரங்கள் தருவித்துக்கொள்ளலாம் ரூல்ஸ் புக்குவேண்டுவோர் 4 அணா அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

இக்கம்பெனியானது நிர்வாகசபையார் அவர்களால் நடத்தப்பட்டுவருகிறது. 1908 வருஷம் மே மாசம்முதல் 1908 வருஷம் டிசம்பர் மாசம் 31-தேதிவரை கூடிய 8 மாதத்திற்கு மாதம் 1க்கு 100க்கு ரூ. 3-9-5வீதம் லாபம்தேறியிருக்கிறது.

இதன் பிராஞ்சு ஆபீஸ் ஒன்று திருப்பூரில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது.

ஜி. அனுமந்தராவ்,

மானேஜர்.

விளம்பரம்.

இதனால் சகலமான கனவான்களுக்கும் தெரியப்படுத்துவது யாதெனில்,

கோயமுத்தூர் இரங்கேகவுண்டன் வீதி (சின்னக்கடை வீதி) மேல்புரம் சிரேணியில் 487, 488 நெ. கதவிலக்கமிட்ட மெத்தைக்கட்டடத்தில் புதியதாக ஓர் கரூர் ஜவுளிக்கடையில் சேலம், ஜலகண்டாபுரம், தஞ்சாவூர், கும்பகோணம், ராசிபுரம், பவானி, நாரசிங்கன்பேட்டை தாராபுரம், குற்றாலம், கொறநாடு, அய்யம்பேட்டை. காஞ்சீபுரம், ஆரணி, மதுரை. உப்பாடை, காக்கிநாடா, நெல்லூர், சென்னை. பனாரஸ், உள்ளூர் முதலிய இடங்களில் தயாராகும் முதல்தரமான ஜவுளிதினுசுகளை சுவல்ப லாபத்திற்கு கரூர் விலைக்கு விற்கப்படும்.

ஷை கடையில் விற்கும்படியான சரக்குகள் நயமாயும் கெட்டி சாயமுள்ளதாயுமிருக்கும். கோறும் சரக்குகளில் வித்தியாசமும் மாறுபாடுமில்லாமல் விற்கப்படும். எங்கள் கடையிலிருக்கும் சரக்குகளை எங்கள் ஏஜண்டுகள் ஷை இடங்களுக்குச்சென்று எங்கள் கடைக்கென்றே தயார் செய்யப்பட்டிருப்பதால் நெசவு அழுத்தமாகவும் சரக்குகள் திடமாகவும் விலை சரசமாகவுமிருக்கின்றன. எல்லாருடைய அனுகூலத்தின் பொருட்டே யாவர்க்கும் ஒரே விலையாக சுவல்ப லாபத்திற்கு விற்கவேண்டுமென்பதே எங்கள் முக்கிய கருத்து. இன்னும் வேண்டிய விஷயங்களுக்கு எங்கள் கடையின் ஏஜண்டுகளாகிய மகா-ா-ா-ஸ்ரீ K. தேவதத்தய்யர், B. வரதராஜுலு செட்டியார் இவர்களிடத்தில் நேரில் கேட்டுத்தெரிந்துகொள்ளலாம், நல்ல முதல்தரமான கஸ்தூரியும் விற்கப்படும்.

V. R. K. & Co.,

Cloth Merchants & Commission agents

Coimbatore and Vellakkener.

இவ்வச்சாபீசில் விற்பனைப்புத்தகங்கள்.

				ரூ.	அ.	பை.
தேடச்சிறந்த தெரிசனம் (கிரேர்ட்டயமகவந்தாதி.)	(By Editor)	...	...	0	1	6
நன்னூல்யாப்பதிகாரம்	Do	...	...	0	3	6
சிவமகாபுராணம். (வேலாயுதபண்டிதரால்)		...	...	3	0	0
சிவில் ப்ரோசிஜர் கோட். (புதிது)		...	...	0	12	0

விஞ்ஞாபனம்.

எமது அருமை நேயரே! இச்சஞ்சிகை தொடங்கிய உத்தேசமெல்லாம், தங்களைப்போல்பவர், எமது நுண்மையறிவிற்கெட்டியதிரட்டி வரைந்துள்வற்றை இனிதிற்கொண்டு, ரிஷிப்ரோக்தமாங் கதை பல்வும் வரைந்த விடத்து நேர்ந்த பிழையை மன்னித்து, தெய்வீகமான ஷை கதைகளை அதிசயோக்தியின்றி தர்மார்த்தகாம மோக்ஷமெனும் புருஷார்த்தங்களை எல்லாவருமடையும் பொருட்டு, வனப்பெட்டினின் வாய்ந்ததமிழ்க்கவியால் எழுதத்துணிந்த எமதுபிரயத்நம் சபலமாக, இந்தச்சஞ்சிகையைத்தருவிக்கவும், தங்களுடைய சிநேகிதர் பலர்க்குந்தெரிவித்து அவரைப்பெறுமாறு செய்யவும், விநயபூர்வமாய்ப்பிரார்த்திக்கின்றனம்.

G. HANUMANTHA RAO & Co.,

COIMBATORE.

The Coimbatore Friends' Association (Limited) Printers.

THE WORLD.

REGISTERED. M. 823.

பிரபஞ்சம்.

பிரபஞ்ச தர்மம், நடவடிக்கை, சட்டம், வித்தியா விநோத முதலிய வற்றைப்பற்றிய ஓர் மாதாந்திரத் தமிழ்ச்சஞ்சிகை.

ஜி. ஹநுமந்தராவ், பத்திராதிபர்.

கோயமுத்தூர் பத்மநாப ஐயர், (Editor & Publisher.) பிரசுரகர்த்தா.

வருஷ சந்தா ரூ. 2 4
6 மாதத்திற்கு ... 1 2
பிரதிசஞ்சிகை ... 0 3
வெளிநாட்டுத் தபாற் கூலி பிரத்தியேகம்.

கலி 5011.
சௌமிய வருஷம் ஆடி மாசம்.
JULY 1909.

புஸ்தகம் 1.
சஞ்சிகை 2.

	விஷய சூசிகா.	பக்கம்.	INDEX.	PAGE.

1.	இலக்கணநூல்	34	1. Tamil Grammar ...	34
2.	ஸ்ரீமத்வால்மீகி ராமாயணம் ...	36	2. Ramayana(Poetical translation)	36
3.	கீசகவதம் (நாடகம்) ...	38	3. End of Kichakas (A Drama)	38
4.	லௌகிக தந்திரதர்மம் ...	42	4 Political Economy ...	42
5.	சுவப்நாவஸ்தை	45	5. A Dream	45
6.	லோகோபகாரிகள் (விநோதகதை)	47	6. The Philanthrophists (A Novel)	47
7.	பருத்தி வேளாண்மை ...	51	7. Cotton Industry ...	51
8.	க்ளைவ் பிரபுவின் சரித்திரம் ...	53	8. Essays(Macaulay's)onLordClive	53
9.	சட்ட நிருபண விருத்தாந்தம்	57	9. Legal notes on Law Reports	57
10.	வர்த்தமானம், விளம்பரம் ...	62	10 News & Advertisements	62

G. HANUMANTHA RAO & Co.,
28, Karuppa Goundan's Street,
COIMBATORE.
15—7—09.

THE WORLD.

பிரபஞ்சம்.

பிரபஞ்ச தர்மம், நடவடிக்கை, சட்டம், வித்தியா விநோத முதலிய
வற்றைப்பற்றிய ஓர் மாதாந்திரத் தமிழ்ச்சஞ்சிகை.

ஜி. ஹனுமந்தராவ்,
பத்திராதிபர்.

கோயமுத்தூர் பத்மநாப ஐயர்,
(*Editor & Publisher.*) பிரசுரகர்த்தா.

வருஷ சந்தா ரூ. 2 4
6 மாதத்திற்கு ... 1 2
பிரதிசஞ்சிகை ... 0 3
வெளிநாட்டுத் தபாற் கூலி பிரத்தியேகம்.

கலி 5011.
[illegible]மிய வருஷம் ஆடி மாசம்.
JULY 1909.

புஸ்தகம் 1.
சஞ்சிகை 2.

எமது அருமை நேயரே! எமது முதற் சஞ்சிகையை நீவிர் அங்கீகரித்ததுபற்றி, எமது ஊக்கமானது பலப்பட்டு, இச்சஞ்சிகையில் சிறிது விஷயங்களை விடாது சுருக்கி அமையுமாறு எழுதவும், சட்ட நிரூபணங்களை இன்னும் அற்பம் விவரிக்கவும், வர்த்தமானங்களை அதிகரிக்கவும், வேண்டுமென அபிப்பிராயப்படுகிறோம். ஆனால், பிரபஞ்சத்தில் நானா விஷயங்கள் இருக்கின்றன. அவற்றையெலாம் எவ்வளவு சங்கிரகித்து எழுதினும், இச்சஞ்சிகையில் இடம் போதாது. ஆகிலும், தொழில், நன்னடக்கை முதலிய சிலவிஷயங்களைச் சேர்க்கவேண்டுமென்பது சிலருடைய கருத்தாகலின், ஏற்கெனவே முதற் சஞ்சிகையில்விவரித்த விஷயங்களிலேயே அடங்குமாயினும், உதகரித்துக்கூறும் பொருட்டு, சில விஷயங்களை இதில் கூறுவம். முக்கியமாக வித்தியா விஷயமான இலக்கணம், நாடகம், காவியம் இவற்றை ஒரே தொகுதியாக ஒட்டி எழுத வேண்டி நேரிடுவதால், இச்சஞ்கையில் விஷய சூசிகா முறை வேறுபடுத்தப்பட்டது. இவ்வித்தியா விஷயமானவற்றை, நம் மதுரைத்தமிழ்ச் சங்கத்தார் தயவுசெய்து நோக்கி, அவரது சஞ்சிகையில், அநுவாத ஆட்சேபங்களை விவரித்து, எமக்கு ஓர் பிரதிமாறுகக் கொடுக்கின், முரண்பட்டுள்ள நூற்களைத்திரட்டி விவகரித்து விளங்கி, யாம்கொண்ட கருத்து, இக்காலத்து ஷை சங்கத்தலைவர்களின் கருணையால் இனிது முடியும். தமிழிற்கே ஒரு நூதனக்கிளர்ச்சியும் ஆகும். இத்துடன் வித்வான்கள் பலரும், அவரவரது அபிப்பிராயங்களை எழுதியனுப்புவதும், வேண்டற்பாலது. இஃதன்றியும், தமிழ்ப்பாடசாலைகளில் உபாத்தியாயர்கள், எமது வித்தியா விஷயமான இலக்கண நூற் குறிப்புகளை தயவு செய்து கவனிக்கின், மாணாக்கர்கள் பெரும்பாலும் மேற்

படி நூலின் உரை மாறுபாடுகளான் மயங்கார். ஆகையினால் போர்ட் பாடசாலைத் தலைமை இலாகா இன்ஸ்பெக்டர் அவர்கள், எமது சஞ்சிகையை மேற்படி பாடசாலைகளில் பொது விஷய வித்தியா புத்தகமாக ஏற்றுக்கொளல் வேண்டுமென்பதும் எமது அபிப்பிராயமே.

பத்திராதிபர். பிரசுரகர்த்தா.

I. இலக்கண நூல்.

(முதற் சஞ்சிகையின் 3-வது பக்கத்தொடர்ச்சி)

6. மேலை விஷயம்பற்றிய சூத்திரம் ஆசிரியர் தொல்காப்பியர் "நூன் மரபில்" உரைத்தது அடியில் வரைவாம்:—

எழுத்ததிகாரம் — நூன்மரபு.

எழுத்தெனப் படுப, வகரமுத னகர விறுவாய்
முப்பஃதென்ப
சார்ந்து வரன்மரபின் மூன்றலங் கடையே.

7. இச்சூத்திரத்திற்கு விருத்தியுரை என்று எழுதின இலக்கணக்கொத்தார் "நூன்மரபு" என்றது "நூலினது மரபு பற்றிய பெயர் கூறுதல்" எனக்கொண்டு நச்சினார்க்கினிய ரெழுதினபடி "எழுத்திலக்கணத்தினைத் தொகுத்துச்சுட்டல்" அல்லவென்றும், "இம்மரபிற்கூறிய இலக்கண விதிகள் மூன்றதிகாரத்துக்கும் பொதுவாகாதென்றும்" மறுத்து, மேற்படிஉரையினைப்போலியுரையென ஆட்சேபித்திருக்கிறார். "நூல்" என்றது நூல்போன்று இலக்கணத்தை ஒருசெறிப்படக்கிளக்குந் தன்மையால் ஒப்பினாயதோர் ஆகுபெயரென்றார், நச்சினார்க்கினியர். "மரபு" என்றது "இலக்கணம்," "முறைமை," "தன்மை" இவையோடமைந்த ஒரு பொருட்கிளவி என்றார். இதன்றி "நூல்" என்பது "தொல்காப்பிய மாயபிண்டத்தை" என வியக்தமாயும் எழுதியிருக்கிறார்.

7. இவ்வபிப்பிராய பேதம் என்னவென்று யோசிக்கின் இலக்கணக்கொத்தார் "எழுத்தென்பது ஒரு பொருள், அதற்கு அ, ஆ முதலியன பெயரென்றல் பொருந்தாது," எனக்கொண்டவர், "மரபு பற்றிய பெயர் கூறுதல்" என்று சொன்னது மாறுகொளக்கூறலாம். எழுத்து என்பது பல்வகையொலிப் பொருட்கிளவியாகலின், "எழுத்து" என்புழி, பிரதிவகையொலிப் பொருளும் மனதிலியல்பாகவே வியாபகமாகாதொழியா. ஓர் ஆசான் மாணாக்கனை நோக்கி "அ" எழுது என்றால், "அ" என்ற சப்தத்தின் அறிகுறியை எழுது, என்று கற்பித்தலாம். நாமரூப நிதானத்தின், "அ" என்ற சப்தம் "நாமமும்" "அ" என்ற "வடிவு" ரூபமும் ஆக, நச்சினார்க்கினியருரை போலி ஆகாது. இலக்கணக்கொத்தார் ஆட்சேபமென்னவென்றால் "சொற்களும் பொருளையுணர்த்தாது தம்மையுணர்த்தும்வழி, அவற்றிற்கவை பெயராதல் கூறாமை, குன்றக்கூறலாமென்றார்." இவர் ஆட்சேபம் எத்தன்மைத்தென்னில், இலக்கணத்தை இலக்கியமென மாறுகொளக்கொண்டதாம். அவர் சொன்ன முன் வாசகத்தையே செவ்வையாய்ப்படித்துப்பார்த்தால் புலப்படும். "சொற்கள் பொருளுணர்த்தாது" என்றது, சொல், இலக்கணம் வாய்ந்தே பொருளுணர்த்து மலது மற்றின்று. சொல்லின்கண் இலக்கணம் அமையாக்கிடக்கும். எடுத்துக்கொண்ட விஷயம் இலக்கணமாகையால் எழுத்திலக்கணம் சொல்லிலக்கணம் கூறுங்கால், பொருளிலக்கணம் அவசியமன்று. "அ"

என்றது "அ" என்னும் வடிவின் "சபதப்பெயராம். அல்லெனின் "அ" என்பதற்கு "அந்த" என்பது பொருள். ஒருவனை "அந்த" என்று எழுது என்றால், "அ" எனும் வடிவையே வரைவான் என்பது திண்ணமில்லை. "அ" என்று எழுது என்றாலோ, "அ" எனும் வடிவே வரைவன், ஏனைய வரையான்.

8. ஆகையால் "மரபுபற்றிய பெயர் கூறல்" என்றது வழூஉ. ஏனெனின், "நூன்மரபு" என்றது "நூலினது மரபு பற்றிய பெயர் கூறலாயின்," அடுத்து "மொழிமரபு" எனுமிடத்து, "மொழியினது மரபுபற்றிய பெயர்கூறல்" என்றது, பொருந்தாது. மொழியின் மரபாய இலக்கணங்கூறினாரலது, பெயரிலக்கணங்கூறினாரில்லை. இவ்வியாக்கியானம், மொழிப்பெயர் என்றால் பொருந்தும். ஆகவே "மொழியிலக்கணம் என்பதும்" "மொழிப்பெயர்" என்பதும் ஒருபொருட்டொடர் மொழியாயின. அவ்வாறே "அ" என்புழி "அ" என்பதே பெயராக, அது பொருந்தாதென்றவர் முரண்படக் கூறலாகையின், நச்சினார்க்கினியருரை போலி ஆகாது. ஆகையால் "மரபு" என்பது "இலக்கணம்" என்றே பொருள். "தன்மை" பற்றி "முறையும்," "முறை" பற்றி "இலக்கணமும்," "இலக்கணம்" பற்றி "நூலும்" ஆம். அதாவது "எழுத்திலக்கணம்" பற்றி "சொல்லிலக்கணமும்," "சொல்லிலக்கணம்" பற்றிப் பொருளிலக்கணமும், "பொருளிலக்கணம் பற்றி நூலும்" ஆம் என்பதே. "நூன்மரபு" என்றது நூல்போன்று கிளக்கும் தன்மை"யே ஆகும். ஆகையால் தொகுத்துச்சுட்டலும் ஆகும்; மூன்றதிகாரத்துக்குப்பொதுப்படக்கூறலும் ஆகும்.

9. ஆனால் "நூன்மரபு" எழுத்ததிகாரத்தின்பாற் படுத்தலின், தொல்காப்பிய மாயபிண்டத்தை "நூல்" என்றது எவ்வாறுணர்த்தும் என்னின், தொல்காப்பிய மாயபிண்ட நூற்கு இன்றியமையா மரபாம் எழுத்தின் தன்மை இலக்கணங்கூறினாரென்க. இஃதும் பொருள்வலிந்து கோடல் ஆம்.

10. ஆகவே, "நூல்" என்பதுகுறிப்புவம ஆகுபெயர் எனக்கொள்வதிலும், இயல்பாக "நுவல்தல்" ஆய தொழிற் பண்புப்பெயரின் குறிப்பாக, "நுவல்" என்னும் "சொல்" பொருடறுகிளவியளவாகின்றுழி, ஆதிநீண்டு இடைகெட்டு, "நூல்" என ஆகமம், ஆரிடம், பிடகம், தந்திரம், பனுவல், சமயம், சூத்திரம் ஆய சாஸ்திர முறைத்தொகைப் பொருண்மை யுணர்த்தற்காய கிளவியாயிற்றெனக்கொள்க. இஃது காரிய ஆகுபெயர். ஆகலின் "நூன்மரபு" என்றது நூற்கருவி காரணமாய "நுவல்" ஆராயவேண்டுழி இன்றியமையாச்"சப்த" விலக்கணம் க்கூறுவான்றொடங்கிச் "சப்தமாத்திரா" விலக்கணங் கூறலுற்றாரென்க. தவிர, கருவிக்கண் காரணம் அமையாக்கிடந்தமை பற்றியே "நூன்மரபு" எனப்பெயர்த்தார் என்க. ஈண்டு "எழுத்ததிகாரம்" என்பதை வருவித்து "நூன்மரபெழுத்து அதிகாரம்" எனத்தொடர்த்து நோக்குழி, நூலினது மரபு காரணமாம் எழுத்தின் அதிகாரமென, ச்சீர்கொள அமையுமாறுணர்தற்பாற்று.

(இன்னும் வரும்.)

(பிரசுரகர்த்தா.)

II. ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம்.

பாலகாண்டம்.
ஆறும் சருக்கம்.

மாநக ரதனின் மறைமதி நெறிலும்
மானு மறிவு மாட்சியு மன்தழூஉம் 1.
அதிரத யக்ஞமு மறமும் வசியமும்
முனிவர் சாம்யமு மூவுல கறிவுறூஉம் 2.
பலமு மித்திரப் பான்மையு நிலையுந்
தனமு மீட்டமுந் தருமரி தனதனும் 3.
மனுபுக ழானு மண்ணளி மகிமை
மன்னிய தசரதன் மகிதல மளிக்க, 4
மெய்யின் முப்பொருண் மேவமராவதி
யிந்திர னென்ன வெழிலி னுளவுந், 5.
தருமர் கேள்வியர் தம்மன நகராம்;
சரத மீகையுஞ் சமமன சனமாம்; 6.
நிறைபரி நெற்றன நேராக் காதகம்
இல்வழி, யில்வழி யெவ்வழி யெதிராம்; 7.
காமக் குரோத லோப காளையுஞ்
சூழ வாகாச் சூன்யமு மடமும். 8.
மகளிர் மகாரெலா மானுநற் சீலமும்,
மாசில் விருத்தியு மாதவ சுத்தமும், 9.
மகுட குண்டல மாலைகன் னுகர்வும்,
மூழ்கி மிலைந் துமெய்க் கந்தமு மேதமும், 10.
நிறையூண் கொடையு நிகளணி பாளமும்,
நற்கை யணியு நல்வழி போதமும், 11.
அங்கி யாகமு மளிம்பி லாமையும்,
உத்தம குலமு மத்தவ ரிலராம். 12.
பூசுரர் கருமம் புலன்வழி வெல்லும்;
ஓத லௌதாரிய மொண்மனச் சீலராம். 13.
அசாஸ்த்ர நாஸ்திக வசத்திய ரிலராம்;
அசூய வசக்த வவித்தைய ரிலராம். 14.
சடங்க விரதஞ் சகஸ்ர மிலாரிலர்;
தீனமு நோயுந் தேட்டமு மிலராம். 15.
திருவுரு விலரில் விருபா லாரிலும்;
அரசநற் பத்தியி லாதாவ ரிலராம் 16.
பெருநால் வருணம் பேணுந்தே வதியும்;
பெருமையு முரிமையும் பெருமித மேதகும். 17.
சத்திய தருமஞ் சகல்ரும் வாழவாம்;
மனைமக்கள் வாழ்வந் நகரத்தி லுளதாம். 18.
விறன்மை வேதியம் வைசியம் விறன்மையும்,
சூத்ர மவரவர் தொழின்மே லுபசாம், 19.
ஆக விட்சுவா குலத்து வள்ளலும்
மானு டேந்திர மனுவி னுண்டனன். 20.
மறவ ரனன்மான மணமா ணெழிலினும்
மிகையுங் கலையினுங் குகையி னரியெனும். 21.
காம்போச பாகுலிக கற்கிவகை யுத்தமம்
வநாயுபுன னுடுவகை வலாரிபதி னுத்தமம் 22.
விந்த மிமக்கன்மா தங்கம் பூரணம்;
மந்த மதிக்கொன்மா தங்கம் பொங்கராம் 23.
வனச மைராவதம் வாம னுஞ்சனங்
குலத்த வாரணம் நலத்த பூரணம். 24.
பத்திர மந்திர மிருகப் பான்மையும்,
அத்திற மிணைந்தினி தொத்ததும் பூரணம். 25.
மத்த மிடைவிடா வத்தி யசலமாம்,
சுத்திரு யோசனஞ் சூழவ யோத்தியாம். 26.
மன்னன் பாலன மின்ன மகிமையாம்;
அன்ன பெருமையா மன்னன் தசரதன். 27.
மதிமுன் மீனென மன்னு ரடங்கவும்,
அரணி னயோத்தியா மதினலம் வியப்பிலாம். 28.

அப்புரி யதனி லாயிர முத்தமர்,
மகிபதி மகிமையின் மகபதி மானும். 29.

(ஏழாம் சருக்கம் பின்னால் வரும்.)

வால்மீகரானவர், இந்தச்சருக்கத்தில், ராஜரீகமும் குடிநலவளமும் கூறுகிறார். இவர், ஸ்ரீராமர் காலத்தில் இருந்தவரென்பது, உத்தரகாண்டத்தாலறியலாம். ஆகையால் இவர், அக்காலத்தில் அயோத்தியாபுரியில் இருந்தசனங்களது நன்னடக்கை ஆசாரம் கல்வியறிவு முதலியவற்றைக் கூறியிருப்பது, உண்மையாகவே இருக்கவேண்டும். ஸ்ரீராமர் அவதரித்த நகரமும், அவரைப்பெறும்படியான தந்தையினது குணமும், அவருடைய தரிசனத்துக்குப் பாத்திரர்களான சனங்களுடைய புண்ணிய விசேஷமும், சாமானியமாயிராது. கேவலம் யுத்த வீரர்கள் கூட, அவர்களுடைய பராக்கிரமத்தில் நெருப்புக்குச் சமானமானவர்களென்றும், சௌரிய நிலையில் சிம்மத்திற்குச் சமானமானவர்களென்றும், மனதில் நிஷ்களங்கமானவர்களென்றும், தேஜசில் சிறந்தவரென்றும், கல்வியின் மிக்காரெனீறுங் கூறியிருக்கிறார். இந்த வீரர்களின் பராக்கிரமமானது சாத்விக குணத்தினால் அலங்கரிக்கப்பட்டிருந்ததற்கு உபமானமாக குகையிலிருக்கும் சிம்மத்தைக்கூறியிருக்கிறார். ஆனால் இக்காலத்திய வீரரையோ சொல்லத்தேவையில்லை; எல்லாவரும் அறிந்தவிஷயம். நான்குவகுப்பாரும், பரஸ்பரம் அந்நியோந்நியமாக இருந்தார்களென்றும், சொல்லியிருக்கிறார். தசரதமகாராஜனுடைய உத்தம குணங்களில், உத்தம பரிபாலனமானது குடிகளுக்கெல்லாம் வாற்சல்யத்தை விளைவித்திருந்தது என்றும், குடிகளில் ராஜபக்தியில்லாதவர்களே கிடையாது என்றும், சொல்லியிருக்கிறார். இதனால், முற்காலத்திலும் அராஜகம் ராஜத்துரோகம் இவை, சிற்சில இடங்களில் சிலகாலங்களில்ஏற்பட்டிருந்ததோவென்று, சந்தேகிக்க இடமாகிறது. தசரதமகாராஜனும் குடிகளும் பரஸ்பர ஐக்கிய பாவமுடைத்தாயிருந்தனரென, அந்நிய ராஜாக்கள் அடங்கியிருந்தார்களென்றும், சத்திய தர்மானுஷ்டமானது எல்லோரையும் வாழ்வித்து தன கனக வஸ்து வாகனாதிகளில் சம்பன்னராக்கியிருந்ததென்றும், சொல்லியிருக்கிறார். இது எல்லாவரும் திருஷ்டாந்தமாக அறிந்துகொள்ளத்தக்க விஷயம். தவிர அக்காலத்தில், உத்தம ஜாதிக்குதிரைகள் காம்போஜம், பாஹ்லிகம், வநாயு, சிந்து இந்நாடுகளில் அகப்பட்டனவென்பதை யோசிக்கையில், இக்காலத்தைப்போலவே சிற்சில நாட்டார், நல்ல ஜாதிக்குதிரைகளை வளர்ப்பதில் பிரீதியுடையவர்களாயிருந்தாரென, அறியலாகும். இதல்லாமல், யானைகளைப் பர்வதங்களிலிருந்து பிடித்து வந்தனர் எனவே, யானைகளைப்பிடிக்குமுபாயம் முற்காலந்தொட்டே நடைபெற்று வருகிறதென்றும், அறியலாம். இக்கவிதா வர்ணவர் யானைகளில் பத்திரம், மந்திரம், மிருகம் என மூன்று வகுப்புகளுண்டென்றும், இவற்றில் ஒன்று மற்றொன்றும் இணைகூடின கலப்புஜாதிகளும் உண்டென்றும், கூறியிருப்பது இவருடைய வியாபகக் கல்வித்திறமையை (observation)வியப்பிக்கிறது.

(இன்னும் வரும்.)

பிரசுரகர்த்தா.

கீசகவதம்.

முதலங்கம். ※ இரண்டாங்களம்.

விராடபுரம். ராஜவீதி.

மாணாக்கர், தீட்சிதர், உபாத்தியார், பிரவேசிக்க.

தீட்சதர் - ஏன் காணும் முபாத்தியாயரே! சிஷ்யப்பிரபிருதிகளுக்கு எதுவரையில் சாத்தியப்படுத்தினீர்?

உபாயத்தியார் - எல்லே! எல்லே! குழந்தைகள்! இப்பொழுது தான் ஆரம்பித்திருக்கிறார்கள்.

தீட்சிதர் - குழந்தைகாள்! எங்கே? சபாவந்தனம் சொல்லும் பார்ப்போம்?

மாணாக்கர் - "ஓம் நமஸ் ஸதஸே, நமஸ் ஸதசத்பதயே, நமஸ்ஸகீநாம், புரோகாணாஞ் சட்சஷே, நமோதிவி, நமப் பிரதிவியை."

தீட்சிதர் - ஸ்பஷ்டமாயிருக்கிறது. உபாத்தியாயரே! எக்ஞோபவீத மெத்தனை ஜோடியாயிருக்கிறது?

உபாத்தியாயர் - ஐம்பதுதான் ஆயிருக்கிறது. கொஞ்சம் நூற்பேன். அதற்குள்ளாக அசலகத்து அப்பு வருவான். சற்று சீட்டுக்காலட்சேபம் செய்வதற்குள்ளாக சந்தியாவந்தன காலமாகி விடுகிறது.

தீட்சிதர் - கட்டு புதிதா? பழையதா?

உபாத்தியாயர் - அவ்வளவு மோசமில்லை. இஸ்பேட் ஆசும், கிளாவர் க்வீனும், ஆட்டீன் ஜாக்கியும், டைமன் பத்துமில்லை. அதற்குப்பதலெழுதியிருக்கிறது. பாக்கி சிலவற்றிற்கடையாளம். ஆனாலு மோசமில்லை. பாக்கி எல்லாஞ்சரியாயிருக்கிறது.

தீட்சிதர் - ஏதோ? கொண்டுவாரும். வெய்யில் வேளை! சற்றே யாடலாம்.

உபாத்தியாயர் - அடே! பையன்களா! எதிர் வீட்டுத்திண்ணைக்குப் போங்கள். (ஏக, சீட்டுக்கொணர.)

உபாத்தியாயினி மறைவில் - என்றைக்கு மிதுவேயாக என்னை சொல்வது! பேசப்போனால் பல்லைப்பறிப்பர்! எப்படியோ போகட்டும்!

சுப்பையர் வர

தீட்சிதர் - ஐயர்வாள்! இன்றைக்கு கச்சேரி இல்லையோ?

சுப்பையர் - ஒரு அசல் நம்பர், அடுத்த மாசம் ஐந்தாம்தேதிக்கு வாய்தாப்போட்டுவிட்டார்.

உபாத்தியாயர் - அப்புவைப் பார்த்தீரோ?

சுப்பையர் - காப்பி குடிக்கிறார். வருவார். சீட்டைப்போடும்.

உபாத்தியாயர் - (கலந்துபோட) தீட்சிதர் (வெட்ட) (அப்பு ஐயர் வர, எல்லாரும் ஆடுக.)

அப்புவையர் - இருபத்தொன்று.

சுப்பையர் - நாலு.

தீட்சிதர் - இல்லை.

உபாத்தியாயர் - துருப்பு?

சுப்பையர் - இஸ்பேட்.

அப்புவையர் - இல்லையென்று சொன்னால் போதாதோ துருப்பு என்று சொன்னால் மறியல் செய்வேன்.

சுப்பையர் - இப்பொழுது சொல்வது ஒப்பாது. துருப்பு, என்றவுடனே சொல்லவேண்டும்.

அப்புவையர் - சரி! சரி! இனிமேல் ஆகட்டும்.

தீட்சிதர் - இறக்கமென்ன?

சுப்பையர் - ஆட்டீன்.

தீட்சிதர் - ஜாக்கி!

உபாத்தியாயர் - பயமில்லை! (வெட்ட) எடுத்துவையும்!

துருப்பு (இறங்க)

சுப்பையர் - (ஜாக்கிப்பிடி) ஐந்து போயிற்று. துருப்பு (இறக்கம்)

தீட்சிதர் - (ஒன்பது பிடி) (கிளாவர் இறக்கம்)

உபாத்தியாயர் - (ஜாக்கிப் பிடி) (டைமன் இறக்கம்)

சுப்பையர் - (வெட்டிப்பிடி) (இரண்டு ஆட்டீன் பிடி)

உபாத்தியாயர் - (கிளாவர் கழிக்க)

சுப்பையர் - (கிளாவர் இறங்க)

தீட்சிதர் - (டைமன் ஜாக்கி கழிக்க)

அப்புவையர் - (ஆஸ்பிடி) (எண்ணிப்பார்க்க.) 6. சுப்பையரே! கறுப்பு!

சுப்பையர் - உபாத்தியாயரே! கிளாவர் ஜாக்கி பிடித்தபோதே ஒன்பது இறங்கவேண்டாமா?

உபாத்தியாயர் - உமக்கென்ன? எட்டாந்துருப்புப்போகாமல் பெரிது இறங்கலாமா?

சுப்பையர் - உமக்கென்ன புத்தி இல்லையா? துருப்பு நானல்லவா சொன்னேன்?

(ஓர் சந்நியாசி வர)

சந்நியாசி - என்னையா தர்க்கம்?

சுப்பையர் - வாரும்! வாரும்! நான் ஆட்டம் சொல்லியிருக்க வாத்தியார் பெரிது கழிக்கலாமா?

உபாத்தியாயர் - இரண்டடியின்றி யிருபத்து நாலா?

சந்நியாசி - உமக்கென்ன? நீர் பெரிதாடவேண்டியது தான்.

உபாத்தியாயர் - சரி! சரி! நானும் துருப்பில்லாமல் இருபத்துநாலு சொல்வேன்.

சுப்பையர் - சீச்சீ! சீட்டாட்டம் போதும். (சீட்டை எறிந்துவிட) தபோதனரே! வாரும்! போவோம். (சந்நியாசி, சுப்பையர், ஏக)

உபாத்தியாயர் - நல்ல சாக்ஷி! நல்ல மத்தியஸ்தம்.

அப்புவையர் - நமக்கென்ன? நாம் ஏன் அப்படிச்சொல்லவேணும்?

உபாத்தியாயர் - அவர் சீட்டை எறியலாமா?

தீட்சிதர் - உத்தியோகஸ்தாள் அப்படித்தான். விளையாட்டில் கோபமென்ன?

(தெருவில் வழிப்போவார் வர)

சரி! சரி! இனிமேற் குறையேயில்லை. வைதீகாளும், லௌகீகாளும், மகாராஜாவும், சந்நியாசியும் சூதாட்டமானால் குடிகள்காரியம் கடைத்தேறிப்போயிற்று! சுப்பையர் சந்நியாசியை இட்டுக்கொண்டுபோனார். நாளை ராஜசபையில் சந்நியாசியைக் காணலாம்!

மற்றவன் - சீட்டுப்பழக்கம் நல்லதுதான். இஸ்பேட் ராஜாவுக்கு ஒருவன் மத்தியஸ்தமானால் ஓர்வேளை யுபகாரமாம்.

மற்றவன் - ஜாக்கிதான் மத்தியஸ்தம்.

(அனைவரும் ஏக)

அரண்மனை.

(விராடராஜனும் மந்திரியும் பிரவேசிக்க.)

விரா - மந்திரி ! திரிகர்த்த தேசாதிபதி
விந்தை யாக வெம்போர் புரிந்து,
விராட நன்னகர் விடாது கொள்வன் ;
வேண்டும் படைகள் விரைவிற் சேர்த்து,ப்
போர்த்தொழில் பயிற்றிப், புரசை மாநகர்
அணியணி நிறுவ, வாஞ்ஞா பிக்க.

மந்திரி- திரிகர்த்த, னின்னுங் கிராத ரோடு,
மங்க வங்க கலிங்க கிடத
மாளவ யவன முதலா மரசொடும்,
யுத்த சன்னத்த னாகி, யிந்நகர்
இன்னற் படுத்த வெய்துவ, னதனால், [த்
படைக்குத் தக்க பிரதானி யொருவனை
தெரிந்து கொள்வது, திறமே கொல்லாம்.

விரா - என்செய் கோயான்! என்செய் கோயான்!
எம்பியர் பதின்ம ரிளைத்தோ ; ரேனைப்
புதல்வ ரெல்லாம் போரினுக் கிளையர் ;
சுவேதச் சிறுவன் சூழ்கான் சென்று
மாதவ மியற்று, மாதிரை யாற்கே.

(சேவகன் பிரவேசிக்க)

சேவ - திருவுள மிரங்கேன்! தொழுகுலத்தவர்
தந்த சீட்டிது. திருவுள மருள்க.
(சீட்டுக்கொடுக்க)

விரா - மந்திரி ! யதனை வாங்கி யவிழ்த்து,
வரைந்த வனைத்து முறையே வறைதி.
எவரே விடுத்தா ரிச்சீட் டினையே ?

மந்திரி- நம்முடனவையிலாடு மையர்,
வந்தன மளித்து விடுத்த வோலையால்,
நற்றவ நல்லார் நமது திருவுளக்
கனிவெதிர் பார்த்துக் கடிமதில் வந்ததை
யுய்த்துணர் பொருட்டு மெய்க்க,
வல்லாட் டெல்லாம் வல்லவ ரென்றார்.

விரா - விபுதரை யிங்கே விரைவி லழைத்தி !
(சேவகன் ஏக)

(விப்பிரன் பிரவேசிக்க.)

வந்தனம், வந்தனம் ! வருக, வருக !
சுதின மின்னே சோபனங் கடக்க.
பீடங் கொள்க, புனித முதல்வ !

விப்பி - வாழ்க, வாழ்க ! விராடம் வாழ்க !

விரா - பூசுர நீவர பாக்கியம் செய்தேன் ;
சிலாக்கிய மடைந்தேன்; சிந்தனை வேறே
யிலதா யினு,மும தாசிரம மெவணோ?
திருவுள மென்னே ? தெரிகில னந்தோ !
குறிப்புணர்ந் தீகலே கொடைமற் றின்றனச்,
சிறப்புட னூல்கள் செப்புந் திறத்திற்
பிறழ்ந்தே, னுளமொன் றேதிடு மையே!

விப்பி - மன்னா! வென்ன சிரமமது சும்மாப்
பல்வேத் தவையிற் பயில ; வின்னே
யுன்வேத் தவையிற் சின்னாள் செலுத்த
வுன்னி வந்தே ; னேசனை வேறிலே !
சங்க பட்டனென் னாமங் ; கவறு
மாட லறிவே, னமைச்சு மாவேன்,
என்னோ வுன்ன ? மேதோ வறியேன்!

விரா - எத்தனை நாட்க ளிருக்க விதமோ,
வத்தனை நாளு மதிபதி யாகி,
யேலா துளவே விதமாக் கொண்டு,
துணிவுறு கருமந் தோன்றச் சொல்லிச்,
சோர்வுறு காலஞ் சோரா தோடச்,
சொக்கட் டானுஞ் சுகமா யாடி,
யடியோ முய்ய வருள்தி ரடிகளே !

மந்திரி- புரவல ! வென்சிறு புந்தியி லொன்று
நிகழா வருமது ; நம்மைத் துனராங்
கீசகர் தம்முட் கிளத்து சிங்க
பலனும் பட்டம் பெற்றுள கீசகற்
காதி பத்திய மளித்த னீகமேற்,
சிற்றா ருதவிச், சிறப்பி னோங்கச்
செய்திடி, னமது சேரலர் சோர்வரே.

விரா - உவகை யோடழைத் துதவுவ லின்னே!
பகைவர் பெரும்படை பற்றி யுடற்றப்,
பின்னே நின்று பேதுறு வண்ணம்,
முன்னே சென்று மோதுத றிண்ணம்.
ஆனா, லொன்னார் சின்னா பின்னப்
பட்டு வேறாப் பதறிப் போவர்.
இன்றே, வின்னு மேத முறுமே.

மந்திரி- நமது நன்னகர்ப் புறமுள, வெளியி
லொன்னா ரெல்லா மொருங்கட வானா,
ரென்னா, வொற்ற னெமக்கறி வித்தா;
னெல்லா விடமு மெயிற்பொறி யேற்றிக்,
களரி முன்னாக் கைக்கொள னலமே.

விரா - கீசக னேதிரி கர்த்த புரஞ்செல,
விளையோ ரிந்நக ரிருவழி காத்துக்,
திரிகர்த்தன் றுணையைத் தெருமரல் செய்ய,
ஏவுது ; மொல்லை யிரத மொன்றுற்
கொண்டுத், தரனைக் கொம்மைப் போதி
கேகய மோடிக் கீசகர் நூற்று
நால்வரை யழைத்து நல்க, விடுப்பாய்.
(ஏக)

புரவி வட்டம்.

உத்தரன் பிரவேசிக்க.

உத்த - உடனே கேகய மோடிச் சென்று,
கீசகன் றன்னைக் கூட்டிக் கொணரச்,
சொன்னா ரையன் ; சூதனைக் காணேன் !
இவளியுங் காணே ! னென்னோ செயலே!

சாரதி பிரவேசிக்க.

சாரதி - தண்டன் சுவாமி !

உத்தரன் - இத்தனை தாமதமேன் பிள்ளாய்?

சாரதி - பிழை பொறுத்தருள்க ! காற்றனைய வேகமுள்ள குதிரைகளைத், தாமக்கிரந்தி யெனுமொருவன் தெரிந்தெடுக்கக் கொண்டுவந்தேன். ஒரு நொடியிற் கேகய நாட்டிற்கிரதஞ் செலுத்துவேன். ஐயம் வேண்டாம் ! ஆண்டவனே !

உத்தரன் - உனக்கு மொராளா ? அவன் எங்கே ? பார்க்கலாம் ?

சூதனழைக்க தாமக்கிரந்தி பிரவேசிக்க.

உத்தரன் மன மகிழ்.
பிள்ளைப் பருவம் ! பேணுறு வடிவம் !
எள்ளா நடைதான் ! ஏந்தல் போலும் !
கையுங் கயிறுங் காமுறு நோக்கும் !
இல்லை யில்லை யிவனுக் கீடு !
மாவல னிவனே ! மித்திர னெனக்கே !

தாமக் - வந்தன மடியேன் வண்மைக் கரசே !

உத்த - இரத சாரத்தியம் இயற்ற லாமா ?

தாமக் - சேவடி சகடஞ் சேர்த்து மரனே !
தீவிர மோடத் தேரலா கும்மே.
(உத்-ஏறுக)

தேரோடு வண்ணம்.

உத்தரன் மனம் மகிழ்க.
நரநர நரநர நகரம் நகரக்
கரகர கரகர கானகங் காணக்
குறுகுறு குறுகுறு குறும்பு குறுகக்
கடகட கடகட கல்லுகள் கல்லச்
சரசர சரசர சாகர மோட
வருதும் வருதும் வானம தேற
மருதம் மருதம் மானவர் முன்னத்

துரிதஞ் சரிதந் தோணிகள் சோரக்
கோணஞ் சதுக்கங் கேட்டி கடந்து
கேகய மோகையோ டோடிற் றம்மா!

சாரதி - ஆ! ஆ! தாமக்கிரந்தி வந்ததுந் தேர் சென்றதும், என் கர்வம் நின்றதும், சர்வம் போனதும் பலன்; ஆண்டு செய்தது, அனுத்தப்பினால் இல்லை! உலகவழக்கந்தானே! வரட்டுங் கேட்போம்! (ஏக)

(மூன்றுங்களம் பின்னால் வரும்)

பிரசுரகர்த்தா.

லௌகீக தந்த்ர தர்மம்.

(முதல்சஞ்சிகையின் 10-வது பக்கத் தொடர்ச்சி)

சென்ற சஞ்சிகையில், ஐசுவரியம் இப்படிப்பட்டதென்று, கூடியவரையில் தெளிவாகசொல்லப்பட்டது. இப்பொழுது இந்த ஐசுவரியமானது, முற்காலந்தொட்டு நாளதுவரையில், எந்த விதமாக மனிதர்களால் தேடியனுபவிக்கப்பட்டு வருகிறது? இதை ஒருவர்க்கொருவர் ஏதாவது தாரதம்மியமாக அநுபவித்து வந்தார்களா? இந்தத்தாரதம்மியத்தினால் என்ன விளைந்தது? என்று விசாரிக்கவேண்டியது அவசியம். ஏனென்றால், பிரபஞ்சத்தில் அநேகர், தமக்கு லபிதமாகக் கிடைத்திருப்பதில் திருப்தியடையாமல் இருக்கிறார்கள். மிக்க ஐசுவரியவான்களினும் கூட, இவ்வித அதிருப்தி குடிகொண்டுவருகிறது. ஐசுவரியம் என்பதற்கு, ச்செல்வம் என்றொரு பெயர் உண்டு. இந்தச் 'செல்வம்' என்ற பதத்திற்கு, மற்றொரு அர்த்தம் அதிலேயே அடங்கியிருக்கிறது. அதாவது 'போவோம்' என்பது. இதற்கு எதிராக, 'தரித்திரம்' என்பது. இதின் சப்தார்த்தமும், 'தரித்து இரம்=நிலைத்து நிற்க மாட்டோம்,' என்பது. ஆகையினால், ஐசுவரியமும், தரித்திரமும், மாறிமாறி வருகின்றது, லோகத்தில் எல்லாவர்க்கும் பிரத்தியக்ஷமான விஷயம். இப்படி வருகிற காரணம், அவரவர்களுடைய சகவாசமென்றுதான் சொல்லக்கூடும்: அப்படிச்சொல்வது தான், உலகவழக்கமாய்க் காண்கிறது. ஆகையினால், ஆதிமுதல் ஏதத்பரியந்தம், இந்த சகவாச சரித்திரமானது, ஜனங்களுக்கு எப்படி அமைந்திருந்தது என்று, சற்று ஆலோசனை செய்வோமானால், ஐசுவரியப்பிராப்தியின் உண்மை தெரியவரும். அவ்வாறு தெரிவதோடு கூட, அந்த ஐசுவரியத்தின் பிரயோஜனமும், அநுபவமும், தேடவேண்டிய வழியும், இசார்த்தகமும், திருஷ்டாந்தமாகத் தெரியவரும். இந்தச் சரித்திரத்தை ஆராய்ந்துபார்க்க, நமது தேசத்திலுள்ளவையே போதுமானது.

சில மலை நாடுகளில், ஓர்வகை மலைச்சாதியார், இன்னும் இருக்கிறார்கள். இவர்கள் உடுப்பது, காட்டுமிருகங்களின் தோல். இம்மிருகங்களைக்கொல்லும் ஆயுதமோ, வளைதடி, எறிதடி, குண்டாந்தடி, அம்புவில் முதலானவை. இச்சாதியார் உணவோ, மாம்சம். வெள்ளைவஸ்திரம், அங்கி இவற்றைத்தரித்த கீழ்நாட்டு மனிதர்களைக்கண்டால், ஒளித்துக்கொள்வது வழக்கம். ஆனால், அந்தப்பிரதேசங்களில் அவருடன் சகாவசம் செய்தவர்களென்று, நிதானித்து அறிந்தமேல், எதிர்ப்படுகிறார்கள். இவர் சிற்சில இடங்களில் சாகுபடியும் செய்கிறார்கள். இவர்களுக்கும் உப்பு, புளி, மிளகாய் தேவையாகிறது. இவை கீழ்நாடுகளிலிருந்து வந்தேயாகவேண்டும். இவற்றைச்சில அற்ப வியாபாரிகள் கொண்டுபோய்க் கொடுத்து, அதற்கு மாறாக, ஏதேனும் மலைப்பொருள்களைப் பெற்றுத் திரும்புகிறார்கள். இஜ்ஜாதியார் வசிக்கும் வீடுகளோ, பர்ணசாலைகள். இச்சாலைகள், இன்றுகண்ட இடத்தில் நாளையிருப்பது, மிகவும் அருமை. இவர்களுடைய ஆயுதங்களோ, சொல்லத்தேவையில்லை; கம்புங் கழியுந்தான்! வில்லோ, மூங்கில்! அம்பின் தலையோ, பருத்த அத்திக்காய்போன்ற மரத்துண்டு! பெரிய மிருகங்களை எய்வதோவென்றால், வில்லைக் குறுக்காகப் பிடித்து, இருந்துகொண்டு, இருகாற் பெருவிரல்களாலும் மெட்டி வளைத்துக், காலை உயர்த்தி, நாணில் அம்புசேர்த்து, இலக்காக எய்கிறார்கள். ஆனால், இவர்கள் எய்யும் திறமை, சிலாகிக்கத்தக்கது. இது நிற்க: கிருஷி எனங்களோவென்றால், மழையினாலும், மண்ணின் நலத்தாலுமே, விளைந்தாலன்றிப், பண்படுத்தக்கூடியவை அன்று. இவரில் சிலர், ஏதாவது மலைப்பொருள்களைக்கொடுத்து, வஸ்திரங்களையும் கம்பளங்களையும் இக்காலத்து வாங்கிக்கொள்கிறார்கள். எல்லாவரையும் போலவே, ஆபரணாதிகளில் மிக்க விருப்பமுள்ளவர்கள். ஆனால், ஆபரண அலங்கார விசேஷம், 'லம்பாடிகள்' என்ற வகுப்பாரைப்பார்த்தால், அறிந்துகொள்ளலாம். சுவர்னரத்னங்கள் அல்ல. சமுத்திரப்பலகரை, கவடி, சோகி! என்பதுதான். இவர்களில் அநேகர், கால்நடைகளை மங்தை மந்தையாக வளர்த்துவருகிறார்கள். ஆகவே இவர்களுடைய ஐசுவரியம் என்பது, அற்பமான காட்டு விளைவும், கால்நடைகளும் ஆம். இவர்களுக்குத் திரவியம் சேகரிக்கவேணுமென்றாவது, நாளைக்கு உணவு வேண்டுமே என்ற சிந்தையாவது, கிடையாது. காலையில் குழந்தைகளைத்தனியே விட்டு விட்டு, புருஷன் வேட்டைக்குப் போய்விடுகிறான். ஸ்திரீகளோ, தொலைதூரத்துள்ள புனங்களுக்குப்போய், ஏதாவது தானிய சேகரமாவது, அல்லது, இருளன் கிழங்கு போன்ற கந்தமூலவர்க்கங்கள் சேகரமாவது, செய்து திரும்பி உச்சிப்போழ்து வந்து சேர்கிறார்கள். பிறகு, சிகிமுகிப்பிரயோகம் செய்து தீமூட்டி, யதார்த்தங்களை அநுமந்த பாகமாகவாவது செய்து, புசிக்கிறார்கள். வேட்டையகப்பட்டால், அது விருந்து நாளாம். இவர்களில், கால்நடைகள் குறைந்தவர்கள்தான் கேவலமானவர்கள். இவர்களிலும் பொறாமை என்பது இல்லாமலில்லை.

இவர்களைப் போலவே, கீழ்நாடுகளுக்கும் மலைகளுக்கும் மத்தியப்பிரதேசங்களில், சிலவகுப்பார் இருக்கிறார்கள். இவர் மேற்கூறிய இருதிறத்தாரின் கிரியாம்சங்களை அடைந்திருக்கின்றனர். சிலர் தடிப்பான கம்பளங்களையும் வஸ்திரங்களையும் நெய்கின்றனர். இவர்களுக்கமைந்திருக்கும் சாகுபடி பூமியோ, மலைவளமுள்ளவையுமன்று, நாட்டுவளமுள்ளவையுமன்று. 'சொக்கனுக்கு சட்டியளவு' என்றபடி கிடைத்த மட்டில் உண்பதும், கையில் இல்லாமைபற்றித் தத்தம் தொழில்களிலேயே நோக்கமுடைமையும் ஆகி, நகரவாசிகளைநோக்கித், தங்களுடைய இகபோக்கியங்களில், சதா அதிருப்தியடைந்தேயிருக்கின்றனர்.

சிற்சில நகரவாசிகள், சுகவாசத்தால் மிக்கத் தேற்சியடைகிறார்கள். விசேஷ கல்வித்திறமையும் பெறுகிறார்கள். சிலர், அவரவர் பழைய நிலைமையிலேயே, யிருக்கிறார்கள். ஆனால், இவர்களில் பெரும்பான்மையோர், தாங்கள் மற்றவர்களைப்போலவே, ஐசுவரியமடையவேண்டுமெனும்

ஆவல் மிகுந்தவராயிருக்கின்றனர். ஐசுவரியமுள்ளவர்களுக்குத், தங்கள் நிலைமையை பலப்படுத்திக்கொள்ள வேண்டுமென்றும், இல்லாதவர்கள் எவ்விதத்திலாவது ஐசுவரியமடையவேண்டுமென்றும், ஆக இவ்விருதிறத்தாரின் அபிலாஷை மிகவே, சண்டை சச்சரவுகள் நேரிட, ஐசுவரியவான்கள், தங்களுடைய அபரிமிதத்தை, ப்பரிவார சனங்களுக்கு உதவி, யுத்தகாலங்களுக்குறிய சன்னத்தர்களாயினர்.

இதுதான், மனிதருடைய பூர்வ நிலைமை. இந்நிலைமையானது, நமது பூர்வ யுத்தபுராணங்களைப்பார்த்தால், திருஷ்டாந்தப்படும். ஓர் அரசன் மற்ற அரசனுடைய ஸ்திரீகளை இச்சித்தான்: யுத்தம் பலம்; திரவியத்தை அபேக்ஷித்தான்: யுத்தம்; மாடுகளைக்கவர்ந்தான்: யுத்தம்; நல்விளைவு நாடு: யுத்தம்; தாயாதிகள் பங்கீடு: யுத்தம்; சைந்நியங்கள் முடிந்தன: யுத்தம் நிற்கவில்லை; மாற்றரசனைக்கொன்றான்: யுத்தகாண்டம்சம்பூர்ணம்; இல்லெனின் மிக்கதிறைபளித்து நட்புக்கொண்டான்: சபலம்.

இதனால், ஜயமடைந்தவர்கள் தங்களுக்குக் கிடைத்த நாடுகளை தங்களுடைய அபிஷ்டபந்து மித்திரர்களுக்குப் பங்கிட்டுக் கொடுத்தும், சில பூமிகளைத் தங்களுக்குக்கந்தாயம் வசூல் செலுத்துவோர்க்கு மானியமாகக் கொடுத்தும், இவ்விதமாக, ராஜாங்க தனத்தைச்சிலவழித்துந், தங்களுடையவும் தங்கள் ஆப்தருடையவும் நிலைமையைப்,பலப்படுத்திவந்தார்கள். அபஜயமடைந்தவர்களோ, மண்ணே ஆதரவாகக், குடித்தன விருத்தியே கதியென்றிருந்தார்கள். ஆனால், இவ்வித விபத்துக்காலங்களில், பழைய காலத்தார்க்கு தர்மமகிமை இயற்கையாயிருந்தபடியினாற்றான், பிரபஞ்சம் இம்மட்டில் நிலைபெற ஆஸ்பதமாயிற்று. இல்லாவிட்டால், அடியற்றுப்போய் அநேக யுகங்களாயிருக்கும். ஜயசாலிகள், முன் சொன்ன வழிகளில் சிலவழித்து மீந்ததைத், தமது உன்னத ஸ்திதியை உணர்த்தும்பொருட்டு, அபரிமிதமான ஆபரண அலங்கிருதப்பொருள்களில் சிலவழித்து வந்தனர். கோவில், குளம், மடம், சத்திரம், சாவடி, ஏரி கால்வாய் இவைகளையும் விருத்திசெய்து, வித்வத்பரிபாலனம், சத்கர்மயாகங்கள், இத்தியாதி சுசீலராயிருந்தனர்.

ஆனால், நம்மை ஆண்டுவரும் ஐரோப்பியர்களோவென்றால், நம்மிலும் கேவல ஸ்திதியிலிருந்தவர்களென்று, அவருடைய சரித்திரத்தினாலேயே தெரிகிறது. அவர்களும், பல நிமித்தங்களாலும், முக்கியமாய்ப் பிரஜாவிருத்தியாலும், உண்ணவும் உடுக்கவும் போதுமான வரும்படியின்றி, ஒருவரையொருவர் யுத்தம் செய்து ஜயித்தார்கள். ஆனால், நாடுகளை ஒவ்வொரு குடும்பத்தலைவர்களும் பங்கிட்டுக்கொண்டார்கள். ஜாதிமத பேதமின்றி, காலக்கிரமத்தில் ஜயித்தவர்களும் ஜயிக்கப்பட்டவர்களும், ஏகைக்கியமானார்கள். ஆகிலும், முன்பங்கிட்டுக்கொண்ட நில வரும்படியால் மட்டும் காலக்ஷேபம் செய்ய நேரிட்டது. அப்பொழுது, குடும்பம் விருத்தியாக, ப்பலதொழில்கள் செய்து அவரவர் உபஜீவனம் செய்யவேண்டி வந்தது. இதனால் கிரமேண, வியாபாரம் பலப்பட்டது. சரக்கின் நாணயமும் நயமும், நோக்கமாயிற்று. இவ்விதம், வியாபாரம் அதிகரித்துப்போட்டியேற்படவே, பற்பல யந்திரங்களும் நிர்மாணமாகி, சகவாசபலத்தினால் நாகரீகமும், காரியோசிதப் பிராப்தியும், மிக்க பூச்சியதையும் அடைந்து, ஐசுவரியவான்களாக இருக்கின்றனர்.

அப்படியானால், ஒரு தேசத்தார் பொருளைச் சிலவழித்து, கைத்தொழிற் சாலைகளை ஏற்படுத்தி, யந்திரமியற்றி, ச்சரக்குகளை விருத்திசெய்து, வியாபாரம் செய்து, என் ஐசுவரியம் அபரிமிதமாக வருமாறு செய்துகொள்ளக் கூடாதென்றாலோ, மேற்கண்ட விதமெல்லாம் செய்யமுடியும். காரியசித்தி என்பது, இடம், பொருள், ஏவல் இவற்றினால் மாத்திரம் அடையக்கூடுமென்பதும், இவையும் கார்மாநுசாரமாகும் என்பதும், யாவரும் அறிந்த விஷயம். ஆனால், "என்சொலினுங் - கைத்துடையான் காற்கீழொதுங்குங் கடைஞாலம்," என்றபடி; பொருள் இன்றியமையாச் சாதனமாகையால், இதை உற்பத்தி செய்யும்வழியும், உற்பத்தியானதை உபயோகிக்கும் வழியும், ஆகிய இவற்றைப்பற்றிய விசாரமே "லௌகிக தந்திர தர்ம"மாம்.

நான்முகம் முற்றிற்று.

(இன்னும்வரும்.) (பிரசுரகர்த்தா.)

ஓர் சுவப்நாவஸ்தை.

(முதற்சஞ்சிகையின் 11-வது பக்கத்தொடர்ச்சி)

நண்பர்களே சென்ற சஞ்சிகையில் 'குரைமுகன்' என்பதின் தாற்பரியம் 'நாய்' என்று எல்லாவரும்அறிந்திருக்கக்கூடும். கோயிற்றிண்ணையில் வைத்திருந்த சாதனம் உணவாக இருந்தபடியால் நாய்க்கு நன்கொடையாகவே யிருந்ததென்பது சொல்லவும் வேண்டுமோ? இது நிற்க: தாயுமான சுவாமிகள், "சிவராத்திரிப் போது துயிலோமென்ற விரதியரு மறிதுயிற் போலேயிருந்து துயில்வார்," என்றபடி ஆகாரமற்ற இரவு எனக்கு சிவராத்திரியானபடியால் நித்திரை செவ்வையாக வரவில்லை. தவிர ஸ்மசான கட்ட வரலாறு என்னை இவ்விதம் ஆலோசிக்கச் செய்தது:— இரண்டொரு பாடலும் ஞாபகத்துக்கு வந்தது;

"சென்றே யெறிப வொருகாற் சிறுவரை
நின்றே யெறிப பறையினை - நன்றேகாண்
முக்காலைக் கொட்டினுண் மூடித்தீக் கொண்டெ [மூவர்
செத்தாரைச் சாவார் சுமந்து."

"நார்த்தொடுத் தீர்க்கிலென் நன்றாய்ந் தடக்கி [லென்
பார்த்துழிப் பெய்யிலென் பல்லோர் பழிக்கிலெ [ன்
தோற்பையு ணின்று தொழிலறச் செய்தூட்டுங்
கூற்றன் புறப்பட்டக் கால்."

இரண்டொரு சுலோகமும் ஞாபகத்துக்கு வந்தது;

"ஆசையா பத்ததே லோகே, கர்மணா பகு சிந்தையா,
ஆயுக்ஷீணம் நஜானாதி, தஸ்மாத் ஜாக்ருத ஜாக்ருத."

"நஹி நஹி மனுதாம் ஸ்வத்வம் மர்த்தியஸ் வீயே (சரீரேபி
பிதுரு பூமி ஸ்ருகாலகணா 3 ஸ்வத்வம் ஜாநந்தி [தத்காயே"

"நஹிப்ரமாணம் ஜந்தூநாம் உத்தரக்ஷண ஜீவநே."

இவற்றின் தாற்பரியம் சிந்தனைக்கிடமாகவே, இடைக்கிடை நித்திரையும் வாய, ஒருஅதிசயமான சுவப்நாவஸ்தை அநுபவித்தேன்.

நான் இருந்த ஊரின் ஞாபகமேயில்லை. நான் படுத்திருந்த திண்ணை நிலையுள்ளதாகக் கா

ணப்படவில்லை. இது ஆச்சரியம் என்று உள்நினைவு செவ்வையாகவிருந்தது. அடே! நாம் கோயிற்றிண்ணையிற்றானே படுத்திருக்கிறோம்! என்றநிதானமும் மனதிலுண்டாயிருந்தது. இது ஸ்வப்நம் தானே என்ற அறிவுமுண்டாயிருந்தது. தேக உணர்ச்சியால் திண்ணைதானோவென்று கவனிக்குஞ் சாபல்லியமுமிருந்தது. மறுபடியும் இவ்வுணர்ச்சி சந்தேகமாகவே யிருந்தது. அரைக்கண் தூக்கத்தில் தடவிப்பார்த்தாற் போலும், ஒன்றும் தெம்படாதது போலுமுணர்ந்தேன். நம் தலைப்புறமெது? காற்புறம் எது? இடப்புறம் எது? வலப்புறம் எது? மேல் எது? கீழ் எது? ஒன்றும் தெரியவில்லை. யாரையாவது அழைக்கலாமென உத்தேசித்தேன். வாய் எழவில்லை. அவயவங்களைத் தடவியறியலாமென்று நினைத்தேன். அவயவங்கள் ஒன்றும் தெம்படவில்லையோ அல்லது அவயவங்கள் இல்லாதுபோல, சேஷ்டாரஹிதனாயிருந்தேனோ, ஒன்றுந் தெரியவில்லை. கண்ணை விழித்துக்கொள்வோமென்றாலோ, விழி கொடுக்கவில்லை. ஊர்த்த சுவாசம் செய்தாற்போலும் யாதொரு மணமுமுணராது போலுமாயிருந்தது. மறுபடியும் இது கனவோ நினைவோ என்பதும் அறிய முடியவில்லை. நான் எவ்விடமிருக்கிறேன் என்று மறுபடியும் ஆராய்ந்தேன். நெப்பேகிடையாது. இதென்ன மோசம்! என்று நினைத்தேன். நான் இருப்பது உணர்தலால் மோசமல்லவென்று துணிந்தேன். இது உண்மையானால் நாம் ஏதோ ஓரிடத்திற்றானே இருக்கவேண்டும்? எவ்விடமானாலென்ன? நான் உணர்கிறேனே! ஆகையால் நான் இருப்பது மெய். மோசமெங்கே வந்தது? ஏதோ பிசகு! ஜாக்கிரதையாக மாத்திரம் இருப்போம்; என்ற எண்ணம் மேலிட்டது. திக்குந் திசையும் தெரியவில்லையே! இருப்பிடமும் நெப்பாகவில்லையே! வேளையும் பொழுதும் தெரியவில்லையே! எப்படி ஜாக்கிரதையாயிருக்கிறது? என்று பற்பல யோசனை தோன்றிற்று. என்னவானால் என்ன! நாம் இருக்கிறோமென்பதற்கையமில்லை! என்று நினைத்தேன். மறுபடியும் மனோராச்சியம் நிற்கவில்லை. இதனால் ஆலசியமடைந்தேன்.

வர வர என் மனோராச்சிய நின்று, நான் இருப்பதாக உணர்ந்திருந்த அறிவுமறைந்துவிட்டது. இவ்வாலசியம் சைதந்நியத்தின் பிரதிபலமாகையால், நீடித்துநிற்கவில்லை. எனக்குளேதோ ஒரு கிளர்ச்சி யுண்டாயிற்று. இது இன்னதென்று தெரியவில்லை. ஆகாயமார்க்கமாகத்திரிந்தாலன்ன, உணர்வுபெற்றேன். திரிகையில் உஷ்ணமும், நிதானத்தில் சீதளமுமாயிருந்தது. இவ்விரண்டும் பரஸ்பர அநுபவம்பற்றி, இதமாகவேயிருந்தது. ஆனால், சுவபாவத்தில், இவ்விரண்டிலொன்றை நெடுநேரமனுபவிப்பது, இதமாகவில்லை. ஆகையாற், பிறண்டுகொண்டே வந்தேன். இப்படிப்பிறழ்தருமிச்சை, சுவபாவத்தாலேற்படவே, இவ்விரண்டிலொன்றையனுபவிக்குங் காலநிர்ணயமும், கூடவேயியங்கிற்று. அப்பொழுது, சைதன்னியப்பிரதிபலத்தினால் வரையறையாகித், தேசமுமேற்பட்டது. ஆனால், இவற்றின் அளவும் எல்லையும் நிர்ணயிக்க முடியாது. இப்படித், தேசகால அநிர்ணயனாய், சுவபாவ சுகாநுபவ விச்சா பீடிதனாய், கதாகத சம்மிசிர கோஷ்டியாபந்தனாய், ஆகாச பாவனாபூதனாய், அகாரண ஹேதோற்பவனாய், அத்புத அநந்வய மாத்திரையாய், இருந்தேன். (இத்தன்மையவஸ்தையை வருகிறசஞ்சிகையில் விஸ்தரிக்கிறேன்.)

பிரசுரகர்த்தா.

லோகோபகாரிகள்.

CHAPTER. I.

(முதற்சஞ்சிகையின் 27-வது பக்கத்தொடர்ச்சி)

இளம்வெயில்:— எதிர்த்த வீட்டினிலுள்ள கனவானொருவர் தங்களைப் பார்க்கவேண்டுமாம். கூட்டிக்கொண்டு வரச்சொன்னார். ஒரு விநாடியில் திரும்பிவந்துவிடலாம். தயவு செய்யவேண்டும்.

வேட்டைவீரர் :— ஆச்சரியம்! இவ்வூருக்கு நான் புதிது. என்னைப் பார்க்கவேண்டுமென்று யார் கூப்பிட்டிருப்பார்கள்! என்று யோசித்தவராய், இதோ வந்துவிட்டேன் என்று பதிலளித்தார். இளம் வெயிலும் காத்திருந்து வேட்டைவீரர் தயாரானதும் கூட்டிப்போய் எதிர்த்தவீட்டிலுள்ள ஒருவர் முன் விட்டார். அவர் பெயர் கத்துக்குட்டி. அவரும் இவரைப்பார்த்து, வேட்டைவீரர் தாங்கள் தாமோ என, ஆம் என்றார் இவரும். பிறகு அவர்களிருவருக்கும் பின்வரும் சம்பாஷணை நடந்தது.

கத்துக்குட்டி:— நான் தங்களைக்கூப்பிட்டுவிட்ட விஷயம் தங்களுக்குப் புலப்பட்டிருக்குமென்று நம்புகிறேன். நீர் நேற்று குடிவெறியில், நம் வைத்திய வீரரை அவமானப்படுத்தினதின் நிமித்தம்தான் உம்மை இவிடம் கூப்பிட்டுவிட்டது. பத்துப்பேருக்கு முன்பாக, "நேற்று நான் குடிவெறியினால் தப்பிதம் செய்துவிட்டேன்" என்று சொல்லி மன்னிப்புக்கேட்டுக்கொள்ளும். இல்லாவிடில் இன்று சாயந்திரம் 4 மணிக்கு மண்டை உடைந்தான்பாழுக்கு வந்து சேரும். அவ்விடம் ஒருவரும் அந்நேரமிருக்கமாட்டார்கள். சிலம்பச்சண்டையில் வைத்தியவீரரோடு உம் சாமர்த்தியத்தைக் காட்டலாம். இவ்விரண்டில் எதிஷ்டம் சொல்லும்சீக்கிரமென, நம்வேட்டை வீரரும் திடுக்கிட்டுத்திபங்கி திக்பிரமை கொண்டு, தாம் தூங்குகிறோமோ, அல்லது விழித்திருக்கிறோமோ என்னும் சந்தேகம் தெளியக்கண்ணைப் பிசைந்துகொண்டு, சரி! ஜனோபகாரச் சங்கத்தின் பெயர் கெடப்படாது. ஒருக்கால் நான் தூக்கத்தில் வெளிக்கிளம்பியிருக்கலாமோ? இருந்தாலுமிருக்கலாம், இல்லாவிடில் அபாண்டமாய் இவர் என்மேல் குத்தம் கூறுவானேன். நர்ன் கேள்விப்பட்டிருக்கிறேன். ஒருவர் தூங்கினபடியே எழுந்து 5, 6 மைல் தூரம் போய் ஒரு ஆற்றங்கரையில் படுத்துத்தூக்கம் தெளிந்தெழுந்து, தாம் அவிடம் எப்படி வந்தோமென்றி தெரியாமல் தியங்கினாராமே! நானும் அப்படித்தூக்கத்தில் எழுந்துபோய்அவரை ஏகதேசமாய்ப் பேசியிருந்தாலுமிருக்கலாம். ஆனால் செய்தது தப்பிதமென்று ஒத்துக்கொள்ளல், நம் சங்கத்தின் கௌரதைக்கே குறைவு. சிலம்பச்சண்டையில் அடி பட்டிறப்பது எவ்வளவோ கௌரதையைக் கொடுக்கும் என்றாலோசித்தவராய், சாயங்காலம் சரியாய் 4 மணிக்கு மண்டை உடைந்தான் பாழ் வந்து சேர ஒத்துக்கொண்டார். பிறகு வீட்டிற்குத்திரும்பி வந்து சிந்தாக்கிராந்தராய், தனது மனக்கவலையை யாருடன் சொல்லி ஆறலாமென்றாலோசனை செய்து, கவிவாணர் தனிமையாயிருக்கும் சமயம் பார்த்து அவரிடம்சென்று சங்கதிகளை விவரமாய்ச்சொல்லிப்புலம்ப, அவரும் ஆஹா! உமது பாக்கியமே பாக்கியம்! நமது சங்கத்தின் யோகமேயோகம்! இச்சமாசாரம், பத்திரிக்கையில் பிரசுரம் செய்யப்படில், சங்கத்துக்கு, எவ்வளவு பேரும் கீர்த்தியும் உண்டாகமாட்டாதென்று, உற்சாகம் மே

விட்டுச்சொல்ல, சமாசாரத்தை அதிகாரிகளிடம் தெரிவித்து, சிலம்பச்சண்டையை நிறுத்திவிடுவாரென்று, முற்றிலும் நம்பியிருந்த, நம் வேட்டைவீரரும், "கவிப்பிரியரது உற்சாகத்தையும் சங்கத்தின் கீர்த்தியையும் கொளுத்த!" என்று மனத்துள் சொல்லிக்கொண்டு, ஒருக்கால், இச்சங்கதியை வெளிப்படுத்தினால், இச்சண்டை நின்றுவிடும் என்ற எண்ணம் இவர் மனத்தில் உதிக்காமலிருக்கலாம்; கொஞ்சம் சூசனையாய்க்காட்டிப்பார்க்கலாமென்ற எண்ணமுற்ற நம் வீரர் பின்வருமாறு செப்பலாயினர்.

ஐயா கவிப்பிரியரே! இது விஷயத்தைப் பற்றி ரகசியமாயிருத்தல் வேண்டும், வெளிப்படுத்தக்கூடாது சினேகிதனுச்சுதே என்று, போலீஸ் டாணாவில் சொல்லி நிறுத்திவிட யோசனை செய்துவிடப்போகிறீர், என்றுதனது அபிப்பிராயத்தை, மறை பொருளாய் வெளியிட்டு, அவரது பதிலை, மிக்க ஆவலோடு எதிர்பார்த்தார். கவியொன்றில் "லோகோபகாரச் சங்கத்தின் மெம்பர்களில் ஒருவர், சங்கத்தின் கௌரதையை நிலைநிறுத்த, சிலம்பச்சண்டை செய்து, மண்டை உடைந்து இறந்தார்" என்று வர்ணிப்பது, எவ்வளவு நன்றாகவிருக்கும் என்று யோசனை செய்துகொண்டிருந்த, எம் கவிராயரும் சத்தியமாய்ச் சொல்கிறேன் என்று ஆரம்பித்தார். எங்கு ஒருக்கால் வெளிப்படுத்துகிறதில்லையென்று சத்தியம் செய்துவிடுவாரோ என்று பயந்த வேட்டைவீரரும், அப்படி ஒன்றும் வேண்டாம்! சத்தியமும் வேண்டாம் ஒன்றும்வேண்டாம்! நீர் சத்தியம் கித்தியம் செய்யாதேயுமென்று தடுத்தார். இவர் இப்படித் தடுத்ததைப்பார்த்த கவிராயரும் ஆச்சரியத்தால் ஸ்தம்பம் போல் நின்றுவிட்டார். "தலைவலியும் காய்ச்சலும் தனக்குவந்தாலல்லவோ தெரியும்" மண்டையுடைந்திறக்கப்போவது கவிராயரா! இல்லையல்லவா! சண்டை செய்து மண்டையுடைந்திறப்பதைப் பார்த்தானந்தித்து, அவ்விஷயத்தைக் கவியில் வர்ணிக்க ஊக்கமுள்ள தன்னைப்போலவே, சண்டைசெய்திறப்பதில் ஆனந்தமுள்ளவராயிருப்பர் வேட்டை வீரரும் என்றுஎண்ணியிருந்த கவிராயர், திகைத்துஸ்தம்பித்தது ஆச்சரியமல்லவே! அன்றைக்கு நம் வேட்டைவீரர் ஆஹாரத்தைக்கையாற்கூடத் தொடவில்லை. "மனக்கவலை பலக்குறைவு" தனக்கு மனக்கவலையாற் குறைந்த பலத்தை ஈடுசெய்ய, தன்னோடுகூட வர, கவிவாணரை அடிக்கடிகேட்டுக்கொண்டார். மனக்கவலை எவ்வாறு பலத்தைக்குறைக்குமோ, அவ்வாறு, தம்மைச்சேர்ந்த ஒருவர்பக்கத்திலிருக்கிறார் என்பது, ஒருவாறு மனதுக்கு ஆறுதலையும், சரீரத்துக்குத் தென்பையும் தருமல்லவா? சரியாய் 3 மணிக்கு மண்டை உடைந்தான் பாழை நோக்கிக்கிளம்பினார்கள் இருவரும். போகும்பொழுது அவர்களுள் பின்வருமாறு சம்பாஷணை நடந்தது.

வேட்டைவீரர்:— சிலம்பத்தில், வைத்திய வீர சிகாமணி மிக்க தேர்ச்சியுள்ளவரோ என்னமோ தெரியவில்லையே!

கவிவாணர்:— அப்படித்தான் கேள்விப்பட்டேன்; தவிர, அவர் ராணுவத்திற்கும் சம்மந்தப்பட்டவராம்! இருந்தால் என்ன! துஷ்டமிருகங்களை வேட்டையாடுவதில் சமர்த்தரான உமக்கு இதொரு பெரிதா! என்றார். பாவம்! பேர் மாத்திரம் வேட்டைவீரரே ஒழிய, துஷ்டமிருகங்களைக் கண்ணாலேயே பார்த்தறியார். ஒருதரம் ஒரு ஆந்தைகூவ, அது சிங்கத்தின் கர்ச்சனையென்று நடுநடுங்கிப்போய் கீழேவிழுந்து மூர்ச்சித்தவரிவர். ஒருதரம் ஒரு கிழவி, ஒரு கிழட்டெருமையை ஓட்டி வந்துகொண்டிருந்தாள்; அவ்வெருமையினது வளைந்த இரண்டு கொம்புகளையும் பார்த்துக்குடல் தெறிக்கக்காத தூரமோடிப்பின் திரும்பிப்பார்த்தவரிவர். அப்படிக்கிருக்க, சிலம்பத்தில் தேர்ச்சிபெற்றிருந்த வைத்தியவீரரோடு, சண்டைசெய்ய, இவர் மனமெப்படித்துணியும்?

வேட்டைவீரர்:— கூடுமானவரையில், கவிவாணரது மனதை இளகச்செய்ய, முயல நோக்கமுள்ளவராய், கண்ணில் நீர்ததும்ப, ஐயா கவிவாணரே! நானிறந்துபோனால் வயதுகாலத்தில் என் தகப்பனாரது கதி என்னவாகும் சற்று யோசித்துப்பாருமென,

கவிவாணர்:— நீர் அதற்காக விசாரப்பட வேண்டாம்.

"கருப்பையுண் முட்டைக்கும், கல்லினுட் டேரைக்கும்
விருப்புற் றமுதளிக்கு மெய்ய - னுருப்பெற்றூட்டி வளர்க்கானோ வோகெடுவா யன்னாய்கேள்
வாட்ட முனக்கேன் மகிழ்."

என்னும் செய்யுளுக்கிணங்க, உலகத்திற்கெல்லாம்படியளக்குமீசன் உமது தகப்பனாரைக்கைவிடமாட்டாரென்றார்.

வேட்டைவீரர்:— மேற்சொன்ன சொல்லினால் அவர் மனதிளகாதது தெரிந்ததும் "பிறரது கஷ்டங்களால் இவர் மனது திரும்புவது கஷ்டம்! இவருக்கே கஷ்டமுண்டாவதாகக்காட்டின் சரிக்கு வந்துவிடுவா ரென்றெண்ணினவராய், ஐயாகவிவாணரே! எனக்கதனால்கூட அவ்வளவு விசாரமில்லையே! நிரபராதியான உமது நிலைமையைப்பற்றியல்லவோ என்மனம் தத்தளிக்கிறது! நானிறந்துபோனால், சர்க்காரில் உம்மை லகுவில் விடமாட்டார்களே! சட்டம், யாராவதொருவன் தற்கொலை செய்துகொள்ள முயன்றாலும், ஒருவனதைப்பார்த்துப் பேசாமலிருந்துவிட்டால், தண்டனைக்குள்ளாவானென்றல்லவோ கூறியிருக்கிறதாம். அப்படியிருக்க, சிலம்பச்சண்டை செய்யப்போகிறார்களென்ற சங்கதி தெரிந்திருந்தும், நீர் மௌனமாயிருந்தீரென்று தெரிந்தால் உம்மைச்சும்மா விடார்களே! தண்ணிமேலல்லவோ ஏற்றி விடுவார்கள் என்றார்.

கவிவாணர்:— இதைக்கேட்டதும் கொஞ்சம் பயமடைந்தார். ஆனால் அபாயம் தூரத்திலிருந்ததால் தைரியத்தைக்கைவிடவில்லை. சினேகிதர்க்காக எவ்வித அபாயத்தையும் லக்ஷியம் செய்யலாகாதல்லவோ! என்றார்.

என்செய்வர் நம்வேட்டை வீரரும், வேறுவழியில்லை! மண்டை உடைபட்டுச் சாகவேண்டியதுதான். "திக்கற்றவனுக்குத்தெய்வமேதுணை" வேறுவழியில்லாததால் சாகத்துணிந்தார். மண்டை உடைந்தான்பாழ் வந்து சேர்ந்ததும், வைத்திய வீரசிகாமணியும், கத்துக்குட்டியும் தயாராய்க் காத்துக்கொண்டிருக்கக் கண்டார்கள். கணுக்கள் ஒழுங்காய்ச்சீவப்பட்டுள்ள, மூங்கிற்கழிகள், ஐந்தாறு அவ்விடம் வைக்கப்பட்டிருந்தன. வருபவர்களைக்கண்டதும், வைத்தியவீரர் அக்கழிகளிலொன்றை எடுத்துச்சுழற்றினார். கவிவாணரும் ஒழுங்காயுள்ள ஒழுகழியைப் பொறுக்கியெடுத்து, வேட்டைவீரர் கையில் கொடுக்க, அவரும் சஞ்சாரப்பிரேதம் போல் நின்றுகொண்டு, அதைக்கையில் வாங்கிக்கொண்டார். பாவம்! ஏதாவது அல்பமான வியாகூலமென்றாலும், அ

வர் தன்னையும், மற்றெல்லாவற்றையும் மறந்துபோவர்! ஒருதரம் ஒரு சிநேகிதர் வீட்டுக்குச் சாப்பிடக் கூப்பிடப்பட்டிருந்தார். ஆனால் போகும்பொழுது, கொஞ்சம் சரியாயிருக்கவில்லை மனது. ஊர்சற்று தூரமாயிருந்ததால், ஒரு லங்கடாக்குதிரைமேல் ஏறிச்சவாரிசெய்துவந்தார். மறதியால் குதிரையைக்கொண்டுபோய், போட்டிருந்த இலைக்குமுன் நிறுத்திவிட்டு தான் குதிரை லாயம்போய்ச் சேர்ந்தார். இன்னொரு தடவையில், சுருட்டுப் பத்தவைக்கவேண்டியிருந்தது. தீக்குச்சியை உரைத்துச்சுருட்டுப்பத்தவைத்தானதும், அதை எறிந்துவிட்டு தீக்குச்சியைச் சுருட்டாய் உபயோகிக்கலாயினர். வீடுவந்ததும் சொக்காயைக்கழற்றி, நாற்காலியில்வைத்துவிட்டுத்தான் போய் மூலையில் மாட்டிக்கொள்ள முயன்றார். இப்பேர்ப்பட்ட நம் வீரருக்கு, வைத்திய வீர சிகாமணி கையைக்குலுக்கிப்பேசின பொழுதுதான், தன் நினைவு வந்தது.

வைத்தியவீரசிகாமணி:— அடடா! என்ன தப்பிதம் செய்துவிட்டார்கள் இளம்வெயிலும், கத்துக்குட்டியும். நீரல்லவே நான்சொன்ன பேர்வழி! அவன் ஒரு பயங்காளிப்பேர்வழி. சண்டைக்குப்பயந்து, கம்பி நீட்டிவிட்டான். போனால்போகிறான்! இப்பேர்ப்பட்ட பயங்காளியோடு சண்டைசெய்வது, நம் யோக்கியதைக்கு முற்றிலும் குறைவு. இப்பேர்ப்பட்ட தப்பிதத்தை எனக்குக்காட்டாமல் சண்டைசெய்யத்தயாரானதிற்குக் காரணம் என்ன? இப்பேர்ப்பட்ட சௌரிய சாலியாகிய தங்கள் நாமதேயமென்ன? விவரமாய்ச் சொல்லவேண்டும் தாங்களென-

வேட்டைவீரர்:—"மலைபோல் வந்தவினை, பனிபோல்" நீங்கியதைக் கண்டானந்தமுற்று, "நானெப்படி அக்காரியம் செய்யத்தகும்! லோகோபகாரச் சங்கத்தின் மெம்பர்களிலொருவனன்றோ யான்." அச்சங்கத்தார்களுக்குச்சங்கம் பெரிதேயன்றி, உயிர் பெரிதல்லவல்லவோ! அச்சங்கத்தின் மெம்பர்களிலொருவர், இப்பேர்ப்பட்ட ஒரு அல்பகாரியத்துக்காக, நானல்ல குற்றவாளியென்று நிரூபித்துத் தப்பித்துக்கொள்வது அச்சங்கத்துக்கே பெருத்தகுறைவன்றோ! என்று பதிலளித்தார்.

கவிவாணர், ஒரு கவியில், ஜனோபகாரச் சங்கத்தின் மெம்பராகிய வேட்டைவீரர், சிலம்பச்சண்டைசெய்து, மனோதிடத்தோடு மடிந்தார் என்றுவர்ணிக்க, அவகாசமில்லாமற்போனதால் அதிருப்தியுள்ளவராயிருந்தபோதிலும், சமயோசிதமாக, சண்டைநின்றுபோனது, தனக்கு, மிக்கத்திருப்தியானது என்று நடித்தார். பிறகு கவிவாணர், வேட்டைவீரர், இவர்களது வேண்டுகோளுக்கிணங்கி, மறுநாட் காலமே, அக்கிராசனாதிபதியையும், ஸ்திரீப்பிரியரையும், வந்து கண்டு நேசங்கொள்ள ஒத்துக்கொண்டார் நம் வைத்திய வீரரும். ஸ்திரீப்பிரியர் யாரென்பது தெரியாது பாவமிவர்க்கு.

(இன்னும் வரும்.)

எம். என். கணேசய்யர்.

பருத்தி வேளாண்மை.

பருத்திச்செடியானது இந்தியா, அமெரிக்கா முதலான உஷ்ண பூமிகளில் பயிராகிறது. இது ஓர்வகைப்படர்செடி. இது சாதாரணமாக நான்கடி முதல் ஆறடி வரையில் வளரும். இதன் இலை பரவலாய் மூன்று அல்லது ஐந்து முகங்களோடு கூடினது. இதன் காய் சுமார் ஒரு அங்குலம் நீளமுள்ளதாயும், ஒன்றரையங்குலம் சுற்றளவுள்ளதாயும், உள்ளில் மூன்று பகுப்புள்ளதாயுமிருக்கும். இதன் பூவானது சிறிய பூவரசின் பூமாதிரியாயிருக்கும். காயானது முதிர்ந்து மூன்று பிளப்பாக வெடிக்கும். இந்தப்பிளப்பு ஒவ்வொன்றிலும் பருத்தியானது நீண்டசெண்டுபோல் வெண்மை நிறத்தோடு வெளியாகும். இதன்விதை சிறுகடலையளவு கோளாகிருதியாயிருக்கும். இது மனிதர்களுக்கு மெத்தவும் உபயோகமுள்ள செடியாயிருக்கிறது.

இச்செடியைக் கரிசல்மண்(இறங்காடு), செம்மண்வண்டல், செம்மண்மணல், சாம்பல்மண், ஜல்லி கலந்தமண், களர்மண் பூமிகளில் உற்பத்தி செய்கிறார்கள். பருத்தி விதைக்கிற காலத்துக்கு முந்தியே, பூமிக்கு எருக்காத்து, 4 அல்லது 5 தடவை நன்றாய்ப் பூமியையுழுது, உலரச்செய்திருக்கவேண்டும். ஐப்பசி, கார்த்திகை மாதங்களில் மழையாரம்பித்தவுடனே, நல்ல பருவப்பருத்திக்கொட்டையைச் சேகரித்து, அந்தக்கொட்டையை மகிழி, செம்மண், மாட்டுச்சாணி, இவற்றுடன் சேர்த்துத்தேய்த்து, நிழலில் உலரச்செய்தபின் விதைக்கவேண்டும். சாம்பல்மண், மணற்றரைகளுக்கு மழை நன்றாய்ப் பெய்யவேண்டியது. களர்நிலத்துக்கு மிதமாக மழை வேண்டியது. செம்மண் வண்டல், கரிசல் நிலங்களுக்கு மழை அற்பமானாலும் போதுமானது.

செம்மண்மணல், கல்மிசிர நிலங்களுக்கும் எருக்காத்து, 4, 5 தடவை உழவுசெய்து, நாட்டுப்பருத்தியை சாகுபடி செய்யலாம். ஆனால், உப்பம் பருத்தியால் காணும் மாசூல், நாடன் பருத்தியாலும், பூணூல்பருத்தியாலும் காணாது. உப்பம்பருத்தி வருஷத்துக்கொருமுறை பயிர் செய்யவேண்டியது. நாடன் பருத்தி மூன்று வருஷத்துக்கொருமுறை பயிர் செய்யலாம்.

உப்பம் பருத்தி பயிர் செய்கிற பூமியில், முதற்பருவப்பருத்தியை மட்டும் உபயோகித்துக்கொண்டு, கார்ப்பருத்தியை யுபயோகப்படுத்தாமல், பூமியைத் துரஸ்து செய்துவந்தால், மேற்படி பூமியில் 5, 6 வருஷம் வரையில் பருவப்பருத்தியையே சாகுப்படி செய்யலாம். கார்ப்பருத்திக்காக விட்டுவிட்டால், மேற்படி பூமியில் பருவப்பருத்தி, 2, 3 வருஷங்களுக்கு மேல், நல்ல பலனைக்கொடுக்காது. சிலகாலங்களில் கார் மழை நன்றாய்ப்பெய்தால் கார்ப்பருத்தியும் நல்ல விளைவைக்கொடுக்கும்.

பூமிகளிலேயே கால்நடைகளை மந்தையாக கூட்டி எருக்காப்பது உத்தமமானது. எரு சேகரம் செய்துகொண்டுபோய் உபயோகப்படுத்துவது அவ்வளவாகப் பிரயோஜனப்படாது. குப்பை முதலானவைகளை எருவுக்குபதிலாக உபயோகப்படுத்துவ்தால், யாதொரு பிரயோஜனமுமில்லை.

பருத்தியை சாதாரணமாகப் புரட்டாசி, ஐப்பிசி மாதங்களில் விதைக்கிறார்கள். மழை சரியாகப்பெய்யாமல், கார்த்திகையில் பெய்தால் அம்மாதத்தில் விதைப்பதும்உண்டு. விதைத்தது

முதல் 10 தினத்துக்குள்ளாக முளைக்கும். ஒரு மாதம் அல்லது நாற்பது நாள் ஆனவுடன், சிறு கொத்தினால் பூமியைப் பண்படுத்துகிறார்கள். பயிர் சுமார் ஒருமுழ உயரம் வளர்ந்ததும், மண்வெட்டியினால் பூமியைக்கொத்திப் பண்படுத்துகிறார்கள். முளைத்தவுடனே பூமியைச் சுற்றிப்பார்த்து முளையாத இடங்களில் திரும்பவும் விதை விதைக்கிறார்கள். முதற்களை கொத்தும்போது பயிர் அடர்த்தியாயிருந்தால் அடர்ந்தவற்றைப் பிடுங்கிவிடுகிறார்கள்.

இப்படிச்சாகுபடி செய்த பயிரானது சற்றுஏறக்குறைய நாலு மாதத்தில் பலன் படுகிறது. அப்பொழுது இரண்டு அல்லது மூன்று தினங்களுக்கொருமுறை பருத்திசேகரம்செய்கிறார்கள். பிறகு ஐந்தாம் மாதத்தில் 4, 5 தினங்களுக்கொருமுறையும், 6-வது மாதத்தில் வாரத்துக்கொரு முறையும், பருத்தியை எடுக்கிறார்கள். இப்படி எடுப்பதில், முதல் முதல் விளைந்ததை ஆய்ந்து, நல்லவற்றை எடுத்து, விதைக்காகவைத்துக்கொள்கிறார்கள்.

பிறகு இலைகள் பழுத்துதிர்ந்து, செடிகளெலாம் கோல்கோலாக நிற்கும். வைகாசி ஆனி மாதங்களில் கார்மழை பெய்து செழித்து வளர்ந்து பலன்படும் பருத்திக்குக்கார்ப்பருத்தியென்றுபெயர். முந்தினதற்குப்பருவப்பருத்தியென்று பெயர். கார்மழையினால் செழித்தபயிர், பருவப் பருத்திபோலவே நன்மையாவதும் உண்டு.

பருத்தியில் நாடன்பருத்தியென்றும், உப்பம்பருத்தியென்றும், அடுக்குப்பருத்தியென்றும் மூன்று வகைகளே இந்து தேசத்தில் முக்கிய மாய்ப்பயிர் செய்யப்பட்டவை. இக்கோயமுத்தூர் ஜில்லாவில் பருத்தி ஏராளமாகச் சாகுபடியாகிறது.

பருத்தியை யந்திரங்களில் கொடுத்து, விதை போக்கி ஆய்ந்து சேர்த்து, நூல்செய்யும் யந்திரங்களினால் நூற்று, வேஷ்டி, புடவை, துப்பட்டி, கப்பற்பாய், சீட்டி, சல்லா முதலான சகலமும் செய்கிறார்கள். மாங்கலியசூத்ரம், பூணூல், விளக்குத்திரி இவைகளுக்குப்பருத்தியின்றியமையாச் சாதனமாகிறது.

பருத்தி விதையிலிருந்து எடுக்கும் தைலமானது, ஔஷதங்களுக்குபயோகமாகிறது. இத்தைலம் எடுக்குமுறை அமெரிக்கா தேசத்தில் முதல்முதல் கண்டுபிடித்தனர் என்று கேள்வி. பருத்திப்பிஞ்சையிடித்து ரசமெடுத்து பட்டுசுட்ட பஸ்மத்துடன் சேர்த்து உட்கொண்டால், இடைவிடாது உண்டாகும் வாந்தி விக்கல் முதலானவை பரிகாரமாகும். இலை ரசத்தினால் இரும்பு செந்தூரிக்கப்படுகிறது. புகைச்சரக்குகளை பஸ்மம் செய்வதில் பருத்திப்பிஞ்சை வெள்ளெருக்கின் பால் விட்டரைத்துக் கவசம் செய்கிறார்கள்.

பருத்தி விதையரைத்து மாடுகளைக்குடிக்க வைத்தால் பால் அதிகமாகும். வெண்ணெயும் அதிகரிக்கும். வண்டிஎருதுகளுக்குக்கொள் வேகவைத்துப் பருத்தி விதையைச்சேர்த்து வாரத்துக்கு மும்முறை வைத்தால், பாரமிழுக்க நெஞ்சுறுதியைக்கொடுக்கும்.

ஆகையால் மனிதர்களுக்குப் பருத்தி சாகுபடியால் மெத்த உபயோகம் உண்டு.

பத்திராதிபர்.

க்ளாவ் பிரபுவின் சரித்திரம்.

இந்தியாவாகிய நமதுதேசமெங்கும் இந்தப் பிரபுவின் சரித்திரம் விளங்குகின்றது. சாமானியமாக, இவரைப்பற்றிக் கேள்விப்படாதவர்கள், ஒருவரும் இருக்கமாட்டார்கள். இவர்தாம், இப்பொழுது துரைத்தனம் செய்துவரும் ஆங்கிலேயருக்கு, வெற்றியுண்டாக்கினவர். இவரை ஒருமகத்தாக நினைக்கவேண்டும். "குப்பையிற் கிடக்கும் குன்றிமணி" போல, இவருடைய அம்சம் வியக்கத்தக்கது.

இவருடைய வம்சப்பெயர், 'க்ளைவ் என்' னப்படும். இவருடைய இயற்பெயர், 'ராபர்டு' என்பது. இந்தவம்சத்தார், இங்கிலாண்டு தேசத்தில், ஷராப்ஷைர் என்ற ஊரில், பன்னிரண்டாவது நூற்றாண்டில், கேவலமான ஸ்திதியுள்ளவராக இருந்தார்கள். அப்பொழுது, அத்தேசத்தை ஆண்டுவந்த அரசன், ஜியார்ஜ் என்னும் முதல்வன். முன் வம்சஸ்தனாகிய ராபர்ட் க்ளைவ் என்பவர், அப்பரம்பரையான மித ஆஸ்திக்கு, அதிபனாக இருந்தார். இவர், மிகவும் புத்திநுட்பமும், அதி சாதுரியமுமில்லாத, "வெள்ளைச்சோளம்." இவர், வக்கீலாகவும், வேளாண்மையராகவும், காலங்கழித்து வந்தார். இவர், காஸ்கிலி என்னும் மான்சஸ்டர் நகர மாதுசிரோன்மணியை மணந்துகொண்டு, ஒரு பெருகிய குடும்பத்திற்குப்பிதாவானார். நமதுதேசத்தில் அங்கிலேய ஆதிபத்தியத்தை ஸ்தாபித்த இவருடையஜேஷ்டகுமாரரான ராபர்ட் என்பவர், தமது ஆதீனத்தில், 1725-ஆம் வருஷம், செப்டெம்பர் மாதம் 29 ஆம் தேதியில், ஜனனமானார்.

இவர் குழந்தையாயிருந்தபோதே, இவருடைய யோக்கிய பாக்கியத்தின் அறிகுறிகள் அமைந்திருந்தன. இவருக்கு ஏழுவயதாயிருந்தபொழுது, இவருடைய உறமுறையார் எழுதின கடிதங்கள், இன்னுமிருக்கின்றன. இக்கடிதங்களைப்படித்துப்பார்த்தால், இவருக்குக்குழந்தைப் பருவத்திலேயே அமைந்திருந்த மனோதிடத்தையும் உற்சாகத்தையும் கட்டாண்மையையும், இனிது விளக்கும். இவருடைய அம்மான் ஒருவர் "சண்டை என்பது இவனுக்குப் பிரதானம்; அதனால், இவனுடைய குணமும் மூர்க்கத்தன்மையாகி, அற்ப விஷயங்களிலும் ஒரு பெரிய ஆடியெழுத்தமாயிருக்கிறது" என்று எழுதியிருக்கிறார். ராபாட்டாலவன் உன்னதமான ஒரு கோபுரத்திமேலேறி அதன் சிகரத்துள்ள ஒரு தூம்புவாய்க் கல்லின்மேல் உட்காரும் மாதிரியைப், பெற்றோர்பாற் கேட்ட கிழவர்சொல்ல, அந்நாட்டார் இன்னும் பீதியுடன் வியக்கின்றனர். பொருளில்லாத அவ்வூர்ப் பிள்ளைகளைப் படைபோலச் சேர்த்துக்கொண்டு, கடைக்காரரிடம் சில்லரைத்தின்பண்டங்களைத்திறைகொள்வதும், கொடாதவர்கள் கடைகளின் சாளரவழிபுகுந்து கொள்ளையிடுவதும், ஆகிய சேஷ்டைகளை இன்னும் சொல்லிக்கொள்கிறார்கள். பாடசாலை பாடசாலையாய் ஓடிப்படித்து, ஒன்றுமுணராத "செக்குலக்கை" என்று எங்கும்பெயரெடுத்தான். ஏதோ ஒரு உபாத்தியாயர் மாத்திரம், இந்த சோம்பேறிப்பையன் ஒருக்கால் உன்னதஸ்திதிக்கு வருவான், என்று சொன்னாராம். ஆனால், பலர்வாயிலும் போக்கழிஞ்சு போனவன் என்று சொல்லாவிட்டாலும், கூத்தாடிப்பையல் என்று பெயரெடுத்தான். அவன் குடும்பத்தாரும், இக்கடினசித்தச்சிறுவனால் தமக்காவதொன்றுமில்லையெனக், கையலம்பிவிட்டனர். ஒன்றிலே பாக்கியசாலி ஆகட்டும், இல்லாமற் போனால் சென்னைச்சுரம்

வந்து சாகட்டும் என்று, இந்தியாவாகிய நமது தேசத்துக்குப், பதினெட்டாம் வயதில் கம்பெனியாரின் குமாஸ்தாவாகக், கப்பலேற்றி யனுப்பி விட்டார்கள்; இப்படிச்செய்தது ஆச்சரியமல்ல.

இக்காலத்தில் வருஷம் பிரதி நமது ராஜாதீனங்களுக்கு அனுப்பப்படும் வாலிபரைப்போலல்லாமல், க்ளைவ் என்பவரின் பாக்கியவிசேஷம் பிரத்தியேகமாயிருந்தது. அக்காலத்தில்கம்பெனியார்வெறும் வியாபாரச்சங்கமாயிருந்தனர். அவருடைய ஆதீனம் கொஞ்சமாக இருந்தது. அதற்கு சுதேச அரசர்களுக்குக் கப்பமுங்கட்டிவந்தார்கள். அவருடைய சரக்கு மளிகைகளைப்பாதுகாக்க அமைத்த ஒன்றிரண்டு கோட்டைகளின் படைக்கருவிகளைக் கையாடக்கூடப்போதுமான சைந்நியமில்லாதிருந்தது. இந்த அற்ப சைந்நியத்திலும், பெரும்பாலும் சுதேசிகளே இருந்தார்கள். இவர்களுக்கு ஆங்கிலேய யுத்தப்பயிற்சி இல்லை. கத்தி கேடையம், அம்புவில்லே, இவருடைய முக்கிய ஆயுதங்களாக இருந்தன. கம்பெனியாரின் நோக்கமெல்லாம் சரக்குக்கொள்வதும், நெசவுகாரருக்கும் கப்பல் சரக்குக்கும் முன்பணங்கொடுப்பதும், யாதொருவனும் தங்களுடன் போட்டிபோடாத விதம் பாதுகாப்பதுமேயாகஇருந்ததே தவிர, நமது பெரிய தேசத்தின் நீதியையாவது, செல்வத்தையாவது, ஸ்தானுபத்தியத்தையாவது பாதுகாக்க வேண்டுமென்பதல்ல. இக்கம்பெனியாரின் கீழுத்தியோகச்சிறுவர்களின் சம்பளமோ, கடனின்றியுண்ணவுமுடுக்கவுமே, போதுமானதாக இருக்கவில்லை. பெரிய உத்தியோகஸ்தர்களோ, சொந்தத்திலும் வியாபாரம் செய்து, பொருள் சம்பாதித்து வந்தனர். கம்பெனியின் தலைமையராகப் பிராப்தமுண்டாயிருந்தவர்கள் எல்லாவரும், பெருஞ்செல்வத்தைத் தேடிக்கொண்டார்கள்.

க்ளைவ் என்பவர் நியமனம் பெற்றுவந்த சென்னை நகரானது, அக்காலத்தில், கம்பெனியார் குடியேறின நாடுகளிற் சிறந்ததாக இருக்கலாம். முன் நூற்றாண்டில், செண்ட் ஜார்ஜ் கோட்டையானது, கடற்கரையோரம் திரைபிறழும் பாழ்ந்தரையிற் கட்டப்பட்டிருந்தது. அதற்கருகில், ஆயிரக்கணக்கான சுதேசியர், ஒரு நகரங்கட்டி வசித்துவந்தனர். சுற்றிலும் அநேக வெள்ளையர் வாசங்கள், ஆங்காங்கே தோட்டங்களில் அமைந்திருந்தது. அவ்விடங்களில் கம்பெனிஉத்தியோகஸ்தர், தத்தம் வேலைமுடிந்தபின், குளிர்கடற்காற்றுக்கொண்டு இளைப்பாறிவந்தனர். இப்பால் வருகிற துரைத்தன உத்தியோகஸ்தரையும் ஜட்ஜிகளையும்விட, அதிக படாட்டோபத்துடனும் ஆடம்பரத்துடனும் வெகு தாராளிகளாக விருந்தனர். ஆனால், சுகாநுபவஞானம் மிகவுங்குறைந்திருந்தது. நாட்டின் இயற்கையாகிய உஷ்ணத்தை இப்பால் தணிக்குமுபாயங்கள், ஆரோக்கிய வாழ்வை அபிவிருத்தி செய்ய ஏற்பட்டது போல, அக்காலத்தில் ஒன்றுமறியாதவராயிருந்தார்கள். ஆங்கிலேய நாட்டிற்குப் போய் வரல் மிகவும் துர்லபயாயிருந்தது. ஆப்பிரிக்கா முனையை சுற்றிப்போகவேண்டுமானால், இக்காலத்தில் மூன்றுமாசம் பிடிக்கும். அக்காலத்திலோ, ஆறுமாசத்துக்குக் குறையாது. சிலசமயம், வருஷமானாலும் ஆகும். அதனால், இந்தியா ஆங்கிலேயர், அக்காலத்தில் அவருடைய சீமையிலிருந்து வெகுவாக வேறுபட்டிருந்தனர். ஊண் உடை நடைகளில் வெகுவாக நம்மைப்போலவேயிருந்தனர். சீமைக்குத் திரும்பும் இக்காலத்தவரைப்போல, அவ்வளவு ஐக்கிய பத்தியத்தை, அவர் சீமைக்குப்போன பொழுது பாராட்டினாரில்லை.

அவருடைய கோட்டையிலும் சுற்று வட்டங்களிலும், சுதேசஅரசர்களின் அநுமதியால், மிகுந்த அதிகாரம் செலுத்திவந்தனர். ஆகிலும், சுயாதிகாரம் செலுத்துவோம், என்கிறஎண்ணம் கனவிலும் அறியார். மகிமைபெற்ற மொகலாய அரசன் கீழ்ப்பட்ட, நிஜாம் என்பவரின் அதிகாரத்துள், கர்னாடக நவாப்ஆனவர், சுற்றுள்ள தேசங்களை ஆண்டுவந்தார். இப்பொழுதும் அந்த ஸ்தானம் பெற்றவர், கம்பெனியார் வரும்படியில் (கவர்ன்மெண்டில்) இருந்து, பிஞ்சன் வாங்கி, உபஜீவனம் செய்து வருகிறார். நிஜாம் ஸ்தானமும், இப்பொழுது ராணுவத்தாற் சூழப்பட்டு, ஸ்தானாதிபதியின் மந்திரித்துவம் என்று சொல்கிற அதிகாரத்தில் அமைவுற்றிருக்கிறது. விண்ணப்பங்களை வாங்கும் மொகலாய விநோத தர்பாரும் இன்னும் இருக்கிறது. ஆனால், கம்பெனியாரின் (கவர்ன்மெண்டின்) தாழ்ந்த உத்தியோகஸ்தனுக்கிருக்கும் சிக்ஷாரக்ஷா அதிகாரங்கூட அவருக்கில்லை.

அக்காலத்து, வேண்டுவதில் அதிகமாக, க்ளைவின் பிரயாணம்நீடித்துவிட்டது. பிரேசில் என்னும் பிரதேசத்தில், கப்பலானது சிலமாசங்களாக நின்றுவிட்டது. அவ்விடத்தில், பரங்கி ஜாதியாரைப்பற்றிக், கொஞ்சம்தெரிந்துகொண்டார். கைப்பணமும் சிலவழிந்துபோய்விட்டது. சீமையை விட்டு, ஒரு வருஷமான பிறகுதான், நம்மிந்தியாவுக்கு வந்தார். வந்து, பட்டணத்தில் அவர்பட்ட கஷ்டம், சொல்லித்தொலையாது. கையிலோ, காசில்லை. சம்பளமோ, அற்பம். கடனோ, பட்டுவிட்டார். ஏலான மனையோ, கிடையாது. சீமையோர்இருக்க யோக்கியமான விசாலமான வாசஸ்தலமில்லாதது பற்றி, மிகவும் வருந்தினார். ஒரு துரைக்குச் சிபார்சைக்கடிதம் ஒன்று கொண்டுவந்திருந்தார்; ஆனால், இவர் மதிராசிக்கு வருமுன்னே, அத்துரையானவர், சீமைக்குப்போய்விட்டார். அவர், தமது திக்கார நிலையினால், மற்றொருவரை யாசிரயிக்க, சங்கோசமடைந்திருந்தார். ஏதேனும் ஒரு குடும்பத்தினை அறிவதற்கு, ஒருவருஷம் சென்றது. தேசாவஸ்தையோ, அவர் மனோதிடத்தையும், தேக ஆரோக்கியத்தையும், ஓய்வித்து விட்டது. அவருடைய உத்தியோகமோ, அவருடைய அபீஷ்ட வம்பு நிலைமைக்குப் பொருந்தவேயில்லை. திரும்பி ஊர்போக ஏங்கிப்போனார். தமது பந்துக்களுக்கு எழுதினகடிதங்களில், அதற்குமுன்னிருந்த 'இளங்கன்றின்' பாவமாகிலும், பிற்பாடுண்டான வணங்காக் கடூரமாகிலும் காணாத, அவ்வளவு நளினமும் விசாரபுத்தியும் அமைந்திருந்தது. தன்னுடைய ஊரை விட்ட பிறகு, ஒரு நாளாகிலும் சந்தோஷப்படவில்லை என்றும், ஒவ்வொரு சமயம் தன்னுடைய சீமையை நினைக்குந்தோறும், தனக்கு ஒரு மாதிரியான ஏக்கமுண்டாகிறதென்றும், "சீமையைத் திரும்பிப் பார்க்கவும், அதிலும் எனது பிரிய ஸ்தலமாகிய மான்செஸ்டர் நகரம் சேரவும், கடவுள் கடாட்சிப்பாரானால், எனது மனோரதமெல்லாம் ஒருங்கே முடிந்தது" என்றும், எழுதியிருக்கிறார்.

நன்கு மதிக்கக்கூடிய ஒரு ஆறுதல் மாத்திரம் அவருக்கிருந்தது. கவர்னரிடம் நல்ல புஸ்தகசாலையிருந்தது. அவற்றைப்படிக்க உத்திரவு பெற்றிருந்தார். தமது அவகாசத்தைப் படிப்பிற்செலுத்தித், தமக்குக்கிடைத்த புத்தக விஷயங்களை, முற்றிலுங் கரை கண்டார். பிள்ளைப்பருவத்திலோ முழுச்சோம்பேறியா யிருந்தவர், யௌவனத்தில் சுறு சுறுப்புள்ள வித்தியார்த்தியாய்த்தீர்ந்தார்.

ஆனால் தேசசுவாபமாகிலும், தரித்திராவஸ்தையாகிலும், படிப்பாகிலும், பராதீனச் சுதேச வாஞ்சையாகிலும், அவருடைய முறட்டுத்தைரிய பாவத்தைப் பழக்கடிக்கவில்லை. தமது உபாத்தியாயர்களிடம் எவ்விதமாக நடந்துகொண்டிருந்தாரோ, அவ்விதமே தமது மேலதிகாரிகளிடமும் நடந்துவந்தார். ஆகையால், பலதடவை தமது வேலைவாயில் மண்ணைப்போட்டுக்கொள்வார் போல இருந்தது. இரண்டொரு முறை, குமஸ்தர்கள் கட்டிடத்தில் தற்கொலை புரிந்துகொள்ள யத்தனித்தார். அவ்விரு முறையும், தமது தலைக்குக் குறிவைத்து அடித்த அவருடைய பிஸ்தோலானது, வெடி கிளத்தாமற் போயிற்று. வாலன்ஸ்டூன் என்பவர் தப்பிக் கிலேசமுற்றது போலத், தாமும் தப்பிப்போன வரலாற்றால் கிலேசமுற்றார். ஆனால், தமது பிஸ்தோலானது சரிவர கிரப்பப்பட்டிருந்ததைப் பார்க்கவும், தாம்ஏதோ ஒருபெரிய முடிபின்பொருட்டு பாக்கியானாரெனச் சந்தோஷித்திருந்தார்.

இப்படி இருக்கையில், தமது நல்வாழ்வின் உத்தேசத்துக்கே ஹானிவரும்படியான ஒரு சங்கதியானது, திடீரென அவரது கீர்த்தி விளங்குமாறு வாய்த்தது. ஆஸ்டிரியா தேசத்தின் ராஜபட்டத்தைப்பற்றிய பெரும்போரில், ஐரோப்பியரெல்லாம் சில வருஷங்களாகத் தலைப்பட்டிருந்தார்கள். ஆங்கிலேயர் அக்காலத்திலும் கப்பற்போரில் முதன்மை பெற்றிருந்தாலும், லோகமெல்லாம் எதிர் நின்றாலும் ஒருகை பார்க்கக்கூடிய தற்காலத்திய சாமர்த்தியம், அப்பொழுது இருக்கவில்லை. ஆகையால், பிரான்சு ஸ்பானியர் ஆகிய இந்த இரண்டு நாட்டார் சேர்ந்த கப்பற்படையை எதிர்த்து நிர்வகிப்பது, மெத்தவுங் கஷ்டமாயிருந்தது. கீழ்ச்சமுத்திரங்களில் பிரான்சு தேசத்தார் முதன்மையடைந்திருந்தார்கள். மொரீசு தீவின் கவர்னராகிய மிக்க குணமும் சாமர்த்தியமுமுள்ள 'லபௌர்துனே' என்பவர், ஆங்கிலேயரை மதிக்காமல் நமது இந்தியா தேசத்துக்கு ஒரு பெரும்படையைத் திரட்டிக்கொண்டுவந்து இறக்கிச்செலுத்தி, சென்னை நகரத்தையும் கோட்டையையும்ஆக்ரமித்துக்,கைவசப்படுத்திக்கொண்டார். கோட்டைச்சாவிகளை வாங்கிக்கொண்டார். சென்னைக் கோட்டைமேல் பிரன்சுதேசக் கொடியை நாட்டிவிட்டார். கம்பெனியாரின் கிடங்குத் திரவியங்களை எல்லாம், யுத்தம்செய்துஜபித்த வெகுமதியாக வாரிக்கொண்டார். ஆங்கிலேயக் குடிகளெல்லாம் யுத்தக் கைதிகளாக உறுதிமொழிபெற்றுக், கப்பங்கொடுத்து மீட்டுக்கொள்ளும் வரையில், நகரமானது பிரான்சு தேசத்தார் சுவாதீனத்திலிருக்கவேண்டுமென்றார். ஆனால் சாமானியமான கப்பங் கட்டினால் போதுமென்று, தமது நாணியதையைப் பொறுத்து வாக்களித்தார். 'லபௌர்துனே' என்பவர் வெற்றியடைந்ததைப்பற்றி, புதுச்சேரி கவர்னராகிய 'டியூப்லே' என்பவர் பொறாமைபட்டார். முன்னமேதானே மிக்க உபாயங்களைக் கைக்கொள்ள நினைத்திருந்த இந்த 'டியூப்லே' என்பவர், சென்னை நகரை ஆங்கிலேயருக்கு மறுபடியும் கொடுக்கக் கூடாதென்றார். 'லபௌர்துனே' தமது அதிகாரத்தை மீறி நடந்துகொண்டதாகச் சொன்னார். இந்தியாவில் பிரான்சு போர்வீரரால் பெறப்பட்ட ராச்சியமானது, புதுச்சேரி கவர்னருடைய தோரணைக்குட்பட்டது என்று வற்புறுத்தினார். சென்னையைத் தரைமட்டமாக்கவேண்டுமென்றார். 'லெபௌர்துனே' என்பவரைக் கட்டாயப்படுத்தி உடன்படச்செய்தார். பிடிபடுத்தினது பற்றிக் கோபங்கொண்டிருந்தஆங்கிலேயர், "டியூப்லே" என்பவர் இம்மாதிரி தயாதாக்ஷணியமில்லாமல் கம்பெனி உத்தியோகஸ்தரை நடத்தினதினால், வெறுப்படைந்தார்கள். ஐம்பதினாயிரம் ஜனங்கள் பார்த்து அதிசயிக்க, சென்னை கவர்னரையும், கனம்பொருந்திய கம்பெனி உத்தியோகஸ்தர்களையும், கட்டுக்காவலோடுகூட புதுச்சேரி நகரத்துள் நடக்கச்செய்து, ஜயப்பிரதாபத்துடன் பவனிவந்தார். நாலுபேர் அருவெறுக்கக் கூடிய இந்தச்செய்கையால், சென்னை ஜனங்களுக்கு, "லபௌர்துனே" என்பவர் கொடுத்த உறுதிவாக்கின் நாணயம் ஓடிப்போயிற்று. அதனால் 'க்ளைவ்' ஆனவர் துலுக்கனைப்போல் வேஷம்பூண்டு, ராத்திரி ராத்திரியாகத் தப்பியோடி, சென்னைக்கு உட்பட்டிருந்த 'டேவிட்' என்னும் கோட்டையில் அடைக்கலம் புகுந்தார்.

(இன்னும் வரும்.) பிரசுரகர்த்தா.

இந்தியா சட்ட நிரூபண விருத்தாந்தம்.

புல்பெஞ்சு கிருமினல் அப்பீல்;

வாதி: அய்யாக்கண்ணு பிள்ளை.

பிரதிவாதி—சர்க்கார்.

1907-வது வருஷம் செப்டெம்பர்-மீ 17ந்தேதி வாதியை திருநெல்வேலி ஜில்லா ஜட்ஜி அவர்கள் ஒரு கேசில் சாக்ஷியாக விசாரணை செய்ததில், வாதியானவன் பொய் சாக்ஷி சொன்னதாக வியக்தமாகி, மேற்படி வருஷம் அக்டோபர் மாதம் 8ந்தேதி மேற்படி கேசில் தீர்மானம் சொன்னபிறகு, வாதி பொய்சாக்ஷி சொன்னதற்கு பிராசிகியூஷன் செய்ய ஏன் சாங்கிஷன் கொடுக்கக்கூடாதென்று முகாந்திரம் காண்பிக்கும்படி 29ந்தேதி வாதிக்கு நோட்டீஸ் கொடுத்து, விசாரணைசெய்து, வாதியை பிரர்சிகியூஷன் செய்ய உத்தரவுசெய்தாரென்றும், இவ்விதம், "கிருமினல் நடவடிக்கை" 476-வது வகுப்பின்படி, கொடுக்கப்படுஞ் சாங்ஷன்உத்திரவானது, கேஸ் தொடர்ந்து நடந்தாற்போல, உடனுக்குடனே கொடுக்கப்பட்டாலொழிய, கோரட்டாருடைய தாரணாவழியில் செய்த நடவடிக்கையாகமாட்டாதென்பதையும் விவரிக்கிறது. (மதிராஸ் சட்ட ரிபோர்டு 1909 பிப்ரவரி மாதம் புஸ்தகம் 32, 2-வது பாகம், பக்கம் 50 பார்க்க)

சிவில் அப்பீல்.

வாதி—வெங்கடாசல செட்டியார் முதலானவர்கள்.

பிரதிவாதிகள்—சம்பத்து செட்டியார் முதலானவர்கள்.

இந்த நம்பரில், ஒரு முக்கியமான வாதம் ஏற்பட்டது. அதாவது, வருமானவரி இலாகா கலக்டர் அவர்கள் முன்பாக, மேற்படி வரி விதிக்கப்பட்டவர்கள் கொடுத்த வாக்குமூலங்களையாவது, அவர்கள் ஆஜர் செய்த தஸ்தாவேஜுகளையாவது, கோர்ட்டில் ஆஜர்செய்ய மேற்படி கோர்ட்டார் கட்டாயப்படுத்தலாமா? அவைகள், "இந்தியா ருசுச்சட்டம்" 123, 124வது வகுப்புகளின்படி பகிரங்கப்படுத்தக்கூடாதவைகள் அல்லவா? என்பது.

இந்தக்கேசில் கோரட்டாரவர்கள், டிப்டி கலெக்டர் அவர்களை ரிகார்டுகளை ஆஜர்படுத்தும்படி கட்டளை செய்ததில், கவர்ன்மெண்டாருடைய உத்தரவுப்படி, மேற்படி டிப்டி கலெக்டர் அவர்கள் வாதித்ததாவது:—

வருமானவரி ஆக்ட் 38-வது வகுப்பினைச் சார்ந்து கவர்ன்மெண்டாரால் செய்யப்பட்ட 15

வ்து ரூலின்படி, கலெக்டர் அவர்கள், மேற்படி ரிக்கார்டுகளிலடங்கிய விஷயங்களை வெளியிடக் கூடாதென்றும், மேற்படி விஷயங்கள் உத்தியோக விஷயமாக உத்தம விசுவாசத்தினால் அறிவிக்கப்பட்டவையாதலால், அவ்விஷயங்களை வெளிப்படுத்துவது துரைத்தன காரியங்களுக்குப் பாதகமாமென்றும், பொது நன்மைக்குத் தீங்கு நேரிடுமென்றும், வாதித்தார்.

"இந்தியா ருசுச்சட்டம்" 162-வது வகுப்பின்படி, தன் தாவேசை ஆஜர்படுத்த சம்மன்சு கொடுக்கப்பட்ட சாட்சியானவன், அது ஆஜர் செய்யக்கூடிய தஸ்தாவேசோ அல்லவோ என்பதை யோசியாமலும், அது ருசுவாக ஏற்கத்தகுமோ என்பதை யோசிக்காமலும், தன் சுவாதீனத்துள்ள அந்ததஸ்தாவேசை ஆஜர்செய்யவேண்டியது. ஆகையால் டிப்டி கலெக்டர் அவர்களுடைய வாதம் சரியானதல்ல. ஆஜர் செய்வது அவருடைய கடமை. அதை ஏற்றுக்கொள்ளக்கூடுமா இல்லையா என்பது கோர்ட்டாருடைய யுக்தம். துரைத்தன சம்மந்தமான ரிக்கார்டுகளைத்தவிர இதர ரிக்கார்டுகளைக் கோர்ட்டார் பரிசோதிக்கலாம். கலெக்டர் அவர்களுடைய சுவாதீனத்திலிருக்கும் அவர்முன் செய்யப்பட்ட மேற்படி ரிக்கார்டானது 123வது வகுப்பிற்குறித்த துரைத்தன விஷய ரிக்கார்டாகாது. வருமானவரி ஆக்டிலும், மேற்படி ரிக்கார்டுகளை ஆஜர் செய்விப்பது கோர்ட்டாருடைய யுக்தமென்று சொல்லப்படவில்லை. ஆகையால் கோர்ட்டாரவர்கள் மேற்படி ரிக்கார்டுகளைப் பார்வையிடலாம்:—

இவ்விதமான தஸ்தாவேசுகளை ஆஜர் செய்விக்கவும், மேற்படி தஸ்தாவேசுகளைப் பார்க்கவும் சாக்ஷிகளை ஆஜர் செய்விக்கவும் கலெக்டர் அவர்களுக்கு அதிகாரமுண்டு. ஆகையால் அதிகார தோரணையால் நடவடிக்கை நடத்தினது தஸ்தாவேசுகள், வருமானவரி ஆக்ட் 14-26வது வகுப்புகளின்படி, வரி விதிக்க கலெக்டர் அவர்கள் எடுத்துக்கொள்ளும் நடவடிக்கையானதால் வெளியிடக்கூடாத அறிவிப்பு அல்ல. அதினால் 124 வகுப்பு இவ்விஷயத்துக்குப் பொருந்தாது, என்று விதிக்கப்பட்டது. (மதிராஸ் சட்ட நிரூபணக்கோர்வை புஸ்தகம் 32-2வதுபாகம் 63வது பக்கம் பார்க்க)

சிவில் அப்பீல்.

வாதி—மதிராஸ் அபிஷல் அசைனி (official assignee) (ஆர்பத் நட் கம்பெனி)

பிரதிவாதி—ஜீ. ஸ்மித்.

ஜீ. ஸ்மித் என்பவர், இந்தியா நாஷனல் பாங்கிலிருந்து ரூபாய் 627 வாங்கிக் கொள்ளும்படி தம் பெயர்க்குள்ள ஒரு செக் அனுப்பி, மேற்படி ரூபாய் பெற்றுக்கொண்ட விவரம் தெரிந்தமேல் ரூபாய் 573 அனுப்புவதாகவும், ஆக ரூ. 1200, தம் பெயராலும் வேறொருவர் பெயராலும் பிக்செட் டிபாசிட்டாக ஒரு வருஷத்துக்கு வைக்க வேண்டுமென்று ஆர்பத்நட் கம்பெனியார்க்கு எழுதினார். ஆர்பத்நட் கம்பெனியார் மேற்படி 627 ரூபாயைப் பெற்றுக்கொண்டு அதற்கு ரசீது அனுப்பினார்கள். ஸ்மித் அவர்கள் பாக்கி 573 ரூபாயை உடனே அனுப்பவில்லை. இதற்குள்ளாக கம்பெனியார் இன்ஸால்வென்டானார்கள். ஸ்மித் துரை, மேற்படி கம்பெனியார் மேல் 627 ரூபாயிக்கு வியாச்சியம் செய்யவே, கோர்ட்டார் தீர்ப்பும் செய்தார்கள். ஆனால் இந்த தீர்மானத்தில் மேற்படி தொகையைக் கம்பெனியார் அசையாப் பொருளாக வைக்கவேண்டிய நிலைமையிலிருந்தாரென அபிப்பிராயப்பட்டு தீர்ப்புச்செய்தார். இவ்வபிப்ராயம் சரியல்ல, கம்பெனியார் பாங்

நிலைமையில் மேற்படி தொகையைக் கையாடலாம்; ஆகையால் கம்பெனியார் நிலை கடனாளி நிலைமையைப்போன்றது என்று அபிப்ராயப்பட்டு அப்பீலைத் தள்வழிசெய்துவிட்டார்கள். (மேற்படி ரிப்போர்ட் 68வது பக்கம் பார்க்க.)

சிவில் அப்பீல்.

வாதி—கோவிந்தசாமி பிள்ளை.

பிரதிவாதி—ராமசாமி பிள்ளை.

சம்பூர்ணம் என்பவள் முதற் பிரதிவாதிக்கு தன் வீட்டை விற்றுச் சில சொத்துக்களையும் கொடுத்து, தன்னைத்தன் ஆயுசுபரியந்தம் காப்பாற்றவேண்டுமென்று பிரதிவாதியிடம் ஒப்பந்தம் செய்துகொண்டாள். பிரதிவாதி மேலே கண்டபடி காப்பாற்றாததினால் தான் கொடுத்த இதர சொத்துக்களை வியாச்சிய மூலம் சுவாதீனப்படுத்திக்கொண்டு மேற்படி சொத்துக்களைத் தனது சகோதரி மகளுக்குக்கொடுத்து வில்சாசனம் செய்வித்தாள். பிறகு வாதியானவன் சம்பூர்ணத்தின் சொத்துக்களுக்காக வியாச்சியம்செய்து டிக்ரிபெற்று பிரதிவாதி வீட்டை உட்படுத்தி ஜப்தி செய்வித்தான். பிரதிவாதி வழக்கிட்டு வீட்டைத் தனக்கு பாத்தியப்பட்டதென்று டிக்ரி பெற்றுக்கொண்டான். வாதியானவன் தன்னுடைய டிக்ரி நிறைவேற்றும்பொருட்டு வீட்டின் கிரய சாசனத்தை ரத்து செய்விக்கக் கோறிக்கொண்டான்.

இதில் முன்சீப் அவர்கள் செய்த தீர்மானம் என்னவென்றால் சம்பூர்ணம் 3 வருஷத்துக்குள்ளாகக்கிரய தஸ்தாவேசை ரத்துசெய்ய வழக்குத்தொடுத்திருக்க வேண்டியது. அப்படிச்செய்யாததினால் வீட்டைப்பற்றி யாதொரு பாத்தியதையும் அவளுக்குச் செல்லாது. ஆகையால் வாதி கொண்டுவந்த வழக்கைக் காலகரணமாய் விட்டபடியால் தள்ளிவிட்டார்.

வாதி சப்கோர்ட்டுக்கு அப்பீல் செய்ததில், மேற்படி கோர்ட்டார், கிரயமே சூதானதென்றும், பணம்ரொக்கமாகக் கொடுக்காததுபற்றிக் கிரயம் செல்லமாட்டாதென்றும், கீழ் கோர்ட்டார் தீர்ப்பை மாற்றிவிட்டார்கள்.

ஐகோர்ட்டாரவர்கள் முன்பாக அப்பீல் வரவே கிரயசாசனத்தில் யாதொரு வஞ்சனையும் நடக்கவில்லை என்றும், சொத்தின்பேரில் பிரவேசிப்பவர் முதல் முதல் கிரயத்தை ரத்துசெய்ய வேணுமென்றும், அவ்விதம் ரத்துசெய்ய இப்பொழுது தொடங்கும் வியாச்சியமானது காலகரணமாய்விட்டதென்றும் கீழ்கோர்ட்டார் தீர்ப்பையே உறுதிப்படுத்திவிட்டார்கள்.

(ஷை சட்ட நிரூபணம் 72-வது பக்கம் பார்க்க.)

சிவில் அப்பீல்.

வாதி—கரிவெங்கிட ரெட்டி.

பிரதிவாதி—கொள்ளு நரசய்ய.

இந்த வியாச்சியத்தில் பிரதிவாதியானவர் ரயில்வே கண்டிராக்ட்வேலைக்கு வேண்டிய பணத்தை வாதியிடமிருந்து மாதம் ஒன்றுக்கு நூற்றுக்கு 1 ரூ. வீதம் வட்டிக்காகப் பெற்றுக்கொள்வதாயும், ரயில்வே கம்பெனியார் தனக்குக் கொடுக்கும் செக்குகளை அப்போதைக்கப்போது வாதிக்குக் கொடுத்து விடுவதாயும் ஒப்பந்தக்கரார் செய்துகொடுத்திருந்தான். இந்தக்கராரின்படி பிரதிவாதியானவன் கம்பெனியாரிடமிருந்து பெற்றுக்கொண்ட 936 ரூபாயின் செக்கைத்தன்னிடம் ஒப்பிக்கவில்லை என்று வாதியானவன் வழக்குக்கொண்டுவந்தான். இதில் வாதியானவன் தனக்குச்செக்கு கிடைக்கவேண்டுமென்றும் இல்லாவிடில் செக்கிற்கண்ட தொகை கிடைக்கவேண்டியதென்றும் கோறிக்கொண்டான்.

பிரதிவாதியானவன் கணக்கு வழக்கு முழுதும் பைசல் செய்யும்படி வாதி வியாச்சியம் தொடுக்கவில்லையென்றும், வாதியானவன் தனக்குக் கிடைக்கவேண்டிய லாபத்தைக் கொடுப்பதாக ஒப்பந்தம் செய்த பிரகாரம் நடக்கவில்லையென்றும், இந்தக்கராரின்படி வேறு விஷயமான ஒரு கூட்டு வியாபாரத்துக்கு முதல் கொடுக்கவில்லையாகையால் கோர்ட்டாருடைய உதவிக்கு அருகதையுள்ளவனல்லவென்றும் வாதித்தான்.

முன்சீப் ஆனவர், பின்னால் வாதிக்கப்பட்ட இரண்டு சங்கதியும் ருசுவாகவில்லையென்றும், வாதியின் பிராது ஒப்புக்கொள்ளத்தக்கதென்றும், வாதிபட்சம் தீர்ப்பு செய்தார்.

பிரதிவாதி சப்கோர்ட்டில் அப்பீல் செய்தான். இந்தக்கோர்ட்டார், இவ்விதமான வழக்கையே ஒப்புக்கொள்ளத்தக்கதல்லவென்று, பிரதிவாதி பக்ஷம் தீர்ப்புச்செய்தார்.

வாதி ஐகோர்ட்டில் அப்பீல் செய்யவே, மேற்படி கோர்ட்டார் செய்த தீர்ப்பாவது:— பங்கு பிரிவினைக்காக வழக்குக்கொண்டுவந்தால் அல்லாமல் வியாச்சியம் ஒப்புக்கொள்ளக்கூடியதல்லவாயினும், வாதியானவன் கேட்டுக்கொண்ட குறிப்பிட்ட நிவர்த்தியை ஏன் அங்கீகரிக்கக்கூடாதென்பது புலப்படவில்லை. கரார்படி பிரதிவாதியானவன் செக்கை வாதிக்குக்கொடுக்கக் கட்டுப்பட்டவனாகிறான். வாதி கண்டிராக்டுக்கு வேண்டிய திரவிய சகாயம் செய்திருக்கிறான். இதற்கு பதிலாகப் பிரதிவாதியை செக்கு கொடுத்துவிடும்படி கட்டுப்படுத்தினது சகசமே. ஆகையால் இவ்வழக்கில் வாதிக்கு அநுகூலம் செய்யாவிடில் வாதியானவன் ஒப்பந்தப்படி மிக்க திரவிய மளிக்கவேண்டிவரும். பிரதிவாதியானவன் வாதிக்குப்பணம் கொடாமலே வழக்கிட நேரிடும். வழக்கில் வாதி ஜயமடைந்தாலும் பிரதிவாதியிடமிருந்து என்ன வசூல்செய்யக்கூடும்? வாதியின் பட்சம் இது விஷயமாக டிக்ரிசெய்யக்கூடாதென்று ஸ்பஷ்டமாக சட்டம்இருந்தாலொழிய வாதிக்கு அநுகூலம்செய்வது யுக்தமானது. ஆகையால் கூட்டு வியாபார விஷய முழுதும் பைசலாகாமல் ஒருபாகம் தீர்ப்புச்செய்யக்கூடாதென்பது பழயரூலாகும். இந்த ரூலுக்கு அடிக்கடி மாறுபாடுகள் ஏற்பட்டு வந்தது. ஆகையால் பிரகிருத விஷயத்திலும் மேற்படி ரூலுக்கு மாறுபாடு செய்வது உசிதமாகக் காண்பதால் முன்சீபின் தீர்ப்பையே ஸ்திரப்படுத்தினார்கள். (மேற்படி நிரூபணம் 76-வது பக்கம் பார்க்க)

சிவில் அப்பீல்.

வாதி—சுப்பராய செட்டி.
பிரதிவாதி—அய்யாசாமி ஐயர்.

வழக்கில் கண்ட பூமியானது கணக்கு சிப்பந்தி இனாம் ஆகிறது. கணக்கு வேலை பார்த்த வெங்கிடசுப்பய்யரென்பவரை டிஸ்மிஸ் செய்து, அவருடைய தாயாதி விசுவநாதய்யரைக் கணக்கு வேலைக்கு நியமித்தார்கள். இவர் இனாம் பூமி மீது டிக்ரிபெற்றும் வெங்கிடசுப்பய்யரிடமிருந்து மேற்படி பூமியை சுவாதீனம் செய்துகொள்ளவில்லை. பிறகு வெங்கிட சுப்பய்யர் இறக்கவே சொத்தானது அவர் மனைவி மாரீபத்தாகிவிட்டது. அக்காலத்தில் சிப்பந்தி விஷயமான சம்மந்தத்தை பூமியினின்றும் சர்க்கார் எடுத்துவிட்டார்கள். பிறகு விதவையானவள் இந்தப்பூமியை, சுப்பராயசெட்டிக்கு விற்றுவிட்டு இரண்டு வருஷத்தில் இறந்து போனாள்.

அய்யாசாமி ஐயர், கீழ் இரண்டு கோர்ட்டிலும் ஜயமடைந்தார். சுப்பராய செட்டி இந்த அப்பீலில், கவர்ன்மெண்டார் பூமியின் சிப்பந்தி

சம்மந்தத்தை விலக்கின காலந்தொட்டு விதவையின் சொந்த பூமியாகச் செய்திருக்கிறார்களென்றும், விற்பனை காலத்தில் அவளுக்குச் சுவாதீன பாத்தியதையாவது இருந்ததென்றும் வாதித்தார்.

கவர்ன்மெண்டார் சிப்பந்தி விலக்கு செய்ததினால், பூமியைத்திருப்பி, சொந்தபூமியாக அநுபவிக்கக் கொடுத்ததாக அர்த்தமாகாது. பூமியானது மற்ற இனாம் பூமிகள் போலல்லாமல், பிரத்தியேக பாத்தியதையுடன் விடப்பட்டது என்று ஆகமாட்டாது. புருஷனுக்கு என்னபாத்தியதை இருந்ததோ அதுதான் விதவைக்கும் பாத்தியம். பட்டா பெற்றுக்கொண்டு அநுபவித்து வந்தாளே தவிரப் பிரத்தியேக பாத்தியதை அவளுக்குண்டாயிருந்ததென்கிற விவாதமே ஏற்படவில்லை. ஆகையால் அப்பீல் தள்வழியாயிருக்கிறது. (மேற்படி நிரூபணம் 86வது பக்கம் பார்க்கவும்)

சிவில் அப்பீல்.

அண்ணன் தம்பிகள் பங்கிட்டுக்கொண்ட சொத்துகள், அண்ணனோ தம்பியோ இறந்துபோய் சந்ததியில்லாதது பற்றி ஜீவித்திருந்தவரைச் சேர்ந்திருக்க, அவர் அந்த சொத்துக்களை தானமாயாவது, வில்லின்மேலாவது, வேறொருவர்க்குக் கொடுத்துவிட்டால், அவருடைய சந்ததியார் மேற்படி சொத்துக்களைத் தங்களுடைய பிதரார்ஜிதமென்று வழக்கிடல் பொருந்தாது, மேற்படி சொத்துக்கள் பிதரார்ஜிதமாகவுமாட்டாது என்பது. (மேற்படி நிரூபணம் 88-வது பக்கம் பார்க்க.)

கிருமினல் அப்பீல்.

வீரண்ணனென்ற ஒருவன் பிரத்தியேக சொத்தாளியாகி சந்ததியின்றி இறந்துபோனான். சொத்தானது அவன் பெண்சாதி அநுபவத்தில் வந்தது. அப்பொழுது வீரண்ணனுடைய ஞாதியாகிய ராமனென்பவன் தான் வீரண்ணனுடைய சுவீகார மகனென்று சொத்தை வேறொருவனுக்கு சுவாதீன போக்கியம் செய்யபத்தரமொன்றெழுதிவைத்தான். இது பொய்ப்பத்தரமாகாதென்று செஷன் ஜட்ஜி கேசைத்தள்ளிவிட்டார்.

விதவையானவள் அப்பீல் செய்யவே, ஒரு ஜட்ஜி பொய்ப்பத்தரமாகாதென்றார். மற்றொரு ஜட்ஜி ஆகுமென்றார். இவ்வித்தியாசத்தினால் மற்றொரு ஜட்ஜி முன்பாக விசாரணை செய்யப்பட்டது.

சுவீகாரம் ருசுவாகவில்லை. பத்திரத்தில் ராமன் தன் தகப்பன் பெயர் எழுதாமற் கையெழுத்து செய்திருந்தாலும், பத்திரத்தில் வீரண்ணன் மகனென்று கண்டிருக்கிறது. ஆகையால் பொய்ப் பத்திரமென்று அபிப்பிராயப்படலாம். ஆனால் வீரண்ணன் மகனாகிய ஒருவன் கையெழுத்து செய்தானென அபிப்பிராயப்படும்படியாகப் பொய்யாக ராமன் தன்தாவேசு செய்தானென்று சொல்ல இடமில்லை. ராமன் தான் தஸ்தாவேசு செய்தவன். இதை லேவாதேவி சாட்சி ஒப்புக்கொள்கிறான். தவிர மேற்படி சாட்சிக்கு ராமனையும் அவன் குடும்பத்தாரையும் நன்றாகத் தெரியும். இராமன், தனக்கு பாத்தியப்பட்ட சொத்தென்று, தன் பாத்தியதையை ஸ்தாபிக்கும்படியாகச் செய்த தஸ்தாவேசேயொழிய, போலிக்கையெழுத்து செய்யவில்லை என்று வீரண்ணன் மனைவி அப்பீலானது தள்வழியாயது.

(மேற்படி நிரூபணம் 90வது பக்கம் பார்க்க.)

News and Notes.

வர்த்தமானங்கள்.

பியூடாபெஸ்டு என்கிற நகர்க்கடுத்த 'பாயிஸ்வில்லி' என்னும் ஏரியில் 5, 6 வயதுள்ள ஒரு பையன் ஏரியில் நீந்திக்கொண்டிருந்த அன்ன பக்ஷிகளுக்கு ரொட்டித்துண்டுகளை எறிந்துகொண்டிருந்ததாயும், கால்தப்பி ஏரியில் விழுந்து மூழ்கப்போம் சமயத்தில் ஒருபெரிய அன்னபக்ஷி அருகில் நீந்திப்போனதும், சிறுவன் பட்சியின் கழுத்தைப் பற்றிக்கொள்ளவே, மேற்படி பக்ஷியானது குழந்தையைக் கொண்டுவந்து கரை சேர்த்துவிட்டு மறுபடி நீந்திப்போய்விட்டதாயும் சில ஆங்கிலேயபத்திரிகைகள் கூறுகின்றன.

M. S. 3—7—09.

கல்கத்தாவில் ஆங்கிலேய பத்திரிகைமேல் மான நஷ்ட குற்றம் சார்த்தப்பட்டு 15000 ரூ. டிக்ரி விதிக்கப்பட்டதாக பத்திரிகைகளில் நோக்க "சுவயம் காரியம் சுவயம் பத்திரம்" என்னும் பழமொழியை சதா சிந்தனையில் எல்லோரும் காட்டவேண்டுமென்பது மறக்கக்கூடியதல்ல.

சீமையில் ஒரு துரை மகனை இந்து வித்தியார்த்தி ஒருவன் சுட்டுக்கொலை செய்துவிட்டான் என்னும் மகாவிசனகரமான வர்த்தமானமானது 'இந்து' என்னும் வகுப்பிற்கே பழிமொழியாம். ஆகையால்

"கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா வுயிருந் தொழும்"

என்னும் நீதிவாக்கியத்தை எல்லாரும் விரதமாக அநுஷ்டிக்கவும்.

ஆனிபெஸாண்டு மாது சிரோன்மணி, இப்பொழுது இருக்கும் சர்வ கலாசாலை போலல்லாமல் நூதனமான ஒன்று நமது தேசத்துக்கு வேண்டியதென்றும், அது வெகுமத சம்மதமாக இருக்கவேண்டுமென்றும், அதில் சற்குணம் தத்வம் இத்தியாதிகளை மாணுக்கருக்கு போதிக்கப்படவேண்டுமென்றும், இந்தியா பூர்வ காலத்துத் தத்வம், சரித்திரம், கல்வி இவற்றை உதகரிக்க வேண்டிய இங்கிலீஷ் பாஷா இயல்பு, சாஸ்திரம் தெளிவாகக் கற்பிக்கப்படவேண்டுமென்றும், நானுவித தொழிற் கல்வி போதனை செய்யப்படவேண்டுமென்றும், அன்பு கூர்ந்து வேண்டின முயற்சி செய்துவருவதானது மங்களகரமாக முடியுமென்று எல்லாவரும் பிரார்த்திக்கின்றனர்.

அமெரிக்கா தேசத்தில் ஓர்வகைச் செடியிருந்து மெழுகு கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறதென்றும், அது தேன் மெழுகைவிட விலை சரசமானதென்றும், நேர்த்தியான மெழுகு வர்த்திகள் செய்யவும், ஒளஷதாதிகளுக்கும் உபயோமாகுமென்றும் வர்த்தமானம்.

சில காலங்களாக ரயில்வண்டி விபத்துகள் நேரிடுவதைவதைப் பற்றியும், வண்டிகள் சரிவர நடத்ாததுபற்றியும், பிரயாணிகளும், வியாபாரிகளும் வருந்துகிறார்கள்.

தந்திகளின்றி அநேக மைல் தூரம் மின்சார விளக்குவைக்கக்கூடிய முறை அமெரிக்கா தேசத்தில் டாக்டர் மில்னர் என்பவர் கண்டுபிடித்திருப்பதாயும், அதை அவர் வெளியிடுகிறதில்லை என்றும் வர்த்தமானம்.

கோயமுத்தூர் காலேஜில் ஒருசபை கூடிற்று. இச்சபையில் மேடி காலேஜை நல்நிலைமை நீக்கொண்டுவரவேண்டுமென்ற உத்தம அபிப்ராயத்தினல், நாஷனல் காலேஜ் விஷயமாகச் சேகரமாம் திரவியத்தை உதவுவதாகவும். இரு கமிட்டியாருளும் 6, 6 மெம்பர்களை நூதன கமிட்டிக்கு நியமிக்கவேண்டுமென்றும், ஐரோப்பியர்களில் 3 மெம்பர்களை நியமிக்கவேண்டுமென்றும், ஆலோசிக்கப்பட்டது. இது உத்தமமானதென யாவரும் ஒப்புக்கொள்கிறார்கள். ஆனல் இப்பொழுதிருக்கும் செக்ரடெரியார் அவர்களுக்கு இதுமுழுதும் சம்மதமில்லையென்றும் கேள்விப்படுகிறோம். இதன் காரணமென்னவோ அறியோம். ஸ்கூல்இன்ஸ்பெக்டாயிருந்த ராகோஜிராயரவர்கள் இக்காலேஜின் விஷயமாக மேற்கண்ட முயற்சியைச் செய்துவருவதினல், அவர் மாணுக்கர்களுடைய நலத்தையும், காலேஜினது யோக க்ஷேமத்தையும் கருதியிருக்கின்றனர் என்பது 'கைகண்ட கனிபோல்' விளங்குகிறது. இது பிரசம்சமாகவும் இருக்கிறது. ஆகையால் இவ்வாலோசனை இனிது முடியவேண்டுமென்று எல்லாவரும் பிரார்த்திக்கின்றனர்.

நமது காலேஜ் பிரின்ஸிபாலாகிய மிஸ்டர் E. H. எலியட் துரையவர்கள் சரித்திர விஷயமாக ஒரு பிரசங்கம் செய்தார். நமது ஜில்லா கலெக்டர் மிஸ்டர் A. L. வைபர்ட் துரையவர்கள் அக்கிராசனம் வகித்தார். மிஸ்டர் எலியட் துரையவாகள் சரிவரப்பிரசிங்கித்து, மாணுக்கர்கள் நன்னடைக்கை யுள்ளவர்களாயிருக்கவேண்டுமென்றும், கவர்ன்மெண்டார்க்குக் கீழமைதியுடன் நடந்துகொள்ளவேண்டுமென்றும் வற்புறுத்தி, மாணுக்கரின் அபிவிருத்தியை மனப்பூர்வமாகக் கருதிப் பிரசங்கித்தார்.

நமது முன்சிபாலிட சேர்மன் ஆகிய மகா-௱-ஸ்ரீ ராவ் பகதூர் ஏ. டி. திருவேங்கிடசாமி முதலியார் அவர்கள் சேர்மன் வேலையை ராஜினமாக் கொடுத்துவிட்டதாகக் கேள்வி. தவிர செக்ரடெரிக்குப்பதிலாக, சம்பளம் கொடுத்து சேர்மென் ஒருவரையே நியமிக்கவேண்டுமென்பதும் முன்சிபாலிடியாரின் நோக்கமெனவுங் கேள்வி.

காலநிலை — சோளைக்காற்று பலமாயடிக்கிறது. பிளேக் வியர்தி அதிகரித்து வருகிறது. காலராவும் உண்டு. தெலுங்குப்பிராமணுள் வீதியிலும், தாமஸ்வீதியிலும் எலிகள் விழுவதாக வதந்தி. இரண்டொரு பிளேக் கேசுமாயிருக்கிறது. மொத்தத்தில் கேசுகள் அதிகம். ஜனங்கள் மிகவும் பீதியடைந்திருக்கிறார்கள்.

சத்தியமங்கலம் தாலூகாவில் இரண்டு மூன்று வள்ளுவர்கள் ஒருவனிடம் சென்று புதையல் எடுத்துக் கொடுப்பதாக ஏமாற்றி 7 நாள் பூசைசெய்யவேண்டுமென்று போதித்து நாள் ஒன்றுக்கு ஒவ்வொரு ஆட்டுக்கிடாபெற்று, கடைசியாக ஒருவனை "காட்டேரி" வேஷம் தரிக்கச்செய்து தூரத்தில் நிறுத்தி, இன்னும் 7 நாள் பூசை முடிக்கவேண்டுமென்று சொல்லச்செய்து ஏமாற்றவே, சந்தேகத்தின்மேல் வெளியாகி, டிப்டி மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டார் அவர்கள் முன்பாக மோசடி கேஸ் நடந்துவருகிறது.

ஜூலை 14-உ பாகிய இன்று நமது மகாகனம் பொருந்திய கவர்னர்துரையவர்கள் அக்ரிகல்சர் காலேஜைத்திறந்து ஜனங்களடைபக்கூடியபயனை விளக்கி டவுனுக்குத் தண்ணீர் சப்ளை விஷயம் யோசிப்பதாகவும் கூறினர்.

NOTICE.

The Coimbatore Friends' Association (Ld.,) Printers.

கோயமுத்தூர் ஜில்லாவில் பிரண்ட்ஸ் அசோஸியேஷன் அச்சுக்கூடத்தில் சேர்ந்திருக்கும் கிராமாதிகாரிகளுக்கு தெரியப்படுத்துவது.

நீங்கள் இவ்வச்சாபீசில் கட்டியிருக்கும்படியான ரூபாயிக்கு கவர்மெண்டாரால் உங்களுக்குச் சப்ளை செய்துவரும் காகிதங்களைப் பெற்றுக்கொண்டு அச்சிட்டபாரங்களை இதுவரை சப்ளை செய்துவந்தது. இப்போது கவர்ன்மெண்டாரே அச்சிட்டபாரங்களை சப்ளை செய்து வருவதாக மகா-௱-ஸ்ரீ நமது கலெக்டர்துரை அவர்களிடமிருந்து உத்திரவு சாதராயிருப்பதுடன் உங்களுக்கு சப்ளை செய்துவரும் காகிதங்களை இந்த வருஷம் முதல் இவ்வச்சாபீசுக்கு கொடுக்கவில்லை. ஆதலால் நீங்கள் உங்களிட ரூபாய்க்கு இக்கம்பெனியார் 2-2-09ல் அனுப்பியிருக்கும் **A.** பாரத்தை பூர்த்திசெய்து ஜூலைமாதம் 31-உக்கு மேல்படி கம்பெனியின் மானேஜருக்கு அனுப்பிக்கொடுக்கவேண்டியது. மேற்படி A பாரம் கிடைத்திராவிட்டால் மானேஜருக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளவேண்டியது.

G. அனுமந்தரூவ்,
மானேஜர்.

The Coimbatore Friends' Association (Limi'ed.) Printers.

கோயமுத்தூர் பிரண்ட்ஸ் அசோஸியேஷன் (லிமிடெட்.) அச்சுயந்திரசாலை.

இக்கம்பெனியின் மூலதனம் ரூ. (20,000) பங்கு 1க்கு 5-ரூபாய் வீதம் (4000) பங்குகளாகப்பிரித்து, இந்தியன் கம்பினீஸ் 1882 வருஷத்திய 6-வது ஆக்டுப்படி 1908 வருஷம் மேமாதத்தில் ரிஜிஸ்தர் செய்து நடத்தப்பட்டு வருகிறது.

இக்கம்பெனியில் இங்கிலிஷ் தமிழ் இரண்டு பாஷைகளில், நேர்த்தியாய் பல கலர்களில் அச்சிடுவதும் கில்ட்செய்வதும்பாங்குகளுக்கும்மண்டிகளுக்கும் கணக்குப்புத்தகங்கள் முதலானதும் தயார்செய்து தோல்காலிகோமுதலிய பயிண்டும் செய்யப்படும். இப்போது அனேக பங்குகள் சேர்ந்திருக்கிறது, கொஞ்சம் பங்குகள்தான் பாக்கியிருக்கிறது, இஷ்டமுள்ளவர்கள் டை கம்பெனியின் மானேஜருக்கு எழுதி அப்ளிகேஷன் பாரங்கள் தருவித்துக்கொள்ளலாம் ரூல்ஸ் புக்குவேண்டுவோர் 4 அணா அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

இக்கம்பெனியானது நிர்வாகசபையார் அவர்களால் நடத்தப்பட்டுவருகிறது. 1908 வருஷம் மே மாசம்முதல் 1908 வருஷம் டிசம்பர் மாசம் 31-தேதிவரை கூடிய 8 மாதத்திற்கு மாதம் 1க்கு 100க்கு ரூ. 3-9-5வீதம் லாபம்தேறியிருக்கிறது.

இதன் பிராஞ்சு ஆபீஸ் திருப்பூரில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது.

ஜி. அனுமந்தருவ்,
மானேஜர்.

விளம்பரம்.

☞ இதனால் சகலமான கனவான்களுக்கும் தெரியப்படுத்துவது யாதெனில்,

கோயமுத்தூர் இரங்கேகவுண்டன்வீதி (சின்னக்கடைவீதி) மேல்புறம் சிரேணியில் 487, 488 நெ. கதவிலக்கமிட்ட மெத்தைக்கட்டடத்தில் புதியதாக ஒரு கரூர் ஜவுளிக்கடையில் சேலம், ஜலகண்டாபுரம், தஞ்சாவூர், கும்பகோணம், ராசிபுரம், பவானி, நரசிங்கன்பேட்டை தாராபுரம், குற்றாலம், கொறநாடு, அய்யம்பேட்டை, காஞ்சீபுரம், ஆரணி, மதுரை, உப்பாடை, சாக்கிநாடா, நெல்லூர், சென்னை, பனாரஸ், உள்ளூர் முதலிய இடங்களில் தயாராகும் முதல்தரமான ஜவுளி தினுசுகளை சுவல்ப லாபத்திற்கு கரூர் விலைக்கு விற்கப்படும்.

மேற்படி கடையில் விற்கும்படியான சரக்குகள் நயமாயும் கெட்டி சாயமுள்ளதாயுமிருக்கும். கோறும் சரக்குகளில் வித்தியாசமும் மாறுபாடுமில்லாமல் ..ற்கப்படும். எங்கள் கடையிலிருக்கும் சரக்குகளை எங்கள் ஏஜண்டுகள் மேற்படி இடங்களுக்குச் சென்று எங்கள் கடைக்கென்றே தயார்செய்யப்பட்டிருப்பதால் நெசவு அழுத்தமாகவும் சரக்குகள் திடமாமவும் விலை சரசமாகவுமிருக்கின்றன. எல்லாருடைய அநுகூலத்தின்பொருட்டே யாவர்க்கும் ஒரே விலையாக சுவல்ப லாபத்திற்கு விற்கவேண்டுமென்பதே எங்கள் முக்கிய கருத்து. இன்னும் வேண்டிய விஷயங்களுக்கு எங்கள் கடையின் ஏஜண்டுகளாகிய மகா-ா-ஸ்ரீ K. தேவதத்தய்யர், B. வரதாராஜுலு செட்டியார் இவர்களிடத்தில் நேரில் கேட்டுத்தெரிந்துகொள்ளலாம்.''

☞ நல்ல முதல்தரமான கஸ்தூரியும் விற்கப்படும்.

V. R. K. & Co.,

Cloth Merchants & Commission agents,

Coimbatore and Vellakkener.

இவ்வச்சாபீசில் விற்பனைப்புத்தகங்கள்.

				ரூ.	அ.	பை.
தேடச்சிறந்த தெரிசனம் (கிரேர்ட்டயமகவந்தாதி.)	(By Editor)	...	...	0	1	6
நன்னூல்யாப்பதிகாரம்	Do	...	...	0	3	6
சிவமகாபுராணம். (வேலாயுதபண்டிதரால்)		...	...	3	0	0
சிவில் புரோசீஜர் கோட். (புதிது)		...	...	0	12	0

விஞ்ஞாபனம்.

எமது அருமை நேயரே! இச்சஞ்சிகை தொடங்கிய உத்தேசமெல்லாம் தங்களைப்போல்பவர், எமது நுண்மையறிவிற்கெட்டியதிரட்டி வரைந்துள பற்றை இனிதிற்கொண்டு, ரிஷிப்ரோக்தமாங் கதை பலவும் வரைந்த விடத்து நேர்ந்த பிழையை மன்னித்து, தெய்வீகமான அஷ்டி கதைகளை அதிசயோக்தியின்றி தர்மார்த்தகாம மோக்ஷமெனும் புருஷார்த்தங்களை எல்லாவருமடையும் பொருட்டு, வனப்பெட்டினின் வாய்ந்ததமிழ்க்கவியால் எழுதத்துணிந்த எமதுபிரயத்நம் சபலமாக, இந்தச்சஞ்சிகையைத்தருவிக்கவும், தங்களுடைய சிநேகிதர் பலர்க்குந்தெரிவித்து அவரைப்பெறுமாறு செய்யவும், வினயபூர்வமாய்ப்பிரார்த்திக்கின்றனம்.

G. HANUMANTHA RAO & Co.,

COIMBATORE.

The Coimbatore Friends' Association (Limited) Printers.

THE WORLD.

REGISTERED. M. 823.

பிரபஞ்சம்.

பிரபஞ்ச தர்மம், நடவடிக்கை, சட்டம், வித்தியா விநோத முதலிய வற்றைப்பற்றிய ஓர் மாதாந்திரத் தமிழ்ச்சஞ்சிகை.

ஜி. ஹனுமந்தராவ்,
பத்திராதிபர். (Proprietor.)

கோயமுத்தூர் பத்மநாப ஐயர்,
(*Editor & Publisher.*) பிரசுரகர்த்தா.

வருஷ சந்தா ரூ. 2 4
6 மாதத்திற்கு ... 1 2
பிரதிசஞ்சிகை ... 0 3
வெளிநாட்டுத் தபாற் கூலி பிரத்தியேகம்.

கலி 5011.
சௌமிய வருஷம் ஆவணி மாசம்.
AUGUST 1909.

புஸ்தகம் 1.
சஞ்சிகை 3.

விஷய சூசிகா.	பக்கம்.	INDEX.	PAGE.
1. இலக்கணநூல்	66	1. Tamil Grammar ...	66
2. ஸ்ரீமத்வால்மீகி ராமாயணம் ...	69	2. Ramayana(Poetical translation)	69
3. கீசகவதம் (நாடகம்) ...	73	3. End of Kichakas (A Drama)	73
4. லௌகீக தந்திரதர்மம் ...	78	4. Political Economy ...	78
5. சுவப்நாவஸ்தை	82	5. A Dream	82
6. லோகோபகாரிகள் (விநோதகதை)	84	6. The Philanthrophists (A Novel)	84
7. க்ளைவ் பிரபுவின் சரித்திரம் ...	89	7. Essays(Macaulay's)on Lord Clive	89
8. வீரமார்த்தாண்ட தேவர் ...	91	8. Life of Veera Marthanda Thevar	91
9. சட்ட நிரூபண விருத்தாந்தம்	93	9. Legal notes on Law Reports	93
10. வர்த்தமானம், விளம்பரம் ...	95	10 News & Advertisements	95

G. HANUMANTHA RAO & Co.,
28, Karuppa Goundan's Street,
COIMBATORE.
26—8—09.

THE WORLD.

REGISTERED. M. 823.

பிரபஞ்சம்.

பிரபஞ்ச தர்மம், நடவடிக்கை, சட்டம், வித்தியா விநோத முதலிய
வற்றைப்பற்றிய ஓர் மாதாந்திரத் தமிழ்ச்சஞ்சிகை.

ஜி. ஹநுமந்தராவ்,
பத்திராதிபர்.

கோயமுத்தூர் பத்மநாப ஐயர்,
(*Editor & Publisher.*) பிரசுரகர்த்தா.

வருஷ சந்தா ரூ. 2 4 6 மாதத்திற்கு ... 1 2 பிரதிசஞ்சிகை ... 0 3 வெளிநாட்டுத் தபாற் கூலி பிரத்தியேகம்.	கலி 5011. சௌமிய வருஷம் ஆவணி மாசம். AUGUST 1909.	புஸ்தகம் 1. சஞ்சிகை 3.

எமது அருமைநேயரே! "கல்வி கரையில, கற்பவர் நாட்சில" என்னும் பழமொழிப்படி, யாம்கொண்ட மானிடதேகம் "நஹிப்பிரமாணம் ஜந்தூநாம் உத்தர க்ஷண ஜீவனே" என்பதாம். அந்த க்ஷணநேரத்திலும், பசுதி, பால விருத்தத் தன்மைகளிலும், போய்விடுகிறது. எதாவதுமிச் சமானால், வியாதியாலும் துக்கத்தாலும், உப ஜீவனார்த்தம் சேவகா விருத்தியாலும், பங்கீடு செய்யப்படுகிறது. ஆகையால், சமுத்திரத்தின் அலைமேற்பட்ட துரும்புபோல, ஜீவன் தத்தளிக்கையில். 'சுகம்' 'சுகம்' என்பதை எப்படி அடையலாம்? கவலையை எப்படி நீக்கலாம்? "தர்மமே ஜயம்" என்றபடி, தர்மத்தாலே ஜய மடையலாம். தர்மமாவது என்ன? "மனத்துக் கண் மாசிலனாத லனைத்தறம்" என்றமையால், மனதில் கன்மிஷமில்லாமையே தர்மம். கன்மிஷத்தை நீக்க வல்லது என்ன? அறிவென்பதே. அறிவு எவ்வாறுவரும்? "கல்வியறிவே யறிவு" என்றமையால், கல்வியே அறிவிற்குக்காரணம். "உற்றகலை மடந்தையோதுகிறாள்" என்றதனால் கல்விக்குக்கங்குகரையில்லை. கல்வியும், "புண்ணிய கர்ம விசேஷேண" என்றபடி, சத்கர்ம பலப்ராப்தியாம். புண்ணியமோ? "சஹவாசாயா புண்ணியகுணா பவந்தி" என்றபடி, சத்சங்கஏதுவாம். இதற்குப்பிரமாணமென்னவென்றால், "கற்றாரைக்கற்றாரே காமுறுவர்" என்பதாம். திருஷ்டாந்த நிமித்தம், மதுரைத்தமிழ்ச் சங்கத்தில் "பாலபண்டித" பட்டம்பெற்ற அஷ்டாவதானம் சேஷாசலக்கவிராயர் வேண்டுகோளின்படி, அவர் எழுதியனுப்பின கவியை இதில் பிரசுரித்துளோம் :—

“சுரபஞ்ச தருநிழற் றேன்றிடினு
மீசனடி தொழாத பேர்கள்
கரபஞ்சந் தனிலுழலும் நரபஞ்ச
மர்களதைக் கடுப்பந் கோவைச்
சரபஞ்சர்த் தூலமெனும் பதுமநாபன்
அனுமன் றன்பாற் றேன்றும்
பிரபஞ்ச முணராதார் மரபஞ்சம்
தமிழுணர்ந்தும் பேதையாமே.”

“சார்த்தூலம்=சர்த்தூலம் (விகாரம்); மரபு+அஞ்சு+அம்+தமிழ்ப்பிரபஞ்சம் = குல பாஷைகள்கண்டு பயப்படும், இலக்கணம் வாய்ந்த தமிழ்நடைப்பிரபஞ்சம்” என்று சிறப்பித்தது காரியமல்ல. இவரும், இவர்போன்ற மற்ற மகான்களும், பத்திராதிபர்களும், பாஷாவைபவ இலக்கண விலக்கியங்களை இச்சஞ்சிகைவழியாக வெளியிட்டு, “அம்மை யழகு தொன்மைதோல் விருந் தியைபு புலனிழை பெனவனப்பெட்டும்” வாய்ந்த தமிழாந் தென்மொழியைச் சிறப்பிக்க வேண்டுவம்.

I. இலக்கண நூல்.

(2-வது சஞ்சிகை 34-வது பக்கத்தொடர்ச்சி).

“குற்றம் பார்க்கிற் சுற்றமில்லை.” ஆகையால், யாம் சுவாமிநாத தேசிகர் மதம்படக்கூறினரென்ன, சிவஞான சுவாமிகள் கூறினரென்ன வருவழியும், இருவர் கொள்கையும் ஒன்றெனவிளங்க, இலக்கணக்கொத்தின் ஏழாவது சூத்ரவிசேஷத்தில், “எளியவிதி” “அரியவிதி” எனும் பகுப்பில்,— “உருவெழுத்தெனவும், ஒலியெழுத்தெனவும், உணர்வெழுத்தெனவும், தன்மையெழுத்தெனவும், பிறவும்” சுட்டிப், “பொருள் கூறின் உவமேயத்தோடு மாறுபடும்;” “குற்றப்படாமற் பொருள் கூறுதலரிதே;” “கூறினுங் கொள்ளுதலரிதே” என்றதனாலும், உணரலாயிற்று இவ்விருவர் கொள்கையும், விரிக்கிற் பெருகும். ஆகலான், விரிவஞ்சி விடுத்தாம். இனி, நூல் தொடங்குதும். “பழயன கழிதலும், புதியன புகுதலும், வழுவல” என்பது, ஆங்காங்கு உரையிற் காண்க.

(பாயிரமுற்றும்)

எழுத்தியல்.

1. மலர்நிகர் மாதவன் மலர்தரு மரபின் இலக்கண நூலை யியம்புவன் முறையே.

(இசன்பொருள்) சகல கலைகளுங் கற்கத்தொடங்க, ஹரி: ஓம்! ஹரி: ஓம்! எனத்தொடங்கலே மரபாகலின், காயாமலரின் நிறத்தைப்போல் ரூபலாவணியமும், அதன் மணம்போன்ற சாத்விக குணமும் உடைய, ஸ்ரீமந் நாராயண மூர்த்தியை, மலர்தரு “ஹிரண்யப்பிரஹ்லாத நாரசிம்ஹ” திருஷ்டாந்தமாகத், துதிக்கும், மரபின்=“ஹரி: ஓம்! ஹரி: ஓம்! அக்நிமீளே புரோஹிதம்” என ருக்வேதமும், “ஹரி: ஓம்! ஹரி: ஓம்! இஷேத்வா ஊர்ஜேத்வா” என எஜுர்வேதமும், “ஹரி: ஓம்! ஹரி: ஓம்! அக்ந ஆயாஹி பீதயே” என் சாமவேதமும், “ஹரி: ஓம்! ஹரி: ஓம்! சன்னோ தேவிரபிஷ்டையே” என அதர்வண வேதமும், தொடங்கும் ஆரிட சம்பிரதாயத்தின், முறையே=முறையாக, இலக்கண நூலை=லக்ஷண நூலான வியாகரண சாஸ்திரத்தை, இயம்புவன்=சொல்வேன்,

என்பது பிரார்த்தனை. “பூவண்ணம் பூவின் மணம்போல மெய்ப்போதவின்பமாவண்ணமெய் கொண்டவன்” என்றபடி, மா=பெருமைகொண்ட, தவன்=தபசியாகிய ஈசுவரனனவர், மலர்தரு=திருவாய்மலர்ந்தருளிய, மரபின்= “அ இ உண், ருலுக், ஏ ஓங்” என்னும் மாகேசுவர சூத்திர நாதப்பிரம்ம நிதானத்தின், முறையே= கிரமமாக, இலக்கண நூலை இயம்புவன்=சப்த லக்ஷண சாஸ்திரத்தைச் சொல்வன், என்றவாறு. “மலர்நிகர் மாதவன் மலர்தருமரபின் இலக்கண நூல்” எனச்சிறப்பித்ததனால், “விராட்” “சுவராட்” சுவபாவ நியாயம் போந்த பொருளாம். “முறையே” என்றமையான், ‘வழிநூல்’ எனும் மதம்படாது. “முதல்வழி சார்பெனநூன் மூன்றுமே” என்னின், காலா நந்வயநியாய நிரூபணமாக, அனைத்தும் ஈசுவர சங்கற்பமாகையால், மேலைபநூன் முடிபுவரையறை, போலி என்க. “இலக்கணம்” என்றதில், முன்னும் பின்னும்புடையும் ஆகிய நூன்முடிபனைத்தும், ஆண்டேஅமைந்துளதான், மேலைபவரையறை, தார்க்கிகஏதுவின், வழூஉ வென மறுக்க. மாதவற்கும் மரபுண்டோ? என்னின், மாதவனே மலர்தரும் எல்லையிலான் ஆகலின், சிருஷ்டியும் திதியும், முடிபும் விளங்கும், அலகிலா மரபினன் என்க. ஆகவே, நூன்முடிபு, நியாயம், பிரமாணம், தர்க்கம், வைசேஷிகம் முதலியவாற்றான் குறைபடாதாயது உணரற்பாற்று.

2. இச்சையியம்ப வெழுமொலி யெழுத்தம் [தம்
எழுத்த தம்முத னம்மிற முப்பதாம்.

(இ-ள்) இச்சை=விருப்பத்தை, இயம்ப=சொல்ல, எழும்=உற்பத்தியாகிற, ஒலி=வாயுவினது, எழுத்தம்=சப்தமானது, எழுத்து=எழுத்தாகும்; அது=அந்த எழுத்தானது, அமுதல்=அகரமுதலாக, னஇற=னகரமுடிய, முப்பதாம்=முப்பது எனும் தொகைமைத்தாம், என்றவாறு. ‘எழுத்தம்’ ‘எழுத்து’ என ஆயதற்கு இலக்கணம், பாயிரத்துட் காண்க. இனி, எழுத்தினை “உருவேயுணர்வே யொலியே தன்மை, யென வீரெழுத்துமீரிரு பகுதியே” என, நான்காப் பகுத்துக்கூறுதன், மயங்க வைத்தலென மறுத்தாம். உணர்விற்றன்மையும், தன்மையின் ஒலியும், ஒலியுட்கொள உருவமும், வருதல் முறையாம். இவற்றுள் உணர்வே முதன்மையாம். உணர்வும் இச்சா சாபல்யமாம். இச்சாபல்யம், யா=எது, மா= இல்லையோ, சா=அது மா=‘மாயா’ அல்லது ‘மாயை’ என்னும், ‘அநாத்திய வித்யா’ வாசனையால், “சங்காப்,பியசங்காப்,யுபயம்” ஆக, பாதிக்கப்பட்டு வருவதால், இச்சையே எழுத்தெனும் சப்ததத்வமாம். இச்சைகாலும், கிராஹ்யம் அரையும், முயற்சி முக்காலும், கிளத்தல் ஒன்றுமாக, “உன்னல்காலே-ஊன்றலரையே-முறுக்கல் முக்கால்-விடுத்தலொன்றே” என, நொடிக்குங்காலும், நவலுங்காலும், வரையுங்காலும், மாத்திரா வரையறை அமைந்ததறிக. “இயம்ப” என்றமையால், இயல், இயம், பரதபாவமாக என்ற விற்பத்தியறிக. ‘எழுத்துமொலி’ என்னது ‘எழுமொலி’ என்றமையான், “சப்தக்கிராஹ்ய நாதபிந்து திருசியாதிருசிய” நியாயம்பற்றி என்க. ‘இச்சையியம்ப வெழுமொலி எழுத்தம்’ என்றமையான், முற்கு இருமல் முதலிய, எழுத்தாகாவென்க. அது என எடுத்து, அகரமுதல் னகர மிறுதியாக எனவிரித்து, முப்பதெனத் தொகையொருமைப்படுத்தி முடித்தாம் என்க. ‘முப்பதாம்’ எனவே, ‘முப்பதின் மிக்கும் ஆம்’ என விற்பத்திசெய்யின், “உயிர்மெய்யாய்தமுயி

ரள பொற்றள-பஃகிப இ உ ஐ ஔ மஃகான்-ற னிங்லே பத்துஞ்சார்பெழுத்தாகும்.'' எனச்சார் பெழுத்து, மாத்திரா காரியம்பற்றிச் சிறப்பில வென மறுத்தாம் என்க. ஏனெனில் உயிர்மெய் க்கு உயிரே மாத்திரையாம்; குறுக்கமும் நீட்ட மும், இலக்கியப்பிராகிருத பாவமேயாம்; கஃசு, பஃறலே, இத்தியாதிஉதாரணங்களில், ஃ என்னும் ஆய்தவெழுத்து, கேவலம் புள்ளிவடிவாயினும், மாத்திரை முறையான் இலக்கியத்தில் அலகுபெ றுமையாலும், சப்த நிதானத்திலும், கஃ, பஃ, என, முன்னெழுத்தோடேயே அசைத்தலாலும், பிரயோஜன வைபவத்தில் அங்காந்தலளியைப் பிரம்மரந்திரவழி யுய்க்கவேயாகலானும், தன் முயற்சியாற் கிளராமையாலும், எழுத்தேயன்றெ ன மறுத்தாம். பின்னையென்னெனின், உயிர்வி யஞ்ஞனம் என்றே ஒழித்தாம் என்க.

3. இயல்பினும் விதியினு மெடுத்தும் ப [டுத்தும்
வன்மையு மென்மையு மிடைமையுஞ் [சால
இயங்குவ வுயிரே யியங்கா மெய்யே
இயக்கிய வழியே யிரண்டு மாமே.

இதன் பொருள் விரிந்துளது. இயல்பின் என்றது, மரபினல் எனவும், விதியின் என்றது, செய்யுட்பால் எனவும், நவரசபாவமாய் எனவும், எடுத்தும் படுத்தும் என்றது ஆரிடம், இசை, பரதம் ஆகிய யிவற்றினிடம் எனவும், கொள்க. ஞானமில்லாது ஞேயமிலேபாகையான், உயிரிலா து மெய்யியங்காவென்க. இயக்கிய என்றது, மெய்யோடு உயிர்கூட்டியவிடத்து, என்க. இர ண்டுமாமே? என, வினுபவழி, மாத்திராகார ணம் உயிரே என்க.

4. அஆ இஈ உஊ எஏ
அங்காந் திளித்திதழ் குவிந்து மெடுத் [தும்
ஐயங் காந்திளி யடக்குபு வழியும்
ஒஓ வுயர்ந்தௌ விதழ்குவி வடக்கியும்
இயல்பிற் றிரியா மிடற்றெலி யுயிரே.

5. அஇ உம்முத லோடிணை எஒ
யவமெய் யவ்வழி ஐஔ வென்ப.

6. அஇ உஎ ஒவ்வெனு மைந்தும்
ஓரள பிசைக்குங் குற்றெழுத் தென்ப.
7. ஆஈ ஊஏ ஐஓ ஔவேழ்
ஈரள பிசைக்கும் நெட்டெழுத் தென்ப.

8. கசடத பறவலி ஙஞணன மனமெலி
யரலவ ழள இடை யுரமே நாசி
மிடறிட மாக வலிமெலி யினமாப்
பம்ம விதழியை பல்லன முறையே
கடையிடை நுனிப்பல் நுனியாம் நாவே
யண்ணந் தாக்குபு வண்ணம் வருமே
இடையின மெல்லா மோரின மாகி
வகரப் பல்லிதழ் யவ்வடி நாவணம்
ரழவும் லளவும் அணமே யண்பல்
நா நுனி வருடி யொற்றியே வருட
அளபரை நிலமெய் பதினெட் டாமே.

9. புள்ளியு முயிரும் பெருக்குழி யிரட்டு
நூற்றெட் டென்ப வுயிர்மெய் தானு
மெய்யள வாகா துயிரள, வாமே.

10. மரபிற் படுக்க இஉ அளபரை
தொடுக்க ஐஔ வொன்றே யாகும்
முடுக்க மெய்நெடில் விடுப்பள வாமே.

இவற்றின் பொருளியல் பின் விளங்கும். கடைச்சூத்திரத்தில் பாஷா சம்பிரதாயமும், பா வலக்ஷணமுங்கூறி, எழுத்துகட்கெய்தியதோர் சி றப்புவிதி புகன்றும். மரபிற்படுக்கல், தொடுக் கல் முடுக்கல், இவை, பதவியல் நோக்கமாம். ஆகலின் பதவியலுட்கூறுவம். எண், பெயர். மு றை, பிறப்பு, உருவம், மாத்திரையாய இவை ஆறுமே எழுத்தியலாம். முறையும் பிறப்பும் உரு வமும் உபதேச முறையாம். முதலீறிடைநிலே, போலி, பதம், புணர்ப்பாகிய இவை, பதத்தின் கண் நிகழுமியல்பான், எழுத்திலக்கணமன்றென மறுத்தாம்.

(பதவியல் பின்வரும்.)

II. ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம்.

பால காண்டம்.

ஏழாவது சருக்கம்.

அநுகுண வமாத்ய ரமைதச ரதமகான்
இங்கித மதியும் இதப்ரிய நித்யமும் 1.
துரைத்தன் சத்யமும் துரோகமில் பத்யமும்
உரைகொள் யோசனே யுத்தம ரெண்மராம் 2.
திருஷ்டி சயந்தன் விசயன் சித்தனும்
சாதகன் அசோகன் மந்த்ரன் சுமந்த்ரனும் 3.
இதமுள வந்தண ரிருவ ரிருடியர்
வசிட்ட வாம தேவ ரேனையர், 4.
கலேயு நீதியுங் கற்புங் குசலமும்,
கனமு நிதியுங் கனிந்தப ராக்ரமும், 5.

கீர்த்தியுங் காரியப் ராப்தியின் விகிதமும்,
அழகும் மமைவும் அளிமித வசனமும், 6.
குரோத காம்யத்திற் கூடவும் பொய்யிலா,
சுயவி தேயவி சேஷமெ லாமறி, 7.
ஏவி யாகிலு மெதுசெய்மோ வதுசெயும்,
விவாத கௌசலம் விழுமிய விதயமும், 8.
தநய ஞயினுந் தகுபிழை செயின்விடா,
விகித நிதிதரும் வெகுபெல கதிதரும், 9.
அகித ரேலப ராத மறிந்தொழி,
வைரி யேகொலும் விரத நீதியும், 10.
அமைந்த வமைச்சர்கள் சாது சங்கமர்;
விப்ர வீரரை வேதை காணுர்; 11.
தாங்கு மட்டுமே தண்டிப் பார்கிதம்;
பால னத்தின்க ணேக புத்யராம். 12.
புரமும் புறமும் படிறு நீங்கிய;
துட்ட ரும்பர தார நினைவுமில்; 13.
சுற்று ராச்யமும் சர்வ சாந்தமாம்.
வாச வேஷமும் வாய்ந்த சீலராம். 14.
அமைவு மரசிடம் ஜாக்ர நயநமும்
குருவும் குணங்கொளுங் கியாதி விறலினர், 15.
விதேச மும்புகழ் விஷய புத்தியர்,
சந்தி விக்ரக சமர்த்த ரைசுவர்யர், 16.
சூழும் யோசனு சூக்ஷ்ம புத்தியர்,
நீதி சாஸ்த்ரமே நித்ய நாவினர், 17.
இவ்வ மாத்யரின் புண்யன் றசரதன்
மேன்மை குணமிக மகியை வகித்தனன். 18.
ஆள்க ளாலறிந் தறமும் வளரவே
மறமுந் தளரவே மன்னன் பாலித்தான். 19.
மூன்று லோகமும் மெச்சு சத்திய
தான பௌருஷத் தரக்கி னுண்டனன். 20.

சிலாக்ய சாம்யமாம் சத்ரு வில்லையான்
மழுப்ர தாபத்தின் மன்னர் சேர்வராம். 21.
இந்த்ர னென்னவே யாள் மஹீபனும்
உத்த வமைச்சொடு மொத்த கிரணனே. 22.

ஸ்ரீமத்வால்மீகரானவர், இந்தச்சருக்கத்தில் தசரத மகாராஜனுடைய ஆலோசனை சபையை, வர்ணித்திருக்கிறார். இந்தச்சபையின் அதிகாரமென்ன? எப்படிப்பட்டவர் இதில் தலைவர்கள்? இவ்வாலோசனை சபையால் தேசத்துக்கு என்ன நன்மை? என்பதை வியக்தமாக எழுதியிருக்கிறார். இந்த சபைக்கு திருஷ்டி, ஜயந்தன், விஜயன், ஸித்தார்த்தன், அர்த்தஸாதகன், அசோகன், மந்த்ரன், சுமந்த்ரன், என்கிற எட்டு மந்திரிகளும் சம்பள உத்யோகஸ்தர்களாயும், இரண்டு பிராமணர்களும், வசிஷ்டர் வாமதேவராகிய இரண்டு புரோகித ரிஷிகளும், இவரன்றியில் உத்தம புத்திவான்களும் குணவான்களும் தனவான்களும், யுக்தாயுக்தமறிந்து இதமான காரியாலோசனை சொல்லும் சுசீலர்களும், ஆகிய இதர மந்திரிகளும் நியமிக்கப்பட்டிருந்தாரென்றும் அறியலாம். இந்த மந்திரிகளின் பெயரை விவரித்திருப்பதில், அவரவர்களுக்கு ஏற்பட்டிருந்த அதிகாரங்கள், இன்னின்னவென்பது விளங்கும். திருஷ்டி என்பவன், சுதேச விதேச வர்த்தமான சேகரன். (Diplomatic agent), ஜயந்தன்-ராச்சியதந்த்ர நிர்வாகன் (Political Minister), விஜயன்-தளகர்த்தன் (Commander-in-chief) சித்தார்த்தன் கஜானா உத்தியோகஸ்தன் (Financial Minister), அர்த்தசாதகன்-ராஜ்ய வரும்படியை சேகரிப்பவன் (Collector of Revenues), அசோகன்-ராஜகாரிய நிர்வாகன் (State Secretary), மந்த்ரன்-நீதியுரைப்பவன் (Legislative Minister), சுமந்த்ரன்-ராஜவைபவ நிர்வாகன் (Chief Councellor), பிராமணர்கள்-வர்ணாசிரதர்மம் நிர்வாகர் (Social Ministers), ரிஷிகள்-குலகுருக்கள் (Riligious Ministers), மற்ற மந்திரிகள்-இதர மெம்பர்கள் (Members Non-official), என்று ஒத்துக்கொள்ள இடமாகிறது. இதர மந்திரிகளின் குணாகுணங்களை வர்ணிக்கையில், ராஜ தந்திரங்களை முற்றும் அறிந்தவரென்றும், நளினமே குடிகொண்டிருக்கும் குசலரென்றும், பராபேக்ஷையில்லாத தனவான்களென்றும், சாது சனங்களுக்கு உபகாரிகள் என்றும், சொல்லியிருக்கிறார். ஆகையால், இப்பொழுது இருக்கும் பிரபுசபை (House of lords) பொதுசபை (House of Commons) போன்ற சபையோரென்று நினைக்க ஏதுவாகிறது. இவ்வித மந்திரிகளின் யோசனா சகாயத்தினால் தர்மராச்ய பரிபாலனம் செய்ததாகவும், அதனால் நகரத்திலாவது தேசத்திலாவது, அசத்யம், துஷ்டத்தனம், பரதாரசிந்தனை, இது போன்ற துர்க்குணங்களை கிடையாது என்றும், சொல்லியிருக்கிறார். இவ்விதமாக, ராஜ்ஜியத்தில் மிகுந்த அமைதி ஏற்படவே, இதர மன்னர்கள், தசரதராஜனுடைய அரசாக்ஷி நலத்தையும், குடிகளின் பேரிலுள்ள வாற்சல்யத்தையும், கண்டு மனதில் மிகுந்த பீதியடைந்தவர்களாக, தசரத மகாராஜனை நயந்து கொண்டதாக அறிகிறோம்.

இவ்விதமான அரசாக்ஷி, கவிதா சாதுரியமென்று நினைக்கவே இடமில்லை. சாதாரணமாக "வெட்டுக்குத்தும் காதவழி; அப்புறம், ராம ராஜ்ஜியம்" என்று, பழமொழியும் அநாதிகாலமாக வழங்கிவருகிறதல்லவா? இந்த மகத்துவத்துக்குக்காரணம் தர்ம சிந்தனையுடைய அடி ஆலோசனை சபையே, முக்கியமாக இருக்கவேண்டும். இவ்விதமாக, மந்திரிகளுடைய மகிமை, வேறே யாதொரு காவியங்களிலும் சொல்லப்படவில்லையென்பது, சொல்லாமலே தெரியவரும். மந்திரிகள் எப்பேர்க்கொத்தவர்? அகம் கடுத்தி, மேல் மினுக்கி, முக மலர்த்தி, வாய் முத்து! என்ற போல், அல்ல. குரோதமுண்டாகும்படி நடந்துகொண்டாலுங்கூட, அசத்ய மார்க்கத்தில் பிரவேசிக்கமாட்டார்கள்; தர்ம புத்தியுள்ளவர்கள்; என்று சொல்லுகிறார். தண்டப்பிரயோகத்தில் (Whipping), பெலா பெலம் பார்த்து தண்டிப்பார் என்றதினால், (Medical advice) ஆயுர்வேத பண்டிதருடைய ஆலோசனையும் பெற்றுக்கொண்டு வந்தார்களோ என்று சந்தேகஸ்பதமாகிறது. பெற்ற பிள்ளையாச்சே! ஐயோ! என்பதே கிடையாது; சிக்ஷை, செய்யும்படியான சமயம் நேரிட்டால், செய்தே விடுவார்களாம். இவன் நமக்கு இதமில்லாதவன்! (He is a dangerous organ !) இவனை சிக்ஷிக்கவேண்டியது நியாயம்! (He much deserves) என்பது இல்லையாம். என்ன தூஷியம் செய்தான்? என்று கருதியே, சிக்ஷா ரக்ஷை செய்வர் என்றார். தவிர மந்திரிகள் அரசனிடத்தில் அதி ஜாக்ரதை (Ready at call), இதம் (Implicit obedience), நயநோக்கம (Not-murmuring), முதலான குணங்களோடு கூடியும், இயற்கை வாசனையுள்ளவர்களாயும், நல்ல ஆடையாபரணங்களை தரித்தவராயும், சுபாவத்திலேயே தனவான்களாயும், சந்திவிக்ரகதத்வ ஞானமுள்ளவராயும் (Masters of politics), சுசீலர்களாயும் (gentle), இருந்தனர் என்றார். முக்கியமாக, "சுசீநாம், ஏகபுத்தீநாம், சர்வேஷாம் சம்ப்ரஜாநதாம்"—அதாவது, திரிகரண சுத்தியுடனும், அசைவிலா ஐக்ய புத்தியுடனும், எல்லா மந்திரிகளும் ராஜ்ய தந்தரங்களை நிர்வகித்தார்களாம். (Without party spirit, their voice was one.)

சகலவிஷயங்களையும் தெரிந்த நேயர்களே! நான் இச்சிறு சஞ்சிகையில் அதிகமாக எழுத அசக்தன். வால்மீகருடைய தாற்பரியம், அதை எடுத்துச்சொல்லும் மேதாவிகளுடைய யுக்தி புத்தி சாதுரியங்களைப்பொறுத்தது. எனது அபிப்ராயம், எதாவது எனக்கு பாண்டித்தியமுண்டானால், அதைச் சிலவழிக்க வேணுமென்பது அல்ல. சிலர் (மன்னிக்கக்கோருவன்) ராமாயணமே பொய்! கட்டுக்கதை! கவிதா சாதுரியம்! என்று சொல்லுகிறார்கள். ஆனால், இது வாக்வாத நிமித்தமேயல்லாமல், 'ராம ராம' என்னும் நாதபிந்துவானது இதயத்தில் முளைத்து, தேகமாத்தியந்தம் தழைத்து, சப்த ஹேதுவான வாயுவினால் மோதப்பட்டு, காதில் சதா முழங்கிக்கொண்டேயிருக்கிறது. இந்த மரம், பூத்துக் காய்த்துக்கனியாகவேணும். எட்டிமரமென்பதும், தொட்டிமரமென்பதும், கனியை எட்டிப் பறித்து, முட்டியாலுடைத்து, நொட்டிச் சுவைத்தாலல்லாமல், சுட்டிக்காட்டிய அளவிலே சொல்லல் ஆமா? ஐயா! புழைக்கடை மரம்! நம்ம புழைக்கடை! நம்ம மரம்! ஏதோ கொத்துவெட்டு போட்டுத், தண்ணீர்வார்த்துக்காப்பாற்றிக்குலைக்கச் செய்யலாம். இந்த மரம் (மனுஷியாகிருதி) இருப்பது எவ்விடம்? யாருடையது? காய்க்கு மரமா? காயா மரமா? இந்த மரத்துக்குக்கொத்துவெட்டு போடுவது எப்படி? யார் போடுவது? எப்படிக்காப்பாற்றுவது? என்ன கனி கொடுக்கும்? என்று நிதானித்து, விஷயங்களை அறிந்து, காலோசிதமான யத்னம் செய்தால் ஆகுமேயொழிய, சும்மா ஆகுமா? "மடற்

பனை" யல்லவா! இதன் லக்ஷணம் "தானே தரக்கொளினன்றித்தன்பால், மேவித்தரக்கொளா" தல்லவா? இதற்குப்பிரமாணமாக "வள்ளலார்"—"ஐயெரி நாப்பண் ஐந்து அவித்து இருப்பினும், இருகால் அடக்கி ஒருகால் நிற்பினும், சேயிழை மாதரைத்தீரத்தணப்பினும், உடையைத் துறக்கினும் உணவை மறக்கினும், மம்மர்செய் மாயை மழுங்காது; அம்ம!, குருபரன் நோக்கிற் குழையும் அன்றே!" என்று சொல்லியிருப்பது தெரிந்தவிஷயம் அல்லவா? சொல்லப்போனால், "ஓய்! ஆம் காணும்! நீர் வாயாடி! என்பது நாம்சொல்லவேணுமா? ஒருவன்—அநுமந்தாசாரே! அநுமந்தாசாரே! - என்று அழைத்தான்; அநுமந்தாசார் - ஏடா! நான் அநுமான் என்று நீ எப்படி அறிந்தாய்?— என்றார்; அதற்கு அவன்,- உமது முகத்தைப் பார்த்தால் தெரியாதா? - என்றான். அதுபோல, உமது திருமுகத்தைப் பார்த்தாலே போதுமே! வேறுசாக்ஷி வேணுமா?" என்கிறார்கள். இத்தோடே விடுகிறார்களா? ஏதாவது சகஸ்ரநாமமோ, அஷ்டோத்தரமோ சொல்லி மந்த்ர புஷ்பமும் சாற்றுகிறார்கள். மீறினால், "நீர்தான் கட்டியக்காரர்! உம்மைவிட யார் இருக்கிறார்கள்! ஏது! (When I open my lips, let no dog bark ") சொல்லப்போனால் ஏன் குலைக்கிறாய்? என்று கேட்பீர்போல் தோன்றுகிறது," என்கிறார்கள். இவர்களிடம் அகஸ்தியர் ஒருவர் அகப்பட்டுக்கொண்டிருக்கிறார். அது எப்படியென்றால், அகத்தியமாமுனிவர் தமது "ஞானம் ஆறில்"

"நீடியதோ ரிராவணன்றான் பிறக்கவென்றும்
நிலையான தசரதன் கை வெல்லவென்றும்"-

"கட்டிய நால்வேத மாறு சாஸ்திரமும்
அழிந்திடவே சொன்னதல்லால் வேறொன்றில்லை."-

என்று சொல்லியிருக்கிறார். சரி! இதை, பிரபஞ்சம் ஒப்புக்கொள்ளுமோ? கொள்ளாதோ? தெரியாது. ஒன்று நிச்சயமான விஷயம்; வால்மீகரானவர் இந்தப்பிரபஞ்சம் உள்ளவரையில் போற்றத்தக்க புண்ணியவான், என்பதேயாம். இவ்விஷயம், இவ்வளவு அர்த்தபுஷ்டியும், காம்பீரியமும் அமைத்த ஒரு கவிதாவானவர், நமது நாட்டில் ஆதிகாலத்திலேயே இருந்தார், என்பதை நினைக்க, அக்காலத்தில் உண்டாயிருந்த நடையுடை நாகரீகம் இத்தன்மையது, என்பதை விளக்கிக்காட்டும், பிரத்யக்ஷப் பிரமாணமாம்.

(எட்டாவது சருக்கம் பின்னால் வரும்.)

III

கீசகவதம்.

முதலங்கம். மூன்றாங்களம்.

திரிகர்த்த தேசம்.

(நகர்ப்புறம்.) பேரிகை கோஷிக்க.

ஙிங்ங் கிட்டாங், செருப்ப் பட்டாங்,
கடுகி காவல! வருதி! நீபொர.

திரிகர்த்தன் பிரவேசிக்க.

திரிகர் - என்ன வற்புத? மிந்த நகர்ப்புற,
மென்னு மில்லா வியமெ ழுங்,தக
முழைய வாட்டி, யுரனறை கின்றது!
போருக் கழைக்கும், பேரி போலும்?
இவனுறு மொன்னு, ரெவரே யாவர்?
வாரா வல்லன் வந்தா னெனினும்,
வடக்கு வாசல் வன்க ணாளரை [ன்
முறுக்கு, முரணுடை மன்னனை யறியே
மாளவ னைத்தான், மச்ச நாட்டின்
ஆநிரை முற்று மடக்கிக் கொணர
வனுப்பி னேனே! யவனே, வாகை
பெற்று வந்து, பேரி யறைந்து
நாமெதிர் கொள்ள நின்றா; னெனவோ?
என்னி, னித்தனை யிறுமாப் பென்ன?
ஊரா ரோடி யுளைய வேணுமா?
வாகை கறங்க, வழங்க லின்றி,
யாகவ மென்ன, வறைகி றானே!
தன்னை மறந்து, தலையில் லாமற்
றுள்ளுகி றானே! தூம கேது!

தூமகேது பிரவேசிக்க.

விராடம் போன வரலா றென்ன?

தூமகேது - (உரையாடாமல் துக்கிக்க.)

திரிகர்த்தன் - ஆ! ஆ! லட்சணங்காட்டுகிறாயே!
வாயுள போதே யிந்தக் கோலமா?

தூமகேது - மாளவ நண்பன்-(துக்கிக்க)

திரிகர்- நண்பற் கென்ன? நவில்வை யாவை!

தூமகேது - நற்கெதியடைந்தான்!

திரிகர்- இழவுக் காகவோ விவணீ யணுகினை?
மாளவற் கென்ன? மக்க ளிலரோ?
எள்ளு நீரு மிறைப்ப வானையோ?
இங்கித! முனக்கு, மங்கித மிலையோ?

தூம - ஆநிரை கொணர்ந்தே, னருளிய வாறே.

திரிகர்- மாடு மேய்க்கு மடையனை, மாளவற்
கீடு கொடுக்க, வேற்பித் ததனா,
லுயிரொ டளித்து,நீ வுலக்கை போல
நின்றா, யெதிரில் நில்லாதே போ! (ஏக.
நலமும் பொலமு நல்யாத நண்பா
வுலகும் பொலமா வுனக்குப்-பொலமும்
பிலமா மெனக்கினிப் பேயிறை யே!ய
வலமா மெனது நல் வாழ்வு. (ஏக.

(மந்தைப்பேட்டை) இரவு.

சேவகன் பிரவேசிக்க.

சேவகன் பாடிவர.
"மாவும் புள்ளும் வதிவயிற் படர,
மாநீர் விரிந்த பூவுங் கூம்ப"
மாக மலிந்த, மணியும் போக,
மாலை மல்கு, மாதர்
மாய்கையி, னிதய மகிழ் கொண்டற்றே.

யார்! உஷார்! யார்!

தந்திர பாலன் பிரவேசிக்க.

தந்திரபாலன் - நான்தான் தந்திரபாலன்.

சேவகன் - தந்திரபாலனு? பார்க்கவொட்டும்.
(விளக்கிற்பார்க்க.)

(மனதில்) பாலன்தான்! அழகும் வடிவும், குழ
லுங்கையும், கோபாலன் போலிருக்கிறதே!
இந்த மகானுபாவன், அர்த்தராத்திரி வரு
வான் ஏன்? விசாரிப்போம்.

அப்பா குழந்தாய்! தந்தர பாலனென்றுயே?
மந்தரம் பண்ண மாட்டுவையா?

தந்தரபாலன் - மந்தரமுந் தந்தரமு, மிரண்டும்
பண்ணுவேன்.

சேவகன் - எங்கே! ஒரு மந்தரம் போடு. பிறகு
தந்தரம் பார்ப்போம்.

தந்திரபாலன் - இதோ பார்! ஆ! ஆ! (புதியூதி
ப்புல்லாங்குழலூத.)

ஹம்சத்துவனி.

வாராதிர்மக ஜனங்களே! நீர்
வேணுமானுல், விராடம் வாரும்!

(1) மாயாதிபன், மோனமே மனனம்.
மோனமுற்றிர, வுறங்கு மினமுங்,
தூத ராகினம்; அகித மேகினம்;
விகித மாகு,நம் விசுவ மோகனம். நீர்.

(2) மோன முரல்குழல் முனிவா ஆதினம்;
விநோதம் வந்தவித முருரேக்!
க்ரமமா முளமோதுவம்.
ஏலா தாரே யிவணிரும்.
ஆன்வாரீ; ரம்வாரீ; ராகாதவம்!
மதன சுவரூபம்! மந்தர மாத்தியம்!
அநந்தரம், அகிலதந்த்ர சாலம்!
விரைவா யுறுவாம், விராட பட்னம்;

இருந்துள நாசம், ஏதுக்கு நேசம்?
இனிதுள நேரம், போவோம் வாரும்;
அநாதி யனுபவ; மத்புத தந்த்ரம்!
அம்சத்வனி பா டினதா நந்தம் நீர்.

(ஜனங்களெல்லாம் ஸ்தம்பிக்க பசுக்களை
விராடமோட்டிச்செல்ல.)

அரண்மனை.

திரிகர்த்தன், மந்திரி, பிரவேசிக்க.

சூரியோதயம்.

பூபாளம்.

திரிகர்த்தன் காலை வணக்கம்.
ஓசனித் தோதிம முபவனச் சுனை
யாசனித் தேறு மரவிந்த மல்கவே
நேச ஞதவன் நேமி யுதித்தனன்
ஆச பாச விருள்கெடு மாறரோ.

மந்திரி முன்வர.

திரிகர்- வேணு கானம் விநோத மாகக்,
கேட்கக் கேட்கக், கேளா மோ?வென
வேட்கை விஞ்ச, விஞ்சைய ஞெருவன்,
இரவி விசைத்த, தென்னே கொல்லாய்?

மந்திரி- விராட னேவின விஞ்சைய ஞெருவன்
வந்தி, ராத்திரி வற்சலங்களை
மரும மறிந்து, மந்திரம் போட்டுத்,
தந்திர மாகத், தொறுவ ரனைவரை,
யிந்திர சால மெனவே மாற்றிக் [னை
கொண்டு போயினன், கோவிருந் தந்த
யென்று, விடைய ரிசைக்கக் கேட்டே,
னவரா லொன்று மாவ தில்லை;
விஞ்சை யறிந்தவர் வெல்ல நினைந்தா,
லெவரே கொல்லா, மெதிர்க்க வல்லார்?

திரிகர்- திருடன்! திருடன்! தேர்ந்திலன் றருமம்.
புருட னுகிற், போரினில் வென்று
கொண்டு வந்த கோக்களைக் களவா

விரவிற் கொண்டுட, னேகுத லறனே?
எவரே சொன்னு ரிந்தப் புத்தி!
நன்று நன்று! நிற்க நிற்க!
மோசம், நாசம் செய்வது நிசமேல்,
சாதல் பிழைத்த, லிரண்டல் லாமற்,
பொராது போரேன்; புலவா கேண்மோ!
எழுமின் மள்ள! ரெழுமி னெழுமின்!
கள்ளனைக் கொன்று, காரிய மினிமேல்!

மந்திரி- சேனையை விரைவிற் சேர்த்தி வருவன்!
போர்க்கோ லங்கொளும்; புனித விறை
யே! (ஏக.

திரிகர்த்தன் மனதில்.
முத்துக் கிரீடம்! மோகன மாலை!
வச்சிரக் கவசம்! வாகு வலயம்! [லும்!
சித்திரக் குடையுஞ்! சேர்ந்தொரு வில்
மத்திர மனேக! மயிலும் வாளு!
மழலும் படைக, ளனைத்து மெடுத்துக்,
கச்சை யிறுக்கிக், கண்டை புனைந்துங்,
கரியும், பரியுங், காலா ளனைத்து,
மெதிர்கொள, வின்னு மேகின ரில்லை!

(மந்திரி சைநியத்துடன் பிரவேசிக்க.)

மந்திரி- வந்தன மடியேன்! வன்புடை மன்ன!
விரும்பிய வாறே, வேண்டும் படைகள்
திரட்டித் தந்துளன், திருவுளம் போலத்
தேர்ந்து கொள்கத்! தெருமர லாமா
றருள்க! வின்னே யரைநொடிப் போழ்
[தில்,
விராட மோடி, வேண்டிட மலைந்து,
வம்பிற் பற்றிய வற்ச மனைத்தும்,
வீட்டுத் தருவம்! வெகுளி விடுமே!

திரிகர்- சேனையைக் கண்ணுறச் சிந்திப் பதனு,
லானை, குதிரை, யனைத்து நிறுவித்,
தோற்ற, மேற்றந் தோன்று மாறு
செய்து, மந்திரி! செல்வ மாக!

எய்த்து மாழா, ஏதிலர் தாழா
வாவது, சதமே!

மந்திரி- யாஞ்ஞைப்படியே,
அமைக்க! தலைவ! வணிபெற நிறுவி,
யிமைக்கு முன்ன, மெழிலுள வாகி,
யேகா வேகி, யேதிலர் வெறுவ,
வன்பொடு நின்று, வருவழி யாய்வமே.

தூமகேது - வலங்கொள! விரைக!

(மேளந்தொடங்க, படைகண்ணுற்றுச்செல்ல)

கோட்டு.

முற்ற முடிய மகிபதே முந்து போரின்
மோதுவம்.

1. மெத்த மெத்த மகிழுமாறு - மாறி,
மாறி முந்துவம். (முற்ற.

2. கங்க பத்திரங்கதுவவே-காத மத்திர
மோதவே-யாக மற்றுடனேகு பற்றலர் - மாக
மீது மலியவே. (முற்ற.

நகர்ப்புறம்.

நாய்க்கன், சாரணன் பிரவேசிக்க.

சார - நேற்று முதலிது வரைக்காத்து, மெதிரி
படை யெழுச்சி காணேம். எமது வர
வறிகிலராமோ? ரண பேரியன்றே
வறைந்தோம்! கேட்டிலரோ? கேட்
டுங் கேளார் போல வுளரோ? வலுவி
லேக விதமல வென்றே? என்னில்,
நென்னற் பெற்றங் கொண்டது, வன்பி
னன்றே? அக்கோலத்து, மாளவன்
மடிந்தானன்றே? இவை யாவுமியங்க
வாய்ந்திலரோ? எது காறு மிவணிரு
க்க! எழும்! எழும்! எங் தலைவற் கு
றைப்போம்.

நாய்க் - அப்படியல்ல. எம்மை எதிலர் வரவுரைக் கவே வினமையால், அவர் வரும் வரை யில், இவனின் றுணராதேக, லகிதம்; எள்ளளவும் சரியல்ல! அதான்றி, யா மிப் பகல் முழுதுமட்டு, நிற்கவேண்டும். வேறு, வேவு வந்து விடுக்த பின், போ வது கடமை. விரைந்தார் வறியரென் பது, வாய்மை. ஆகலின்,—

சார - அண்ணே! ஆங்குதோன் றுவதென்னே?

நாய்க் - இளவெயில்! எமக்கேது மியங்கவில்லை! சற்று நிதானித்துணர்வோம்.

சார - அதோ! கோகு வரையில், மின்போன் றொளிர்தல் பாரும்!

நாயக் - தொலையாடி எடுக்க.

சார - இதோ காணும்! (ஆடியீக)

நாயக் - நில்! நில்! கொடுஞ்சிமான்றோ! குடை படையாக!—

சார - அதோ! ஆகாயத்திற் சிறுபடம் போ லும்?

நாய்க் - படைக்கொடியாம்! பற்றுரென்னைப் பண்புறும் நோக்க! இவுளியேறி, யேகு வமாக! (குதிரையேக, விரைக)

(சீசகன் படையோடும் வர.)

மேளம், நோட்டு.

பட்டும் பட்டும் பண்பிலனோ?
பொருதும் பொருதும் புகழ்பெறவே?
இன்னுன்னோ? வெம்மிறையே!
யியன்ற கால! மெழில்பெறவே!

நாய்க் - கோகு வரைக்கட் கோமளமா [க்,
மினிர்படை மன்னர் மொகு மொகென
குடை கொடி யுடனே கடுகிவரக்,
கண்டே னடியன் கேசரியே! (பட்டு

கீசக - முரச மறைந்து முட்டாண் மன்,
வருபவ னல்லன் வருகா னவச்
சாரண னெண்ணிச் சேர்ந்தனனுற்,
காரணங் கண்டேன் கடிதுடனே (பட்

நாய்க் - காப்பு சூழக் காவலரா
லகமும் புறமு மற்றற்றே
யெய்த்துப் போக விடம் வருமா,
லிவனுறை வம்மே, யெழில் பெறவே. (பட்டு

கீசக - பக்கம் பக்கம் பலவிடமும்
போக்கும் வரவும் பொலி வறவே,
பற்றப் பற்றப் படைவரு மேற்,
சுற்றிச் சுற்றிச், சூழ்குவமே. (பட்டு

நாயக் - ஒருசா ரா ரிரு சா ரா,
ரோடி யொளித்தே யுடற்றினதும்,
பின்பற்று, முன்பற்றிப்,
பதைக்கப் பதைக்கப், பறக்கழிப்பம். [ப

கீசக - நேத்தி! நேத்தி! நாயகமே!
யொருகுறை வில்லை, யுசிதமதே!
யுபய வணி! யுடைந்திடுக!
பாகியல்! குப்த! ம்ாகிடவே (பட்டு

(இருபடைகளும் சந்தித்து யுத்தம் செய அவ்வவர் மேள முணர்த்த.)

திரிக - தேர்ந்து தெளிய லாகுமோ?
தேசிகன் திற மேகுமோ?
ஆசுகம்பல, வீசு மந்திர,
வார்வ மார, வதிர விரதம். (முற்ற

கீசக - சார்ந்தும், சார்ந்துஞ், சகடமெலாம்
பேர்ந்தும், போர்ந்தும், பொடிபடவே,
மந்திர முற்று, மழுங்கிடவே,
யந்தர மாடுக, பம்பரம் போல் (பட்டும்

திரிக - கருவி மாறி யாகுமோ?
கயங்கள் பலவுங் கடுகுமே?
புயங்கொ ளங்குசம் புதைய, வியையச்
சிதையச் சிதையச் சேர்த்து கிறுவ! (மு

கீசக - தும்பிக் கையுந் தோளுமெலாந்,
கொம்பொடு பறியக் கொடுங்கதையாற்,
கொட்டிக் கொட்டிக் குவிபஞ்சா,
வெட்டிய தட்டு மிதமெனதே! (பட்டும்

திரிக - தூசிப் படையுந் தூரத்துமே!
வாசிப் படவும் வேணுமே!
பூசிப் படையப், புகழுவோடி,
மூசி மூசி, மொய்ம்பி னூர்த்து (முற்ற

கீசக - வாசி யனைத்தும் வலியழிய,
வாய்க்கடை ஞானின். விவிதமெலாம்,
பற்றிப் பற்றிப் பதறிடவே,
யெற்றிக்கொல்லு, மிதமெனதே! (பட்

திரிக - தொட்டு விட்ட வத்தி ரத்திற் றொட்ட
சட்ட கம்மெலாங்,
கட்டு விட்ட ரற்று ரத்திற் கற்ற
கற்ற கல்வியான்
மெச்ச விச்ச கத்த கத்து மெச்ச
சுத்த வீரரே
நச்ச பற்ற லர்க்கு மெத்த நச்செ
னப்பொ லிமினே. (முற்ற முடிய

கீசக - தேர்ந்து தேர்ந்து, சார்ந்து சார்ந்து,
நேர்ந்து நேர்ந்து, பறவை சூழுங்
கருவிமாற, மூசிநொந்து,
வானிவாடி, வானநோக்கி,
ஏஎதே எது! வெல்லவல்லா,
ரில்லை! யில்லை! யேந்தல் வாரு!
மென்ன, வின்னல்! சொல்ல மீறி,
யேகும்வகை யின்றி, நிற்க!
வெஞ்சரங்கள், பாயப்பாய!
வஞ்சியமு மரவமேகி,
வஞ்சிபர்கண் ணீருகுக்க!
வல்ல லுற்றுப் பொன்றுமாறு,
வெற்றி யெற்றிப் பெற்ற போது,
விருதுகூற லாகுமே,
லென் சமர்த்து, மன் சமர்த்தும்,
வெட்டவெளி பட்டுலாவும்.
இட்டமுட னெம்பியர்காண்!
மன்னன் படை வரமறைந்து,
நின்றுநாப்ப ணுறுவமையங்,
கதுமெனவே கவிந்துகொண்டு,
பற்றிப்பற்றிச், சுற்றிச்சுற்றி
யெற்றி யெற்றி, யேமலோகம்,
நோக நோக நல்கி, நீவிர்
ஒருமைமன்ன ரோடவோட,
வோடி, யவ ருற்றநகர்
முற்றுகைதா னிட்டவுடன்,
வழிபடுவர் வேந்தரெலாம்;—அதனால்,
வாகை சூடி, விராட மேவுதும்!
வேந்தும் வியந்து பொலியு மாறே.

[கீசகன் திரிகர்த்தனை முறியடிக்க,

திரிகர்த்தன் தனித்தேக. } காளெரி தூற்றென, கீசக னிப்படி காதிம லைத்திடவும், யானி னைத்திலர்! சாபமெடுத் திலர்! வாளிதொடுத்திலர் பஞ் சானன முட்கின யானையெனப் பொலி வற்று, படுத்தனரால், ஆனன மற்ற,வமங்கலையே! னிரு ந்தென்னபயன்? இனியே (ஏக

(இரண்டாம் அங்கம் பின்னால்வரும்.)

IV

லௌகிக தந்த்ர தர்மம்.

(2-வது சஞ்சிகை 45-வது பக்கத்தொடர்ச்சி.)

நூல்.

முதல் அத்தியாயம்.

யத்நம் பிரபஞ்ச சாதனம்.

லௌகிக தந்த்ர தர்மமானது, ஐசுவரியத்தை உற்பத்தி செய்யும் வழியும், அவ்விதம் உற்பத்தியானதை உபயோகிக்குமுறையும் ஆகிறது. 'உற்பத்தி' என்றால் 'விளைவு' என்று தாற்பரியம். இது, தானே விளைகிறதும், ஒருவன் செய்வதினால் உண்டாகிறதும், ஆகும். தானே விளைகிறவை, தெய்வாநுகூலமாக ஏற்படும் சாதனங்கள். இவற்றிற்கு, 'சங்கற்ப சாதனம்' என்று பெயர். மற்ற சாதனங்கள், ஒருவனால் செய்யப்பட்டவை. இவற்றிற்கு, 'விகற்ப சாதனம்' என்று பெயர். இச்சாதனங்கள், முன்னமே மற்றொரு ரூபமாக, உலகத்தில் ஏற்பட்டிருக்கவேண்டுமென்பது, யாவரும் அறிந்த விஷயம். ஏனென்றால், ஒருவன், ஒன்றைச்செய்யவேணுமானால், சர்வ சூனியத்திலிருந்து, அதாவது இல்லாமையிலிருந்து, எப்படி ஒன்றைச்செய்வது? கற்பிதமான வஸ்துவானது, பிரபஞ்சத்தில், முன்னம் ஏதாவது ஒரு ரூபமாகவே இருக்கவேண்டும். இந்த இருவகைச் சாதனங்களும் உபயோகமாவதில், தாரதம்மியம் உண்டு. சில சாதனங்கள், சுலபமாகக் கிடைக்கக்கூடினவை. சில சாதனங்கள், உழைப்பினால் தேடக்கூடியவை. சுலபமாகப் பெறக்கூடிய சாதனங்களின் முறை, 'சன்மானம்' எனப்படும். இதர முறையானது, 'பிரதிக்கிரகம்' என்று சொல்லப்படும். இவ்விதம் உபயோகப்படுத்தும் முறையிலும், சில சாதனங்களை, கட்டுமிதமில்லாமல் அடையலாம். சில சாதனங்களை உபயோகப்படுத்தவேணுமானால், கட்டுமெட்டுகளுக்கு உடன்பட்டுத்தான், பெறலாம். இவ்விதம், கட்டுமெட்டில்லாமல், பெறக்கூடிய மார்க்கமானது, 'ஸ்வீகாரம்' என்னப்படும். கட்டுமெட்டோடு கூடி அடையக்கூடிய வழியானது, 'பாதகம்' என்று சொல்லப்படும்.

2. உலகத்தில், தெய்வாநுகூலமாக ஏற்பட்டிருக்கும் சாதனங்கள், அநேகம். குகைகள், மரப்பொந்துகள், இவைகள் மிகவுள. இவை, வாசம்பண்ண யோக்கியமானவை. காய், கனி, கிழங்கு, தேன் முதலானவையும், ஏராளமாக இருக்கின்றன. ஒரு மனிதன், இவற்றைப் புசித்துக்கொண்டு, மேற்படி குகைகளிலோ, பொந்துகளிலோ, வாசம் செய்யக்கூடும்; தனது ஜீவனையும், காப்பாற்றிக்கொள்ளக்கூடும். ஆகிலும், இவற்றைத்தேடி அநுபவிக்கவேணுமானால், சரீரமுயற்சி செய்யவேண்டும். காய் கனிகளை மென்றுதின்னும் முயற்சிஅல்ல. அக்காய் கனி கிழங்கு முதலானவற்றைத் தேடியடையும் முயற்சிதான். இவ்விதமாக, ஏதோ சில காட்டுமனிதர்களும், இல்வாழ்க்கையை வெறுத்து, நல்லின்ப வாழ்வைத்தேட எண்ணிய தபசிகளும், வாசம் பண்ணி வருவதாகக் கேள்வி. பிரபஞ்சத்தில் கிடைக்கக்கூடிய பதார்த்தங்களைப், பாகம் செய்தாவது, சாப்பிடவேண்டி வருகிறது. நூன்முகத்தில் சொன்ன பிரகாரம், மிருக பக்ஷியாதிகளைக்கொன்று தின்னும், காட்டுமனிதரும்கூட, மேற்படி மாம்சங்களைப் பக்குவப்படுத்த, சரீர

முயற்சி செய்யவேண்டும். சில பதார்த்தங்களை, உபயோகப் படுத்திக்கொள்ள வேண்டுமானால், அந்தப்பதார்த்தங்கள், என்ன ரூபமாக சுவபாவத்தில் இருந்ததோ, அந்தச்சுவபாவமானது, மனிதனுடைய முயற்சியினால், முற்றிலும் வேறுபடுத்தப்படுகிறது. சில விஷயங்களில், ஒரே பதார்த்தமானது, அது முன்இருந்த ரூபத்தையும், பின்னால் ஆக்கப்பட்ட ரூபத்தையும், ஒற்றுமைப்படப் பார்க்குங்காலத்தில், வேறுபதார்த்தமாகவே தோன்றுகிறது. இது மாத்திரமல்ல; சகல குணகண விஷயமும், மாறுபட்டே போகிறது. சுரங்கங்களில் வெட்டி எடுக்கும் கரும்பாறைக்கும், கோடரிக்கும், எவ்வளவோ பிரகிருதபேதம். அந்தக்கோடரித்துகள்க்கும், 'சதபுடம்,' 'சகஸ்ரபுடம்,' செய்த அயச்சிந்தூரத்திற்கும், எவ்வளவோ குணபேதம். இதே இரும்பானது ஒரு ரசவாதி கைப்பட்டால், 'கரும்பொன்' என்கிற நாமதேயமே போய், 'செம்பொன்' ஆகிறது; இது எவ்வளவோ கணபேதம். புழுக்கூட்டிற்கும், ஆட்டு மயிர்க்கும், பருத்திக்கும், நாம் உடுத்துவரும் பட்டு சால்வை, சல்லா முதலியவற்றிற்கும், எவ்வளவோ பேதம். ஆகையால், பிரபஞ்சத்திலுள்ள பதார்த்தங்களை, மாறுபாடாகச்செய்வது, சரீர முயற்சியாகும். பிரபஞ்சமானது, மனிதர்க்குஉபயோகமுள்ள, உபாதான சாதனங்களை மாத்திரம் கொடுக்கிறது; என்று சொல்வார்கள்.

3. பிரபஞ்சமானது, மேற்சொன்ன உபாதான சாதனங்களை மாத்திரமன்றியில், சில சக்திகளையும் கொடுக்கிறது. கொல்லன், முன்காலத்தில் வாயினாலேயே ஊதி, தன் வேலையைச் செய்துவந்திருப்பான். பிறகு மூங்கில் குழாய் ஒன்று செய்து, அதன் வழியாக ஊதிக்கனலைப் பழுக்கச்செய்து, தன் கொல்வேலையை நடத்திவந்திருப்பான். வாய் இருந்தாலும், குழாய் இருந்தாலும், ஊத்துக்கருவியானது, கொல்லனுடைய இதயம் அல்லவா? இப்படி ஊதுகையில், இதயமானது கட்டுவிட்டுத்தளராதா? அவன் தலை, கிறுகிறுக்கமாட்டாதா? என்னசெய்வான்! பாபம்! ஆலோசனை செய்தான். அடே! கண்டுபிடித்தேன்! கண்டுபிடித்தேன்! என்று துள்ளினான். என்ன கண்டான்? இதயமானது, ஒரு தோல்பையென்றும், கழுத்தானது, ஒருகுழாய் என்றுந்தான். உடனே, ஒரு தோலை விலைக்கு வாங்கிப், பைபோலத்தைத்து, இதயம்போல ஆக்கினான். பழைய மூங்கில் குழாயை, அதன் வாயில் துருத்தினான். காற்று நிறைய நிறைய, அமர்த்தினான். குழாய் வழியாகக், காற்று வெளிப்பட ஆரம்பித்தது. இதுதான் சரி! என்று கருதி நாளடைவில், ஊதுதுருத்தியைச்செய்து கொண்டான். வாயுவிற்குப்பிரதிபதம், 'சலனன்' என்பதும், 'பிரபஞ்சனன்' என்பதும், சொல்வதுண்டு. ஆகையால், பிரபஞ்சத்தில், வாயுவிற்குச்சலன சக்தியானது, இயற்கையாகவே அமைருந்திக்கிறது. இந்தச்சக்தி ரூபமான வாயுவைப் பிடித்துத், தோற்பையிலடைத்துத், துருத்தியென்னும் ஊதுகருவியாக்கினது, கொல்லனுடைய மனோதிரிசியமும், கைசாதுரியமும் அல்லவா? துருத்தி கிழிந்துபோனால், காற்று ஒழிந்து, குகாப்பிரவேசம் செய்யுமா? செய்யாது. செய்தாலும், போன இடத்தில், அதன் குணம் போய்விடுமா? அல்லது, கிழிந்த துருத்தியோடு ஒழிந்து அழிந்துபோமா? இல்லை. ஆகையால் கொல்லன்செய்த முயற்சியெல்லாம், தான் எடுத்துக்கொள்ளவேண்டிய சரீர முயற்சியைக், காற்றைக்கொண்டு செய்வித்தான். அதுபோலக்கை

வருந்தி, வாய்வருந்தி, மெய்வருந்திச்செய்யும் முயற்சிக்குப்பதிலாகப், பிரபஞ்சமானது, தன்னுடைய சக்திகளில் ஒன்றைக்,கொடுத்தது.

4. மேலே சொன்ன திருஷ்டாந்தத்தினால், பிரபஞ்சத்தினிடத்தில் அமைந்திருக்கிற சூட்சும சக்தி மாத்திரம், சரீர முயற்சிக்குப்பதிலாக, உபயோகமாகும், என்று நினைக்கக்கூடும் ; அப்படியல்ல. பிரபஞ்சத்தில் உபயோகிக்கப்பட்ட இந்தக்காயிதமானது, முதல் முதல் ஒரு கந்தையோ பொந்தையோ ஆகியிருக்கலாம். ஆனால், அவற்றைப்பிடித்து, அரைத்து, வெண்ணெய்போற்றிரட்டிச், சுத்திசெய்து, குழைத்துக்கூழாக்கிக்காயவைத்து, நார்ப்பதங்கண்டு, யந்திரங்களிற் கொடுத்து, அடித்து, அகலவைத்துக் காய்+இதமாக்கி, நாம் எழுதுமாறு செய்யப்பட்டிருக்கிறது. அணு அணுவாகப்புடைத்து, அடித்து, அகற்றிய பிரதி அணுவும், இப்போதும் ஒட்டிக்கொண்டேதான் இருக்கிறது. இது, கைத்தொழில் வன்மையோ? அல்லது, முன் இருந்த உபாதான சாதனத்தின், பரமாணு சக்தியோ? தலைப்பிலேயே சொல்லப்பட்டிருக்கிறது. இல்லாத வஸ்துவிலிருந்து, யாதொன்றும் செய்ய முடியாதல்லவா? ஆகையால், சங்கற்ப சாதனத்தின் பரமாணுப்பிரதிபந்த சக்தியானது, (Cohesion) சரீர முயற்சியினால், கெட்டுப்போகவில்லை. ஆதலால், இந்த இயற்கைச்சக்திக்கும், சரீர முயற்சிக்கும், தாரதம்மியம் எவ்வளவு ஏற்படும் என்பதைக் கவனிப்போமாக.

5. இன்னும், சில பிரபஞ்சசக்திகளை ஆராய்ந்துபார்த்து, மனிதனுக்கு இந்தசக்தியைத்தன் வசப்படுத்த முடியுமா? முடியுமானால், எம்மட்டில முடியும்? என்கிறதாரதம்மியத்தை யோசிப்போம். பூமியில் விதையை ஊன்றுகிறான் ; தண்ணீர் விடுகிறான். இதுதான் மனுஷியன் செய்வது; செய்யக்கூடியதும் இம்மட்டுமே. விண்டு முளைத்துக் கிளைத்துத் தழைத்துப் பூத்துக்காய்த்துக்கனியீன்றது, விதையின் சுவபாவசக்தியே. ஒரு மரத்தைக் கோடரிகொண்டு வெட்டுகிறான். மரமானது தரையில் விழுவது, பூமியின் ஆகர்ஷண சக்தியால்தானே? ஈர்வாள்கொண்டு, அறுத்துப்பலகையாக்கி, ஆணிபறைய, ஒரு கட்டிலோ, மேற்கட்டியோ, குறிச்சியோ, (குறுமை+இசி+இ=குறி+இசிஇ=குறிச்சி), மேசையோ (மேல், மே+இசை+ஐ), மனையோ, ஆகிறது. இது, வன்பொருளாய ஈர்வாள்முன், மென்பொருளாய மரம், ஈடு நில்லாத்தன்மையாலல்லவா? தீக்கனலை எடுத்து, எரிகரும்பினிடம் வைத்தூதித் தீமூட்டி, சோறு, கறி, இவற்றை ஆக்குகிறான். இதில் மனுஷிய யத்நம் என்ன? ஒன்றை எடுத்து, மற்றொன்றினிடமாகத் தொடுப்பதுதானே? தீமூளுவது, தீயின் சுவபாவமும், நீர் காய்ந்து ஆவியாவது, நீரின் சுவபாவமும், பாகப்படுத்துவது உஷ்ண சுவபாவமுமல்லவா? ஆகையால், மனுஷிய சக்தி என்பது, ஒன்றை அசையச்செய்வதும், அசைபொருளை அசையாமலிருக்கச்செய்வதும், ஆகிய கொழுப்பேயாகும். இந்தக்கொழுப்பின் சக்தியானது, பிரபஞ்சசக்தி குறைந்து காணும் வழிகளில், பிரயோஜனமாகும். பிரபஞ்ச சக்தி மீறியிருக்கும் வழிகளில், உடைபடா மரக்குற்றியைத், தீமூட்டிக்குலைத்து, பூமியைப் பண்படுத்துவதுபோல, சத்ரு, மித்ரு முறை நோக்கி, புத்தி செலுத்தி, ஒரு பிரபஞ்ச சக்தியை, ஸ்தம்பனம், ஆகர்ஷணம், உச்சாடணம், பேதனம், மாரணம் முதலான வழிகளால், மற்றொரு பிரபஞ்ச சக்தியை இயக்கிவைத்துத், தனக்குப் பிரயோஜனப்படுத்திக்கொள்ளப்போ

துமானதல்லவா? இதற்கு, ரயில்வண்டி திருஷ்டாந்தம், அல்லவா? இதற்கு, மனுஷிய சக்தி, கேவலம், நிமித்திய காரணம், அல்லவா? ஆகையால், தெய்வீகமாய் அமைந்திருக்கும், மனுஷிய சக்தியானது, பிரபஞ்சத்தை அநுபவிக்கச்செய்யப், போதுமானது என்றே, கிராக்ஷேப சித்தாந்தம் ஆகிறது.

6. ஆனபடியால், மனிதனுடைய சரீர முயற்சி எல்லாம், பிரபஞ்ச சாதனங்களை இயக்கிவைக்க மாத்திரம் உபயோகமாகும். ஆனால், எல்லாவற்றிற்கும் வேண்டுமென்பது தேவையில்லை. மனிதன், தான்செய்வதற்கு பதிலாக, யானை குதிரை, எருது முதலிய மிருகங்களைக்கொண்டு, செய்விக்கலாம். இவற்றிற்கும் பதிலாக, சக்கரங்களைச் செய்வித்து, காற்றினால் இயக்கிவைத்து, அதனால் ஆகவேண்டிய காரியங்களைச்செய்துகொள்ளலாம். நீர் வீழ்ச்சியைக்கொண்டும், செய்வித்துக்கொள்ளலாம். இவ்வாறு, வேண்டிய இடங்களில், சக்கரங்களை ஒன்றின்மேல் ஒன்று தாக்கி உருளவைத்து, எடுத்தல், அடித்தல், புடைத்தல், சேர்த்தல், அமர்த்தல், பன்னல், நூற்றல் முதலான தொழில்களைச் செய்வித்துக் கொள்ளலாம். இப்படிச்செய்யும், கருவி சாதனத்துக்குத்தான், 'யந்திரம்' என்று பெயர். ஆனால், இதற்கு வேண்டும் முயற்சி, அடிக்கடி அப்போதைக்கப்போது, செய்யவேண்டிய அவசியமில்லை. யந்திர நிர்மாணமாகிற, ஒரேதடவையில் முடிந்துபோம்.

7. நமக்குள்ளாக, சிலர், சரீர முயற்சிக்கே, பிரபஞ்சம் அதிக அநுகூலமென்றும், எண்ணியிருக்கிறார்கள். பத்தாயிரம் முதல்போட்டு, ஒரு பூமியை வாங்கிவிட்டால், ஆயுள்பரியந்தம் அநுபவிக்கலாம்! தலைமுறை தலைமுறையாகவும், பிதரார்ஜிதமாகவும் நிலைத்திருக்கும்! பத்தாயிரம், யந்திரத்திற்கு செலவழித்துவிட்டால், போட்டமுதலுக்குப், பின்னால் யந்திரம் விலையாமா? என்ன முட்டாள் தனம்! ஏதோ, லாபம் அபரிமிதமாக வாரிக்கட்டிக்கொள்ளலாம், என்பது பொய்! நாலுநாள் மினுக்கென்றிருக்கும்! பின்னால் கெட்டுப்போனால், "அடியைப் பிடியடா பாரதபட்டா," என்ன வேண்டியதுதானே? இதெல்லாம் பைத்தியம்! என்று கருதிவருவது, நமது தேசத்தோர் சுவாபம். ஐயா! முறுக்கு தின்னுவதில், மேற்பல் பிரயோஜனமா? கீழ்ப்பல் பிரயோஜனமா? என்று கேள்வி கேட்டாற்போல, ஆகிறதே ஒழிய, காரியவசத்தில், இரண்டுவிதமும் ஒன்றேதான்.

மேற்குறித்த சங்கதியைப்பற்றி, சவிஸ்தாரமாகச் சொல்லவேண்டிய பிரகிருதம், பின்னால் வருவதால், இவ்விடம், இரண்டொரு சமாதானங்களை மாத்திரம், குறிப்பிப்போம். மகரிஷி ஆசிரமங்களில் வேண்டிய அளவு பூமியிருக்கிறது. அது மகரிஷிக்குத்தான் ஆகும்! கோபிசெட்டிபாளையம் கரை வழியில், கோபிதான்! கிடைப்பது துர்லபம். தஞ்சாவூரில், தடியடிதான்! ஏன் ஐயா? என்றால், 'குடிப்பிரியம்!' என்பது ஒரேபதில். காதற்றுப்போகும், 'ஊசி!' சொல்லனிடம் போய் ஒரு ஊசி செய்யச்சொன்னால், "நீர் எந்த ஊர்?" என்று கேட்பான். "ஊசி செய்யச்சொன்னால், ஊரை ஏன் கேட்கிறாய்?" என்றாலோ, "இல்லை! இல்லை! நீர் புதுமனிதராகத் தோன்றுகிறது! கடைக்குப்போம்! காசுக்கு இரண்டு விற்கிறது! என்னால் செய்யமுடியாது!" என்பான். பூமிக்கும், யந்திரத்திற்கும் உள்ள தாரதம்மியம் இதுதான்.

லக்ஷம் லக்ஷமாக குத்தகை பூமியுள்ள ஐசுவரியவான் கையில், சிலசமயம், அரைக்காசும் இருக்கிறதில்லை. அரைக்காசு நாணயம் ஆயிரம் பொறுகிறது. எதற்கும் 'யத்நம்' அதாவது 'முயற்சி' வேண்டும். "முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்," என ஔவையார் வசனமும் உண்டு. இம்முயற்சியானது, மனோமுயற்சியானாலும், சரி! சரீர முயற்சியானாலும், சரி! ஆகையினால், ஐசுவரியம்வேணுமென்றால், முயற்சியும், அதற்கேற்ற பிரபஞ்ச சாதனங்களும், இன்றியமையாதனவை.

(இன்னும் வரும்.)

ஓர் சுவப்நாவஸ்தை.

(2-வது சஞ்சிகை 46-வது பக்கத்தொடர்ச்சி).

நண்பர்களே! சென்ற சஞ்சிகையில், சுவப்நாவஸ்தையில், தேசகால அநிர்ணயனாய், சுவபாவ சுகாநுபவ இச்சா பிடிதனாய், கதாகத சம்மிசிர கோஷ்டியாபந்தனாய், ஆகாச பாவனா பூதனாய், அத்யாரண் ஹேதோற்பவனாய், அற்புத அநவ்வய மாத்திரையாய் இருந்தேன், என்று சொல்லியிருக்கிறேன். இத்தன்மையாகிய அவஸ்தையைச்சுற்று விவரமாக விளக்கவேண்டியது அவசியம். ஆகையால், செவ்வையாக எனது அபிப்பிராயத்தை, இயன்ற அளவில், பிரபஞ்ச சம்மதமாக, எழுதத்துணிகிறேன்.

தோழர்காள்! அவஸ்தை, அவஸ்தை என்றால், நிலை அல்லது நிலைமை, என்பது எல்லாவரும் அறிந்ததுதான். உலகத்தில், இந்த அவஸ்தையை மூன்று விதமாக அநுபவ சித்தாந்தப்படுத்துகிறார்கள். அதாவது ஜாக்ரம், சுவப்நம், சுஷுப்தி, எனும் மூவகைதான். பெரியோராகிய மகத்துக்கள், துரியம், அதீதம், எனும் இரண்டையும் சேர்த்து, ஐந்தாக பாவிக்கின்றனர். முதலில், ஜாக்ரம் என்பது என்னவென்று விசாரிப்போம்.

நாம் எல்லோரும் தாய் வயிற்றிலிருந்து பிறந்தோம்; குழந்தையாய்க்கிடந்து, கவிழ்ந்து, எழுந்து, தவழ்ந்து, நடந்து, இப்பொழுது வயது முதிர்ந்து, உலகத்தில் திரிகிறோம், என்பார்கள். நமது காற்கீழ் பூமியும், தலைமேல் ஆகாசமும், நாற்புறம் திக்குகளும் இருக்கப்பார்க்கிறோம். நாம், இந்த ஜாக்கிரத்தில் செய்வனவற்றை, நம்முடனிருந்தவர்கள் யாவரும் அறிகின்றனர். அதுபோலவே, அவர் செய்வனவற்றை, நாமும் உடனிருக்கக் காண்கிறோம். இதுதான் ஜாக்கிராவஸ்தை என்று சொல்வது வழக்கம்.

நாம் நித்திரை செய்கையில் ஓரிடத்திற்குச் சென்றாற்போலவும், ஒருவனிடமிருந்து பணம் பெற்றுக்கொண்டு திரும்பி வந்தது போலவும், ஒரு ஸ்திரீயை மணந்தது போலவும், உத்தியோகமுதலிய வியாபாரங்கள் செய்தது போலவும், இன்னும் சொல்லத் தொலையாத பற்பல விதமாகவும். காண்கிறோம். விழித்தெழுந்தால் நாம், கண்டவற்றை, நமது நேயரிடம் தெரிவிக்கிறோம். ஆனால், ஜாக்கிரத்தில், நாமும், நம்முடனிருந்தாரும் விஷயங்களை அறிகிறதுபோல, நித்திரையில், நாமும்நம்முடனிருந்ததாகக் கண்டவரும், செய்ததாகத் தோன்றின விஷயமானது, நமக்குத் தெரிகிறதே யொழிய, நம்முடனிருந்ததாகத் தோன்றினவர்களுக்குத் தெரிகிறதில்லையல்லவா? இது தான், சுவப்நாவஸ்தை என்கிறார்கள்.

நாம், மெய்மறந்து, நிர்விசாரமாகத்தூங்கும் அநுபவமானது, சுஷுப்தி என்று சொல்வார்கள். இதை, மறுநாட் காலையில் எழவே, "சுகமாக நித்திரை செய்தேன்" என்று தோழரிடம் சொல்வதில்லையா? ஆனால் சுஷுப்தியில் தற்தோற்றமே இல்லை.

ஆகையால், ஜாக்கிரத்தில் பரஸ்பர புத்தியும், சுவப்நத்தில் ஏகபுத்தியும், சுஷுப்தியில் யாதொரு புத்தி இல்லாமலும், இருக்கிறது. இதுதான் இவற்றின் தாரதம்மியம். இதன்றியில் மற்றொரு விஷயமும் அறிகிறோம். ஜாக்கிரத்தில், நமது புத்தியானது அறியும்பொருள்கள், வேறுபட்டுக் காண்பதில்லை. சுவப்நத்திலோ, பொருள்கள் வேறுபட்டும், படாமலும், காண்கின்றன. சுஷுப்தியில், வஸ்து நிர்ணயமே கிடையாது. ஆகையால், ஜாக்கிரத்தில் நிச்சய புத்தியும், சுவப்நத்தில் சபலபுத்தியும், சுஷுப்தியில் இருவகைப்புத்தியும் இல்லை. இதற்கு உபநிஷத்தில் "பழமையும் புதுமையும் பற்பல பார்க்கிறான்-கதுமெனத் தேசசாலடியுணச் சுவப்பநம்-தோன்றுமற் சுகமுற்றும்" என்று கூறியிருக்கிறார். தவிர, "நாந்தப்ரக்ஞம், நபகிப்ரக்ஞம், நோபயதப்ரஞ்ஞம், நப்ரக்ஞானகனம், நாப்ரக்ஞம்" எனவும், அதற்கிணங்க "அதிருசியம், அவ்வியவகார்யம், ஏகாத்மப்ரத்யயசாரம், பிரபஞ்சோபசமம், சாந்தம் எனவும், கூறியிருக்கிறார். இதைப்பெருக்கிச்சொன்னால் மிகப்பெருகும். இந்த ஐந்து அவஸ்தையில், நான்இப்பொழுது அநுபவித்த விஷயமானது, சுவப்நாவஸ்தையே ஆகையால், இதை உதகரிக்கும்பொருட்டு, ஜாக்கிரமும் இன்றியமையாதது.

ஜாக்கிராவஸ்தையை, 'நாந்தப்ரக்ஞம்' எனவும், 'அதிருசியம்' எனவும் கூறுகிறார். 'உள்ளறிவில்லை' என்றும், 'காணமுடியாதது' என்றும், அர்த்தமாகிறது. இப்படிச்சொல்லியிருப்பது, முன்சொன்னதற்கும், நாம் உலகத்தில் பிரத்யக்ஷமாகக் காண்பதற்கும் விருத்தம் அல்லவா? என்று சந்தேகத்திற்கிடமாகும். ஒரு வித்தையாடி, தன் மனைவியைப்பிடித்து, வலைபால் கட்டி, ஒரு பேழையில் அடைக்கிறான். இது, நாம் எல்லாவரும் ஸ்பஷ்டமாக அறிந்தவிஷயம், இப்படியிருக்கையில், பேழையை உயர்த்திச் சோதிக்கப், பெண்ணைக் காண்பதில்லை! "விழித்திருக்கப் பிண்டந்தட்டிப்போகிறது!" சிலவேளைகளில், கயிற்றைப் பாம்பென நினைத்து எட்டிக்குதித்து ஓடுகிறோம்! தவிர. ஒரே வஸ்துவைப்பற்றி, இருவர் வழக்காடுகிறார்கள். ஆகையாற்றான், உள்ளறிவில்லை, என்று சொன்னார்; அதாவது, யதார்த்த நிச்சயம் இல்லை, என்று அர்த்தம். இதை இம்மட்டில் நிறுத்தி, "அதிருசியம்" என்பதைப்பற்றி யோசிப்போம். நாம் எல்லாவரும், நமது தாய் வயிற்றில், இன்னமாதிரியாய் இருந்தோம் என்றாவது, பிறந்த பிறகு, குழந்தையாக விளையாடினதில், இன்ன இன்ன மாதிரியாக, இன்ன இன்ன சேஷ்டைகளைச்செய்திருந்தோம் என்றாவது நமக்குத்தெரிகிறதில்லையல்லவா? நாம் பள்ளிக்கூடத்தில், கரைத்தலைப் பாடமாகப் படித்தவைகளைத்தும், "மறப்பெனும் பகைவன் வாரிக்கொண்டனன்" என்று போய்விடுகிறதல்லவா? இதெல்லாம், புத்தி முதிராதிருந்ததினால், ஆனவையென்று சொல்லக்கூடும். புத்திநுட்பம் வந்தபோழ்தும், நாலு நாளைக்கு முன்னாகை, நாம் ஆகாரமாயுட்கொண்டவற்றை, அறிகிறோமா? ஒரு தாலூகா தாசில்தார், 4, 5, வருஷம் அந்த தாலூகாவில் இருக்கிறபோது, சாமானியமாக எல்லாப்பட்டி பாளையங்களையும்

அறிகிறார். மற்றொரு தாலூகாவாக, உத்தியோகம் செய்து, கடைசியில் பென்ஷன் வாங்கி வீடு வந்து சேர்ந்தால், தாம் உத்தியோகஞ்செய்கையில், ஸ்பஷ்டமாய்ப் பார்த்திருந்த கிராமங்களனைத்தும், ஞாபகத்தில் நிற்கின்றனவா? இல்லவேயில்லை. ஆகையால், பிறந்து, வளர்ந்து, மீசை முறுக்கின பிரபஞ்சம் பொய்யல்லவா? ஏதோ, ஒரு அநுமானமான நினைப்பிருப்பதினால், பொய்யாகாது. வார்த்தக்கியத்தில், இந்த அநுமான இருக்கும், போய்விடுகிறது. ஆகையால், எப்பொழுது நம் திருக்குக்குப் பிரதிபந்தமானவை, பிறகு தோற்றாமல், போய்விடுகின்றனவோ, அப்பொழுது, திருசியமாகிய பிரபஞ்சமானது, அதிருசியத்துக்குச் சமானமே. அது பற்றியே, ஜாக்கிரம் "அதிருசியம்" என்று ஏற்பட்டது.

சுவப்நமானது, "நபகிப்ரக்ஞம்" எனவும், "அவ்வியவகார்யம்" எனவும் சொல்லப்படுகிறது; அதாவது, வெளியறிவற்றது, எனவும், நடவடிக்கையற்றது, எனவும் அர்த்தம். நாம் நித்திரை செய்யும் அறையில் நானாவிதமான சாமான்கள் இருக்கின்றன. அவ்வறையில் படுத்து, நித்திரைசெய்யுங்காலத்தில், கனவு காண்கிறோம். அக்கனவில், நாம் மற்றோரிடத்திற்குப் போய், ஒருவன் நமக்குக்கொடுக்கவேண்டியதாக நினைக்கிற, பத்து ரூபாயை வாங்கிவந்து, பெட்டியிற் சேர்த்து, கணக்கில் வரவு வைப்பதாகக் காண்கிறோம். அப்பொழுது, அறையில் நித்திரைசெய்யும் ஞானம்போய், வேறுஞானம் உதிக்கிறது. இதுதான், வெளியற்ற நிலை. பத்து ரூபாய் கனவில்பெற்ற வியாபாரம், மறுகாலையில் எழுந்து பார்த்தால், பெட்டியில் இல்லை. இதுதான் "அவ்வியவகார்ய" நிலை. இவ்விரண்டு அவஸ்தைகளின் சூக்ஷம தத்வங்களை வருகிற சஞ்சிகையில விஸ்தரிப்பேனாக.—

(இன்னும் வரும்)

VI

லோகோபகாரிகள்.

மூன்றாவது அத்தியாயம்.

CHAPTER III.

(2-வது சஞ்சிகை 50 வது பக்கத்தொடர்ச்சி.)

புது சிநேகம்—நாடோடி கதை.

இதமில்லா உபசாரம்—வேண்டாத்தடஸ்தம்.

நமது சபா நாயகர், தமது நண்பர் இருவரையும் காணாமல், ஐயோ! நெடுநேரமாச்சே! இன்னும் வரக்காணோமே! என்னவோ! தெரியவில்லையே! என்று ஏங்கியிருந்தார். இப்படி பரிதபித்துக்கொண்டு இருக்கையில், 'கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்து விழுந்தாற்போல' ஆப்தரிருவரையும் கண்டுவிட்டார். அதிக சந்தோஷத்துடன் எதிர்கொண்டுபோய் கட்டித்தழுவிக்கொண்டார். என்னைவிட்டுப்பிரியமாட்டீரே! பிரிந்துபோன காரணம் என்ன? என்று குசலப்பிரசினை செய்தார். அப்பொழுது, கூலங்கிஷமாகக் கவிவாணர் சொல்ல ஆரம்பிக்கவே, நமது அழகர் பக்கத்தில், நேற்றைதினத்தில் அற்புதக்கூத்தாடிக் குலாவின வண்டிக்காரனையும், ஒரு விசித்திரவானையும் கண்டுவிட்டார். மனோரதத்திற்கு ஒரு குடில்முட்டி கொடுத்தாற்போல ஆயிற்று. முன் எப்பொழுதும் பார்த்தறியாத அந்த விசித்திர விருந்தாளியின் ரூபலாவணியத்தை மனதில் ஆவாகனம் செய்தார். ஆ! ஆ! மயிரழகை என்னசொல்வேன்? எருமைக்கொம்புச்சீப்பு எவ்வளவானாலும், இவருடைய மயிரை அசைக்கமுடியுமா! கண்ணிணை

ஒவ்வொன்றும், குடங்கை அரிசி கொள்ளுமே! முகவிலாசமானது, அழகாகதி பாய்ந்து படிந்த பசுமணல்போலச்சுருள் சுருளாக திவ்விய ரேகைகள் நெருங்கியிருக்கிறதே! வாயின்வடிவோ ஒரு சிறு ஈயையும் தாராளமாய் ஏற்றுக்கொள்ளுமே! என்ற வர்ணனையில் ததைகத்தியானமாய் இருந்துவிட்டார்.

அப்பொழுது, நமது சபாநாயகர், அவ்விருந்தாளியைச்சுட்டிக்காட்டி, வேட்டைவீரரே! "நமது புது சிநேகிதர்; இவ்விடத்தில் அபூர்வமான நாடக சூத்ரதார்—ஆனால், அந்த நாடகத்தை எல்லாரும் பகிரங்கமாய்க் காணவிரும்புவதில்லை; அதன் கதையைச்சொல்ல எத்தனிக்கையில், நீங்கள் வந்துவிட்டீர்கள்" என்றார்.

"ஓ! கதை கொள்ளை கொள்ளை!" என்று, நேற்றைய பச்சைச் சட்டையர், வீரரிடம் நெருங்கிக்குறுகுறுத்தார். "பழய மனுஷியன்; பொறுப்பான வேலை செய்வான்; நடி அல்ல; விசித்திரவான்; மிக்கதுயரம்; கவலை! கவலை! என்று, நாம் போகவரக்கூப்பிடுவோம் என்றார். வீரரும், வாணரும், இதுகேட்டு வெகு சந்தோஷமடைந்து, 'குடியாதகுடி விடியாது' என்று மதாசார பேதமின்றியிருக்கும் தேசாபிமானச் சங்கத்தார், சக்தி பூசை செய்பச்சுற்றிலும் உட்கார்ந்து கொண்டார்கள்.

சபாநாயகர் - "ஐயா பெரியவரே! உமது கதையை இப்பொழுது நாங்கள் கேட்டு ஆநந்திக்கலாமா?" என்றார்.

கவலையரும், தமது சட்டைப்பையிலிருந்து ஒரு பழய புஸ்தகத்தை எடுக்க, வாணரும் ஒன்றை எடுப்பது நோக்கி, "ஓட்டைப்பானையில் ஈப்புகுந்தாற்போன்ற" குரலோடு "ஐயா தாங்கள் தான் கவிராயரோ?" என்றார்.

கவிவாணர், இதைக்கேட்டுக் கொஞ்சம கூச்சமுற்று, "நான்-நான்-அது, எனக்கு அற்பம் அநுபோகம் என்றார்.

கவலையர், ஆ! ஆ! அதற்கென்ன சந்தேகம்? "ராகசோபிதம் ரங்க லக்ஷணம்; காவிய சோபிதம் கர்ம லக்ஷணம்; ஒன்றின் மாய்கையும், மற்றதின் அலங்காரமும் போனால் வாஸ்தவியத்தில் இருந்தாலென்ன? குறைந்தாலென்ன? என்றார்.

"ரொம்பசரி!" என்றார், கவிவாணர்.

கவலையர் - "குத்துவிளக்கு முன் இருந்தால் மணக்கோலம்! விளக்கு மறைவில் இருந்தவனுக்கு என்ன கோலமானால் என்ன?" என்றார்.

கவிவாணர் - கவலையர் தன்னைக்குறிப்பிட்டுக், கூறினதை நோக்கி, ஏதாவது பதில் சொல்லவேண்டுமென்று நினைத்து, "உண்மைதான்" என்றார்.

பச்சைசட்டையர், "ஏது! சுவரமிறங்கிப்போனாற்போல் இருக்கிறது? இவ்விடம் பூச்சாண்டிகள் இல்லை! எல்லாரும் மலைகாட்டுக்கு ஓடிப்போனார்கள்! பயப்படாதேயும்! உற்சாகமாயிரும்! உரத்துச்சொல்லும்!" என்றார்.

சபாநாயகர், "பிரசாதம் கிடைக்கவில்லையோ? இதோ! அமுர்தசாதியும்! புறத்தியார்க்கு உபகரிக்காத ஜன்மம் என்ன ஜன்மம்?" என்றார்.

கவலையர்க்கு சொல்லவேண்டிய தாமதம் தான்? எடுத்துக்கடித்துக்குடித்து, "மீந்ததைக் கொண்டு குடித்து மகிழ்ந்து நமது தேசாபிமானச்சங்கத்தை கௌரவப்படுத்துவீரென பரிபூர்ண விசுவாசத்துடன் பாவிக்கிறேன்" என்றார். எல்லாவரும் சமமாக தேசாபிமான தேவதையின் பிரசாதத்தைப்பெற்று மகிழ்ந்த மகிழ்ச்

சியானது, பல்லைத்திறந்து புதுந்து, மூக்கின் வழியாக வழிந்துகொண்டிருக்கக், கண்ணை மூடுவதும் திறப்பதுமாக, ஆனந்தத்துடன் கவலைபர் கதையைக்கேட்க ஆரம்பித்தார்கள்.

(நாடோடி கதை.)

“ மாதா நாஸ்தி பிதா நாஸ்தி நாஸ்தி பந்து சகோதர அர்த்தம் நாஸ்தி கிரகம் நாஸ்தி தஸ்மாத் ஜாக்ரத ஜாக்ரத ” என்பதின் உண்மை எல்லாவரும் அறிந்தவிஷயம். இதன் பொருள் இந்த தேசாபிமானச்சங்கத்தில், இந்தக்கிரஸ்தவாப்தம் 1909-வது வருஷம் ஆகஸ்டு மாதம் கிருஷ்ண பட்சத்தில், என்னால் எடுத்துச்சொல்வது அசாத்தியம். ஆனாலும் சொல்லுகிறேன். பெற்றார் உற்றார் உறவினர் இவர் சொல்லும் சொற்களுக்கு அர்த்தமில்லை; வீடுதேவையில்லை; உன் இஷ்டப்பிரகாரம் சுவாதந்திரியமாக நடக்கவேண்டியது: என்பதுதான். இது சுருதியாகும். இனிமேல் யுக்திக்காக தேசாபிமானிகள் நான் சொல்வதை ஆதரிக்கவேண்டியது. அநுபவம், பின்வரும் கதையால் விளங்கும்.

நான் கண்காணப்பிறந்தவர் ஒருவர் இவ்வூரில் இருந்தார். அவர் உடன் பிறந்தார் இருவர். குழந்தையாய் இருக்கையில் எல்லாக்குழந்தைகளையும் போல அல்ல: விசேஷ அமைதியுற்றவர். கூப்பிட்டால் குனிந்த தலை நிமிராது, நிலத்தை நோக்கின கற்பமைந்தவர். ஏதாவது கேட்டால் பத்துக்கொன்று பதில் சொல்வது பிரயாசம். இவருடைய தாயார் இத்தகைய குணநிசயங்கள் கண்டு மகிழ்ந்து “என் குழந்தையா! பாவம்! சொன்னபேச்சுக்குப்பதிலுண்டா! தன்பாடு தனக்கு! எச்சுத்தண்டாவிற்குப் போவதில்லை!” என்று அடிக்கடி சொல்வதுவழக்கம். வயதுவந்தபோது வித்தியார்த்தியாகி, தன்னால் இயன்றளவு கற்றுக்கொண்டார். ஆனால், தன் வீட்டில் படிக்கிற வழக்கம் இல்லை. சிநேகிதர்களெல்லாம் ஒரு பிரத்தியேக அறை வாங்கியிருந்தார்கள். அடுத்தாற்போலக் காபி கிளப். என்னைப்போல் பழபது சாப்பிடார்; “ சுடச்சுட! ஊதியூதி! கொஞ்சம் கொஞ்சம்! கடித்துக்கடித்து! உரிஞ்சி யுரிஞ்சி! என்னவென்பது, எல்லாம் அறிந்த நமது தேசாபிமானிகட்கே அர்ப்பிதம். ரசமோ? அதிரசம்! அற்ப சங்கையதிகம் பலம்! நமது நாட்டில் நூதன நாடக சபையார் வந்து, நாடகாலங்கார வைபவத்தால், எல்லா இதயங்களையும் வாரி வழித்துக்கொட்டிக் கொண்டார். என்னுடைய சிநேகர் எப்பொழுதும் அவ்விடமே சுவர்க்கமெனக்கூடினார். உண்ணவும் இருக்கவும் உறங்கவும் நேரமில்லை! ஆட்டம், பெரிய ஆடி எழுத்தமாயிற்று! ராஜபார்டி பறக்கிறது. இழுக்க ஆரம்பமாயிற்றையா! அஞ்சனம்போட்டாலும், அபூர்வ பேட்டியாயிற்று. அதவா அகப்பட்டாலும், சாப்பாடு வேண்டாமா? என்றால், “ உனக்கென்ன? உன் பாடு பார்த்துக்கொள்! ” என்னும் உத்தரவாயிற்று. ஆட்டக்கொட்டகை கலையவே, அந்நியதேச கமனமாயிற்று. கூடவே போய்விட்டார். “ நீர் இல்லாத சதசு ஒரு சதசா? ” என்று சொல்லும் கியாதி பெற்றார். வஸ்திராபரணத்தில் பிரதானபார்ட்டியோ, அம்மான் பார்ட்டியோ இவர் இல்லாமல் முடியாதாம்! இப்படி இருக்கையில், உற்றார் சொல்ல, உறவினர் ஒப்புக்கொண்டு, ஓர் பெண்ணைக்கொடுத்தார்கள். பெண்களுக்கு இவ்வூரில் பிரியமில்லை. மாப்பிள்ளை மனையார் விற்கும் விலை சாதாரணமாக ‘ ஒன்று ’ தான். ஆகையால் பெண்ணைப்பெற்றவர் என்ன செய்வர்! என்னபோனாலும், ஏதோ காரியம் நடந்தால் போதுமென்று

இருப்பது வழக்கம். கன்னியாயிருக்கப்பார்த்த பெண்ணை, பிரபுடையானால் பிரித்தறிவது பிரயாசம் அல்லவா? நான் எப்பொழுதும் போல என் சிநேகிதர் வீட்டுக்குப்போனேன். அவ்விடத்தில் சர்வாலங்கார பூஷிதையாயும் சர்வ சுந்திரவதியாயும் ஓர் பெண்ணைக்கண்டேன். எனது நண்பரை, இவள் யார்? என்று கேட்டேன். அதைத்தவிர வேறு எது கேட்டாலும் சொல்கிறேன், என்றார். ஏன்? என்று கேட்டேன். வயிற்றெரிச்சலை என்ன சொல்கிறது! தாலிகட்டின தினம் புருஷன் முகம் பார்த்ததே தவிர, இதுபரியந்தம், எத்தனை சொன்னாலும், சொல்லுவித்தாலும், லிகிதம் எழுதினாலும், பராமுகமாயிருக்கிறான்! அதை நினைக்கவேவேண்டாம்! என்றார். எனக்கு ஒன்றும் சொல்லத்தோன்றவில்லை. யுக்தியால் ஊகித்துக்கொண்டேன். நமக்கென்னவென்று அதிகப்பேச்சுக்குப் போகவில்லை.

(இதமில்லா உபசாரம்.)

தேசாபிமானிகளே! என் தகப்பனார் எனக்கு ஒரே ஒரு சுலோகம் சொல்லிக்கொடுத்திருக்கிறார்; அதைச்சற்று செவிகொடுத்துக்கேட்கத் தயை செய்யவேண்டும்: அதாவது :-

“ சுவாந வானர சாரங்க, வியாக்ர சிம்மோ வராங்கன, தீபதைலாபஹாரேண, புனசுவானோ பவிஷ்யதி ” என்பதுதான்.

இதன் தாற்பரியம் என்னவென்றால், ஓர் சந்நியாசி ஒரு நாயை வளர்த்து வந்தார். யதி பிக்ஷைக்குப்போனால் நாயும் கூடவே போம். இதைப்பற்றி ஊராரெல்லாம் சொல்லத்தொடங்கினர். இதைச்சந்நியாசி யறிந்து, தன் தபோமகிமையால் நாயைக்குரங்காக்கினார். பிக்ஷை சமயம் இலைகளெல்லாவற்றையும் இழுத்து எச்சிலாக்கத்தொடங்கிற்று. இது நிமித்தம் யதி பிக்ஷை இல்லாமற் குறைந்தது. யதிகளும் வருத்தமுற்று, இதை ஒரு புலியாகச்செய்வோமானால் காட்டில் சஞ்சாரம் செய்துதிரியும், என்று நினைத்து, ஒரு புலியாகச்செய்துவிட்டார். பகற்காலத்தில் உபத்திரவமில்லை. இரவு கழிந்து எழுந்து பார்த்தால், தமது பர்னசாலைக்கு வெளியே கொழுத்த மாடுகள் மாண்டுகிடக்கும். இதுமிகவும் பாப எதுவானதால், அதை ஒரு சிங்கமாக்கினார். பர்னசாலை வெளியெல்லாம் யானையின் களேபரக்குவியலாயிற்று. யோசித்தார்; கடைசியில், அதை ஒரு கன்னிகையாகச்செய்து ராஜனுக்கு சன்மானம் செய்துவிட்டார். தேசாபிமானிகளே! சயனக்கிரகத்தில் குத்துவிளக்கு விடியுமளவும் எரிந்துகொண்டிருக்கும். இக்கன்னிகை வந்தபின் விளக்கு இருந்த இடமே தெப்பாகாது. ஒருநாள் தூங்குகிறபாவனைபோல் ராஜனும் நடித்து நித்திரை செய்தார். இக்கன்னிகை எழுந்து, எண்ணெய் எல்லாம் ஒரு துளியில்லாமல், நக்குவதுகண்டார். மற்றொரு தினம் சந்நியாசியை உபசரித்து, இதன்யதார்த்தத்தைச் சொல்லுமெனவே, சந்நியாசி கோபித்து, மறுபடி நாயாகவே போகக்கடவை எனச்சபித்துவிட்டார். ஆகையால், சுவபாவகுணம் இலகுவில் விடாது, என்றார்.

(வேண்டாத்தடஸ்தம்.)

கவிவாணர், இதைக்கேட்டு என்னமோ குறிப்பேட்டில் பதிவுசெய்தார். சபாநாயகருக்கு இக்கதை கேட்டதில் என்ன அபிப்பிராயமோ தெரியாது, ஆனால் ஏதோ சொல்ல வாய்திறந்தாராம். இந்தவிவரம், நாம் வாணர் குறிப்பேட்டில் கண்டோம், அல்லவா? வாய்திறந்தாரோ இல்லையோ, கதவைத்தட்டுகிற சப்தம் கேட்டுவிட்டார்.

சத்திரக்காரன், ஒருசீமான் வந்திருக்கிறார், என்றான்.

ஏன்ன செய்யலாம்! சத்திரக்காரன் வராமற்போனால், நமது சபாநாயகர் இந்தப்பிரபஞ்சத்தைக்கொஞ்சம் லகுப்படுத்திவிருப்பார். வருபவர் இன்னாரென்று அறியாமையால் சபையார் முகத்தை ஆவலுடன் பார்த்தார்.

வீரர் எழுந்திருந்து, சத்திரக்காரன் போகவே, "ஓ! இதோ வந்தோம்!" "நமது சிநேகிதர்! உள்ளே அழையும்!" என்று சொல்லி, நமது நாயகர் முகநோக்கி, "மெத்தவேண்டினவர்! நல்ல சிநேகிதர்!", "காலையில் எனக்கு அவரைப் பரிசயமாயிற்று" என்றார்.

நமது சபாநாயகருக்குச்சற்று சாவதானம் வரவே, மூன்றுபேர் திருமூர்த்திகள் போலப் பிரவேசித்தனர்.

வீரர்,-"வாரும்! வாரும்! வைத்தியவீரசிகாமணிகளே!"

சபாநாயகரே! "இவர்தாம் வைத்தியவீரர்," "இவர் மல்லர்,' "இவர் பாலதிவாகரர்," பச்சையரே! இவர்களையுமக்குத் தெரியுமே! என்றார். வைத்தியவீரர் முகத்தில் சுபாடவில்லை. இதைக்கண்டவுடன், சிறிது நடுக்குற்றார்.

வைத்தியவீரர், "இவரை நான் நன்றாய் அறிவேன்" என்று அதட்டிச்சொன்னார்.

வீரரும்-"உண்மைதான்" என்றார்.

வைத்தியவீரர், பச்சையரை உற்றுப்பார்த்து, "நேற்றைய தினம் நாம் அக்ஷதை வைத்தது இவர்க்கேதான்! இவர் ஏனோ நம்மை அலக்ஷியம் செய்துவிட்டார்," என்றார்.

மல்லர், "அக்ஷதை வேண்டிக்கிடக்கவில்லை; அவ்விடத்திலேயே சிக்ஷை செய்திருக்கலாமே" என்றார்.

வைத்தியவீரர், "நேற்று நீர் ஆட்டம் பார்க்க வரவில்லையோ" என்று கேட்டார்.

மல்லர், "நில்லும்! நில்லும்! சபாநாயகரே! இந்தப்பச்சையர் உங்களவர்தானே?" என்றார்.

சபாநாயகர்-"இல்லை, இல்லை! ஒருக்காலும் இல்லை." என்றார்.

வைத்தியவீரர்-"உமது சங்கத்தின் உடைகளை, இவர் எப்பொழுதாகிலும் தரித்ததுண்டோ?" என்று கேட்டார்.

சபாநாயகர், "நாம் அறியக்காணோம் என்றார்.

மல்லர், "இந்தப்பொய் கந்தப்புராணத்திலும் இல்லை," என்றார்.

வைத்தியவீரர், "இந்தக்கூத்தாடிப் பையனுக்கு அங்கேயே மரியாதை செய்யவேண்டியிருந்தது," என்றார்.

சபாநாயகர், "என்னவோ ஒன்றும் தெரியவில்லை!" பச்சையரே! நடந்த விருத்தாந்தமென்ன? என்று கேட்கப், பச்சையர் நடந்தவற்றை எல்லாம் ஒளிக்காமற் சொல்லிவிட்டார்.

மல்லர், "இந்த சபாநாயகரின் பொய்சொன்ன பல்லைத்தட்டவேண்டியது!" "இந்தஇடம் தகுந்ததன்று!" என மூவரும் புறப்பட்டுப்போனார்கள்.

சபாநாயகரின் மூச்சு இப்பொழுது தான் வந்தது. "எழுந்திருந்து கதவினிடம் ஓடி, "நம்மை அவமானித்தவரை, உயிர்போனாலும் சரி! ஒருகை பார்த்து விடுகிறேன்" என்று கதவை அறையவே, கதவும் சாத்தப்பட்டது.

சபாநாயகர், கதவானது தம்மை வெளிவிடாதது பற்றிக்கிலேசித்தார்.

சபையோரெல்லாவரும் நாயகரின் கையமர்த்து, "இது எல்லாம் உமது யோக்கியதைக் கடுத்ததல்ல" வென்னவே, கோபத்தினால் வெளுத்த முகம், அப்பாள் அநுக்கிரகத்தால் ஒருவாறு உபசாந்தமாக, பழயபடி சபையோரெவரும் களித்திருந்தனர்.

(இன்னும் வரும்.)

VII

க்ளைவ் பிரபுவின் சரித்திரம்.

(2-வது சஞ்சிகை 57-வது பக்கத்தொடர்ச்சி.)

எப்பொழுது ஒரு ஒதுக்கிடம் கிடைத்ததோ, அப்பொழுது, கட்டுகளைத்தனிக்கை செய்து கணக்கெழுதுவது, அவருடையபதைபதைப்பையும் தைரியத்தையும், சும்மா இருக்கவொட்டவில்லை. 'அந்த டேவிட் கோட்டைக்கே பயங்கரமான, போக்கிரிப்போர்வீரன், ஒருவன் இருந்தான். அவனும் இவரும் கைகலக்கச், சமயம் வந்தபோது, இவருடைய துணிகரத்தால், மேற்படியானைப்பறக்கடித்தார். பிறகு, கம்பெனியாரைக்கெஞ்சிக் கேட்டுக்கொண்டு, கம்பெனியாரின் கொடிப்படைச்சேவகத்தில் பிரவேசித்தார். அப்பொழுது, இவர்க்குவயது இருபத்தொன்று; 'மேஜர் லாரென்சு' என்பவர் சைந்நியாதிபதியாயிருந்தார். பிரெஞ்சுக்காரரோடு நேர்ந்த சண்டைகளிலெல்லாம் மேன்மைபெற்று, மேஜர் அவர்களுடைய பிரீதிக்குப் பாத்திரமானார். பிறகு, சில மாசங்களுக்குள்ளாக, சீமையும் பிரான்சும் சமாதானமாய்விடவே, "டியூப்லே" என்பவர், சென்னையைத்திரும்பவும் இங்கிலீஷார்க்கு ஒப்புவித்துவிட்டார். ஆகவே, க்ளைவானவர் தன் பழய வேலைக்குப்போய்ச் சேர்ந்தார். அப்படிப் போனபோதிலும், சுதேசிகளோடு கலகம் நேர்ந்தபோதெல்லாம், அடிக்கடி 'மேஜர் லாரென்சு' அவர்களுக்கு உதவிசெய்து வந்தார். இவ்விதமாகத் தீர்மானமில்லாமல், குமாஸ்தாவாகவும் யுத்த வீரனுமாகவும் மாறிமாறி உத்தியோகம் செய்கையில், சீமையும் பிரான்சும் ஐக்கியமாக இருந்தபோதிலும், அவ்விரு கம்பெனியாரும், இந்தியாவில் யுத்தநோக்கமே கொண்டிருந்தார்கள்.

அக்காலத்தில், இந்தியாவை ஆண்டுகொண்டிருந்தவர்கள், மொகலாய வம்சத்து மகம்மதியர். அவருடைய ராஜாங்கத்தைப்போல, அவ்வளவு விசாலமும், சம்பத்தும், தோரணையுமுள்ள ராஜாங்கம், இந்தப்பூலோகத்திலேயே கிடையாது. இவ்வளவு பிரஜைகளும், கொள்ளை கொள்ளையாகக்கொட்டப்பெற்ற பொக்கிஷமும், ஐரோப்பாதேசத்தில் ஒரு ராஜனுக்காவது இல்லவேயில்லை. அரண்மனைகளுடைய அழகும் வடிவும், புறத்தியார் கண்ணைக்கவர்ந்து அநேக தேசாந்திரிகளின் இதயத்தை இழுத்துக்கொண்டு, ஆச்சரியகரமாக இருந்தது. டில்லிசிம்மாசனத்தைச் சூழவந்த, அபரிமிதமான ஆடம்பரமும், அளவிலாத பரிவாரமும், குபேர சம்பத்தையுங்கூட காம்க்ஷிக்கச்செய்யுமாறிருந்தது. இந்த டில்லி சக்ரவர்த்தியின் சிற்றரசர்கள் கூட, பிரான்சு

ஜெர்மேனிய ராஜர்களுக்குச்சமான சம்பன்னராயிருந்தார்கள்.

இவையனைத்தும், வெறும் மேலாடம்பரமேயல்லாமல், அந்தரங்கத்தில் அவலமாயிருந்தது. கொடுங்கோன்மை கொடி எடுத்துப்படுங்கோன்மை பிடித்திருந்தது. ஒருபுறம், ராஜகுமாரர்கள் என்கிற தோரணையால், ஒருவர்க்கொருவர் கக்ஷிப்பிரதிகக்ஷி செய்துகொண்டு, சொல்லித்தொலையாத குற்றங்களையும், பகிரங்கமான கெடுதிகளையும், செய்துவந்தனர். ஒருபுறம், பெருமை வேணுமென்ற ராஜப்பிரதிநிதிகளெல்லாம், சுயாதீனம்பெற நினைத்தார்கள். ஒருபுறம், இந்த அந்நிய ராஜாங்கத்துக்கமையாத, ஆணவமுள்ள ஹிந்து வகுப்பார், மலைகளிலிருந்துகொண்டு, வரிகொடாமல், சைந்நியங்களை எதிர்த்துப் போர்கொடுத்து, கீழ்நாட்டு விளைவுகளைக் கொள்ளையிட்டுவந்தார்கள். இந்தப்படி, ராஜாங்கம் எவ்வளவு சீர்கேடாயும், அமைவற்றதாயும் இருந்தபோதிலும், பார்வைக்குப்பச்சென்று, ஐக்கியமும், அந்தஸ்தும், ஆண்மையும், உள்ளதுபோலவே இருந்தது. அவுரங்கஜீபுவின் அரசாக்ஷியில், அவருடைய திறமையும் பாராமல், ராஜ்யமானது நிலைகலைந்துகொண்டே வந்து, கடைசியாக அவர் 1707-௵த்தில் தேகவியோகமானபிறகு அபாய ஸ்திதிக்கு வந்துவிட்டது. உள்ளில் ஊசலும் வெளியிற் பூசலுமாகச், சிலவருஷங்களில் ராஜாங்கமானது சிதைந்து போயிற்று.

நிபத்துக்குப்பல அரசர்கள் தோன்றி, அக்கிரமும் அளிம்புஞ் செய்துகொண்டு, மூக்கிலும் மூலையிலும் போயிருந்து பங்கிசாப்பிடுவதும், க்ஷத்திரியர் சம்சர்க்கமும், கட்டியங்கேட்பதுமாக வாழ்நாட்களைக் கழித்தார்கள். பாரசீகர், ராஜ்யத்துள் பிரவேசித்து, அநேகம்சொத்துக்களைக் கொள்ளையிட்டு, டில்லி சக்ரவர்த்தியின் விலைமதிப்பிலா வைரங்கள் இழைத்த மயில் சிம்மாசனத்தையும் கைப்பற்றிப்போனார்கள். ஆப்கானியர், அப்படியே செய்தார்கள். போர்வீரரான ரஜபுத்திரர், மகம்மதியரைத் தள்ளிவிட்டுச்சுயாதீனராகி, ரோஹில் கண்டில் நிலை பெற்றார்கள். சீக்கர், சிந்து நதிக்கரை வழிகளை ஜெயித்துப், பட்டங்கட்டிக் கொண்டார்கள். யமுனாநதி தீரத்தில், ஜாட்ஸ் என்னும் ஜாதியார், தலைமை பூண்டார்கள். மேற்குசமுத்திரக்கரையில், மகாராஷ்டர் வைத்த சட்டமும், இட்டகொள்ளையுமாகிவிட்டது. ஜனங்கள் பயந்து, மலைகளுக்கு அடிக்கடி ஓடினார்கள். இந்த வாதையினால், அநேகர், மகாராட்டியர்களுக்கு பயந்து, கப்பம் கட்ட ஒத்துக்கொண்டார்கள். இக்கொள்ளை வீரர்களுடைய பாளையத்தில், வெளிச்சத்துக் கிட்ட தீயானது, டில்லி அரண்மனைச் சுவர்மேலிருந்துபார்க்க, ஒருக்கால் தோன்றினதாம். மற்றொரு வகுப்பார், அநேகம் குதிரைப்பட்டாளங்களுடன், வங்காளத்துப்பயிர் பச்சைகளை வருஷா வருஷம், அழித்து, நெற்களையெல்லாம், கொண்டுபோனார்கள். கல்கத்தாவில் இங்கிலீஷாருங்கூட, நடுநடுங்கிப்போய், கோட்டை கொத்தளங்களைத்திருத்தி, பலப்படுத்திக்கொண்டார்கள்.

மொகலாயருடைய ராஜப்பிரதிநிதிகள், எவ்விடம் அதிகாரஞ்செலுத்திவந்தனரோ, அவ்விடத்தில் அவர்களே அரசராயினர். யதேச்சையான பாரம்பரிய ராஜாக்கள் ஆனார்கள். வங்காளம், கர்னாடகம், ஐதராபாத் முதலான இடங்களில், பிரதிநிதிகள் எல்லாம், அரசரே ஆனார்கள்.

இவ்விதமான விபத்து, என்றைக்கு விடியுமோ? உனக்கு எனக்கு என்னும் ஓரியாட்டம், என்றைக்கு ஒழியுமோ? அல்லது இதுதான் என்றைக்கும் கதியோ? கடையில் யாராகிலும் மகிமையாய் முளைப்பாரோ? இந்தியா, மகம்மதியர்க்கோ? மகாராட்டியர்க்கோ? அபலமான ஐசுவரியக்குடிகளை, பலமான பேபரின் போர் வெள்ளமானது, காபூல் மலைகளிலிருந்து, பெருக்க முழங்கவந்து, உழலவைக்குமோ? என்னமோ? எதுவந்தாலும், வரும்! எப்படியானாலும் ஆகும்! இந்த அலங்கோலத்தைப்பார்க்கையில், ஐயாயிரக்காத அலைகடற்கப்பாலிருந்து, வியாபாரம் செய்யவந்த ஒரு கம்பெனியார், உள்ளங்கையத்தனையிடத்தில் ஒதுங்கி இருந்து, உன்னதமான ஹிமோத்கிரி சேதுபரியந்தமுள்ள உலகத்தை, ஒரு நூற்றாண்டுக்குள்ளாக ஒதுக்கி, மகம்மதியரானாலும் சரி, மகாராட்டியரானாலும் சரி, எவரும் தம்மைப்போற்றச் செய்து, சர்வசக்தியுள்ள துரைத்தனத்தை ஸ்தாபித்து, பிரம்மபுத்ரம் தாண்டிப்போர்கொடுத்து, ஆவா அரசனை ஐக்கியப்படுத்தி, சிந்துவையும்தாண்டி வென்று, காந்தகாரத்தில், தங்கள் அடிமையை முடிசூட்டுவர், என்ற எண்ணமானது, எப்பேர்பட்ட இதயூகிக்கும் இருக்கவேயில்லை.

(இன்னும் வரும்.)

VIII வீரமார்த்தாண்ட தேவர்.

இப்பெரியார், வடமொழியிற் பிரபலமாக வழங்கி, யாவரானும் போற்றிப் புகழ்தற்குரித்தாய்ச், சிறந்த நீதி போதனையை விளக்கவல்ல, "பஞ்சதந்திரம்" என்னும் திப்பிய நூலைத் தமிழிற் செம்பாகமான நடையில், செய்யுள் ரூபமாக வமைத்துப்பாடிய ஒரு தமிழ்ப்புலவர். இவர் ஜனனமாதிய விசேட வரலாறுகளொன்றும் நாம் அறிந்து மகிழ்தற்கிடமில்லையாயினும், உத்தேசம் நூறுவருடங்களுக்கு முன் விளங்கியிருந்தவரென்று கூறத்தடையில்லை. பஞ்சதந்திரத்தை இனிய வசனநடையில் கி. பி. 1826 ௵ம் தமிழில் மொழிபெயர்த்த தாண்டவராய முதலியார் என்பார்க்கு இப்புலவர் சிறிது முற்பட்டவரென்பது தெளிவாகின்றது. தாண்டவராய முதலியார் காலம், இற்றைக்கு 84 ஆண்டென்ப. வீரமார்த்தாண்டதேவர், இலக்கிய இலக்கணங்களிற் சிறந்தோங்கிப் புலவர் மகிழ்ந்து புகழ்தற்குரிய பெரும்புலவரல்லாவிடினும், ஒழுகிய வோசையும், விழுமிய பொருளும், ஆழ்ந்த கருத்தும் விரவிச்செறிந்து, படிப்பதற்கினிமை பயக்குஞ்சொல்லலங்காரத்தோடு, செய்யுளியற்றுந் தன்மையில் மேம்பட்டுத், தமிழகம் புகழவீற்றிருந்த செந்தமிழறிஞர் பல்லோரில், இவரையுமொருவராகக் கொள்ளுதலும் இழுக்காகாது.

பஞ்சதந்திர நூலின் சிறப்புப்பாயிரத்தில்,

"வயவீர ரொன்பான் வழியுற்ற மேலோன்
செயவீர மார்த்தண்ட தேவன்—வியமாய
பன்னூலி னுண்ணூலாம் பஞ்சநல் தந்திரத்தை
மன்னூலாச் சொற்றான் மகிழ்ந்து"

எனவரும் செய்யுளில், இரண்டாம் அடியால் இப்புலவர்க்கு வீரமார்த்தண்ட தேவர் என்ற பெயர் தெரிதலோடு, முதலடியில், வயவீர ரொன்பான் வழியுற்ற மேலோன், என்ற அடைமொழியால், இப்புலவரது குலம் † தந்துவாயரென்றும், √ செங்குந்தரென்றுங்கூறப்படுகிற ‡ கைக்கோளரது மரபென்பதுணரப்படும். வயவீர ரொன்பான் வழியுற்ற மேலோன் என்பதற்கு — வெற்றியையுடைய ஒன்பது வீரர்களது சந்ததியிற் பிறந்த பெரியரென்று பொருள்; பரமசிவனது மனைவியான பார்வதிதேவியினது காற்சிலம்பினின்று முன்னொரு காலத்திற் சிதறிய ஒன்பது மணிகளில் பிரதிபலித்த, அவளது சாயையாகிய ஒன்பது பெண்களின் புத்திரர்களும், சுப்பிரமணியக்கடவுளின் உடன்பிறந்தவர்களுமான வீரவாகு, வீரகேசரி, வீரமாமகேந்திரன், வீரமாகேச்சுரன், வீரமாபுரந்தரன், வீரராக்கதன், வீரமார்த்தாண்டன, வீராந்தகன், வீரதீரன் என்னும் நவவீரர்களுடைய வம்சத்தவர் கைக்கோளரென்பது, ஓர்மரபு: இதனை ஒட்டக்கூத்தர் பாடிய "ஈட்டியெழுபது" னூலுங்காண்க.

இவ்வளவே இப்புலவர் வரலாறுகத் தெரிந்தவை.

ஒப்புயர்வற்ற திப்பிய மக்களென உலகம் புகழத்திகழ்ந்த புலவர் பெருமான்களின் சிறந்த சரிதங்கள் தக்க ஆராய்ச்சியோடு, காலவரையறையாதிய விசேட சம்பவங்களுடன் வெளிவராத காரணத்தால், அன்னார் கல்வி, செல்வம், புகழ், பெருமை, குணம், அருஞ்செயலாதி விஷயங்களை நாமறிந்து, மகிழ்ந்து போற்றிக்காத்தற்கு இயலாதவாறாயின. அதனால், அவ்வரலாறுகள் குடத்திட்ட விளக்கென மறைந்தது. மேனாட்டு நாகரீக வைரம்பற்றிய ஆங்கிலக்கவிகளின் சரிதங்களில் இத்தகைய குறைபாடுகள் காண்பது அரிதாகவே முடியும். இவற்றிற்குக்காரணம் நந்தமிழ்மக்கள் சரித்திர ஆராய்ச்சியில் கவலைகொள்ளாதிருந்ததுவேயாம். இஃது தமிழணங்கின் தௌர்பாக்கியம்போலும். நமதுநாட்டிற் கண்மணிபோல் விளங்கிய கவிஞர் சிகாமணிகளது அழகிய சரிதங்களை நன்றாகப்பரிசீலனை செய்து வெளியிடுவதை நாம்படித்துணருவதால், அவர்களிடம் நமக்கு கௌரதாபுத்தி அதிகமாதலோடு ஜனசமூக வாழ்வை உயர்வும், ஒழுங்கும் பெறச்செய்வதற்கும் முக்கிய ஏதுவாமன்றோ? இனியேனுஞ் செந்தமிழறிஞர்கள் நந்தமிழகத்திடை, யாவரும் பரவுமேவருஞ்சிறப்போடு வீற்றிருந்த தமிழ்ப்பெரும் புலவர்களது அரும்பெருஞ் சரிதங்களை வெளிவிட முற்படுமுன், அப்புலவர்கள் வாழ்ந்திருந்த காலம், இடம், குணம், கல்வி, சிறப்பு, அபிமானித்துக் காத்த வள்ளல்களின்னாரென்பது மாதிய சம்பவங்களை இயன்றளவேனும், விளக்குதலிற் கவலைகொள்ளின், முற்கூறிய குறைகள் முற்றும், நம்மை விட்டொழிவது வருத்தமாகாது. இதனை நன்குணர்ந்த தமிழபிமானிகளாவார், இக்கோவையின்கண், நவீனமாய்த்தோன்றித்தவழ்ந்தினிதொளிரும் "பிரபஞ்சம்" என்னும் பத்திரிகையின் ஓரங்கத்தில் முறையே வெளியாகாதுள்ள சிரியபுலவர்களின் கிரந்தங்களை விளக்க முயலுவாராக.

இங்ஙனம்,

சி. கு. நாராயணசாமி முதலியார்,

கோவை.

---

† "நூல்பயிலும் வாயர்,"- இதனை வித்வான் மாகறல் கார்த்திகேய முதலியார், தாமியற்றிய "செங்குந்தர் மரபுவிளக்கம்" என்னும் நூலில்,

"தாயரும் பன்னகன் மாணுக்கர் யாருந் தழைந்துவர
நேயரி னெண்ணி முகமே யகமே நெடிதலர்ந்தே
ஆயருநூல்பல வாய்கொண் டுரைத்தலி னன்றதந்து
வாயரென் றேபெயர் பூண்டனர் செங்குந்தர் மண்ட [லத்தே."

என விளக்கிய வாறறிக.

√ "செங்குந்தர்"- பகைவரது உதிரத்தாற் சிவந்த ஈட்டியையுடையவர்.

‡ "கைக்கோளர்" என்பது, ஒழுக்கத்தின் கொள்கையோர் எனப்பொருள்.

கைக்கொள்வரென்னுந் தொழிற்பெயரின் தனிவினையாகிய கொள்ளென்னும் பகுதி கோளென நீண்டு பலர்பால் அர் விகுதி புணர்ந்து கோளர் என்றாயிற்று. (இலக்கணக் கொத்து வினையியல் 2-வது சூத்திரம்.)

ஷை முதலியார் அவர்கள், எமது பார்வைக்கு அனுப்பிய பொய்யாமொழிப்புலவரது சரித்திரப்புத்தகத்தைப்பார்வையிட்டு மகிழ்ந்தோம். இவர், ஷைசரித்திரத்தை, அருமையாகத்திரட்டி, இனிய தமிழ் நடையில், எழுதி முடித்திருக்கிறார். நமது பூர்வீக தமிழ்ப்புலவரது சரித்திரங்களை ஆராய்வதிற் சிறந்த பிரயாசை எடுத்து வருவதாகத் தெரியவருகிறது. ஆகையால், பிரபஞ்சம் பயனடையும்பொருட்டு, அடிக்கடிநமது பூர்வகாலப்புலவர்களின் அரிய சரித்திரங்களை, எமது சஞ்சிகை வழியாக, வெளியிட்டு வருவாரென்று நம்புகிறோம்.

C. R. Padmanabha Iyer.

IX
இந்தியா சட்ட நிரூபண விருத்தாந்தம்.

சிவில் அப்பீல்.

(2-வது சஞ்சிகை 61-வது பக்கத்தொடர்ச்சி).

அப்பீல்வாதி — ஷேக் மகமது ராவுத்தர்.

பிரதிவாதிகள் — பிரிடிஷ் இந்தியா புகைக்கப்பல் சங்கத்தார்.

வாதியானவன், 4000 மூட்டை அரிசியை, மேற்படி கம்பெனியாருடைய கப்பலில், ரங்கூனிலிருந்து ஏற்றி, தூத்துக்குடிக்கு அனுப்பினான். அதில், 250 மூட்டை அரிசி கெட்டுப்போய், சேதமாயிற்று. இந்த நஷ்டத்துக்காக, வாதியானவன், தூத்துக்குடியில் வழக்கு செய்தான். கோர்ட்டாரவர்கள், கம்பெனியாருடைய அஜாக்கிரதையால் நஷ்டமுண்டாகவில்லையென்று, தீர்மானம் செய்தார்கள். வாதியானவன் ஜில்லா கோர்ட்டார் முன்பாக அப்பீல் செய்யவே, ஜில்லா கோர்ட்டாரும் அவ்விதமாகவே தீர்மானம் செய்தார்கள். பிற்பாடு வாதியானவன், ஹைகோர்ட்டார் அவர்கள் முன்பாக அப்பீல் செய்தான். இரண்டு ஜட்ஜிகளுக்குள்ளாக இவ்விஷயத்தில் அபிப்பிராய பேதம் வரவே அசல் வழக்கு விஷயமே அப்பீல் செய்ய இடமாயிற்று.

இவ்வழக்கில் தீர்ப்புசெய்த விஷயமாவது:- கம்பெனியார் வாதமென்னவென்றால், 'ஏற்றுமதியில்' நிபந்தனைப்படி, கப்பலிலிருந்து சரக்கு இறக்கியானவுடனே, சரக்குக்கு நேரிடும் கெடுதிக்குக், கம்பெனியார் பாத்தியப்படமாட்டார்கள், என்பதுதான்.

'ஏற்றுமதியில்' நிபந்தனையில், "இதில் கண்ட சாமான்களை தூத்துக்குடிக்குக்கப்பலில் ஏற்றிக்கொண்டுபோய், ஏற்றுமதி காலத்திலிருந்த நிலைமையிலும் தரத்திலும், ஒப்பிப்போமாகவும்; தெய்வசங்கற்பத்தால் சத்துருவினலாவது, திடீரென உண்டாகும் கடற்கரை அபாயங்களாலாவது, கிருமி முதலியவற்றுலாவது அல்லாத விதங்களிலாவது, கப்பல் மாலுமி, உடமஸ்தன், கம்பெனி உத்தியோகஸ்தர் ஆள்கள் இவர்களாலுண்டாகும், ஜாக்கிருதையில்லா வழிகளிலாவது, நேரிடும் கெடுதிக்கு உத்தரவாதம் செய்வோமாகவும்."-

"கம்பெனியாரின் ஏஜண்டுகளினுடைய ஆபீசில் காண்பித்த கட்டண வீதங்களைச்செலுத்தினபிறகு சரக்குகளை, முழுமையாகவோ சிறிது சிறிதாகவோ, கம்பெனியார், குறித்த ஸ்தலத்துக்கு ஏற்றிக்கொண்டு போகவும், சரக்கைப் பெற்றுக்கொள்ளும் வரையில், வேறெரு கப்பலிலோ, துறையிலோ, மண்டியிலோ, அதற்கு ஏற்படும் கட்டணவீதப்படி செலுத்தும் விஷயத்தில், சரக்கின் உடமஸ்தனுடைய ஜவாபின் மேலும் சிலவின்மேலும், மேற்படி சரக்குகளை வைத்துக்கொள்ளவும், கம்பெனியார் பாத்தியஸ்தராவார்கள்."- "எந்த சந்தர்ப்பங்களிலும் எவ்வித விஷயங்களிலும், கப்பலிலிருந்து சரக்கை இறக்கியானவுடனே, சரக்குக்கு உண்டாகும் கெடுதிக்குக், கம்பெனியார் பாத்தியஸ்தராக மாட்டார்கள்." என்று காணப்பட்டது.

தூற்றுக்குடியில் சரக்கை இறக்குகையில் மழைபெய்ததாலும், துறைமுகத்தில் அடுக்கப்பட்டபொழுதும், சிலநாள்களாக மழைபெய்து கொண்டிருந்ததாலும், மூட்டைகள் மூடப்படாமல் இருந்ததாலும், அரிசி நனைந்து கெட்டுப் போயிற்றென்றும், பிற்பாடு இன்ன தேதியில் சரக்கானது ஒப்பிக்கத்தயாராக்கப் பட்டிருந்ததென்று சொல்லமுடியாதென்றும், ருசு ஏற்பட்டது.

பிரதான ஜட்ஜியும், மற்றொரு ஜட்ஜியும், மேற்படி நிபந்தனையின் கடைசி வாசகத்தால், கம்பெனியார் நஷ்டத்துக்கு பாத்தியப்பட்டவரென்றும், அப்படிக்கட்டுப்படாமலிருக்கவேணுமானல், வாசகத்தில் "எந்த சந்தர்ப்பங்களிலும் எவ்விதவிஷயங்களிலும்" என்றுபொதுப்படக் கூறமல்; இன்னின்ன சந்தர்ப்பம், விஷயம், என்று வியக்தமாகச் சொல்லியிருக்கவேண்டும், என்று அபிப்பிராயப்பட்டார்கள்.

மற்றொரு ஜட்ஜியவர்கள், சரக்கானது இறக்கப்பட்டு, உடமஸ்தனுக்குஅறிவிக்கப்படும் வரையில், அடையும்கெடுதி பாத்தியத்தினின்று பிரதிவாதிகளை விலக்க, மேற்படி கடைசி நிபந்தனையே போதுமானதென்றும், அபிப்பிராயப் பட்டார்.

இதில் பிரதான ஜட்ஜி அவர்கள் எடுத்துரைத்த தீர்ப்பாவது:- இங்கிலாண்டில் அநுசரணையான சட்டமானது இந்தியாவிலும் ஜாரியாக, இங்கிலாண்டில்இருக்கும் இன்ஷியூரென்சு முதலானவை இந்தியாவில் இல்லையாதலால், வியாபாரிகள் சரக்கை ஒப்பிக்கையில் க்ஷேமமாகக்கொண்டுபோய் சேர்க்கப்படும் என்ற நன்னம்பிக்கை வைத்துத்தங்கள் தேசச்சட்டத்தையே அநுசரிக்கிறார்களாகையால், கம்பெனியாரே உத்தரவாதிகள் என்றும், சரக்கைப்பரவசப் படுத்தியானதும, அதற்கு நேரிடும் கெடுதியை வாதி பார்க்கமுடியாதென்றும், மோசக்கருத்துடன் கம்பெனியார் தமது ஆட்களைக்கொண்டு சரிவரப்பாதுகாக்கப்பட்டதென்று சாட்சிசொல்லுவித்தால், அதை மறுக்க வாதியால் சாட்சி கூற முடியாதென்றார், மேற்கண்ட காரணங்களால் இந்த அப்பீலை ஒப்புக்கொள்ளாததற்கு நியாயமில்லையென்றும், அப்படி ஒப்புக்கொள்ளாமற்போனல் வியாபாரிகளுக்கு மிகுந்த நஷ்டம் நேரிடுமென்றும், இந்த நஷ்டத்தைத் தீர்மானப்படுத்த கீழ் கோரட்டாருக்கு அனுப்பவேண்டுமென்றும் தீர்மானித்து, தூத்துக்குடி ஜில்லா கோர்ட்டாருக்கு அனுப்பிவிட்டார்கள்.

பிற்பாடு உத்திரவுப்படிக்கு விசாரணையாகி, மூட்டை ஒன்றுக்குப் பத்துரூபாய் வீதம் தீர்மானப்படுத்தி, 26 மூட்டைக்கு 2600 ரூபாயும் கோர்ட்டார் அநுவதித்த வட்டியும் வாதிக்குக் கொடுக்கும்படியாக பிரதிவாதிமேல் டிகிரி செய்யப்பட்டது. (ம. ச. கோ. புஸ்தகம் 32-பக்கம் 97-பார்க்கவும்.

News and Notes.

வர்த்தமானங்கள்.

தேக சுகத்திற்குறைவிடமாகிய நம் கோயமுத்தூரில், பிளேக் மாரியானவள் தனது சுகத்தையே மிகப் பெரிதெனநினைந்து, சென்ற 7 மாதகாலமாக வசித்து வருகின்றனள். ஊராரெல்லாம் அங்குமிங்கும் ஓடியலங்கோலப்படுகின்றனர். இக்கஷ்டம் எப்பொழுதுதான் விடியுமோ அறிகிலம்.

மேற்படியூர் இடையர் வீதியை 'எழுமலையான்' என்னும் ஓர் தெய்வம் காப்பதாக வாக்களித்துளதாம். தன் ஆணைமீறி வேறு இடங்களிற் குடிபோனவரை பிளேக்மாரியை அனுப்பி வாவழைக்கிறதாக வெருட்டுகிறதாம் யாரேனும் விவேகமாக கேள்விகேட்டால் "உனக்கு வித்தியாகர்வ அகம்பாவமா? அடக்கிவிடுகிறேன், பார்!" என்று அதட்டுகிறதாம் "ராஜாப்பிரத்தியக்ஷ தெய்வதம்" ஆகையால், நமது கலெக்டர் துரையவர்கள் பிளேக் மாரியை சுவாதீனதில் வைத்திருக்கும் இந்த எழுமலையுடையானைவசீகரித்து நிவர்த்தி செய்யச் சொல்வாரானல், பிளேக்மாரி தொலைந்தே போம்

திருப்பூரில் தாலூகா கச்சேரியும் முன்சீப் கோர்ட்டும் ஏற்பட்ட நிமித்தம் பகவாநுக்ரகத்தால் அக்ரஹாரங்கள் நூதன நிர்மாணமாகவே நிகழும் ஆவணி மாதம் 5ந்தேதி தனுர்லக்னத்தில் ஸ்ரீனிவாசபுர அக்ரஹார கிரஹப்பிரவேசமானது ஹோமப்பிராம்ண சந்தர்ப்பணமுடனும் ராமாயணம் ஹரிகதா இத்யாதி காலக்ஷேபங்களுடனும் நடந்தேறியது இதில் பரம பக்தர்களான ம-ா-ஸ்ரீ ஸ்ரீநிவாச அய்யங்கார் முன்சீப் அவர்களும் ம-ா-ஸ்ரீ வக்கீல் தேசிகாசாரியார் அவர்களும் எடுத்துக் கொண்ட முயற்சியானது பகவானுடைய அநந்த குண கல்யாணவைபவத்தை பல்லாண்டாகப்பொலிவிக்கிறது

கல்கத்தாவில் 'பெரி' 'பெரி' என்னும் ஓர் நூதன நோய் அநேகரைக் கொள்ளை கொள்கிறதெனக்கேட்டு பீதியடைகிறோம்.

நமது தேசவாசிகளின் லௌகீக நினைவைத்தூண்டின ரிப்பன் பிரபு சுவர்க்கப்பிராப்தி யானரெனக்கேட்டு வருந்துகிறோம்

சீமையில் 'ஆகாயக்கப்பல்' என்னும் புஷ்பவிமான நிர்மாணம் தேர்ச்சியடைந்து வருவதாகக்கேள்வியுற்று மகிழ்கிறோம்

ஷோலாப்பூர் ஜில்லா வயாகாரஜக்கிராமத்தில் குரங்காட்டி ஒருவன் கொல்லப்பட்டு அவனுடைய குரங்குகள் கொலையாளியைக் கண்டுபிடிக்க போலீஸ்பட்டேலுக்கு உதவிசெய்ததாக "இந்துநேசன்" பத்திரிகை கூறுகின்றது

பிஷாவருக்கருகில் பௌத்தருடைய அஸதி சாம்பல் அகப்பட்டதென்றும் இது ஒரு சிமிழில் இருந்ததென்றும் பத்திரிகைகளால் அறிகிறோம் தகனக்கிரியைக்குப்பிறகு அஸதி சாம்பலை ஆற்றிற்போடுவது வழக்கமாயிருக்க சுமார் 2500 வருடங்களுக்குமுன் தகனசாம்பல் சிமிழில் சஞ்சயனமான காரணமென்னே வறிகிலேம.

அமேரிக்கா தேசத்தில் ஹாட்ஸ் பிரிங்கிஸ் எனும் இடத்தில் எச் ஜே காம்பெல்எனும் சீமான் ஒருவர் முதலைக்குக்கடிவாளம் போட்டு வண்டிசவாரி பழக்குவதாக "இந்து நேசன்" பத்திரிகையில் கண்ணுற்று வியந்தோம்.

கோயமுத்தூர் விவசாய காலேஜ் ஸதாபனர்த்தம் எடுத்துக்கொள்ளப்பட்ட பூஸதிகளுக்கு பிரதிபலமாக அளித்ததொகை அப்பீலில் அதிகரிக்கப் பட்டதெனவதந்தி.

திருவாரூரில் பிரசுரமாகும் 'கமலாசனி' எனும் தமிழ்ப்பத்திரிகை ஒன்று எமக்கு அனுபபப்பட்டிருக்கிறது இதன் வருஷ சந்தா ரூபாய் 2 யாவரும் கவனிக்கவேண்டிய அரிய விஷயங்கள் திரட்டி வரையப்பெற்றுளது இப்பத்திராதிபர்க்கும் மற்ற பத்திராதிபர்க்கும் வந்தனமளித்து உபசரித்துளேம்

The Coimbatore Friends' Association (Limited.) Printers.

கோயமுத்தூர் பிரண்ட்ஸ் அசோஸியேஷன் (லிமிடெட்.) அச்சுயந்திரசாலை.

இக்கம்பெனியின் மூலதனம் ரூ. (20,000) பங்கு 1க்கு 5-ரூபாய் வீதம் (4000) பங்குகளாகப்பிரித்து, இந்தியன் கம்பினீஸ் 1882 வருஷத்திய 6-வது ஆக்டுப்படி 1908 வருஷம் மேமாதத்தில் ரிஜிஸ்தர் செய்து நடத்தப்பட்டு வருகிறது.

இக்கம்பெனியில் இங்கிலிஷ் தமிழ் இரண்டு பாஷைகளில், நேர்த்தியாய் பல கலர்களில் அச்சிடுவதும் கில்ட்செய்வதும்பாங்குகளுக்கும்மண்டிகளுக்கும் கணக்குப்புத்தகங்கள் முதலானதும் தயார்செய்து தோல்காலிகோ முதலிய பயிண்டும் செய்யப்படும். இப்போது அநேக பங்குகள் சேர்ந்திருக்கிறது. கொஞ்சம் பங்குகள்தான் பாக்கியிருக்கிறது. இஷ்டமுள்ளவர்கள் மேற்படி கம்பெனியின் மானேஜருக்கு எழுதி அப்ளிகேஷன் பாரங்கள் தருவித்துக்கொள்ளலாம். ரூல்ஸ் புக்குவேண்டுவோர் 4 அணா அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

இக்கம்பெனியானது நிர்வாகசபையார் அவர்களால் நடத்தப்பட்டுவருகிறது. 1908 வருஷம் மே மாசம்முதல் 1908 வருஷம் டிசம்பர் மாசம் 31-தேதிவரை கூடிய 8 மாதத்திற்கு மாதம் 1க்கு 100க்கு ரூ. 3-9-5வீதம் லாபம்தேறியிருக்கிறது.

இதன் பிராஞ்சு ஆபிஸ் திருப்பூரில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது.

ஜி. அனுமந்தருவ்,
மானேஜர்.

விளம்பரம்.

☞ இதனால் சகலமான கனவான்களுக்கும் தெரியப்படுத்துவது யாதெனில்,

கோயமுத்தூர் இரங்கேகவுண்டன்வீதி (சின்னக்கடைவீதி) மேல்புரம் சிரேணியில் 487, 488 நெ. கதவிலக்கமிட்ட மெத்தைக்கட்டடத்தில் புதியதாக ஒரு கரூர் ஜவுளிக்கடையில் சேலம், ஜலகண்டாபுறம், தஞ்சாவூர், கும்பகோணம், ராசிபுரம், பவானி, நரசிங்கன்பேட்டை தாராபுரம், குற்ருலம், கொறநடு, அய்யம்பேட்டை, காஞ்சிபுரம், ஆரணி, மதுரை, உப்பாடை, காக்கிநடா, நெல்லூர், சென்னை, பனாரஸ், உள்ளூர் முதலிய் இடங்களில் தயாராகும் முதல்தரமான ஜவுளி தினுசுகளை சுவல்ப லாபத்திற்கு கரூர் விலைக்கு விற்கப்படும்.

மேற்படி கடையில் விற்கும்படியான சரக்குகள் நயமாயும் கெட்டி சாயமுள்ளதாயுமிருக்கும். கோறும் சரக்குகளில் வித்தியாசமும் மாறுபாடுமில்லாமல் விற்கப்படும். எங்கள் கடையிலிருக்கும் சரக்குகளை எங்கள் ஏஜண்டுகள் மேற்படி இடங்களுக்குச் சென்று எங்கள் கடைக்கென்றே தயார்செய்யப்பட்டிருப்பதால் நெசவு அழுத்தமாகவும் சரக்குகள் திடமாமவும் விலை சரசமாகவுமிருக்கின்றன. எல்லாருடைய அநுகூலத்தின்பொருட்டே யாவர்க்கும் ஒரே விலையாக சுவல்ப லாபத்திற்கு விற்கவேண்டுமென்பதே எங்கள் முக்கிய கருத்து. இன்னும் வேண்டிய விஷயங்களுக்கு எங்கள் கடையின் ஏஜண்டுகளாகிய மகா-ா-ஸ்ரீ K. தேவதத்தய்யர், B. வரதராஜுலு செட்டியார் இவர்களிடத்தில் நேரில் கேட்டுத்தெரிந்துகொள்ளலாம்.

☞ நல்ல முதல்தரமான கஸ்தூரியும் விற்கப்படும்.

V. R. K. & Co.,
Cloth Merchants & Commission agents,
Coimbatore and Vellakkener.

இவ்வச்சாபீசில் விற்பனைப்புத்தகங்கள்.

				ரூ.	அ.	பை.
தேடச்சிறந்த தெரிசனம் (நிரோட்டயமகவந்தாதி.)	(By Editor)	...	...	0	1	6
நன்னூல்யாப்பதிகாரம்	Do	...	...	0	3	6
சிவமகாபுராணம். (வேலாயுதபண்டிதரால்)		...	...	3	0	0
சிவில் புரோசீஜர் கோட். (புதிது)		...	...	0	12	0

ADVERTISEMENTS.

(Per-annum) 1-வருஷத்திற்கு				
Full page (முழுப்பக்கம்)	Rs.	10	0	0
Full Column (அரைப்பக்கம்)		6	0	0
Half Column (கால்பக்கம்)		3	0	0

விஞ்ஞாபனம்.

எமது அருமை நேயரே! இச்சஞ்சிகை தொடங்கின உத்தேசமெல்லாம் தங்களைப்போல்பவர், எமது நுண்மையறிவிற்கெட்டியதிரட்டி வரைந்துளவற்றை இனிதேற்கொண்டு, ரிஷிப்ரோக்தமாங் கதை பலவும் வரைந்த விடத்து நேர்ந்த பிழையை மன்னித்து, தெய்வீகமான ரிஷி கதைகளை அதிசயோக்தியின்றி தர்மார்த்தகாம மோக்ஷமெனும் புருஷார்த்தங்களை எல்லாவருமடையும் பொருட்டு, வனப்பெட்டினின் வாய்ந்ததமிழ்க்கவியால் எழுதத்துணிந்த எமதுபிரயத்நம் சபலமாக, இந்தச்சஞ்சிகையைத்தருவிக்கவும், தங்களுடைய சிநேகிதர் பலர்க்குந்தெரிவித்து அவரைப்பெறுமாறு செய்யவும், விநயபூர்வமாய்ப்பிரார்த்திக்கின்றனம்.

G. HANUMANTHA RAO & Co.,
COIMBATORE.

The Coimbatore Friends' Association (Limited) Printers.

THE WORLD.

REGISTERED. M. 823. **பிரபஞ்சம்.**

பிரபஞ்ச தர்மம், நடவடிக்கை, சட்டம், வித்தியா விநோத முதலிய வற்றைப்பற்றிய ஓர் மாதாந்திரத் தமிழ்ச்சஞ்சிகை.

ஜி. ஹனுமந்தராவ், பத்திராதிபர். (Proprietor.)

கோயமுத்தூர் பத்மநாப ஐயர், (Editor & Publisher.) பிரசுரகர்த்தா.

வருஷ சந்தா ரூ. 2 4
6 மாதத்திற்கு ... 1 2
பிரதிசஞ்சிகை ... 0 3
வெளிநாட்டுத் தபாற் கூலி பிரத்தியேகம்.

கலி 5011.
சௌமியவருஷம் புரட்டாசிமாசம்.
SEPTEMBER 1909.

புஸ்தகம் 1.
சஞ்சிகை 4.

விஷய சூசிகா.	பக்கம்	INDEX	PAGE.
1. இலக்கணநூல்	98	1. Tamil Grammar ...	98
2. ஸ்ரீமத்வால்மீகி ராமாயணம் ...	101	2 Ramayana(Poeticaltranslation)	101
3. கீசகவதம் (நாடகம்) ...	103	3. End of Kichakas (A Drama)	103
4. லௌகீக தந்திரதர்மம் ...	106	4 Political Economy ...	106
5. சுவப்நாவஸ்தை	109	5. A Dream	109
6 லோகோபகாரிகள் (விநோதகதை)	110	6 The Philanthrophists (ANovel)	110
7. க்ளைவ் பிரபுவின் சரித்திரம் ...	113	7. Essays(Macaulay s)onLordClive	113
8. இந்தியா தேசத்தின் மகிமை ...	116	8. India's greatness ...	116
9. தலபுராண வாசுதேவ முதலியார்	119	9. Life of Vasudeva Mudaliar	119
10. சட்ட நிரூபண விருத்தாந்தம்	121	10 Legal notes on Law Reports	121
11. வர்த்தமானம், விளம்பரம் ...	124	11. News & Advertisements	124.

G. HANUMANTHA RAO & Co.,
28, Karuppa Goundan's Street,
COIMBATORE.
20—9—09.

THE WORLD.

REGISTERED. M. 823.

பிரபஞ்சம்.

பிரபஞ்ச தர்மம், நடவடிக்கை, சட்டம், வித்தியா விநோத முதலிய
வற்றைப்பற்றிய ஓர் மாதாந்திரத் தமிழ்ச்சஞ்சிகை.

ஜி. ஹனுமந்தராவ், பத்திராதிபர். (*Proprietor.*)

கோயமுத்தூர் பத்மநாப ஐயர், (*Editor & Publisher.*) பிரசுரகர்த்தா.

வருஷ சந்தா ரூ.	2	4	கலி 5011.
6 மாதத்திற்கு ...	1	2	சௌமியவருஷம் புரட்டாசிமாசம்.
பிரதிசஞ்சிகை ...	0	3	SEPTEMBER 1909.
வெளிநாட்டுத் தபாற் கூலி பிரத்தியேகம்.			

புஸ்தகம் 1.

சஞ்சிகை 4.

எமது அருமை நேயரே! சாக்ஷாத் ஜகதீசுவரனுக்கே எல்லையில்லை. அவ்விதமே அவருடைய ஆக்ஞைக்கும் அளவில்லை. அவருடைய மகிமையை எம்மால் எடுத்துரைக்க ஏலாது. "யத்யத் விபூதி மத்ஸத்வம்" என்ற கீதாவாக்யத்தால், பிரபஞ்சத்தில் தோன்றும் விசேஷ மகிமைகள் யாவும் பகவத் சத்வ சங்கல்பமேயாம். ஆகையால், அநேகமான சஞ்சிகைகள் பிரசுரமாயினும், அவை போதுமானவையல்ல. இன்னும் அநேகம் பிரசுரிக்கப்படவேண்டுமென்பதே எமது அபிப்பிராயமாம். "சிறு துரும்பும் பற்குத்த உதவும்" என்றபடி, எதுவும் வியர்த்தமாகாது. இதற்கு மேற்கோளாக விவேகாநந்த சுவாமிகள் 1896 ஆகஸ்டு 26-உ எழுதிய நிருபச் சங்கிரகமாவது:—

"எதைச்செய்யினும் தத்ஸமயம் அதே உன் சேவார்த்த சாதனமாக இருக்கட்டும். இந்த சஞ்சிகையே உன் இஷ்ட தேவதையாகட்டும். ஆனால், நீ தேர்ச்சியடைவாய்.

இச்சஞ்சிகையில் தேர்ந்த பின்னர், தமிழ், தெலுங்கு, கன்னட முதலான அநேக சஞ்சிகைகளைத் தொடங்கு. மதிராஸ் மகாஜனங்களெல்லாம் நல்லவர்கள்; முயற்சியுடையார்; ஆனால். ஸ்ரீமத் சங்கராசார்ய உலகம் தவிர மற்றெல்லாம் பாசப்பற்றினை விட்டாரல்லர் எனக்காண்கிறது.

என் குழந்தைகாள்! அனைவரும் அங்கிஷேதத்திலாழ்ந்து, உலகவாஞ்சையை ஒழிக்கவேண்டும்,-என்னின், கைவல்லிய தீக்ஷை கிடைப்படும்.

தைரியமாய்த் தொடங்குங்கள்,— பீடிகை முதலான விரிவு விஷயங்களை இப்பொழுது சிந்திக்கத்தேவையில்லை,- "குதிரை வந்தால் கடைஞாணும் வரும்." "இறுவரைக்காறு முயல்க,"- யான் உம்மோடுளேன்; யான் போனபின்னும் என் அந்தராத்மன் உம்மோடுகூட இருக்கும். இவ்

ளாயுள் போகும், வரும்,- ஐசுவரியம், கீர்த்தி, சுகம், இவையனைத்தும் சுவற்பகாலந்தான். கேவலம் பிரபஞ்சப்புழுவாகப் பொன்றுவதைவிட, சுவதர்ம கர்மாநுஷ்டான களத்திற் பலியாவது மெத்தவும் உசிதம். கிளம்புங்கள் !" என்பதேயாம்.

இனிப்பும் துவர்ப்பும் ஒரே விருக்ஷ பலத்தாலறிவது சாத்தியமல்ல; அன்றியும், ஒரே தோப்பில் எல்லா ஜாதி விருக்ஷமும் பலிக்காது; அநுபவ சாதிருசியமும் அப்படியே. ஆகையால், நமது நேயரெல்லாவரும் கூடி, ஒவ்வொருவர் ஒவ்வொரு சஞ்சிகையாக, இயன்ற சஞ்சிகைகளை யெல்லாம் வரவழைத்துப், படித்துப்பயனடைய வேண்டுவம்.

I. இலக்கண நூல்.

(3-வது சஞ்சிகை 66-வது பக்கத்தொடர்ச்சி.)

சொல்லியல்.

11. எழுத்தே தனித்துந் தொடர்ந்து மிச்சா
வழிநின் றொழுக வழங்கின சொல்லே.

(இ-ள்) எழுத்தே=சப்தமே, தனித்தும்=தன் மாத்திரையானும், தொடர்ந்தும்=தன்னொடு தானும், தன்னொடு பிறிதுமாகத்தொடர்மாத்திரையானும், இச்சாவழி நின்று=குறிப்புணர் வதுவாகத்தோன்றி, ஒழுக வழங்கின=நதிகொண்டு நடந்துவந்தன, சொல்லே=சொல்லாகும் என்றறிக. வழி என்றமையால், நிர்குணப் பிராபல்யமும், சபள நியாயா நந்வய வீக்ஷணைகைவல்யமும் பற்றி என்க. நின்று என்றமையால், சாதிருசிய மாத்ராகாரணம் பற்றியே என்க. ஒழுக என்றமையால் பிராப்தி வைபவமும், வழங்கின என்றமையால் அநாத்ம பிராகிருதமும், பற்றியே என்க. சொல்லே என்று ஏகாரம் எழுத்தினது என்னையெனின், தேற்றங்கொடுத்து, பகுபதம் பகாப்பதம் ஆய பகுப்பினை, அசம்பாவித நியாயம்பற்றி மறுத்தாம் என்க. ஏனெனில், பாஷா ஆதி கர்த்ருத்வ முறையான் என்க. சொல்லின் நைமித்யகம் அக்ராஹ்யமாகையாலும், காரணதிருசிய சாமாந்யம், அதிருசிய சாம்யமேயன்றி, அகாரண வைபவம் என்பது, தார்க்கிக வதுவின் அசம்பாவிதமெனக்கொள்க. சப்தாக்ஷரம் கேவலம் பரமேயாகையால், பிரகிருதி தாது சமஸ்தசப்தங்களிலும் அமைந்தேயுளது. இவை பெரும்பாலும் உபதேச முறையாம் என்க. திருஷ்டாந்த மிமித்யம் 'சொல்' என்புழி,- "சாம்பவி நீயே - ஓ ஓங்காரி-சமஸ்தமுமுனது - ஒளிவிலொடுக்கம்,"- ஆகையால், சகாரதாது, ததைக பவிஷ்யார்த்த, சார்+இயை; ராமச்ச, பீமச்ச, என்பபோல. ஒகார இதி ஓங்கார சலனப்பிரணவம்; எழுச்சி. லகார இதி லளிதா மகிம் நாபிசாக்ஷர மந்த்ர, பூர்வகம். ஆகவே 'சொல்' என்றது மந்த்ர வைபவ நியாயத்தே யுதித்து, சகாரப்பகு-ஓங்கார பந்த-லளிதா போஷண தந்த்ர நியாயவழி மரபாகி, சகார ஜிஹ்வாந்த,- நாபிசப்த ஓங்கார வ்ருத்த-லளிதா மங்களமனோவாக் ஹ்ருதய ப்ரகிருத்யா சதுரச்ர பூபுர யந்த்ர முயற்சியின் வருவது. இஃது மந்த்ர, தந்த்ர, யந்த்ர விதாயக சாஸ்த்ரோப தேச லக்ஷணமாகையால், சூக்ஷம தத்வம் என்றே மொழிந்தேம் என்க. இவைபோல்வன வனைத்தும், "ஆதிகூ வென்றே யுரைத்த லக்ஷரத்திறைந்தம்" எனவும், "ஒப்பாதே யுந்திதனிற் கந்திறைற்போ லொளி மயங்கு மோசையுள பாஷையாகும்" எனவும், "வையை வைத்திடில் வாலையிலாநந்தம்- உய்யவே சுழியுச்சி யுணுவின்மேல்" எனவும், "பூவிலே நறைகள் போற் பொருந்திநின்ற பூரணம்" எனவும், "இரவுதலாய் நகரின்றித்தானதானு, யெழுலோக மமைக்கமுனைமிருந்தருக்ஷம்" எனவும், அகத்தீசர் கூறிய லக்ஷண ரீதியின் உபதேச முறையானுணர்க.

12. பொருளிடங் காலஞ் சினைகுணந் தொழின்
ஒப்பிய னோக்கித் தப்பிய னீக்கா [முதல்
வியல்பினும் விதியினு மியம்பப் பெற்று
விழுமிய சொல்லே பெயர் வினையாமே.

(இ-ள்) பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில், முதல்=முதலாயவற்றில், ஒப்பு இயல் நோக்கி=ஏற்பனவற்றைக் கருதி, தப்பு இயல்நீக்கா=ஏலாதவற்றை ஒழித்து, இயல்பினும்=பிரகிருதியாகியும், விதியினும்=பிரகிருதி பேதப்படுத்தியும், இயம்பப்பெற்று=சொல்லப்பட்டு, விழுமிய=அர்த்தமமைந்த, சொல்லே=சொல்லென்பது, பெயர்வினை ஆமே=பெயர்ச்சொல்லென்றும் வினைச்சொல்லென்றும் இருவகையாம் என்க:- பெயர், வினை, இடை, உரி என நான்காமே என்னின், இடையும் உரியும், உருபும் விசேஷணமும் உணர்த்தும் ஏது மாத்திரமேயாகலின், சிறப்பிலவென ஒழித்தாம் என்க. அற்றேல், இடைச்சொல்-"பெயர்வினை முன் பின்னோரிடத் தொன்றுவ" தாகையாலும், உரிச்சொல்- "பெயர் வினையொருவா உரியன" வாகையாலும், வேறுபடுத்திக்கூறல், மாறுகொளக்கூறலென, மறுத்தாம் என்க. பின்னை, எங்ஙனம் கோட? என்னின், ஆரிட முடிபு நோக்கி, பெயர் வினையுருபெனவும், பெயர்வினை விசேஷணமெனவும், முறையின் வைத்தாம், என்க. இச்சூத்திரம் "தொகுத்துச்சுட்ட"லெனு முத்தி. "சொல்லெனப் படுப பெயரே வினையென் றாயிரண்டென்ப வறிந்திசி னோரே" என ஆசிரியரும் உரைத்துள துணர்க. "தொழின் முதல்" என்றது வினை நோக்கிச் "செய் பொருள்" எனக்கொள்க.

மாம்-ஊர் - ஆடி - கண்-வெண்மை - கூத்து பெயராம். 'நட' எனும் வினையில்-கருத்தனும் பொருளும், நடத்தலை ஏற்க இடமும் நடக்கும் காலமும், காலாம் சினையும், நடக்கும் ஆற்றலும், இயங்கற்றொழிலும் அமையாக்கிடந்தமை யுணர்க:-

'வனை' என்பதில் வனை பொருளும் உணர்த்தினமை அறிக.

13. வெளிப்படை குறிப்பின் உயர்திணை ஞா [னியர்
ஆண்பெண் பலரும் அலாத வஃறிணை
ஒன்றும் பலவும் பால்படு நிலையில்
ஒருமையும் பன்மையு மாமப் பொருண் [முதல்

(இ-ள்) வெளிப்படையாயும், குறிப்பாயும், உயர்திணை அஃறிணைப் பிரிவின், ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால், ஆகிய முறையின் வரும்பொருள்களை யுணர்த்துவதே மேற்கூடிய பொருள் நிலையாம். அப்பொருள் ஒருமையும் பன்மையுமாம் என்க:-பொருள் நிலை:-தன்மயம், உள்ளது-இல்லது, மெய்-பொய், சித்து,-சடம், நித்யம்,-அநித்யம, உருவம்,-அருவம், காட்சி,-கருத்து, இயற்கை,-செயற்கை, முதல்,-சினை, ஸ்தாவரம்,-ஜங்கமம், முதலினவென்க. வெளிப்படையாவது பொருள் நிலைதெரிய வருவது. குறிப்பென்பது "ஒன்றொழி பொதுச்சொல்விகாரம் தகுதி, ஆகுபெயர் அன்மொழி வினைக்குறிப்பே, முதலொருகை குறிப்போடின்ன

பிறவும்" என வகுத்துளாரேனும், முடிபுநோக்கியும், கிரியை நோக்கியும் கூறலாற்றால், சொலலின்கணே தனித்திலாமையின் மேற்கூறிய வினைத்தும் அணிமரபியலாவதுபற்றிக், குறிப்பு என்பது, இலக்கணப்பிழையென மறுத்தாம் என்க. என்னை எனின், 'மக்கள்' என்பது சொல்லிலக்கண முறையின், உயர்திணைப் பலர்பாலென முடியுமன்றி, பெண்பால், ஆண்பாலென முடிபு நோக்கிக்கூறினும் வழூஉவென்றும். பெற்ற முழுதது-கறந்தது என்புழியும், 'பெற்றம்' என்றது பலவின்பாலேயாம். 'மரைமலர்' என்புழி, விகாரம் பெறுவிடினும், 'தாமரை,' 'தா+மரை' எனக்கூறலாற்றலுடைமையின், தொடர்ச்சொற்பொருளை ஒரு செற்பொருளெனப் பாவிப்பதும், 'மலர்' எனுஞ்சொலான் தாமரை=மரையென விளங்குழியும், 'மரை' யெனும் விகாரமே, குறிப்பாகாமையறிக. 'எரிகரும்பு' 'நன்காடு' 'கால்கழீஇ' என்புழியும், 'புளிதின்றான்' என்புழியும், 'தேன்மொழி' என்புழியும், 'அறத்தாரிதுவெனவெள்ளை' என்புழியும், 'ஐவர் வந்தார்' என்புழியும், சொற்றொடர்க் குறிப்பே யன்றி, சொற்குறிப்பன்றென மறுத்தாம். 'வல்லன்' என்புழி, வன்மையுடைய யாவன் ஓர் மகனைப் பொருட்படுத்தின்மையன்றி, இன்னான் எனும் துணிபுரைக்காமையின், குறிப்பன்றென மறுத்தாம் என்க. பின்னை, குறிப்பெனச் சூத்திரந்தது என்னை எனின், 'அரிகொண்டபூ' என்புழி, கிரியா, கர்மவாற்றான் மாலோ, வண்டோ எனத் துணிபாகா வழி, "குறித்தோன் கூற்றந்தெரித்துமொழி கிளவி" யாய பல்பொருள் ஒருசொல்லென்க. 'நீரில் ஆழ்ந்தான், எனவே, குளித்தான், இறந்தான் எனுந்துணிபு, பிறவாற்றான் விளங்கவேண்டுழி, "ஆழ்ந்தான்" என்பது குறிப்பெனக்கொள்க. உயர்திணை ஞானியராம் ஆண், பெண், பலர் எனும் பால்வரை பொருளாமெனவும், ஞானமிலாதவெல்லாம் அஃறிணைக் கண்படுத்த ஒன்று, பல எனும், பால்வரை பொருளும், என்றமையுணரற்பாற்று. ஞானியர் அலாத அஃறிணை என்றமையான், பகுத்தறிவிலா உயிரனைத்துமென்க. 'ஞானம்' கூறினதென்னையெனின்- "ஆகார நித்ரா பயமைதுனஞ்-சாமாந்யமேதத் பசுபிந் நராணும்-ஞானேஹிதேஷா மதிகோவிசேஷோ-ஞானே நஹீனா: பசுபிஸ்ஸமானா:" என்றுணர்க. "உயர்திணை அஃறிணை பால்படுகிலே" எனவும், "ஒருமையும் பன்மையுமாம்" எனவுஞ் சிறப்பித்துழி "உயர்திணைக்குரிமையு மஃறிணைக்குரிமையும்-ஆயிருதிணைக்கோரன்ன உரிமையும்" ஆய "கால முலக முயிரேயுடம்பே-பால்வரை தெய்வம் வினையே பூதம்-ஞாயிறு திங்கள் சொல்லென வரூஉ - மாயீரைந்தொடு பிறவு மன்ன-வாவயின் வரூஉங்கிளவியெல்லாம்-பால் பிரிந்திசையாவுயர்திணைமேன," எனும் பத்தும், "ஒருவரைக்கூறும் பன்மைக்கிளவியும்-வழக்கினாகிய வுயர்சொற் கிளவி," என்பனவும் உணர்த்தற்கென்க. "பொருண் முதல்" எனவே "செய்யுண் மருங்கினும் வழக்கியன் மருங்கினும்-மெய்பெறக் கிளந்த கிளவியெல்லாம்-பல்வேறு செய்தியினூனெறி பிழையாது-சொல்வரைந்தறியப் பிரித்தனர் காட்டல்," எனச்சொல்லைப்பொருளேக்கிப் பிரிக்கு மாற்றான் என்க. "அப்பொருள்முதல்" எனவே மேலைச்சூத்திரத்துட் கூறிய ஆறும் என்க.

'ஆகுபெயர்' என்பது இலக்கண வழூஉ என விடுத்தாம் என்க. என்னின்- "புளிதின்றான்" என்புழி, தின்னலாய வினையாற் புளியம் பழத்தையே உணர்த்தும்; 'புளி வெட்டினான்'

என்புழி மரமேயாகும். வினை செவியறிவுற்ற மாத்திரத்தில், சாதனம் இலக்கண நோக்கியாராயவேண்டாது, இயற்கையின் அமையும். அற்றேல் அஃதாக : 'இலைபறித்தான்,' 'கைமுறித்தான்' என்புழி, 'இலை','கை,' இவையும் சினையாம் : ஆயினும் ஆகுபெயர் என்றார். ஏனெனில், இயைபினை ஏற்கும் இருபொருட்கும், பெயர் ஒன்றே இல்லை. அந்திப்போழ்தில் ஒருவனை 'விளக்குக் கொண்டுவா' என்றால் தீபமின்றிகுத்துவிளக்கைக் கொணரான். பகற்காலத்தில் கொண்டு வருவன். ஆகையால் 'விளக்கின்' ஐயம் வினைநோக்காது காலக்குறிப்பினும் புத்தியினும் விளங்க நின்றது. "ஊரைக்கொளுத்தினன்" என்புழி, ஊராம்மனைக்கூட்டத்தைக்கொளுத்தினன் எனப்பொருளாம். ஊராரைக்கொளுத்தினன் எனவாகாது. எனெனில், கொளுத்துவோன் ஒருவன் : ஊரரோ பலர் : ஒருவன் பலரைக்கொளுத்த ஆற்றலிலாமையின் என்பர். தவிர ஆகு+பெயர் என்பது, விரிபொருள் நுண்மை சுட்டியலாது, நுண்பொருள் விரிவு சுட்டவாவதில்லை. 'கலங்கொண்டான்' என்புழி, பூமியோ ? தானியமோ ? எனுந்துணிபு, பிறவாற்றாற் குறிப்பாம். பூமியும், தானியமும் கலத்தின் இயை பொருளாகாமையின், அன்மொழித் தொகை என்னவும் அமையும். ஆகவே குறிப்பின் நிகழ்வதே பயனும். ஆகலின், ஆகுபெயரும் அன்மொழித்தொகையும், தொடர்நிலையாற்றான் வருவதால், அணியியலென விடுத்தாம் என்க.

(இன்னும் வரும்)

II. ஸ்ரீமத்

வால்மீகி ராமாயணம்.

பால காண்டம்.

எட்டாவது ஸர்க்கம்.

இன்ன வைபவத் தர்ம்ம வம்மகான்
மன்னு புத்திரர்க் குன்று தவமனன் 1.

வழிபெ றும்பரி யாக மல்வழி
என்ப யன்னென வெண்ணு மம்மகான் 2.

அன்ன செய்வமென் றுன்னி வண்மையும்
என்ன நன்மையுந் துன்னு மைச்சொடும் 3.

இன்ன சொன்னன னெழிற்சு மந்த்ரனோ
டின்ன ழைத்தியு பாத்யர் குருவெலாம் 4.

துரித விக்ரம மந்த்ரன் துரிதமே
வேத பாரக விபுதர்த் தந்தனன் 5.

சுயக்ஞ வாமஜா பாலி காசியப
குருவ சிஷ்டரென் னேனை யுத்தமர் 6.

தமைப்ப ணிந்துதர்ம் மாத்ம தசரதன்
இவ்வெ ழிற்றரு மார்த்த மொழிசொனான் 7.

லபித மெய்ச்சுத ரின்றி சுகமிலான்
ஆய வாயவச் வமேத மெண்ணினேன் 8.

சாஸ்த்ர சம்மதக் கர்ம்ம விச்சையன்
அன்ன வெய்துபா யம்வி சாரியும் 9.

என்ன, வாமென வையர் போற்றினர்
வசிஷ்டர் மன்முக வார்த்தை கேட்டொலாம் 10.

16140.2

பிரீதி யென்னவே பேசி னார்பரம்
சேக ரஞ்செயுஞ் சிரேஷ்ட வாசியும் 11.

விடுக மன்னனே விச்சை மக்களாம்
தரும நினைவிதுந் தனைய ரெய்துயார். 12.

என்ன விப்ரர்சொல் விதம தாகியே
துன்னு மாநந்தத் தோது மமைச்சொடும் 13.

குரவர் சொற்படிக் கூட்டுஞ் சம்பரம்;
பரியின் பாங்கரு பாத்ய ரேவிடும் 14.

சரயு வுத்தரம் யக்ஞ பூமியாம்;
கற்ப சாந்தியாங் கர்ம மவியவே 15.

மன்ன ரெல்லரிம் மகமே செயவலார்;
உத்த மம்மிதுங் குத்த மத்தெப்தல் 16.

யக்ஞ பங்கபிரம ராக்ஷ ஸர்வலர்;
அதம மாயினே யழிவ் னதிபனும் 17.

கிரது கூறுமா றுக விதியினே
யலது புத்திசா மர்த்ய மழியினே. 18.

அன்ன வாமென ரமைச்ச ரெல்லரும்
அரச னணைகேட் டந்த மட்டுமே 19.

ஆக வந்தண ராசித் தரசனைப்
பூர்ன மாசையிற் புரிவ மென்னவே - 20.

செலவ ளித்தமைச் சோடி மிதுசொனன்
இருது சொன்னவா றிழைக்க சம்பரம்; 21.

என்ற னன்னிறை யெதிர மைச்சரை
ஏவித் தன்மனை யேகிப் ரீதியின் 22.

அங்கு நின்றுதன் னிதய வரிவையர்
தெரியச் சொல்லினன் தீக்ஷ விஷயமே 23.

காந்த னன்மொழி கேட்டு வர்ச்சஸாங்
கமல முகமினு மிமம்போங் தடமென 24.

இச்சருக்கத்தில் வால்மீகரானவர் தசரத மகாராஜனுடைய புத்ர காமேஷ்டியாக இச்சையையும் அதற்கு அவர் செய்த ஆலோசனையையும் சொல்லி இருக்கிறார். முன் சருக்கங்களில் அவருடைய பரிபாலன சக்தியானது அதிதார்ம் மிகபாகவும் திறமையாகவும் இருந்ததென்று சொன்னார். ஆகிலும் அவர்க்கு மக்கள் இல்லாத மனக்குறையைத் தவவழிகளால் நிவாரணமாக்கும் பொருட்டுத்தானே யோசித்து ஓர் தீர்மானப்படுத்தியபின்பு, மந்திரிகளோடுஆலோசித்து, தமது குல குருவாகிய வசிஷ்டர் முதலானவரோடும் மற்றப்பிராமணரோடும் தம்குறையைச் சொல்லிக், தாம்கொண்ட கருத்தையும் சொன்னாரெனவும், சொல்லியிருக்கிறார். அக்கருத்தானது அசுவமேத யாக நினைவென்றும், அதனைச் சாஸ்திரோக்தமாகச் செய்வதே தன் அபிப்பிராயமென்றும் தெரிவித்தாரெனவும், அக்கருத்தினை அனைவரும் ஒப்புக்கொண்டு, அரசனது நினைவானது தர்ம்ம ரீதியாக இருப்பதினால் சந்தேகமின்றிப் புத்திரரையடைவரென ஆசீர்வதித்தாரெனவும் கூறுகிறார். பிறகு தசரதனே, யாக யோக்கியமான இடத்தையும், அதற்கு வேண்டும் சம்பாரங்களையும், சேகரிக்கச்சொன்னாரெனவும், இவ்விதம் செய்வது தமது குரு ஆக்ஞைப்படியாகவேண்டுமெனவும், சொன்னாரென்றார். தவிர, தான் எண்ணின யாகமானது சரிவரச் செய்யப்படாவிடின் அதனால் நேரிடும் கெடுதியையும் தெரிவித்தாரென்றும், அவ்விதம் நேராதபடி இருதுக்கள் சொன்னபடியாகத்திரவியம் குதிரை முதலின சேகரிக்க வேண்டுமெனவும், சுவதமேயாதும் செய்யக்கூடாதெனவும் சொன்னதாகவும்கூறுகிறார். முடிவாகத்தமது பத்தினிகளிடமும் தெரிவித்து அவர்களுடைய அநுமதியும் பெற்றார் என்றும் கூறினர்.

இதினால் தர்மம் என்பது, புரோகிதர் சொன்னபடி செய்வது உத்தமம் அன்றென்றும், தானே கைக்கொள்வதுதான் சடலமாகுமென்றும், ஆனால் தன் கருத்து முடியும் மார்க்கமானது சாஸ்த்ர சம்மதமாக இருக்கவேண்டும, அதற்காகவே பெரியோரைக்கேட்டு அவருடைய அநுக்ரகம் பெறவேண்டுமென்றும், தவிர கிரகஸ்த முறையில் "இருவரும் பூண்டூர்ப்பினல்லால்" என்றபடித்,தன் பத்னியார் சம்மதமும் பெறவேண்டுமென்றும், தெளிவாக எடுத்து விளக்கியது வியக்கத்தக்கது.

(9-வது சருக்கம் பின்னால் வரும்.)

III
கீசகவதம்.

இரண்டாம் அங்கம்.

முதற்களம்.

விராட சபை.

விராடன்-மந்திரி-கங்கபட்டர்-சபையோர் பிரவேசிக்க.

விரா - மந்திரி கேளாய்! மன்னர் வளநக
ரிரவிற் புகுந்தொருவ னிருந்தான மற்ற
[வன்
தொத்தொடு கிளந்த தேன்மொழி தா
[னென்னேயோ?
சிறுகுழலி னினிதமைத்த விறும்பூதம்
[தென்னேயோ?
வறிகல! மாநிரை வரக்கண்டே, குடிக
[ளெலா
மோடினர் கூடின ராடின ரவருடனே!
யானுந் தெருமந்து பார்ப்பேமா பலக
[ணியி,
லன்னயன்ன! யனைத்துமச் சீறுருவற்
கமையு மமைய! மென்றேன னென்னு
[ளே
யவனை விளிக்கக் குடந்தமா னரெலாங்;
கலனளவு நலனளவு சுரும்புலவு நறுந்
[தொடை
வேய்ந்,கம் மகற்கு விருப்ப மளித்து,
நந்தனன் மனைக்கு நண்ணுதி, ரென்றே
[ன்,
பொதுவர தாநிரை போற்றிக் கொணர்
[வா
ரிதுவரைக் காணே னியம்பு!
மந்திரி- பொறுமையுள பூபால! போர்புரிந்து
பெற்றமதைக் கொணரா முன்னங்,
திறைமையுள தந்திரத்தான் மீட்டவகை
யுணராமற் கீசகன்றான்,
விறற்படையோ டிடிபெனவே வார்ப்பரித்து நின்றனனோ? வஃதன்றி,
விறல்பெற்றும் வற்சலங்கள் காணுமன்
மாழ்கினனோ? வறிகிலேமாற்,
றுரிதமுள தூதொன்று போய்மீள னல
மே கொல்லாம்
சரிதமுள சார்பிலரே! சொல்லித் தேற்
[றும்!
வரவுன்னி வரையெண்ணும் வருத்தம்
[போக.
கங்க - பெரும துயருமேல்! பேர்பெற்று மள்
[ளர்
வருவ ரெருநொடியில்; வாளா வினையு
[ரை
போக்க னலமன்று; போன வொருவனை
[க்

கூவல் குணமன்று கொள், - மறவர்
எள்ளளவு மபசெய முருருண்மை,
துணைவேண்டிற் றா துவரலிங்கு நிச்சய
[மே.

விரா - முனிவர ! தமது திருவருட் படியே,
வழிசெல னன்றல வெனுமொழி கேட்
[டேன்,
பரிபவ மற்றேன், பணித்தி ரடிகாள் !

கங்க - புரவல ! கேளப், பெரிய சுசர்மற் [ய
கரச ரனைக ரரியுண்டால்,- உரமுடை
புத்திரரை யேவிப் புரிசை நகர்காத்த
லுத்தம மன்னே வுரை-இல்வேலை
துணைக்கும் பணைக்க மாவர் [னே.
நினைக்குந் தருணத்தி னிற்குந் திறமையி

விரா - துணைவ ! தேர்தியேற், றாய நன்மொழி,
சென்று சிரூர்க்குச் செவ்விதிற் கிளந்து,
[நம்
செல்வ மாநகர் சீருடன் காத்துத்,
தெம்முனை யகற்றிக், தீரா வேசமாய்
வதிக ! வென்னுநம் மாசி வழங்குதி.

மந்திரி- ஏகி யவர்க்குரைத் தெய்துவ, னிறைவ!
(ஏக.

விரா - அடிகண் முன்னு ளருளின வாறு [னும்;
கழங்கு விளையாடல் காணே னெருநா
கழங்கு விளையாடல் காணக்
கிருமையுளவே லிப்போழ்து கிடைக்க
[லாகும்.

கங்க - தலைபோகுங் காரியங்கள் தாம்பலவே
[யானதனுல்,
இலையோமற் றிவர்க்குத் தொழிலென்று
[ரா ? வியம்பரசே !

விரா - தலைபோகுங் காரியங்கள் தாம்பலவேன்,
[முனிக்குமரை
யிலைமேலோங் துளியளவென் றெண்ணு
[ரா ? விருந்தவரே !
(கழங்கு ஆட)

சேவகன் பிரவேசிக்க.

சேவக- திருவடி தொழுதேன், திருவுள மருள்க!
(ஓர் கடிதம் கொடுக்க)
விராடன்- இஃதார் கொடுத்தார் ?
சேவகன்-திரிகர்த்த னேவிய தூதனொருவன்.
விராடன்-இவனழை யவனை.
சேவகன்-இன்னே கொணர்வ, னென்றாண்டவ
னே !

திரிகர்த்த சேவகன் பிரவேசிக்க.

தி. சேவ-சரணம், சரணம்! சர்வ தயாபர
விராட - திரிகர்த்தனை, சேவகனே யென்ன ?
தி சேவ-ஆம், ஆம்! அடியேற் கருள்செயு மாறு.
விராட - சுசர்மன் சுகமே கொல்லாம? சொல்க!
தி. சேவ- திருவுள முளதே, லுய்வது மாகும்.
விராட -ஓதுவ விதனை யோதி யவைக்கண்.
ஓதுவான்- (கடிதங்கொண்டு படிக்க)
மதிக்கு நேர்முக மாகவே பிறந்து,
விதிக்கு வீழ்முக மாகவே வதியத்
துடிக்கு, மென்மன மாறவே, பெரிய
முடிக்கு நும்மன மிழிந், தொரு மொழி
[யே
தருமெனி, னித்துய ரேகின தாசப்,
பொருது நீசகன் போரினை மாற்றி,
யுரைவழி யுய்க்க வுடம்படு மொருதூ
துரைக்க வேற்கு முண்மை யாகவே.

விரா - பண்டித ! விதற்குப் பிரதிமொழி யாகத்
தூதேற் குவமெனுந் துணிவே வரைக.

கங்க - இறையே ! யதுபோ லெழுத விசையன்
றறைபோக் கடித்த வவர்க்கு,-முறையே,
யவரோ டியாத்த லழகென் றெழுதத்,

தவரா துளக்கருத் துத்தான்;-அதனுல்,
ஒன்று ருடம்படி லுய்வர்,
இன்றே, விகல வியம்பல் வேண்டா.

விரா - நன்று நன்று! நவின்ற, தடிகாள் !
வென்று நின்றூர் வேண்டின வண்ண,
முடிக்கு மாறு, மேன்மைப் படுத்தி,
வாசக மொன்று வழங்கி யருண்மே.
ஓதுவ ! மாதவ ருரைக்கு மாறு,
நன்று வெழுதி, நம்முன் வைக்க.

(கங்கபட்டர் சொல்ல ஓதுவான் வரைந்து
இறைமுன் வைக்க.)

சுசர்ம ! வுந்தன் சுவபாவ மெமது
வழிப்பகை யாக வைகுவ தாயினும்,
"அன்பிற் கடைக்குந் தாழில" தானுன்
னிருக்கையு நிலையு மிம்முறை யெண்ணி
[ப்
பொறுத்தன மாகப் ; போர்வல நீசக
னுரைமேற் கொண்டே னுடம்பட் டிறை
[தி.

விரா - பண்டித ! முத்திரை பதித்து, விலாசம்
வைத்து, வேந்தற் கீயு மாறு
சொல்லிக் கொடுக்க, சேவக னிடமே.

ஓதுவா-சேவக! விதையுன் செம்மற் களித்தி.
(கொடுக்க)

தி.சேவ-கருணைக் கடலே! கடிதங் கொண்டேன்;
விடையுங் கொள்வேன், விமல விறை
யே ! (ஏக.

மந்திரி பிரவேசிக்க.

மந்திரி -புரவல! யானிள வரசர்த் தொழுது
திருவாக் கறிவித், தின்னகர் காக்க
வெழுவது கண்,டிவ ணெய்தின னடியே
[ன்.

விரா - மந்திரி! யென்னு மதியாச் சுசர்மன்
மதிக்கு மாறு மம்ம ரிழைத்து,
நம்மைக் கெஞுசி நலம்பெற மாட்டிச்
செம்மை நமக்குச் சீருட னுதவி, [றச்
யிம்மை மறுமை யிரண்டினும் புகழ்பெ
செய்து வைத்த, செம்மல் கீசகற்
கென்ன கைம்மா றியற்ற வுளது ?

மந்திரி -இறைவ! வெத்தனை யீபினு மமையு
மாகலி, னம்மி னறிந்தவ ராகி,
யவைக்கு ளெழுந்தரு ளடிக ளருளாத்,
திருவாக் கேற்பத் தேர்ந்து முடித்த,
னலமென் றடிய னவில்வ, னுதனே !

விரா - தயாநிதே !தஞ் சரணு ரவிந்த
மகிமை யெம்மால் மொழிய வாமோ !
என்றெம் மவையி லெழுந்தரு ளாச்சோ
வன்றே யடைந்தோ மளவில பாக்கியம்;
ஆகலி, னடியேங் கீசக விறைக்குச்
செயுமுப சாரஞ், சிறக்க வருண்மே.

கங்க - நகரி கோலஞ் செய்து, திருவிழா
வயர, சல்லா பத்துட னெதிர்கொண்,
டிரைக்க வேண்டு மெல்லா வைபவ
முறைக்கு செய்து, பவனி வந்து,
கூடவுண்டு, கூடின ளவி
விருக்க மந்திர மியற்றி யளித்துச்,
சிற்றா ருதவிச், சீரெலாஞ் செய்ய
லறமே யாதலா, னிபற்றல் கடனே.

விரா - அவையோ ரனைவரு மறிமி! னதுபோ
லின்று முதற்கு வென்றித் திருவிழா
வயர்ந்து, நிதமு மானந்த மனுபவித்
திருந்து, கீசகன் வரவு பார்த்துச்,
சிறப்பெலாஞ் செய்யச் சேர்மின்! சேர்
[மின் !

அவையோர்-

அந்தர முந்தின சுந்தர மந்திர மித்ர லோக
    மொடுந்துறு முந்துறு மந்தம்-குலே கழை
    கதலிகள் கோலம்,
எங்கணும் விஞ்சுற மந்தியுந் தந்தியுஞ் சிந்து
    கோலமுப-வனமென வழகுளவாக!
சுந்தர மிஞ்சின மங்கையர் தம்மொடு முந்து
    மோகமொடுவந்து கலந்துறு மைந்த-ரமு
    துணு நடமிடு மோதம்,
எங்கணும் விஞ்சுற வம்பரம் வந்தென நம்பு மா
    நுகவ-விதமுள விழவயர் வாக! (ஏக)
(இரண்டாங்களம் பின்னால் வரும்.)

லௌகிக தந்த்ர தர்மம்.

இரண்டாவது அத்யாயம்.

யத்நம் பிரயோஜன கர்த்தவ்யம்.

1. மனிதனுக்கு உபயோகமான ஒன்றைச் செய்யவேண்டுமானால் முயற்சியினாலேயே ஆக வேண்டியது. இந்த முயற்சி ஒன்றைச்செய்வதற்கும் வேண்டும்; அப்படிச்செய்வதற்கு உபகரணமாகவும் வேண்டும். ஐயா! ஒரு தோசை செய்யவேணுமானால் அதற்கு மாவு வேணும். மாவிற்கு அரிசிவேணும். அரிசிக்கு நெல்வேணும். நெல் வேளாளனிடமிருந்து வரவேணும். நெல்லாவதற்கு உழுவோன் வேணும். உழத்தொழிலுக்குக் கலப்பையும், கலப்பைக்குக் கொழுவும் வேணும். கொழு கொல்லனாலாவது. கொல்லனுக்கு இரும்புவேணும். இரும்பும் அது செய்வோனிடமிருந்து வாங்கவேணும். அவனும், கனிகுளிப்போனிடமிருந்து பெறவேணும். இவ்விதமாக வழி வழி ஆராயுமிடத்து, தோசையின் கிரய நலத்துக்கு, எத்தனையோ பங்காளிகள் ஏற்படுகிறார்கள்! இவரல்லாமல், இரும்பைவெட்டியெடுக்கவும், பிரித்தெடுக்கவும் எவ்வளவு ஏனம் வேண்டும்? இதில், பெருத்த கப்பல் வியாபாரிவரையிலும், எவ்வளவோ பெயர்வழிகள் ஏற்படுவர். ஆனால் இவரெல்லாம் முக்கால் துட்டு தோசையின் பங்காளிகளா? நிபத்துக்கு ஏற்பட்டாலும், காரியவசத்தில் எல்லாரும் ஆவதில்லே. ஏனென்றால் உபகரண சாதனங்களான கலப்பை, கொழு முதலிய ஏனங்கள் ஒரு தோசையின் பொருட்டு மாத்திரம் செய்யப்படுவனவும் அல்ல: ஒருவனுக்கு மாத்திரம் செய்யப்படுவனவும் அல்ல. அது போலவே, வியாபாரிகளும் ஒருவனைப்பற்றி வியாபரிப்பதில்லை. ஆனால், மேற்சொன்ன பெயர்வழிகள் இல்லாமல் முடியாதென்பது மெய்தான். ஆகையினால், இவரெல்லாம் தமது சாதனங்களை வியாபரிப்பதில் ஒரு காசுபோலும் விட்டுவிடுகிறதில்லையல்லவா?

2. இதல்லாமல் இன்னொரு விஷயம் கவனிக்கவேண்டி வருகிறது. தானியசாகுபடி இடரென ஆகிறதா? எவ்வளவு பிரயத்நம் வேணும்! எவ்வளவு பண்ணைக்காரர் வேணும்! எவ்வளவு நாள் பொறுத்தாகவேணும்! அதுவரையில் ஆள்கள் சாப்பிட வேண்டாமா? இதற்குப்படியளப்பது, போன மாசூல் சேகரத்திலிருந்துதானே? போன மாசூல் பாக்கியாகும்படி விளைவில்லாமற் போனால், சாகுபடி செய்ய ஒருவரும் தலைப்படார்கள், என்பது நிச்சயம். இவ்விஷயமும் வேளாளர்க்குத்தான் பயன்படும். கொல்லன், வியாபாரி இவர்களெல்லாம் என்ன செய்வார்கள்? அவர்கள் மாசூலை எதிர்பார்த்திருந்தால் வயிறு நிறையுமா? ஆகையால், இத்தொழிலாளர்களைத் திருப்தி செய்ய வேணுமானால், அவர்களுடைய கஷ்டத்தை உத்தேசித்து, ஏதாவது பிரதிப்பிரயோஜனம் அவர்களுக்குச் செய்யவேண்டிய அவசியம் நேரிடுகிறது. இப்பிரயோஜனம், விளைவினையும் அவ்விளைவின் அநுபவத்திற்கு உரியாரையும் கணக்கிட்டுப் பகுத்துக்கொடுப்பதானால், ஒப்புக்கொள்வார்களா? ஒரு தவணை இவர்கள் செய்துகொடுக்கும் ஏனமானது, பத்துவருஷத்துக்கு உதவுகிறது. ஆகையால், கொடுக்கும் பிரதிபலத்தைப் பத்திலொரு பங்காகக்குறைத்தால், ஒப்புக்கொள்வரா? இவர்களுக்கு இதர இகபோகார்த்தங்கள் யாதொன்றும் தேவையில்லாமல் இருக்குமா? இதற்காகவே, லாபம் அடையவேணுமென்ற இச்சை, இத்தொழிலார்க்கு இயல்பாகவே உண்டாகிறதல்லவா?

3. மேற்கண்ட ஆராய்ச்சியால், நேராக உற்பத்தி செய்வதற்கு உபகரணமாகும் கைத்தொழிலை, விளைவுப்பொருள்களையோ ஆகாராதிகளையோ உற்பத்தி செய்யவேண்டிய முயற்சியோடு சேர்ப்பது, உசிதமன்று. ஏனென்றால், கைத்தொழில்செய்யும் நோக்கமெல்லாம், காலக்ஷேபநிமித்தமேதான். இத்தொழிலைக் கைக்கொள்வதினால், வேறு வேறு தொழில் செய்ய அநுகூலமானாலும், இது வெறும் சம்பாவிதமேயாகிறது. ஆகையால், காலக்கிரமத்தில் விளைவை உண்டாக்க ஏதுவாம் உபகரணத்தொழில்களை, ஐந்து விதமாகப் பகுக்கலாம்.

முதலாவது:- விகற்ப சாதனங்களைச்செய்வதில் இன்றியமையாத, சங்கற்ப சாதனங்களைத் தேடும் முயற்சியாம். இம்முயற்சி தான் சன்மானஹேது என்பது. திருஷ்டாந்தமாக, கலப்பை முதலியவற்றைச் செய்யவேண்டிய இரும்பைச் சுரங்கங்களிலிருந்து வெட்டியெடுத்துப் பிரித்தெடுப்பது போன்றது. ஆனால், வெட்டியெடுக்கும் நிலக்கரியானது, தேசக்தைக் காய்ச்சக்கனலாக்குவதில், விகற்ப சாதனங்களை உற்பத்தி செய்வதாக எண்ண இடமில்லை வயிரம், ரத்தினம் முதலியவைகள், அலங்காரார்த்தம் நகை செய்வதற்கு ஆகிறதே தவிர, வேறு விகற்பத்தொழில்களுக்குப் பயன்படுவதில்லை. நூலும், வஸ்திரங்கள் செய்வதற்குரிய சாதனமாத்திரமாகிறது. அதுபோலவே, வேளாளரிடமிருந்து வரும் தானிய வகைகள், ஆகாரத்திற்கே உபாதன சாதனம் ஆகிறது.

4. இரண்டாவது:- என்னவென்றால், பற்பல தொழில்களுக்கு உதவும், கருவிகளைச் செய்யும் முயற்சிதான் ஆனால், சங்கற்ப விகற்ப சாதனங்களுக்கும், அவற்றை உற்பத்தி செய்யும் கருவிகளுக்கும் சாமான்யம் எவ்வளவோ பேதமுண்டு. விறகை எரித்தால் சாம்பலாம். பிறகு அவ்விறகானது உபயோகப்படுமா? ஆகையால், சாதனங்களை ஒருவேலைக்கு ஒருதவணை உபயோகித்தால் மறுபடி அச்சாதனங்களால் யாதொரு பிரயோஜனமும் இல்லை. ஒரு கோடரியால் ஒரு மரத்தைக் கண்டிக்கப் பிரயோஜனமானாலும், அக்கோடரியால் இன்னும் வேண்டிய மரங்களை வெட்டவும் உதவும். இதுதான், சாதனங்களுக்கும் கருவிகளுக்கும் உள்ள பேதம்.

5. மூன்றாவது:-விளைபொருள்களை இயற்கையாலுண்டாம் கெடுதிகளிலிருந்தோ, அல்லது மனிதருடைய கொள்ளையிலிருந்தோ, காப்பாற்ற வேண்டிய முயற்சியாகிறது. இதற்காக வீடுகள், தோட்டச்சாலைகள் முதலானவை கட்ட அவசியமாகிறது. தவிர தானியக்குழிகள், வேலி, பட்டி முதலானவையும் தேவையாகிறது. பக்ஷி, வண்டு, புழு, பூச்சி முதலானவை பயிர்க்குக்கெடுதி செய்யாதபடி, அற்ப முயற்சியால் பா

துகாக்கலாம். மனிதர் செய்யும் கெடுதிக்குப் பலமான ஆயுதபாணிகளேயல்லவா காவல்வைக்க வேண்டும்? இது சாமானியக்குடிகளாலாகுமா? அதனால், கலெக்டர், போலீசார், ஜட்ஜி முதலான உத்தியோகஸ்தரை நியமித்து, கவர்ன்மெண்டார், சாகுபடி பூமிகளுக்குக் கந்தாயம் ஏற்படுத்தி, ராஜ்ய பரிபாலனம் செய்கிறார்கள். இப்படி வசூலாகும் கந்தாய வரும்படியை கவர்ன்மெண்டார் வரையறையின்றிச் சிலவழிப்பது சகஜமானாலும், குடிகளுடைய ரக்ஷையானது "பலதுளி பெருவெள்ளம்" என, அவர்கள் தனித்தனி கொடுக்கும் அற்பசிலவின் மேல் ஏற்படுகிறது.

6. நாலாவது:- விளைபொருள்களை வியாபிக்கச்செய்யும் முயற்சியாகிறது. சந்தையேற்படுத்தி, அவ்விடம் குறித்தகாலத்தில் விளைபொருள்களைக் கொண்டுபோய் வியாபரிப்பது, எல்லார்க்கும் சாத்தியமாகாது. சில சாதனங்கள் வெகுதொலையிலிருந்து வரவேண்டியிருக்கிறது. சில ஜனங்களுக்குச் சந்தை சமீபத்திற் கிடையாது. உத்தியோகஸ்தர்கள் போன்றவர்களுக்குச்சந்தைக்குப்போகச் சமயம் இராது. ஆகையினால் குடியானவர்களுக்கும் கொள்வோர்க்கும் இடையில் வியாபாரிகள் தோன்றி, அவசியமான பல சாதனங்களையும் ஒவ்வோரிடங்களிலிருந்து வரவழைத்து வியாபரிக்கிறார்கள். இவர்க்கு இது ஒன்றே தொழிலாகிறது. இத்தொழில் சபலமாகவேண்டி, ரோடுகள், ரயில் வண்டிகள், கப்பல்கள், கூலியாட்கள், உத்யோகஸ்தர்கள முதலாக எவ்வளவோ ஏற்படுகிறது.

7. ஐந்தாவது:-மனோமுயற்சி: இம்முயற்சியும், சரீரமானது செவ்வையாகப் போஷிக்கப்பட்டு திடமாயிருந்தாலொழியப், பயன்படாது. ஒருவனை குழந்தைப்பருவத்து நன்றாய்க் காப்பாற்றி, அவனைக் கல்விச்சாலைகளுக்கு அனுப்பியோ, பலவகைத் தொழிற்சாலைகளுக்கு அனுப்பியோ, அவன் மனதைத்தேற்றச்செய்யவேண்டும். இவன் போதகாசிரியனாகவோ, தொழிலாளியாகவோ, ஜனங்களுடைய பொதுச்சங்கத்திற்கு உழைக்கும் உத்தியோகஸ்தனாகவோ, சிறந்த வைத்தியனாகவோ, வக்கீலாகவோ ஆகிறான். ஆனால், இவனது முயற்சியானது விளைபொருள்களைப்போல், கைக்கு மெய்யாகப் பிரயோஜனமுள்ளதாகக்காணவிட்டாலும், ஜனசமூகத்தைத்தேர்ச்சிபடையச்செய்து, அத்தேர்ச்சியாலுண்டாகும் சுகாநுபவங்களுக்கு இன்றியமையாததாகிறது.

8. ரயில்வண்டி, புகைக்கப்பல், மின்சாரத்தந்தி, சித்திரம், சிற்பம், ஆபரணாதிகள், கணிதம், கர்க்கம, சாஸ்திரம், பலவகை விகற்பசாதனங்களைச் செய்யும் எந்திர நிர்மாணங்கள், யுத்தத்திற்குரிய அஸ்த்ர சஸ்த்ரங்கள், இன்னும் சொல்லைத்தொலையாத பல அத்புத சாதனங்கள், ஆகிய இவை அனைத்தும் சரீர முயற்சியாலும் மனோ முயற்சியாலும் ஆகின்றவை. ஆகையால் ஜனசமூகத்தின் சுகத்திற்கும், மேன்மேல் உயர்பதவிக்கும், மனப்பயிர்ச்சியே முக்ய சாதனமாகையால், இவ்விஷயத்தில் எடுத்துக்கொள்ளுமபிரயத்னமானது, வியர்த்தமானது என்று சொல்லக்கூடாதது மாத்திரமல்ல, சத்பிரயோஜனத்தை விளைவிப்பதற்கு அதிசிலாக்கியமான முயற்சியென்றே கருதவேண்டியது அவசியம்.

9. மேலே சொன்னவற்றை ஆராய்கையில், முயற்சியை மூன்றுவிதமாகப் பிரிக்கலாம். தேக திடமும், மனோ சாமர்த்தியமும், சமூகத்தின் உயர்பதவிக்கு இன்றியமையாததால், யாவற்றிற்கும் இதனைப்போஷண சாதனமாகக்கொ

ள்ளவே, முயற்சியானது, கிருஷி, கைத்தொழில் வியாபாரம், எனும் மூன்று பாகங்களாகப் பாவிக்கப்படுகிறது. ஆனால், கிருஷியும் கைத்தொழிலும் பரஸ்பர பிரதிபந்தமானவையெனக் காணப்பட்டாலும், கிருஷி,- சங்கற்ப சாதன காரணம் எனவும், கைத்தொழில் விகற்ப சாதன காரணம் எனவும், அம்மட்டில் இந்த 'லௌகிக தந்த்ர தர்ம' விசாரத்தில் எடுத்தாளப்படும்.

(மூன்றாவது அத்யாயம் பின்னால் வரும்.)

V

ஓர் சுவப்நாவஸ்தை.

'தேசகால அநிர்ணயன்.'

(3-வது சஞ்சிகை 84 வது பக்கத்தொடர்ச்சி.)

'எனது அன்பர்களே! சென்ற சஞ்சிகையில், ஜாக்ர சுவப்நங்களின் சாமான்ய பேதங்களை எடுத்துரைத்தேன். இப்பொழுது முன்னாற் சொன்ன "தேசகால அநிர்ணயம்" என்பது இன்னதென்று விவரிப்பேன். 'தேசம்' 'தேசம்,' என்றால் இடம். இது ஒரு ஸ்தூல வஸ்துவினாலேயோ ஆகாயத்தாலேயோ நிறைக்கப்பட்டிருக்கும். இத்தன்மையான இடமானது எல்லையற்றிருக்கின்றது. அப்படிக்கில்லாமற் போனால், ஏதோ ஒரு எல்லைக்குட்பட்டதாக பாவிப்போம். இந்த எல்லையும், மேலே சொன்னபடி ஸ்தூலப் பொருளாகவோ அல்லது சூக்ஷ்ம ஆகாயமாகவோ தானே இருக்கவேண்டும்? என்னவானாலும், இவையும் ஒரு இடத்தில் தானே இருக்கவேண்டும்? ஆகையால், தேசத்திற்கு எல்லையில்லை என்பது இனிதுவிளங்கும். "காலமும்," 'இறப்பு,' 'நிகழ்வு,' 'எதிர்வு' என மூன்றுவகைத்து. நமக்கு நிகழ்வானது, நம்முடைய பிரபிதாமகனுக்கு எதிர்வல்லவா? இறப்பானதும் அவர்க்கு நிகழ்வல்லவா? ஆகையினால், இறப்பும் நிகழ்வும் எதிர்வும் ஒரே காலத்தின் விச்சின்னமல்லவா? இதற்கு இறப்பும் நிகழ்வும் எதிர்வும் எவ்வாறாகும்? நிகழ்வை நோக்கியல்லவா சொல்கிறார்கள்? அப்பொழுது காலம் நிகழ்பொருளேயாகிறதல்லவா?- அதாவது, இறப்பும் எதிர்வும், கற்பிதம் என்றல்லவா தாற்பரியம்? ஆகையால, காலத்துக்கு அளவு இல்லை. மேலைய விசாரம் ஜாக்ர நியாயமாக, சுவப்ந விசாரம் என்னவென்று ஆராய்வம்.

நான் இரவில் 1-மணிக்கு சுவப்நம் கண்டதாகப்பாவிப்போம். 4-மணிக்கு விழித்துக்கொண்டதாகவும் கருதுவோம். மத்தியில் 3-மணி நேரம் சுவப்நாவஸ்தையை அநுபவித்திருக்க வேண்டுமென்பது திண்ணம். இப்படியிருக்க, மேற்படி அவஸ்தையில், காலையில் எழுந்து உதயத்திற்கு வண்டியேறிப் புறப்பட்டு, ஜாக்கிரத்தில் 22 மைல் தூரமுள்ள ஒரு கிராமத்திற்குப் போய், அவ்விடம் சாப்பாடு தயார்செய்து சாப்பிட்டு, என்வேலையை முடித்து மாலை கழித்து மற்றொரு கிராமத்துக்கு வந்து, ஓர் கோயிற்றிண்ணையில் படுத்து, ஒரு அற்புத உபசுவப்நமும் அநுபவித்ததாகக்கண்டால், மேலேசொன்ன 3-மணி நேரத்தில் இவ்வளவு விபவகாரமும் செய்ததாகக்கண்டது ஆச்சரியமல்லவா? இதில் தேசகால நிர்ணயம் கேவலம் அசம்பாவிதமல்லவா?

தவிர, புராணாதிகளில் வியாசரானவர் புருஷோத்தமனை அவருடைய மாயா வைபவத்

தை விளக்கியருளவேண்டுமென வினவ, ஓர் நாள் கங்கையில் ஸ்நானம் செய்கையில், தான் ஒரு தேசத்தில் நீசனாகப்பிறந்து, ஒரு நீசசாதி ஸ்திரீயை மணந்து, ஒருபெண் மகவைப்பெற்று, அவ்வூர் அரசனுக்கு விவாகம் செய்வித்ததாகவும், பின்னிட்டு நீசஸ்திரீ என்று தெரிந்து அரசனும் அவ்வூராரும் அக்னிப் பிரவேசமாவது கண்டு மனம் நொந்து விழித்துக்கரையேறி நீர் துடைத்து யோசித்து நின்றதருணத்தில், தூர்வாசர் முதலான முனிவர் வரக்கண்டு, எந்த இராச்சியங்களில் சஞ்சரித்தீர்? அவ்விடம் அதிசயமென்னவென்று கேட்க, அவர் தாம்கண்டமேலைய அக்னிப்பிரவேச விருத்தாந்தத்தைச்சொல்ல, வியாசர் அம்மாயனுடைய மாயா வைபவங்களை வியந்து போற்றினரென்றும் கூறியிருக்கிறது. இதில் சுவப்நம் ஜாக்கிரமாகவும் இயங்கிற்றன்றோ! அதுவும் முழுகி எழுவதற்குள்ளாகக் கண்ட சுவப்நம், நீடிய ஜாக்கிராவஸ்தையும் ஆயிற்றல்லவா?

இவ்விதநியாயங்கள் எவ்வாறுபொருந்தும்? என்பது பின்னிட்டு பூத சரீரதத்வப்பிரசினையிற் சொல்வேன்.

(சுபாவ சுகாநுபவ இச்சை வரும் சஞ்சிகையில்)

VI
லோகோபகாரிகள்.

CHAPTER IV.

நான்காவது அத்யாயம்.

(3-வது சஞ்சிகை 89-வது பக்கத்தொடர்ச்சி.)

சூதுப்போர்ப்பயிற்சி நாள் - இன்னும் புதுக்கேண்மை - கிராமாந்திரத்தார் அழைப்பு.

அநேகம் கிரந்தகர்த்தர்கள், தங்களுக்குக் கிடைக்கும் அருமையான வர்த்தமானங்கள் இவ்விதமாகக்கிடைத்தனவென்று, முட்டாள்தனமாகவும், துர்விசாரத்துடனும், ஒப்புக்கொள்வதில்லை. எங்களுக்கு அவ்விதமான அவிவேகத்வமே கிடையாது. நாங்கள் ஒழுங்கான மாதிரியில், நமது பிரசுரம்செய்யும் கடமைக்குத்தக்கபடி, தொழில் நடத்திவருகிறோம். வேறு சந்தர்ப்பங்களால், எங்களுக்கு 'இந்தலோகபகாரிகள்' வர்த்தமானம் பிரசுரிக்கும் பாத்தியதையில் ஆசையிருந்தாலும், சத்தியமே எமது கடைப்பிடியாகையால், மேற்படி உண்மையுணர்வானது, இதை முறையின் வைத்துச்சீர்திருத்தி அச்சிடும் 'சுதந்திர நலத்தைத்தவிர, வேறுவிதமான கீர்டா அபேக்ஷை எமக்கில்லை. 'சீமைக்காயிதக்கட்டே'தான், இதன் மூலகாரணம். வேறுசில ரச, ஆபாசசாகரமே எமது குளிப்பிற்கிடம். இந்த லோகோபகாரப் பானகத்தைச் சாப்பிடத் தாகிக்கும் பிரபஞ்சத்துக்கு, இப்பத்திரிகை மூலமாக லளிதமாக மொண்டு கொடுக்கத்தலைப்பட்டோமே அன்றி வேறில்லை. இவ்விதமாக எமது துணிவின்படியே எமக்குக்கிடைத்த ஸ்ரீ 'ஸ்ரீமாதர்ப்பா லேக்யா பந்தத்தை' நம்பிக், கதையை மேலே நடத்த உத்தேசித்துளோம்.

உதயத்துக்குத் திம்மன் கோட்டையர் எல்லாரும் வெகு விரைவாகத் 'தஸ்மாத் ஜாக்ரத' 'தஸ்மாத் ஜாக்ரத' என்று இருந்தார்கள். என்ன? ஐயர்வாள்! இதற்குக்காரணம்? என்று கேட்பீரேயானால், அக்கோட்டை வெளியில் ஹிதமான போர் இயற்றி, வீரசூரரெல்லாம் கோட்டையைப் பிடித்துக்கொள்ளப் போகிறாராம்! லோகோபகாரமாகக் கிளம்பியிருக்கும் நமது நாயகர், கதவைச்சார்த்தியிருந்தால், சும்மா அடங்கியிருப்பது இப்பிரபஞ்சத்துக்கு சம்மதமாமா? அல்லது, அவருடைய அந்தஸ்துக்குத்தான் அடுக்குமா? தமது துணைவரோடு தாமும் விரைந்தெழுந்து, கதவை மெல்லத்திறந்து, ஒய்யாரமாக வாணரும் வீரரும் கைலாகுகொடுக்க, நாற்புறமும் நோக்கி நோக்கிக்குந்திக்குந்தி ஓடி, மேற்படி ஸ்தலத்தில் நின்றிருந்தவர்களுக்கெல்லாம் அக்ரமாக முன்நின்றார். அழகரோ, தமது அபிஷ்ட இடம்பார்த்து வேறுபோய் நின்றார். சற்று நேரத்திற்குள்ளாக ஆறு சைந்நியம் கோலாகலமாகப் புறப்பட்டுவிட்டது.

இதைப்பார்த்து நமதுநாயகர் விஸ்மயித்து, ஆ! ஆ! என்ன நேர்த்தியான போர்வீரர்! சைந்நியாதிபதிகள் குதிரைமேல் ஏறி நின்று உத்தரவு அளிப்பது, என்ன காம்பீரியமாயிருக்கிறது பாரும்! இவர்கள் தங்களுடைய தேசத்துக்குத் தங்கள் உயிரைக்கொடுக்கத் தயாராக இருக்கின்றனர் அல்லவா? என்றார்.

வீரர்: ஆம்! அதற்குச் சந்தேகமில்லை, என்றார்.

வாணர்: கவிதா சாதுரியத்தால், "தங்களுடைய தேசத்தைக் காப்பாற்றும்பொருட்டு, அமைவான ஜனங்கள் முன்பாக, ஆடம்பரமான சைந்நியம் போர்க்கோலத்துடன் நிற்பது, அதிசிலாக்கியம்! போர்வீரருடைய முகத்தில் ஜ்வலிப்பது சௌரியம் அல்ல; நயந்த கருணையே! கண்களில் பழிவாங்கும் கோபக்கனலே இல்லை! ஜீவகாருண்யமும் சகலப்பிரபஞ்ச ஞானமும், இளமையாகப் பிரகாசித்துக் கொண்டே தான் இருக்கிறது" என்றார்.

நமதுசபாநாயகரும், வாணருடைய ஸ்தோத்திர சைதந்நியத்தில் மூழ்கிப்பரவசமாயிருந்த போதிலும், அவர் சொன்ன சூக்ஷ்மங்களை, சரியென்று ஒப்புக்கொள்வதற்குக் கூடவில்லை. ஏனென்றால், சைந்நியாதிபதி "நேரேபாருங்கள்" என்று உத்தரவு கொடுத்தார்;- போர்வீரரெல்லாம் சரியாக எதிர்நோக்கி அமைந்து நின்றார்கள். ஆகையால், தமக்கு எதிரில் மோட்டுத்தனமாக உறுத்துநோக்கும் ஆயிரக்கணக்கான அர்த்தமில்லாத முகவிலாசங்களைப் பார்த்துவிட்டார்! தமக்கும் அப்பொழுது செவ்வையாகப் பார்க்க சமயம் வாய்த்தது. ஜனங்கள் இவரை முன்னுந்தாமல் நின்றனர். வாணருடைய கால்மேல் நின்றிருந்த சிறுவனும் இறங்கிவிட்டான்.

சபாநாயகர்- "இப்பொழுது தான், நாம் நிலைபெற்றிருக்கிறோம்" என்றார்.

வாணரும், வீரரும்- "நல்ல நிலைமையா!" என்றார்கள்.

"ஆனால், அவர்கள் என்ன செய்யப்போகிறார்கள்?" என்று கேட்டுச், தமது பச்சை மூக்குக்கண்ணாடியைப் போட்டுக்கொண்டு, நமது நாயகரும் உற்றுப்பார்த்தார். பச்சைக்கண்ணாடிமேல் நாயகருக்கு ஏன் பிரியம்? என்றாலோ, "பச்சென்றிருந்தால் அழகு" என்கிற கோட்பாடர். நாலு முழ தூரத்தில் ஒரு சிறு எறும்பு கண்ணுக்குத்தென்பட்டுவிட்டால், அதைத்தாண்டிக்குதிப்பார்! அவ்வளவு "அஹிம்ஸாபரமோ

தர்ம:" என்னும் கொள்கையர். ஒருவேளை எறும்பு மிதிபட்டுப்போனாலோ என்று காலைத் தேய்த்து விடுவர். புறத்துள்ள பிரபஞ்சம் கஷ்டப்படுவதைப் பார்க்கச் சகியார். ஆகையால்தான், தன் கண்ணுக்குப் பச்சைக்கண்ணாடியே பிடிவாதமாகத் தரிப்பார். கண்ணாடியிட்டுக்கொண்டு பார்த்த நம் சபாநாயகர்: "இப்பொழுது என்ன செய்கிறார்கள்?" என்று கேட்டார்.

வீரர்: "நான்-நான்-நினைப்பது, வெடிவைக்கப்போகிறார்கள், என்பதுதானென்றார்.

சபாநாயகர்: "சேச்சே! முட்டாள்தனம்!" என்றார்.

வாணர் பயந்து, "மெய்தான்!" என்றார்.

நாயகர்: "அப்படியிருக்கமாட்டாது!" என்று சொல்லிமுடியுமுன், அவ்வளவு போர்வீரரும் துப்பாக்கியை நீட்டி, மருந்துத்தோட்டா வைத்து வேட்டெழுப்பிவிட்டார்கள். ஆகாயமும் பூமியும் அவ்வதிர்ச்சியால் அல்லோல கல்லோலப்பட்டது. இந்தக்கஷ்ட நிலைமையில், நாயகர் தமது மனோதிடத்தைக் கைவிடவில்லை. வீரருடைய கையையும், வாணருடைய கையையும் பிடித்துக்கொண்டு, தாம் அவருடைய நடுவில் நின்றுகொண்டு, "பொய் வேட்டெழுப்புகிறார்கள்! பயமென்ன?" என்றார்.

வீரர்: "ஒரு சமயம் கைப்பிசகாய் குண்டுத்தோட்டா வைத்துவிட்டாலோ?" என்றார்.

வாணர் இதைக் கேட்டதும், "குப்புறப் படுத்துக்கொள்வோம்!" என்றார்.

நாயகர்: தமது முகம் வெளுக்க வாய் உளறினாலும், இவற்றை ஒரு லக்ஷியம் செய்யாமல், "ஒன்றுமில்லை! எல்லாம் நின்றுபோயிற்று!" என்றார்.

நாயகர் சொன்னது, மிகவும் சரி! வேட்டு நின்றுவிட்டது. ஆனால் வீரருடையவும் வாணருடையவும் ஸ்தோத்திரத்தைப்பெறும்முன்னம், போர்வீரரெல்லாம், அணிபாகத் தத்தம் துப்பாக்கியில் சனியனை வைத்து, நமது நாயகரையும் அவர் சினேகிதரையும் நோக்கினாற்போல, மேற்படியார் நின்றிருந்த இடத்திற்கே, விரைந்து பாய்ந்து வந்துவிட்டார்கள். எல்லாரும் மனுஷியாள் தானே! தைரியம் எத்தனை நிற்கும்? நாயகரும் சபையோரும், தமது தைரியத்தால் தொடை நடுங்கினாலும், எவ்வளவு துரிதமாகப்போகக்கூடுமோ, அவ்வளவு துரிதமாக ஓடி விலக ஆரம்பித்தார்கள். இதற்குள்ளாக, மற்றொரு சைந்நியம் எதிரணிவகுத்து வந்துவிட்டது! எல்லாரும் நடுவில் அகப்பட்டுக்கொள்ளவே,-

எதிர்த்துவரும் சைந்நிய உத்தியோகஸ்தர்- "ஹாய்! ஹாய்!" என்றார்கள்.

நிலை அணி உத்தியோகஸ்தர்- "வழிவிடு! வழிவிடு!" என்றார்கள்.

"நாம் எங்கே போவது?" என்று நம் லோகோபகாரிகள் கேட்டார்கள்.

"ஹாய்! ஹாய்! ஹாய்!" என்பதுதான் மறுபடி அளிக்கப்பட்டது.

இந்தக்கலவரத்தில், கால் கனத்த ஓசையாகவே, பூமி, திமி திமி! என்று அதிரச், சைந்நியமெல்லாம் சமீபத்தில் அரை ஆயிர கஜதூரத்தில் வந்துவிட்டது! உடனே ஒரு அடக்கமுடியாச்சிரிப்புக் கேட்டது;- நமது நாயகருடைய அடி ஆகாசம் நோக்கிக்கிளம்பிவிட்டது! "வாணரும், வீரரும் சபாஷ்! என்று சொல்லும்படி, கண் மூடித்திறக்குமுன், சரியான 'குட்டிக்கரண' வரிசை பழக்கப்பட்டார்கள்.

இன்னும் புதுக்கேண்மை.

அழகர், இதைப்பார்த்து, நாயகர்! நாயகர்! என்று கூவினார். இதெல்லாம் நோக்கி அருகில் நின்றிருந்த இரண்டு இளம்பெண்கள், அழகரை கட்டிக்கொண்டார்கள். பாவம்! என்ன செய்வார்கள்! சனியனுடைய திருஷ்டி அவ்வளவு குரூரமாக இருந்தது. அழகருக்கு இன்னது செய்யவேண்டியது என்பதுதோன்றவில்லை. ஒருபுறம் பெண்களின் பரிதாபநிலை! ஒருபுறம் தமது நாயகருடைய விபத்து! யோசித்தார். உதவவேண்டுங்காலத்தில் ஸ்திரீகளைக் கைவிடக்கூடாது என்று தீர்மானித்து, உறுதியாய் நின்றுகொண்டார். மறுபடியும், நம் லோகோபகாரச் சங்கத்திற்கு அபகீர்த்தி வரும் என்று, நாயகரே! நாயகரே! என்று முன்னிலும் மும்மடங்கு உரத்துக் கூவினார்.

அப்பொழுது வண்டியேறிப் போகும் ஓர் கனவான், தமது வண்டியை நிறுத்தி, நாயகர், வீரர், வாணர், இவர்களைப்பார்த்தார். இவர்மேல் "லோ. உ. ச" என்ற விருதைக்கண்டுவிட்டார். அதிக ஆச்சரியப்பட்டு இது என்ன? 'லோப உத்தேசச்சங்கமா'? என்று தன்னை மறந்து வெளிப்படையாகச் சொல்லிவிட்டார். அழகர் இதைக்கேட்டதும் அடக்கமுடியாத அவசரத்தினால் 'லௌகீக உபகாரச் சங்கம்,' என்று அதட்டிச்சொன்னார்.

கனவான் இதைக் கேட்டும் திடுக்கிட்டு, மேற்படி சங்கத்தார்க்கு உதவிபுரிந்து, வண்டியில் ஏற்றிக்கொண்டார். இதெல்லாம் பார்த்த ஸ்திரீகளுக்குத்தமது அறிவுதோன்ற, அண்ணா! அண்ணா! என்று அழைக்கவே, கனவான் அவ்விருஸ்திரீகளும் தமதுசகோதரிகள் என்றறிந்து, அவரையும் வண்டியில் ஏறச்சொன்னார்.

ஸ்திரீகள் கனவானிடம் வந்து, அதோ! அங்கு நிற்பவர் எங்களுக்கு இத்தருணத்தில் நல்ல உதவி புரிந்தார் என்றார்கள்.

கனவான் இதைக்கேட்டு மகிழ்ந்து, எல்லாவரையும் தமது கிராமத்திற்கு வரவேண்டுமென்று அழைத்தார்.

(கிராமாந்திர அழைப்பு பின்னால் வரும்.)

VII

க்ளைவ் பிரபுவின் சரித்திரம்.

(3-வது சஞ்சிகை 91-வது பக்கத்தொடர்ச்சி).

ஆனால் இந்த எண்ணத்தைக்கொண்டிருந்த வெள்ளையர் ஒருவர் இருந்தார். அவர்தாம் 'டியூப்லே' என்னும் பிரெஞ்சுத்தலைவர். மொகலாயர் மெலிந்த இடத்தில், வெள்ளையரை வலுக்கவிடலாம், என்று எண்ணினார். ஆங்கிலேய கம்பெனியார், வர்த்தகத்திலேயே கண்ணாயிருக்கையில், இவர், தம்மெண்ணத்தை, எப்படி நிறைவேற்றலாம் என்னும் ஆலோசனையிலிருந்தார். இவர், அவ்வாலோசனை செய்தமட்டில் நிற்கவில்லை; சீக்கிரமாக, தம்மனோராச்சியங்களை விதாயகப்படுத்திக்கொண்டார். யுத்தப்பயிற்சி மிக்க, சுவல்ப ஆங்கிலேயர் முன்பாக, இந்திய ராஜகுமாரர் எவ்வளவு சுதேசிப்படைகளைத் திரட்டி வந்தாலும், எதிர்க்க முடியாதென்று தெரிந்துகொண்டார். சுதேசிகள் வெள்ளையரால் பயிற்றப்பட்டால், நல்ல போர்வீரர்களாவாரென்று அறிந்துகொண்டார். தவிர, ஏதோ நவாபென்றும் நிஜாமென்றும் பெயர் பெருக்கமுழங்கும்

பேதையரை வசப்படுத்திக்கொண்டு, சகலவிதமான தோரணைகளையும் நடத்தக்கூடுமென்று தீர்மானித்தார். இவ்விதமான தந்திரங்களெல்லாம், முதலில் இவரிடமிருந்தேதான் பிறந்தன; இவராலேயேதான் போற்றப்பட்டன; பின்னிட்டு ஆங்கிலேயர் அநுஷ்டிக்கும்படி வழிகாட்டினவரும் இவர்தாம்.

இப்படியிருக்கையில், இந்தியாவின் அலங்கோலமோ, சொல்லவேண்டியதில்லை. எதாவது கலகமுண்டாக்கவேணுமென்றால், அதற்குச்சாக்குப்போக்குகள் வேணமட்டுமிருந்தன. பழய சட்டப்படியானாலும் சாக்கு ஏற்படும்; புதிய ஆசாரணைப்படியானாலும் சாக்கு ஏற்படும். குடிகளுடைய சுவாதந்திரிய கதியோ தடுமாட்டந்தான். இதன் மத்தியில், வெள்ளையரெல்லாம் தங்களுடைய தந்திரங்களை ஆரம்பிக்கவே, எல்லா விபத்துகளும் ஒன்றாய்க் கூடிக்கொண்டன. ஒரு நவாபை சுய அரசனாக பாவிக்கவேணுமானாலும் பாவிக்கலாம்; காரியவசத்தின் நிஜமும் அப்படித்தானிருந்தது. மொகலாயர்க்குக்கீழமைந்தவராக பாவிக்கவேணுமானாலும், பாவிக்கலாம்; பேச்சே அப்படித்தான் இருந்தது. பேபரின் சந்ததியை சுவாதீனப்படுத்திக்கொண்டவன், இந்தியாவானது அச் சந்ததிக்குத்தான் உரிமை என்றான். மொகலாயர் என்று நிலைகுலைந்தனரோ, அன்றே அவருடைய ராஜாங்கமும் அழிந்துபோயிற்றென்றும், முன் அரசாண்டதற்காக, அவரை அரசென்று வெகுமானிப்பதேயன்றி வாஸ்தவியமாக அரசுரிமையில்லையென்றும், சொல்லிக்கொண்டார்கள்.

1748-வது வருஷத்தில், இந்து தேசத்தின் புது ஆதீனர்களில் மிக்க பலவானான, தக்ஷிண பூமியின் ராஜப்பிரதிநிதி 'நிஜாம்-அல்-முல்க்' என்பவர் தேகவியோகமானார். அவருக்குப்பின் அவரது குமாரன் 'நாஜர்ஜங்' என்பவன் பட்டத்துக்கு வந்தான். இவனுடைய ஆட்சியுள் கர்னாடக தேசந்தான் மிக ஐசுவரியமும் விஸ்தீரணமும் உள்ளது. இதை 'அன்வாருதீன்' என்னும் ஓர் பழய நவாப் ஆண்டுவந்தான்.

மேலே சொன்ன பிரதிநிதித்துவத்துக்கும் சிற்றரசுரிமைக்கும் வாதிகள் இருந்தார்கள். 'நிஜாம் அல்முல்க்'கினுடைய பேரப்பிள்ளையாகிய 'மிர்ஜாபா ஜங்' என்பவன் 'நாஜர்ஜங்'குக்குப் போட்டியானான். கர்னாடக நவாபின் மாப்பிள்ளையாகிய 'சந்தா சாஹிப்' என்பவன் 'அனவாருதீ'னுக்கு விரோதியானான். அப்பொழுது ஒழுங்குபடுத்தப்படாத இந்தியாச்சட்டமானது இவ்விருவர்க்கும் அநுகூலமாகவே இருந்தது. ஏற்கெனவே, கலவரப்பட்டுக்கிடந்த கோஷ்டியில், அத்தியார்த்தி பிடித்த வம்பர்கள், இவ்விருவருடைய கொடிக்கீழ் வந்து சேர்ந்தனர். இவ்விருவரும் தம்மைச்சமகக்ஷியாக்கி, ஒருங்கு சேர்ந்து, கர்னாடக தேசத்தின்மேல் படையெடுத்து, பிரஞ்சுக்காரர் இங்கிலீஷ்காரரைக் கீழ்சமுத்திரக்கரையில் வெற்றிகொண்டு நின்ற நிமித்தம், அவரைத்துணைபுரியக் கோறிக்கொண்டனர்.

கௌசலமும் அத்பார்த்தியும் உள்ள 'டியூப்லே' என்பவர்க்கு இதைவிடக் குதூகலமானது வேறு வாய்ப்பதாகவில்லை. கர்னாடகத்துக்கு ஒரு நவாபையும், தக்ஷிணத்துக்கு ஒரு ராஜப்பிரதிநிதியையும், நிபத்துக்கு ஏற்படுத்தி, தாம் ராஜ்ஜியபாரம் நடத்துவது, ஒரு வசீகரநோக்கமாயிருந்தது. இந்தப்பாசாங்கிகளோடு கலந்துகொண்டு, அவருக்கு உதவிசெய்யும்பொருட்டு, மேல்நாட்டு யுத்தத்தேர்ச்சி பெற்ற 400 பிரஞ்சுக்காரரையும் 2000 சிப்பாய்களையும், துணைப்படையாக்கி அனுப்பினர். ஓர் யுத்தம் நடந்தது:

அதில் பிரஞ்சுக்காரர்கள் பிரக்கியாதி பெற்றனர். 'அன்வாருதீன்' முறியடிக்கப்பட்டுக்கொலையுண்டான். அவனுடைய குமாரனும், பின்னால் ஆர்காட்டு நவாபென்று சீமை முழுதும் பெயரெடுத்தவனும் ஆகிய 'மகம்மத் ஆலி' என்பவன் சிதறுண்ட சேனையோடுகூட திருச்சினாப்பள்ளிக்கு ஓடி வந்துவிட்டான். ஆகவே, ஜயசாலிகளானவர், கர்னாடகத்துக்கு அதிபதிகள் ஆனார்கள்.

இதுதான் 'டியூப்லே'வினுடைய மகத்துவத்துக்கு மூலகாரணம். சிலநாளைக்குள்ளாக, யுத்தத்தினாலும், உடம்படிக்கையாலும், சதியாலோசனையாலும், அவருடைய சாமர்த்தியம், அதிருஷ்டவசத்தால் எத்திக்கிலும்பிரபலித்தது. 'நாஜர்ஜங்' தன்னினத்தாராலேயே மாண்டான். 'மிர்ஜாபர்ஜங்' தக்ஷிணத்துக்கு அதிபனானான்: இவ்விதமாகப் பிரஞ்சுக்காரரின் யுத்த சாமர்த்தியமும், பிராப்தியும் பூர்ணமாயிற்று. புதுச்சேரி நகரமெல்லாம், சர்வ ஆடம்பரமும் சமாதாரனையுமாகக், கோலாகலமாகஇருந்தது. அதிர்வேட்டும், ஜயபேரிகா கானமும், சொல்லத்தேவையில்லை. புதுநிஜாம் தனது சிநேகரைப்பார்க்க அவ்விடம் வந்து சேர்ந்தார்: வெகு அமர்க்களமாகப் பட்டாபிஷேக உத்ஸவம் நடந்தேறியது. 'டியூப்லே' உன்னதப்பதவி மகமதியரின் ஆடை ஆபரணங்களால் அலங்கிருதரானார்.

நிஜாமோடுகூடப் பல்லக்கில் சம ஆசனம் பெற்றுப் பவனிவந்தார். கிருஷ்ணா முதல் குமரிவரையில் கவர்னர்என்று கொண்டாடப்பட்டார். சந்தா சாகிபைவிட மேலதிகாரரென்று பாவிக்கப்பட்டார். 7000 குருப்புக்குதிரைப் பட்டாளத்திற்குச் சேனாபதியானார். ராஜ்ஜியத்திலிருந்த கஜானாவெல்லாம் புதுச்சேரியில் ஸ்தாபிக்கப்பட்டது. பழய ராஜப்பிரதிநிதிகளின் பொக்கிஷத்தில் பெரும்பாகமெல்லாம், இந்தப்பிரஞ்சு கவர்னரவர்களுடைய கஜானாவில் வந்து சேர்ந்தது. தவிர, இரண்டு லக்ஷம் பவுனும் விலைமதிப்பிலா ஆபரணங்களும், நன்கொடையாகப் பெற்றாரெனவும் வதந்தி. வாஸ்தவியத்தில், இவருக்குண்டான லாபத்திற்கு அளவேயில்லை. சர்வாதிகாரத்துடன் மூன்றுகோடி பிரஜைகளுக்கு அரசானார். இவருடைய சம்மதமில்லாமல், யாதொருவர்க்கும் ஸ்தானமானம் கிடையாது. இவருடைய கையெழுத்தில்லாமல், யாதொரு விண்ணப்பத்தையும்கூட நிஜாம் அங்கீகாரம் செய்வதில்லை.

'மிர்ஜாபர்ஜங்' பட்டம் பெற்றுக்கொஞ்சகாலம்தான் வாழ்ந்திருந்தார். பின்னிட்டு, இவருடைய வம்சத்து இளவரசு ஒருவர், பிரஞ்சுக்காரருடைய அநுமதியால் பட்டத்துக்குவந்தார். முன்னைய உடம்படிக்கை எல்லாம் ஒப்புக்கொண்டார். இந்தியாவில் 'டியூப்லே' தான் சர்வாதிகாரியானார். டில்லிராஜ சதசுங்கூட, இவருடைய பெயரைப்பயபக்தியுடன் பராமரித்தது என்று, இவரைச்சேர்ந்தவர் ஸ்துத்யம் செய்தார்கள். சுதேசிகளெல்லாம், "ஏதடா! ஒரு ஐரோப்பிய நாடுவாழிவந்து 4 வருஷமாகவில்லை! அதற்குள்ளாக ஆசியா கண்டத்தில் என்ன தோரணை செலுத்துகிறான்!" என்று ஆச்சரியப்பட்டார்கள். இந்த வீண்டம்பப் பிரஞ்சுக்காரனுடைய அதிகாரமானது இம்மட்டோடு நிற்கவில்லை. தன் உற்றார் முன்னும் அற்றார் முன்னும் வெகு ஆடம்பரமாய் நடித்தார். தான் வெற்றியடைந்த ஸ்தலத்தில், ஒரு உன்னதமான சதுரச்சிலையை நாட்டி, அதன் நாற்புறங்களிலும் நாலு பாஷைகளில்,

தனது ஜயப்பிரதாபத்தைக், கீழ் நாட்டார் அறியத்தீட்டுவித்தார். இச்சிலையானது, தன் வெற்றியை அச்சிட்ட நாணயங்கள்மீது ஸ்தாபிக்கப் பெற்றது. இதைச்சுற்றிலும், "டியூப்லே விஜய நகரம்" என்ற, ஓர் நகரமும் உண்டாயிற்று.

(இன்னும் வரும்)

VIII

இந்தியா தேசத்தின் மகிமை.

இத்தலைப்பெயர் ஏந்திய வியாசம் ஒன்று, திருவாரூரிற் பிரசுரமாம் 'கமலாசனி' என்னும் மாதாந்திரச் சஞ்சிகையிற் கண்டு களித்தோம். இதிற் கூறியவனைத்தும் சாமான்னியம் உண்மையே. ஆயினும், கேவலம் நாட்டுச்சிறப்பு, நகரச் சிறப்பு முதலானவையே நமது தேசத்தின் மகிமையை விளக்கப்போதுமானவை. ஆகையால், இவற்றைப்பற்றி இதனடியில் வரையலானோம். இவ்விஷயத்தைப் பிரபஞ்சம் அங்கீகரிக்குமெனத்துணிந்தோம் :-

1. 'இந்தியா' என்பது 'சிந்து' என்பதின் மரூஉமொழி. 'சிந்து' என்பதற்கு 'ஜலம்' 'ஜீவனம்' என்பன பிரதிபதம். 'ஜீவனம்' இன்றி உலகில்லை. ஆகையால், 'இந்தியா' என்னும் பெயரிலேயே சமஸ்த 'ஜகத் ஆதாரம்' என்பது அமையாக்கிடந்தது.

2. 'பர்வதராஜன்' என்பது நமது 'ஹிமோத்கிரி'யாம். இதைப்போன்ற உன்னதமான சிகரம் இவ்வுலகில் உண்டா?

3. 'அமிருதம்' என்பது 'கங்கை'யாம். இக்கங்கா நதி நமது முக்கியநதி. இதன் நீரிற்கு உள்ள மகிமையும் குணமும் வேறு உலகிலுள்ள எந்த நதிக்காவது உண்டா?

4. 'ஜம்புத்வீபம்' என்பது நமது தேசமாம். 'ஜம்பு' என்பது ஓர்மரம். இதில் 5 விதமுண்டு. ஜம்பு, நேரல், நாவல், சாதேவம், குழிநாவல், என்பன. இவற்றின் நிறபேதம், முறையாக, வெண்மை, செம்மை, வெண்சிவப்பு, கறுமை, செங்கறுமையாம். இவற்றுள், 'ஜம்பு' என்னும் வெண்மை நாவல் நமதுதேயத்திற்கே தெய்வீகமாக அமைந்த விருக்ஷம். இதற்கு 'சாயா விருக்ஷம்' என்றும் 'கற்பவிருக்ஷம்' என்றும் பெயர். இது தக்ஷிண கன்னடஜில்லா உப்பினங்காடி தாலூகா மலைவனங்களிலும் மற்றும்அகப்படும். இந்த விருக்ஷத்திற்கு ஆயிரம் வயதானால் 'சாயா விருக்ஷம்' எனப்படும். அப்பொழுது இதன் நிழல் கண்ணுக்குப் புலப்படாததாம். இதன் உத்தரவேரினால் இலகுவான சிமிழ் ஒன்றுசெய்து அகில் சுத்திசெய்த 'பாரதம்' ஒரு கழஞ்சுவிட்டுப்புடம்போட்டால் கட்டிமணியாம். இந்த மணியால் அஷ்டமாசித்திகளும் உண்டாம். இது பெரும்புகழ் என்று இகழவேண்டாம். கொள்ளேகாலம் தாலூகாவில், 'பெல்லஜ்ஜே' பங்களாக்கட்டியிருக்கும் 'தொட்டசம்பகா' வனத்தில், ஒரு சண்பகமரம், அனாதிகாலமாய் சிவலிங்காமய ஆகிருதியாய், சுமார் அரை ஏகரா நிலத்தைக்கவர்ந்து உயர ஓங்கி அளாவி, இன்னும் இருக்கிறது. இம்மரத்திற்கு ஆயுள் கணிப்பார் இல்லை. இதுபோல, மேற்படி 'சாயாவிருக்ஷ'த்தைப்போற்றி அறியும் தீக்ஷிதாள் இருக்கலாம். எவ்விதமாயினும், இச்சாதிமரம் நமது தேசம் தவிர உலகிலேயே இல்லை. தவிர, வியவசாய

பலம் நமது தேசத்தைப்போல உலகில்உண்டா? ஜாதி, மல்லிகை, முல்லை, இருவாக்ஷி முதலான புஷ்பவகைகளும், ஜாதி, சந்தணம், அகில், தேவதாரு, வேங்கை, பிப்லம் முதலான திவ்விய மரங்களும், முக்தி, கிம்புருஷம், அழுகண்ணி, தொழுகண்ணி, நகரப்புல், நிலமா, இறுப்பவல், துடரி, அங்கோலம், இருளம், பாதாளம், மகாமேதம் முதலான மகா மூலிகைகளும், இன்னும் சொல்லித் தொலையாத அநேக சஸ்யாதிகளும், அமைந்த தேசம் உலகில் உண்டா?

5. ஜனசமூகம் : எத்தனையோநடைநொடி பாவனைகள் அமைந்த நமது தேசத்து சமூகம் போல உலகில் எத்தேயத்தாகிலும் உண்டா?

6. பாஷை : நமது தேயத்துள்ள பாஷாவகைகள் போல நிறைவு பெற்றதும், உலகபாஷைகளின் மாதாவாகிய சம்ஸ்கிருதமும் தெய்வீகமாக அமையப்பெற்றதும் ஆகிய தேசம் உலகில் உண்டா?

7. ஆசாரம் : நித்ய சௌசமும், விபூதிக்ரியையும், பெற்ற நமதுதேசத்தைப்போல் இதர தேசங்கள் உண்டா?

8. வேதசாஸ்திர புராணாதிகள் : இவற்றைப்போல அனுநிவையவம் அமைந்தன வேறு தேசங்களில் உண்டா?

9. விஞ்சை : வைத்தியம், மாந்திரிகம், ஜோதிஷம், இதரதேச சாஸ்த்ரமா?

10. மதம் : தற்கால சாஸ்த்ர (Science) ஆராய்ச்சிக்கமைந்த யோகசாதனமதம் நமதைப்போல்வேறே தேசங்களில் உண்டா?

11. நகர நிர்மாணம் : அரண்மனைகள் அமைந்தது! என்று வியக்கும் நகரம் (City of Palaces) இதர தேசங்களில் உண்டா?

12. மிருகபக்ஷியாதி : புசிப்பிற்குரிய "நக்காத" "நடவாத" மிருக ஜாதிகளும் "ஏறுத" "இறங்காத" பக்ஷி ஜாதிகளும் நிறையப்பெற்றதும், 'மிருகமதம்' உத்கிருஷ்டமாம் ஹிமோத்கிரி கஸ்தூரி மிருகமும், மருப்பில் முத்துதிக்கும் பத்ரஜாதி யானையும், முரசொலி கேட்க மாளும் அசுண மென்புள்ளும், அமைவுற்றதும், ஆகிய இதர தேசங்களுண்டா?

இவைபோல்வன மகத்வம் அநேகம் உள : விரிவு அஞ்சி விடுத்தாம். உஷ்ணம், சீதளம், சம்மிச்ரம், ஆகியபலத்தைக்கொடுக்கும், முல்லை, நெய்தல், மருதம், குறிஞ்சி, பாலை நிலவகையனைத்தும் நமது மாதாவாகிய இத்தேயத்தின் வயிற்றில் வாய்ந்த சித்ர தெய்வீக கற்பிதம்போல உலகில் ஒரு தேசத்திலும் இல்லவே இல்லை.

பிரபஞ்ச இயற்கை மனித இயற்கையை அநுகூலிக்கும் (Physical features of a country tell upon the characteristic of the man) என்பது சத்தியமானால், நமது தேச மகிமையே நமது மகிமைக்கும் காரணமாம். ஆகையால், 'தெய்வம் வரங்கொடுத்திருக்கப் பூசாரி வரங்கொடுப்பதில்லை' என்னும் சொல்லுக்கிடங்கொடாமல், இச்சஞ்சிகைத் தலைப்பில், விவேகாநந்த சுவாமிகள் அருளியவற்றை, வரைந்ததுநோக்கியுணரவேண்டுவம்.

C. R. Padmanabha Iyer.

மதம்.

சென்ற ஆவணி-மீ 25-உ "இந்துநேசன்" பத்திரிகையில் 'மதம்' என்னும் தலைக்குறிப்பின் கீழ், சைவர்களும் வைஷ்ணவர்களும் பகவத்தியானம் செய்யவேண்டிய கடமையைப்பற்றி சுருக்கி எழுதப்பட்டிருப்பதைக் கண்டுமகிழ்ந்தோம். இப்பத்திரிகையை நடாத்தி வருபவர் மகா-ா-ஸ்ரீ எஸ். ஸௌந்தரராஜ ஐயங்கார் அவர்கள். இவர் வைஷ்ணவ மதஸ்தராகவிருந்தும், தம் மதத்தினர் ஆசரித்து வரும் த்வேஷ குணத்தை பயமின்றிக் கண்டித்தெழுவதைப் பார்த்தால், "எப்பொருளெத்தன்மைத்தாயினு மப்பொருள் மெய்ப்பொருள் காண்ப தறிவு" என்றபடி உண்மையையே பெரிதாகக் கைக்கொண்டவர் என்னலாம். இவருடைய புத்திமதியை யாமும் அநுசரித்து எமது நேயர்களுக்கு ஓர் விண்ணப்பம் செய்யவேண்டியது உசிதம்.

நேயர்களே! உலகத்தில் உள்ள எந்த மதத்தையாவது நிதர்சனமாக எடுத்து ஆராயுங்கள். தெய்வம் த்ரியம்முகமாகவே பாவிக்கப்படும். ஏனென்றால், குணத்ரயம், க்ரியத்ரயம், பலத்ரயம் ஆகவே ப்ரபஞ்சம் புலப்படும். ஆகையால் கிரியாகுண விசேஷண கர்த்ருத்வ நியாய வைபவத்தால் திருமூர்த்தி சுவரூப பாவம் ஏற்பட்டுள்ளது. இந்த பாவம் இயற்கையாய் சைதன்னிய பலமாய் நிலைபெற்றது. இதை அசைக்கவேண்டுமென்றால் ஈசுவரனுகிலும் சாத்யமல்ல. "தோன்றின ஒடுங்கும்-ஒடுங்கின தோன்றும்." (Energy must have a Repose and Repose must have an Energy.) இதுதான் 'பீசாங்குர' நியாயம். இந்த நியாயத்தை, சைவன் சகஸ்ர சிவராத்ரிப் பட்டினி இருந்தாலும், வைஷ்ணவன் எட்டு ஏகாதசிப் பட்டினி இருந்தாலும், அசைக்கமுடியாது. விஷ்ணு சைதன்ய மூர்த்தி (Vishnu is All Energy): சிவன் தமோகுண மூர்த்தி (Siva is All Repose):- சைதன்யமும் தமோகுணமும் ஐகைக்யமானவை. எப்படி என்றால், நடந்தான் இருப்பன்: கிடந்தான் எழுவன்: ஜனித்தான் மரிப்பன்: இன்னும் இவைபோல்வனவும் சுவபாபமாய் அநாதியாய் உள்ளது. இவற்றில் ஒன்றிருந்தால் மற்றது கட்டாயம் உடன் நிகழ்ந்தேயாகவேண்டும்.

நிதர்சனமாக அமிருத மதனத்திலும், தாருகாவனரிஷி பங்கத்திலும், திரிபுரதகனத்திலும், சிவனும் விஷ்ணுவும் தம்முள் வேற்றுமையின்றிக்கலந்து கிரியை நடத்தினர். இவர் தம்முள் வேற்றுமை பாராட்டிஇருந்தால், இன்றைத்தேதியில் சைவனும் இரான்: வைஷ்ணவனும் இரான்: இப்ரபஞ்சமே இராது.

தவிர, சிவனே பெரியவன் ஆக: விஷ்ணுவே பெரியவன் ஆக: இவ்விருவரும் தேவரே: இவ்விருவரும் மனுஷியனில் சிலாக்கியம் தான்: இதற்கு சந்தேகமில்லை. பகவானும், பகவத்கீதையில் க்ஷுத்ரதேவதைகளை ஆராதிக்கும்பலனும், சன்முகூர்த்திகளை ஆராதிப்பதால் அவ்விதம் நிஷ்காமமாகவும் திடசித்தமாகவும் ஆராதிப்பவர்களுக்கு அம்முகூர்த்தியாகவே தான் இருந்து சத்பலனையளிப்பதாகச் சொல்லியிருக்கிறார்.

ஆகையால், தன்னின் மேலானபதவிகிடைக்க, மேற்படி இருகிறத்தார் கோவிலுக்குப்போவதில் குற்றமென்ன?

சிவஸஹஸ்ர நாமத்தில் விஷ்ணுவின் பெயரும், விஷ்ணு ஸஹஸ்ர நாமத்தில் சிவன்பேரும் கூறியுளது. இஃது இங்ஙனமாக, பத்மநாப ஐயர், கோவிந்த ஐயர், நாராயண ஐயர் என்று பெயர் வழங்குகிறது. சதாசிவ அய்யங்கார், சாம்பசிவ ஆச்சார் என்று யாம் கேட்டதுங்கூட இல்லை!

இதன் தாற்பரியம் என்ன?

C. R. Padmanabha Iyer.

IX

தலபுராண வாஸுதேவ முதலியார்.

வாசுதேவ முதலியாரென்பார் கோயம்புத்தூரைச் சேர்ந்த ஓரோட்டுக் குப்பைசெட்டிபாளையத்தில் தொண்டைமண்டல வேளாள வருணத்தில் சேக்கிழார் கோத்திரத்தில் ஜனித்தவர். ஸ்ரீ முருகக்கடவுளை உபசனு மூர்த்தியாகப்பெற்றுத்தமது பத்தினியாராகிய அய்யண்ணியம்மையாருடன், இல்லறத்தை யொழுங்குபெற நடாத்திய சித்தாந்த சைவர். இவர் பிறந்த வருடமும் இவரைப் பெற்றோர்களின் வரலாறும் இப்பொழுது தெரியப்போதுமான சாதனங்களில்லை, யென்றாலும் இவர் மைசூரைச் சேர்ந்த நஞ்சுண்டகூடல்சென்று அத்தல புராணத்தையியற்றி அப்போது மைசூரையாண்டுவந்த ஸ்ரீ கிருஷ்ண ராஜேந்திர உடையார் பகதூரவர்களால் சன்மானம் பெற்றதாக கர்ண பரம்பரையில் சொல்லிக்கொள்வதால் இற்றைக்கு 100 வருடங்களின் முன் வரையில் இம்முதலியார் வாழ்ந்து வந்தாரென ஊகிக்கப்படுகின்றது. இவரது சமயம் சைவ சமயமேயானாலும் இவர் பெயருக்கிய இவர் வீட்டு வழக்கப்படி தம் நெற்றியில் ஊர்த்வ திரிபுண்டரம் தரித்து வந்தனராம். இவரிளமையிலேயே தமிழிலக்கண விலக்கியங்களைக் கசடறக்கற்று இயல் இசை நாடகமென்னும் முத்தமிழிலும் வல்லுனராய், ஆசு மதுர சித்திர வித்தாரமென்னும் நால்வகைக்கவிகளையும் மிக எளிதில் அமிழ்தினுமினியனவாகப்பாட வல்லவராய் தீர்த்த யாத்திரை தலயாத்திரைகளைச் செய்து தாம் செல்லுந்தலங்களில் தென்மொழிப் புராணங்களில்லாத தல புராணங்களை வடமொழியினின்றும் தென்மொழியில் மொழிபெயர்த்துத் தமது கல்விப்பெரும்புகழைப் பரவச்செய்துவந்தார். அங்ஙனம் வருகையில் கொங்குநாட்டுப் பாடல் பெற்றத்தலங்களுள் ஒன்றாய திருமுருகன்பூண்டியில் சிலநாள் தங்கி, அத்தலபுராணம் தென்மொழியி லில்லாததை யுணர்ந்து வடமொழிபுராணத்தை முதனூலாகக்கொண்டு அதைத் தென்மொழியில் பாடினாரெனத் தெரிகின்றது.

இவ்வாறே இப்புலவர் பெருமான் திருநண்ணு என்னும் பவானி கூடலிலும், நஞ்சுண்ட கூடலிலும் தங்கி அத்தலபுராணங்களைத்தென்மொழியில் இயற்றித் தலபுராண வாஸுதேவ முதலியாரென சிறப்புப்பெயரும் பெற்று விளங்கினாரெனத் தெரிகின்றது.

இவர் நெடுநாள் புத்திரப்பேறின்றி வருந்தி புத்திரப்பேற்றைக் கருதி "மூவாண்டின் முன்னர் முதலையுண்டிறந்த முதலைவாய் மதலையளித்த மூதூராகிய" திருப்புக்கொளியூரென்னும், அவிநாசியை யடைந்து, அங்கு திருக்கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் ஸ்ரீ கருணாம்பா சமேத ஸ்ரீ அவிநாசி லிங்கேச்வரரை தரிசித்து, ஸ்ரீ பெருங்கருணாலயச் செல்வியை துதித்து, 'கருணாம்பிகைசதகமும்' 'கருணாம்பிகைப்பிள்ளைத்

தமிழும் பாடியதாகவும், பிள்ளைத்தமிழை ஸ்வாமி சன்னிதியில் அரங்கேற்ற பிரசங்கித்து வருநாளில் ஒரு நாள் வருகைப்பருவத்தின் நான்காம்கவிக்கு பொருளுரைக்குங்கால் அங்கு இப்பிரசங்கத்தை கேட்கவந்திருந்த இம்முதலியார் அமுதுகொள்ளும் வீட்டின் ஆதி சைவப்பிராம்மணனுடைய மடியில் அவருடைய பெண்குழந்தையைப் போன்றதோர் பெண்குழந்தை உட்கார்ந்துகொண்டிருந்ததாகவும், அக்குழவி பிரசங்க முடிவிலெழுந்து சிரக்கம்பஞ் செய்துவிட்டு அம்மன் சன்னிதியை நோக்கிச் சென்று அர்த்தமண்டபம் புகுந்ததாகவும்; அங்ஙனமர்த்த மண்டபத்தில் சென்ற குழவியைத் தேடியுங் காணமல் அர்த்தமண்டபத்தின் வாயிலில் அம்மனுக்குச் சாத்த வைத்திருந்த மஞ்சள் காப்பில் அக்குழவியின் வலதுகாலடிச்சுவடு பதிந்திருந்ததை அர்ச்சகர் கண்டு அங்குள்ளோர்க்கும் முதலியாருக்கும் காட்டினதாகவும் சொல்லப்படுகின்றது. அன்று அம்மனுக்கு கற்பூரநீராஞ்சனம் கொடுக்கப்பட்டவுடனே அம்மனுக்கு சாற்றப்பட்டிருந்த புஷ்பங்களில் வெண் புஷ்பங்கள் வலதுபுறத்தில் உதிர்ந்ததை அங்குள்ளோர் கண்டு முதலியார்க்கும் தெரிவித்து இனி உமக்கு புத்திர சந்தானம் உண்டாகும்; அம்மை கிருபை செய்திருக்கிறாரென்று கூறினார்களாம். இது நிகழ்ந்த ஒருவருடத்திற்குள் முதலியார்க்கு ஓர் ஆண் குழந்தை கிடைக்கப்பெற்று அதற்கு "கருணாலய சுந்திர முதலி" என நாமகரணஞ்சூட்டப்பட்டது. இக்கருணாலய சுந்திர முதலி இற்றைக்கு 30 வருடம் முன்வரை வாழ்ந்து வந்து கோயம்புத்தூருக்கு மேற்கேயுள்ள தொண்டாமுத்தூரில் காலஞ்சென்றாரெனத் தெரிகின்றது.

(இவரையாதரித்த பிரபுக்கள்.)

வாசுதேவ முதலியார், மைசூரைச் சேர்ந்த நஞ்சுண்டகூடல் புராணத்தைப்பாடி அப்போது மைசூர் கர்த்தராயிருந்த ஸ்ரீ கிருஷ்ண ராஜேந்திர உடையார் பகதூரவர்களின் அவைக்களத்துப்பிரசங்கித்து அரங்கேற்றினார். இதைக்கேட்டானந்தித்த அரசர், புலவர் பெருமானுக்கு ஆடையாபரணங்களும் ஆயிரம் பொன்னும் நல்கினரென்றும், அதைப்பெற்ற புலவர் தம்மூர் திரும்புங்காலத்து தாம் பெற்ற வனைத்தையும் நஞ்சுண்டலிங்கேசர் திருப்பணிக்கே கொடுத்துவிட்டதாகவும் சொல்லப்படுகின்றது.

இவரியற்றிய கருணாம்பிகை சதகத்தில் வஞ்சிபாளையம் சுப்பிரமணிய முதலியாரென்ற ஓர் பிரபுவைப் புகழ்ந்தாயும் அதையறிந்த பிரபு புலவரை யழைப்பித்து சதகத்தை தம் முன்னிலையில் பிரசங்கிக்கச்செய்து கேட்டானந்தித்து புலவருக்கு 350 ரூபாயும் ஆடையாபரணங்களும் கொடுத்தாரென்று சொல்லப்படுகிறது.

இவ்வாறே இப்புலவர் பற்பலவிடங்களில் சென்று பிரபுக்களைப் புகழ்ந்தும், மூர்த்தி தலம் தீர்த்தம் முதலியவைகளைத் துதித்தும், ஒழுகிய வோசையும் விழுமிய பொருளும் ஆழ்ந்த கருத்தும், விரவிச்செறிந்து படித்தற்கு இனிமை பயக்கும் வண்ணம் நவரசாலங்காரத்தோடு செய்யுள்களையும் நூல்களையுமியற்றி சிலகாலம் தமதுறைவிடமாகிய செட்டிபாளையத்திலேயே வசித்து சிவபெருமான் திருவடி நீழலில் கலந்தார்.

இவரியற்றிய நூல்கள்.

வெளிவந்துள்ளன.

பவானிகூடற் புராணம்.
திருமுருகன்பூண்டி புராணம்.

பேரூர் பச்சைநாயகியம்மைப் பந்தடி.
கருணாம்பிகையம்மை சதகம்.

வெளிவராதன.

நஞ்சுண்டகூடற் புராணம்.
கருணாம்பிகை பிள்ளைத்தமிழ்.

இப்புலவரது சரித்திரத்தைப்பற்றிய ஏனைய கதைகளையும் இவரியற்றிய மற்றய நூல்களையும் தனிச் செய்யுள்களையும் தெரிந்த அறிஞர்கள் பிரபஞ்சம் பயனடையும்பொருட்டு எழுதிவருவார்களாயின் அவர்களுக்கு மிக்க வந்தனத்துடன் நன்றி பாராட்டுவோம்.

இங்ஙனம்,
இஷ்டர்களே வந்தனம்.
E. K. S. Manian.

X

இந்தியா சட்ட நிரூபண விருத்தாந்தம்.

(3-வது சஞ்சிகை 95-வது பக்கத்தொடர்ச்சி.)

மதிராஸ் ஹைகோர்ட்டு முன்பாக.
சிவில் அப்பீல்.

வாதி-டி, குரூஸ், முதலானவர்கள்.
பிரதிவாதி-டி, சில்வ, முதலினர்.

வாதிகள், ஒரு கோவில் சங்கத்திற்கு, தர்ம விஷயமாக சந்தாதாரர்கள். பிரதிவாதிகள்-சங்கத்தின் சபாநாயகரும், காரியதர்சியும் முதலானவர்கள். பிரதிவாதிகள் கெடுகாரியஸ்தரென்றும் அவர்கள் வரவு செலவு கணக்குகளை ஒப்பிக்க வேண்டுமென்றும், வாதிகள் வழக்குத் தொடர்ந்தார்கள். சப்கோர்ட்டாரும், அப்பீல் கோர்ட்டாரும், வாதிகள் மேற்படி வழக்குக்கொண்டுவர பாத்தியஸ்தரல்லர், என்று தீர்ப்புசெய்தார்கள். ஹைகோர்ட்டில் வாதிகள் அப்பீல் செய்யவே, சிவில் புரோசீஜர் 539-வது வகுப்பின்படி அட்வொகேட் ஜனரலுடைய சம்மதமாவது, 30 வகுப்பின்படி கோர்ட்டாருடைய சம்மதமாவது இல்லாமல் வழக்குத்தொடரக் கூடாதென்றும், அதுவுமன்றி, வாதிகள் சங்கத்தின் மெம்பர்கள் அல்லாததினாலும், இந்த வழக்குக்கொண்டுவர அதிகாரஸ்தரல்லர் எனவும், இல்லாவிடில், சங்கத்தின் மெம்பர்களுடையவாவது, இதராளுடையவாவது சம்மதம், வாதிகள் பெற்றிருக்கவேண்டியிருக்க, அப்படிப் பெறாததினாலும், வாதிகள் உபகாரமடையும் ஜனங்களல்லவென்றும், இத்தியாதி காரணங்களால், அப்பீல் தள்வழிசெய்யப்பட்டிருக்கிறதென்றும் தீர்மானிக்கப்பட்டது.
(மேற்படி நிரூபணம் 131-வது பக்கம் பார்க்க.)

சிவில் அப்பீல்.

அப்பீல் வாதி, சுல்தான்சாஹிப் மரக்கார் (பிரதிவாதிகள்)
பிரதிவாதி, சிதம்பரம் செட்டியார் (வாதிகள்)

1900-வருஷம் ஒரு ஸ்தாவரசொத்தானது வாதியால் ஏலத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டு, 1907 வருஷம் சுவாதீனம் பெற வாதி விண்ணப்பம் செய்தான். கோர்ட்டாரவர்கள், 'லிமிடேஷன் ஆக்ட் 179-வது வகுப்பு II-வது ஷிடியூலின்படி, மூன்றுவருஷத்திற்குள்ளாக விண்ணப்பம் தாக்கலாகாவிட்டாலும், டிகிரிநிறைவேற்றக் கொடுத்த விண்ணப்பம் போலவே கருதவேண்டுமென்று, வாதிபட்சம் தீர்ப்பளித்தார். அப்பீலில் ஹைகோர்ட்டார், இந்த விண்ணப்பத்தை

'லிமிடேஷன் ஆக்ட் 178-வது பிரிவுப்படி, மூன்று வருஷத்துக்குள்ளாக தாக்கல் செய்திருக்க வேண்டுமென்றும், சொத்தைசுவாதீனப்படுத்தக் கொடுத்த விண்ணப்பமானது, டிக்ரி நிறைவேற்றக்கொடுத்த விண்ணப்ப மல்லவென்றும், விண்ணப்பத்தை தள்வழி செய்தார்கள்.

(மேற்படி நிரூபணம் 136-வது பக்கம் பார்க்க.)

சிவில் அப்பீல்.

அப்பீல் வாதி-காஜீகார் லட்சுமி (பிரதிவாதி)

பிரதிவாதி-மறுதேவி (வாதி)

வாதிப்பிரதிவாதிகள் ஜெயினர்கள். அளிய சந்தான நடவடிக்கையார். குடும்பத்தில் மைனருக்காக, கோர்ட் ஆப் வார்ட்ஸ் சட்டப்படி, ஒரு சம்ரக்ஷண கர்த்தாவை நியமிக்க விண்ணப்பம். அளிய சந்தான சட்டப்படி, குடும்பத்திலுள்ள புருஷர்களுக்கு, சம்ரக்ஷணை பாத்தியம் ஒன்றே தான். குடும்பத்தில் வேறு புருஷர்களிருக்கையில், சம்ரக்ஷண கர்த்தாவை நியமிப்பது நியாயமில்லை. மைனருக்குப் பிரத்தியேக சொத்துமில்லையென்று விண்ணப்பத்தைத் தள்ளிவிட்டார்கள். (மேற்படி நிரூபணம் 138-வது பக்கம் பார்வையிடவும்.)

சிவில் அப்பீல்.

வாதி - சுப்பராயமுதலியார் முதலினர்.

பிரதிவாதி - ராக்கி.

1908 வருஷத்திய I-வது மதிராஸ் பூஸ்திதிச்சட்டம் 189-வது வகுப்பின்படி, கந்தாயம் பிரிவினை நடவடிக்கை நடத்த, ரிவெனியூ கோர்ட்டாருக்கு மாத்திரம் அதிகாரம் கொடுக்கப்பட்டிருந்தபோதிலும், அந்தச்சட்டம் ஜாரியாவதற்குமுன் செய்த நடவடிக்கையை நடத்த சிவில் கோர்ட்டாருக்கு அதிகாரம் உண்டென்று தீர்மானிக்கப்பட்டது. (மேற்படி நிரூபணம் 140-வது பக்கம் பார்வையிடவும்.)

சிவில் அப்பீல் வழக்கு நெ. 40 : 7-4-09.

வாதி-ரிச்சார்டு டெயிலர் முதலினர்.

பி. வாதி-பார்லிகிமிதி ஜமீன்தார்.

வாதியின் தமயன் 19-4-1892 தேதி மேற்படி ஜமீன்தார் பேரில் வில்சாசனம் எழுதிவைத்தார். அதில் 'ஜமீன்தார் தனது இஷ்டப்படி முடிப்பார் என்பதற்கு சந்தேகமில்லை' என்று எழுதியிருந்தார். பின்னிட்டு 1895 ஏப்ரல் 28 தேதி ஒரு கடிதமும் எழுதிவைத்தார். இக்கடிதத்தில் ஜமீன்தார் அவர்களைத் தன் சொத்துக்களைக்கிரயப்படுத்தி, மேற்படி தொகையைத்தன் சகோதிரனுக்குக் கொடுக்கும்படி, சீமையிலிருக்கும் ஓர் கம்பெனியார்க்கு அனுப்ப எழுதியிருந்தது. ஜமீன்தார் 27-4-05 தேதி மரணமடைந்தார். பிறகு வாதியால் மேற்படி ஜமீன்தார் மகன்பேரில் சொத்துக்காக வழக்குக்கொண்டுவரப்பட்டது. இதில், மேற்படி கடிதமானது ஒப்புக்கொள்ளத்தக்க தல்லவென்று தீர்மானிக்கப்பட்டது.

பிற்பாடு அப்பீலில் இது ஒப்புக்கொள்ளத்தக்கதென்றும், இச்சொத்துகள் வாதிகளுக்காக ஜமீன்தாரால் வைத்துக்கொள்ளலாம் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

1907-வருஷத்திய நெ. 53 மு. 57, 59 மு 86, 88 மு 102, 194, 204. உத்தரவுகளின் மேல் அப்பீல்- 19-3-09.

வாதி-கார்நெட் ஜமீன்தார்.

பிரதிவாதி-திருமலைத் தம்பிடி முதலினர்.

வாதியின் தகப்பன்பட்ட கடன் டிக்ரிக்காக வாதியின் சொத்துக்களை ஜப்தி செய்ததின்மேல் அப்பீல்.

இவ்வழக்கில் வாதியானவன் தான் மேற்படி சொத்துகளுக்கு பாத்தியஸ்தனானது வார்சுபாத்தியதைமேல் என்றும், தன் தகப்பனார் பட்ட கடன் குடும்ப ஆவசியத்துக்கு என்று ருசுவாகாதவரையில், தகப்பன் பட்ட கடனுக்கு மகன் பாத்யஸ்தனல்லவென்றும், கடன் நியாயமானது என்று ஸ்தாபிப்பதற்கு வேறே வழக்குத்தொடர்ந்திருக்கவேண்டும் என்றும், வாதிக்கப்பட்டது.

பிரதிவாதி பக்கம், மேற்படி கடனானது இதரக்கடனைப் போலவே ஆகிறதென்றும், மேற்படி கடன் தன்னைப்பொறுத்தாதென்றும் ஜமீன்தார் அவர்கள் ஆராய்ச்சி செய்யவேணுமானால் பிரத்தியேகமான வழக்குத்தொடுத்திருக்கவேண்டுமென்றும் வாதிக்கப்பட்டது.

குடும்ப சொத்தின் மேல் அதின் எஜமானனுக்கு பராதீனப்படுத்த அதிகாரமுண்டென்றும் ஆனால் அப்படிச்செய்வது குடும்ப ஜீவனார்த்தவிஷயம் அநுசரித்தே செய்யத்தக்கதென்றும்;

பராதீனப்படுத்தக்கூடாத சொத்தானாலும் கடன்காரன்மேல் வழக்குத் தொடுத்து பெற்ற டிகிரிப்படி ஜப்தியான சொத்தின்மேல் நடவடிக்கை நடத்துவதில் கடன்காரனுடைய மகன் ஆக்ஷேபிப்பது ஒப்புக்கொள்ளத்தக்கது அல்லவென்றும்;

ஆனால் மேற்படி டிக்ரிக்காக மகன் சுவாதீனத்திலிருக்கிற சொத்தை நூதனமாய் ஜப்தி செய்வது கூடாதென்றும்; தீர்மானமாயிற்று.

கிரிமினல் அப்பீல்.

(Abkari not reported elsewhere)

நெ. 172 : 22-4-09.

வாதி - சர்க்கார்.

பிரதிவாதி - முனுசாமி முதலானவர்கள்.

போலீசார் பிரதிவாதிகளை ஓர் சாராயக்கடையில் வெறிக்கக்குடித்து கலகம் செய்ததற்காக மதிராஸ் ஸிடி போலீசு ஆக்டுப்படி மேஜிஸ்டிரேட்டின் முன்பாகச் சார்ஜ்செய்தார்கள்.

பிரசிடென்சி மாஜிஸ்டிரேட் கோர்ட்டாரவர்கள், 1888 வருஷத்திய III-வது மதிராஸ் ஸிடி போலீசு ஆக்டு 75-வது செக்ஷன்படி சாராயக்கடையானது பகிரங்கமான ஸ்தலமல்லவென்று பிரதிவாதியை விட்டுவிட்டார்.

இதன்மேல் அட்வொகேட் ஜனரல் அவர்கள் மேற்படி விடுதலை சட்டவிரோதமானதென்று ஹைகோர்ட்டாரவர்களுக்கு அப்பீல் செய்தார்.

ஹைகோர்ட்டார் அவர்கள், சாராயக்கடையானது, இதர கடைகள் போல் அல்ல: சர்க்கார் ஆதீனத்திற்பட்டு சர்க்கார் அதிகாரத்திற்கமைந்திருப்பது. அதை கலெக்டர் அவர்கள் மூடிவைக்க உத்திரவு செய்தாலொழிய, லைசென்சு நிபந்தனைப்படிக்கு லைசென்சுதாரன் திறந்து வைக்கவும், வேண்டிய சரக்குகளைப் போதுமான அளவு சப்ளைசெய்யவும், பாத்தியப்பட்டிருக்கிறான்: இதனால் யாவருக்கும் அப்படிப்பட்ட கடைக்குப்போக பாத்தியதை உண்டு: அப்படிப்பட்ட இடங்களில நேரும் சச்சரவு, ஒழுங்கின்மை இதுகளை அடக்கவேண்டியது போலீசார

கடமை: ஆகையால் போலீசார் வாரண்டில்லாமல் மேற்படி சாராயக்கடைகளில், தங்கள் அலுவல் நடத்தப்பிரவேசிக்கலாம்:

இதனால் சாராயக்கடை பகிரங்கமான ஸ்தலம் ஆகிறது.

ஆகையால் மாஜிஸ்டிரேட் கோர்ட்டார் அவர்கள் செய்த விடுதலை தப்பென்று ரத்துசெய்துவிட்டார்கள்.

Allahabad Criminal revssion No. 872.
5-2-08 abkari.

பானலால் என்பவன் ஒரு கிளப்பின் காரியதெரிசியின் வேண்டுகோளின்படி லைசன்சில்லாமல் கொஞ்சம் சாராயம் வாங்கியனுப்பினான். இவனை, லைசென்சில்லாமல் விற்பனை செய்ததாகவும், கைவசம் வைத்ததாகவும், மாஜிஸ்டிரேட் கோர்ட்டார் தண்டித்தார்கள். அப்பீலில் மேற்படி ஹைகோர்ட்டார் அவர்கள், கிளப்புக்கு லாபமின்றி அனுப்பினது விற்பனையல்லவென்று அபராதத்தை வாப்சு செய்ய உத்தரவளித்து, லைசென்சில்லாமல் கைவசம் வைத்த விஷயத்தில் கீழ்கோர்ட்டார் செய்த தீர்ப்பை மாற்றவில்லை.

மதிராஸ் ஹைகோர்ட்டார்.
கிரிமினர் ரிவிஷன் நெ. 6. 12-3-09.

கிரிமினல் புரோசீடியர் 488-வது செக்ஷன்படி நடக்கும் விசாரணையில், ஒரு புருஷன் தன் மனைவியைக் காப்பாற்றுவதாக ஒப்புக்கொள்வதில், மனைவிக்குத்தன் புருஷன்கூட இருக்க இஷ்டமா இல்லையா? இல்லையானால் அதற்கு அவள் சொல்லும் முகாந்திரம் சரி ஆனதா? என்று விசாரிக்கவேண்டியது அவசியமானது, என்று தீர்மானிக்கப்பட்டது.

(இன்னும் வரும்)

News and Notes.
வர்த்தமானங்கள்.

கோயமுத்தூர்—பிளேக் இன்னும் குறையுமாறில்லை. புள்ளாச்சிக்குத் தாய்தந்தையரைப் பார்க்கப்போன பள்ளிக்கூடத்திற்படிக்கும் மாணுக்கன் ஒருவன் மேற்படி வியாதியினால் இறந்துபோனதாகக் கேள்வி. புது வீதியிலும் சில தினத்திற்கு முந்தி இருவர்க்கு வியாதிகண்டு உயிர் துறந்தனர். இதர இடங்களிலும் வியாதி பரவியிருக்கிறது. உத்யோகஸ்தர்கள் அடுத்த கிராமங்களிலும் காம்புகளிலும் வசித்து ரயில் மார்க்கமாய் ஆபீசுகளுக்குப் போகவர இருக்கிறார்கள். திருப்பூரில் 16-9-09 தேதி எலி விழுந்ததாகவும் மேற்படி எலியானது பரிசோதனார்த்தம் எடுத்து அனுப்பிக்கப்பட்டதாகவும் கேள்வி.

பரமத்தி லஞ்சக்கேசில் ஹெட்கான்ஸ்டேபில் நீங்கலாக இன்ஸ்பெக்டரும் சப் இன்ஸ்பெக்டரும் குற்றஞ்சாட்டப்பட்டு டிபென்சு விசாரணையிலிருக்கிறார்கள்.

திருப்பூரில் தாலூகா கச்சேரி முன்னால் ஓட்டல் வைத்திருந்த ஒரு ஸ்திரீ மேற்படி ஓட்டலில் சாப்பிடவந்த ஒருவனிடமிருந்து 10 ரூபாய் அபகரித்ததாகக் குற்றஞ்சாற்றப்பட்டு, 3 மாத காவல் தண்டனை விதிக்கப்பட்டாள். இவள் தனக்கு மேற்படியான் 10 ரூபாயையும் இனமாகக் கொடுத்தான் என்று நாணமின்றிச் சொன்னாளாம். இனிமேல் ஓட்டல்களுக்குப் போகிறவர்கள் மேற்படி ஓட்டல்கள் சன்மார்க்கரால் வைக்கப்பட்டிருக்கின்றனவா இல்லையாவென்று தீரவிசாரித்துப் போகவேண்டியதென்று இதனால் எச்சரிக்கை எடுத்துக்கொள்வர்.

விபசாரிக்கு வீடு வாடகைக்கு விடல்:-
ஒரு விபசாரி விபசாரத்தொழில் நடத்துவதற்காக ஒருவர் தனக்குச்சொந்தமான வீட்டை வாடகைக்கு விட்டார். அந்த விபசாரி வாடகை கொடுக்கவில்லை. வீட்டுக்காரர் வாடகைக்காக வியாஜ்யம் செய்தார். 1872-ம் வருஷத்து 9வது ஆக்டான கண்டிராக்டு 23 வது செக்ஷன்படி ஒரு உடன்படிக்கையானது துன்மார்க்கமானதாகவாவது பொதுஜன ஒழுங்கிற்கு விரோதமானதாகவாவது இருப்பதாகக் கோர்ட்டாருக்குத்தோன்றினால் அந்த உடன்படிக்கையை கோர்ட்டில் ஒப்புக்கொள்ளத் தக்கதல்ல. பிரகிருத கேசில் விபசாரத்தொழில் செய்ய வீடுவாடகைக்கு விட்டபடியால் அவளிடத்திலிருந்து வாடகை வசூல்செய்ய முடியாதென்று பம்பாய் ஹைகோர்ட்டார் 1908 வருஷத்திய 261 நெம்பரில் (சில்லரை) முடிவு செய்திருக்கிறார்கள்.

இ. நே.

காலநிலை—சிலதினங்களாக மழை பெய்துகொண்டுவந்து இப்பொழுது நால் ஐந்து தினங்களாக உஷ்ணம் அதிகமாயிருக்கிறது. ஆகிலும் மேகம் ஒவ்வொரு வேளை கருக்கலாக இருக்கிறது. கிலக்கடலை சில தாலூகாக்களில் அதிகமாய் சாகுபடி செய்திருப்பதினால் இதர வேளாண்மை சுபிக்ஷமென்று சொல்லப்போதாது. ஆகையால் கிருஷிபலம் மத்திமம்.

மிஸ்டர், R. E. லாலியின் பரிதாப மரணம்.

நமது சென்னைக்கவர்னர் ஸர் ஆர்தர் லாலியின் குமாரர் மிஸ்டர் R. E. லாலி போன சனிக்கிழமை சாயங்காலம் உதகமண்டலத்தில் குதிரையிலிருந்து விழுந்த வேகத்தில் அவருடைய கழுத்து மளக்கென்று முறிந்துபோய்விட அவருக்கு அந்தநிமிஷமே பிராணனபோய்விட்டது. அவர் குதிரையினின்று விழுந்து இறந்த இடமோ யார் கண்ணிலும் எளிதில் படமுடியாத செடிகளும் புற்களும் அடர்ந்து வளர்ந்திருந்த ஒரு பள்ளம். அந்தப் பள்ளத்தைத் தாண்டும்போது குதிரைக்கு அடிசருக்கிப்போக மிஸ்டர் லாலி தாம் கீழும் குதிரை மேலுமாக விழுந்து இறந்தார். அவர் விழுந்து இறந்ததை பக்கத்திலிருந்து யாரும் பார்க்கவில்லை. ஒரு சுமார் அரைமணி நேரம்போல அவர் அங்கேயே கிடந்திருக்கவேண்டுமென்று ஊகிக்கப்படுகிறது. அச்சமயம் கவர்னர் அவர்கள் கோல்ப் விளையாடிக்கொண்டிருந்தாராம். மிஸ்டர் லாலி குதிரையிலிருந்து விழுந்து இறந்து கிடக்கும் பரிதாபக் காட்சியை மேஜர் டப் முதலாய்ப் பார்க்க நேரிட, அவர் கோல்ப் ஆடுமிடத்துக்கு விரைந்து சென்று குதிரையிலிருந்து விழுந்த மிஸ்டர் லாலி பிணமாய்க் கிடப்பதை கவர்னருக்குத்தெரிவித்தார். உடனே ஸர் ஆர்தர் லாலியும் மேஜர் விஞ்சும் மேஜர் ஸ்லேட்டரும், லாலி இறந்து கிடந்த பள்ளத்தை நோக்கிப் புறப்பட்டுப்போனார்கள். மேஜர் டப்பும் கூடச்சென்றார். அங்கே போய்ப்பார்த்ததில் மேஜர் டப் தமக்குத்தெரிவித்தபடி மிஸ்டர் லாலி குதிரையிலிருந்து விழுந்ததில் கழுத்து ஒடிந்து இறந்துபோய் விட்டதாய்த்தெரிந்து அடங்காத் துயரடைந்தனர். அவர் எல்லோரும் போய்ப்பார்க்கும்போது சாயங்காலம் 5-30 மணியிருக்கும் பொழுதுபோகும் நேரமாயிருந்தபடியால் அங்கு அகப்பட்ட மரக்கிளைகளையும் கொடிகளையும்கொண்டு ஒரு தூளி செய்து அதன்மேல் தாங்கள் போட்டிருந்த சட்டைகளைக்கழற்றி விரித்து அதன்மேல் மிஸ்டர் லாலியின் பிரேதத்தை தூக்கிப்போட்டு இரவு

8 மணிக்கு கவர்ன்மெண்ட் ஹவுஸ் கொண்டு வந்து சேர்த்தார்கள். ஏகபுத்திரனாகிய தங்கள் அருமைப் புதல்வனை இம்மாதிரி இழக்கப்பெற்ற பெற்றோர்களின் துக்கத்தில் யார்தான் கலந்து அநுதாபப்படமாட்டார்கள். குதிரையேறிச்சென்ற தமது மகன் பிணமாய் வீடு திரும்பப்பார்க்க லேடி லாலியின் மனம் எவ்வளவாகத் துடித்திருக்கவேண்டும்.

மிஸ்டர் லாலிக்கு இறக்கும்போது வயது 22. லார்ட் வென்லக்குக்கும் அவருடைய மற்றச் சகோதரர்களுக்கும் புத்திரர்களே- யில்லையாதலால் மிஸ்டர் R. E. லாலியின் மரணத்தால் வென்லக் என்ற வமிசப்பட்டமே யொழிந்து போகக்கூடுமென்று பயப்படப்படுகிறது.

சு—ன்.

இதர வர்த்தமானங்கள்.

மானிட சிருஷ்டி:— டிலேஜ்என்ற ஒரு தத்துவ சாஸ்திரி முட்டைகளில் குஞ்சுகள் விருத்தியாகி வெளிவரும் மாறுபாடுகளை நன்றாய்ப் பரிசோதித்து உணர்ந்து அம்மாதிரி யந்திரம், வஸ்து விசேஷங்கள் மூலமாக சிற்சில ஜந்துக்களை சிருஷ்டிக்க முயற்சி செய்தார். வெகுகாலம் முயன்ற தன் பேரில் அவரால் நான்கு சமுத்திர ஜந்துக்கள் சிருஷ்டிக்க முடிந்ததாம். அவைகள் ஜந்துக்களைப்போல நகரவும் மூச்சுவிடவும் செய்கின்றனவாம். ஆனால் அவைகளால் ஆகாரம் மாத்திரம் ஏற்றுக்கொள்ள முடியவில்லையாம். அவர் பூதக்கண்ணாடி வைத்துப்பார்த்ததில் அவைகளுக்கு ஜீரண யந்திரமே இல்லையெனத்தெரிந்தது. அவ்வித யந்திரங்கள் இல்லாமற்போன தன் காரணத்தை அறிந்து அதற்கு வேண்டிய பரிகாரங்கள் செய்ய முயற்சியும் செய்துகொண்டிருக்கிறாராம்.

புதிய இந்தியச் சேனாதிபதி ஸர் ஓமூர்கிரீ.- இந்தியச்சேனாதிபதி லார்ட்கிச்சனர் தம்முடைய உத்தியோகத்தைவிட்டு நீங்கிவிடப்போகிறாரென்றும் அவருக்குப்பதிலாய் ஸர் ஓமூர் கிரீ இந்தியச்சேனாதிபதியாய் வருகிறாரென்றும் கேள்வி. ஸர் ஓமூர் கிரீயை இந்த செப்டம்பர் மாதம் 10 ந்தேதியன்று லார்ட்கிச்சனர் புனாவில் சந்தித்துத் தம்முடையவேலையை அவருக்கு ஒப்புக்கொடுப்பாரென்றும், புனாவில் அன்றைக்குச் சார்ஜ் பெற்றுக்கொள்ளும் ஸர் ஓமூர் கிரீ இந்த மாதம் 12 ந்தேதியன்று சிம்லாபோய்ச் சேர்ந்துவிடுவாரென்றும் அறிகிறோம்.

மெக்ஸிகோவில் பெருத்த வெள்ளம்.— வட மெக்ஸிகோவில் பெருத்த மழை பெய்து ஸாண்டாகடாரினா நதியில் பெருத்த வெள்ளமுண்டாகி, 800 ஜனங்கள் ஜலத்தில் மூழ்கி மாண்டனரென்றும், 15000 ஜனங்கள் தங்குமிடமின்றித் தயங்கிக்கொண்டிருப்பதாகவும் தெரியவருகிறது. மேலும் இவ்வெள்ளம் மாண்டெரீ என்ற இடத்தில் திடீரென்று பெருகி, அரைமைல் விஸ்தீரணமுள்ள வீடுகளை அடித்துக்கொண்டுபோய்விட்டது. அநேகம்பேர் நடு இரவில் தூங்கிக்கொண்டிருக்கும்போதே மூழ்கடிக்கப்பட்டனர். 300 பிரேதங்கள் அகப்பட்டிருக்கின்றன. வெள்ளம் வரவரப் பெருகிக்கொண்டிருக்கிறது. தொண்டெரி என்ற பட்டணம் ஒன்றுதான் பெருத்த நஷ்டங்களை அடைந்திருக்கிறது. 1200 ஜனங்கள் மாண்டனர். ஆயிரக்கணக்கான ஜனங்கள் வீடின்றிக் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கின்றனர், சுமார் 300 லக்ஷம் டா

லர்கள் சேதம் உண்டாயிருக்கலாம் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. மாண்டேரியாவில் நேர்ந்த ஜனச்சேதம் 1400 க்கு அதிகமிருக்கலாமென்று கணக்கிடப்படுகிறது. நதியில் வெள்ளம் குறைந்துகொண்டிருக்கிறது. அபாயம் இனி உண்டாகாதெனினும் பாலங்களும் ரஸ்தாக்களும் உடைந்துபோயிருப்பதால் ஆகாரங்கள் வரக் கஷ்டமாகிப் பஞ்சம்உண்டாகலாம் என்று பயப்படப்படுகின்றது.

வங்காள நாட்டில் வெனளச்சேதம்.- வங்காள நாட்டிலே தாமோதர நதி ரூப்நாராயண நதி இவ்விரண்டிலும் என்றைக்கும் புறப்படாத வெள்ளம் புறப்பட்டு அவ்விரண்டு நதிகளின் போக்கிலுமுள்ள கிராமங்களைப் பாழ்செய்து விட்டது. ஹௌரா ஜில்லாவில் மாலக், நவப்பீலா, என்ற இரண்டு கிராமங்களை வெள்ளம் அடித்துக் கொண்டே போய்விட்டது 200 வீடுகளுக்கு மேல் விழுந்துவிட்டதாகவும் எவ்வளவோ குடும்பங்கள் குந்தக் குச்சு இன்றித் தவிப்பதாகவும் இருக்கிறது.

காஷமீர் நாட்டில் வெள்ளம்.- காஷ்மீர் நாட்டில் வெள்ளப்பயம் இன்னும் ஒழிந்தபாடில்லை ஆற்றில் போகும் 18 அடிப்பிரவாகம் 15 அடிக்கு இறங்கினால் தான் ஜனங்களின் பீதி தீருமென்று சொல்லப்படுகிறது.

கீழ்வங்காளத்தில் பூகம்பம்:-போன மீ 28௳ சனிகிழமை வட இந்தியாவிலுண்டான பூகம்பம் கல்கட்டாவிற் கொஞ்சம் தான் தெரிந்தது கீழ்வங்காளத்திலோ அந்த பூகம்பத்தின் அதிர்ச்சி வெகு பலமாயிருந்ததாகத் தெரிகிறது. மாணிகாஞ்சி டினாபூர் இந்த இரண்டு ஊர்களிலும் அந்த அதிர்ச்சி வெகு நன்றாய்த்தெரிந்ததாம்.

ஒரு மெருகிட்ட தாமர (copper) நகரம் - ஈஜிப்டு தேசத்திற்குத் தெற்கிலும் ஆப்பிரிக்காவின் மத்தியிலுள்ள ஒரு பெரிய பாலைவனத்தில் அநேக நூற்றாண்டுகளுக்கு முன் மெருகிட்ட தாமரத்தினால் கட்டப்பட்ட ஒரு நகரம், சில அரபிவர்த்தகர்கள் வழிதப்பி மூன்றுதினம் அன்னாகாரமில்லாமல் திரிந்தபோது தென்பட்டதாம் அந்த வர்த்தகர்கள் திரும்பி கெயிரோ பட்டணத்திற்கு வந்து தங்கள் கதையைச் சொல்லவே கவர்ன்மெண்டார் அந்த நகரத்தை பார்த்துவரும்படியாக சில உத்தியோகஸ்தர்களை அனுப்ப முயற்சி செய்கின்றாராம்.

உத்தரதுருவம். - காப்டன்குக் கமாண்டர் பியரி என்பவர்கள் இரண்டுவருஷங்களாகப் பாடுபட்டு 30000 சதுரமைல் விஸ்தீரணமுள்ள உத்தரத் துருவத்தைக்கண்டுபிடித்தனர் என்றும் அவ்விடத்தில் அநேக சீவசெந்துக்கள் இருக்கின்றனவென்றும் பத்திரிகைகளில் கூறப்பட்டிருக்கிறது இதுபோலவே சீமையில் இருக்கும் ஒருவர் தக்ஷிணத் துருவத்தைக் கண்டுபிடிக்க முயற்சி செய்கின்றனராம்

அந்நிய நாட்டிற்கு சென்று பல கைத்தொழில்களை கற்று சமீபத்தில் திரும்பிய மிஸ்டர் V. V. நாராயணன் B. A. என்பவரின் மேல்பார்வையில் "தென்இந்தியன் மெழுகு வர்த்தி சாலை" என்னும் ஓர் சுதேசிய கைத்தொழிற்சாலை எற்படுத்தி சென்னை திருவல்லிக்கேணியில் நடைபெற்று வருவதாயும் இதில் தயார் செய்யப்படும் வர்த்திகள் மிகவும் நேர்த்தியாயிருப்பதும் தவிர விலையும் சரசமாகவேயிருப்பதாகவும் கேட்க நாம் சந்தோஷப்படுகிறோம் இதேமாதிரி சுதேசிய கைத்தொழிற்சாலையொன்று கும்பகோணத்திலும் ஏற்பட்டு சில வருஷங்களாக மெழுகு வர்த்திகள் சோப்புகள் செண்டுகள் முதலிய வாசனைத் திரவியங்களும் செய்துவருவதாகத்தெரிகிறது இது விஷயத்தில் நமது சுதேசாபிமானிகள் யாவரும் கவனித்து இத்தொழிற்சாலைகளை விர்த்திக்குக் கொண்டுவருவார்களென நம்புகிறோம்.

"பிழைக்கும் வழி." — இத்தலைப்பெயர் கொண்ட மாதாந்திரத் தமிழ்ச்சஞ்சிகை, மதிராசில் ஜி. எ. வைத்தியராமன் கம்பெனியாரால் நடத்தப்பட்டு, கிருஷி, தொழில், வியாபாரம், முதலான விஷயங்களைப்பற்றி, யாவரும் பயன் பெறுமாறு, சிறந்த வியாசங்கள் அமைந்துளது. இதன் வருஷ சந்தா ரூ. 4. அந்நிய நாட்டார்க்கு ரூ. 6.

The Coimbatore Friends' Association (Limited.) Printers.

கோயமுத்தூர் பிரண்ட்ஸ் அசோஸியேஷன் (லிமிடெட்.) அச்சுயந்திரசாலை.

இக்கம்பெனியின் மூலதனம் ரூ. (20,000) பங்கு 1 க்கு 5-ரூபாய் வீதம் (4000) பங்குகளாகப்பிரித்து, இந்தியன் கம்பினீஸ் 1882 வருஷத்திய 6-வது ஆக்டுப்படி 1908 வருஷம் மேயிதத்தில் ரிஜிஸ்தர் செய்து நடத்தப்பட்டுவருகிறது.

இக்கம்பெனியில் இங்கிலிஷ் தமிழ் இரண்டு பாஷைகளில், நேர்த்தியாய் பல கலர்களில் அச்சிடுவதும் கில்ட்செய்வதும்பாங்குகளுக்கும்மண்டிகளுக்கும் கணக்குப்புத்தகங்கள் முதலானதும் தயார்செய்து தோல்காலிகோமுதலிய பயிண்டும் செய்யப்படும். இப்போது அனேக பங்குகள் சேர்ந்திருக்கிறது. கொஞ்சம் பங்குகள்தான் பாக்கியிருக்கிறது. இஷ்டமுள்ளவர்கள் ஷை கம்பெனியின் மானேஜருக்கு எழுதி அப்ளிகேஷன் பாரங்கள் தருவித்துக்கொள்ளலாம். ரூல்ஸ் புக்குவேண்டுவோர் 4 அணா அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

இக்கம்பெனியானது நிர்வாகசபையார் அவர்களால் நடத்தப்பட்டுவருகிறது. 1908 வருஷம் மே மாசம்முதல் 1908 வருஷம் டிசம்பர் மாசம் 31-தேதிவரை கூடிய 8 மாதத்திற்கு மாதம் 1க்கு 100க்கு ரூ. 3-9-5வீதம் லாபம்தேறியிருக்கிறது.

இதன் பிராஞ்சு ஆபீஸ் திருப்பூரில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது.

ஜி. அனுமந்தராவ்,
மானேஜர்.

விளம்பரம்.

☞ இதனால் சகலமான கனவான்களுக்கும் தெரியப்படுத்துவது யாதெனில்,

கோயமுத்தூர் இரங்கேகவுண்டன்வீதி (சின்னக்கடைவீதி) மேல்புரம் சிரேணியில் 487, 488 நெ. கதவிலக்கமிட்ட மெத்தைக்கட்டடத்தில் புதியதாக ஒரு கரூர் ஜவுளிக்கடையில் சேலம், ஜலகண்டாபுறம், தஞ்சாவூர், கும்பகோணம், ராசிபுரம், பவானி, நரசிங்கன்பேட்டை தாராபுரம், குற்றாலம், கொறநாடு, அய்யம்பேட்டை, காஞ்சிபுரம், ஆரணி, மதுரை, உப்பாடை, காக்கிநாடா, நெல்லூர், சென்னை, பனாரஸ், உள்ளூர் முதலிய இடங்களில் தயாராகும் முதல்தரமான ஜவுளி தினுசுகளை சுவல்ப லாபத்திற்கு கரூர் விலைக்கு விற்கப்படும்.

மேற்படி கடையில் விற்கும்படியான சரக்குகள் நயமாயும் கெட்டி சாயமுள்ளதாயுமிருக்கும். கோறும் சரக்குகளில் வித்தியாசமும் மாறுபாடுமில்லாமல் விற்கப்படும். எங்கள் கடையிலிருக்கும் சரக்குகளை எங்கள் ஏஜண்டுகள் மேற்படி இடங்களுகுச் சென்று எங்கள் கடைக்கென்றே தயார்செய்யப்பட்டிருப்பதால் நெசவு அழுத்தமாகவும் சரக்குகள் திடமாமவும் விலை சரசமாகவுமிருக்கின்றன. எல்லாருடைய அநுகூலத்தின்பொருட்டே யாவர்க்கும் ஒரே விலையாக சுவல்ப லாபத்திற்கு விற்கவேண்டுமென்பதே எங்கள் முக்கிய கருத்து. இன்னும் வேண்டிய விஷயங்களுக்கு எங்கள் கடையின் ஏஜண்டுகளாகிய மகா-ா-ஸ்ரீ K. தேவதத்தய்யர், B. வரதராஜுலு செட்டியார் இவர்களிடத்தில் நேரில் கேட்டுத்தெரிந்துகொள்ளலாம்.

☞ நல்ல முதல்தரமான கஸ்தூரியும் விற்கப்படும்.

V. R. K. & Co.,
Cloth Merchants & Commission agents,
Coimbatore and Vellakkener.

THE WORLD

REGISTERED. M. 823.

பிரபஞ்சம்.

பிரபஞ்ச தர்மம், நடவடிக்கை, சட்டம், வித்தியா விநோத முதலிய வற்றைப்பற்றிய ஓர் மாதாந்தரத் தமிழ்ச்சஞ்சிகை.

ஜி. ஹனுமந்தராவ்,
பத்திராதிபர். (*Proprietor.*)

கோயமுத்தூர் பத்மநாப ஐயர்,
(*Editor & Publisher.*) பிரசுரகர்த்தா.

வருஷ சந்தா ரூ. 2 4 6 மாதத்திற்கு ... 1 2 பிரதிசஞ்சிகை ... 0 3 வெளிநாட்டுத் தபாற் கூலி-பிரத்தியேகம்.	கலி 5011. சௌமிய வருஷம் ஐப்பசி மாசம். OCTOBER 1909.	புஸ்தகம் 1. சஞ்சிகை 5.

காப்பு விருத்தம்.

பத்ராననப் பரமாவுனைப் பணியாவருப் ரபஞ்ச
மித்ராளுயர் மித்ரம்மென மிளிராவரு மெனவே
சித்ராவினி லுத்தாரகச் சிந்தா நலங் கனிந்தே
தத்ராவரு தருமாவுனைத் தமியேன்மற வேனே.

அன்பர்காள்! எனது கனவினில் கணேச பகவான் காட்சி தந்து, தன்னை "பத்ரானன" என்று போற்றுமாறு அருள்புரிந்தபடியால், நமது எல்லாவருடையவும் க்ஷேமஸ்தைர்ய வீர்ய விஜய ஆயுராரோக்ய வைசுவர்ய சித்தியின்பொருட்டு, அவரைச்சதா சிந்திக்க, இன்றுமுதல், மேற் காப்புச் செய்யுளைக் கைக்கொள்வமாக :- "ஓம் தத்ஸத்."

C. R. Padmanabha Iyer.

வர்ணாசிரம தர்ம்மம்.

எமது அன்பர்களே ! ஹிந்து பத்ரிகைக்கு எழுதும் மிஸ்டர் ஹாவல் துரையவர்கள், இக்காலத்திற் படித்த இந்தியர்கள், ஜாதிபேதங்களை ஒழித்துவிட முயற்சிசெய்வது, சரியல்லவென்று வாதிக்கிறார். இது ஒரு விஷயமா ? புனர் விவாகம் அவசியமென்பது ஒரு விஷயம் ! நித்ய கர்மாநுஷ்டானம், தேவ, பித்ரு யக்ஞங்கள், ஆத்மஞானத்துக்கு அனாவசியம் ! என்னும் நூதன மதம். இன்னும் இவை போல்வன, நாகரிகா அநுஷ்டான யத்னங்கள் பலவுள : விரிக்கிற் பெருகும். தவிர, நமது தேசமாதா, மாங்கல்யம் இழந்துவிட்டாள்போன்ற படங்களையும், நமது தமிழ் மாது, வைதவ்யம் பூண்டு தாலியைக்கழற்றிக்குழியிற் புதைத்துவைத்திருந்ததாகச் சங்கற்பம் செய்யும் பத்ரிகைகளையும் பார்வையிட்டுளோம்.

யாம் இவ்வகை விஷயங்களிற் பிரவேசிப்பது உசிதமன்றென, ஒதுங்கிக்கிடந்தேம். ஆயினும், எமது பத்ரிகைச் சந்தாதாரர் ஒருவர் இவ்விஷயங்களைக்குறித்து, எமது அபிப்ராயத்தைத் தெரியவேண்டிச் சம்பாஷித்தமையால், காரியாம்சங்களை மாத்திரம் சுருக்கி வரைவம்.

வருணாசிரமம் :— இந்தத்தர்ம்ம மகத்வங் குறைந்த யுகாந்தரங்களில், பகவான் அவதரித்துக், குறையை நீக்குகிறார் என்று, விரிவாய்ச் சொல்லாமற், சொல்வம். சுவாமிஅபேதாநந்தர், சீமையில் யோகாம்ச சாதனையே மேலென விளக்கிவருவதை, யாவரும் அறிவர். இதில், 'இயமம்'' 'நியமம்' என்பன, அங்கங்களானவை. 'யமம்' என்பது, பகவான் கீதா அத்யாயம் 13 இல், 8, 9, 10, 11, 12 வாக்யங்களில் கூறியிருப்பதால அறியலாம். அதாவது :-தற்புகழ்ச்சியின்மை, டம்பமின்மை, பரஹிம்சை செய்யாமை, பொறுமையுடைமை, கபடமின்மை, குருசேவை வாக்மனக்காயசுத்தி, சன்மார்க்கத்தில் விடாமுயற்சி, தேக ஸ்வாதீனம், இந்த்ரிய விஷயங்களில் வெறுப்பு, தான் என்கிற அகங்காரமின்மை, பிறப்பு இறப்பு மூப்பு நோய் இவைகளின் துக்கதோஷமறிதல், புத்ரன் தாரம் கிரகம் இவைகளில் அபிமானமின்மை, சுகதுக்கங்களில் சமமனதுடைமை, சர்வமும் ஆத்ம சுவரூபமென்ற நிச்சய புத்தியால் பரமேசுவரனிடத்தில் பக்தி வைத்தல், ஏகாந்தப்பிரியம், அவிவேகிகளிடம் பிரீதியின்மை, ஆத்ம தத்வ சித்தம், முதலினவை. 'நியமம்' என்பது சுசியாகும். அதாவது :- சௌசம், ஸ்நானம், மடியான உடை, ஸ்தலசுத்தி ஆஹாராதிகளில் ஸத்வகுண பதார்த்தங்களை மாத்திரம் அளவிற்கொள்ளல் முதலியன. மேலே சொன்னவைகளனைத்தும், லௌகிக விருத்திக்கும் வைதீக விருத்திக்கும், இன்றியமையாதனவாம். ஆகையால், நமது பூர்வீக ஆசார்யாள், இவற்றின் ஆவசியத்தைக்கருதி, நமது நித்ய கர்மாநுஷ்டான முறைகளைச் சீர்திருத்தியுள்ளார். நமது கர்மங்கள் ஒவ்வொன்றிலும், மேலே சொன்னவைசேர்க்கப்பட்டு, அநுதிய நுபவ ஸ்மிருதி கற்பித சடங்குகளாக ஏற்பட்டுளது. இதல்லாமல், கலியால் எல்லாவரும் அநுஷ்டிக்க சாத்தியமின்மைபற்றி, இன்னின்னார் மேற்சொன்னவற்றை விடாமல் ஆசரிக்கக்கடவர் என்று, வற்புறுத்தியிருக்கிறார். ஆகவே, மற்றவர் வேண்டாம்,' என்றல்ல. "நல்லாரொருவ ருளரேலவர் பொருட்டெல்லார்க்கும் பெய்யுமழை'' என்ற விவேகத்தாலாம். தவிர, புருஷ சூக்தத்திலும், கீதையிலும், வருண குணவிஷயங்கள் கூறப்பட்டன.

அவையாவன :- மன அடக்கம், வெளியிந்திரிய அடக்கம், மனோவாக்காயங்களின் தவம், சுத்தி, பொறுமை, சாஸ்திராநுபவஞானம், வேதத்தில் நம்பிக்கை இவை சுவாபத்திலுண்டான பிராமணருடைய கர்ம்மம் ; வீரம், கீர்த்தி, தைரியம், சாமர்த்தியம், யுத்தத்தில் புறங்கொடாமை, தானம, ராஜரீக சக்தி இவைகள் சுவபாவத்திலுண்டான க்ஷத்திரியர் கர்ம்மம் ; சாகுபடி, பசுபாலனம், வியாபாரம் இவை வைசியகர்ம்மம் ; சுச்ருஷையானது சூத்ர கர்ம்மம் ; என்று கீதாவாக்யத்தாலறியலாம். தவிர, இவை "ஸ்வபாவஜம்'' அதாவது "இயற்கை'' குணமென்று பகவான் அநுக்ரஹித்திருக்கிறார். "ப்ராஹ்மணஸ்ய முகமாஸீத், பாஹூ ராஜந்ய க்ருத :, ஊரு ததஸ்ய யத்வைசிய :, பத்ப்யாகம் சூத்ரோ அஜாயத'' என்று ட ஷ ஸூக்தத்திலும் கூறியுளது. ராமாயணத்திலும் வால்மீகரானவர், "க்ஷத்ரம் ப்ரஹ்ம முகஞ்சாஸீத்-வைசியா க்ஷத்ரமநுர்வ்ரதா:- சூத்ரா ஸ்வதர்ம்ம நிரதா-ஸ்த்ரீன்வர்ணான் உபசாரிண :'' என்று சொல்லியிருக்கிறார். இவைகளின் தாற்பரியமெல்லாம் நால் வருணமும் சகோதரமென்றும், ஜேஷ்ட கனிஷ்டா முறையினால் பக்தி செலுத்த வேண்டுமென்றும், என்பதேயாம். "கர்மண்யே வாதிகாரஸ்தே-மாபலேஷு கதாசந,'' அதாவது-உனக்கு கர்ம்மம் செய்வதிற்றான் அதிகாரமிருக்கிறது ; ஒருபோதும் பலன்களிலே அதிகாரம் இல்லை : என்று பகவான் அநுக்ரஹித்திருக்கிறார். இக்காலத்தும் விவேகானந்த சுவாமிகள் அவதரித்து, ("Do your duty : Leave the effect to Him.") என்று வற்புறுத்தியிருக்கிறார். ஆகையால் பக்தி சிரத்தையே மேன்மைக்குக்காரணம். "வித்யா விநய ஸம்பன்னே ப்ராஹ்மணே கவிஹஸ்திநி - சுநி சைவச்வபாகே ச பண்டிதாஸ்ஸமதர்சிந :'' அதாவது-கல்வியும் வணக்கமுள்ள பிராம்மணனிடத்தும், பசுவினிடத்தும், யானையிடத்தும், நாயினிடத்தும், நாயைத்தின்பவனிடத்தும் சமமான தத்வத்தைக் காணகிறவர் ஞானிகள், என்று பகவான் அநுக்கிரஹித்திருக்கிறார். இது கர்ம்ம ஞானமாம். இந்த கர்ம ஞானமே "யக்ஞம்'' என்பது. இந்த பலாபேட்சையில்லா சுவதர்ம்ம கர்ம்மாநுஷ்டானமானது கால சக்கரம். "அன்னாத்பவந்தி பூதாநி பர்ஜந்யாதன்ன ஸம்பவ :, யக்ஞாத் பவதி பர்ஜந்யோ யக்ஞ: கர்ம ஸமுத்பவ : ; கர்மப்ரஹ்மோத்பவம் வித்திப்ரஹ்மாக்ஷரஸமுத்பவம், தஸ்மாத் ஸர்வ கதம்ப்ரஹ்ம நித்யம் யக்ஞேப்ரதிஷ்டிதம் ; ஏவம்ப்ரவர்த்திதம் சக்ரம்''- அன்னத்தினால் சரீரம், சரீரத்தினால் கர்ம்மம், கர்ம்மத்தினால் யக்ஞம், யக்ஞத்தினால் மழை, மழையினால் அன்னம், இந்த யக்ஞத்தில் பிரஹ்மம் எப்போதும் பிரதிஷ்டிக்கப்பட்டிருக்கிறது - என்று பகவான் சொல்லியிருக்கிறார். "மழையின்றி மாநிலத்தார்க் கில்லை மழையும் தவமிலாரில் வழியில்லை'' எனவும், "துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்-துப்பாதூஉ மழை'' எனவும், "அந்நஞ்சப்ரஹ்ம,-அஹஞ்சப்ரஹ்ம-போக்தாசப்ரஹ்ம'' எனவும் கூறினமையும் அறியலாம். ஆகையால் உலகில் சுவதர்ம்ம கர்ம்மாநுஷ்டானமே அனைத்திற்கும் அவசியமானது. இதை விடுகிறவன், நீசனென்று கருதப்படுவது மாத்திரமல்ல, நீசனே ஆகிறான். எப்பொழுது இந்த நீச விருத்தி மேலிடுகிறதோ அப்பொழுதுதான் மேன்மையே மழுங்கி உலகம் கெட்டுப்போகிறது.

நமது வருணாசிரம தர்ம்ம கர்மாநுஷ்டானமானது, அநாதியாயுள்ளதென்பது, ஆதி கவியாகிய வால்மீகராலேயே அறியலாம். இப்படியிருக்க, (Caste had a later origin) ஜாதி நூதனமாக ஏற்பட்டதென்று, புத்தியைக் கெடுத்துவிட்டார்கள். இந்த கர்ம்மாநுஷ்டான பலசக்கிரத்தை (All nonsense) மூடத்வம் என்றும் கட்டுப்பாடென்றும நீக்கத்துணிகிறார்கள். ஐயா ! நீக்கிவிடுங்கள் ! ஏக ஜாதியேயாகட்டும்! ("Like things combine - Unlike things repel") "கற்றாரைக் கற்றாரே காமுறுவர்," "கல்லறியா மூர்க்கரை மூர்க்கர் உகப்பர்," "என் சொலினும் கைத்துடையான் காற்கீழொதுங்கும் ;" இக்குண கைவல்யத்தைத் தடுக்க ஒருக்காலும் முடியாது ! ஜாதி கெட்டது தான் மிச்சம் ! மூக்கரையன் சமாசாரந்தான் !!

கர்ம்மமே தவம். தவமே ப்ரஹ்மதத்வம். "தவமும் அரசிலாரில் வழியில்லை ;" "அரசனுமில்வாழ்வாரில் வழியில்." என்ன செய்யலாம் ! வேளா குணம் ! வருணாச்ரம தர்ம்ம கர்ம்மம் குறைந்து வருகிறது ! இதுதான் கலிமகாத்மியம். ஆகிலும் "கர்ம்மவித் கர்ம்மஜ :" கர்ம்மாநுஷ்டானர்களாக யோக்யதையான வித்தாகிலும் அரசனால் பாலிக்கப்பட்டு வருகிறது. இந்தவித்தின் பெலம் இன்னும் போகவில்லை. இந்த வித்தானது இருக்கும் வரையில், முளைத்துக் கிளைத்துக்காய்த்துக்கனியாம், என்று எண்ணலாம். தழற்பொறி சாம்பலால் மூடப்பட்டிருக்கட்டும் ! குற்றமென்ன ! ஊதினால் அக்னியாகாதா? விட்டுவிட்டால் சாம்பலாகாதா? சுவாபவந்தானே? வித்தை ஏன் சிதைக்கவேணும்? சிதைத்தால் "மூக்கரையன்" சமாசாரந்தானே ? சிதைக்கவும் செய்யவும் "நீ" யார்? "உன்னால்" ஒன்றும் ஆவதில்லை. ஆகையால் "த்வம்" என்பது "நீச" சப்தம்.

"அஹம் - சர்வஞ்ஞ :" என்பது நிஜம். "அஹம்" க்ருமி:" என்று ஏன் பாவிக்கிறீர்கள்? நாயைத்தின்பவனும் சர்வஞ்ஞத்தினிடத்தில் பக்தி வைத்துத்தன் கர்ம்மத்தை யநுஷ்டிக்கட்டும். கர்ம்ம அதிகாரிபோனால் கர்ம்மமெங்கே? கர்ம்மத்தை உத்தேசி! அதிகாரி ஏற்படாமல் இரான் ! கர்ம்மம் விவிதம் : அதிகாரியும் விவிதமாவர்! இதைத்தடுக்க ஏலாது!! தத்வமப்படியே! ஈசுவராக்ஞையும்அப்படியே!ஆகையால் நமக்கு இப்பொழுதுதேவைஎன்ன?நிஷ்காமகர்ம்மம்தானே? "சுருதிர்ஸ் மிருதிர்மமை வாக்ஞ்யா" - வேதாகமங்கள் என்னுடைய ஆக்ஞையாம். ஆகையால், கர்ம்மத்தை விடாதேயும் ! அநாதியநுபவ கர்ம்மவித்தைக்கெடுக்காதேயுங்கள் ! கெடுத்துப்பாரும் : "ஹிந்து" என்ற வம்சமே தொலைந்துபோம்! எப்பொழுது குலம் போச்சோ, அப்பொழுது குலாபிமானம்போய், நமது கொள்கை, மதாசாரங்கள், நமது சிறந்த தொழில்கள், இவை முற்றும் ஒழிந்தேபோம். ஆகையால், ஈசுவர சங்கற்ப கர்ம்மத்தை அநுஷ்டியுங்கள். நால்வருணமும் இந்தக்கர்மத்தின் அதிகாரிகள் : ஒரே புருஷனிலிருந்து உண்டானவர்கள் : இவர்களுடைய கர்ம்மமானதும் சகோதிர பாவமாகிறது. மூத்தவனுக்கேன் அதிகப்பங்குஎன்றால், வேண்டாம்! அதிகம்பங்குபெற்றவன் மூத்தவனாகானா? இதை நாம் பிரத்யக்ஷ அநுபவத்தால் காண்கிறோமே ! இதற்கு என்ன செய்யலாம் ? அசூயைப்பட்டு அடித்துக்கொண்டால் என்ன பிரயோஜனம் ? முழுப்பங்குக்காக மோகித்து, மூத்தவனைக்கொல்வது, தப்பல்லவா ? நாம் எல்லாம் மகாரிஷி வம்சத்தார். ஏதோ மன சங்கற்பத்தால் துவே

ஷம் பாராட்டாமல், சுருதி யுக்தியநுபவங்களை நம்பி, அதில் தேர்ந்தவர்களாயும் (Experts) இருக்கிற ஜேஷ்டகனிஷ்டா முறைகளை ஆதரித்து, அகங்காரமின்றி, அவரவர் செய்ய அநாதியாய் ஏற்பட்ட நித்ய கர்மாநுஷ்டான சதாசாரங்களைப் பக்தி பூர்வமாகக்கைக்கொண்டு,

"தாளாள னென்பான் கடன்படா வாழ்பவன்
வேளாள னென்பான் விருந்திருக்க வுண்ணாதான்
கோளாள னென்பான் மறவாதா னிவர்மூவர்
கோளாக வாழ்த லினிது"

என்பதை நிலைநாட்டி, உத்தமமான நமது "ஹிந்து" குலத்தை ஆண்டாண்டாக வாழச்செய்வதே பிரஹ்மப்ரீதியான யக்ஞ தத்வ சக்க்ரமாம்.

(இதர விஷயங்கள் பின்வரும்)

I. இலக்கண நூல்.

(4-வது சஞ்சிகை 100-வது பக்கத்தொடர்ச்சி.)

14. தன்மை மொழியிட முன்னிலை படர்க்கையாம்.

இதன் மேலைச்சூத்திர முதல் ஆறும் வகுத்துக்காட்டி முடித்துக்காட்டலாம். (இ-ள்) மொழி=முன்சொன்ன, இடம் = இடமானது, தன்மை முன்னிலை படர்க்கை ஆம்=தன்மை இடம், முன்னிலையிடம், படர்க்கையிடம் ஆகமூன்றாம். 'தன்மை மொழியிடம்' எனவே, இடமானது, அதாவது தேசமானது, தன்மயமாகி ஆதியந்தமில்லாததென உணர்த்தற்கென்க. "படர்க்கை," என்பது "செல்கை" எனப்பொருள் கொளின், "ஏகமே வாத்விதீயம்மே" வஸ்து ஒன்றேயலது இரண்டாவதொன்றில்லை, அதாவது முன்னிலை என்பது வஸ்து நிர்ணயத்தில் ஒழிந்துபோம், என்க. "மொழியிடம்" என்பதை இடைவைத்ததென்னெனின், தன்மையோடு கூடிய முன்னிலை படர்க்கை இடங்கள், யானும் நீயும் அவனும் போனோம் எனத், தன்மை முடியையும், முன்னிலை கூடிய படர்க்கை, நீயும் அவனும் போனீர் என, முன்னிலை முடியையும் பெறும் ஆற்றலின் என்க.

15. நிகழ்வல காலம் நேர்கழி வாமே.

(இ-ள்) நிகழ்வு=நடக்கின்ற, அல=அல்லாத, காலம்=காலமானது, நேர்=நேர்காலமும், கழிவு=இறந்தகாலமும், ஆமே=ஆகும். "நிகழ்+வல+காலம்" எனக்கொளின், காலம் அநாதியாகலின், நேர்கழிவு எனும் பாகுபாடு பாவமாத்திரமே என்க. "வல காலம்" என்பதை இடை வைத்ததென்னெனின், "முக்காலத்தினுமொத்தியல் பொருளைச்-செப்புவர் நிகழுங் காலத் தானே" என்பதும், "விரைவினு மிகவினுந் தெளிவினு மியல்பினும்-பிறழவும் பெறூஉ முக் காலமு மேற்புழி" என்பதும், உணர்த்தற்கென்க :- தெய்வமிருக்கிறது, ஆறொழுகுகிறது, என்றாற்போல்வனவும், ஒருவன் விரைந்து கூவ, வந்தேன் வந்தேன், எனும் விரைவானும், காட்டிற் போனாற்றுணி கிழிந்தது, எனும் மிகவானும், எறும்பு முட்டைகொண்டு திட்டை ஏறின் மழை பெய்தது, எனும் தெளிவானும், யாம் பண்டு விளையாடுவது இச்சோலை, எனும் இயல்பானும் வரும், கால உறழ்வினை உதகரிக்க.

16. முன்மொழி சினையே முதலாங் கூற்றே.

(இ-ள்) முன்=முன்னால், மொழி=சொல்லப்பட்ட, சினையே=சினைச்சொற்கள், முதலாம்=முதற்சொற்களாகிற, கூற்று=அங்கங்களாம். "சினையே முதலாம்" எனத்தொடுத்தமையின் "முதலிவை சினையிவை யெனவே றுளவில-வுரைப்போன் குறிப்பினற்றே பிண்டமும்" என்பதும், "சினைவினை சினையொடு முதலொடுஞ் செறியும்" என்பதும் உணர்த்தற்கென்க:—கால் வீழ்ந்தான், கண் விழித்தான், கண்ணன், செவிடன், உடன்மெலிந்தான், கால்நீளன், கைகடியன், மட்கையன், இவைபோல்வனவும் உதகரிக்க.

17. பொருளி னியற்கை பெயர்ப்பன குணமே.

(இ-ள்) பொருளின்=பொருள்களினுடைய, இயற்கை=தன்மையை, பெயர்ப்பன=வேறுபடுத்திச் சொல்வன, குணமே=பண்புச்சொற்களாம். "இயற்கை குணமே?" என்புழி, செயற்கையும் குணமாமென்க. அஃதேல் ஒத்தினுட் செயற்கை கூறுதது என்னை எனின், பொருட்டுணிவு ஒன்றேயாகலானும், செயற்கை மாயாவாதமாகலானும் என்க. "பெயர்ப்பன" என்றமையான், ஐம்புலவறிவெலாம் பொருட்பிரிவின்றிப் பற்றுக்கோடாம் பாவ மாத்திரமே என்க. மேலை 13-வது சூத்திரத்துள், பொருணிலை விரித்துரை கூறினமையான், அவற்றின் பாவமாய ஐம்புலப்பற்றெலாம் பண்பாம் என்க:-அவை, "வண்ணம் வடிவே யளவே சுவையே-தண்மை வெண்மை யச்சமென்று-நன்மை தீமை சிறுமை பெருமை-வுன்மை மென்மை கடுமை என்று-முதுமை யிளமை சிறத்த லிழித்தல்-புதுமை பழமையாக்கமென்று-வின்மை யுடைமை நாற்றந் தீர்தல்-பன்மை சின்மை பற்று விடுதலென்-றன்ன பிறவும்-" போல்வனவாம்.

18. பொருண்முதற் செயலே தொழிலாகும்மே.

(இ-ள்) பொருள்=பொருள்களின், முதல்=கருத்தன், செயலே = செய்கையே, தொழிலாகும்=தொழிற்சொற்களாம். "ஆகும்மே" என்புழி, செயலே தொழிலாவதன்றி, பொருண்முதலுஞ் செயலேற்று வரும் என்க:- காசிவாசி, கூத்தாடி, அளை, தளை, அலை, மொழி, நடை, என்றாற் போல்வன. "பொருண்முதல்" என்றது ஆத்ம சைதந்ய மெய்யுணர்வான் என்க. கொலைஞன் கொலை, எழுத்தாணி எழுத்து, என்னைத், தொழின்முதல், தொழிற் பயனிலை கொண்ட, தென்பார்க்கு, ஆக்கம் தொக்கது எனவும், அற்றெனின், சமநிலையானும் வியனிலையானும், முதலுருபும் பயற்பயனும் வேண்டிற்றென்க. "முதற் செயல்" என்றமையான், முதலும், வழியும், புடையுமாய பெற்றியனைத்தும் என்க:-சாத்தன் வந்தான், சாத்தன் வந்திருந்தான், சாத்தன் வர இருந்தான், என்றாற்போல்வன. "பொருண்முதற்செயலே தொழிலாம்." என்றமையான், "வினையின் பெயரே படர்க்கை" என்பது வழூஉவென மறுத்தாம் என்க:- என்னின், 'உணல்' எனும் தொழிற்பெயர், 'நானுணல், நீயுணல் அவனுணல்' என மூவிடத்திற்கும் பொதுவாம் என்பதும், இலக்கணம் கூறுழி முதலிடமே முடிவிற்கும் உரைப்ப வென்பதும் உணரற்பாற்று. ஆகலின், இத்தகைய தொழிற் பெயர்கள், திணை பால் இடம் பொழுது இவற்றிற்குப்பொதுவாம், என்க.

19. பெயர்வினை தாமே யெஞ்சியு மியன்மே.

இஃது சொற்கட்காயதோர் சிறப்பு நுதலிற்று. (இ-ள்)பெயர்வினை தாமே=பெயர்வினையாய சொற்கள் தாமே, எஞ்சியும்=மூஉவு பெறுதும், இயன்மே=வழக்குஞ் செய்யுளாகிய இருவகையியலுளும் வரும். "தாமே" எனத், தேற்றங்கொடுத்தமையான், குறிப்பாய பாகுபாடு, பொருணிலையலாது, சொன்னிலையன்றென மறுத்தாம் என்க.

எங்ஙன் எனின், "பொருண்மை தெரிதலுஞ் சொன்மை தெரிதலுஞ் - சொல்லினாகுமென்மனார் புலவர்" என்றதானும், "தெரிபுவேறு நிலையலுங் குறிப்பிற் றோன்றலு-மிருபாற்றென்ப பொருண்மை நிலையே" என ஆசிரியருரைத்தனார் என்க. ஆகலின், 'எழுத்துச் சொற்பொருள் யாப்பு அணி" யென இலக்கணம் பாகுபடுரைத்து, பொருளிலக்கணத்தைச் சொல்லின்கணேற்றிக்கூறல், "முறையின் வைப்பு" அன்றென, மறுத்தாம் என்க. இதான்றியும், உரையாசிரியர் சேனாவரையாரும், "அணியிலக்கணங் கூறுவோர், இன்னோரன்னவற்றைப், 'பிறிதுமொழிதல்' என்பதோர் அணியென்ப," என உரைத்ததும், மேலை 13-வது சூத்ர வுரையும் உணரற்பாற்று. ஆகலின், சொல்லிலக்கணங்கூறு முறையில், வினைமுற்று, வினையெச்சம், பெயரெச்சம், என்பதே உரித்து. குறிப்பு வினைமுற்று வினையெச்சம் பெயரெச்சம், என்பன "மயங்க வைத்தலாம்" என விடுத்தாம் என்க. "பெயர்வினை" என்று கூறியது "வினைப்பெயர்" நோக்கம் என்க:- அம்மாசை, இல்லாள், இவை போன்றன.

(இன்னும் வரும்)

II. ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம்.

பால காண்டம்.

ஒன்பதாவது சருக்கம்.

அகத்துரை யறிந்துசூத னரசனுக்கிவை யுரை
[க்கும்
தாபத ருரைத்தபூர்வத் தம்விருத் தாந்தமேகே
[ணம் 1.
சனற்குமா ரச்சுரன்முன் சாற்றின செய்திதானே
நீத்தவர் முன்னமன்ன நீருறு புத்ரமார்க்கம் 2.
காச்யப புத்ரனான விபண்டகக் காதியற்கு
முனிசிருங் கப்பெயர்கொண் முனைவன்புத் திர
[னுமாவன் 3.
முளரியே மூட்டிநித்தம் முனிவன சரிதனவன்
அந்யமோ ராமுனீந்த்ர னத்தனை நித்தமேத்தும்
4.
இருவிதப் ரம்மசர்ய மெய்துமம் மகாத்மனுக்
[கும்
உலகுண ரொன்றுமன்ன வுறுவர்சொன் மற்று
[மென்னும் 5.
இன்னது நிகழுகால வேல்வையி னேவளர்த்தும்
அங்கிகொள் ளாச்ரயிக்கு மப்பனுங் கீர்த்தியா
[னை 6.
இன்னதஃ தாகுமக்கா லுரோமபா தப்ரதாபன்
அங்கதே சாதிராஜ னவனே யதிபலத்தன் 7.
ஆனவ னதிக்ரமத்தா லரசனின் னநேககாலம்
வானமில் வன்கணாலே வெருவுறும் விபுலமெல்
[லாம் 8.

வானமில் வர்த்தமான மரசன்கேட் டகமழிந்து
மறையவர் கேள்விமூத்தோர் மறுவறச் செய்வ
[னேகாண் 9.
வந்தவர் கேள்வியையர் வையமே யறியுமெய்யர்
அன்னதற் குரிபிராயச் சித்தமே யாகவென்ன 10
ஆக்ஞபித் தவையகேபற் கந்தணர் வேதபாரர்
விபண்டகச் சுதனைமன்ன வேனுபா யத்தழைக்
[க 11.
வந்தது மையவைய வச்சையம் வாழ்க்கை தேற்
[றும்
அளிக்கவே கன்யைசாந்தை யளிமன வாகமத்
[தும் 12.
அன்னவ ராக்ஞைகேளா வரசனு மகத்துமுன்
[னும்
எவ்வுபா யத்தினுவம் ஏற்கவவ் வீர்யவானே 13.
அன்னது மன்னனிச்சித் தமாத்யரோ டாத்மவா
[ன்கள்
புரோகிதப் புத்திசொல்வோர் பெற்றியே புரிக
[முக்யம் 14.
என்னவே விறைபுகன்ற கேட்டுளங் கோட்டிவத்
[ரம்
துன்னலேந் துறவரஞ்சித் தோன்றல்கேட் டதற்
[குரைத்துச் 15.
சொன்னவை சமிக்கமன்ன சூழ்வமே யதற்குபா
[யம்
கொணருமா றம்முனியைக் கோதுறு நெறியினு
[கும் 16.
இவணங்க விறையுமாகக் கணிகைய ரிருடிசூனைத்
தந்தனர் தலியுமாகச் சாந்தையை யவற்களித்தா
[ன் 17.
முனிக்கலே மறுமகனு முறைவிதி யுமதுசூனும்
சனற்குமா ரன்புகன்ற தெதுவது யாமியற்றும்
18.
என்னகேள் தசரதன்னே யெதிர்சுமந்த் ரற்கு
[றைக்கும்
என்னவாச் ருங்கமுனி யேகினன் விரித்துரைக்
[க 19.

இச்சருக்கத்தில் வால்மீகரானவர் சுமந்தரனது வசீகர ஹிதசாமர்த்யத்தையும், பழவினையின் போக்கையும் சொல்லலுற்றுர். தேவலோகத்தில் ரிஷிகள் தம்முள் நடந்தேறிய சம்வாதத்தை, காதையென்ன தசரதன் கேட்கவும், அதை ஒரு பெலமான பிரமாணமெனக்கொண்டு, "செய்வன திருந்தச் செய்" என்றபடி பக்திபூர்வமாகவும் கடமையாகவும் தான்கொண்ட எண்ணம் வேறுபடாமல் யாகத்தைச் செய்யவும், அதினுல் விளையும்பயனுனது நன்மையேஎன்னும் துணிவு தோன்றுமாறு வற்புறுத்திக்கூறலாயிற்று. இதன்றியில், சுமந்த்ரன் அரசனுக்கு ஆதிவிருத்தாந்தம் எடுத்துரைக்கையில் சவிஸ்தாரமாயாரம்பித்துக், கடைசியாகக்கணிகையர் கலேக்கோட்டுமாமுனியைக் கூட்டிக்கொண்டு வந்ததை மாத்ரம் சங்கிரகித்துக் கூறினமையால், தசரதராஜனுக்கு ஓர்வித மெய்மையாவல் தோன்றவேண்டும் என்றும், அவ்விதம் தோன்றுதலானது, தான் சொன்னவற்றை ராஜன் அங்கீகரித்ததோர் அறிகுறியென்றுதான் நிச்சயிக்க வேண்டுமென்றும், துணிவு தோன்றுமாறும், படிப்போர் மனதில் இன்னும் இதன் முடிவு செவ்வையாக அறியவேண்டுமென்னும் குதூகலந் தோன்றுமாறும் வால்மீகரானவர் சாமர்த்தியமாகச் சொல்லியிருக்கிறுர்.

மேலும், மழை பெய்து ராஜ்யமெல்லாம் சுபிக்ஷமாகவேண்டுமோனுல், ராஜனும் பிரஜைகளும் அதர்ம்மிகராகக் கூடாதென்றும், ஆகவே, மழையானது யக்ஞமரன சுவதர்ம்ம பலமென்

னும், சாஸ்ரங்களும், நூற்களும், மறையும் கூறியிருக்கும் நீதியை விளக்க வேண்டுமென்றும், சொல்லப்பட்டது.

தவிர, பிரம்மசர்யத்தின் சுத்தத்வ பலம் இன்னதென்று விளக்குவதோடுகூட, அந்தப் பிரம்மசர்யம் இருவித மகிமையை உடையதென்றும், அதாவது, உலகோர் வியக்கும் ஸ்திரீசங்கமின்மை ஒன்று, தவத்தோர் நயக்கும் விஷய சிந்தனையில்லாமை ஒன்று, எனவும் சொல்லியிருக்கிறுர். இதில், தற்காலத்து நாகரீக மேதாவிகளின் கருத்தும் ஆசரணையும் அமைய ஒரு விஷயம் விளங்குகிறது. கீழ்சீமையோர் "பிஞ்சிலேயே பழுத்தவர்- (Orientals are precocious) " என்று சொல்வதற்கு, மேல் சீமையோர் தேச சீதோஷ்ண நிலைமையும், நடையுடை பாவனையையும் காரணமென்று சொல்கிறுர்கள். முக்யமாகக் குழந்தையிலேயே மானம் வெளியிடாமை உத்தமமான காரணமென்னச் சொல்கிறுர்கள். இவ்வபிப்ராயம் வால்மீகருக்கும் புலப்பட்டு, கலேமுனியின் விஷயப்பற்றிலாச் சுத்த தத்வத்துக்குக்காரணம், ஏகாங்க வனவாசமும் தகப்பனுடைய சிச்ருஷுை சகவாசமும் என்று வரைந்துளார். ஆகையினுல், குழந்தையிலேயே வஸ்த்ர உடைகளால் மானம் இன்னதென்று மறைப்பதினுல், குழந்தைகள் விளையாடுகையில் "ஆண் பெண்" விளையாட்டு என்பதே மறந்து, விளையாட்டை இதர மார்க்கங்களில் முன்னிடவே, பரஸ்பர சிநேக சகோதரா பாவம் உண்டாகி, "தொட்டிற்பழக்கம் கட்டையுடன்" என்பதினுல் சத்துக்களாவர், என்பதை நாமெல்லாவரும் கைப்பற்றவேண்டும் என்பது, நிதர்சனமாம்.

(10-வது சருக்கம் பின்வரும்.)

III
கீசகவதம்.

இரண்டாம் அங்கம்.

இரண்டாம்களம்.

உத்தியான வனம்.

விருதசாரணி பிரவேசிக்க.

விருத - மன்னன் றேவி மகிழு மாறு,
மாலே தொடுக்க வேண்டின மலர்கள்,
இப்பூங் காவி, லெல்லா நலனெடு
மிருக்கக் கண்டே னுக ! விவ்வனம்,
இமையவர்க் கியற்றிய தென்னே வறியே
[ன் ?
செங்கா லனமுஞ், செம்பொற் பெடை
[யுங்,
கொஞ்சிக் கொஞ்சிக் கூடுங், கமல
மலர்விரி பொய்கை மனேகர மாகக்,
குயிலுங், கிளியுஞ், சிகியும், முகியுஞ்,
சிறகர் சிலிர்த்துத், தண்சினை தவழ்ந்து,
மென்கனி யருந்தி, மெதுவாக் கூவச்,
செய்துவர் குன்றிற் சேர்ந்த நறும்புனல்,
மென்மலர் வளர்த்து, மதுவா ஒழிய,
மதுகர மயின்று, மதுவடை தட்ட,
மூழ்கி வந்து, மிசைந்திளைப் பாறச், [லே!
சொல்லுஞ் சொல்லுஞ்! சோபனச் சோ
யாகவ், னிதனின் றிளமலர் கொய்ய,
விதமே யல்லா, லேத மிலேயே. (மலர்
கொய்ய)

(உத்தரை, சுமதி, சுசீலை, இவர்கள் பிரவேசிக்க.)

சுசீலை - நேற்று நாம் வந்தபோது, நாவற் பழம் பழுத்திருக்கக் கண்டோமே! இன்று நமது உத்தரை வந்திருப்பதால், கொஞ்சம் உதிர்த்துத் தின்று, பூப்பறிக்கலாம்.

உத்தரை - மரம் எங்கே இருக்கிறது? இது வரையில் நான் பார்த்ததேயில்லை.

சுசீலை-அதோ! அந்தக்குளக்கரையிற் பூத்துக்காண்கிற பவள மல்லிகை யருகில்-

உத்தரை - ஓ! தெரிகிறது! போவோம்!
(பழம் நுகர)

சுமதி-அம்மா! அதிகம் தின்னாதே; நெஞ்சு கட்டும். நேரமாயிற்று! அம்மாள் கோபித்துக் கொள்வள்.

உத்தரை-பூப்பறிக்க வேணுமே! மல்லிகை மொட்டுகளைக் காணவில்லையே! யார்பறித்தவர்?

சுமதி - சற்று எட்டிப்போனால், வேண்டும் மலர்களுண்டு விசாரமேன்? (எட்டி ஏக)

உத்தரை-இந்த வாடாக்குறிஞ்சியின் கனைகளைக் காணவில்லை! கிள்ளினது கிள்ளினாற்போலேயே இருக்கிறது! யாரோ இப்பொழுதுதான் பறித்திருக்கிறார்! இந்த வண்டு என்ன வண்டு! சும்மாத்தொடர்ந்து தலைக்கேறுகிறது! பூப்பறிக்க வொட்டுவதில்லை! (மலர்கொய்ய)

சுமதி-அதோ! அம்முல்லைக்கொடி வளைகிறது! யாரோ பூப்பறிக்கிறார்!

உத்தரை-ஆம் ஆம்! யார்? பார்த்துவா!

சுசீலை-ஆமாம்! உத்தரை மாமியார் ஒளித்திருக்கிறாள்!

உத்தரை-காற்று சங்கையிருப்பதால் காண்கிறதில்லை! செவ்வையாய்ப் பார்!

சுசீலை - ஆம், ஏடீ! சொன்னாற்போலவே ஒருத்தியிருக்கிறாள்! இங்கே எப்படி வந்தாள்?

உத்தரை - அவள் கையில் அழகான மாலை இருக்கிறது! வாங்கிக்கொண்டுவா! (சு. செல்க.

விருதசாரணி-யாரம்மா நீ?

சுசீலை-நான்தான்! மந்திரிமகள்; எமது ராஜ குமாரி உத்தரை, யுமது கை மாலைமேல் மோகித்தாள்.

விரதசாரணி-இன்னும் சற்று தொடுக்கவேணும்; நான் மாலை தொடுக்கத்தான் வந்தேன்.

சுசீலை-ஆனால் வாரும்! நாங்கள் எல்லாரும் மலர்பறித்துக் கொணர்வோம்; நீங்கள் ஒருபுறமிருந்து தொடுக்கலாம். (எல்லாவரும் மலர்கொணர வி-சா-தொடுத்து ஈய.

உத்த - நாருறித்திள நீர்நனைத்தெழி னுகதொய்
யக மாகவே
சீருருக்கொள மேய பற்பல சீகரம்மிகு
சாலகம்
ஊருநத்தினங் காலு முத்தினும் வாரி
மொத்தின வாறெனம்
போருகத்துறை மாதுமெச்சின போதி
லம்பக மானதே!

ஆ ஆ! நன்றாயிருக்கிறது! நாகர் ஜடைவில்லை நவரத்தினத்தில் இழைத்தாற்போல் இருக்கிறது! சுமதி! இதை எப்படித்தலையில் வைப்பது? சற்று வைத்துவிடு!

சுமதி-இது மாத்திரம் வைத்தால் எப்படியிருக்கும்! ஜடை சிங்காரம் செய்துகொண்டால் தேவையில்லை!

விருதசாரணி-அம்மா, உத்திராய்! உட்கார்; தலைபின்னிப் பூத்தைத்து விடுகிறேன். (புனைக.
சுமதி-சுறுக்காப் போவோம் வா

(சுதேக்ஷணை பிரவேசிக்க)

சுதே - கண்ணே! இத்தனை நேரமென்ன? காணேமென்று ஓடிவந்தேன்! திரும்பம்மா, பார்ப்போம்! ஆ! ஆ! நன்றாயிருக்கிறது! இது யாரம்மா தைத்தவர்?

சுமதி - இந்தச்சோலையில் கந்தர்வ மாது போல் ஒருத்திவந்தாள்: அந்த அம்மாள்-

" சுதே-எங்கே! எங்கே! போய்விட்டாளா? அந்த அம்மாளை ஏன் மனைக்குக்கூட்டிக்கொணரவில்லை? வா! போய்ப்பார்க்கலாம்! (விரத-யைக்காண.

ஏனம்மா! சங்கோசமென்ன? நமது அந்தப்புறத்திற்கு யாரும் தடையின்றி வரலாமே! குழந்தைகள் கூப்பிடவில்லையா? அதுகளுக்கென்ன தெரியும்! வாரும் போவோம். (அனைவரும் ஏக.

மூன்றாவது களம்.

நாடக சாலை.

தீக்ஷிதர் சந்யாசி, இவர்கள் பிரவேசிக்க.

தீக்ஷி-இன்று ராஜக்ரஹத்தில் போஜனம் வெகு பசந்தாச்சுது!

சந்யா - உமக்கென்ன! சர்வதா சாப்பாடு தான்!

தீக்ஷி-அதென்ன! அன்னம்பிரம்மமயமல்லவா?

சந்யா-பிரமை யென்று சொல்லும்!

தீக்ஷி-பிரமை விட்டால் பிரம்மந்தான்!

சந்யா-வாஸ்தவ்யம்! கொஞ்சம் அதிகமாய் விட்டதாற்றான் இப்படி இருக்கிறீர்! இன்று சமையல் விசேஷமென்ன?

தீக்ஷி - தாங்கள் எல்லாம் விட்டதாற்றான், சுரோத்ர சூட்சுமமேயில்லை! ஓர் பரதேசி பாடுவதைக்கேளும்!

அமுதோதன மமுதேயென வருந்தப்பல கறிகள்
இனிதோவினி தெனத்தின்பன வெல்லாமப ரிமி
[தம்
கனிதேனொடு கற்கண்டுபால் கிருதம்மிகு சரிதம்
கமலாசன னொருகாலமுங் கதிக்காவித முறவே.

சந்யா-நன்றாகப் பாடியிருக்கிறான்! ஆரப்பா இவ்வளவு பசந்தாகச் சமைப்பவர்?

தீக்ஷி - பலாயனன் என்னும் பரிசாரகன்! இன்று நமது உற்சவத்துக்கு வந்தான். அவனது கைபாக விசேஷத்துக்காக அக்ரசாலை ஆதிபத்யம் அளிக்கப்பெற்றான்.

சந்யா-ஆ! ஆ! அதிபாக்யவான்! குட்டுப்பட்டாலும் கணியாழி கொண்டு குட்டுப்படவேணும்! பரிசாரகத்வம் ஆனாலும் ராஜாநுக்ரகம் விசேஷமல்லவா? அரமனைச்சம்பளம் அரைக்காசு ஆனாலும் அதுக்குச்சமானமுண்டா?

தீக்ஷி-அடடா! இதென்ன இப்படிச்சொல்கிறீர்? பாகசாஸ்த்ர பரிக்ஞானியல்லவா? அந்த ரசமே ரசம்! அந்தச் சமையலே சமையல்! அந்தக்கையே கை! அசாத்யம்! அசாத்யம்! ஒரு கொப்பரி ஜலத்தை ஒரே கையாலெடுத்து பந்தி முழுதும் கங்காமிருதங் கேட்கிறானே! அவன் சமர்த்தை என்ன சொல்ல!

(சேவகன் பரிமளத்தட்டுடன் பிரவேசிக்க.)

சேவகன் (ஓர்புறம்) - பார்ப்பரப் பையன்கள் பிதுங்கத்தின்று பிதற்றுகிறார் போல இருக்கிறது!

(வெளிப்பட)- சத்து!

தீக்ஷிதர்-ஏதடா நீ யிங்கே வந்தது?

சேவ-சுவாமி! தண்டம்! இன்று சதிராக உத்தரவாயிருக்கிறது. ஆனபடியால் இந்தப்பரிமளத்தட்டு கொண்டுவந்தேன். ராஜா இப்போ வருவார். உத்தரவு? இதை இவிடம் வைத்திருக்கிறேன். (தட்டு வைத்து ஏக.

சங்யா-ஓய்! தீக்ஷிதர்வாளே! உமக்குக்கொண்டாட்டம் தான்!

தீக்ஷி-அது என்ன?

சங்யா-திரையமேத யக்ஞம்!

தீக்ஷி-திரையமேதமா? ஏது நூதனமாய்ச் சொல்கிறீர்? மறைவென்ன? சும்மாச்சொல்லுமேன்!

சங்யா-மறைவு ஒன்றுமில்லை; சகஜம்தான்! உமக்கே தெரியும்! வேணுமானால், சொல்கிறேன் கேளும்!

(திரையமேத விதி)

இளங்கொடி யீன்ற யிளைய வெள்ளிலை
புனன்மீ னுகுத்த பூகச் சுருளும்
முத்துச் சுண்ணம் முகில ளாவிய
பொதும்பர்ப் பட்ட பொருண்மண மாறும்
நானமொ டாரம் நலமுட னளைஇ
பச்சைப் பூரம் பனிநீர் பெய்து
பரிமள வாடை பரிந்து வீச
ரமணீ கரமாந் திரைய மேதமே.

தீக்ஷி-ஆ! ஆ! சித்ரம், சித்ரம்! சொல்லும், சொல்லும்! இன்னொரு விசை கேட்போம்.

சங்யா-கேட்பான் ஏன்? சம்சயம் வேண்டாம். யதேஷ்டமாகத் தாம்பூல தாரணமாகட்டும்! உம்! உம்! போஜன சேஷம் பூர்த்தியாகட்டும்!

தீக்ஷி-(பரிமளத்தட்டைப்பார்த்து)- ஆ ஆ! ரம்ப விசேஷம். "பூகீபலசமாயுக்தம் நாகவல்லி தளைர்யுதம் கர்ப்பூர சூர்ன சம்யுக்தம்"-இதென்ன! ஏலம், கிராம்பு, ஜாதிக்காய், ஜாதிபத்ரி வால்மிளகு, குங்குமப்பூ!-இதென்ன? சந்தனம்! பனிநீர்விட்டு பச்சிலை கர்ப்பூரம் கஸ்தூரி சேர்த்திருக்கிறது! உம்! உம்! நல்லவாஸனை! நல்லவாஸனை! வெகுசுகம்! வெகுசுகம்! ஔதும்பர பத்ரமிருந்தால் அதி சிலாக்யம்!

சங்யா-ஓய்! ஓய்! தீக்ஷிதர்வாள்! ஆநந்தத்தில் அழுந்தி அவதும் பரபத்ரத்தை மறக்காதேயும்! உமக்குவேண்டும் ஆநந்த பத்ரம் என்னிடத்திலிருக்கிறது. வாரும்! ஏதோ சந்தடிகேட்கிறது! சீக்ரம் வந்துட்காரும்! (அமைதியுடன் இருக்க.

விராடராஜன் வைபவத்துடன் பிரவேசிக்க.

(பின்னால் வரும்.)

IV

லௌகீக தந்த்ர தர்மம்.

(4-வது சஞ்சிகை 108 வது பக்கத்தொடர்ச்சி.)

அத்யாயம் III.

நிஷ்ப்ரயோஜன யத்நம்.

யத்நமானது பிரயோஜன கர்த்தவ்யமாகிறதே யொழிய, எப்பொழுதும் அந்த யத்நத்தால் பிரயோஜன சார்த்தகமாம் என்பதில்லை. ஆகையால் யத்நம் இருவகையாம்-பிரயோஜன யத்நமென்றும், நிஷ்பிரயோஜன யத்நம் என்றுமேயாம். இப்பிரிவினை விஷயத்தில் விவாதம் ஏற்பட்டிருந்தாலும், வாஸ்தவமாக விவாதஆஸ்பதம் ஏதுமில்லை.

யத்நமானது, வியாபரிக்கக்கூடிய ஒரு வஸ்துவை விளைவிக்க ஏதுவானாலொழிய, 'பிரயோஜன யத்நம்' என்று, அநேகர் சொல்வதில்லை. சிலர், சுகப்பட்ட மாத்ரம் ஏதுவாம் யத்நங்களை, நிஷ்ப்ரயோஜன மென்பது, தகாதென்கின்றனர்: உத்யோகஸ்தர், சைநியர், வைத்யர், வக்கீல்கள், உபாத்யாயர், பாடகர், நிர்த்தர், நாடகர், வேலையாட்கள் முதலினர், ஏற்கனவே அற்பமாயிருக்க, அவர்கள் தத்தம் அலுவலை சரிவரச்செய்கையில், அவர்கள் யத்நத்தை, 'நிஷ்ப்ரயோஜனம்' ஆனதென்று சொல்வது, தோஷாரோபணமாம், என்பர். ஆனால் அவர்கள், 'நிஷ்ப்ரயோஜனம்' என்பதை, 'விலையில்லா விழல்' என்று, தப்பான அர்த்தம் செய்கிறார்கள். இதனால் தான், விவாதமேற்படுகிறது. சார்த்தகம் அடைவதே ஜன்மசாபல்யமாவதில்லையாகையால், 'நிஷ்ப்ரயோஜனமானது' என்பதால் தோஷமென்ன? ஏதாவது பாஷாப்ரயோகத்தில் சொற்பிழை என்னலாம்: ஆனாலும், சூக்ஷ்மார்த்தம் வியக்தமாக, அவ்யவகார்யமாகிறது

மனிதனால், யாதொரு வஸ்துவையும் சிருஷ்டிக்க முடியாது. ஆனால், அமைந்திருக்கிற ஒன்றைப் பிரயோஜிதமாக்க யத்நம்மாத்ரம் செய்வது சாத்யமாகுமென்று, முன்னமேயே சொல்லியிருக்கிறது. ஆகையால், அறிவுபுகட்டும் உபாத்தியாயர், நோய்தீர்க்கும் பண்டிதர், வைரமிழைக்கும் வேலைக்காரர், இவர்கள் செய்யும் யத்நத்தையாவது, தற்கால அற்பானுபவத்திற்காகிலும் உபயோகமாகிற உழைப்பையாவது, எப்படி நிஷ்ப்ரயோஜனமானதென்று சொல்லலாம்? என்கிற ஆக்ஷேபம் ஏற்படக்கூடும். ஆகவே, மேலே சொன்னவை போன்றதெல்லாம் உபயோகமற்றது, என்று கொள்வது அல்ல. சாதாரணமாய் உலகரீதியில், "போடா போ! பாட்டுங் கீட்டும் கேட்டால் வயிறு ரம்புமா? வாய்ரம்புமா?" என்கிறார்கள். ஆனதால், வயிறுவாய் நிரம்ப ஆஸ்பதமாவதுதான் "பிரயோஜன" மென்பது. "பிரயோஜிதம்" என்பது "பிரயோஜனம்" என்பதோடு ஐக்யார்த்த பாவமாக இருப்பினும், மனிதர்களுடைய கிராஹ்ய ருசியைப் பொறுத்தது. தவிர, "லௌகீக தந்த்ர நிதானமானது," "பணமே குணம்" என்ற நிதானமாகையால், "ஐசுவர்யம்" என்பது என்ன? அது சாதன வைபவமா? குணவைபவமா? என்று விசாரிக்கவேண்டியது அவசியம்.

ஆகையால் யத்நமானது அதன் பிரயோஜன வைபவத்தைப் பொறுத்து இரண்டு வகையாக பாவிக்கப்படுகிறது :-

முதலாவது:- "நிக்ஷேபயத்நம்" என்பது; இது வெளிப்பொருள்களையோ, தன் தேக தத்வத்தையோ பொறுத்து, தானும் பிறரும் பயனடையக்கூடிய, சங்க்ரஹ பெலத்தைக்கொடுக்கிறது. கிருஷியும், வியாபாரமும், யாவரும் காணும் வண்ணம், தனதான்ய நிதியைப் பெருக்கி, நிக்ஷேப ஐசுவர்யத்தை உண்டாக்குகிறது. சிற்பமானது, நிதியாகக் கருதப்படாவிடினும், அது விசேஷசாமர்த்தியத்துடன் அமைந்த ஒரு ராஜ்யத்திற்கு, இயல்பான நிதியேயாகும். உபதேசம், வைத்யம், நானாவித யந்த்ர நிர்மாணம், ஆன இவை, தனக்கும் பொதுஜன சமூகத்திற்கும், தேகதத்வ ஆற்றலை அபிவிருத்தி செய்கிறது.

இரண்டாவது:- "காம்ய யத்நம்" என்பது; இதன் பிரயோஜனம் தற்காலம் அநுபவிக்கும் ஆநந்தம் மாத்திரமேயாம். எப்படியென்றால், ஓர் சங்கீத வித்வான் சாமர்த்தியமாகப்பாடினால், அதனால் அவ்வித்வானுக்குப் பொருட்பிரயோஜனம் சிலரால் செய்துகொடுக்கப்படுகிறதேயொழிய, அதனைக்கேட்டோர்க்கு அவ்விதம் பாடும் வல்லமையாகிய ஒரு நிக்ஷேப சக்தியைக்கொடுப்பதில்லை. ஒரு ஜட்ஜியோ, வக்கீலோ சாமர்த்தியமாக ஒரு கேஸைத்தீர்மானித்தால், அத்தீர்மானமானது ஏற்கெனவே அமைந்திருக்கும் நியாயச்சட்டத்தை அதிகமகிமைப்படுத்தவாவது, குறைப்பதாவது செய்வதில்லை. ஒரு சைந்யமானது படையெடுத்து ஜயித்தால், தங்களுடைய ராஜ்யத்தைப் பாதுகாத்ததாகிறதேயொழிய, ராஜ்ய அமைதியை அதிகரிக்கவாவது குறைக்கவாவது செய்வதில்லை. ஆகையால், இதில் சொன்னவையனைத்தும், ஒரு சங்க்ரஹ பெலத்தைக்கொடுப்பதில்லை.

3. இப்பொழுது, எவ்வித யத்நமானது ஐசுவரியத்தைக் கொடுக்க அநுகூலமாம், என்பதைக்கவனிப்போம். தற்கால இன்பத்தைக்கொடுக்கும் சங்கீத வன்மையானது, அதனைக்கேட்போர்க்கு, மறுபடியும் அவர்கள் அம்மாதிரி பாடக்கூடிய, ஒரு சங்க்ரஹ பெலத்தை அளிப்பதில்லை. ஆனால், சங்கீதசாஸ்த்ர அப்யாசமானது, பயன்படலாம். இல்லாமற் போனால், ஒருவன் பாடியதைச் சங்க்ரஹித்து, மறுபடியும் ஒப்பிக்கக்கூடிய யந்த்ரமானது, ஐசுவர்ய ஹேதுவாம். ஆகையால், பொதுஜன சமூகமானது இயல்பாய்க்கருதக்கூடிய ஐசுவர்ய ஏதுவானது தான், 'பிரயோஜன யத்நம்' என்று, வியவகார விஷயத்தில் எடுத்தாளத்தக்கது. இதைஇன்னும் வியக்தமாய்ச் சொல்லவேண்டுமானால், பலான தேசம் குபேர சம்பத்துள்ளது என்பது, அத்தேசத்தாருடைய கல்வியறிவையும், புத்தி சாமர்த்தியத்தையும், சிறந்த நடையுடை பாவனை ஒழுக்க அவஸ்தையையும்பற்றிக், கருதப்படுவதில்லை; ஆனால், ஐசுவரிய ஹேதுவாம் பஹிர் வஸ்துக்களைப்பற்றியே, சர்வசாதாரணமாகப் பேசப்படுகிறது. ஆகையால், இத்தகைய வஸ்துக்களைச் சங்க்ரஹிக்கும் யத்நமே, 'பிரயோஜன யத்நம்' என்னப்படும்.

4. ஆனால் "நிஷ்ப்ரயோஜன யத்நம்" என்னவென்றால், ஐசுவர்ய பலப்ராப்தியை விளைவிக்கும் வஸ்து சேகர பெலத்தைத்தரும் ஆற்றலின்மையின்கண் காம்க்ஷை வைக்கும் முயற்சியேயாம். இதனால், ஜனசமூக ஐசுவர்யம் குறையுமே தவிர, நிலைக்கவாவது அதிகரிக்கவாவது செய்யாது. ஒருவனைக் காப்பாற்றும் யத்நமோ, அல்லது, ஒரு தேசத்தாரைக் காப்பாற்றும் யத்நமோ அத்யாவசியமுள்ளதாயிருக்கலாம். இதற்

காகப்பெருத்த செலவு செய்தால், ராஜாங்கத்திற்கு இதர வழிகளில் செலவு செய்யப், போதுமான நிதியிருப்புக்குக் குறைவு நேரிடுகிறது.

நிஷ்பரயோஜன யத்நமும், ஏதாவது ஒரு விதப்பிரயோஜனத்தை யுண்டாக்கக்கூடும். இந்த யத்நமானது, ஒரு ஸ்திரமான நன்மையை விளைவித்தாலும் விளைவிக்கலாம்; தற்கால இன்பசுகத்தைக் கொடுத்தாலும் கொடுக்கலாம்; இல்லாவிட்டால், வியர்த்தமாக முடியினும் முடியலாம். எவ்விதத்தாலும் ஜனசமூகமானது இந்த நிஷ்ப்ரயோஜன யத்நத்தால் அற்பமேனும் கேவலஸ்திதியை அடைவதல்லது சம்பத்தையடைவதில்லை. ஒருவன் யாதொன்றும் செய்யாமல், வெற்றுச் சோற்றுக்கு ஆளானால், தற்காலம், அவனுக்குக்கொடுத்தசோறு நஷ்டந்தானே! ஆனால், நிஷ்ப்ரயோஜன யத்நத்தால், பொது நன்மை விளையாவிடினும், ஒருவனுக்குப் பிரத்தியேக நன்மை யுண்டாக்கக்கூடும்: அதாவது, அவன் தனது சாமர்த்தியத்துக்காகப், பிறரால் யத்கிஞ்சித்திரவிய சகாயம் பெறலாம். அதனால், இவன் பயனடைந்த அளவு, புறத்தியார்க்கு முதல் நஷ்டந்தானே? ஒரு தையல்காரன் ஒருவனுக்கு அங்கிதைத்துக்கொடுத்துக் கூலிவாங்கினால், அங்கி முன்னிராத ஒருவிகற்ப சாதனமாகையால், அங்கியைப் பெற்றுக்கொண்டவன் அதன் விலைக்குத்தக்க ஒரு பொருளை அடைந்தாற்போலாகிறது. விடிய விடிய சதிர்க்கச்சேரி வைத்தால், இவன் அடைந்த லாபம் என்ன? கூத்தியர்க்குக் கொடுத்த பொருள் நஷ்டமானதுதான் பலம்! எப்படி, ஒருவன் இந்த நிஷ்ப்ரயோஜன யத்நத்தால் பிறரிடமிருந்து தற்பிரயோஜனமடையக் கூடுமோ, அப்படியே ஒரு தேசத்தார், கானவிற்பன்னராகியோ, யுத்த கௌசலராகியோ, தங்கள் பிறதேசத்தார்க்குத் தங்கள் சாமர்த்தியத்தை விற்றுப், பயனடையலாம். அவ்விதம், ஒரு தேசத்தார் பயனடைவதனால், உலகப்பொது நிதிக்கு ஏற்றக்குறைவு யாதானும் ஏற்பட்டதா? ஒருவன் கொடுத்தான்: மற்றவன் பெற்றான். இவ்விருவருடைய தனத்தை ஒன்றாய்க்கூட்டி அலகிட்டால், முதல் இருந்த இருப்பு அதிகமுமாகவில்லை! குறைவுமடையவில்லை! மத்தியில் எடுத்த உழைப்பு என்ன பிரயோஜனத்தைக் கொடுத்தது? காணக்கூடியபிரயோஜனம் யாதுமில்லை! ஆகையால், நிதானத்தில் அவ்வுழைப்பு வியர்த்தமென்றே ஏற்படுகிறதல்லவா?

ஆனால், பிரயோஜன யத்நமும் வியர்த்தமாய்ப்போவதில்லையா? என்று, ஒரு கேள்வியுண்டாகும். வாஸ்தவந்தான்! சும்மா, லாபம் கொள்ளை கொள்ளையா வாரிக்கட்டிக்கொள்ளலாம், அல்லது ஒப்புயர்வில்லா நன்மையை விளைவிக்கலாம், என்று நிர்ணயமின்றி அபரிமிதமாகச்செலவு செய்தால், தீபாவளியாவதுசகஜம்தான். இது யார்க்குத்தான் புலப்படாது! இப்படித்தெரிந்திருந்தும், காரியப்ராப்தியின்றிக் கெட்டுப்போனவர் அநேகர். இவ்விஷயத்தில், முதலாளிகள் மாத்திரமா? ராஜாங்கங்கள்கூடச் சீர்குலைந்துவிடுகிறது! நமது சீமை நிலைமையும், தற்காலத்தில் கேவலஸ்திதியை அடையுமோ, என்று சந்தேகிக்கக்கூடிய ஸ்திதியில் இருக்கிறது என்னலாம். காப்புச்சேனைகளை அதிகரித்து, அபாரமான கப்பல்களையும் நிர்மாணித்து, ஏராளமான இருப்புப் பாதைகளையும் போடுவித்து, பற்பல தொழிற்சாலைகளையும் ஸ்தாபித்து, அதிகமான சரக்குகளையும் உற்பத்தி செய்வித்து, உலகத்தோடு போட்டி போட்டு விவாபாரம் செய்து பயனடையலாம், என்ற உத்தேசம் மேலிட்டிருக்

கிறது. இதன் பிரயோஜனம், தற்காலம் உத்தேசத்தில், இன்பான ஆரம்பம்தான்! பின்னிட்டுப், போட்டித்தொழிலோடு வர்ஜ்ஜனமும் ஏற்பட்டுவிட்டால், அந்தப்பாடு அப்பொழுதுதான் தெரியவரும். உத்தேசமான லாபம் கிடைக்காமற் போமேயாமாகில், நானாவிதச் செலவு ஏற்கெனவே ஏற்பட்டிருப்பதால், மூலதனம் குறைவுபட்டுப், பங்கீட்டின் பாடாகிமுடியும் என்பதற்கு, என்ன சந்தேகம்?

5. யத்நம் போலவே, அநுபவமும் இருவகையாம். உலகத்தில், எல்லாருமே யுழைக்கிறார்களா? உழைத்து அநுபவிப்பதுதான் 'பிரயோஜன அநுபவம்.' அப்படிச்செய்யாமல் அநுபவிப்பதே 'வியர்த்தாநுபவம்.' ஆனால் பிரயோஜன அநுபவமும் நிஷ்ப்ரயோஜனமாகிறது. ஒன்றைச்செய்ய இன்றியமையாத உழைப்பிற்கு வேண்டிய தேக திடத்திற்குச் சாப்பிடுவதன்றி, அன்னவஸ்த்ராதிகளில் தோரணையும், நாகரீகா அவஸ்தையென்ற விண்டம்பமும், ஆகிற மார்க்கங்களிற் செலவழிப்பது உழைப்பாளிகளிலும் காண்கிறோம். ஆகையால், உழைப்பிற்கு இன்றியமையாத சங்க்ரக பெல ஏதுவான அநுபவமே 'பிரயோஜனாநுபவ'மாம். இந்தச் சங்க்ரக பெலம் குடியானவர்களைப் பொறுத்தோ, ததாநுசார உபாதான சாதனங்களைப் பொறுத்தோ, உபாதானக் கருவிகளின் வைபவத்தைப்பொறுத்தோ, அல்லது ஜனங்களைப் பொறுத்தோ ஏற்படலாம்.

"வியர்த்தாநுபவ" சாதனங்களும் அநேகம் உண்டு: சரிகை, மத்யபானம் போன்றன. இவையாதொரு உற்பத்தியை அநுகூலிக்கவாவது, தேகதிடத்தைக் கொடுப்பதாவது, செய்கிறதில்லை. ஆகையால், இவைகளை உற்பத்தி செய்யும் யத்நமானது, வியர்த்தமென்றுதான், இத்தந்த்ர நிதானத்தில் ஏற்படும். வியர்த்தாநுபவத்துக்கு ஏதுவாகிற சாதனங்களை உற்பத்திசெய்யும் யத்நமானது, ஐசுவர்ய பலப்ராப்தியைக் கொடுக்காதென்பது, திண்ணம். தையற்காரனிடமிருந்து பெற்ற அங்கி, இருக்கும் வரையில் ஐசுவர்யமென்று கருதலாம். அதற்குள்ளாக அவ்வங்கியைத்தரிப்பவன் அதுபோன்ற விளைவிற்குரிய யத்நம் செய்து விளைவித்தால் நஷ்டமென்றுகருத இடமில்லை. அப்படிக்கின்றி அங்கி கிழிந்துபோனால் வியர்த்தாநுபவம்தான் ஆகும். சரிகையும் சற்றேறக்குறைய நீடித்திருப்பினும் அவ்விதமேயாம். இவையும் ஜீர்ணோத்தாரணமாகும் வரையில் ஐசுவர்யமென்றே கருதப்படும்.

6. மேற்சொன்ன பேதா பேதங்களால், பிரயோஜனாநுபவ ஏதுவாம் யத்நமும், வியர்த்தாநுபவ ஏதுவாம் யத்நமும், இப்படிப்பட்டசங்க்ரக பெலத்தைக்கொடுக்கும், என்னும்விஷயக்ராஹ்யமே, ஐசுவபலப்ராப்திக்கு இன்றியமையாதது. ஒரு தேசத்தின் மொத்த உற்பத்தியில், ஒருபாகம் மாத்திரமே, பிரயோஜனாநுபவ ஏதுவாம்: பாக்கி, வியர்த்தாநுபவத்துக்கோ, வியர்த்தாநுபவ கர்த்ருத்வத்துக்கோ ஏதுவாகிறது. ஒருதேசத்தின் விளைவை, முன்சொன்ன விஷயத்துக்குப், பகுதி செலவழித்ததாகக் கருதினால், பிரயோஜனாநுபவ ஜனங்களின் பகுதி யாத்ரம் ஐசுவர்யார்த்திய மார்க்கங்களில் ஏற்படுவர். மற்றப்பகுதி, வருஷா வருஷங்களாகவும், தலைமுறை தலைமுறையாகவும் வரவின்றிச் செலவாம் சாதனங்களை உற்பத்தி செய்யும் மார்க்கங்களில் ஏற்படும்: இப்பகுதி என்னவாயிருந்தாலும், வியர்த்தாநுபவ ரீதியிற் செலவாகி, தேச ஐசுவரிய பலப்ராப்தியைக் குறைப்படுத்தினதாகவே

யாகிறது. இப்படியிருக்கையில், காம்ய யத்நத்தினர் வேலையை நிறுத்தி, சர்க்காரால் வியர்த்தமாகப் போஷிக்கப்படுவதாக பாவிப்போம்; முன்னையோர் உழைத்துத், தாங்களும் அநுபவித்து, இப்போஷகர்க்கும் அநுபவார்த்தம் அளிப்பதும், தங்களுடைய யத்நக் கருவிகளைக் குறைபாடின்றி வைக்கவும் செய்துவரவேண்டும்; ஆனால் வியர்த்தமாய்த் திரிபவர் கதி யென்னவாம்? ஒன்றிலோ அவர்கள் பட்டிணியாக் கிடக்கவேண்டும், இல்லாவிட்டால், தாங்களே தங்களுடைய ஜீவனோபாயத்தைத் தேடிக்கொள்ளவேண்டும்; ஆகவே ஒருவருஷத்துக்குள்ளாக தேசம் துர்ப்பிக்ஷ நிலைமையடையும். ஆனால், முன் வகுப்பினர் யத்நத்தால், அடுத்த வருஷமும் அதேவிளைவு உண்டாவதினால், இத்துர்ப்பிக்ஷத்துக்கு ஏற்றக்குறைவு நேரிடுமென்பது, விரைவிற் புலப்படாது. இவ்வாறின்றி, முன்வகுப்பார் தங்கள் வேலையை நிறுத்திவிட்டால், வருஷாந்தரத்தில் தேசம் கெட்டழிந்தேபோம்.

ஆகையால், செல்வ நாட்டின் வரும்படி, மிகுதியும் வியர்த்தாநுபவ விஷயங்களிற் செலவாகிறதென்று வருந்துவதும் தப்பு: காம்ய விஷயங்களில் செலவாகிறதெனக் கரைந்துருகாமையும் தப்பு. இந்த வரும்படியானது, உபஜீவனஏதுவிற்குப் புறம்பாய், ஜன சமூகமானது இச்சிக்கும் சாதனங்களைக்கொள்ளும் சங்க்ரக நிதியாகிறது;" இஷ்ட காம்யங்களை அநுபவிக்கும் ஆற்றலையும் அளவையும் மதிப்பதற்கு ஓர் குறிப்பாகிறது. வியர்த்தமான இன்பங்களை அநுபவிக்கப்; போதுமான வரும்படி பாக்கி ஏற்படுகிறது என்பது, மிகவும் சிலாகிக்கத்தகுந்ததேயாயினும், நிஷ்ப்ரயோஜன விஷயங்களிற் செலவாகிறதே என்று துக்கிக்கத்தக்கது.

(நான்காம் அத்தியாயம் பின்னால் வரும்.)

V

ஓர் சுவப்நாவஸ்தை.

(4-வது சஞ்சிகை 110-வது பக்கத்தொடர்ச்சி.)

எனது நண்பர்களே! சென்ற சஞ்சிகையில், 'தேசகால அநிர்ணயன்' என்பதை இயன்றளவில் விளக்கி, இதில் 'சுவபாவ சுகாநுபவ இச்சாபீடிதன்' என்பதைப் பற்றி, இலேசாம்சமாகச் சொல்வேன்.

'சுவபாவம்' என்று சொல்வது, ஒருஜீவனுடையவோ, அல்லது ஒருவஸ்துவினுடையவோ, இயற்கையான குணம் என்பது, யாவரும்அறிந்த விஷயம். ஆனால், சற்று யோசித்தால், ஜீவனுடைய இயற்கைக் குணத்திற்கும், வஸ்துவின் இயற்கைக் குணத்திற்கும், எவ்வளவோ தாரதம்யம் உண்டென்று, எளிதிற் புலப்படும். இக்குணம், உற்பத்திமுதல் நாச பர்யந்தம், அவ்விருவகைக்கும் பெருத்த பேதத்தைக்காட்டி, திருஷ்டாந்தப்படுத்தும். இப்படி, இவற்றின் பேதாபேதத்தை விளக்குகையில், 'குணம்' என்பதற்கும், 'ரூபம்' என்பதற்கும் உள்ள வித்யாசத்தை மறக்கக்கூடாது. "கஞ்சிக்குக் காடி கொண்டாட்டம், அந்த, எலுமிச்சங் காய்க்குப் புளிப்புக் கொண்டாட்டம்" என்பது போலவே தான், வஸ்துவின் குணமானது அமைந்துளது. "கதிகெட்ட மீளிக்குக் கோபம் கொண்டாட்டம்" என்பதில், வாஸ்தவமாகக், கதிகெட்டவனுக்கு அடக்கமல்லவா, அமைவது இயற்கை? அப்படியிருக்கக்கோபம் ஆச்சர்யகரமல்லவா? இது எப்படி வந்தது? திருவாய் மொழியில், பகவான்

முலையருந்தும் நயவர்ணனையில், "திளைத்து கைத்துப் பருகிடாயே" எனவும், "மூக்குறிஞ்சி முலையுணாயே" எனவும், "ஒரு முலையை வாய் மடுத்து ஒரு முலையை நெருடிக்கொண்டு" எனவும், குழந்தைகள் முலையுண்ணும் சுவபாவம் கூறப்பட்டிருக்கிறது. இச்சுவபாவம் யாரேனும் குழந்தைகட்குப் பழக்கிக்கொடுப்பதா? பழக்கினாற்றான் பழகமுடியுமா? "திருடனுக்குத் திருட்டுப்புத்தி" என்பது, பிறக்கும்போதே அமைந்ததா? "ஸத்ஸங்கத்வே நிஸ்ஸங்கத்வம்" என்பதில், மனிதன் சேர்க்கைக்குணத்தால் மாறுபடுகிறானல்லவா? இத்யாதி வைபவங்கள் மனிதனுக்கு அமைகையில், பாகற்காய்க்கறி என்ன பசந்தாகச் செய்தாலும், பாகற்காய்க் கறியேயாம். இந்தக்குணபேதம், மலையிலக்காக யாவரும் அறியவருவது. சூக்ஷ்மமாக, ஒரு வியாதியஸ்தன் அவஸ்தைப் படுகையில் "நான்செய்த கர்ம்மம்" என்கிறான். ஆகையால் இதுதான் சுவபாவகுணம் என்பது. இதுதான் பிறவிக்குணம் என்பதும். இதுதான் மற்று எல்லா வாசனைக்கும் மூலகாரணம். இவ்விடத்தில் ஒரு நீச திருஷ்டாந்தத்தை எடுத்துரைப்பேன். மேத்யமாம் முல்லைப்புஷ்பத்திலும் வண்டு கூடுகிறது: அமேத்யத்திலும் வண்டு கூடுகிறது. இவற்றை மாற்றி, மேலையஸ்தானங்களிற் சேர்த்தாலும், முல்லை வண்டு முல்லையிலும், கொல்லை வண்டு கொல்லையிலும் கூடுகிறது. ஏன்? என்றாலோ, அதன் சிருஷ்டியே அப்படி! அமைப்பே அப்படி! என்கிறார்களல்லவா? நாயனாரும், "அறத்தாறிதுவென வேண்டாச்சிவிகை-பொறுத்தானோ டூர்ந்தானிடை" என்று பழவினை வரையறுத்திருக்கிறார். ஆனால் தெய்வம் பாரபக்ஷமாயிருக்குமா? இருக்கும் என்று எண்ண நியாயமில்லை. ஆகையால், அமைப்பிற்குக்காரணம், மேற்சொன்னபடி, அவனவன் செய்த கர்ம்மந்தான். இதுதான், 'ஜன்மாந்தர வாஸனை' அல்லது 'சுவபாவம்' என்பது. இது இம்மட்டில் நிற்க: சுவபாவ இச்சையின் தோற்ற வேறுபாடுகளைச் சிந்திப்போம்.

அவனுக்கென்ன குறைச்சல்! மகராஜன்! என்கிறார்கள். இத்தகைய ஐசுவர்யவான்கள் சகல ஆடம்பரங்களையும் விரும்பி, மாடவீடுகளையும், அதற்குத்தக்க கட்டில் மெத்தைகளையும் நிர்மாணித்துக்கொண்டு சுகப்பட வேண்டுகிறார்கள். ஐயோ! பாவம்! படுக்கப்பாயில்லை! இருக்க இடமில்லை! என்கிறார்கள். இத்தகைய தரித்திரர், பீற்றைப்பாயிற் படுத்து, ஓட்டைக்கூரையில் ஒதுங்கினாற் போதும், என்கிறார்கள். இவ்விரு திறத்தார் விஷயப்பற்றும், வெவ்வேறாகவிருக்க, அவ்விருவரும் காலையில் எழுந்து, "நேற்று நன்றாய்த் தூங்கினோம்" என்பார்களேயானால், சுஷுப்தியாசுகம், யார்க்கு அதிகம்? யார்க்குக்குறைவு? ஆராயுங்கள்! இருவர்க்கும் ஸமமாகவே ஏற்படுகிறது. ஒருவன் மடியில், அந்யக் குழந்தை ஜலபாதை செய்துவிட்டால், சீச்சீ! என்கிறான். அவன் குழந்தை அப்படிச் செய்து, சீச்சீ! என்ன, அக்குழந்தையின் தாய் நோக்கி, "என் கண்ணே! அப்பா வாயிற்பெய்யாமற் போனாயே!" என்றால், ஆ! ஆ! என்று ஆநந்திக்கிறானல்லவா? தவிர, "கயன்முள்ளன்ன" கட்டைமயிர், அழுந்த அழுந்தக், குழந்தைகளை முத்தமிட்டால், அக்குழந்தைகள், சிறிக்கிறதேதவிர, அழுவதில்லை! நாம் நோகுமென்று விடுவதும் இல்லை! ஆகையால், இச்சை வேறுபாடுகள் பலவாக இருந்தாலும், ஆநந்தம் ஒன்றையே கருதுவது உலக வழக்கமல்லவா?

"ஐயோ! போதும், போதும்! சீரழிந்து சிறிப்பாணிப்பட்டது போதும்! சீக்ரம் போகவில்லையே!" என்னும் கிழவனை "ஏன் உபத்ரவிக்கிறாய்? சீக்ரம் தொலையாயா?" என்று சொல்லிப்பாரும்! "ஏன்டா தலைதெறிப்பு! நீ போனாலாகாதா?" என்பான். திரிசங்க வருஷம் ஆண்ட திரிசங்கு கூட, தேகத்தைவிட துக்கித்தானல்லவா?

மேலே சொன்னவற்றை யாராய்கையில், உலகமெல்லாம் க்ஷேமத்தையே கருதுவது, சகஜமாக ஏற்படுகிறது. இதுதான் "ஜீவசுவபாவம்" என்பதும், "ஜீவலட்சணம்" என்பதும். இந்த சுகாநுபவ இச்சையானது, ஜாக்ரத்தில்-ஸ்திரப்ராபல்யத்தைப் பற்றியும், சுவப்நத்தில் சபலப்ரதி பல்யத்தைப்பற்றியும், சுஷுப்தியில்-கேவலம்அநுபவத்தைப்பற்றியுமே நடைபெறும். ஒரு திருஷ்டாந்தத்தை மட்டும் எடுத்துச்சொல்லிச் சுருக்கி முடிப்பேன்:- ஐயோ! பாம்பு! என்று தூ[illegible]லக, க்ஷேமா இச்சை பூர்த்தியாகிறது; சுவப்நத்தில், ஐயோ! பாம்பு! என்ற புத்திமாத்ரம் தோன்ற, பகிப்ரக்ஞும் இல்லாததினால், இச்சை மேலிட்டு, பயச்சாபல்யம் தோன்றி, உளறி அடித்து எழும்பச்செய்த பிறகுதான், பூர்த்தியடைகிறது: இதைத்தான் "ப்ரதிபலிதம்" என்றேன்; சுஷுப்தியிலோ-இருவகைத் தோற்றமும் அற்றுப்போன நிலையானதால், "நன்றாய்த்தூங்கினேன்" என்பது மறுநாட்காலையில் எழுந்த பிற்பாடுதான் புலப்படுகிறது. இவற்றின் சூக்ஷ்ம தத்வம் பின்னால்வரும் பூதசரீரப்ரச்னையில் இனிது விளங்கும்.

("கதாகத சம்மிச்ர கோஷ்ட்யா பந்தம்"
பின்வரும் சஞ்சிகையில்)

VI

லோகோபகாரிகள்.

அவதாரிகை.

அன்பர்களே! நாம் என்ன சொல்வேம்! "உண்ணப்போய் வாயை மறந்த வர்த்தமானம் தான்!" உங்களுக்கு லோகோபகாரச் சங்கத்தின் மகிமையானது, அது போர்க்கப்பட்டிருந்த அந்தகாரப் பூர்வ சரித்திரத்தைப், பிரகாசிப்பிக்கும் பானுவின் செங்கதிர்த் தோற்றமாகிய, பின்வரும் சங்கத்தாரின் ரிக்கார்ட்டுகளால் இப்பொழுதுதான் வெளி வந்திருப்பதால், அவற்றை யரும்பிரயாசையுடன் யாம் கோர்த்துத்திரட்டி, இச்சந்தர்ப்பத்தில் வெளியிடத் துணிந்தேம்:-

"கலியுகம்- 5000-சூன்ய மாசம் 33-தேதியாகிய அமங்களவாரம்-பலகரை முகூர்த்தம் திலங்கறை திதி- (வருஷம் பரிச்சேதம்.)

அதர்ம்ம க்ஷேத்திரம் ம-ா-ஸ்ரீ காலவித்தியாச கவிதாசரவர்கள். கா. க. மே. வா. வ. ரு. ந். தே-அக்ராசனாதிபதி-

(மனோராஜியாகப் பின்வருமாறு தீர்மானிக்கப் பட்டது.)

1. "இச்சபையானது, மிகவும் ஆழ்ந்த அன்புடன் எமக்குப் பிரதிகூலித்தளிக்கப்பட்ட, அவித்யா சாஸ்திர ஆராய்ச்சியில், அதி சிலாக்கிய கற்பித விகார பரம புருஷரான, கனம் லோ-உ-ச அவர்களுடைய பாத தூளியைத், தயவுடன் பலாமான சிபார்சையின் மேல் சுவீகரித்திருக்கிறது:-

2. "மேற்சொன்ன நோக்கத்துடன், கனம் லோ-உ-ச அவர்களும் அவருடைய சிநேகிதாளான மூவரும் மிகவும் பரிதாபத்துடன் எமக்கு விடுத்த, இம்மருவூரில் தத்துல்ய உபைச் சங்க ஸ்தாபனார்த்த, கடிதத்தைப்பற்றிய விஷயங்களை, ஆண்டாண்டு தோறும் அன்புடனே சிந்திப்போமாகவும் :-

3 அவ்வண்ணமே, அதற்குச்சரி எதிரான ச-உ-லோ. மானது, இவ்வூரில், இன்றுமுதல், எம்மால் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. அதில் மேற்சொன்ன நால்வரும் சபையோராகவிருக்க விரும்பலாவோம். அடிக்கடி நேரிடும் அவகாச காலங்களில், அவர்களால் பிரையாசையுடன் லோகோபகார நோக்கமாய் அநுபவ பூர்வமாகக் கண்டு அறியப்படும், அநேக சஹஜமான சங்கதிகளை, அவர்கள் ஆச்சரியகரமான விதத்தில் எமக்கு அறிக்கைசெய்து, எமது சம்மத விகிதத்தைப், பத்திரமாகக் காப்பாற்றிவைக்க, மேற்படியார்கள் கடமைப்பட்டிருக்கிறார்களென்று, உத்தரவளிக்கப்படும் :-

4. அச்சங்கத்தார், விசாரணை முதலானவைகளுக்குப் போகவரச் செய்யும் செலவைப், பரோபகார பாவத்தில் தாங்களே வகித்துக்கொள்வதானது, எமக்கு அதிகதிருப்தியை விளைவித்திருப்பதும் தவிர, அவர்கள் மேலிட்டுக்கொள்ளும் விசாரணையானது எவ்வளவுகாலம் நீடித்துவிட்டாலும் சம்மதமே :-

5. இதல்லாமல், இச்சபைக்கு அனுப்பப்படும் கடிதங்களின் தபாற் கூலியையும், அவர்கள் இச்சபைக்கு வரப்போக நேரிடும் செலவையும், அவர்களே வகிக்கக்கடவரென்று வற்புறுத்தியிருப்பது, அவர்கள் எடுத்துக் கொள்ளும் மனோதர்ம துரிதத்தை விளக்கிக் காட்டுவது பற்றி, எமக்குப்பூர்ண சம்மதமுமாக இருக்கும்:-

இதன் சரியான நகலை, நாம் உத்தரவளிக்கும்போது எமக்கு நேரிடும் "காட்பெயிட்" செலவைக்கொத்து, பயபக்தியோடு ஏற்றுக்கொள்ளும்படி 'டிக்ரி' செய்யலாமேனும்."

(இப்படிக்கு) வித்யாச விபூஷணம்,

0—00—000

அக்ராசனப் பிரத்யாசனம்.

அபிமானிகளே! மேற்படி சங்கத்தின் தீர்க்கதர்சி ச-உ-லோ அவர்கள், நமது சபாநாயக்கரான கனம் லோ-உ-ச அவர்கள் செய்த அதிப்பிரசங்கத்தின் ஒரு துணிவைப்பரிபூர்ணமாகக் குறிப்பிட்டும் இருக்கிறார் : அதாவது :-

"கீர்த்தி" என்பது எல்லாவருடைய இதயத்துக்கும் வெகு இதமானது என்று யான் வற்புறுத்துவேன். அதிலும், கவிக்கீர்த்தி என்பது, எமது வாணர்க்கே அடுத்தது. இதிலும், வசீகரக்கீர்த்திக்கு வியவகார பாத்ரம், எமது அழகரன்றோ? நிலம், நீர், ஆகாயமாமெதிலும் வேட்டைப்பிரியர் எமது வீரரெனக்கூறுவதில் உமக்கு யாதொரு சந்தேகமும் இருக்கக்கூடாது. எனக்கோ, மனிஷிய ஆசையும், மனுஷிய வாஞ்சையும் மேலிட்டிருப்பதை, நீங்கள் மறுக்கமாட்டீர்கள்-(கரகோஷம்); மனுஷிபப்பேதமை யென்னலாம்-(இல்லை! இரைச்சல்); ஆனால், இதை யான் சொல்வேன், அகங்காரமென்னும் தீயானது எனது இதயத்தைக்கொளுத்துமானால், அது பரோபகாரம் செய்யவேணுமென்ற ஆசையானதால், முற்றிலும் தணிந்து போம். நரஸ்துதி ஒன்றே எனது கவண்; லோகோபகாரமே எனது ஜீவரக்ஷண நிதி. (கரகோஷ விளம்பனம்).

எனக்குக் கொஞ்சம் கர்வமுண்டென்பது எனக்கே தெரியும்-நான் தடையின்றி ஒத்துக்கொள்கிறேன், வேணுமென்றால்எனதுஎதிரிகளும்அதையுபயோகப்படுத்திக்கொள்ளட்டும்- 'வெளவாற்பட்ட' நியாயத்தை லோகா லோகத்துக்கெல்லாம் நிரூபித்ததில் எனக்குக்கிஞ்சித் கர்வமுண்டேயுண்டு; அது பிரசித்தியாயிருக்கலாம், இல்லாமலும் இருக்கலாம். (ஒருத்வனி 'உண்டு'-மெத்த கரகோஷம்). இப்பொழுது காதிற்பட்ட லோகோபகாரியின் மொழியை அநுசரித்து-அது பிரசித்தியானது தான் என்று சொல்வேன்; ஆனால், அக்கியாதியானது இப்பொழுது இதுவரையிற் கண்டுபிடிக்கப்பட்டிருக்கும் பிரபஞ்சயிறுதிக்கெட்டினதென நினைக்க யான் அடையக்கூடிய கர்வமானது, தத்சமயம், எனது ஜீவதசையில் எனக்கு ஏற்பட்டிருக்கும் யோககாலமென, யான் இப்பொழுது நிற்கும் நிலைமையை முற்றிலும் நோக்கவே, ஒரு பெரிதல்ல." (கரகோஷம்.) யானோ ஒரு கேவலன். (இல்லை, இல்லை.) ஆகிலும், என்னை இப்பெரிய கர்யத்திற்றலைப்படுத்தியது, பூஜ்யதைக்கும், அதுபோலவே கொஞ்சம் பங்கத்திற்கும், என்று யான் உணர்ந்திலேன் அல்லேன்: வெளிக்கிளம்புதல், இன்னதாகுமெனச் சொல்லஏலாது நீங்கள் நாற்புறமும் நிதானித்துப்பாருங்கள். உயர்நிலை ரதங்களெல்லாம் தலைகீழ்! குதிரைகளெல்லாம் குண்டோட்டம்! கப்பல்களெல்லாம் சுழல்! ஆவியந்திரங்களெல்லாம் தெறிப்பு! (கரகோஷம். இல்லை!) இல்லை-(கரகோஷம்); இல்லையென்று சொன்ன, அந்த லோகோபகாரி முன்வந்து, இல்லையென்பதைத் தைரியமாக ரூபிக்கட்டும்! (உற்சாக கரகோஷம்)-ஒரு வீணனும் தற்கருத்து நிறைவேறுதவனுமா? அற்பனென்று யான் கருதேன். (உரத்த கரகோஷம்.)

பலிஷ்டன் மறுமொழி கூற எழவே - கனம் ஐயா அவர்கள் என்னையா சுட்டிச்சொன்னது? (அமைதி! அக்ராஸனம் - ஆம்! அல்ல! மேலே சொல்லும்! கிடக்கட்டும்!)

லோ-உ-ச அவர்கள் :- அடக்கவேண்டாம்! இவரையேதான் யான் சுட்டியது. (மெத்த பதபதைப்பு.)

பலிஷ்டன் - "அப்படியானால் கனம் ஐயா அவர்களைப் பொய்யர் என்று தள்ளிவிட்டேன்."

கவிவாணர்- இவையனைத்தும் அக்ராசனத்துக்கே அர்ப்பிதம். (கேள்க்க!) பலிஷ்டர் சொன்னது சரியா?

அக்ராசனம்-சொன்னது பிழைதான்.

பலிஷ்டன் - நான் லோ-உ சங்கக்குழூஉக்குறியாகச் சொன்னதேயன்றி வேறில்லை.

லோ-உ-ச அவர்கள் :- அப்படியானால் சரி! எமது அபிப்பிராயமும் லோ-உ சங்கார்த்தமானது தான். (மெத்த கரகோஷம்).

(இத்துடன் அவதாரிகை நிறைவேறிற்று.)

(இன்னும் வரும்)

VII
ஆசையும் சித்தசுத்தியும்.

உலகத்திற் பிறந்த ஒவ்வொரு மனிதருக்கும் ஆசையென்னும் ஓர் பாசக்கயிறு இயல்பாக ஏற்பட்டிருக்கிறது. குருடன், நொண்டி, மூடன், மூர்க்கன், ஏழை, தனவான், நோயாளி முதலியவர்களெல்லாம், ஆசை யென்னும் மாயையை

நேசிக்கிறார்கள். அவ்வாசையென்னும் பாசமாகியவலையை அகற்றஅவரால்முடியாதுபோலும்! குற்றவாளிகளை விலங்கிட்டுப் பந்திப்பதுபோல், மானவர்களை, ஆசையென்னும் விலங்கால், மாயை என்னும் நீதிபதி பந்திக்கின்றார். எல்லோரிடமும் ஆசை ஒரேவிதமாய் இருக்கின்றதா? இல்லையென்பதுதான் ஆச்சர்யம்! அவித்தையால் ஏற்படுகிற மாயா விசேடத்தை ஒருவாறு அறியவுன்னி, பலவழிகளிற்பிரயத்தினம்செய்து, கோரிய சுகத்தை அடைந்த பின்னும், மென்மேலும் சுகத்தை விரும்பி யோடி யுழல்கின்றான். இதுவே மாயை என்னப்படும். ஆசை என்பது, பலவிதம். அவை :- ஒருவன் சூது வாது செய்தாகிலும், மண், பொன், பெண், இவற்றைத்தேட இச்சிக்கிறான்: இன்னொருவன், என்ன போனாலும் போகட்டும்! என்ன ஆனாலும் ஆகட்டும்! என்று, சூதாட்டம், கட்குடி, இவற்றை இச்சிக்கிறான்: மற்றொருவன் வெட்டியில் இரந்துண்ணலே தொழிலாகத் திரிகிறான். ஆயினும், இவைகளெல்லாவற்றிலும் கடையானது ஒன்றுண்டு. அதுதான் அத்தியாசை யென்பது.

தினந்தோறும் மாந்தர் பலர் இறப்பதைக் கண்டும், அனேகர் தாமிறப்பதில்லை என்றெண்ணி, அனேக வருடங்களுக்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்துகொள்கிறார்கள். உலகில் எத்தனையோ தரம் துன்பத்திலடிபட்டாலும், இதிலேயே இருந்து வாழவேண்டுமெனவும் நினைக்கிறார்கள். இனியும் ஓர் ஆசையுண்டு. அது யாதெனின், உயிர்மேலாசை. மனிதருக்கு பிராணபயத்தை விட வேறேயொன்றுமிராது. தொத்து வியாதி தோன்றிற்றென்றால் பீதி அடைகிறார்கள். கொலை செய்யும் திருடர்கள் வந்தனரென்றால், நடுநடுங்கி இருந்தவிடத்திலேயே உயிரை விடுகிறான். எத்தனை கஷ்ட நஷ்டங்களுக்குட்பட்டாலும் உயிரைவிடுவதில் மனிதன் ரொம்பவும் பரிதாபப்படுகிறான். உயிர் ஒன்றிருந்தால், உடம்புவிற்றுண்ணலாம் என்று மொழிவோரும், நம்மிடையிலிருக்கிறார்கள். மரணபயத்தாற் றவிக்கும் மானவன், தன் சர்வசம்பத்தையும் கொடுத்துப், பிராணனை இரட்சித்துக்கொள்ள நினைக்கிறான். க்ஷாம காலத்தில் உயிரைப்பெரிதாய் மதித்து, மனைவி மக்களை விற்றுண்பவருமுண்டு. சிலர், சாவென்றால் கண்ணீருதித்துக் கவலையடைகிறார்கள்.

தீரனுக்குயிர்திரணசமானம், வீரனுக்குயிர் விருத்தாப்பியம் என்றெண்ணி, சௌரியம் ஒன்றிற்குப் பிராணனும் பெரிதன்று. மூடர்களும் மூர்க்கர்களும் அறிவிலர்களும் உயிரைக்காப்பாற்றுவதில், ஆசை அபிமானம் காட்டுகின்றனர்.* மகான்கள், லோக க்ஷேமத்தின்பொருட்டாய், தங்கள் அரிதாகிய ஜீவ சுகங்களை வெறுத்திருக்கிறார்கள். சந்நியாசிகளாக எண்ணுவோர் ஆரம்பத்திலேயே அந்தப்பதவிக்கு வேண்டிய சாதனங்களைக் கொண்டு நடப்பார்கள். யாரையும் ஆசைவிடாது. ஆயினும், அப்பியாச பலத்தால் அதைத்துரத்திவிடலாம். காமக்குரோத மாத்சரியாதிகளை அடக்குவதுபோல, லௌகீக சுகத்திலுள்ள ஆசையென்னும் மாயாப்பிசாசை நீக்கிவிடவேண்டும்.

எந்த ஆசையானது மனிதனை துரவஸ்தைக்குள்ளாக்குகிறதோ, அதனையே அத்யாசையெனப்படும். ஆசைக்கோரளவில்லை. தனகனக ரத்ன வஸ்துக்களிருந்தாலும், திருப்தி கிடையாது. மென்மேலும் விரும்புவதே துராசையென முன் சொன்னோமே! நியாயாந்நியாம் தெரியாது! புண்ணிய பாவாதிகள் மாயமாகும். பரோபகாரமென்னும் வார்த்தை காதிற்படவும் சகியார்.

ஒவ்வொருவரும் தத்தம் நலத்தையே கருதிக் காரியம் செய்தால், அன்னியர்களின் க்ஷேமத்தை பங்கப்படுத்தினதுபோலாகுமல்லவா? அதிக ஆசையுடையோனுடைய மனோரதம் நிறைவேறாமற் போனால், அவன் பித்துப்பிடித்தாற் போல் திரிவான். சிறுவயது முதல் உபாத்தியாயர் நீதி பாடங்களை யெதற்காகப் படிப்பிப்பது? இளம் இருதயத்தில் உதிக்கும் சிறு ஆசைகள், பிற்காலத்தில் வளர்ந்து கெடுதியைத்தரும் என்பதைத் தெரிவிக்கவே, உபமான உபமேயங்களுடன் குரு கற்றுக்கொடுப்பதெனக் கருதுங்கள். நாம் செய்யும் வேலைக்குத்தக்க கூலிகிடைப்பது போல, நாம் செய்யும் காரியங்களுக்குத் தக்க பலமே நமக்குக்கிடைக்கும். அதிகம் கோரினால் கிடைப்பது துர்லபம். விவேகத்தால், நாம் அபிவிர்த்தி அடையவும் வழிதேடுவது, நன்மையாகும். ஸத் வித்தியா போதகர்களிடம் கல்விகற்றவர்கட்கும், சாமான்ய உபாத்தியாயர்களிடம் படித்தவர்கட்கும், உள்ள வித்யாசங்களைப் பாருங்கள்! ஆசையே மனிதனுக்கு நாசத்தைத் தரத்தக்கதாகும்.

அநேகம் ஜனங்கள், மேற்கூறியது போல், ஆசையாகிய மாயையில் மூழ்கி, அதன் தோற்றமாகிய தேகாதிகளை நாமென்றெண்ணி அபிமானித்து, சிற்றின்ப சுகத்தை நாடி, அதற்காசைப்பட்டு மனமுருகி, கிடைத்தபின் மற்றொன்றை நாடி, அலுப்படைந்து ஜனன மரணத்திற்காளாகி, அநாதி வாழ்நாளை வீணாகக்கழிக்கிறார்கள். அன்றியும், சிலர் அனாதி அவிவேகப்பழக்கத்தால், ஆசைகொண்டு, விவேகம் விண்டு, தேகமே தானென்றும், உலகமேமுக்தியென்றும், பிரமித்துழலும் மனிதனை நோக்கி, தேகம் நீயல்ல-சர்வத்திற்கும் ஆதாரமாயும், சர்வ வல்லவனாயும், எங்கும் பரிபூர்ணமாயும், ஞான சுவரூபியாயுமிருக்கும் ஆத்மாவே நீ - உனக்குப் பிறப்புமில்லை இறப்புமில்லை - வியாதியுமில்லை - துக்கமுமில்லை- நீ தர்மத்தை ஆதரிக்கவும், அதர்மத்தைத்தொலைப்பதற்கும் உரியவன் - ஆசைப்படற்குரியவனல்லை- என்று கூறினால், மனிதன் நம்பாது உழல்கின்றான். இதுவே அத்யாசை. இதைத்தவிர்த்துத் துன்பம் நீங்குங்கள்.

சித்த சுத்தி.

சித்த சுத்தி வழியாக சர்வ சித்தியும் உண்டாகிறது, என்பது பெரியோர்களின் கொள்கை. சாஸ்திரத்தில் விதித்துள்ள கர்மங்களெல்லாம், சித்தசுத்தியின் பொருட்டேயன்றி வேறில்லை. பக்தியும் யோகமும் சித்த சுத்திக்காகவே யேற்பட்டிருக்கின்றன. கலங்கிய தண்ணீரில் நம் நிழலைக் காண முடியாது போல, அசுத்த இருதயமுள்ளவர்கள், ஆத்மாவைத் தரிசிக்க முடியாதென்று பெரியோர்கள் கூறியிருக்கின்றனர். ஆதலின், சித்தத்தைசுத்தமாக வைத்துக்கொள்வதவசியம். சித்தமானது, ஓரிடத்தில் நிலைத்திராமல், எப்போதும் சலித்துக்கொண்டேயிருக்குந் தன்மையையுடைத்தானது. ஒருநிமிஷ நேரமாவது யாதாமொரு பொருளையே நினைத்துக்கொண்டிருப்போமென்று எண்ணினால் ஸ்திரப்படுகிறதில்லை. பலவித சித்த விருத்திகளுண்டாகின்றன.

நமது அறைக்குள்ளிருக்கும் அழகிய ஓர் கிருஷ்ண படத்தையே ஐந்து நிமிஷம், நாம் பார்த்துக்கொண்டிருக்கிறோமென்ற வீரவிரதத்தை கொண்டு; இமை கொட்டாமல் படத்தையே பார்க்கலாம். ஆனால், அதற்குள்ளாக நம்முடையமனம் எங்கேயோ தாவிவிடுகிறது. இதை நிறுத்துவதான உபாயம் ஒன்றைத் தேடவேண்டும். சித்தமானது சிலசமயங்களில் நல்ல விஷயங்களிலும் நாடுகிற வழக்கம். நாம் நம்முடைய காரியங்களால் நமது சித்தத்தை எப்போதும் நல்விஷயங்களிலேயே பிரவர்த்திக்கச் செய்யவேண்டும். திடீரென்று மனதை ஒரே இடத்திலேயே நிறுத்துவது அசாத்தியமாயினும், அதை நல்விஷயங்களில் செலுத்துவது நாளடைவில் சாத்தியமேயாம்.

இங்ஙனம்,

K. S. Ramakrishna Pillay,

Astrologer.

VIII

Critical Notes.

அநுவாத ஆக்ஷேபம்.

எமக்குப் புலப்படாத பெயர்களைப்புனைந்த சிலர், 'மித்திரனிற்' சிற்சில விஷயங்களை அடிக்கடி 3-வது பக்கந்தொடக்கி 6-வது பக்கம்வரைத்தொடர்ச்சியாகப் பிரசுரித்து வருவது, எமது பார்வைக்கெட்டியது. மேற்படியார் கூறும் விஷயங்கள், நமது தமிழ்ப்பாஷாபி விருத்தியைப்பற்றியவளவில், எமக்கு மெத்தச் சந்தோஷத்தை விளைவித்தது. அத்தகையார் கூறும் சில விஷயங்கள் அநேக கல்விமான்களுக்கும் தனவான்களுக்கும் மனவருத்தத்தைக் கொடுக்கத்தக்கவையாயது பற்றி, இதனடியில் யாம் வரைந்தவற்றைச்சற்று கவனித்து, எம்மை மன்னிக்க வேண்டுவம்.

(1) 'செலவு' என்பதை 'சிலவு' எனக்கொள்ளுதல் :- 'சிலவு' என்பது வேறு சொல்; 'ச்லிஷ்' என்பது 'தாது' இதன் தாற்பரியம் 'விச்லேஷணே' அல்லது 'பிரிவு' எனவும், 'ஆலிங்கனே' அல்லது 'தழுவல்' எனவும், பொருள்படும். 'வ' இது 'உத்ரேணே' அல்லது 'கக்குதல்' எனப்பொருள்படும். ச்லிஷ் + வ = 'ச்லிவ' அல்லது 'ச்லவ' இது 'சிலவு' எனத் தமிழிற்றிரிந்து வந்தபதம். இனியேனும் இவர் சந்தேகப்படாமல் இருக்கக்கோருவம். இதிற் பாணினியையும் தமிழாசிரியரையும் சுட்டிற்பெருகும். ஆகலிற் சுருக்கிச்சொன்னேம்.

2. நாடகம் இயற்றுவது : இவர் இவ்விஷயத்தைச் சற்று வெளிப்படக்கூறின், எம்மாலியன்றளவு மறுமொழி வரைவம்.

3. இங்கிலீஷ் பாஷையில் நமது வேதாந்தம் இல்லை எனும் துணிவு :- 'ஆம்ஸ்டர்டாம்' நகரத்தில் ஹூ-1632 நவம்பர் 24-உயில் அவதரித்த 'பரூச் டி. ஸ்பின்ஸொலா' என்னும் மகான் கணித சாஸ்த்ர ரீதியில் வெகு தெளிவாக நிரூபித்திருக்கும் தத்வ சாஸ்திரத்தைச் சற்று 'ஆராய்ந்தறிந்துரைக்க' வேண்டுவம்.

4. எமது பிரபஞ்சப் பத்திரிகையில் யாம் வரைந்த 'இந்தியா தேச மகிமை' போன்றவற்றைத் தாம் வரைந்ததாகப் பிறர் பாவியா வண்ணம், "—" மேற்கோளாக வரைய வேண்டுவம்.

C. R. Padmanabha Iyer,

Editor.

விவசாய அபிவிருத்தி.

சென்ற ஆகஸ்டுமாதத்திய "பிழைக்கும்வழி' என்ற தமிழ்ச்சஞ்சிகை ஒன்று வரப்பெற்றோம். நண்பர்காள்! நீங்களும் யாராவது பார்வையிட்டிருக்கலாம். மேற்படி சஞ்சிகைத் தலைப்பில், ராவ் பகதூர் ஜி. ஸ்ரீனிவாசராவ், பி. ஏ. அவர்களால் "விவஸாய அபிவிருத்தி" என்ற ஒரு வியாஸம் எழுதப்பட்டிருக்கிறது. இதைப்படித்து மெத்த மகிழ்ந்தோம். ஆனால், அவர்கள் சொல்லும் இரண்டொரு சங்கதிகள் மாத்திரம், எமது அபிப்பிராயத்திற்கும், விசாரணை அநுபவத்திற்கும், ஒருவாறு பொறுந்துவதாகக் காணவில்லை. அவையாவன :- மல ஜலாதிகளை வளமாக உபயோகப்படுத்துவது. 1, மீன்களையும் அவ்விதம் உபயோகப்படுத்துவது. 2.

1. மலஜலாதிகளை, நமது தேசத்தில், எமது பார்வைக் கெட்டியமட்டில், தெக்ஷிண கர்னாடக ஜில்லா, மங்களூரில் உபயோகப்படுத்தி வருகிறார்கள். அவிடம் முன்சிபாலிடியாரே, ஒரு தூரமாயுள்ள ஜாகாவில், ஒரு யந்திரம்வைத்து மலத்தைச் சுட்டுப், பின் அகழ்வெட்டி, அதில் மேற்படி சாம்பலைப் போட்டு மூடிவைத்துக், கொஞ்சநாள்கழித்து மண்ணோடு கலந்து பக்குவப்படுத்தி விற்றுவருகிறார்கள். இம்மண்ணிற்கு அவிடம் "சுட்டமண்" என்று பெயர் வழங்குகிறது.

ராயர் அவர்கள் சொன்னமேரை, நிலத்திற்கு மிகுந்தவளத்தைக்கொடுத்து, சஸ்யாதிகளைச் செழிக்கவைத்து, நல்லபலனையும் அளிக்கச்செய்கிறது. இந்தச் 'சுட்டமண்ணை' அதிகக்ஷியாக உபயோகிப்பவர் கொங்கணிக் கிறஸ்துவர்கள். பலன்கள் பார்வைக்குப் பளபளப்பாகவும், புஷ்டியாகவும் இருக்கிறதென்னத் தடையில்லை. மேற்படி பலன்களை, மார்க்கட்டுகளில், பெரும்பான்மையோர் விரும்பக்கொள்வதில்லை. இதன் காரணம் யாதெனக்கேட்டதில், மேற்படி பலன்கள் ருசி இருக்கிறதில்லை என்கிறார்கள் ஆகையால், அவிடம் நாட்டுப்புறங்களிலிருந்து வரும் பலன்களையே, அதிகமாகப்பிரியப்பட்டுக் கொள்கிறார்கள். ஆனால், மேற்படி "சுட்டமண்" போட்டு விளையும் காய்கறிவர்க்கங்களைப்போல், பார்வைக்குப்பக்குவ வைபவத்தை அதிசயிக்கக்கொடுப்பது, வேறு எவ்வர்க்கமும் இல்லை. யாம் அவிடம் மூன்று வருஷம் குடும்ப சமேதராகக் குடியிருந்து வந்திருக்கிறோம். அக்காய்கறிகளைக்கொண்டு மத்தியானம் வைத்த பதார்த்தங்கள், ராத்திரிக்குக் கெட்டுப்போய், வெகு ருசிக்கேட்டைக் கொடுக்கின்றன. நமதுஜில்லாவில் உற்பத்தியாம் காய்கறிகளாற் செய்யும் பதார்த்தங்களோ, மறுநாட் காலைவரை வைத்திருந்தாலும் கெடுவதில்லை. முதல் முதல் இதன் சூக்ஷமமறியாமல் ஏமாந்துபோனோம். பின்னர் அறிந்தமேல், மற்றவர்களைப்போலவே, நாட்டுப்புறத்துக் காய்கறிகளை உபயோகித்து வந்தோம். மேற்படி 'சுட்டமண்'ணானது அத்தேசத்தில் கரும்பிற்கும் உபயோகப்படுத்தப்படுகிறது. இக்கரும்பின் வெல்லமானது, இதர கரும்பின் வெல்லத்தைப்போல் ருசியும் இல்லை, கட்டியுமில்லை; மழைக்காலத்தில் மிகவும் கெட்டுப்புளித்துப்போகிறது. ஆகையினால், மலத்தைச்சுட்டு மண்ணோடு கலந்து பக்குவப்படுத்தி உபயோகிக்கையிலேயே, இவ்விதத் துர்க்குணங்கள் விளைபொருள்களுக்கு உண்டானால், ராயரவர்கள் சொல்லியிருக்கும் பச்சை

முறையை, யாம் எமது நண்பர்களுக்குச், சிபார்சை செய்யக்கூடியதாக இல்லை.

மேற்கூறியது தவிர, மலஜலங்கள் மனிதர்க்கு அமைந்திருப்பது, மற்ற மிருகபக்ஷியாதிகளுக்குள்ள போல் அல்ல. ஒரு வாத தேகத்தின் மலக்குறியும் நீர்க்குறியும், பித்த சிலேஷ்ம தேகங்களின் குறியும், ரோகிகளின் குறியும், இன்னின்ன விதமென்று வாகடாசாரியர்கள் வைத்திய சாஸ்திரத்தில், செவ்வையாக வரையறுத்துளார். ஆகையினால், ரோகிகளின் மலஜலமும், நானாவித த்வந்த தேகங்களின் மலஜலாதிகளும், ஒருங்கு சேர்ந்த வளத்தில், ரோகாநுகரண சத்துக்கள் இல்லாமலிரா. இச்சத்வம் எங்கே போம்? நஞ்சுள்ளநாகம் அழகாயிருப்பதுபோல், இச்சத்துகள் அமைந்த விளைவும் ஏற்படுகிறது. ஆகையால், எமது சிற்றறிவிற் கெட்டியவரை, மலஜலங்களைப் பயிர்க்கு வளமாக உபயோகப்படுத்துவது, கூடாதென்பது எமது அபிப்பிராயம்.

2. மீன்வளம் :- இது, தலைச்சேரியில், சமுத்திரக்கரையில், கருவாடு செய்யும் சர்க்கார் உப்பளத்திற்கு அருகில், தயார் செய்யப்படுகிறது. (Sardine) என்னும் ஓர் வகைச்சிறு மீன்களின் தலையைச்சேர்த்துப் பக்குவப்படுத்துகிறார்கள். இவற்றை வளமாக உபயோகப்படுத்துகிறார்கள். ஆனால், சஸ்யாதிகள் புஷ்டியாக விளைவைக்கொடுத்தாலும், அவைகளில் மீன் எண்ணெய் நாற்றம் பாகம் செய்து சாப்பிடுகையிலேயே காணக்கூடியதாக இருக்கிறது. மீன் தலைகளை, காஸர்கோடு தாலூகா சமுத்திரக்கரை வழியில், புகையிலைப் பயிர்க்கும் உபயோகிக்கிறார்கள். இப்புகையிலைக்குக் காரமே கிடையாது. நமது ஜில்லாப்புகையிலையைப் போல் சிலாக்கியமே இல்லை இது எமக்கு அநுபவம். தவிர, அழுகிப்போன மாம்சசத்துக்களை உபயோகிப்பதாலாகிற சஸ்யாதிகளின் பலன், வைத்திய சாஸ்திர முறையில் வேண்டற்பால தல்லவென்பது எமது அபிப்பிராயம்.

மேற் சொன்னவைகளை வேண்டுமானால் உபயோகத்தால் நன்றாயறியலாம். ஐப்பானியரோ மற்றவரோ உபயோகிப்பதினாலேயே நாமும் அப்படிச் செய்யலாமென்பது எமக்கு அவ்வளவு சிலாக்யமெனத் தோன்றவில்லை. சேஷம் எல்லாம், அவ்வவர் அநுபவத்திற்கும் ருசிக்கும் அடுத்தவையாகையால், இம்மட்டில் நிறுத்திவிட்டோம்.

C. R. Padmanabha Iyer.

IX

இந்தியா சட்ட நிருபண விருத்தாந்தம்.

சிவில் — மைனர் சொத்து.

அலாஹபாத் ஹைகோர்ட்டார் அவர்கள்.

முதல் அப்பீல் 491 : 30-4-09 :- ஒரு மைனர் பேரில் தகப்பனார்பட்ட அடமானக்கடன் தஸ்தாவேஜின் டிக்ரி பெறப்பட்டது. அந்த மைனருடைய சம்ரக்ஷணைக் கர்த்தாவானவன் மைனருடைய சொத்துக்களை அடமானம் வைத்து டிக்ரி தொகையைச்செலுத்திவிட ஜில்லா கலெக்டர் அவர்களை சம்மதம் கொடுக்கும்படி விண்ணப்பம் செய்தான். ஸி. பு. கோ-305-வது வகுப்பின்படி டிக்ரி நிறைவேற்றும் கோர்ட்டார் அவர்களுடைய சம்மதம் வேண்டுமென்று உத்தரவளித்தார். கடைசியாக அப்பீலில் கார்டியன் அண்

டுவார்ட்ஸ் ஆக்டு 29-வது வகுப்பின்படி டிஸ்டிரிக்ட் ஜட்ஜி அவர்கள் சம்மதம் கொடுத்திருக்க வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.

கிருமினல்—அபினி.

லோயர் பர்ம்மா சீவ்கோர்ட்டார் அவர்கள்.

கிருமினல் ரிவிஷன் நெ. 14 B. 1909

மார்ச்சு மாதம் 2-ந்தேதி.

அபின் ஆக்டு 15-வது வகுப்பின்படி, ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குக் கொண்டுபோகப்பட்ட அபினியானது; ஒரு மரக்கலம் நிற்கும் நிலைமையிலிருந்தாலும், 'கொண்டுபோம் ஸ்திதியில்' (in transit) இருந்ததாகப் பாவிக்கப்படும். மேற்படி வகுப்பின்படி, அதனைச்சோதனை செய்யும் உத்தியோகஸ்தன், அம்மரக்கலத்தின் தலைவனுடைய சம்மதமின்றி சோதனை செய்ய அதிகாரமுள்ளவன் அல்ல. அஸ்தமனத்திற்குப்பிறகு உதயத்திற்குள்ளாக மேற்படி தலைவனுடைய சம்மதமின்றி சோதனை செய்யவேணுமானால், 19-வது வகுப்பின்படி அவ்வுத்தியோகஸ்தன் வாரண்டு பெற்று நடவடிக்கை நடத்தவேண்டும், என்று தீர்மானிக்கப்பட்டது.

கிருமினல்.

லோயர் பர்மா சீவ் கோர்ட்டார் அவர்கள் நெ. 519 A-26-1-09.

கிருமினல் புரோசீடியர் கோடின்படி ஒரு எதிரியைப் பிடிக்க இதர ஜனங்களை அனுப்புவதற்கு போலீசார்க்கு அதிகாரமில்லையென்றும், எதிரியானவன், தன்னைப்பிடிக்கவந்த இதர ஜனங்களைத் தடுத்தால், இந்தியன் பினல்கோடின் 225-வது செக்ஷன்படி யாதொரு குற்றமும் செய்தவனாகானென்றும் தீர்மானிக்கப்பட்டது.

சிவில்.

மைனர் பாத்தியம்.

சேர்ந்து வியாபாரஞ் செய்யும் இந்துக்குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர் அந்தக்குடும்பப் பொதுப்பெயரை வைத்துக்கொண்டே தம்முடைய சிநேகிதர் ஒருவருக்குப் பிராமிசரி நோட்டுகள் எழுதிக்கொடுத்தார். அந்த நோட்டுகளால் குடும்பக்கம்பெனிக்கு யாதொரு பிரயோஜனமும் இல்லை. ஆனால் பிராம்சரி நோட்டு பெற்றுக்கொள்ளுவோனுக்கு மட்டும் அநுகூலமிருக்கிறது. இப்படி எழுதிக்கொடுக்கப்பட்ட பிராமிசரி நோட்டுகளின் பேரில் பொதுவாய்க்கூடி வியாபாரஞ்செய்யும் மேற்படி குடும்பத்தின்மீது வியாஜ்யம் கொண்டுவரப்பட்டது. அந்த வியாஜ்யத்தில் மேற்படி எதிபவித்த குடும்பத்தைச்சேர்ந்த மைனர் ஒருவன் அந்த வியாஜியத்திற் குறிப்பிட்ட கடனுக்குத் தன் பங்கு பாத்தியமாகமாட்டாதென்று சொல்லிக்கொண்டான். ஆனால் குடும்பத்திலுள்ள மைனர் பங்கும் பாத்தியப்பட்டதெனவே தீர்மானிக்கப்பட்டது.

6. All. H. I. 263.

சிவில்.

கூட்டுக்குடும்ப ட்ரஸ்டுகளின் மானேஜ்மெண்டு.

ஓர் இந்துக் குடும்பத்தில் பெரியவனாய் யார் இருக்கிறானோ அவனே அக்குடும்பத்துத் தலைவனாவன். அவனே குடும்பப் பிரதிநிதியாவன்; உத்தரவாதத்துடன் குடும்பத்தை நிருவகித்துப் போவோன் அவன்தான். ஆகவே மைனருக்காகவோ மற்றெதற்காகவோ இருக்கக்கூடிய ட்ரஸ்டு பணத்தைப் பாதுகாக்கவும் அவன் ஒருவனே உரியன். அந்தக்கூட்டுக் குடும்பத்தின் ஜுஒனி

யர் மெம்பர்கள் மானேஜ்மெண்டு விஷயத்தில் கையெடுத்தாட சுதந்தரம் பெற்றவர்கள் அல்லர்; ஆனால் சட்ட விதிகளின் பிரகாரம் ஒரு எக்ரிமெண்டு ஏற்படுத்தி மூத்தவரின் அதிகாரம் வரம்பு கடந்து செல்லாபடி குடும்பத்தைச்சேர்ந்த மற்ற மெம்பர்கள் செய்யலாம்.

சிவில்.

மதிராஸ் ஹைகோர்ட்டார் அவர்கள் முன்பாக சிவில் அப்பீல் நெ. 86. 1906 நவம்பர் மாசம் 17-௳ 1908.

தகப்பனார் சம்பாதித்த சொந்த சொத்துக்கள் அவரோடுகூட இருந்த மகனுக்குத்தான் பாத்தியப்பட்டது; மற்ற மக்கள்களுக்கு மேற்படி பாத்தியதை அவ்வளவாகக்கிடையாதென்று தீர்மானிக்கப்பட்டது.

X

தலபுராண வாஸுதேவ முதலியார்.

சென்றமதி பிரபஞ்சத்தில் தலபுராணவாசுதேவ முதலியாருடைய வரலாறு வரையப்பட்டிருந்ததை கண்டுகளித்தேன். அதில் மேற்படியாரது சரிதம் இனியும் உளவேல் தெரிந்தோர்கள் எழுதுவோர்களாயின் அவர்களுக்கு நன்றிபாராட்டுவோமென Mr. (E. K. S. Manian) ஈ. கே. எஸ். மணியன் அவர்கள் கைச்சாற்றின்மேல் வரையப்பட்டிருந்ததால், அவருடைய சரித்தை எமக்குக் கிடைத்தவாறு பிரபஞ்சத்தில் வரைவது வீணாகாதென நினைந்து வரையிறகேந்தினேம்.

தலபுராண வாசுதேவ முதலியார் :-

கொங்குவள நாட்டிற் சிறப்புற்றோங்கிய கோயம்புத்தூரைச்சார்ந்த ஓரோட்டுக் குப்பைச்செட்டிபாளையத்தில் சற்றேறக்குறைய 85 வருஷங்களுக்குமுன் தொண்டை மண்டல வேளாளர் மரபிற் பிறந்த மகா-ள-ஸ்ரீ வாசுதேவ முதலியாரவர்கள் சோழத்தேசத்திலுள்ள ஸ்ரீ திருக்கைலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனத்தில் அக்காலத்தில் மஹா சன்னிதானமாக எழுந்தருளிய ஸ்ரீ திருச்சிற்றம்பல தேசிகரிடத்தில் செந்தமிழ் இலக்கண இலக்கியங்களைக் கற்றுணர்ந்து சமய விசேட முதலிய தீக்ஷைகள் பெற்றுச் சிவஞான சித்தியாயர் முதலிய சமய சாஸ்திரங்களை ஓதியுணர்ந்து, புலவர்திலகமாக விளங்கியிருந்தனர். அக்காலத்தில் வஞ்சிபாளையமென்னும் திருப்பதியில் வசித்த மகா-ள-ஸ்ரீ ஸ்ரீமான் சுப்பிரமணிய முதலியாரவர்கள் வேண்டுகோளின்படி. ஸ்ரீ சுந்தரமூர்த்தி நாயனார், முதலையுண்ட பிராமணச்சிறுவன் உயிர்பெற்று வருமாறு தேவாரத்திருமறை யோதிய திவ்ய க்ஷேத்திரமாகிய ஸ்ரீ அவினாசி கருணாம்பிகையின் மீது ஓர் சதகத்தைச் சிறுவர்களும் வாசித்துப்பொருளுணருமாறு எளிய நடையில் செய்து அரங்கேற்றினார். மேற்படி முதலியாரவர்கள் இப்பிரபந்தத்தின் சொன்னயம் பொருணயங்களையறிந்து பேரானந்தமுடையவர்களாய் பலவகைப்பட்ட செம்பொன்னாபரணங்களோடு மிக்கத்திரவியங்களையும் பரிசாகக் கொடுக்கப்பெற்று, வித்வசிகாமணியானவர் அம்முதலியாரவர்களிடம் விடைபெற்று தமதிருப்பிடஞ்சென்றிருந்தனர். பின்னர் ஸ்ரீ நஞ்சுண்டகூடல், திருநணாவாகிய பவானி, திருமுருகன் பூண்டி இத்தலங்களுக்குப் புராணங்களும், அவினாசி கருணாம்பிகையம்மைப் பிள்ளைத்தமிழ், ஷை-

கலித்துறையந்தாதி, திருப்பேரூர் பச்சைநாயகியம்மன் பந்தடி வருக்கக்கோவை முதலிய பிரபந்தங்களும் செய்தனர். மேற்கூறிய நஞ்சுண்டகூடற் புராணத்தை மைசூரில் அக்காலத்தில் அரசு செலுத்திய கர்த்தர் சாமராஜ உடையார் அவர்கள் முன்னிலையில் அரங்கேற்றி, அவர்களால் குளகபாத்திர பொற்பணமும் முத்துக்குடை முதலிய விருதுகளும் கொடுக்கப்பெற்று, அச்சபையிலிருந்த சமஸ்கிருதம், தெலுங்கு, கன்னடம் இப்பாஷைகளில் தேர்ந்த வித்வான்களுக்கு கைநிறைய வாரி வாரிக்கொடுத்துவிட்டு, முத்துக்குடை முதலிய விருதுகளை மேற்படி நஞ்சுண்ட கூடலில் எழுந்தருளிய நஞ்சுண்டேசுவரர் திருப்பணிக்கே கொடுத்துப், பின் தமதுறைவிடஞ்சேர்ந்து, சில மாணாக்கர்களுக்கு தமிழிலக்கண விலக்கியங்களைக் கற்பித்து, இக்கொங்குநாட்டிற்கு நேத்திரமென விளங்கியிருந்து, பின் ஸ்ரீகண்ட பரமசிவனது திருவடி நீழலையடைந்தனர்

இச்சரித்திரம் கர்ண பரம்பரையாக கேட்டு வழங்கிவந்தபடி ஒருவாறெழுதினேன். இன்னும் நன்றாகத்தெரிந்தவர்கள் அறிவிப்பின், அவர்களுக்கு யான் நன்றி பாராட்டுவேன்.

கருணாம்பிகைசதகம் அரங்கேற்றியபோது ஒரு புலவரால் இயற்றப்பட்ட ஓர்கவியை ஈண்டுதகரிக்கின்றோம்.

அரங்கேற்றுவித்தார் சிறப்பு

(பன்னிருசீர்க் கழிநெடிலடியாசிரிய விருத்தம்.)

தாவிய தரங்கப் பயோததி கடைந்தமுது
தந்ததிரு மாலினெனவே
தவழுமலை மூவுல களாவிவரு தொன்னூற்
றமிழ்க்கட றனைக்கடைந்தே
நாவினொடு செவிமன தின்பமுற வுலகமுள
நாளுந் துதிக்கவேண்டி
நளினப் ரசங்ககவி ராஜபூ ஜிதகுன்றை
நகர்வாசு தேவதீரன்
ஆவலொடு வாரித் திரட்டியீந் திடுமமுத
மானவிச் சதகவுரையை
யபூர்வ நீதிநெறி முறைமைவழு வாதபே
ரன்பன்மெய்த் தொண்டைநாடன்
காவியன் புயன்மிக்க பாகைநகர் மேவுசங்
கரமூர்த்தி யருள்சுபுத்ரன்
கங்கா குலன்சுப்ர மண்யன்மால் கேட்டுளங்
களிமிக் குயர்ந்தனனரோ.

E. V. S. Rao.

சஞ்சிகை வரவு,

வித்யாவிஹாரிணி.— நவீனமாய் எமது நண்பர் ம-ள-ஸ்ரீ சி. என். கிருஷ்ணசாமி ஐயர் M.A., L.T., அவர்களால் துவக்கப்பட்ட "வித்யாவிஹாரிணி" என்னும் மாதாந்தரத் தமிழ்ச் சஞ்சிகை ஒன்றை எமதுமேல் அன்புகூர்ந்து அனுப்பப்பெற்றோம். இவர் ஆங்கிலேய பாஷையிற்றன் முயற்சியால் அடைந்த பாண்டித்தியத்திற்குச் சமதியாக வடமொழியிலும் தென்மொழியிலும் பாண்டித்தியமுள்ளவராகையால், இவருடைய சஞ்சிகை நமது தேசத்தோர்க்கு மிக்க பயனை விளைவிக்குமென்பதில் எமக்குச் சிறிதும் ஐயமில்லை. சஞ்சிகையும் படங்களுடன் இனிதாக அமைத்துளது. இதன் வருஷ சந்தா ரூபாய் 5.

லோகானுகூலன் :—இப்பெயர்கொண்ட வாரப்பத்திரிகையின் ஒன்றிரண்டு பிரதிகளை யதன்பத்திராதிபர் ஸ்ரீமான் கும்பகோணம் S. இராதாகிருஷ்ணையர் அவர்கள் தயைகூர்ந்து அனுப்பப் பெற்றோம். இதில் அமைந்துள விஷயங்களை நோக்கின், இதன் பெயர்க்குச் சமமானதோ மிக்கதோ ஆகிய மற்றொரு பெயர், புனையக் கிடைக்குமெனப் புலப்படாது. இத்துடன் மேற்படி

ஐயாவர்கள் எமது பார்வைக்கனுப்பிய ஜகத்குரு ஸ்ரீ பகவந்நாம போதேந்திர ஸ்வாமிகளின் திவ்ய சரித்திரப் புஸ்தகத்தையும் பெற்றோம். இச்சரித்திரமானது, கேவலம் பாமர ஜனங்களும் குருபக்தியாலடையக் கூடிய பகவந்நாம மகத்வத்தைப், பசுமரத்தாணிபோற் புகட்டக்கூடியதாகவிருக்கிறது இப்புத்தகத்தின் விலை அணா 1. பத்திரிகையின் வருட சந்தா ரு- 2-

---

News and Notes.

வர்த்தமானங்கள்.

கோயமுத்தூர்:—இம்மாதம் 11௳ நமது புதிய ஜில்லா கலெக்டர் மிஸ்டர் ஹர்பர்ட் வ்ரான்வலிஸ் வெப் கில்மென்துரை அவர்கள் இந்த டிஸ்டிரிக்டு சார்ஜ் பெற்றுக் கொண்டார்

காலநிலை:— பிளேக் இன்னும் சமித்தவாரில்லை- மழையும் துளித்துவருகிறது- நமது மங்ளைதங்கிய கவர்னர் அவர்கள் மேற்படி வியாதி பீடித்துள குடிகளைத் தாமே நேரிற்சென்று பார்வையிட்டு குடிகளுக்குப் புத்திசொன்னதைப்பற்றி ஜனங்கள் கொண்டாடுகின்றனர்

திருப்பூர்.—வடதேசத்து பீஜ்பூர்சாந்தப்பாஅவர்களால் சங்கத்வனிகானம் 2. 3 இடங்களில் நடந்தேறியது. கன்னம் கண்டம் இவற்றில் வைத்து மேளதாளங்களுக்கிசைய நாதம் எழுத்தினர். அதோடுகூடி மூக்கின்வழியாகக் குழாய் வைத்து நீரால் ரேசக பூரக யோக சாதனையையும் காட்டினர் கடைசியாக வாயினல் பாஞ்சஜன்ய முழக்கமும் பயங்கரமாசச் செய்தார் ஜனங்களெல்லாரும் மிக ஆச்சரியமடைந்து மகிழ்ந்தனர்,

---

மீன்வர்த்தி:— அலாஸ்காவில் சிலவிடங்களில் ஓர்வகை மீன் கிடைப்பதாகவும், அது காய்ந்தபின், மெழுகுவர்த்திபோல் உபயோகப்படுத்தப்படுவதாயும் 'லோகாநுகூலன்' வரைகிறது.

தேனீ.—குடகுதேசத்தில் அந்நாட்டார், பானைகளைதுவாரமிட்டு லவங்கப்பட்டைவாசனை மெழுகுபூசி, சந்தடியில்லாவிடம்வைத்துத், தேனீக்களை அணையப்பழக்கித் தேனெடுக்கிறார்கள் என்று பத்திரிகைகள் கூறுகின்றன, இது அசாத்தியமென நினைக்கஇடமில்லை

ஆகாயக்கப்பல்—ஐரோப்பியர் ஆகாய யாத்திரைவிஷயமாகக் கண்டுபிடித்திருக்கும் யந்திரங்களைவிட மேன்மையான யந்திரம் ஒன்றை நிர்மாணிக்க மிஸ்டர், கே. எல சரங்ஹானி என்னும் இந்திய இஞ்சனியர், பிரயத்நப்படுகிறாராம் இது 24மணிநேரத்தில் 2000 மைல்தூரம் ஆகாயத்தில் 50பேரை ஏற்றிச்செல்லக்கூடுமாம்- நாளடைவில், பூர்வம் நமது கதைகளெல்லாம், பொய்யெனவொட்டாத்திருஷ்டாந்தமாமென்று எதிர்பாக்கிறோட்-

---

சென்னை ஹைகோர்ட்டு ஜட்ஜி நியமனம்— ஆனரெபில் மிஸடர் V- கிருஷ்ணசாமி ஐயரவர்கள் 8வது ஜட்ஜியாக நியமிக்கப்பட்டு, ஷை ஸ்தானத்தை வகித்து வருகிறார்-

---

ஈரோட்டில் நடந்த அக்ரமம்—சுமார் 6, 7 வயதுள்ள ஓர சிறுபெண்ணை, 25வயதுள்ள வாலிபனொருவன் பகற்காலத்தில் தின்பண்டங்கள் கொடுப்பதாகக், இட்டுக்கொண்டுபோய் வீட்டில்வைத்து பலாத்காரம் செய்யப் பெண்ணின் கூக்குரல் கேட்டு அண்டைவீட்டு ஜனங்கள் பிரவேசித்தபொழுது பெண் அழுதுகொண்டே சங்கதிகளைச்சொல்ல மேற்படியான் சம்மதித்ததாகவும் உடனே சின்னங்களுடன் ஆசுபத்திரிக்கனுப்பிப் போலீசார்வசம் ஒப்புவித்திருப்பதாகவும் வதந்தி. இஃது உண்மையாயின் மிருகத்தன்மையினுங்கடைப்பட்ட இத்தகைய நடத்தையை அடக்கவேண்டியதென்பது சொல்லாமலே விளங்கும்-

தீபாவளிகாலம் வந்துவிட்டது!

காசி பட்டுப் பீதாம்பரங்கள்.

சுத்தமான பட்டு ! சகாயவிலைகள் !! நாணயமான ஜரிகை !!!

பிடித்தமில்லாததைத் திருப்பிப்பெற்றுக்கொள்வோம்.

கீழேகண்ட பட்டு தினுசுகள் எல்லா நிறத்திலும் கிடைக்கும்.

பட்டு சேலைகள்.—16 முழம் நீளம் $2\frac{1}{2}$ முழ அகலம் விளிம்பும் முந்தியுஞ் ஜரிகை வேலைகள் உடல் சாதா, விலை ரூபாய் 20 முதல் 50 வரை.

அதேமாதிரி சேலை உடலிலும் ஜரிகைப்பூ புட்டா போட்டது. ரூபாய் 25 முதல் ரூபாய் 100 வரை.

ரவிக்கைகள் —விளிம்பும் முந்தியும் ஜரிகை வேலைகள் உடல் சாதா ரூபாய் 2முதல் ரூபாய் 8 வரை.

உடலிலும் புட்டா ஜரிகை பூவேலைசெய்தது ரூபாய் 3 முதல் 20 வரை.

துப்பட்டாக்கள்.— 6முழ நீளம் $2\frac{1}{2}$ முழ அகலம் விளிம்பும் முந்தியும் ஜரிகை வேலை உடல் சாதா ரூபாய் 8 முதல் 25 வரை.

அதேமாதிரி உடலிலும் சரிகை பூவேலைகள் ரூபாய் 14முதல் 50 வரை.

சவுக்கங்கள்.—$2\frac{1}{2}$ முழ நீளம் $2\frac{1}{2}$ முழ அகலம் சுத்தி ஜரிகை மூலையில் மாங்காய் ரூபாய் $6\frac{1}{2}$முதல் 15வரை.

அதேமாதிரி உடலிலும் பூக்கள் போட்டது ரூபாய் 9முதல் 30வரை.

வெண்பட்டு வேஷ்டிகள் — 6, 7. 8, 9, முழம் நீளம் $2\frac{1}{2}$, $2\frac{3}{4}$, 3 முழம் அகலம் சுத்த வெண்பட்டு கோயமுத்தூர் வேஷ்டிமாதிரி சிகப்பு சன்னக்கம்பி போட்டது விலை ரூபாய் $8\frac{1}{2}$ முதல் 20 வரை, அதேமாதிரி வேஷ்டிகள் சிகப்பு சன்னக்கம்பிக்குப் பதிலாக ஜரிகையால் சன்னக்கம்பி போட்டது ரூபாய் 12முதல் 30 வரை.

ஷை சவுக்கங்கள்.— $2\frac{1}{2}\times2\frac{1}{2}$ முழம் சிகப்புக் கம்பிக் கரை போட்டது ரூபாய் 5முதல் 8வரை. ஜரிகைக் கம்பி போட்டது ரூபாய 9முதல் 15வரை.

ஷை. வெண்பட்டு வேஷ்டிகள் — ருத்திராக்ஷரக்கரை போட்டதும் அதேவிலைக்குக கிடைக்கும்.

பட்டுத தலைக்குட்டைகள்,— $4\frac{1}{2}\times4\frac{1}{2}$ முழம் சதுரம் வெண்பட்டு ஜரிகைக் கரை ரூபாய் 13 முதல் 25 வரை எல்லாக் கலரிலும் கிடைக்கும், மத்தியில் ஜரிகைப்புட்டா பூ போட்டும் கிடைக்கும்.

வைதீகர்களுக்கு கம்பிளி மடிதாவளிகள்.— 6. 7, 9, 12, 15 முழம் நீளம் அணா 10 முதல் ரூபாய் 5வரை.

சுத்தமான கம்பளி போர்வைகள் — 6 முழம் நீளம் 3 முழம் அகலம் எல்லா நிறத்திலும ரூபாய் 5 முதல் 8, வரை.

காஷ்மீர் கம்பளி நயம் சால்வைகள்.— ஷை அகல நீளம் எல்லா நிறத்திலும் சாதா ரூபாய் 8முதல் 15 வரை பட்டினால் விளிம்பும் முந்தியும் ஜரிகைவேலைசெய்தது மூலையில் மாங்காய் போட்டது ரூபாய் 10 முதல் 20 வரை. ஜரிகையில் அதேமாதிரிவேலைசெய்தது ரூபாய் 12 முதல் முதல் 50வரை.

உருத்திராக்ஷங்கள்.— 6 முகம் 33 உள்ள மாலை ரூபாய் 1முதல் 5வரை 7, 8, 9, 10, 11, 12, 13, 14, 15, 16 முகம் தனி மணிகள் ரூபாய் 5முதல் 25வரை. 108 கொண்ட ஜபமாலை அணா 5முதல் ரூபாய் 5வரை.

வயிரவர் காசிக்கயிறு.—1 கெ. 100க்கு ரூபாய்3 2கெ ரூபாய் $2\frac{1}{2}$, 3 கெ. ரூபாய் 2, ஷை சிறிது அணா 6, அதிக சிறிது அணா 4.

பெண்குழந்தைகள் விளையாடும் பித்தளை பாத்திரங்கள் செட்டு.— பித்தளை வெங்கலத்தால் செம்பு, குடம் கரண்டி முதலிய 27 சாமான்கள் அடங்கியது, சிறிது ரு. 2, பெரிது ரூபாய் 4.

நயம் பால்காயம்.—சுத்தமானது தோலா 1க்கு அணா2

சகலவிதமான ஜர்மன் சாமான்களும் யானை தந்தம் காப்புகளும் கிடைக்கும்.

தளுக்குப் பொட்டு,—என்ற குச்சிலியப் பொட்டு 1000ம் ரூபாய் 1-4-0.

விலை ஜாப்தா இனமாக அனுப்பபடும்.

சிங்கப்பூர். பினங்கு, முதலிய வெளிதேசத்தார் ஆர்டருடன் முன்பணம் அனுப்பவேண்டும்.

கடிதங்கள் தமிழில் எழுதலாம்-

விலாசம்:— மானேஜர்,
பட்டுப் பீதாம்பரக் கம்பெனி, காசி.
BENARES CITY.

The Coimbatore Friends' Association (Limited.) Printers.

கோயமுத்தூர் பிரண்ட்ஸ் அசோஸியேஷன் (லிமிடெட்.) அச்சுயந்திரசாலை.

இக்கம்பெனியின் மூலதனம் ரூ. (10,000) பங்கு 1க்கு 5-ரூபாய் வீதம் (4000) பங்குகளாகப்பிரித்து, இந்தியன் கம்பெனீஸ் 1383 வருஷத்திய 6-வது ஆக்டுப்படி 1908 வருஷம் மே மாதத்தில் ரிஜிஸ்தர் செய்து நடத்தப்பட்டு வருகிறது.

இக்கம்பெனியில் இங்கிலிஷ் தமிழ் இரண்டு பாஷைகளில், நேர்த்தியாய் பல கலர்களில் அச்சிடுவதும் கில்ட்செய்வதும்பாங்குகளுக்கும்மண்டிகளுக்கும் கணக்குப்புத்தகங்கள் முதலானதும் தயார்செய்து தோல்காலிகோமுதலிய பயிண்டும் செய்யப்படும். இப்போது அனேக பங்குகள் சேர்ந்திருக்கிறது. கொஞ்சம் பங்குகள்தான் பாக்கியிருக்கிறது. இஷ்டமுள்ளவர்கள் மேற்படி கம்பெனியின் மானேஜருக்கு எழுதி அப்ளிகேஷன் பாரங்கள் தருவித்துக்கொள்ளலாம். ரூல்ஸ் புக்குவேண்டுவோர் 4 அணாஅனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

இக்கம்பெனியானது நிர்வாகசபையார் அவர்களால் நடத்தப்பட்டுவருகிறது. 1908 வருஷம் மே மாசம்முதல் 1908 வருஷம் டிசம்பர் மாசம் 3-தேதிவரை கூடிய 8 மாதத்திற்கு மாதம் 1க்கு, 100க்கு ரூ. 3-9-5வீதம் லாபம்தேறியிருக்கிறது.

இதன் பிராஞ்சு ஆபீஸ் திருப்பூரில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது.

ஜி. அனுமந்தராவ்,
மானேஜர்.

விளம்பரம்.

ஸ்ரீ இதனால் சகலமான கனவான்களுக்கும் தெரியப்படுத்துவது யாதெனில்,

கோயமுத்தூர் இரங்கேகவுண்டன்வீதி (சின்னக் கடைவீதி) மேல்புரம் சிரேணியில் 487, 488 நெ. கதவிலக்கமிட்ட மெத்தைக்கட்டடத்தில் புதியதாக ஒரு கரூர் ஜவுளிக்கடையில் சேலம், ஜலகண்டாபுரம், தஞ்சாவூர், கும்பகோணம், ராசிபுரம், பவானி, நரசிங்கன்பேட்டை தாராபுரம், குற்றாலம், கொறநாடு, அய்யம்பேட்டை, காஞ்சீபுரம், ஆரணி, மதுரை, உப்பாடை, காக்கிநாடா, நெல்லூர், சென்னை, பனாரஸ், உள்ளூர் முதலிய இடங்களில் தயாராகும் முதல்தரமான ஜவுளி தினுசுகளை சுவல்ப லாபத்திற்கு கரூர் விலைக்கு விற்கப்படும்.

மேற்படி கடையில் விற்கும்படியான சரக்குகள் நயமாயும் கெட்டி சாயமுள்ளதாயுமிருக்கும். கோறும் சரக்குகளில் வித்தியாசமும் மாறுபாடுமில்லாமல் விற்கப்படும். எங்கள் கடையிலிருக்கும் சரக்குகளை எங்கள் ஏஜண்டுகள் மேற்படி இடங்களுக்குச் சென்று எங்கள் கடைக்கென்றே தயார்செய்யப்பட்டிருப்பதால் நெசவு அழுத்தமாகவும் சரக்குகள் திடமாகவும் விலை சரசமாகவுமிருக்கின்றன. எல்லாருடைய அநுகூலத்தின்பொருட்டே யாவர்க்கும் ஒரே விலையாக சுவல்ப லாபத்திற்கு விற்கவேண்டுமென்பதே எங்கள் முக்கிய கருத்து. இன்னும் வேண்டிய விஷயங்களுக்கு எங்கள் கடையின் ஏஜண்டுகளாகிய மகா-ா-ஸ்ரீ K. தேவதத்தய்யர், B. வரதராஜுலுசெட்டியார் இவர்களிடத்தில் நேரில் கேட்டுத்தெரிந்துகொள்ளலாம்.

☞ நல்ல முதல்தரமான கஸ்தூரியும் விற்கப்படும்.

V. R. K. & Co.,
Cloth Merchants & Commission agents,
Coimbatore and Vellakkener.

விளம்பரம்.

கிராம உத்தியோகஸ்தர்களைக்குறித்த சட்ட புஸ்தகம்.
(வினாவிடை)
1, 2-வது பாகங்கள்.

கிராமமுன்சீபுகள், கர்னங்கள், கிராம உத்தியோகஸ்தர்களைக்குறித்த ஸ்பெஷல் டெஸ்டு பரிக்ஷைக்குப் படிக்கும் வித்தியார்த்திகள், கிராம முன்சீப் கோர்ட்டுகளில் வக்கீல்களாகத் தொழில்புரிகிறவர்கள், மேற்படி கோர்ட்டுகளில் வழக்குகள் நடத்தவேண்டிய கக்ஷிக்காரர்கள், மற்றுமுள்ள ஜனங்கள் முதலிய எல்லோருக்கும் தெரிவித்துக்கொள்கிறதாவது:—

சென்ற சிலவருஷங்களுக்குள் கிராம முன்சீபு கோட் என்றும், கிராமமுன்சீபுபோதினி என்றும், ரெவின்யூ கோட் மானுபல் என்றும், கிராமமுன்சீப் கோட் கம்பிளீட் மானுயல் என்றும் இப்படிப்பற்பல பெயர்களுடன் அநேக புஸ்தகங்கள் விஷயமான நோட்டீசுகளையும் புஸ்தகங்களையும் உங்களில் அநேகர் பார்த்திருப்பீர்கள் அந்த புஸ்தகங்களில் அநேகம தமிழிலிருக்கிற (கவர்ன்மெண்டாரவர்களால் ஜில்லா கெஜட்டில் பிரசுரஞ்செய்யப்பட்டிருக்கிற) சட்ட புஸ்தகங்களுக்கு நகலாகவே இருக்கிறதேதவிர வேறில்லை. இதுவரை வெளியான அப்படிப்பட்ட புஸ்தகங்களில் கிரிமினல் விஷயங்களை அடங்கியுள்ள திருநெல்வேலி வக்கீலொருவரால் எழுதப்பட்ட "கிரிமினல் வியவஹாரசங்கிரகம்" என்னும் புஸ்தகத்தைத்தவிர எனக்குத்தெரிந்தவரை சட்டஞானமுள்ள கனவான்களின் நல்லபிப்பிராயத்தைப் பெற்ற புஸ்தகங்களே இல்லை.

ஜனங்களுடைய பொதுநன்மையை உத்தேசித்து, கவர்ன்மெண்டாருடைய உத்தரவின்படி 1895 வருஷத்தில் தயார்செய்யப்பட்டு கிராம உத்தியோகஸ்தர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற சட்ட புஸ்தகத்தில் I, 2வது பாகங்களை மேற்படி வருஷத்துக்கு பின்னிட்ட மாறுதல்களை அனுசரித்தும், ஜில்லா நிலையான உத்திரவுகளில் முக்கியமானவற்றையும், இந்த தேசத்து முத்திரைக்கடுதாசி ஆக்டு, கோர்ட்டு கட்டண ஆக்டு, சாக்ஷி ஆக்டு, கால நீர்ணயச் சட்டம் முதலியவைகளில் கிராம உத்தியோகஸ்தர்களுக்குவேண்டிய பாகங்களையும் அவற்றிற்கு பொருத்தமான இடங்களில் அமைத்தும் பாஷை நடை கடினமாயிருக்கிறவிடங்களில் சகலருக்கும் தெரியும்படியான சாதாரண வார்த்தைகளால் அவற்றிற்கு அர்த்தஞ்சொல்லியும், படிப்போருக்கு விஷயங்கள் நன்றாய் மனதில் பதியும்படியாக வேண்டிய இடங்களில் உதாரணங்களை எடுத்துக்காட்டியும் வினாவிடை ரூபமாக எழுதியிருக்கிறேன்.

கிராமக் கோர்ட்டில் வைக்கவேண்டிய ரிஜிஸ்டர்கள் ஷை கோர்ட்டார் அனுப்பவேண்டிய சம்மன்கள், நோட்டீஸ்கள், கட்டளைகள். ஸ்டேட்மெண்டுகள், ஷை கோர்ட்டார் எழுதவேண்டிய டிக்ரிகள், இஸ்தியார்கள் கக்ஷிக்காரர்கள் கொடுக்கவேண்டிய பிளெயிண்டுகள், மனுக்கள் முதலியவற்றிற்கெல்லாம் மாதிரிகளும் எழுதிக்காட்டப்பட்டிருக்கிறது.

இது அச்சிடப்படுவதற்குமுன் பார்வையிட்ட கோயமுத்தூர் ஜில்லா கலெக்டர் கனம்பொருந்திய லேபனல் வைபர்ட்டு துரையவர்கள் சந்தோஷப்பட்டு அச்சிடும்படி என்னை உற்சாகப்படுத்தினார்கள். தவிர கோயமுத்தூர் பென்ஷன் சப் ஜட்ஜி ம-ா-ஸ்ரீ T. இராமசாமி ஐயங்காரவர்களும், சத்தியமங்கலம் தாசில்தார் ம-ா-ஸ்ரீ C. இராஜகோபாலாச்சாரியார் அவர்களும் கோயமுத்தூர் ஹைகோர்ட்டுவக்கீல் ம-ா-ஸ்ரீ B வெங்கடாசலமுதலியாரவர்களும்சிறந்த அபிப்பிராயங்கள் கொடுத்திருக்கிறார்கள்.

நல்ல கடிதத்தில் தெளிவான எழுத்துக்களில் அச்சிடப்பட்டு 204 பக்கங்களுள்ள இப்புத்தகத்தின் விலை ரூபாய் 1-0-0 தபாற்கூலி அணா 4 "பிரபஞ்சம்" பத்திரிகையின் சந்தாதாரர்களுக்கு தபாற்கூலி உள்பட ரூ 1-3-0க்கு கொடுக்கப்படும். சந்தாதாரர்கள் தங்களுடைய சந்தா நெம்பரைக் கண்டு பெயர், விலாசங்களை தெளிவாய் விலாசத்துக்கெழுதினால் வி. பி. போஸ்டு மூலம் அனுப்பப்படும்.

K. N. ரங்கய கவுண்டர்,
கிராம முன்சீப், கம்புளியம்பட்டி.
விஜயமங்கலம் போஸ்டு, கோயமுத்தூர் ஜில்லா.

ஓர் முக்கிய அறிவிக்கை.

சகல சுகுண தனசம்பன்னர்களான எமது தேசாபிமானிகளே! இக்கோயமுத்தூர் ஜில்லாவில் திருப்பூரானது வர்த்தக விஷயத்தில் ஒரு முக்கியமான ஸ்தலமாயிருப்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயம்- இது ஒரு ரயில்வே ஸ்டேஷனாயிருப்பதுமன்றியில் ஈரோடு, சத்தியமங்கலம், கோபிசெட்டிபாளையம், பவானி, புளியம்பட்டி, சென்னிமலை, ஊத்துக்குழி, தாராபுரம், காங்கயம், உடுமல்பேட்டை, நகமம், பொள்ளாச்சி, கோமங்கலம், சூலூர் பிர்க்கா கிராமங்கள், பல்லடம, திருப்பூர் பிர்க்கா கிராமங்கள், ஆகிய இவற்றின் மத்தியிலுமிருக்கிறது. மெற்படியூர்களிலிருந்து விளையும் பருத்தியானது இவ்விடம்கவராமல் வருகிறது- இவ்வூரில் பஞ்சரைக்கும் கம்பெனி ஒன்றும், பஞ்சு மூட்டைசெய்யும் கம்பெனி ஒன்றும், ஆக இரண்டுதான் இருக்கிறது. மேற்படியூரிலிருந்து பருத்தியைக் கொண்டுவந்து மூட்டை கட்டுவதற்காக மாத்திரம் திருப்பூர் உபயோகமாகிறதென்றால், இதைவிட மனோவருத்தத்தைக் கொடுப்பதும், காரியாலோசனையில்லாததும், வேறு ஏதாவது உண்டா? ஐயா! மேற்படி ஊர்களில் கனவான்கள் இல்லையா? தனவான்களில்லையா? ஆலோசனை புத்தி சக்தி சாமர்த்தியமுள்ளவர்கள் யாவரும் இல்லையா? எவ்வளவோ புண்ணியவான்கள் இருக்கிறார்களே; நமது தேசம் பாதாளத்திற்குப் போகவேணுமா? புண்ணியவான்கள் எல்லாவரும் ஒருமைப்பட்டு, ஒரு நூலாலீசு எற்படுத்துவது உசிதமல்லவா? சுமார் 1250000 ரூபாய் மூலதனம் ஏற்படுத்தி 10000பங்குகளாகப் பங்கு ஒவ்வொன்றுக்கும் 125 ரூபாய் வீதம் சேகரம் செய்வது முடியாத காரியமா? கேவலம் 15 ரூபாய் கந்தாயமுள்ள குடியானவனும் பங்காளியாகலாமே, ஏழை எளிமையர் 1000பேர் மரியாதையாகப் பிழைக்க வழியேற்படுமே. முதலாளிகளுக்கு லாபம் கிடைக்கமாட்டாதென்று ஒரு சம்சயம் ஏற்படலாம், இவ்விடம் பருத்தியைக்கொண்டுவரும் செலவையும், பிறகு அப்பருத்தியைப் பஞ்சாகப் பண்ணி நூல்செய்ய இதரவிடங்களுக்கு அனுப்பும் செலவையும், மறுபடியும் அந்த நூலைத் தருவிக்கும் செலவையும், பார்த்தால, எவ்வளவு குறைந்தாலும் 100க்கு மாதம் 1க்கு 3 ரூபாய் லாபத்திற்குக் குறைபடாதென்பது எமது அபிப்பிராயம். ஆகையால் நமது தேசாபிமானிகள் யாவரும், அவரவர் சம்மதத்தை உடனே அடியிற்கண்ட விலாசத்திற்குத் தெரிவிக்கக் கோருகிறோம் மேற்படி கம்பெனியைச் சட்டப்பிரகாரம் ரிஜிஸ்டர் செய்வித்து 'லிமிடெட்' ஆக்செய்து தொழில் நடத்திவரலாம். மேற்படி சம்மதம் தெரிந்தமேல் இதரவிஷயங்களுக்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்து விவரமான நோட்டீசு அனுப்பப்படும்.

பிரபஞ்ச பத்திரிகை எடிடர் திருப்பூர் என்று மேல்விலாசம் எழுதியனுப்பவும்.

14—10—1909. அ. கெ. ற, ச. வே. வே. பெ. ச. ந. ல. வெ., ஜி. ஹ.

THE WORLD.

REGISTERED. M. 823. **பிரபஞ்சம்.**

பிரபஞ்ச தர்மம், நடவடிக்கை, சட்டம், வித்தியா விநோத முதலிய
வற்றைப்பற்றிய ஓர் மாதாந்தரத் தமிழ்ச்சஞ்சிகை.

ஜி. ஹனுமந்தராவ்,
பத்திராதிபர். (*Proprietor.*)

கோயமுத்தூர் பத்மநாப ஐயர்,
(*Editor & Publisher.*) பிரசுரகர்த்தா.

வருஷ சந்தா ரூ.	2	4
6 மாதத்திற்கு ...	1	2
பிரதிசஞ்சிகை ...	0	3
வெளிநாட்டுத் தபாற் கூலி பிரத்தியேகம்.		

கலி 5011.
சௌமிய-௵ கார்த்திகை-௴.
NOVEMBER 1909.

புஸ்தகம் 1.
சஞ்சிகை 6.

கடவுள் வணக்கம்.

பத்ரானனப் பரமாவனைப் பணியாவருப் ரபஞ்ச
மித்ராளுயர் மித்ரம்மென மிளிராவரு மெனவே
சித்ராவினி லுத்தாரகச் சிந்தாநலங் களிந்தே
தத்ராவரு தருமாவனைத் தமியேன்மற வேனே.

நேயர்களே! எமது உத்தேசமின்னதென்று இன்னும் அநேகர் அறிந்திலர். ஆகையால், ஒவ்வொருவர் ஒவ்வொரு விதமாக அபிப்ராயம் கொள்கிறார்கள். "குணகடல் குமரி குடகம் வேங்கடம்" ஆகிய நான்கெல்லையிற்பட்ட இலக்கண விலக்கியங்கள் பலவுள. இவையன்றி அநேக சஞ்சிகைகளும் பத்ரிகைகளும் பிரசுரிக்கப்பட்டு வழங்கிவருகின்றன. ஆனால், ஏதோ "கன்னாப் பின்னா மன்னா தென்னா" என்றபோல, தமிழ் வியாபகமானது, தற்காலத்துக்கு இன்றியமையாத தொழிற் கல்வியைப் புகட்டும் புறபாஷை நூல்களை ஆராய்ந்துணரப் போதுமான அவகாசமமைக்கத்தக்க, "திட்டம் நுட்பம்" சிறக்குமாறு, இதுகாறும் யாவராலும் "சுருங்கச் சொல்லப்படாமையாலும், நமது தேச நூல்களில் அரசியற்கும் லௌகீக விருத்திக்கும் வேண்டியவற்றை விளக்கக்கூடிய நூல்கள் இல்லையென்னுங்குறையை ஒருவாறு நிவர்த்திக்க முயல்வது உசிதமாகையாலும், ஆங்கிலேயத்திலோ சம்ஸ்க்ரதத்திலோ அமைந்துள்ள நாடகங்களைப்போன்று கவியாகவும் நடையாகவும் விளங்கக்கூடிய "இழைபு" என்னும் அழகமைந்த நாடகங்களில்லாக்குறையை நீக்க முயல்வது சிறப்புடைத்தெனத்தோன்றினமையாலும், நமது பிரசுரகர்த்தரின் கருணையைப்பெற்று இச்சஞ்சிகையைத்

தொடங்கலானேம். இவர் பவானி பாலபாரதி முத்துசாமி ஐயர் அவர்களிடம் பயின்று தமிழிற் றேர்ச்சி பெற்றவர் என்பது பின்வரும் சாத்துக் கவிகளால் அறியவரும்.

கோயமுத்தூர் காலேஜ் தமிழ்ப்பண்டிதர்

கும்பகோணம்

R. சபாபதிபிள்ளையவர்கள் இயற்றியது.

பூமலி சந்தனக் காமலி பொதியத்
திருந்தவன் றன்பா லருந்தமி ழுணர்ந்த
வொல்காப் பெரும்புகழ்த் தொல்காப் பியமுனி
பல்கா லாய்ந்துசொல் யாப்பி லக்கணம்
விரிந்துள வகையைத் தெரிந்து சிறுர்கள்
கற்றுணர் பொருட்டுத் தெற்றெனச் சுருக்கிச்
சொன்னயம் பொருணயந் துன்னுபு கிடக்கப்
பன்னு வலர்க ளென்னரும் வியப்ப
ஆடியெத் தகைய நாடிய பொருளெலா
மெளிதகங் காட்டல்போற் களிமகிழ் வெய்திச்
சூத்திர மாக யாத்துத் தந்தனன்
இத்தகு சீர்த்தி யுத்தமன் யாரெனில்
நிதிக்கோன் பதியென மதிப்போர்க் குணர்த்துஞ்
செல்லாச் செல்வ மெல்லாஞ் செறியும்
பொன்னிமா நதிசூழ் மன்னுசீர்ப் பவானி
யென்னுமா நகர்வரு பன்னூற் கேள்வியன்
ஞால மதிக்கும் பாலபா ரதியெனு
முத்துச்சா மிப்பெயர் மெய்த்தமிழ்ப் புலவன்
இடவயிற் பயின்ற திடனுறு மறிஞன்
மாமறை யந்தண ரோமவெம் புகையை
முகிலெனக் களிப்பி னகவுமா மயிலினம்
மலைபுரை மாடமீ துலவுநன் மகளிர்தஞ்
சாயல்கண் டுள்ள மேயநா ணகனு
லோடிப் பொருப்பிடைக் கூடுங் காட்சிமா
நத்தூர் கோய முத்தூர் மேயோன்
பூதலம் பரவு வேதியர் குலமணி
கற்றநூ னெறிநடை பெற்றிடு தூயன்
நலனெலா மொருங்கே யிலகுறு முளத்தன்
எத்திறத் தோரும் புகழும்
பத்ம நாப னெனும்பா வலனே.

திருவிடை மருதூர் வித்வான் மகா-ா-ஸ்ரீ

கோவிந்தசாமி பிள்ளையவர்கள்

இயற்றியது.

கங்கையணி கடவுளர்நங் குறுமுனிவற்
  கறிவுறுத்த கரைகாண் கொண்ணுத்
துங்கமுறு தமுழுதநி யொருங்குண்ட திரண
  தூமாக்கி னிப்பேர்
பங்கமில்மா முகில்பொழிதொல் காப்பியம்பல்
  காப்பியத்தும் பரந்து நின்ற
சங்கவியாப் பியறனையெவ் வழகுமுறச்
  சூத்திரத்திற் றந்திட் டானல்.

அன்னவன்யா ரெனிற்பால பாரதிமுத் துச்சாமி
  யையன் றன்பால்
என்னபல விலக்கணமு மிலக்கியமுங் கற்றவற்றி
  னிறுதி கண்டோன்
முன்னமறை யவர்திலகன் மொழிமறையின்
  வழிவிலகா முறைமை யாளன்
பன்னவருங் கோயநகர்ப் பத்மநா
  'பப்பெயர்கொள் பாவ லோனே.

இவையன்றியும், இவருடன் சகபாடியாய "வித்யா விகாரிணி" பிரசுரகர்த்தர் பிரம்மஸ்ரீ C. N. கிருஷ்ணசாமி அய்யர் M. A. L. T., அவர்கள், மேற்படியார்க்குக் கீசகவத நாடகமியற்ற விடுத்த கடிதத்தின் ஓர் பாகத்தை இதிற் சுருக்கி வரைவம்.

Coimbatore,

16th. December, 1895.

My dear Padma,

I am glad you have taken up 'கீசக வதம்' in right earnest. Please however, in working it out, remember a few leading points. My ideal is an excellant Tamil Tragedy. Tragedy is unknown in Tamil you know. We must try therefore, to make this kind of composition popular. Now, in a business of this kind, a certain dignity must be preserved, and so there must be no place for your 'விதூஷக்.' He must go about his business. If you want to sprinkle some pepper and vinegar here and there, do it by all means, but not through Vidushaks' mouth. Let 'Hamlet' be your model herein. Let there be அகவல், but let there be also prose wherever you think it desirable-especially in working out scenes with minor characters. Let *Love* play a subordinate part on the whole, but more masculine feelings, hatred, revenge &c. be given as much prominence as possible.

You might also fall. to describing natural scenery wherever appropriate. Your characters are all right, but the plot I think needs a material alteration. See if the following is workable, and if it is, proceed with it till I return from Madras, and then let me have your performance.

My idea is that, with the killing of Keechakas and return of Bhema and Draupadi, the curtain should fall. Now try your hand, and let us see how it looks. As a rule, avoid rare words and difficult constructions. Do not indulge in platitudes. Strike a new path, and write from the *heart* and not from the *head*. My best wishes for your success. We ought to succeed. God willing :

Your affectionately,

C. N. KRISANA.

மேலைக்கடிதத்தின் சாராம்சமென்னவென்றால், தமிழில் சோகரசத்தைத் தரக்கூடிய நாடகங்களில்லாமையால், கீசகவதத்தை எளிதான பாடல்களாலும் வசனத்தாலும், கம்பீரமான மாதிரியில் இயற்றவேண்டும் என்பதே.

இவை நிற்க : இப்பொழுது இயற்றிவரும் இலக்கண நூலைச்சற்று நிதானித்துப்பார்த்தால், இடைச்சொல், உரிச்சொல், ஆகுபெயர், அன்மொழி, தெரிநிலை, குறிப்பு, முதலானவை, தக்க மேற்கோளாலும் தார்க்கிக நியாயத்தாலும் விலக்குண்டு வீழ்ந்தன. ஆகவே இந்த நூல் முடிவு பெறின் இன்னும் அநேக முரண் நீங்கும். மாணுக்கரும் யாதொரு மயக்கமின்றி இலகுவாக

இலக்கணத்தைக் கற்றுத்தேர்ச்சியடைவர். தவிரக், கீழ் வகுப்புகளிலேயே இலக்கிய ஞானமும் உதிக்கும். தற்காலத்தில் உயர்தரு நடையில் அமைப்பது இன்றியமையாதெனவும், அப்படிக்கில்லாவிட்டால் அதாது நூல்களுக்கு (Technical) இணக்கமாகாதெனவும்கூறுகிறார். பின்னர் சுருக்கி வசனரூபமாக வியற்றுவதுதான் உசிதமாகுமென்கிறார். ஆகையால் மேல்வரும் நம் தேச க்ஷேமத்தைக்கோறும் அபிமானிகள் யாவரும் எமது சஞ்சிகையை ஆதரிக்கக்கோறுகிறோம். இவரது கருத்து "லோகோபகாரிகள்" என்னும் அங்கத்தில் இச்சஞ்சிகையில் வெளிவரும்.

G. Hanumantha Rao.

பொதுக்கடிதங்கள்.

புனர் விவாகம்.

புனர்விவாகம் என்பது கன்னிப்பருவத்தில் தான் அடைந்த வைதவ்யத்தின் பிரதிகூலத்தைப் போக்குமாறு மறுபடியும் ஒரு ஸ்த்ரீயானவள் ஓர் புருஷனை மணந்துகொள்ளும் ஏற்பாடாம். ஹிந்துக்களில் முண்டைகட்டும் ஜாதியார் இருப்பினும், அந்த ஆசரணையில்லாரைப் பற்றியே இது குறிக்கிறது. ஸ்ரீ விவேகாநந்த சுவாமிகளை இவ்விஷயமாக ஒருவர் கேட்டபோது, அவர் எடுத்துச்சொன்னதாவது :- 'நான்' என்பது முண்டைச்சியா? உன்னால் ஆகக்கூடியது ஒன்றுமில்லை. கர்ம்ம வைராக்யத்தை அவரவர் ஆசரிக்கக்கடவர். ஆனால், ஸ்த்ரீகள் தங்களைத்தாங்களே காப்பாற்றிக் கொள்வாராவர், என்றார். இதுபோலவே, எமது நண்பராகிய ஒருவர் எழுதுகிறார் -:

"ஹிந்து மத சித்தாந்தப்படி ஆத்மா அழிபொருள் அல்ல. இப்படியிருக்க, ஒருவன் தன்னை மணந்தபெண் மற்றொருவனை மணந்து கொள்வது நினைக்கவும் சகிக்குமா? பேயுமல்லவா பொன்னைக்காக்கிறது! 'பொன்காத்த பூதம்' என்னும் பழமொழியும் இருக்கிறதல்லவா? ஒருவனுக்கு தத்தம் செய்த பெண்பொருளைப்பின்னால் மற்றொருவனுக்குக் கொடுக்க யார் தான் அதிகாரி? இதற்கு சமாதானம் தெரிவிக்க ஆவல் மிகுதி."

இப்படிக்குத் தமது நண்பன்,
கே. ஆர். சிதம்பரம்.

விடுகதை.

I

காயின்மேல் மரமொன்றக் கண்டீ ருண்டோ
கவினுறுமம் மரத்தின்மேற் கொடிகளேற
நாயகனுக் கொடிகளின்மேல் நளினமாக
நமதுவிரல் நடிக்கக்கேள் பலநாதங்கள்
வாயிலிருந் தூதுவபோல் வயங்கவீய
வானுறைவோர் தாமெல்லாம் மகிழ்ந்தாரம்மா
நேயமுடனா ராய்ந்திதன் கருத்தை
நிமிடத்தி லுரைப்பிரேல் நேர்மையுண்டாம்.

II

நேர்மையுறு மாகமெலா மம்பகங்கள்
நினைத்திடிலோ இந்திரனல்ல நீலியல்ல
ஊர்ந்துவரக் காலில்லா முடவனாவான் [ன்
ஒருவரெடுத் தாண்டிடிலோ ஆள்கைசெய்வா
மார்மீதில் நூலிடையானு யிருமில்லான்
பறக்கமல உயிர்கடமைப் பிடிப்பானம்மா
கூர்மையுள வேலேந்துங் கூற்றுமல்ல
குணமுடையீரி வன்பெயரைக் கூறுவீரே.

சகோதரிகளே! சகோதரர்களே!! இதுதான்
நான் முதல்தடவையாக இப்பிரபஞ்சத்தில்
வரையத்துணிந்தது. இதன்கண்ணேதாவது குற்றங்களிருப்பின் அதைநாடாது குணத்தையே நாடுமாறு வந்தனத்துடன் கேட்டுக்கொள்ளுகிறேன். மறுமுறை விடுகவிகளுடன் வருகின்றேன். வந்தனம். வந்தனம்.

சகோதரி சுப்பலக்ஷ்மியம்மாள்.

இக்கவிகள் எளிதில் பொருள் விளங்குவன; ஆகையால் இதற்கு விடையளிப்பரென்று கருதுகிறோம்.

C. R. P.

பிழை திருத்தம்.

சென்ற செப்டம்பர் மாதச் சஞ்சிகையில் 119-வது பக்கம் 18-வது வரியில் 'திருநண்ணு' என்பதை 'திருநணு' யென திருத்திக்கொள்ளவும்.

சென்ற அக்டோபர் மாதச்சஞ்சிகையில் 157-வது பக்கத்தில் பன்னிருசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம் எனத்தலைப்பிட்டுக் கொண்டு அடியில் வருமாறு படிக்கவும்.

(பதினான்கு சீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.)

தாவிய தரங்கப் பயோததி கடைந்தமுது
தந்த திருமா லென்னவே
தவழுமலை மூவுல களாவிவரு தொன்னூற்
றமிழ்க்கட றனைக்க டைந்தே
நாவினொடு செவிமனது மின்பமுற வுலகரெந்
நாளுந் துதிக்க வேண்டி
நளினப்பிர சங்ககவி ராசபூசித குன்றை
நகர்வாசு தேவ தீரன்
ஆவலொடு வாரித் திரட்டியீந் திடுமமுத
மானவிச் சதக வுரையை
யபுரூப நீதிநெறி முறைமைவழு வாதபே
ரன்பன்மெய்த் தொண்டை நாடன்
காவியம் புயன்மிக்க பாகைநகர் மேவுசங்
கரமூர்த்தி யருள்சு புத்திரன்
கங்கா குலன்சுப்ர மணியன்மால் கேட்டுளங்
களிமிக் குயர்ந்த னனரோ.

E. K. S. Manian.

பன்னிரு சீராயிற் சிறப்புடைத்து:
அபூர்வம் என்பது பதம்.

C. R. P.

I. இலக்கண நூல்.

சொல்லிலக்கணம்.

20. இயல்பி னியம்ப லெழுந்த வளியினை
வியனிலை சமனிலை வேண்டிரு வியலுட்
பாவந் தோன்றப் படுத்து மெடுத்தும் [யு
அடுக்கியு முடுக்கியு மறுத்தறுத் தொழுக்கி
மருத்த மில்லா வயற்சொல் லணைத்துந
திரித்து முறப்பியுந் தெரிதரு மரபின்
இலக்கண மிற்றென வெண்ணு விதமும்
எழில்கொளு மியல்பின் விளம்பினர் கொள
[லே.

இஃது, 'பொருளிடங்காலம்' என்னும் மேலைச்சூத்திரத்துள் 'இயல்பு' இத்தன்மைத்தென நுதலிற்று : (இ-ள்) இயல்பின் = சுவபாவத்தில், இயம்பல் = சொல்லலானது, எழுந்த = தோன்றிய, வளியினை = சப்தத்தை, வியனிலை = சிறப்

பு நிலையும், சமனிலை=சுவபாவ நிலையும், வேண்டு=வேண்டப்பட்ட, இரு இயலுள்=வழக்கும் செய்யுளுமாய வழிகளில், பாவம்=நவரச முதலான மனோதர்ம்மமானது, தோன்ற=தோன்றும்படியாக, படுத்தும்=குறுக்கிக்கூறியும், எடுத்தும்=நீட்டிக்கூறியும், அடுக்கியும்=சேர்த்தியும், முடிக்கியும்=ஓட்டியும், அறுத்தறுத்து=விட்டுவிட்டும், ஒழுக்கியும்=தொகுத்தும், அருத்தமில்லா=பொருளில்லாத (எழுத்துப்பேறு, சாரியை முதலிய போன்ற) அயற்சொல்=வேறுசொற்களை, அணைத்தும்=சேர்த்தும், திரித்தும்=ரூபத்தை வேறுபடுத்தியும், உறப்பியும்=அழுத்தியும், தெரிதரு=பொருளறியக்கூடிய, மரபின்=முறையால், இலக்கணம்=இலக்கணமானது, இற்றென=இன்ன தன்மையாயமைந்துள்ளதென, எண்ணுவிதமும், எழில்கொளுமியல்பின்=ஓசையின் சுவபாவமாக, விளம்பினர் கொளலே—சொன்னவரது கொள்கையளவாம்; என்றமையறிக. இவற்றின் உதாரணம் உபதேச முறையாம். பொருளியலுள் வரைவம். எழுத ஆவது அல்ல. பிராகிருத முறையின் நடைபெறுவதும் உய்த்துணரற்பாற்று. படுத்தல் எடுத்தல் முதலாயின செய்யுளியல் ஊசிமுறியனையவற்றால் உணரற்பாற்று. மேல் நவரசமென்றது- சிங்காரம், வீரம், கருணை, அற்புதம், ஆசியம், பீவற்சம், பயானகம், ரௌத்திரம், சோகம் என்பன. எழிலென்றது=அம்மை, அழகுதொன்மை, தோல், விருந்து, இயைபு, புலன், இழைபு, என்பன. இவற்றை ஆளும் கவி, கமகன், வாதி, வாக்கியென்னும் நால்வகைப்புலவர்களும் ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம் முதலான கவியாலும், நடையாலும் அமைப்பர் என்பர். இவற்றுட் காமக்குரோத முதலான புகட்டற்பாலது. இவையனைத்தும் யாப்பு அணி கூறுழிவரும். 'எண்ணுவிதமும்' என உம்முக் கொடுத்தமையின் எண்ணியவிதம் என்பது போந்த பொருளெனக்கொள்க. 'கொளலே' எனத் தேற்றங்கொடுத்தமையான் மரபிற்கொளல் சிறப்பெனினும், செந்தமிழ் கொடுந்தமிழ் நாடுகளின் வழக்கினையும் அநுவதித்தாம் என்க.

21. விதியி னியம்பல் விதித்துள வரையா
வேண்டுழி வேண்டின வண்ண மின்வழாஅ
வின்ப மோங்கிய வியல்பும் விகாரமும்
பொருந்திய போற்றிப் பொருள்கோ ணிலை [யில்
முதலீ றிடைநிலை போலியு முருபும்
விசேஷண முதலா வேண்டிய பெற்று
வரன்முறை யென்ன விளம்பினர் கொள [லே.

இஃது சொல்லானது இன்னவிதம் சொல்லவேண்டியதெனும் இலக்கண முறையையனுசரித்துக்கூறும் பொது இலக்கணங்கூலல் நுதலிற்று. (இ-ள்) விதியின்இயம்பல்=இலக்கண நூன்முறையில் சொல்லலானது, விதித்துள வரையா=இலக்கணவிதியை நீக்காது, வேண்டுழிவேண்டினவண்ணமின்வழாஅ=வேண்டினவிடத்து விரும்பின ரசமுறையிற்றவறாமல், இன்பம் ஓங்கிய=செவிக்கின்பம் மிகுந்த, இயல்பும் விகாரமும் பொருந்திய போற்றி=இயல்பும் விகாரமும் ஆகிய புணர்ச்சி முறையைக்காத்து, பொருள்கோள் நிலையில்=அருத்தமமையுமாறு, முதல் ஈறு இடைநிலை போலியும் உருபும் விசேஷணம் முதலானவைகளில், வேண்டிய பெற்று=எவ்விடத்தில் எது வேண்டியவையோ அவற்றைப்பெற்று, வரன்முறை என்ன விளம்பினர் கொளலே=வரவேண்டிய கிரமம் என்று சொன்னவருடைய கொள்கையாம்; என்றமையறிக. இம்முறை பின்வரும் சூத்திரங்களாற் காண்க.

22. ஆவி கசபத நமயவ முறையி
னனைத்து மாறைந் தாறொரு நாலும்
ஒன்று நாலு மேரெழுத் தொருமொழி.

(இ-ள்) ஆவி, கசதபநமயவ வருக்கங்களில், முறையாக உயிரனைத்தும், க-ஆறும், ச-ஐந்தும் த-ப-ந-ம இந்நான்குள் ஆறாறும், ய-ஒன்றும், வ-நான்கும் ஓரெழுத்தொருமொழியாம் என்றார்- அவையாவன :- அ ஆ இ ஈ உ ஊ எ ஏ ஐ ஒ ஓ ஔ,- காகுகூகைகோகௌ - சாசீசேசோ - தாதீதுதூ. தேதைத-நாநீநேநைநொநோ-பாபீபூபேபைபோ- மாமீமூமேமைமோ-யா-வாவீவைவௌ-என்பன இவற்றுட் சிற்சில தற்போது பயில்வனவல்ல. ஔ-சமைத்தல்; ஓதனம்; ஓ-மயில்; உ-எழுப்பு;

23. இடுகுறி காரண மெனவரு வழியிற்
பகாப்பத மேழும் பகுபத மொன்பது
மெழுத்தின் முடியு மென்மரு முளரே.

(இ-ள்) இடுகுறியென்றும் காரணமென்றும் வாதமேற்படும் போழ்து, பகாப்பதமாய இடுகுறிச்சொற்கள் ஏழெழுத்தீராகவும், பகுபதமாய காரணச்சொற்கள் ஒன்பதெழுத்தீறாகவும், முடிவுபெறுமெனச் சொல்வாருமுளர் என்க. இஃது இந்நூலார்க்குடம்பாடிலதேனும் பிராகிருத நெறியினை வடமொழி போன்று விரிக்கவேண்டற்பாலதான் விரிவஞ்சி விடுத்துளாரென்க. தன்குறி வழக்கம் முன்னுரைத்துளார் என்க. மண், மரம், மங்குல், மந்தரம், பருப்பதம், உத்தரட்டாதி-அணி, பறவை, அடிசில், பாகவதம், தரித்திரன், தாரித்திரியம், உத்திராடத்தான், உத்திரட்டாதியான். இவை போல்வனவென்க.

கோயமுத்தூர் பத்மநாப ஐயர்.

II

ஓர் சுவப்நாவஸ்தை.

(5-வது சஞ்சிகை 147-வது பக்கத்தொடர்ச்சி.)

கதாகதசம்மிச்ர கோஷ்ட்யா பந்தம்.

எனது தோழர்களே! சென்ற சஞ்சிகையில், 'சுவபாவ சுகாநுபவ இச்சாபிடிதம்' என்றதைக் கூடுமானவரையிலெழுதி, இதில் 'கதாகத சம்மிச்ர கோஷ்ட்யாபந்தம்' என்பதைச்சொல்லலானேன்.

உலகத்தில் 'கோஷ்டி' என்றால் 'சேஷ்டை' என்று சொல்வது எல்லார்க்கும் தெரியும். 'ஐயோ! கையுங்காலும் வைத்துக்கொண்டு சும்மாயிருக்கலாகாதா! என்று குழந்தைகளை விரட்டுகிறோம். 'பிறந்த குழந்தை நன்றாயிருக்கிறது! முத்தாட்டமாக், கையுங்காலு முதைத்து விளையாடிக்கொண்டிருக்கிறது'! என்று சொல்கிறார்கள். கர்ப்பம் எட்டாமாதமாகையில், அள்ளையில் சிசு சிறிது நேரத்திற்கொருமுறை, சிறுவலியாக உதைப்பது தெரியவருகிறது. கர்ப்பவதிகளின் நாடிநோக்கினால், வாதம் கதித்திருக்கிறது.

0 0 — 0 0 —

இதயமும் அ-உ-ஓம்,-அ-உ-ஓம், என்றே துடிக்கிறது. இதுதான் 'ஸ்ருஷ்டி' 'ஸ்திதி' 'லயம்' என்னும் நியாயம் என்பது. இந்த நியாயத்தைப் பற்றித்தான் 'அயர்ந்துறங்குங் குழந்தைக் கழிவில்லை' என்று சொல்வது. 'பம்பின புலி பாயாமற் போகாது' என்றும், 'பதுங்கின பாம்பு பிடுங்காதிராது' என்றும், சொல்வதுண்டு. அதாவதென்னவென்றால், எவ்வளவுக்கெவ்வளவு ஒருவனுக்கு அமைதியேற்படுமோ, அவ்வளவுக்கவ்வ

ளவு குணசோபிதமாகு, மென்கிறார்கள். 'துஷ்டப்பிள்ளை கஷ்டப்படான்' என்கிறார்கள். இவற்றின் தாற்பரியமெல்லாம், உலகத்திலுள்ள எல்லா வஸ்துவும், பகிரங்கமாகவோ அந்தரங்கமாகவோ, அறிவிற்கெட்டியோ எட்டாமலோ, அதனதனுடைய சேதன சக்தியினளவு, இயங்கிக்கொண்டேயிருக்கிறது. இந்த லக்ஷணம் 'சப்தஸ்பர்ச ரூபரஸ கந்தாதி ஈராணுத்ரண காஷ்டபிபீலிகாதிப்ரம்ஹ பர்யந்தம்' உள்ள யாவற்றிற்கும் பொதுவாம். 'தோன்றித்தோன்றிப் பொன்றி நிற்பது'வே 'கதாகத சம்மிச்ரம்' என்னப்படும். ஆனால், 'அவனன்றி யணுவசையாது' என்பதை நாமெல்லாவரும் அறிவோம். ஆகையால், ஜீவனுடைய லக்ஷணமே 'துடித்து நிற்றல்' ஆகிறது. இதெல்லாம் ஜாக்ரநியாயம்.

சுவப்ந நியாயமோவென்றால்- இவனுக்கோ வெளியறிவில்லை! துருத்தியூதுவதிலும் தொப்பையடிப்பதிலும் குறைவேயில்லை! கவிழ்த்துப் போட்டாலும் சரி! - நிமிர்த்துப்போட்டாலும் சரி! - என்ன செய்தாலும் சரி! ஊதுகிற சங்கு ஊதித்தானாகும்'! உள்ளறிவை யோசித்தாலோ?- சுவப்நத்தில் பிறழுகிறான்! - கைகால் கோறணி காட்டுகிறான்! - ஒவ்வொரு நாடி ஒவ்வொரு சேஷ்டை செய்கிறது! - சிலசமயம் தேகத்தையே, விருக்! கென்று தூக்கிப் போட்டுவிடுகிறது! மூத்திரம்கூட வெளியாகி விடுகிறது! தேகம் இப்படியிருக்கத், தன் திருஷ்டியா நாடி வியாபகமடைந்து, தேசமுண்டாகி, ஊர்போகவும் வரவும, இஷ்ட பந்து துஷ்ட சத்ருக்களின் திருஷ்டியும் தோன்றி, சகல வியாபாரமும் செய்கிறவனுமறிகிறான். ஆகையால், ஜாக்ர நாடி போலவே, சுவப்ந நாடியுமேற்பட்டு ஜாக்ரத்திலிருந்த நிச்சய புத்திபோய், விசார புத்தியால் வாதிக்கப்படுகிறான்.

ஆனால், சுஷுப்தியிலோவென்றால்- "நிர்விசாரமாகத் தூங்கினேனப்பா!" என்று சொல்வதினாலேயே, 'விசாரமே' 'கதாகத கோஷ்டியும் அதற்குக்காரணமும் என்னப்படும். இந்த விசாரம் சுஷுப்தியில் இல்லை. இது, "வித்தையுள்ளவனுந் தூங்கான் - விசாரமுள்ளவனுந் தூங்கான்" என்னும் பழமொழியினாலேயே, வியக்தமாயறியலாகும்.

இதன் சூக்ஷமம் பின்வரும் பூதசரீரப் பிரசினையில் இனிது விளங்கும்.

(இன்னும் வரும்.)

III

குடி.

"குடியைக் கெடுக்குங் குடி" குடி, குடி, என்று இரட்டித்துச் சொல்லுகிறார்களே இதென்ன காப்பிக்குடியா? தேயிலைக்குடியா? பால் குடியா? என்ன குடி ஐயா? பால் குடியுமல்ல; காப்பிக்குடியுமல்ல; சாராயக்குடிஐயா சாராயக்குடி, கள்ளுக்குடி, பிராந்திக்குடி! பின் சொன்னதைத்தான் உலகில் இரட்டித்துச் சொல்வது வழக்கம். இரட்டித்துச் சொல்வானேனெனில் காமம், களவு, பொய், கொலை, வெகுளி முதலிய பஞ்சமா பாதகங்களை விளைத்து கல்வி செல்வம் புகழ் முதலிய 16 பேறுகளையும் போக்குவதுடன் குலகோத்ர வம்சமென்னும் குடியையும் கெடுத்துவிடுகிறதினாலே 'குடியைக் கெடுக்குக்குடி' என இரட்டித்துக் கூறப்பட்டது. இக்குடியாலே மேற்கண்ட கேடெல்லாம் நாளடைவிலுண்டாகக்கூடியதாயிருக்கின்றது. குடிப்பதால் ஏதே

னும் போக்குவரத்துண்டோவெனின் பொருளோடு அறிவு போவதும், இருளோடு ஒன்று வருவதுமுண்டு. ஒன்று வருவது என்றீரே? அதென்ன ஆனந்தலகிரியா? இல்லை!! இல்லை!! கேவலம் மாயாகாரமாகிய உலக வாசனையிலேயே வியாபகமாயிருக்கிற மனதை யோகசமாதியினாலே தன்னிடம் வைக்கப்பெற்ற பேரறிவானது தலையெடுத்து வஸ்து நிச்சயத்தில் அசைவற்றிருந்து ததாகாரமாய் சர்வம் பிரம்ம மயமென்னும் பரவசங்கொண்டிருப்பதையே ஆனந்தலகிரி யென்பதோடு பிரம்மானந்த லகிரியென்று பெரியோர்களால் சொல்லப்படுமேயல்லது அறிவுகெட வருவதையா ஆனந்தலகிரியென்று சொல்லுவது? முற்றிலும்அல்ல!!! மற்றென்ன வருமெனில் வெறி ஐயா! வெறி! இந்த வெறி என்ன செய்யும்? அந்தக் குடியானது கள்ளுக்கடையினுள்ளுக்கும், வெறி வெளிக்குமாக இழுக்க, நாய் வாய்ச்சேலையாய் இழுபட்டுக்காதடைத்துக் கண் சிவந்து உதடு கறுத்துப் பல்வெளுத்து, நாவறண்டு வாய் நாறி நிலைகுலைந்து, தள்ளாடித் தட்டுண்டு தடுமாறி முட்டுண்டு மூளை சிதறி பொறி கலங்கி உளறித்தவித்து மூக்கு நசுங்கி மண்டை நொறுங்கிக் குலை பதறி ரத்தந்தெறிக்கும்படி வீதியில் குப்புற விழுந்து நுரைதள்ள முக்கி விக்கி கக்கித் துக்கித்து மெய் வெதும்பி வியர்த்து விலுவிலுத்து மனங்களைத்து ஆவி சோரப் பெருமூச்செறிந்து, குண்டித்துணிபோன விடங்கூடத் தெரியாமல் அறிவுகுன்றி லச்சைகெட்டு மொச்சைமாறித் தலைவிரிகோலமாய் புரண்டுருண்டு முடங்கி அடங்கி நீட்டி நிமிர்ந்து பிணம்போற் கிடக்கச்செய்யும். அம்மம்ம!!! இம்மட்டோ? அது கொல்லவுங் கொல்லும். ஆ!! ஈதென்ன நஞ்சா? ஐயோ அதிலுஞ் சந்தேகமேன்.

"வஞ்சமுங் களவும் பொய்யும் மயக்கமும் மர
[பில் கொட்புந்
தஞ்ச மென்றாரை நீக்குந் தன்மையுங் களிப்புந்
[தாக்குங்
கஞ்சமெல் லணங்குந்தீருங் கள்ளினை லருந்தினு
[ரை
நஞ்சமுங் கொல்வதல்லால் நரகினை நல்காதன்
[றே"

என்றபடி நஞ்சம் கொல்வது மட்டும்; இக்குடியோ கொல்வதோடு விடாமல் கொதி நரகிலுமாழ்த்தும். ஆ!! ஆ!! கொடிது கொடிது. இக்கொடிய குடியானது எந்தச் சாதியாரின் கொள்கையாயிருக்கும்? அந்தவெட்கக்கேட்டையுமா சொல்லவேண்டும். 'தோட்டிமுதல் தொண்டைமான்' வரையுள்ள எல்லாச்சாதியாராலும் நடைபெற்று வருகின்றது. சரி சரி தெரிந்துகொண்டேன். இந்தக்குடியர்கள் நம் நாட்டில் எத்தனைபேரிருப்பார்கள்? அந்த வயிற்றெரிச்சல் கணக்கைப் பார்க்கப் பார்க்க நமசிவாயமாகவே முடியும். அதியத்புத கணித சாஸ்திரிகளான நம்மையாள்வோர் இக்குடிகளைப் பலநாளாய் கணக்கிட்டுப்பார்க்கப்பார்க்க அடங்காமல் அனுமார் வால் வளர்ந்ததைப் போல் மென்மேலும் வளர்ந்துகொண்டே வந்தால் யாவரால் தான் கணக்கிட்டு முடியும். இந்தக்குடியின் அளவு யெப்படி அடங்கவில்லையோ அப்படியே அக்குடிவெறியின் கொடுமையு மளவிடக்கூடாததாகவிருக்கின்றது. ஐயா 'அளவுக்கு மிஞ்சினால் தானே அமுதமும் நஞ்சு' நிதானமாய் குடித்தாலென்ன? நன்றாய்ச்சொன்னீர்! நெருப்பிலும் விஷநாகத்திலும் சிறிது பெரிதென்றுண்டா? இல்லையே!! மேலும் ஏகாதசி உபவாசமிருந்த குரங்கின் கதையாகவல்லவா முடியும். கதை

வருமாறு :- ஏகாதசி உபவாச பலனைக்கேட்டிருந்த ஒரு குரங்கானது தான் வசிக்கும் மதுவனத்துக் கொப்பானதோர் தோப்பிலிருந்தால், ஒரு வேளை உபவாச பங்கம், நேரிடக்கூடுமென நினைத்துத் தன்னினங்களையும் நீங்கி தோப்புக்கு வெளியே சில நேரமிருக்கையில் தேனொழுகுங் கனிவர்க்காதிகளைத் தன்னினங்களெல்லாம் கொழுக்கத்தின்று கொஞ்சிக்குலாவி விளையாடிக்கொண்டிருப்பதையும் மணம் வீசுவதையும் பசிகொள்ளக் கொள்ள கொட்டாவியதிகரிப்பதையும் நினைக்க நினைக்க அந்தக் குரங்குக்கோர் யோசனை உண்டாயிற்று. அதாவது ஏகாதசி யுபவாசபலன் துவாதசி பாரணையிலும், அந்தப்பாரணைக்கனிவர்க்கத்தில் சுசிருசியுள்ளவைகளோ மரக்கிளைகளிலுமாக விருப்பதினாலே, இப்போது நம்தேகஸ்திதிக்குப் பாரணை வழுவாமல் பாதுகாப்பது ஆவசியமென்று தன்னுளைக் கிணங்க தீர்மானித்துக்கொண்டு மெள்ள மெள்ள தோப்புக்குள்ளே வந்திருந்து மரத்தடியிலிருந்து மரமேறியிருந்து கிளையிலிருந்து கனியையடுத்திருந்து வாயைத் திறந்துகொண்டிருந்து வாயில்கனியை வைத்துக்கொண்டிருந்து சுவைத்துக் கொண்டிருக்கும் போது, மறுபடி யோசித்து உள்ளே விழுங்கி, இவ்வளவின்பேரில் இனியென்னவென்று வேண்டியமட்டுந்தின்றுவிட்டு, ஏகாதசி உபவாசந்தான் கெட்டது கெட்டது, கட்குடியுமாகெடவேண்டுமென்று தென்னையிலேறி கள்ளைக்குடித்து கிறுகிறுத்துக் கீழே விழுந்து சிதிலடைந்து பேயும் பிடித்து இஞ்சியுந்தின்று தேளால் கொட்டப்பெற்று குலைகுலைந்த அந்தக் குரங்கின் கதையாக முடியும்.

(இன்னும் வரும்.)

இஷ்டர்களே வந்தனம்.

E. K. S. Manian.

IV

பொறாமை.

"கெடுவான் கேடு நினைப்பான்."

முன்னொரு காலத்தில் சுப்பன், லட்சுமணன், கிருஷ்ணன் என மூன்று பேர்கள் தனித்தனியே தேசாந்திரம்போக புறப்பட்டார்கள். இம்மூவர்களும், இடரென்று தரும க்ஷேத்திரம் என்னுமிடத்தில் சந்தித்தார்கள். அது காரணமாகவே அம்மூவர்களும் தோழர்களாயினர். அங்கிருந்து ஒன்றாய்ச்சேர்ந்து அப்புறம் போகையில் அவர்களுள் மூத்தவனான சுப்பன் சொல்லுகிறான்.

"நேசர்களே, நீங்களிப்படி தேசாந்திரத்தில் அல்லாடும்படி ஸ்வதேசத்தை விட்டு வந்ததற்கு யாது காரணம்? அதை எனக்கு விளம்புங்கள்" என்று கேட்டான். அதற்கு லட்சுமணன் பகர்ந்ததாவது "கொடிய விரோதியைப் பார்த்ததுபோல் அங்கே சிலரிடத்தில் மிகுந்த பகையுண்டாயிற்று. அவர்களைப்பார்க்கவுங்கூட என்மனம் பொறாதிருந்ததால் நான் என்னூரை விட்டு வந்துவிட்டேன். அவர்கள் முதலில் எனக்கொரு கெடுதி செய்து அதனால் இந்தப்பொறாமை எனக்குண்டானதினால், 'அயல் வாழ்ந்தால் ஐந்துநாள் பட்டினி' எனக்கே தகும். எவனாவது ஒருவன் நல்ல ஸ்திதியிலிருக்கக்கண்டால் உடனே என் மனதில் எரிச்சலுண்டாகும். அந்தக்குணம் என் ஸ்பாவத்திலேயே தோன்றினது. 'தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும்' என்பது போல இந்த இயற்கைக்குணமெப்படிப்போகும்? அதை எனக்குச்சொல்லிக்கொள்ள வெட்கமாயிருக்கிறது. ஆனதுபற்றியே ஒருவரையும் காணாமல் வந்துவிட்டேன்." என்றான். அதுகேட்டு கிருஷ்ணன் "தோழர்களே! அப்படியாயின் என்னைப்பற்றி இனி நான் சொல்லவேண்டியது அதிகம் ஒன்றுமில்லை. இரண்டொரு மொழிதான். அதே வியாதிதான் என்னையும் திண்டாடும்படி விட்டது. அல்லும் பகலும் அறுபது நாழிகையும் அதே பொறாமை நோய் என் மனதை இம்சித்துக்கொண்டிருந்ததினால் ஒருவர் முகத்திலும் விழியாமல் வந்துவிட்டேன்" என்றான். லட்சுமணன், கிருஷ்ணன் இவ்விருவர் சொன்னதையுங்கேட்டு சுப்பன் :-

அப்படியா! நண்பர்களே! வாருங்கள் நாம் மூவரும் நன்றாய் ஆலிங்கனம் செய்துகொள்ளுவோம். நம்மூவரையும் ஒரே நோய்தான் பிடித்து வருகின்றது. என இப்போது விளங்கலாயிற்று என்றான். அன்று தொட்டு அம்மூவரும் "மூர்க்கரை மூர்க்க ருகப்பர்" என்பது போல உடனே சிநேகிதராயினர். "எத்தால் வாழலாம் ஒத்தால் வாழலாம்" என்னும் பழமொழியும் உண்டல்லவா? நன்மையோ தீமையோ, சவுக்கியமோ, இன்பமோ, துன்பமோ, இளமையோ, முதுமையோ, மரணமோ, எது நேர்ந்தபோதிலும் எக்காலத்திலும் ஒத்திருத்தல் நலம்.

(தொடரும்.)

E. V. S. Row.

V

பிள்ளைத்தமிழ்.

தமிழ் அபிமானிகளே! 'வித்யா விஹாரிணி' என்ற சஞ்சிகையின் 2-வது அங்கத்தில், வித்வான் பிரம்மஸ்ரீ வெங்கடரமண ஐயர் அவர்கள், 'பிள்ளைத்தமிழ்' விஷயமாகச் சிலவற்றை எழுதியிருப்பதைப் படித்ததில், அவர் எழுதியிருப்பது, எமக்கு ஓர் தூண்டுகோலாக ஏற்பட்டதைப்பற்றி, மெத்த மகிழ்ந்தோம். ஆகையால், எமது மகிழ்ச்சியை, யாமிந்தச் சஞ்சிகையில் தெரிவித்திருப்பது சபலமாக, மேற்படி "வித்யா விஹாரிணி" என்னும் தமிழ்ச்செல்வி, தனது காவிய காண்டமென்னும் திருக்கையாற்பற்றி எம்மையும் அம்புலி காட்டித் தாலாட்டுமெனப், பின்வரும் மழலைச்சொற்களைச் சொல்லலானோம்.

எந்தாய்! தமிழ்ச்செல்வியே! உமது திருவுள மகத்வத்தை யாமறிவது அசாத்தியம். ஆகிலும, மொத்தமாக உமது கருணை, எமதுமேல் இல்லவேயில்லை!, என்று யாம் எண்ணித்துணியோம். "அபத்தம் வா சுபத்தம் வா குந்தீபுத்ரோ விநாயக" என்று யாம் சொல்லினும், நீர் தாயன்றோ? எம்மீதிற் றயையுமக்கிருக்காதா? ஏற்றுக்கொள்வது ஸித்தம்! தடையென்ன!

'பிள்ளை' என்றழைத்தாலே போதாதா? எவ்வளவோ தாய்க்கருணையானது, "கன்றதனைத்-தேடிவரும்-கபிலையது-போலே' என்று, மடிசுரந்து ஒழுகுதே! ஊட்ட ஊட்ட, உருசி மிகுந்து, வயிறு நிரம்பி, வாயால் வழியுதே! இவ்வமுதோடுகூட 'தமிழ்' என்னும் இனிமையையும் சேர்த்துவிட்டால் வாய், வைத்தாலே போதுமே! இந்தத்தமிழை, எம்மைப்போன்ற

பிள்ளைகளுக்கு, மூன்றுமாதத்தில் காப்பிட்டுப் புகட்டியும், ஐந்தாமாதத்திற் றாலாட்டிப்புகட்டியும், ஏழாமாதத்திற் செங்கீரையாடப் புகட்டியும், ஒன்பதா மாதத்திற் சப்பாணிகொட்டப்புகட்டியும், பன்னொன்று மாதத்தின் முத்தமிட்டுப் புகட்டியும், பின்னர் ஒற்றித்த மாதங்களில் வாரானை, அம்புலி, சிறுபறை, சிற்றில், சிறுதேர், என்னும், ஓடல், அழைத்தல், கொட்டல், கோஷ்டி, குலாவற் பருவத்துப் புகட்டியும், எமது சகோதரிக்குச் சிறுபறை முதல் மூன்றும் தவிர்ளி, கழங்கு, அம்மானை, ஊசல் இவற்றை ஆடப்புகட்டியும், ஆகக், குழந்தைப்பருவத்து மூன்றுமாத முதல் இருபத்தோராவது மாத பரியந்தம்,

"கண்டுரைக்கிற் பிள்ளைக் கவிதெய்வங் காக்க [வெனக்
கொண்டுரைக்குந் தேவர் கொலைபகற்றி-ஒண் [டொடியாய்
சுற்றத் தளவா வகுப்பொடு தொல்விருத்தம்
முற்றுவித்த நூலின்முறை :-

மூமறைதரு மூன்றுதி மூவேழீ ருந்திங்கள்
அறைக நிலம்பத்து மாண்டைந்தேழ்-இரைவனை [யார்க்
கந்தஞ் சிறுபறையே யாதியா மூன்றொழித்துத்
தந்தநில மோரேழுஞ் சாற்று.

சாற்றரிய காப்புத்தால் செங்கீரை சப்பாணி
மாற்றரிய முத்தமே வாரானை-போற்றரிய
அம்புலியே யாய்ந்த சிறுபறையே சிற்றிலே
பம்புசிறு தேரோடும் பத்து :-"

"அரிவையர்க் காகிவீற்றி லறைமூன்று பருவமா [கா
உரியதாங் கழங்கம்மானை யூசல்மூன் னேழினோ [டு
வருமூன்றே யாதிமூவேழ் மதிகாறூற் றித்தமா [தத்
திருபா லரையுங் கேட்பித்தலி னிதைந்தேழா [ண்டுதானே."

என்ற ஆன்றோர் மரபினை யநுசரித்து, "பசுர் வேத்தி சிசுர்வேத்தி,-வேத்திகான ரசம்பணீ" என்னப், பசுவும் சிசுவும் பாம்பும் கண்ணுறங்கி யானந்த மனுபவிக்குமாறு, கனிந்த கானரசமமைந்த 'இயைபு' 'இழைபு' எனும் லக்ஷணமமைந்து மனமுருகித் தன்னையறியாது தலையை அசைப்பிக்கச் செய்யும் பிள்ளையறிவாகப் புகட்டியதன்றோ பெருமை! கேவலம் சிசுப்பிராயத்திலேயே 'நாதம்' என்னும் பிரணவப் பிர்ம்மானந்தத்தில் எம்மை வசப்படுத்தி, ஐந்து முதல் ஏழாம் ஆண்டு வரை ஆழ்வாரருளிச் செய்த முதலாயிர திவ்வியப் பிரபந்தத்தைச் சொல்லுவித்தும், பின்னர் 'என்னும் எழுத்தும' இயைந்தளவிற் கற்று, உம்மை மறவாமல், உமது திருமேனியை யுமது நாத மகத்வத்தினல் தியானித்து, நினைந்து நினைந்துருகி யானந்தபாஷ்ப முகச் செய்வித்ததழகன்றோ? 'கல்வி' என்பது இதல்லவா? 'திருப்பல்லாண்டு' என்பதை யறிந்து 'ஸஞ்சீவய ஸ்ஸஞ்சீவய' 'காப்பாற்றும்' என்றதையே மூலாதார யோகமாகக்கொண்டு, முறை முறையாகக்காமம் வெகுளி மயக்கம் இவற்றை, 'வண்ணமாடம்' எண்ணும்'அழகுசுவர்' ஆன இந்த தேகப்பிரகிருதியை யறிந்து, 'சிதக்கடற்' சம்சார பந்தம், இதனிடம் 'தன்முக'மாகிய சைதந்நியம், இத்தியாதிகளினுணர்வால், துவக்கறுத்துத் தேறச்செய்ததல்லவா நீர் எமக்குப் பிள்ளைத்தமிழ் புகட்டிய பலம்? இவ்விதம் ஞானப்பால் போட்டி, "மாத்ரு தேவோ பவா" என்னும் தாய் பக்தியாம் அன்னத்தை யூட்டிவிட்டதற்காக

யாம் செய்யவேண்டியதென்ன? லோக வியவகாரத்தில் யாம் என்ன செய்யினும், எல்லாமுமது மகிமையே! யாம் தேடுவதெல்லா முமக்கே அர்ப்பிதம்! எமது தேகமும் உமக்கே யுரித்து! எமக்கும் தேகத்துக்கும் இனிமேல் யாதொரு சம்மந்தமுமில்லை! உமது சித்தம் எமது பாக்கியம்! என்ற நிச்சயத்தைத் தெரிந்துகொண்டநுசரிப்பதுதான். இதற்காகவேயல்லவா தாயாகிய நீர் 'பிள்ளைத்தமிழ்' ரூபமான உமது மேனிப்பாலை வளர்த்தது?

இந்தப் பாலானது சும்மா உதிக்குமா? நன்றாய் மேய்ந்து, அசைப்புப்போட்டு, ஜீர்ணித்தபின் தசையோடுகூடிக்கொழுத்து, இதயத்திலூறி, உயிர்ப்பையாலரிக்கப்பட்டபின் உதிப்பதல்லவா? இந்தப்பாலிற் குறைபாடுண்டென்று யாம் நினைக்கவுங்கூடுமோ? இதுதான் ஆவி!

ஏதோ பின்னல் எமது ஊழ்வினைப்படி, யௌவன தெசைக்குரிய "உச்சிஷ்டோ பாஸன" நியாயப்படி நாச்சியார், செய்தபோல சபாயோக்யமில்லாததோ உள்ளதோவான இலக்கணப்பிராகிருதமான கற்பனைகளால் நாயக நாயகி விஷய சிந்தனை மூலியமாகவாவது, அல்லது, வயது முதிர்ந்த "வானர" தெசைக்குரிய "மேனிதிரைய" கண்டோர் பழிக்கும் "கர்ம்ம நியாயமாகவாவது, "அங்கிங்கெனுதபடி யெங்கும் பிரகாசமாய" பரம்பொருளவதாரம்போன்ற எமது தாயைத், தருணத்தமிழாலோ அல்லது நம்மாழ்வாராதிகள் செய்தபோல "சைலீ தாருமயீ லௌகீ, லேப்யா லேக்யாசசைகதீ, மனோமயீமணிமயீ, ப்ரதிமாஷ்ட விதாஸ்ம்ருதா"-என்றபடி கல்லோமரமோ, லோஹமோ, கலவைக்கூட்டோ, படமோ, மணலோ, மனோமயமோ, ரத்கமோ வாக உருவகப்படுத்தி, நவரசமோ அவரசமோவாகி, அழகுகள் சொட்டச் சொட்ட,

பெரியாழ்வார் கலித்துறை.
மோஹன ராகம் - அடதாளம்.

என்சிறு குட்ட னெனக்கோ ரின்னமு தெம்பிரா [ன்
தன்சிறுக் கைகளாற் காட்டிக் காட்டி யழைக்கின் [ன்றான்
அஞ்சன வண்ணனோ டாட லாட வுறுதியேல்
மஞ்சின்ம றையாதே மாமதீ!ம கிழ்ந்தோடிவா.

சக்கரக் கையந்த டங்கண் ணால்ம லரவிழித்து
ஒக்கலை மேலிருந் துன்னையேசுட் டிக்காட் டுங் [காண்
தக்கத றிதியேல் சந்திரா!ச லம்செய் யாதே
மக்கட்பெ றுதம லடனல்லை யேல்வா கண்டாய்:

கலி விருத்தம்.
வராளி - ரூபகம்.
நாச்சியார்.

கருப்பூரம் நாறுமோ கமலப்பூ நாறுமோ
திருப்பவளச் செவ்வாய்தான் தித்தித்தி ருக்கு [மோ
மருப்பொசித்த மாதவன்றன் வாய்ச்சுவையும் நா [ற்றமும்
விருப்புற்றுக் கேட்கின்றேன் சொல்லாழி வெண் [சங்கே:-

நம்மாழ்வார்.
கலித்துறை.
ஸஹானு - ஆதிதாளம்.

சொன்னல் விரோதமிது ஆகிலும் சொல்லுவன் [கேண்மினோ

என்நாவி லின்கவி யாரொ ருவர்க்கும் கொடுக்கி
[லேன்
தென்ன தெனவென்று வண்டு முரல்திரு வேங்
[கடத்து
என்னனை யென்னப்ப னெம்பெரு மானுள னாக
[வே :-

கலி விருத்தம்.

ஸஹானா - ஹடதாளம்.

வண்ணம் வைக்க.

சொன்னால்வி ரோதமிதா கிலும்சொல்லு வன்
[கேண்மினோ
என்நாவி லின்கவியா னொருவர்க்கும் கொடுக்கி
[லேன்
தென்னதென வென்றுவண்டு முரல்திரு வேங்க
[டத்து
என்னனை யென்னப்ப னெம்பெருமா னுளனாக
[வே :-

என்று இனிமையாகச் சீர்இசைய ஆசு மதுரம் சித்திரம் வித்தாரமாய கவிகளைப்பாடிப், பரமானந்த மனுபவிக்கச்செய்வதற்கே, எமது தாய் "பிள்ளைத்தமிழாம் பாலைப்போட்டியதும், போட்டுவதும், போட்டப்போவதுமென்று, எமக்குத்தெரிவித்ததற்காக, வந்தனம்! வந்தனம்!

பிழைத் திருத்தம்.

172-வது பக்கம் வலம் 15-வது வரி 'என்னும் எழுத்தும்' என்பதை 'எண்ணும் எழுத்தும்' எனவும், 24-வது வரி எண்ணும் என்பதை என்னும் எனவும், 31-வது வரி யூட்டிவிட்டதற்காக எனவும் திருத்திக்கொள்க.

2-வது வரி திருபா லரையுங் கேட்பித்த வினிதைந்தே ழாண்டுதானே என "பைரவி" ஓசைப் படுத்திக்கொள்க.

C. R. Padmanabha Iyer.

VI

வேசிகளைத் தேவதாசிகளென்று கொள்ளும் மயக்கத் தெளிவு.

காப்பு.

வேசிகள் தாசிகளாகா ரென்பதனைப் பலஞாய
[விசாரத்தான்
மாசிலொரு நூலியற்ற வமைந்ததிரு வாக்குதவி
[வாழ்த்தவென்றும்
பாசமதைக் கொண்டடியார் பாசமதைத் தொலை
[த்தரிய பதத்தில்வைக்குந்
தோஷமிலேங்கரன் பாதத்தாமரை யைத்துணை
[கொண்டு துதித்தல் செய்வாம்."

வேசிகளென்று சொல்லப்படுவோர் அந்தராளனும் விராத்திமாதும் சேர்ந்து பெற்றவர்களில் அக்குலவொழுக்கினின்றும் வழுவினர் பாலுதித்தவர்களென்றும், விவாக சம்பந்தமின்றித் தங்கள் மனம்போல் நடை யுடை பாவனை செய்துகொண்டு ஜாதிமுறைமை பாராமல் இச்சைப்பட்ட நாயகர்களைச் சேர்ந்து வாழ்பவர்களென்றும் எந்த விஷயங்களிலும் விலக்கில்லாதவர்களென்றும், பொய், களவு, சூது, பொறாமை, பழி, பாவம், பேராசை முதலிய தீக்குணங்களெல்லாம் நிறைந்து ததும்பிய பொக்கிஷங்களென்றும், பதித்துரோகம், மித்துருத்துரோகம், குருத்துரோகம், கருப்பமெய்தாது தடுத்தல், எய்திய கருப்பத்தை யழித்தல், சிசுவதை செய்தல், பெற்ற குழந்தைகட்குரிய முலைப்பால் கொடாதொழித்தல், கட்குடித்தல், புலாலருந்தல் முதலிய மஹா பாவங்களையெல்லாம் அஞ்சாது துணிந்து செய்பவர்களென்றும், பணங்கொடுக்கும் நாயகர்மீதின்றி அவர்கள் கொடுக்கும் பணத்தின்மீதே அன்புடையவர்களென்றும், தங்களைச்சேரும் நாயகர்களுக்கு அவர்கள் நல்லொழுக்கங்களை மாற்றித் தீராத நோய்களையும், மாறாத தரித்திரத்தையுங் கொடுத்து யாவராலும் சீ-சீ என்றிகழும்படி செய்விப்பதில் கைதேர்ந்த நிபுணியர்களென்றும், இவர்களது வீடணுகினும் பாவமுண்டென்றும், இவர்களைப் பார்க்கிற் ‡ சாந்தராயண விரதமும், தீண்டிற் § கிரிச்சிரவிரதமும், சேர்ந்தால் அவ்விரதங்களோடு அக்கினிப் பிரவேசமும் செய்யவேண்டுமென்றும் உண்மை நூல்கள் பிராயச்சித்தம் விதிக்கின்றன.

இவற்றிற்குப் பிரமாணம்.

"அந்தராளனும் விராத்திமாது மொன்றாகிச்
சிந்தையார்வ மோடணைந்ததிற் செனித்திடும்
[பெண்ணு
ணந்தவோர்குல வொழுக்கினும் வழுவினரவர்
[பால்
வந்த மாதரே வேசியரா மெனவகுத்தார்."

மங்கல மணத்தைக் கொள்ளார் மனமது போல
[நாளுந்
தங்கள்பால் வருவோராசை தான்கொளும் வே
[டம்பூண்டு

---

‡ சாந்தராயண விரதமென்பது-பகலில் மூன்று காலத்திலும் ஸ்நாநஞ்செய்து சுக்கிலபக்ஷத்துப் பிரதமை முதல் உப்பில்லாத அன்னத்தை ஒவ்வொரு கவளமாக வளர்த்திவந்து பௌர்ணமாவாசியில் பதினைந்து கவளம் சாப்பிட்டு மறுபடி கிருஷ்ணபக்ஷப் பிரதமை முதல் ஒவ்வொன்றாகக் குறைத்து வந்தும் அமாவாசியில் உபவாசமிருப்பது.

§ கிருச்சிர விரதம்-மூன்று நாள் பகலில் ஒவ்வொருவேளை உப்பில்லாத அன்னத்தில் இருபத்தாறு கவளமும், மறு மூன்றுநாள் அப்படியே இரவில் முப்பத்திரண்டு கவளமும், மறுமூன்று நாள் தான் யாசிக்காமலிருக்கும்போது யாராவது வலுவில் கொடுத்தவன்னத்தில் இருபத்திநாலு கவளமும் புசித்து மறுமூன்று நாள் சுத்தவுபவாசமிருக்கவேண்டியது. (மநுதர்ம சாஸ்திரம் பதினோராவது அத்தியாயம் பிராயச்சித்த விதி.)

கொங்கையு நகையுங் காட்டிக் கொடியதங் குண
[ங்காட்டாம
லங்கவர் பொன்களியாவு மடைந்தபின் அதுவுங்
[காட்டும்."

"வஞ்சனை சூது பொய்யு மாயமுங் கபடுங் கள்
[ளு
மெஞ்சிய பழிபேராசை யிழிதசை தின்றல் கர்ப்
[ப
மிஞ்சிடா தழித்து பிள்ளைவிரும்பு பாற் கொடா
[மையாதி
நஞ்சினுங் கொடிய வேசி நாரிபொக்கிஷமாய்
[வாழும்."

"வேசியைப் பார்க்கிற் சாந்தராயண விரதந் தீண்
[டின்
மாசறு கிருச்சிரத்தை வளமொடுஞ் செய்கச் சே
[ரிற்
தேசுமிக் கொளிருந்தூய தீயினிற் குளிக்கவந்
[தத்

தோசமில் விரதத்தோடு தொலையுமப் பவங்களை
[ய."

என்று சுவேதகிரி மான்மியத்திற் காண்க.

அன்றியும், இவர்களுடைய கொடுமைகளைப்பற்றியும், இவர்கள் உறவால் வரும் கெடுதிகளைப்பற்றியும், பலநூல்கள் பலவிதமாகச்சொல்லுகின்றன. அவைகளில் ஞாபகத்திற்கு வந்த சிலபாகங்களை மட்டும் தக்க சான்றோடு ஈண்டு விவகரிப்பாம்.

"இழிபவ ருயர்ந்தோர் மூத்தோ ரிளையவர் கழி
[யா நோயார்
கழிபவர் யாவரேனுங் கண்வலைப்பட்டு நெஞ்ச
மழிபவர் பொருள் கொண்டெளளுக் கொண்
[ணெய் போலளந்து காட்டிப்
பழிபடு போகம் விற்பா ராவணப் பண்பு சொல்
[வாம்."

(திருநகரங்கண்ட படலம்.)

என்று திருவிளையாடற் புராணத்தினும்,

"இளமையே கவினை கீர்த்தி பொருள் கலையாங்
[கித்ததின்
வளமையே யன்பே நல்லவருணமே யேகபோகம்
விளைவு செய்திறனே மற்றுமிக்குளா ரெனினும்
[பொன்னிற்
றளர்வின ராயினஞ்சே யிருமனத்தைய லார்க்
[கு."

என்று திருப்போரூர் புராணத்திலும்,

"விளக்கொளியும் வேசியர் நட்பு மிரண்டுந்
துளக்கற நாடின் வேறல்ல - விளக்கொளியு
நெய்யற்ற கண்ணே யறுமே யவரன்புங்
கையற்ற கண்ணே யறும்" (371)

((38) அதிகாரம் பொதுமகளிர்.)

"புதுப்புனலும் பூங்குழையார் நட்புமிரண்டும்
விதுப்புற நாடின் வேறல்ல-புதுப்புனலு
மாரியறவே யறுமே யவரன்பும்
வாரி யறவே யறும்." (370)

ஷை ஷை

என்று நாலடியாரிலும்,

முகத்துலக்கிக ளாசார வீணிகள்
விலைச்சிறுக்கிகள் தோராத நாரிகள்
முழுச்சமர்த்திகள் காமவிகாரிகள்-முந்துகூது
மொழிப்பாத்தைகள் காசாசையான்முலை
பலர்க்கும்விற்பவர் நாணுதநாரிகள்
முழுத்தபெட்டிகள் மோகமூதேவிகள் - செஞ்
[சொலாலே
செகத்திலெத்திகள் கூசாதுபேசிகள்
திருட்டுமட்டைகள் மாயாசொரூபிகள்
சிரித்துருக்கிக ளாகா வெனுநரை-சிந்தையாய
மயற்புகட்டிகள் கோலாலமாய் நட
நடித்த சட்டைகள் மாபாவியாருடன்
இணக்கமற்றிரு சீர்பாததாமரை - யென்றுசேர்
[வேன்.

என்று அருணகிரிநாதர் திருப்புகழினும்,

நாவார வேண்டிவிபிஞ் சொல்லுவா ருனை நான்
[பிரிந்தாற்
சாவேனென்றே யிருந்தொக்கவுண்பார் கைதா
[ன் வறண்டாற்
போய்வாருமென்று நடுத்தலைக்கே குட்டும் பூ
[வையருக்
கீவார் தலைவிதியோ விறைவா கச்சியே கம்பனே
(24)

(திருவேகம்பமாலை)

என்று பட்டணத்துப்பிள்ளையார் பாடலினும்,

(தொடரும்.)

C. K. N. Swamy.

VII

லோகோபகாரிகள்.

அத்யாயம் V.

(113-வது பக்கத்தொடர்ச்சி.)

லோகோபகாரிகள் எல்லாரும் மனோரம்மியப் போர்க்களத்திலிருந்து பரோபகார பெலத்தினாலும், அவர்கள் செய்த பூர்வபுண்ணிய நலத்தாலும், ஏதோ பழயபடி விடுவந்து சேர்ந்தார்கள். மறுநாள் உதயத்தில் நமது நாயகர் தம்முடைய நெஞ்சைத் தடவிக்கொடுத்துவிட்டு, மெல்ல எழுந்து வாணரே! என்றார்.

வாணர் - தங்களுக்குக்காது கேட்டிருக்குமே? என்றார்.

வீரர் - இதென்ன இப்படிச் சொல்கிறீர்! விடிய விடிய வெடியும் அடியுமாக வேணமட்டும் பட்டது போதாதா? என்றார்.

அழகர் இந்தச் சந்தையிரைச்சலில் எப்படித் தூக்கம் வரும்! என்று சொல்லி எழவே-

நாயகர் - வெகு நேத்தி! நேற்றைச்சங்கதி நேற்றோடே போயிற்று-இன்றைக்கு யாதொன்றுமில்லை - கிராமத்திற்குக் கேட்டுக்கொண்டபடி போவோம், என்றார்.

வாணர் - எந்தக்கிராமம்? என்றார்.

அழகர் - கண்களைத் துடைத்துக்கொண்டு, மறுவூர்! என்றார்.

வீரர் - அந்த வூர்க்கு நான் வர உத்தேசமில்லை! அவ்விடம் வௌவால் பட்டக்கார் யாருமில்லை! ஆகையினால், அங்கு வருவதில் என்ன பிரயோஜனம்? ஏதாவது பட்டினமா பாழா? வௌவால் பட்டக்காரில்லாத வூர் என்ன வூர். அவாள் இருந்தால், ஏதாவது சபை கிபை சேரும். ஏதாவது சொல்வார். பத்துப்பேர், பட்டத்துக்காகிலும், வட்டமிட்டுவருவர்.

வாணர் - நமது நாயகரென்ன! லேசான பேர்வழியா? வாயைத் திறந்தால் போதுமே! வௌவாலும் கிவ்வாலும்-

அழகர் - நில்லும்! நில்லுமென்று சொல்லி, அவசரப்பட்டு ஓடவே, ஒரு வண்டிக்காரன் வந்து திண்ணையில் மண்டிபோட்டிருந்ததைப் பார்த்துவிட்டார்! ஒரே அறையாகச் சாத்திவிட்டார் கதவை! வீரரும் திடுக்கிட்டு, யாரங்கே? என்ன அழகரும், உமக்கென்ன காதுகளில்லையோ வென்றார்.

வீரரும், நல்ல காரியம் செய்தீர்! என்றார். இதற்குள்ளாகக் கவலையர் வந்து கதவைத்தட்டி, வண்டிவந்து எந்நேரமாயிற்று! வெளிச்சமாயும் வெளியேவர வாதா? என்றார்.

வாணர் - மெதுவாகச் செவிகொடுத்து நடந்து, வந்துவிட்டேன்! என்றுபோய் ஏதோ ஞாபகமாய், மற்றொரு தாளையும் போட்டுவிட்டு விரைவாக வந்து, நாயகரே! என்று கூப்பிட்டுக் காதினிடமாக வாயை வைத்ததும்-

கவலையர்-ஏதேது! இரட்டைத்தாழ்ப்பாள் சமாச்சாரமா? என்று சொன்னவுடனே,

நாயகர் - நல்லது! திறந்துவிடுமென்று, தாமேபோய்த், தைரியமாகக் கதவைத்திறந்து விட்

டார். பார்த்தார், பழய பெயர்வழியை! ஒன்றும் சொல்லத் தோன்றாமல், திகைத்து நின்றுவிட்டார்.

வீரரும் - சமீபத்தில் வந்து, என்ன தாமதம்? என்று ஒரே அடியாகக் கேட்டுவிட்டுத் திரும்பினார்.

இதற்குள்ளாக வாணரும் வந்து, அங்குநின்றிருந்த குதிரையைப் பார்த்துப் பின் வருமாறு வர்ணித்து நின்றார்.

"முன்னே கடிவாள மூன்றுபேர் தொட்டிழுக்கப்
பின்னே யிருந்திரண்டு பேர்தள்ள-எந்நேரம்
வேதம்போம் வாயான் விகடரா மன்குதிரை
மாதம் போங் காத வழி."

நாயகர், உடனே எல்லாரையும் உள்ளழைத்து, காபி, உப்புமா, புளியவல் முதலான சாப்பிட்டுக், கலையரைப்பார்த்து, நாமெல்லாரும் போய்வர உத்தேசம் என்ன, ஆஹா! அப்படியே க்ஷேமமாகப்போகக்கடவது! என்று கலையரும் ஆசீர்வதித்துச் சக்தியநுசாரம் குடித்துத் தீர்ந்ததும் - நாயகர், குதிரை எப்படியானாலும் வண்டியெப்படிப்போனாலும், நான் சமாளித்துக் கொள்வேன் - என் மூக்கை மாத்திரம் காத்துக் கொள்ளவேண்டியதால், வண்டிக்காரன் மாத்திரம் எனக்கெங்கே போனாலுமாகாது என்று, ஒரே பிடிவாதமாகச் சொல்லிவிடவே, எல்லாரும் ஒருமித்து உடனே கிளம்பிவிட்டார்கள்.

வண்டிக்காரன் தலைக்கட்டு கட்டிக்கொண்டு, கையிற் குறடாவெடுத்தான். கலையர், அவசரப்படாதே யென்று வண்டிக்காரன் காதில் ஏதோ மந்திரமோதி மயக்கிவிடவே-

வண்டிக்காரன் - எனக்கென்ன? குறடா மாத்திரம் கொடுக்கமாட்டேன். சாதுக்குதிரை! விட்டுவிட்டால், தன்பாட்டிலே தானேபோகும்! அதட்டக்கிதட்ட வேண்டாமென்று, நாயகர் சாரத்தியம் செய்யக்-கலையர் கடிவாளத்தைப்பிடித்துக்கொண்டு முன்னால் நடக்க, வீரர் லோ. உ. சா க்கொடிதூக்கிவிட, எல்லாரும் ரதாரூடராய்ப்புறப்பட்டார்கள். வண்டிக்காரன், சலாம் செய்து சத்தம்வாங்கி, I-ஆம் நெம்பர் எங்கே? எங்கே? என்று, தீக்குச்சியைத் தீத்தி வாயில் வைத்துக்கொண்டு, தெற்குமுகமாகப் போய்விட்டான். நமது நாயகரும், வண்டியை ஒருவித மாய்ச்சமாளித்து, மறுவூர் மூன்றுமைல் இருக்கையில், பாலம் ஒன்று தென்படவே, குதிரையின் குணத்தாலோ வண்டியின் வேகத்தாலோ பாலம் என்னவாமோவென்று தத்தம் முதுகு நிமிரப்பரிசோதிக்கையில், தெய்வாநுகூலமாகக் குதிரையும் வண்டியும் போனவழி காணாமல், எல்லாம நாளைக்குப் பொழுதுவிடிந்தால் தெரிய வரும்! என்று, ஒருவாறு மனதைத்தேற்றிக்கொண்டு, எல்லாரும் ச. உ. லோ ச்சங்கத்துக்கு விரைந்து நடந்துவந்து சேர்ந்தனர். சபையில் விளக்குவைத்துச் சபை மினுமினுப்பாக நிறைந்திருக்கையில்-

மறுவூர் நியாயம்.

பலிஷ்டர் - ஜாதி, ஜாதியென்றால் - ஆண்ஜாதி பெண்ஜாதி சமாசாரம்!-இதுதான், வர்க்கம், வர்க்கம் என்பது. எதுபோலென்றால்- எருது! மாடு! எருமை! ஆடு! போல்வன. இவற்றைப்பொலிவிப்பதற்கு, நல்ல நல்ல வர்க்கத்தைத், தேடி, நாளடைவில் அங்கலக்ஷணம் வருமாறு ஜாக்ரதை எடுத்துக்கொள்வதுபோலவே, ஜாதி

நியாயம் அநுசிதமாக ஏற்பட்டுள்ளது. வர்க்கமென்றாலும் ஜாதியென்றாலும் ஒன்றேதான்-

(கரகோஷ விளம்பனம்)

கனிஷ்டன்-எப்படி? எப்படி? எருது, மாடு எருமை! ஆடு! ரொம்பசரி! இவற்றைக் கால்நடை என்னும் வர்க்கமென்று சொல்லக்கேள்வியுண்டு-இவற்றில் எருமைக்கு எருத்தைத்தாளவாடியில்சேர்க்கிறார்களாம்; மாட்டுக்கு ஆட்டைச்சேர்ப்பதாகக் கேட்டதேயில்லை. ஜாதியென்றால் சமயோனித்தோற்றமென்று சொல்கிறார்கள். மாடு, எருது, எருமை, ஆடு, இவைகள் வாலைறுபலம்போல நான்கும் நாலாகவேயிருக்கட்டும். இந்த நியாயம் இருக்கட்டும். எடுத்துக்கொண்ட விஷயத்தை யோசித்தால், ஏதோ ஒரு புஸ்தகத்தில், ஒருவன் ஆட்டைப் பொலிவிக்கையில், செம்புள்ளி கரும்புள்ளி குத்தின தடியை அவற்றின் முன் வைக்க, அந்த நிறத்தைப் பார்த்ததுபோலவே, குட்டி போட்டு விருத்தியாயிற்றென்றும், நல்ல ஜாதியை முன் நிறுத்திப் பொலிவிப்பதையும், பிரத்யக்ஷத்திலும் பார்த்திருக்கிறோம். அதுபோல வாலை பெலமே பெலமாம் - ஒழியச் சோதனை பலம் சாசுவதமல்ல - (இல்லை! இருக்க! இருக்க!

தாசரவர்கள் - சீக்ரம்! நேரமாயிற்று. ரவ விஷயம் அநேகமிருக்கிறது! விவகரிக்கவேணும்!

பலிஷ்டர் - இன்று காலையில் ஏதோ குதிரைக்குறடாவென்று சமாசார டெலிகிராப் எட்டியிருந்தது! என்னமோ தெரியவில்லை.

கனிஷ்டர் - இந்த குதிரைக்குறடா விஷயமாக நாளையதினம் நமது கனம் லோ. உ. ச. நாயகர் அவர்கள் பிரசங்கித்தால் உத்தமமென்பது எமது அபிப்பிராயம்.

கனம் லோ. உ. ச. நாயகர் - அவ்விதமே செய்வோம்.

தாசரவர்கள்-இத்துடன் இன்று சபை முடிவுபெறும், என்றதும் எல்லாவரும் கலைந்து போயினர்.

நாயக்கர் போகையில் - வசன நடைக் குதிரைக் குறடா நாளையதினம் வண்டிக்காரனிடமிருக்கிறதே! என்ன செய்வது?

(இன்னும் வரும்.)

செ. சா.

VIII

வைத்தியக் குறிப்புகள்.

நேயர்களே! இக்காலத்தில அநேகர் தங்களுடைய தேகத்தை இன்னவிதமாக நோய்வராமற் காப்பாற்றிக்கொள்ளவேண்டும் என்று அறிந்துகொள்வதில்லை. ஒவ்வொருவருக்கும் அவரவருடைய ஜனனகால விசேஷத்தினால், கபமோ, பித்தமோ, வாதமோ, மேற்பட்டிருக்கும் இதையாராய்ந்து தெரிந்துகொள்வது முதற்கடமையாகிறது. இதற்குப்பரிகாரம், வைத்தியனாலும் ஆவதல்ல. வேறே எவ்வித மருந்தாலும் ஆவதல்ல. இதுதான் தேகக்கூறு என்றுசொல்வது. இதை அநுசரித்துத்தான் வியாதிகளும் பலமாகவோ துர்ப்பலமாகவோ, ஏற்படும். வைத்தியன் எவ்வளவு வல்லமைசாலியானாலும், ஔஷதங்கள் சஞ்சீவியேயானாலும், ஒரு தேகத்துக்குப்

பிடிக்க ஔஷதம், மற்றொரு தேகத்துக்கும் பரிகாரம் செய்ய உதவும் என்பது தப்பு. இக்காலத்தில் வைத்தியசாலைகளென்று ஏற்பட்டவே, மேற்படி விஷயத்தை முக்கியமாக அறிந்துகொள்ளாமல், மருந்துகளைத் தருவிப்பதும், உபயோகமில்லையென்று மண்ணிலூற்றுவதும், வைத்தியனை இகழ்வதும், சர்வசாதாரணமாகிவிட்டது. இப்படி, தானொன்று நினைக்க, வேறொன்று வருகிறது. ஒரு சிறு கதை சொல்லுகிறேன் :-

ஒரு நோயாளியானவன், தன்னுடையபிணியை இதனுக்குத் தன் தேகஸ்திதியைத்தெரியப்படுத்தி, தான் பார்க்க விருப்புவதாக எழுதியிருந்தான். ஏதோசில அசந்தர்ப்பங்களால் சிநேகிதன் போக்கு கூடவில்லை. ஒருநாள் ஞாபகம் வந்து, நோயாளி கோபித்திருக்கலாம், நாம் போகாதது தப்பல்லவா? போனது போகட்டும்! நாம் அங்கே போனால் என்ன கேட்பது? நமக்கோ பிராக்டி போட்டால் என்ன புசைகிறது? என்னும் சமாசாரமாயிருக்கிறது! ஆனாலும் ஒன்று செய்யலாம்! ஒரு நோயாளியிடம் போனால், முதல் முதல், எப்படியிருக்கிறது? சற்று தேவலையா என்று கேட்பது வழக்கம். அப்படிக்கேட்டதற்கு நோயாளி "ஆம்" என்பான். பிறகு, ஔஷதம் யார் கொடுக்கிறார்? என்ன ஔஷதம்?, இந்தியாதிகளைப்பற்றிக் கேட்பது நல்லது!! என்று தீர்மானித்துக்கொண்டு புறப்பட்டான். ஏற்கெனவே சற்று வருத்தமுற்றிருந்த நோயாளி, தனது சிநேகிதன் வரக்கண்டு கொஞ்சம் கிலேசித்திருக்க, சிநேகிதன் அருகிற்சென்றுட்கார்ந்து- கொஞ்சம் லகுவா? என்றான். அதற்கு நோயாளி புட்டோடிபோகவானல்தான், லகுவான அடையாளம்? என்றான். சிநேகிதனும் - போகட்டும்! என்ன மருந்து சாப்பிடுகிறாய்? என்றான். நோயாளி மண்ணாங்கட்டி தான்! என்றான். சிநேகிதனும் பாவமில்லை! மருந்து நல்ல மருந்து! யார் கொடுக்கிறார்? என்றான். நோயாளியும் எமதர்மராஜா தான்! [illegible]? என்றானாம். வைத்தியன் அயர்த்தான்!

இன்னொரு விசேஷம் உண்டு. வீட்டில் மாத்திரப்பையும் கையுமாக ஒரு வைத்தியன் போவது கண்டுவிட்டால், சிலருக்கு உடலே, உடம்பு சுகமில்லையென்றும் எண்ணமுண்டாகி, வைத்தியனை அழைத்து, கஸ்தூரியாதி வாயுகுளிகையிருக்கிறதா? உடம்பேனோ சரியில்லை! ஒருகுளிகை கொடுத்தால் ரம்ப உபகாரம்! என்று கேட்க, வைத்தியனும் தரும கஸ்தூரி குளிகையைக் கொடுத்துப்போகையில், வைத்யரே! ஒன்று மறந்துவிட்டேன்! இந்தக்குளிகைக்கு என்ன அநுபானம்? என்று கேட்க, சுக்குக்கஷாயம் என்று சொல்ல, ஐயோ! நேரமாயிற்றே! கடைக்குப் போவோமென்றால் முடியாது! மாத்திரைப்பையில் ஏதாவது சுக்கு இருக்குமா? ஒரு சின்னத்துண்டு கிடைத்தால் போதும்! என்பதும் நடந்துவருகிறது.

மற்றொரு விசேஷமும் உண்டு - ஒரு வைத்தியன் "ஆட்யோரோகீ, பிஷக்வசியஃ" என்றபடி வியாதிஸ்தன் திரவியவானென்றும் - தான் சர்வக்ஞன் என்றும் கருதிக்கொண்டு, வியாதிஸ்தனைப்பார்த்து, இந்தநோய் கடினமேக வியாதியாகும்! இதற்கு 200 ரூபாயில்லாமல் ஔஷதமாகாது! மருந்துச்செலவுக்காக 100 ரூ. இப்பொழுது கொடுக்கவேண்டும்! என்று சாதனை செய்து, ஏதேனும் பெற்றுக்கொண்டு, அரைக்கால் வீசைகூடச் செலவுசெய்யாமல், இன்னும் பணம் பிடுங்கவேணுமென்று, ரசகந்தி மெழுகைக்கொடுத்து, வாய் வயிறெல்லாம் புண்செய்துவிடுகிறதும் உண்டு. இதை விவரித்தால், கொடாத குண்டன் - விடாத மிண்டன், வரையில் விவரிக்கவேண்டி வரும். இது சிலர்மனதுக்குப் பிடிக்காது.

கவனிக்கவேண்டிய விஷயம்.

பெரியோர்கள்-"தினத்தில் இரண்டு-வாரத்தில் இரண்டு-பக்ஷத்தில் இரண்டு-மாசத்தில் இரண்டு-அயனத்தில்இரண்டு-வருஷத்தில் இரண்டு" என்று கணக்கேற்படுத்தியிருக்கிறார்கள். அதாவது தேக ஆரோக்யத்தை உத்தேசித்து அநுசரிக்கவேண்டிய முறைகள்-

தினத்திலிருமுறை சாப்பாடும், வாரமிருமுறையப்பங்கனமும், பட்சமிருமுறை சுபக்கிரக சயனமும், மாசமிருமுறை க்ஷவரமும், அயனமிருமுறை சோதனையும், வருஷமிருமுறை கபபித்த சர்த்தியும் செய்து, மலமூத்திராதிகள் எப்பொழுது விசர்ஜனம் செய்யவேணுமென்று நினைப்பாகிறதோ அப்பொழுதே விசர்ஜித்துவிடுவதும், ஸ்திரீ சிநமின்மையும், பகவத் பக்தியும், தேக ஆரோக்கியத்திற்கு இன்றியமையாவாம்.

(இன்னும் வரும்.)

ஓர் வைத்தியன்.

IX

லௌகிக தந்த்ர தர்மம்.

அத்யாயம் IV.

கைமுதல்.

மேலே சொன்ன அத்யாயங்களால், யத்நமும் பிரபஞ்ச சாதனங்களுமன்றியில், மற்றொன்று மிகவும் அத்யாவசியகமாகிறதென்று அறியலாம். அதில்லாமல், யாதொரு பிரயோஜனமும், சிறிதாகிலுமாகாது. அந்தச்சாதனமானது, முன்செய்த யத்நத்தாற் கிடைத்த, பொருள் சேகரமாம். இதைத்தான், இனிமேற் செய்யும் தொழில்களுக்குக், 'கைமுதல்' என்று உபயோகிப்பது. ஆகையால், இந்தக் 'கைமுதல்' என்பதின்னதென்று, அநேகருக்கு வியக்தமாய்த்தெரியாததினால், சற்று கவனித்தறிந்துகொள்ளவேண்டிய தவசியமானது.

'கைமுதல்' என்பது, 'பணம்' என்று, அநேகர் எண்ணியிருப்பதினால், எப்படிப்பணமென்பதே ஐசுவரியமாவதில்லையோ, அதுபோல, 'கைமுதல்' என்பதும் பணமொன்றேயல்ல. ஐசுவரியமென்னும் அபிஷ்ட சாதனங்களைத்தேடியடையும்பொருட்டு, பணம் ஒரு நிமித்யமாவதுபோலவே, உற்பத்தி செய்வதற்கு வேண்டியகருவிகளையோ, ஏனங்களையோ, ஜாகாவையோ; தொழிலாளிகளையோ, தேடிக்கொள்வதற்குரிய சாதனமானது 'கைமுதல்' ஆகிறது.

திருஷ்டாந்தமாக ஒரு குடியானவனிருக்கிறான். இவன் தனக்குவேண்டிய கொழூச்செய்யும் தன் கிராமக்கொல்லனுடைய கூலியைத்தா

னிபத்தாலேயே கொடுப்பது வழக்கமாயேற்பட்டிருக்கிறது. வண்ணான், அம்பட்டன், பரிதைக்கும் சக்கிலியன், சாப்பாட்டுக்கு இலைதைத்துக் கொடுக்கும் ஆண்டி, தன் பண்ணையத்தாட்கள் முதலானவர்களுக்கு, வருஷத்துக்கு இவ்வளவு தானியமென்று, கொடுத்துவருவதைக் காணலாம். தட்டான், கொல்லன், தச்சன், நெசவுக்காரன், வேறு பலயந்திரம் செய்பவர்கள், ஆகிய இவர்கள், தாங்கள் முன்செய்த சாதனங்களையே, இனிமேல் செய்யப்போம் தொழிலுக்கு ஆஸ்பதமாகவும், தங்கள் தொழிற்கருவிகளைத் திருத்திக்கொள்ளவும், கூலியாட்களுக்குப்படி கொடுக்கவும், ஏற்படுத்திக்கொள்கிறார்கள். ஆனால், பட்டின வாசங்களில் இந்த வழக்கம் நின்றுபோய், கூலியேற்பட்டுவிட்டது அப்படியானாலும், தான் முன்னால் செய்த உற்பத்தி சாதனங்களைச்செலவு செய்துதான், கூலிமுதலானவை கொடுக்கிறான். இவ்விதமின்றி மேற்கண்டவர்கள், ஆபரணாதிகளிலோ பாத்திரவகைகளிலோ, தாங்கள் உற்பத்தி செய்தவைகளை உபயோகப்படுத்துவதென்று ஏற்பட்டார்களானால், மேல் நடக்கவேண்டிய தொழிலுக்கு முடக்கமல்லவா? நாளடைவில் தேசத்தில் தொழிலானது விருத்தியடையுமா? யோசியுங்கள்! இப்படி நிஷ்பிரயோஜனமாகச் செலவு செய்யாமல், தேசத்துக்கு வேண்டியவைகளையாலோசித்து, ஏதாவது தொழிற்சாலைகளையேற்படுத்தி, இதர தேசங்களிலிருந்தாகிலும் பற்பல தொழிலாளிகளைத்தருவித்து, சிரயப்படுவார்களேயானால், அநேகருக்கு உண்ணவும் உடுக்கவும் ஒரு வழியேற்பட்டு, அவர்களுடைய முயற்சிவன்மையால், தாங்களும் விருத்தியடையலாம். ஆகையால், முதலும் முதலில்லாததும், சாதனங்களைப் பொருந்ததல்ல: மனதைப்பொறுத்ததென்று தடையின்றிச் சொல்லலாம். ஏதோ ஒரு பிரயோஜனத்தைத் தரக்கூடிய விஷயமாய், மனப்பூர்வமாக உழைத்து வந்தால், இன்றைக்கில்லாமற் போனாலும் நாளைக்காகிலும், சார்த்தகமாவதில்தடையேயில்லையென்பது பட்டாங்காக 'உள்ளங்கை நெல்லிக்கனி போல்' விளங்கும்.

2. உற்பத்திக்கு ஏதுவானவைகளெல்லாம் கைமுதலாவது போலவே, ஒரு தேசத்தின் கைமுதலெல்லாம் உற்பத்திக்காஸ்பதமென்று கருதவேண்டும். ஆனால் இப்படிக்கருதுவதிற் சிறிது தாரதம்மியமுண்டு. அதாவது:- முதலிருக்கும்: தொழிலாளிகள் ஏற்படார்கள்; வேண்டிய சாமான்கள் நிறைந்திருக்கும்: விற்பனையிராது; தொழில் செய்வதற்கான முதலானது போதாமல் பாக்கியிருக்கும் எப்படியிருந்தாலும் இவையனைத்தும் உபயோகப்படுத்தாத கைமுதலேயாம். சாகுபடி செய்யுமுன்னமே கந்தாயம் கட்ட ஏற்படுமானால், சாகுபடிக்கு வேண்டின கைமுதலோடு மேற்படி கந்தாயமும் முதலாகவே ஏற்படும். இது வேளாண்மைத் தொழிற்கே ஒரு இடையூறாகும். சாகுபடி பூமிகளைக் குத்தகைக்கோ, கிரயத்துக்கோ வாங்கி சாகுபடி செய்தால், முன்பணம் போட்டது, சாகுபடிக்குவேண்டிய செலவு முதலாகுமா? சாகுபடிக்கு வேறு முதலில்லாமல் முடியுமா? ஆகையால், முன்னாடி கொடுத்த குத்தகையோ கிரயமோ நிஷ்பிரயோஜனமானதுதானே! அதைப்பொறுத்த மட்டில் என்ன அநுபவம்? வேறு முதற்போட்டு விளையும் விளைவிலிருந்தல்லவா அதைப்பார்த்தி செய்யவேண்டி வருகிறது? அதுபோலவே தொழிலாளிகள் விஷயமாகக் கொடுக்கும் கூலியானது அவர்களுக்கு வேண்டிய அன்னவஸ்திரங்க

ளைமட்டும் கொள்வதற்கல்ல. ஆகையால், மிகுதியான கூலியெல்லாம், தொழிலாளிகளுக்கும் ஓர் முதலாகிறதென்று சொல்லலாம், இப்படி மீதியிருப்பதினால் தான், பின்பலனை யுத்தேசியாமல் தொழிலாளிகள் வேலைசெய்ய உதவுகிறார்கள். பற்பல தொழிற்கருவிகளைச் செய்வோரும், அவரவர் முன்னால் செய்து முடித்தவற்றின் அநுபவத்தாலேயே, பின்னும் பற்பல கருவிகளையியற்றியநுபவமடைகிறார்கள். ஆகையால்'கைமுதல்' என்பது, ஒருவனே போட்டதுமல்ல, போடவேண்டியதுமல்ல, போடக்கூடியது மல்லவென்று வியக்தமாய்த் தெரிகிறது.

3. வட்டிக்குபயோகப்படுத்தும் முதலைப் பற்றி விசாரிப்போம். ஒருவன் ஆயிரம் ரூபாய் கடன் வாங்கி வேளாண்மைத் தொழிற்குரிய சாதனங்களைப் புதுக்கியோ வேறுவேண்டிய ஏனங்களை வாங்கியோ சாகுபடி விருத்தி செய்கிறான். பூமியை அடமானம் வைத்துக்கடன் வாங்குகிறவன், அந்த ரூபாயைக், கிணறு வெட்டவோ நிலத்தை மண் முதலியபோட்டு வளப்படுத்தவோ உபயோகித்து, அதிகம் விளைவைப்பெறுகிறான். இவ்விருதிறத்தாரும் தங்கள் கடனை நிவர்த்திக்கக்கூடிய வழிகளில் மேற்படி தனத்தைச் செலவுசெய்கிறதினால், அந்தத்தனமானது வியர்த்தமாவதில்லை. அப்படிக்கில்லாமல் அடகுவைத்துப்பணம் வாங்கினவன், அந்தப்பணத்தைக் குடித்தும், சூதாடியும், சூலாவியும் தோரணை செய்தும் தொலைப்பானானால், இவன், பூமியைக் கடன்காரனுக்கு ஒப்புவித்துவிட்டுப் பாப்பராகிறான். சில சந்தர்ப்பங்களில் சர்க்காரே கடன் வாங்கி நீர்ப்பாய்ச்சல் விஷயமாகவோ, ரயில் போடவோ, ரோடுகள்போடவோ, செலவுசெய்தால், ஒருவிதமான நன்மையைத் தேசத்தாரெல்லாரும் பெறுகிறார்கள். யுத்தத்துக்காகச் செலவு செய்துவிட்டால் ஷை பணம்கரியாகத்தானேபோயிற்று? தேசத்தார்களுடைய மொத்த தனம் குறைந்துபோயிற்றென்று சொல்லவும் வேணுமா? ஆகையால் லேவாதேவைப் பொருள் முதலானது பிரயோஜனப்படுவது, அம்முதலானது உபயோகிக்கப்படும் மார்க்கத்தைப் பொறுத்து, நன்மையையோ தீமையையோ விளைவிக்க ஏதுவாகிறது.

C. R. Padmanabha Iyer.

X

தேசாபிமானம்.

பூர்வம் இவ்விந்திய நாடானது நமது முடிமன்னர்களால் ஆளப்பட்டு வந்தபோது மாதம் மும்மாரிபொழிந்தும், நிலவளம், நீர்வளம், குடிவளமாதியவைகளுடன் சீரும் சிறப்பும் பெற்று விளங்கியதாக நம்முன்னோர்களால் எழுதிவைக்கப்பட்டுள்ள புராணேதிகாசங்களாலும், அந்நிய நாட்டார்களாலெழுதியுள்ள தேசசரித்திரங்களாலும் நமது நாட்டின் பெருமை நன்குவிளங்கும்.

இத்தகைய சிறப்பு வாய்ந்த நம் நாடானது தற்காலம் மேது மதம், கொள்கை, ஆசாரம் முதலியவைகட்கு மாறுபட்ட அந்நிய தேசத்தாரின் ஆட்சிமைக்குட்பட்டுவிட்டதானது நம்மவர்களின் ஒற்றுமைக்குறைவாகிய பற்பல காரணங்களேயாகிலும் தற்காலம் இங்கிலீஷாரின் துரைத்தனம் நமக்குப்பல நன்மைகளை யளித்துவருகிறதென்பதற்கையமில்லை. நாமும் இத்துரைத்தனம் நீடூழிவாழவிரும்புகிறோம். இப்போது அரசியற்றுவது அந்நியநாட்டார்களேயாயினும் தேசா

பிமானத்தில் நீங்காத பற்று, மனோதிடம், மேதகஷிமை, கல்வி, நாகரீகம், ராஜபக்தி, ஆகிய இவைகள் வாய்க்கப்பெற்றுள்ளவர்களாய் தொழிற்பயிற்சியிலும், வியாபார விருத்தியிலும், சாஸ்திர ஆராய்ச்சியிலும், புதிதாய் நாடுகளைக் கண்டுபிடித்து அவைகளைக்கட்டி அரியபற்றவிலும், புதிதாய் யந்திரங்களைக் கண்டுபிடித்து அவைகளைச்சரிவர உபயோகத்திற்கு கொண்டு வருவதிலும், நம்முன்னோர்களின் ஏற்பாடுகளில் ஏதேனும் மாறுபாடிருந்தால் அவைகளை சரிவர திருத்தியும் "பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவலகால வகையினானே" என்னும் முதுமொழிக்கிசைய தம்மெண்ணத்திற்கு மாறுபட்டவைகளை முற்றுமொழித்தும் வேண்டுவனவற்றை புதிதாய்ச்சேர்த்தும் தமக்கிணையொருவருமில்லையெனச் சொல்லும்படிக்கு மிக்க தேர்ச்சியடைந்து, "சுக்கிலபக்ஷத்து சந்திரன்" போன்று வளர்ந்தோங்குகின்றதை நாம் பிரத்யக்ஷமாய் காண்கின்றோமல்லவா?

ஆனால் எவ்விதத்திலும் குறையாத ராஜபக்தி தெய்வபக்தி, பொறுமை, ஆகிய இவைகளை வாய்க்கப்பெற்றுள்ள நாமோ அந்நிய தேசத்தாரின் ஆட்சிமைக்குட்பட்டு அவர்களால் ஆதரிக்கப்பட்ட போதிலும், "குடத்திலிட்ட விளக்கு"க்கு ஒப்பாய் பிரகாசமிழந்து பரிதவிக்கலானோம். ஏன்? நாமும் அவர்களைப்போல முன்னுக்கு வரவேண்டுமென்னுங் கருத்துடையதிடசித்தர்களாய் ஒருங்குசேர்ந்து முயல்வோமானால் "முயற்சியுடையாரிகழ்ச்சியடையார்" என்னும் பழமொழிக்கிசைய நம் முயற்சியெல்லாம் வீணாக மாட்டாதாகையால் நண்பர்காள்! தேசாபிமானிகாள்! முயலுங்கள்! முயலுங்கள்!

இது நிற்க, ஏன்? நம் தாய்நாட்டில் பெருந்தனவந்தர்களில்லாமல் போய்விட்டார்களா? இவர்களாவது தற்காலம் நம் நாடெங்கும் பரவிவரும் முயற்சியின் பலனாக முன்வந்து ஏழைக்கைத்தொழிலாளிகளை ஆதரிக்கும் பொருட்டு. ஏன்? ஆங்காங்கு கைத்தொழிற்சாலைகளை ஏற்படுத்தலாகாது?

அப்படிக்குத்தம்மால் தனியாய் ஒன்று ஏற்படுத்த இயலாவிடில், தேசாபிமானிகளேற்படுத்திசபைகளையாவது கைசோர விடாமல் முன்னுக்குக் கொண்டுவரும்படிக்கு ஏன் முயற்சிசெய்யலாகாது. ஏ! பாரதமாது புத்திரர்களே! சகோதரர்களே! யார் வாழ்ந்தாலென்ன யார் செத்தாலென்ன நாம் வாழ்வதே நலமெனக்கருதி சுயநல துரந்தரர்களாயிருப்பது அழகல்லவே! ஆகவே இனிமேலாவது நம் நாட்டில் பெரும்பணம் படைத்த கனவான்கள் தேச முயற்சியில் தாராள ஊக்கமுடன் முன்னுக்கு வருவார்களாக.

இங்ஙனம்,

C. G. S. Sundram.

XI

சீரான குடித்தனம்.

அபேதானந்த ஸ்வாமிகள் செய்த உபந்யாசம்.

மேலைநாட்டு ஜனங்களைப்போலன்றி, கீழ்நாட்டு ஜனங்கள் அதிக திரவிய சம்பன்னர்களாயிருந்து போகபோக்யாதிகளை யநுபவிப்பதே, மானிடப்பிராணிக்கு உரித்தான பெரும்பேறென நினைப்பதில்லை. மேலைநாட்டில் ஜனங்களில் பெரும்பாலோர் தமது வாழ்நாளில் எவ்வளவு பொ

ருளீட்டக்கூடுமோ அவ்வளவு சம்பாதிப்பதே கருமமென வெண்ணி அடக்கமற்றவும் இயற்கையுமில்லாத குடித்தனங்களைச் செய்கின்றனர். அதனால் தங்கள் விருப்பங்களைப்பெருக்கி அவற்றைத்திருப்திசெய்ய வழியின்றி விழிக்கின்றனர். ஏராளமான போகத்தையும் அதிசுகத்தையும் மட்டில்லா இன்பத்தையும் அநுபவிக்க அதனால் மட்டிலலாத கோபம், அடங்காவாசை, திரவியவிச்சை முதலியவற்றால் மேலைநாட்டாரின் மனதைத் துன்பம் கவலையென்னும் கிணற்றருகில் தள்ளி அநேக நோய்களுக்குள்ளாக்கி அகால மரணத்துக்கு இடமுண்டாக்குகின்றது. அமெரிக்காபோன்ற நாகரீகம் பொருந்திய நாட்டில் ஜனங்கள் மனோவியாதி முதலியவற்றால் துன்பப்படுவது உலகத்தில் ஜீவிப்பதற்காக அதிக போட்டியாலும் ஒன்றன்பொருட்டு ஏராளமாய்க்கூடுவதாலும் ஏற்படுகிறது. போகபோக்யாதிகளுடன் ஜாதிய வாழ்வில் அடக்கமற்றவும் இயற்கையுமில்லாத குடித்தனம் செய்யவேண்டுமென்று விரும்புவதெல்லாம் தற்காலத்திய நாகரிகத்தின் பலனும்.

இந்த ஐக்கிய நாடுகளின் தொழிற்சாலைகள் மிகுந்த தலைமைப்பட்டினங்களில் எதைப்பார்த்தாலும், அவ்விடங்களிலுள்ள ஜனங்கள் தோட்டி முதல் தொண்டமான் வரையில் அதிகவேலை, அவசரம், சாவகாசமின்மை, வியாதி, சங்கடம், கவலை முதலியவற்றின் கீழ் மிதிபடுவதைக் கண்ணுறுகின்றோம். ஏழைகள் மத்திம வகுப்பாரைப்போல் ஜீவனம் செய்யவும், மத்திம வகுப்பார் இலட்சாதிபதிகளைப்போல் வாழவும், இலட்சாதிபதிகள் கோடீசுவரன்களாகவும் இப்படி ஒருவரையொருவர் பார்த்து மேலே போக ஆசைப்படுகின்றனர். ஒருவனுக்கு கோடி கோடியாயிருந்தும் திருப்தி அடைவதில்லை; மற்ற நாட்டுச் செல்வங்களையும், பிறஜாதியாரின் சம்பத்துக்களையும் அடையும்படியாக ஆசையினால் தூண்டப்பட்டு ஆகாயமண்டலத்தைப் பங்கிட்டாலும் அடங்காதபடி மேன்மேலும் வளருகின்றது. ஒவ்வொருவரும் இராப்பகலாய் அதிகமாக சம்பாதிக்கவும் செலவு செய்யவும், சமுகத்திற்கு அவசியமற்ற விருப்பங்களைப் பூர்த்தி செய்தல், புலநுகர்ச்சியின்பொருட்டு பெருந்தவைகளைப்பெறுதல்போன்ற அப்போது வழங்கும் முறையை அனுசரிக்கவும் கஷ்டப்படுகின்றனர்.

சிலநாட்களின் முன்னர் லண்டன்மா நகரத்தில் ஒருவர் வருடத்துக்குப் பதினாயிரம் பவுன் ஐம்பதினாயிரம் டாலர் பெற்றும் தமது தேவைக்குச்சரியாகவில்லையென்றும் இன்னும் வேண்டுமென விரும்புவதாக வாசித்தேன். அவர் தன்னை ஏழையென நினைக்கின்றார்; ஏழை தான் ஏனெனில் அவரது விருப்பங்கள் வெகுவாகவிருக்கின்றன. ஆகையால் அதிகமாக வேண்டியிருக்கின்றது. அதே மாதிரி நினைக்கும் மற்றோரும் இத்தேசத்தில் பலர் இருக்கின்றனர். ஒருநாளைக்கு இரண்டுவேளை உண்ணும் ஒருவன் மூன்றுவேளை சாப்பிட விரும்புகின்றான். மத்தியான போஜனத்தில் இருவகை பதார்த்தங்களுடன் உண்பவன் நான்கு வகையும் பிறகு அறுவகையும் விரும்புகின்றான். ரொட்டி, வெண்ணெய், காய்கறியுடன் உண்பவன் இறைச்சி பெரிதென நினைக்கிறான்; இரைச்சி கிடைத்ததும் கோழி விரும்புகின்றான். கோழி கிடைத்ததும் வாத்தும்; பிறகு வான்கோழிக்கும் ஆசைப்படுகிறான். இன்னும், முதலில் சுத்த தண்ணீர் அருந்துபவன் பீர் பெரிதென நினைக்கின்றான்; அது கிட்டியதும் கிளாரெட்டு வேண்டுமென்றும் பிறகு

சம்பாஞ் வேண்டுமென்கிறன். குடியிருக்க வீடின்றிக் கிரியும் ஏழை ஸ்திரீகளும் புருஷர்களும் முதலில் ஒண்டநிழலுக்குக்கஷ்டப்படுகின்றனர்; யாராவது பச்சாதாபப்பட்டு கொஞ்சம் தங்க நிழல்கொடுத்தால் அதோடு திருப்தியடைவதில்லை; பிறகு தேகத்தைமூட துணிகள் வேண்டியிருக்கின்றன: அவை கிடைத்ததும் விலையுயர்ந்த ஆடைகள் வேண்டியிருக்கின்றன; பிறகு கொஞ்சநாள் சென்றதும் போகாதிகளை யநுபவிக்க விருப்பம் ஏற்படுகின்றது; பிறகு காமசாலை முதலியவற்றிற்குப்போகப் பிரயத்தினப்படுகின்றனர். இவைகளும் கிட்டியபோது காம்மதிப்புள்ள ஒருவராக இருக்கவேண்டுமென எண்ணுகின்றனர். அம்மம்ம இம்மட்டோடு நிற்கமாட்டார்கள் மற்றைய நாட்டுப்பிரபுக்களுடன் தாம் உறவாட விரும்புவர் உலகத்தில் ஜனித்ததற்கு போகாதிகளையனுபவிப்பதே பயனென வெண்ணுபவர்களின் விருப்பம் இவ்வளவாகும்.

இ. நே.

XII

ஸ்ரீமத்

வால்மீகி ராமாயணம்.

பாலகாண்டம்.

பத்தாவது சருக்கம்.

சுமந்திரன் சொன்னமன்னற் கிமைமறு மறுமொ
[ழியுரைக்கும்
என்னவா முனிசிருங்க மிவண்வரு மமைச்சு
[சொல்லும் 1.

என்னவு ரோமபாத னுடன்சொலு மந்திரிமெய்
[யர்
உபாயமொ டுபாயுமில்லா விதமிக வெண்ணினம்
[யாம் 2.

வனசரன் முனிசிருங்கன் தவமொடத் தயனவார்
[வன்
அறிகல மணங்களுர்தம் விஷயமும் சுகமுமொ
[ன்றும் 3.

பொறிவழி விசித்தமத்தப் புருடர்சித் தப்ரமாதர்
புரந்தனிற் கொணருமாறு விரைவினி னிச்சயி
[த்தாய் 4.

கணிகைய ராங்குபோக வுருவமே கவர்வபூண்டு
மயர்வொடும் பலவுபாயத் தழைக்கலா மிழுக்கி
[லானை 5.

புரவல னுகவென்னப் புரோகிதர் விடையுமேற்
[றுப்
புரோகிதர் தாமுமாமாத் தியரொடாக் ஞபித்த
[வாங்கே 6.

கணிகைய ரோடுசொல்லக் கனவனங் குறுகி
[யோர்பால்
ஆச்ரம மணுகியேதம் தர்சனம் யத்னமானர் 7.

நீத்தவன் தயதீரன் கித்தமாச் ரமம்வதிந்தே
யத்தனை நித்தமேத்தி யாச்ரம நீங்கலாதான் 8.

தன்னுடைச் சனனவெல்லைத் தவத்தையே நோ
[க்குமுன்னன்
ஆணிது பெண்ணிதென்ன வன்னிய வகாமென்
[ன 9.

ஒன்றுமே யுணர்கலாதான் உவ்வழி யாகிவாயித்
[தான்
விபண்ணகச் சுதனுமன்ன வனிதையர் விழியினு
[ன் 10.

அவ்வலங் கிருதவார்வர் அமுதகா னம்பெர்ழிக்
[தார்
முனிசுத னைநெருங்கி மெல்லவே மொழியலானு
[ர் 11.

எவர்சுத ரென்னபேரோ வெம்பிரா னறியவார்
[வம்
தனிமையி னுருமில்லாத் தனிவனந் திரிவதே
[தோ 12.

என்னுமில் லெழிலினர்தன் மனங்கவர் வனத்த
[மாதர்
அருத்தியி னன்னைதன்னை யறையலா மென்னு
[முன்னி 13.

அன்னைவி பண்ணகனென் னன்னவன் சுதன்வ
[யிற்றில்
இருடிசி ருங்களென்ன விருநில மியம்புமென்
[பேர் 14.

அன்னவ னச்ரமம்மெம் மருகினி லினிதுகாணு
[ம்
செய்குவ னுங்குபூசை சேர்ந்தெலாம் விதிப்படிக்
[கே 15.

என்னுமம் முனிமகற்கேட் டெல்லரு மிசைந்த
[ராகி
அன்னவாச் சிரமநோக்கா வணுகின ரனைவரும்
[மே 16.

வந்தன ரவர்க்குபூசை வரன்சுத னளிப்பனுகி
கைப்புனல் காற்புனல்காண் கிழங்கிவை கனிக
[ளென்னக் 17.

கொண்டன ரானபூசை குவிமனச் சுகமொடெல்
[லாம்
முனிதனை வெருவிவேக முடுகுறு மனத்தரா
[னர் 18.

எமமனேர்க் கேற்றமிக்க கனியிவை முனிவநீரு
[ம்
எடுக்குமெம் மாறுபூரித் தமுதுணு மெம்மினை
[தின் 19.

என்றுதம் வயப்படுப்ப வின்பமுற் றணைத்தெ
[லாரும்
மோதக மீந்தவன்னர் மூரல்பல் வகையுமிக்க
20.

அன்னவை யினிதினுர்ந்தான் கனியுமன் னியமு
[மெல்லாம்
அறிகலா ருசியனுகி யரணிய வாசியானன் 21.

விப்ரனே வேண்டிவந்தோம் வழிபட விரதராகி
என்னவே கபடமாக வேகின ரன்னையஞ்சா 22.

போனபின் சுதனுமெல்லாங் காச்யப னுத்மவை
[யன்
இன்னல்கொள் மனத்தனுகி யேங்கின னலையலா
[னன் 23.

பின்னைநா ளன்னதேசம் போந்தனன் பொற்பினு
[னும்
மனப்ரிய ராங்குகண்டான் வனப்புறு வரைவி
[னுரை 24.

கண்டதும் வந்தவையற் கபடவாஞ் சாமனத்தர்
குறுகின ரனைவருமே கூடியே யீதுசொன்னர்
25.

சௌம்யவெம் மாச்ரம்மே சேரலாம் வாருமெ
[ன்ன
செல்வரும் சிறப்பினேற்கச் சீருடன் நிலையலா
[மால் 26.

அன்னவர் வார்த்தைகேளா வனைத்துமா மிதய
[மோட
எகும்மதியுமிந்த்ரன் தானுமே யறியமாதர்
27.

விப்ரனே டேகலாக விமலவன் மகத்துவத்தால்
தேவர்கள் பொழியமாரி தேசமே தழைத்ததன்
[ஞல் 23.

அதனிறை மாரிதன்ஞல் அந்தணன் வரவறிந்தே
சென்றெதிர் முனிகளிக்கச் சிரங்கொடு படியி
[லானுன் 29.

அருக்கிய முதலவான வனைத்துமவ் விதியினீந்
[தான்
என்னையனே கோபியாது எமக்குநல் வரங்கொ
[டென்ஞன் 30.

சுந்தவா ரத்தினேகிக் கன்னியை விதியினீந்தான்
சாந்தையைச் சாந்தமான மஙமொடு மகிழவா
[ஞன். 31.

C. R. P.

இச்சருக்கத்தில் ஸ்ரீமத் வால்மீகரானவர்,
சுமந்திரன் தசரத மகாராஜனுக்குக் கலைக்கோ
ட்டு மாமுனியை அங்கதேசத்துக்கு வரவழை
த்த உபாயத்தைச்சொன்னது கூறுகிறுர். அக்
காலத்தில் வசிகரிப்பதற்கு சாதாரணமாக ஸ்திரீ
ஜாதிகளையே அனுப்பிவந்தனரென்பது இந்த
ராமாயணத்தில் மாத்திரமல்ல, இன்னும் அநே
க புராணுதிகளில் யார் யார் தவம் செய்தார்க
ளோ, அவர்களையெல்லாம் பரிசோதிப்பதற்காக
ரம்பாஸ்திரீகள் அனுப்பப்பட்டு வந்ததாகச்சொ
ல்லப்பட்டிருக்கிறது. ஆனுல், மற்றப்புராணங்க
ளில் கேவலம் காம்யார்த்தமான சிங்கார ரசத்
தையே வர்ணிக்கப்பட்டுளது. யாதொரு விஷ
யத்திலும் திருசியம, ஆதேசம், அநுமானம்,
கிராகியம், துணிவு, பிராப்தி, அனுபவம், ஸார்
த்தகம் என வெட்டு நியாயங்கள் இருக்கின்றன
வென்பது தெரிந்த விஷயம். இச்சருக்கத்தில்
கலைக்கோட்டு மாமுனியை யழைத்துவர வேசி
யா ஸ்திரீகளே அனுப்பப்பட்டாலும், நாம் இவர்
கள் விஷயத்தில் எதிர்பார்க்கக்கூடிய காம்யார்த்
த சித்தமானது மேலெ எட்டுவிதமாக ஆராய்ச்
சிசெய்யப்பட்டால், எட்டும் எட்டு விதமாகவே
புலப்படுகிறது. ஆகையால், சிங்கார ரசமானது
மெத்த விசேஷமாக விளங்குகின்றது. சிங்கார
விஷயம் வேசியா ஸ்திரீகளாகிற திருசியமானது
சாதாரணம். ஏகாங்கித தர்சனமும் காம்யார்த்
தத்திற்கு அநுகூல காரணமாவதும் சாதாரண
மே. ஆதேசத்தை யோசிக்குங்காலத்தில், முனி
வர் பெண்பொருளறியாதவராக விளங்குகிறுர்,
ஸ்திரீகளோ விஷய இச்சையையுண்டாக்க முய
ல்வதாகவில்லை. அநுமானத்தை யோசிக்கிலோ,
முனிவர்பால் யாதொன்றும் விளங்குவதில்லை;
ஸ்திரிகள் பக்ஷத்திலோ பயபூர்வமான கபட நித
ர்சனமாய்க் காண்கிறது. கிராகியத்தைப் பார்த்
தாலோ, முனிவர் பக்ஷத்தில், ஆலிங்கன நிச்சய
மறியாமை புலப்படுகிறது; ஸ்திரீகள் பக்ஷத்தில்
ஆலிங்கனுயதார்த்த சுவரூபம் விளங்குகிறதில்லை.
துணிவை யோசித்தாலோ முனிவர்பால், ஸ்திரீ
சித வைபவமேயில்லை - ஸபர்சானு சபலமும் சா
மான்யமாகவே காண்கிறது; ஸ்திரீகள் பக்ஷத்தி
லோ, கேவலம் சுத்தவசிபகார்யம் அகாரணமா
னதாக மாத்திரம் காணுகிறது. பிராப்தியை
நோக்குங்கால், இருவர் பக்ஷத்திலும் விஷயப்
பிரப்தியையே விளக்கவில்லை. அனுபவமோ,
முனிவர்பால் அதிச்சய நிர்ஹேதுவான சங்க
வாஞ்சையும், ஸ்திரீகள் பக்ஷத்தில் சுவபாவ அ
னுபவ விச்சையின்மையும் விளங்குகிறது. ஸா
ர்த்தகமோவென்றுல் "மலைதோண்ட எலிஅகப்
பட்டால்" என்ன அதிசயமோ அம்மாதிரியாக
வே ஸ்திரீகளை அனுப்பின விஷயம் "குழக்கட்
டை" ருசி ஸார்த்தகமாக விளக்கியிருக்கிறது.

இதுதான், எவ்விதத்திலோ ஸ்வாதீன கார்யா
ஸார்த்தகமாயிற்று, என்று வேசியா ஸ்திரீகளை
அனுப்புவித்த மகான்களின் யதார்த்த புத்தியை
விசாரிக்குங்காலத்தில் மொத்தமாக வேசியா ம
ணிகள் சுவாதீனம் செய்யும் விஷயத்தில் சிலாகி
க்கத்தக்கவரென்று மாத்திரம் கருதினதாகக்
காண்கிறது. ஆனுல் நடந்த காரியத்தின்மேல்
அனுப்பின மகான்களின் நுட்பத்தை விவரிக்கப்
புகுந்து - சிற்றுண்டியால் ஸத்காரம் செய்து
வரவழைத்தாலென்ன? வேசியர்களிடம் சிற்று
ண்டியை அனுப்புவானேன்? சன்மார்க்கரை அ
னுப்பினுலென்ன? ராஜனும் விபண்ணகரிடம்
மணம்பேசி முடித்தாலென்ன? - என்னும் கேள்
விகளுக்குச்சமாதானம் சொல்லத்தொடங்கினுல்,
இந்த ஒரு சருக்கமே ராமாயணமாகவும், நவர
சாலங்கார சாஸ்திரமாகவும் ஆகிவிடும். ஆகி
லும், கன்யாதான பலாஸ்பதமான சுத்தப்பிரம
சரியத்துக்குப் பழுதில்லாமலும், கேவலப்பிரம
சரியவாத்மதத்வத்திற்கு மாயாசவள ஆஸ்பதம்
தோற்றுவித்து சம்சாரத்வத்தைப் பிரபலிப்பிக்
கவும், இத்தன்மையாகிய சகுனோ பாஸனையினு
லேயே பிரபஞ்சம் நிலைபெறுமென்னும் நீதியை
ப்புகட்டவும், யோக்கியமாக இக்கதாதிருஷ்டா
ந்தத்தை விளக்கினதோடுகூட, ஆத்மமாயா சம்
மந்தானு சம்மந்தமும், ஹேதோத்தேசமாக விள
க்கியிருப்பதே, ஸ்ரீமத் வால்மீகருடைய திவ்விய
ஞானத்தையும், போதனு சக்தியையும், அவரு
டைய திவ்விய வாக்கின் ரசானுகுண வைபவத்
தையும் வியப்பிக்கின்றது. நண்பர்களே! யாம்
எழுதிவரும் சஞ்சிகையானது இம்மாதிரி விஷய
ங்களை விரித்துரைக்க இடமில்லாததாகையால்,
யாம் ஏதோ சூசிப்பித்ததினுலேயே திருப்திய
டையக்கோறுவேம். யாராவது இவ்விஷயங்க
ளைப் பிரசங்க பூர்வமாகக்கேட்க விரும்புவார்க
ளாயாயின் ஒருவாறு திருப்தியடையக்கூடும்.
வேண்டியவைகளை எழுதியறிவித்தாலும் விடை
யளிப்பேம். மன்னிக்கவும்.

C. R. P.

News and Notes.

வர்த்தமானங்கள்.

கோயமுக்தூர்-காலநிலை:- சென்ற இரண்டு
வாரங்களாக மழை மட்டுப்பட்டிருக்கிறது. பனி
ஆரம்பிக்கும் போலிருக்கிறது. பிளேக் நோய்
சிற்சிலவிடங்களில் ஒட்டிக்கொண்டே யிருக்கி
றது. முனிசிபாலிடியார் டிஸ்இன்பெக்ஷன் வி
ஷயமாக நோட்டீஸ் ஒட்டிவருகிறுர்கள். பாலக்
காட்டிலும் இந்நோய் பரவிவிட்டது. வீடுகளி
ன் காவலாளிகளே கைதிகளாக வேற்படுகின்ற
னர்.

ஓர் வழிப்பறி - திருப்பூரிலிருந்து ஈரோடு
போகும் ரஸ்தாவில் வண்டியேறிப்போகும் 7
பெயர்களை மறித்து அடித்து காயப்படுத்தி சுமா
ர் 150 ரூபாய் பொறுமான சொத்துகளை அப
கரித்துக்கொண்டு போயினர். குற்றவாளிகளைப்
பிடிக்க போலீசார் முயன்று வருகிறுர்கள்.

புயல் - கீழ் வங்காளத்தில் பெரும்புயலடித்
து பெருத்த ஜன சேதமும் பொருட் சேதமும்
நேர்ந்திருப்பதாகப் பத்திரிகைகள் கூறுகின்றன.

பூகம்பம் - பஹாசிஸ்கானத்தில் பூகம்பம் உண்டாகி பெல்பர்ட்ஊர் பாழானதாயும் அநேக கட்டிடங்கள் விழ்ந்து குடும்பத்தோடு அநேகர் மாண்டுபோனதாயும் சமாசாரம்.

சட்டசபை - சென்னை சட்டசபை சம்மந்தமாக அடுத்த ஜனவரி-மீ 4-உ எலக்ஷன் நடக்க வேண்டுமென உத்தரவாகியிருக்கிறது.

பொருட்காக்ஷி - கல்கத்தாவில் ஜப்பானியப் பொருட்காக்ஷி நடைபெற்று வருவதாக வர்த்தமானம். இவ்வாறு அயல் நாட்டார் தத்தம் தொழிலபிவிர்த்தி செய்து வருகையில் நமது நாட்டாரும் அயல் தேசங்களில் பொருட்காக்ஷி செய்யத்தலைப்பட்டால் நலமாயிருக்கும்.

நூதன யந்திரம் - ஜாங்கு நாட்டில் ஷேக் மகம்மத் மாஸம் ஆலி சாஹிப் என்பவர் விறகு கிலக்கரி எண்ணெய் மின்சாரம் இவையில்லாமலே முறுக்காணி ஒன்றால் வேலை செய்யக்கூடிய ஓர் யந்திரத்தைக் கண்டுபிடித்திருக்கிறாரென்றும் அதை லாகூரில் கூடும் பொருட்காக்ஷியில் ஆஜர் செய்யப்போகிறதாகவும் வர்த்தமானம்.

குடைகள் - புறு பாஸ்கரானந்தத் தொழிற்சாலையில் சுதேசிக்குடைகள் செய்யப்படுகின்றனவாம்.

சஸ்திரக்ரியை - பிராஞ்சு தேசத்தில் டாக்டர் தொப்யேன் என்பவர் ஒருவனுக்கு ஆட்டின் இரத்தக்குழாயை வைத்துத் தைத்து இரத்த வோட்டம் சீர்ப்படுத்தினாராம். இவ்விதம் சதை மூளை, இரத்தக்கருவியிவைகளுக்கு பதில் வேறு மிருகங்களின் அங்கங்களை வைத்து சொஸ்தப்படுத்துவது அருமையான வேலையென்பது சொல்லவேண்டுவதில்லை.

கொலை - ஜப்பானிய ராஜதந்திர நிபுணராகியும் கொரியாவில் ராஜப் பிரதிநிதியாயும் இருந்த பிரின்சு ஐடோவென்பவரை ஒரு கொரிய தேசத்தான் சுட்டுக் கொன்றதைப்பற்றி உலகமெல்லாம் விசனிக்கிறது. இவர் ராஜ்ஜிய நிர்வாக விஷயங்களில் மிகத்தேர்ச்சி யடைந்தவரென அறிகின்றோம். கொலைக்கு நிலையே யில்லையெனத் தெரிகிறதல்லவா ?

நூதன பத்திரிகை வரவு - 'இந்து வர்த்தமானி.' என்னும் பத்திரிகை திருவாரூரில் மாதமோர் முறை பிரசுரிக்கப்பட்டு வருட சந்தா ரூபாய் 1-8-0 யாக நடைபெற்று வருகிறது. இதில் தற்காலம் நமது தேசத்திற்குப் பயன்படக்கூடிய விஷயங்களெல்லாம் இனிய நடையில் எழுதப்பட்டிருக்கின்றன.

'ரங்கோன் ரஞ்சிதபோதினி' (Friendly Instructor) என்னும் மாதாந்தரப் பத்திரிகை ஆங்கிலேயத்திலும் தமிழிலும் ஸ்ரீமான் S. சாமுவேல் B. A அவர்களாற் பிரசுரிக்கப்பட்டு வருகிறது. இதில் மனோவசியம், சரீரத்துவம், வைத்தியக்குறிப்பு, சுகாதாரம், ஒழுக்கம், நீதி, விடுகதை முதலியவைகளைப் பற்றிய வியாஸங்கள் சிறப்பாக எழுதப்பட்டிருக்கின்றன. இங்கிலீஷ் பத்திரிகையின் வருட சந்தா ரூபாய் 1. தமிழ்ப் பத்திரிகையின் வருட சந்தா ரூபாய் 2.

காசி பட்டுப் பீதாம்பரங்கள்.

சுத்தமான பட்டு ! சகாயவிலைகள் !! நாணயமான ஜரிகை !!!

பிடித்தமில்லாததைத் திருப்பிப்பெற்றுக்கொள்வோம்.

கீழேகண்ட பட்டு தினுசுகள் எல்லா நிறத்திலும் கிடைக்கும்.

பட்டு சேலைகள்.—16 முழம் நீளம் $2\frac{1}{2}$ முழ அகலம் விளிம்பும் முந்தியுஞ் ஜரிகை வேலைகள் உடல் சாதா, விலை ரூபாய் 20 முதல் 50 வரை.

அதேமாதிரி சேலை உடலிலும் ஜரிகைப்பூ புட்டா போட்டது. ரூபாய் 25 முதல் ரூபாய் 100 வரை.

ரவிக்கைகள்.—விளிம்பும் முந்தியும் ஜரிகை வேலைகள் உடல் சாதா ரூபாய் 2முதல் ரூபாய் 8 வரை.

உடலிலும் புட்டா ஜரிகை பூவேலை செய்தது ரூபாய் 3 முதல் 20 வரை.

துப்பட்டாக்கள்.— 6முழ நீளம் $2\frac{1}{2}$ முழ அகலம் விளிம்பும் முந்தியும் ஜரிகை வேலை உடல் சாதா ரூபாய் 8 முதல் 25 வரை.

அதேமாதிரி உடலிலும் சரிகை பூவேலைகள் ரூபாய் 14முதல் 50 வரை.

சவுக்கங்கள்.—$2\frac{1}{2}$ முழ நீளம் $2\frac{1}{2}$ முழ அகலம் சுத்தி ஜரிகை மூலையில் மாங்காய் ரூபாய் $6\frac{1}{2}$ முதல் 15வரை.

அதேமாதிரி உடலிலும் பூக்கள் போட்டது ரூபாய் 9முதல் 30வரை.

வெண்பட்டு வேஷ்டிகள்.— 6, 7, 8, 9, முழம் நீளம் $2\frac{1}{2}$, $2\frac{3}{4}$, 3 முழம் அகலம் சுத்த வெண்பட்டு கோயமுத்தூர் வேஷ்டிமாதிரி சிகப்பு சன்னக்கம்பி போட்டது விலை ரூபாய் $8\frac{1}{2}$ முதல் 20 வரை. அதேமாதிரி வேஷ்டிகள் சிகப்பு சன்னக்கம்பிக்குப் பதிலாக ஜரிகையால் சன்னக்கம்பி போட்டது ரூபாய் 12முதல் 30 வரை.

ஷை சவுக்கங்கள். — $2\frac{1}{2} \times 2\frac{1}{2}$ முழம் சிகப்புக் கம்பிக் கரை போட்டது ரூபாய் 5முதல் 8வரை. ஜரிகைக் கம்பி போட்டது ரூபாய 9முதல் 15வரை.

ஷை. வெண்பட்டு வேஷடிகள்.— ருத்திராக்ஷக்கரை போட்டதும் அதேவிலைக்குக கிடைக்கும்.

பட்டுதலைக்குட்டைகள்.— $4\frac{1}{2} \times 4\frac{1}{2}$ முழம் சதுரம் வெண்பட்டு ஜரிகைக் கரை ரூபாய் 13 முதல் 25 வரை எல்லாக் கலரிலும் கிடைக்கும், மத்தியில் ஜரிகைப்புட்டா பூ போட்டும் கிடைக்கும்.

வைதீகர்களுக்கு கம்பிளி மடிதாவளிகள்.— 6, 7, 9, 12, 15 முழம் நீளம் அணு 10 முதல் ருபாய் 5வரை.

சுத்தமான கம்பளி போர்வைகள்.— 6 முழம் நீளம் 3 முழம் அகலம் எல்லா நிறத்திலும ரூபாய் 5 முதல் 8, வரை.

காஷ்மீர் கம்பளி நயம் சால்வைகள்.— ஷை அகல நீளம் எல்லா நிறத்திலும் சாதா ருபாய் 8முதல் 15 வரை பட்டினால் விளிம்பும் முந்திவும் ஜரிகைவேலைசெய்தது மூலையில் மாங்காய் போட்டது ருபாய் 10 முதல் 20 வரை. ஜரிகையில் அதேமாதிரிவேலைசெய்தது ருபாய் 12 முதல் 50வரை.

உருத்திராக்ஷங்கள்.— 6 முகம் 33 உள்ள மாலை ருபாய் 1முதல் 5வரை 7, 8, 9, 10, 11, 12, 13, 14, 15, 16 முகம் தனி மணிகள் ருபாய் 5முதல் 25வரை. 108 கொண்ட ஜபமாலை அணு 5முதல் ருபாய் 5வரை.

வயிரவர் காசிக்கயிறு.—1 நெ. 100க்கு ருபாய்3 2நெ ருபாய் $2\frac{1}{2}$, 3 நெ. ருபாய் 2, ஷை சிறிது அணு 6, அதிக சிறிது அணு 4.

பெண்குழந்தைகள் விளையாடும் பித்தளை பாத்திரங்கள் செட்டு.— பித்தளை வெங்கலத்தால் செம்பு, குடம் கரண்டி முதலிய 27 சாமான்கள் அடங்கியது, சிறிது ரு. 2, பெரிது ருபாய் 4.

நயம் பால்காயம்.—சுத்தமானது தோலா 1க்கு அணு2

சகலவிதமான ஜர்மன் சாமான்களும் யானை தந்தம் காப்புகளும் கிடைக்கும்.

தளுக்குப் பொட்டு,—என்ற குச்சிலியப் பொட்டு 1000ம் ருபாய் 1-4-0.

விலை ஜாப்தா இனமாக அனுப்பப்படும்.

சிங்கப்பூர். பினங்கு, முதலிய வெளிதேசத்தார் ஆர்டருடன் முன்பணம் அனுப்பவேண்டும்.

கடிதங்கள் தமிழில் எழுதலாம்.

விலாசம்:— மானேஜர்,

பட்டுப் பீதாம்பரக் கம்பெனி, காசி.

BENARES CITY.

The Coimbatore Friends' Association (Limited.) Printers.

கோயமுத்தூர் பிரண்ட்ஸ் அசோஸியேஷன் (லிமிடெட்.) அச்சுயந்திரசாலை.

இக்கம்பெனியின் மூலதனம் ரூ. (20,000) பங்கு 1க்கு 5-ரூபாய் வீதம் (4000) பங்குகளாகப்பிரித்து, இந்தியன் கம்பெனீஸ் 1882 வருஷத்திய 6-வது ஆக்டுப்படி 1908 வருஷம் மே மாதத்தில் ரிஜிஸ்தர் செய்து நடத்தப்பட்டுவருகிறது.

இக்கம்பெனியில் இங்கிலிஷ் தமிழ் இரண்டு பாஷைகளில், நேர்த்தியாய் பல கலர்களில் அச்சிடுவதும் கில்ட்செய்வதும்பாங்குகளுக்கும்மண்டிகளுக்கும் கணக்குப்புத்தகங்கள் முதலானதும் தயார்செய்து தோல்காலிகோமுதலிய பயிண்டும் செய்யப்படும். இப்போது அனேக பங்குகள் சேர்ந்திருக்கிறது. கொஞ்சம் பங்குகள்தான் பாக்கியிருக்கிறது. இஷ்டமுள்ளவர்கள் மேற்படி கம்பெனியின் மானேஜருக்கு எழுதி அப்ளிகேஷன் பாரங்கள் தருவித்துக்கொள்ளலாம். ரூல்ஸ் புக்குவேண்டுவோர் 4 அணா அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

இக்கம்பெனியானது நிர்வாகசபையார் அவர்களால் நடத்தப்பட்டுவருகிறது. 1908 வருஷம் மே மாசம்முதல் 1908 வருஷம் டிசம்பர் மாசம் 31-தேதிவரைகூடிய 8 மாதத்திற்கு மாதம் 1க்கு, 100க்கு ரூ. 3-9-5வீதம் லாபம்தேறியிருக்கிறது.

இதன் பிராஞ்சு ஆபீஸ் திருப்பூரில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது.

ஜி. அனுமந்தருவ்,
மானேஜர்.

விளம்பரம்.

இதனால் சகலமான கனவான்களுக்கும் தெரியப்படுத்துவது யாதெனில்,

கோயமுத்தூர் இரங்கேகவுண்டன்வீதி (சின்னக்கடைவீதி) மேல்புரம் சிரேணியில் 487, 488 நெ. கதவிலக்கமிட்ட மெத்தைக்கட்டடத்தில் புதியதாக ஒரு கரூர் ஜவுளிக்கடையில் சேலம், ஜலகண்டாபுரம், தஞ்சாவூர், கும்பகோணம், ராசீபுரம், பவானி, நரசிங்கன்பேட்டை தாராபுரம், குற்றாலம், கொறநாடு, அய்யம்பேட்டை, காஞ்சீபுரம், ஆரணி, மதுரை, உப்பாடை, காக்கிநாடா, நெல்லூர், சென்னை, பனாரஸ், உள்ளூர் முதலிய இடங்களில் தயாராகும் முதல்தரமான ஜவுளி தினுசுகளை சுவல்ப லாபத்திற்கு கரூர் விலைக்கு விற்கப்படும்.

மேற்படி கடையில் விற்கும்படியான சரக்குகள் நயமாயும் கெட்டி சாயமுள்ளதாயுமிருக்கும். கோறும் சரக்குகளில் வித்தியாசமும் மாறுபாடுமில்லாமல் விற்கப்படும். எங்கள் கடையிலிருக்கும் சரக்குகளை எங்கள் ஏஜண்டுகள் மேற்படி இடங்களுக்குச் சென்று எங்கள் கடைக்கென்றே தயார்செய்யப்பட்டிருப்பதால் நெசவு அழுத்தமாகவும் சரக்குகள் திடமாகவும் விலை சரசமாகவுமிருக்கின்றன. எல்லாருடைய அநுகூலத்தின்பொருட்டே யாவர்க்கும் ஒரே விலையாக சுவல்ப லாபத்திற்கு விற்கவேண்டுமென்பதே எங்கள் முக்கிய கருத்து. இன்னும் வேண்டிய விஷயங்களுக்கு எங்கள் கடையின் ஏஜண்டுகளாகிய மகா-ா-ஸ்ரீ K. தேவதத்தய்யர், B. வரதராஜுலுசெட்டியார் இவர்களிடத்தில் நேரில் கேட்டுத்தெரிந்துகொள்ளலாம்.

☞ நல்ல முதல்தரமான கஸ்தூரியும் விற்கப்படும்.

V. R. K. & Co.,
Cloth Merchants & Commission agents,
Coimbatore and Vellakkener.

பிழை திருத்தம்.

பக்கம்	பேஜ்	வரி	பிழை	திருத்தம்
165	1	17	பன்னிரு	பதினான்கு
164	2	26	மார்பீதில்	பார்பீதில்
...	...	27	பறக்கமல	பறக்கபல

விளம்பரம்.

கிராம உத்யோகஸ்தர்களைக் குறித்த சட்ட புஸ்தகம்.

(விநா விடை.)

1, 2 வது பாகங்கள்.

கிராம முன்சீபுகள் கர்ணங்கள் கிராம உத்தியோகஸ்தர்களைக்குறித்த ஸ்பெஷல் டெஸ்டு பரிக்ஷைக்குப்படிக்கும் வித்தியார்த்திகள் கிராம முன்சீப் கோர்ட்டுகளில் வக்கீல்களாகத் தொழில்புரிகிறவர்கள் மேற்படி கோர்ட்டுகளில் வழக்குகள் நடத்தவேண்டிய கக்ஷிக்காரர்கள் மற்றுமுள்ள ஜனங்கள் முதலிய எல்லோருக்கும் தெரிவித்துக்கொள்கிறதாவது.

சென்ற சிலவருஷங்களுக்குள் கிராம முன்சீப் கோட் என்றும் கிராம முன்சீப் போதினி என்றும் ரெவினியூ கோட் மானுயல் என்றும் கிராம முன்சீப் கோட் கம்பிளீட் மானுயல் என்றும் இப்படி பற்பல பெயர்களுடன் அநேக புஸ்தகங்கள் விஷயமான நோட்டீசுகளையும் புஸ்தகங்களையும் உங்களில் அநேகர் பார்த்திருப்பீர்கள் அந்த புஸ்தகங்களில் அநேகம் தமிழிலிருக்கிற (கவர்ன்மெண்டாரால் ஜில்லா கெஜட்டில் பிரசுரஞ்செய்யப்பட்டிருக்கிற) சட்ட புஸ்தகங்களுக்கு நகலகாவே இருக்கிறதே தவிர வேறில்லை. இதுவரை வெளியான அப்படிப்பட்ட புஸ்தகங்களில் கிரிமினல் விஷயங்களை அடங்கியுள்ள திருநெல்வேலி வக்கீலொருவரால் எழுதப்பட்டுள்ள 'கிருமினல் வியவகார சங்கிரகம்' என்னும் புஸ்தகத்தைதவிர எனக்கு தெரிந்தவரை சட்ட ஞானமுள்ள கனவான்களின் நல்லபிப்பிராயத்தைப்பெற்ற புஸ்தகங்களே இல்லை.

ஜனங்களுடைய பொதுநன்மையை உத்தேசித்து, கவர்மெண்டாருடைய உத்தரவின்படி 1895 வருஷத்தில் தயார்செய்யப்பட்டு கிராம உத்தியோகஸ்தர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற சட்டபுஸ்தகத்தில் 1, 2வது பாகங்களை மேற்படி வருஷத்துக்கு பின்னிட்டமாறுதல்களை அனுசரித்தும், ஜில்லா நிலையான உத்திரவுகளில் முக்கியமானவற்றையும், இந்தியதேசத்து முத்திரைக்கடுதாசி ஆக்டு, கோர்ட்டு கட்டண ஆக்டு, சாக்ஷி ஆக்டு, கால நிர்ணயச்சட்டம் முதலியவைகளில் கிராமஉத்தியோகஸ்தர்களுக்குவேண்டிய பாகங்களை அவற்றிற்கு பொருத்தமான இடங்களில் அமைத்தும் பாஷைநடை கடினமாயிருக்கிற இடங்களில் சகலருக்கும் தெரியும்படியான சாதாரணவார்த்தைகளால் அவற்றிற்கு அர்த்தஞ்சொல்லியும், படிப்போருக்கு விஷயங்கள் நன்றாய் மனதில் பதியும்படியாக வேண்டிய இடங்களில் உதாரணங்களை எடுத்துக்காட்டியும் வினாவிடைரூபமாக எழுதியிருக்கிறேன்.

கிராமக் கோர்ட்டில் வைக்கவேண்டிய ரிஜிஸ்டர்கள் ஹைகோர்ட்டார் அனுப்பவேண்டிய சம்மன்கள், நோட்டீஸ்கள், கட்டளைகள், ஸ்டேட்மெண்டுகள், ஹைகோர்ட்டார் அனுப்பவேண்டிய டிக்கிரிகள், இஸ்தியார்கள் கக்ஷிக்காரர்கள் கொடுக்கவேண்டிய பிளெயிண்டுகள், மனுக்கள் முதலியவற்றிற் சொல்லலாம் மாதிரிகளும் எழுதிக்காட்டப்பட்டிருக்கிறது.

இது அச்சிடப்படுவதற்குமுன் பார்வையிட்ட கோயமுத்தூர் ஜில்லா கலெக்டர்கனம்பொருந்திய லேபனல் வைபாட்டு துரையவர்கள் சந்தோஷப்பட்டு அச்சிடும்படி என்னை உற்சாகப்படுத்தினார்கள். தவிர கோயமுத்தூர் பென்ஷன் சப் ஜட்ஜி ம-ா-ஸ்ரீ T. இராமசமி ஐயங்காரவர்களும், சத்தியமங்கலம் தாசில்தார் ம-ா-ஸ்ரீ C. இராஜகோபாலாச்சாரியார் அவர்களும் கோயமுத்தூர் ஹைகோர்ட்டு வக்கீல் ம-ா-ஸ்ரீ B வெகடாசல முதலியாரவர்களும் சிறந்த அபிப்பிராயங்கள் கொடுத்திருக்கிறார்கள்.

நல்ல கடிதத்தில் தெளிவான எழுத்துக்களில் அச்சிடப்பட்டு 204 பக்கங்களுள்ள இப்புத்தகத்தின் விலை ரூபாய் I-0-0 தபாற்கூலி அணா 4 "பிரபஞ்சம்" பத்திரிகையின் சந்தாதாரர்களுக்கு தபாற்கூலி உள்பட ரூ. I-3-0க்கு கொடுக்கப்படும். சந்தாதாரர்கள் தங்களுடைய சந்தா நெம்பரைக் கண்டு பெயர், விலாசங்களை தெளிவாய் விலாசத்துக்கெழுதினால் வி. பி. போஸ்டு மூலம் அனுப்பப்படும்.

K. N. ரங்கய கவுண்டர்,
கிராம முன்சீப், கம்புளியம்பட்டி,
விஜயமங்கலம் போஸ்டு, கோயமுத்தூர் ஜில்லா.

ஓர் முக்கிய அறிவிக்கை.

சகல சுகுண தனசம்பன்னர்களான எமது தேசாபிமானிகளே! இந்தக் கோயமுத்தூர் ஜில்லாவில் திருப்பூரானது வர்த்தக விஷயத்தில் ஒரு முக்கியமான ஸ்தலமாயிருப்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயம்- இது ஒரு ரயில்வே ஸ்டேஷனாகயிருப்பதுமன்றியில் ஈரோடு, சத்தியமங்கலம், கோபிசெட்டிபாளையம், பவானி, புளியம்பட்டி, சென்னிமலை, ஊத்துக்குழி, தாராபுரம், காங்கயம், உடுமெல்பேட்டை, நகமம், புள்ளாச்சி, கோமங்கலம், சூலூர் பிர்க்கா கிராமங்கள், பல்லடம், திருப்பூர் பிர்க்கா கிராமங்கள், ஆகிய இவற்றின் மத்தியிலுமிருக்கிறது. மெற்படியூர்களிலிருந்து விளையும் பருத்தியானது இவடம்தவராமல் வருகிறது- இவ்வூரில் பஞ்சரைக்கும் கம்பெனி ஒன்றும், பஞ்சு மூட்டைசெய்யும் கம்பெனி ஒன்றும், ஆக இரண்டுதான் இருக்கிறது. மேற்படியூரிலிருந்து பருத்தியைக் கொண்டுவந்து மூட்டை கட்டுவதற்காக மாத்திரம் திருப்பூர் உபயோகமாகிறதென்றால், இதைவிட மனோவருத்தத்தைக் கொடுப்பதும், காரியாலோசனையில்லாததும், வேறெதாவது உண்டா? ஐயா! மேற்படி ஊர்களில் கனவான்கள் இல்லையா? தனவான்களில்லையா? ஆலோசனை புத்தி சக்தி சாமர்த்தியமுள்ளவர்கள் யாவரும் இல்லையா? எவ்வளவோ புண்ணியவான்கள் இருக்கிறார்களே, நமது தேசம் பாதாளத்திற்குப் போகவேணுமா? புண்ணியவான்கள் எல்லாவரும் ஒருமைப்பட்டு, ஒரு நூலாலை ஏற்படுத்துவது உசிதமல்லவா? சுமார் 1250000 ரூபாய் மூலதனம் ஏற்படுத்தி 10000பங்குகளாகப் பங்கு ஒவ்வொன்றுக்கும் 125 ரூபாய் வீதம் சேகரம் செய்வது முடியாத காரியமா? கேவலம் 15ரூபாய் கந்தாயமுள்ள குடியானவனும் பங்காளியாகலாமே, ஏழை எளிமையர் 1000பேர் மரியாதையாகப் பிழைக்க வழியேற்படுமே. முதலாளிகளுக்கு லாபம் கிடைக்கமாட்டாதென்று ஒரு சம்சயம் ஏற்படலாம், இவ்விடம் பருத்தியைக்கொண்டுவரும் செலவையும், பிறகு அப்பருத்தியைப் பஞ்சாகப் பண்ணி நூல்செய்ய இதரவிடங்களுக்கு அனுப்பும் செலவையும், மறுபடியும் அந்த நூலைத் தருவிக்கும் செலவையும், பார்த்தால, எவ்வளவு குறைந்தாலும் 100க்கு மாதம் 1க்கு 3 ரூபாய் லாபத்திற்குக் குறைபடாதென்பது எமது அபிப்பிராயம். ஆகையால் நமது தேசாபிமானிகள் யாவரும், அவரவர் சம்மதத்தை உடனே அடியிற்கண்ட விலாசத்திற்குத் தெரிவிக்கக் கோருகிறோம் மேற்படி கம்பெனியைச் சட்டப்பிரகாரம் ரிஜிஸ்டர் செய்வித்து 'லிமிடெட்' ஆகச்செய்து தொழில் நடத்திவரலாம் மேறபடி சம்மதம் தெரிந்தமேல் இதரவிஷயங்களுக்குவேண்டியஏற்பாடுகள் செய்து விவரமான நோட்டீசு அனுப்பபபடும். இதுவரை 1500 சம்மதங்கள் கிடைத்திருககிறது

பிரபஞ்ச பத்திரிகை எடிடர் திருப்பூர் என்று மேல்விலாசம் எழுதியனுப்பவும்.

அ. கெ. ற. ச. வே. வே. பெ. ச. ந. ல. வெ. ஜி ஹ.

இவ்வச்சாபீசில் விற்பனைப்புத்தகங்கள்.

			ரூ.	அ.	பை.
தேடச்சிறந்த தெரிசனம் (சிரோர்ட்டயமகவந்தாதி.)	(By Editor) ...	...	0	1	6
நன்னூல்யாப்பதிகாரம்	Do ...	...	0	3	6
சிவமகாபுராணம். (வேலாயுதபண்டிதரால்)	...	...	3	0	0
சிவில் புரொசீஜர் கோட். (புதிது)	...	...	0	12	0

சந்தாயம் செலுத்தி வரவு வைக்கும் இரசிது புஸ்தகம் 9 பை. முதல் 2 அணா வரை உண்டு

ADVERTISEMENTS.

(Per-annum) 1-வருஷத்திற்கு	Full page (முழுப்பக்கம்)	Rs.	10	0	0
	Full Column (அரைப்பக்கம்)		6	0	0
	Half Column (கால்பக்கம்)		3	0	0

விஞ்ஞாபனம்.

எமது அருமை நேயரே! இச்சஞ்சிகை தொடங்கின உத்தேசமெல்லாம் தங்களைப்போல்பவர், எமது நுண்மையறிவிற்கெட்டியதிரட்டி வரைந்துளவற்றை இனிதிற்கொண்டு, ரிஷிப்ரோக்தமாங் கதை பலவும் வரைந்த விடத்து நேர்ந்த பிழையை மன்னித்து, தெய்வீகமான ரிஷி கதைகளை அதிசயோக்தியின்றி தர்மார்த்தகாம மோக்ஷமெனும் புருஷார்த்தங்களை எல்லாவருமடையும் பொருட்டு, வன்பெட்டினின் வாய்ந்ததமிழ்க்கவியால் எழுதத்துணிந்த எமதுபிரயத்நம் சபலமாக, இந்தச்சஞ்சிகையைத்தருவிக்கவும், தங்களுடைய சிநேகிதர் பலர்க்குந்தெரிவித்து அவரைப்பெறுமாறு செய்யவும், வினயபூர்வமாயப்பிரார்த்திக்கின்றனம்.

G. HANUMANTHA RAO & Co.,
COIMBATORE.

The Coimbatore Friends' Association (Limited) Branch-Tirupur.

THE WORLD.

REGISTERED. M. 823.

பிரபஞ்சம்.

பிரபஞ்ச தர்மம், நடவடிக்கை, சட்டம், வித்தியா விநோத முதலிய வற்றைப்பற்றிய ஓர் மாதாந்தரத் தமிழ்ச்சஞ்சிகை.

ஜி. ஹநுமந்தராவ்,
பத்திராதிபர். (*Proprietor.*)

கோயமுத்தூர் பத்மநாப ஐயர்,
(*Editor & Publisher.*) பிரசுரகர்த்தா.

வருஷ சந்தா ரூ. 2—4
மாதத்திற்கு ... 1—2
பிரதிசஞ்சிகை ... 0—3
வெளிநாட்டுத் தபாற் கூலி பிரத்தியேகம்.

கலி 5011.
சௌமிய-௵ மார்கழி-மீ.
DECEMBER 1909.

புஸ்தகம் 1.
சஞ்சிகை 7.

விஷய சூசிகா.	பக்கம்.	INDEX.	Page
1 நித்யகர்ம்மாநுஷ்டானம்	193	1 Daily duties	193
2 இலக்கணநூல்	195	2 Tamil Grammar ...	195
3 கம்பர் சிலேடைக்கவி	198	3 Kamban's ironical Stanza ...	198
4 புலால் மறுத்தல்	199	4 Flesh-eating prohibited ..	199
5 சுவப்நாவஸ்தை	201	5 A Dream	201
6 லௌகிக தந்திரதர்மம் ...	203	6 Political Economy ...	203
7 பொறாமை	205	7 Envy	205
8 லோகோபகாரிகள் (விநோதகதை)	209	8 The Philanthrophists (A Novel)	207
9 குடி	209	9 Drinking	209
10 தேவதாசிகள் மயக்கத்தெளிவு	211	10 Deva Dhasi wrong impression	311
11 வைத்தியக்குறிப்புகள் ...	214	11 8Mdical Notes	214
12 கீசகவதம்	215	12 The killing of Keechakas a drama	215
13 சட்டக் குறிப்புகள்	218	13 Legal Notes	218
14 வர்த்தமானம் விளம்பரம்	219	14 News, notes & Advertisments	219

G. HANUMANTHA RAO & Co.,
28, Karuppa Goundan's Street,
COIMBATORE.
5—1—10.

THE WORLD.

REGISTERED. M. 823. **பிரபஞ்சம்.**

பிரபஞ்ச தர்மம், நடவடிக்கை, சட்டம், வித்தியா விநோத முதலிய
வற்றைப்பற்றிய ஓர் மாதாந்தரத் தமிழ்ச்சஞ்சிகை.

ஜி. ஹனுமந்தராவ், பத்திராதிபர். (*Proprietor.*)

கோயமுத்தூர் பத்மநாப ஐயர், (*Editor & Publisher.*) பிரசுரகர்த்தா.

வருஷ சந்தா ரூ. 2—4
6 மாதத்திற்கு ... 1—2
பிரதிசஞ்சிகை ... 0—3
வெளிநாட்டுத் தபாற் கூலி பிரத்தியேகம்.

கலி 5011.
சௌமிய-ஹு மார்கழி-மீ.
DECEMBER 1909.

புஸ்தகம் 1.
சஞ்சிகை 7.

கடவுள் வணக்கம்.

பத்ராளனப் பரமாவுனைப் பணியாவருப் ரபஞ்ச
மித்ராஞயர் மித்ரம்மென மிளிராவரு மெனவே
சித்ராவினி லுத்தாரகச் சிந்தாநலங் கனிந்தே
தத்ராவரு தருமாவுனைத் தமியேன்மற வேனே.

எமது நேயர்களே! சென்ற ஐப்பசி மாசத்திய சஞ்சிகையில், யாம் கூறுவமெனத்துணிந்தவற்றில், ஒன்றிரண்டு விஷயங்களைமட்டும், சுருக்கிச்சொன்னோம். இச்சஞ்சிகையில், நித்ய கர்ம்மாநுஷ்டான தேவ பித்ரு யக்ஞங்களைப்பற்றிச் சற்று வரைவம்.

I. நித்ய கர்ம்மாநுஷ்டானம்.

(130-வது பக்கத்தொடர்ச்சி)

கர்ம்ம ஞானமே யக்ஞமென்றும், இந்த யக்ஞத்தில பிரம்மமானது எப்போழ்தும் பிரதிஷ்டிக்கப்பட்டிருக்கிறதென்றும் முன்னமே சொன்னோம். ஆகையால் கர்ம்மமாவது என்ன? இக்கர்ம்மத்தை யார் யார் செய்வது? அவ்விதம் செய்வதால் என்ன பயன்? செய்யாமறபோனால் என்ன? என்று ஆராய்ந்தறிவது உசிதம். கர்ம்மம் என்றால் தொழில். ஒரு தொழிலானது இக்கடபடாதிப் பிரபஞ்சத்திலுள்ள யாவற்றிற்கும் சுவபாவமாகவும் அநாதியாகவும் ஏற்பட்டேயிருக்கிறது. தொழிலின்றி நிலைத்துளது யாதொன்றுமில்லை. புறமே காணாமற் போனாலும், பதார்த்தங்களினுள்ளில் சைதந்நிய மமைந்தேயுளது.

கேவலம் பர்வதாகிருதியான கல்லுமல்லவா ஜீதோஷ்ணங்களாற் பீடிக்கப்பட்டுத்திரிபையடைகின்றது? அப்பொழுது, நகர்வன ஊர்வன நடப்பன பறப்பனவாகிய ஜீவ பதார்த்தம் தொழிலின்றியிரா. இத்தொழிலின் பயனென்னவென்றால் திருப்தி. இத்திருப்தியிருந்தால் மட்டும் சுகமெனும் அநுபவமேற்படும். ஆகையால் தொழிலின்றித்திருப்தியில்லை: திருப்தியின்றிச் சுகாநுபவமில்லை. இதை மறுக்க வொருவராலு மேலாது. தொழிலென்பதிருவகைத்து. இயற்கை செயற்கை என்பனவாம். இயற்கையாவது ஈசுவர சங்கல்பமாம். செயற்கையென்பது இயற்கைக்குத் துணைக்காரணமாகி ஈசுவராக்ஞையைப்பொறுத்துளது. நிதர்சனமாக, பசியானது ஜீவசுவபாவம். பசியைத்தணிக்கு மார்க்கமெல்லாம் செயற்கை. வயிறுகொள்ளும் வரையிற் சாப்பிட்டால் வயிறு திருப்தியடையும். வயிற்றிற்கு அளவுண்டு. மனதிற்கு அளவேது? மனதோ அபார வியாபகக் களஞ்சியம். இது காமக்குரோத லோபமோகாதிகளால் பீடிக்கப்படுவது. இத்தகையமனதை யெப்படி சந்துஷ்டியடையச் செய்வது? செயற்கரிய வெல்லாம் செய்யலாம். "சிந்தையை யடக்கியே சும்மாவிருக்கின்ற திறமரிது." திருப்தி வேணுமென்றால் மனதுக்கு ஒரு எல்லைவேணும். இவ்வெல்லையானது மத்தியும் சுற்றளவும் ஆகிய இருதிறமுடையது. அதாவது, ஆத்ம திருப்தி, பூத திருப்தியாகிய விரண்டே திருப்தி பூர்ணமாம். ஆகையால், திருப்தியின் அங்கமே இரண்டு கூறுகியமையப் பெற்றது. இவ்விரண்டங்கமும் பூர்த்தியானாற்றான் சுகாநுபவம். இல்லாமற்போனாலில்லை. "சுருட்டைப்பாயும் முரட்டுப் பெண்டாண்டியு"மானால், யார்க்கையா திருப்தி? தான் திருப்தியடையவேணுமானால், இதரப்பொருள்களும் தனக்கு அநுகூலமாகவேணுமல்லவா? அப்படி யநுகூலமாகாவற்றை, யநுகூலிக்கச் செய்யவேணுமல்லவா? ஆகையால் ஒவ்வொருவனும், அவனவன் செய்வது பரசம்மதமாயிருக்கவேணுமென்னும் கருத்தேதான், கர்ம்ம ஞானமென்பது. தேகத்தைச் சமர்ப்பித்த மாடுகள் எத்தனையோவுண்டு. மனதோடுழலும் மாடுகள் மிகவும் துர்லபம்: முரட்டுப்பையனும் மாட்டைக்கெடுப்பான். ஆகவே, இந்த மாட்டை யிப்படியோட்டினால் மாடு களிக்கும் என்பது கேவலம் வண்டிக்காரனும் அறிய வேண்டிய விஷயம். சரீரத்திற்குச் சரீரத்தைச் சமர்ப்பிப்பதே யிப்படியாயிருக்க, மனதைப்பரமாத்மனிடம் சமர்ப்பிப்பதில் மெத்த பக்தி, மெத்த சிரத்தை, மெத்த ஜாக்ரதை வேண்டுமென்பது யாம் சொல்லவும் வேணுமா? இதிலும், பக்தத்தை யடைந்துள்ள தேவ பித்ருக்களைத் திருப்தி செய்வதில் மிகவும் எச்சரிக்கைவேணும். இவ்வித பக்தி சிரத்தை சம்பாதனார்த்தமாகவேதான், ஜாக்ரதையான நித்ய கர்ம்மம் ஏற்பட்டுளது. இக்கர்ம்மத்தை "செய்வன திருந்தச்செய்" என்றபடி சீராயும் ஒழுங்காயும் கிரமமாகவும் செய்வதே கடனாம். இக்கடனிடத்து மனதைச் செலுத்தி, கர்ம்மத்தைச்செய்பவனும் செய்விப்பவனும் திருப்தியடைந்தால், அநுபவம் எங்கே போய்விடும்? எருமை மேய்ப்பவனுக்கு எம். ஏ. பட்டம் எட்டிக்குதிக்குமா? நெற்றியிற் கட்ட நிலைக்குமா? சுட்டுப்போடச் சுரக்குமா? தொட்டுக்காட்டித் தெட்டுப்பட்டல்லவா தெளிய வேணும்? தொட்டுக்காட்டலே சுருதி: தெட்டுப்படல் யுக்தி: தெளியல் அநுபவம். ஆகையால் கர்ம்மமென்பது சுருதி யுக்தி யநுபவ சார்த்தகமானது. இதை விடாமுயற்சியுடன் செய்து முடிப்பதே நித்ய கர்ம்மாநுஷ்டானமென்பது. "விடிவதுதானே விடியினும், ஊதுவது சங்கு

ஊதியேயாகவேணும்." அது போலவே, பலனுண்டோ வில்லையோ வென்பதை யோசியாமல், அவனவன் பட்ட கடனை யவனவனே தொலைக்கவேணும். நாம் கர்ம்மாதிகாரிகள்: கர்ம்ம பலாதிகாரி நாமல்ல. தோசையைத்தின்பதுதான் நம்மைச் சேர்ந்தது: துளையை யெண்ணுவது அநுசிதம். தொள்ளையிருப்பது தோசையினலமாயினும் தோசை செய்வதின் அதிகாரம் நமக்கில்லை. நலத்திற்கு நாலுகாசதிகம் செலவழித்தால் நல்ல தோசையும் வல்லே யமையும். மனமிருந்தால் குணம்; இல்லாவிட்டா விழுபடட்டும். "கையாரவேலை-வயிறாரச்சோறு." ஒரு அர்க்கியம் விட்டால் எவ்வளவோ புண்ணியம், என்ற உபாத்தியாயரிடம், சந்தியாவந்தனத்தையே விட்டுவிட்டாலோ? என்று கேட்டாற்போல, கர்ம்மத்தை விட்டவனுக்கு அநுபவமில்லை, என்று மாத்திரமல்ல: வேலை செய்யாது கூலியிச்சித்தாற் கொழுமரத்திற்கட்டிக்கொறடாவடி தின்னவுமவரும். கூலிவேண்டாம்-வேலைவேண்டாம். ஆனால், கூலி ஈசுவராக்ஞை யாகையால், கர்ம்மம் செய்தேதான் ஆகவேண்டும்: கர்ம்மம் செய்யாமலிருக்கவும் எம்மாலாவதல்ல. ஆகவே சத்கர்ம்மம் செய்வதே எமது கருத்தாவது. இக்கர்ம்ம நிஷ்டையே யக்ஞமயமாய பிரபஞ்சம். இந்த யக்ஞோபாஸனையே பரம நிஷ்டையாம். இந்நிஷ்டானுகாரணமாக யாவரும் சிரேயசையடையவேண்டுமென்பதே எமது கருத்து.

II. இலக்கண நூல்.

24. சொன்முத லாவி சேர்கச தபநம
குவியா வவ்வு மிளியொவ் வலவும்
அஆ இஎ ஒவ்வொடு ஞவ்வுமாம்.

(இ-ள்) சொல்லுக்கு முதலில், உயிர் பன்னிரண்டும், கசதபநம வருக்க உயிர்மெய்யும், உஊ ஒஓ வலாத உயிர் சேர்ந்த வவ்வருக்க உயிர்மெய்யும், இ ஈ எ ஏ ஐ ஒ அலாத உயிர் சேர்ந்த யவ்வருக்க உயிர்மெய்யும், அ ஆ இ எ ஒ இவ்வுயிர் சேர்ந்த ஞவ்வருக்க உயிர்மெய்யும், வரும். (உ-ம்) அடு, ஆடு, இடு, ஈடு, உடு, ஊடு, எடு, ஏடு, ஐது, ஒடு, ஓடு, ஔவியம் எனவும், யவனர், யானை, யுகம், யூகம், யோகம், யௌவனம், வடு, வாடு, விடு, வீடு, வெறு, வேறு, வையம், வௌவால், ஞமலி, ஞாலம், ஞிமிறு, ஞெண்டு, ஞொள்கு, எனவும், கனை, சினை, தனை, பனை, நனை, மனை முதலானவும் வருமாறுணர்க. இச்சூத்திரம் சொன்முதனிலை யுணர்த்திற்று. ஙனம் என்புழி தனியியலாதாகலின் ஙகர மொழித்தாமென்க.

'சித்திரை' = சித் + திரை ஞானம் அலைந்தது = வெறி = ஆடு = மேஷம்:- 'வைகாசி' = வை + காச + இ = வைக்கோலைக் கோழைசெய்வது 'இடபம்':- 'ஆனி' = ஆன் + இ = புருடனையுடையவளென்ன 'மிதுனம்':- 'ஆடி' = ஆடுதலையுடையது சேக்கையென 'கர்க்கடகம்':- 'ஆவணி' = ஆ + வண் + இ = தூரல் வண்மையுடைய கர்ஜ்ஜனையைச்செய் 'சிம்மம்':- 'புரட்டாசி' = புரட்டா + ஸ்ரீ = காலம் புரட்டாதவள் 'கன்னி':- 'ஐப்பசி' = ஐப்பு + அசி = பொருள்களின் அநுமானத்தைக்கண்டிப்பது 'துலாம்':- 'கார்த்திகை' = கார்த்து + இரு + ஐ = சினைகார்த்து விள்ளுதலையுடையது 'விருச்சிகம்':- 'மார்கழி' = மார் + கழி = மார்பினி—மரண கழி 'தனுசு':- 'தை' = நிறைபொருள் = மகராலயம் = 'மகரம்':- 'மாசி' = மாசு + இ = வானவா கிருதியை யுடையது 'கும்பம்':- 'பங்குனி' = பங்கு + உனி = மற்றவைகளைத் தன் பங்காக எண்ணித்தின்பது = 'மீனம்'

25. எஐ ஔவொழி யுயிரிறு மெய்யும்
ஙவ்வொழி மெலியு மிடையு மீறும்
உக்குறள் திரிஇவ் வழக்கி னென்ப.

(இ-ள்) எஐஔ வலாத உயிர் சேர்ந்த உயிர்மெய்யும், ஙகரமலாத மெல்லின மெய்யும், இடையின மெய்யும், சொல்லினிறுதியாம். குற்றியலுகரமும் அவ்வுகரந்திரிந்த குற்றியலிகரமும இச்சொல்லிறு நிலையா மரபின் வருமென்பர். பல, பலா, இடி, கண்மீ, பந்து, கோணமூ, வீணை, வீணே, இதோ எனவும், உரிஞ், உண், வெரிந், தேம், தேன் எனவும், செய், சேர், சேல், தெவ், வாழ், கேள் எனவும் வருமாறறிக. "நெடிலோடாய்த முயிர்வலி மெலியிடை - தொடர்மொழியிறுதி வன்மையூ ருகரம்-அஃகும்-" எனக்கூறினரேனும், முற்றுகரம் ஓசைப் பாட்டான் இதழ்குவிந்தியலுமாகலானும், அங்ஙனம் குவியாவழியே அஃகிய உகரம் பிராகிருதம் பற்றிப்பயிலுமென்க. நாகு, கஃசு, வரகு, சுக்கு, வண்டு, மார்பு இவற்றுள் உகரம் இதழ்குவியாதிசைத்தது. கொண்டு, மொண்டு என்புழியும். ஓடு, தோடு, என்புழியும், ஒகரங்கிளந்த வழி உகரம் இதழ்குவிந்தியலுமானும், கதவு, அறு, சிறு, நடு என்புழி உகரம் இதழ்குவியாவியல்பானும், ஓசை நடைபற்றியே குற்றுகரங் கூறல்வேண்டும் என்க. இக்குற்றுகரந்திரிந்து புணர்ச்சியினிகரமாவது குற்றியலிகரம் எனக்கொள்க. "ஆவிஞணநமன-" என உயிரிறுதி கூறல்வேண்டா. அஃதென்னெனின் "நின்றநெறியேயுயிர் மெய்முதலீறே" என்றுரைகளினென்க.

26. கசதப வல்லன ரழவல் லனமெய்
மயங்குட னிலைமுறை தடறவின் செலவும்
கிறுகின்று நிகழ்வும் பவ்வ வரவும்
இனமு மோசையு மெழுத்துப் பேறும்
அன்ஆன் இன் அல் அற்றிற் றத்தம்
தம்கம் நும்மே அஉ ஐகுன
வின்ன பிறவு மிடைநிலை யென்ப.

(இ-ள்) கசதப வல்லாத மெய்கள் பிறமெய்களோடு சேரும் மயக்கமும், ரழவல்லாத மெய்கள் தம்மிற் சேர்ந்து உடனிலையாவதும், தட்ற் இன் இவை இறந்தகாலங்காட்டுவதும், கிறு கின்று இவை நிகழ்காலங்காட்டுவதும் ப் வ் இவை எதிர்காலங்காட்டுவதும், இனவெழுத்தும், ஓசை நிறைவும், எழுத்துப்பேறும், அன்முதல் னகர மீறும் சாரியையும், இவைபோன்ற வேறு நிலைகளும் இடைநிலை யென்பார். கந்துகம், கிஞ்சுகம், மந்தரம் சங்கரன், பொற்பு, வம்பு, இவைபோன்ற மெய்மயக்கம்; தக்கிணை, இச்சகம், இங்ஙனம், விண்ணவர், நல்லது இவைபோன்ற மெய்யுடனிலையாம்; நச்சு நஞ்சு என்றாற்போல இனம்வரல்; "செஞ்ஞின்ற நீலம்," "பாழ்ங்கிணர்," "குரீஇ" இவை ஓசை நிறை; செவ்வாம்பல், சேதாம்பல், இவை எழுத்துப்பேறு; நடந்தனன், அவற்றினை, மரத்தை, இவைபோல்வனவும், அவன்தனை, நீதான், அவர்தாம், என்றாற்போல்வனவும் சாரியையாம். அக், இக், ஒன், கெழு, பாடு, மாடு, ஞான்று இவைபோல்வனவும் சாரியையாம். இவை பிறவாற்றானுணர்க. மெய்மயக்கின் சிறப்பு விதி, திசைச்சொல் கொடுந்தமிழ் நோக்கி விடுத்தாம் என்க.

27. அஃறிணை யிறுமண அஐ சஞயமுன்
ஐயவ் வழிநரு உறழிற் போலியாம்.

(இ-ள்) மகாரவீற்றஃறிணைப் பெயரின் மகரவீறு ணகரமாகவும், சஞய உயிர்மெய்முன் அ ஐ இவை தம்முள் அபேதமாகவும், ஐய இவற்றின்பின் நரு இவை தம்முள் அபேதமாகவும், உறழ்ந்து வந்தாற் போலியாம். முகம், முகன், ஐயர்-அய்யர், அமச்சு-அமைச்சு, மஞ்சு மைஞ்சு மைந்தன்-மஞ்சன், செய்நின்று-செஞ்ஞின்று, நாயிறு-ஞாயிறு, என்றாற்போல்வன. உறழிற் போலி எனவே உறழாவழின் இல்லையென்க.

28. அன்ஆன் அள்ஆள் அர்ஆர் பம்மார்
அஆ குடுதுறு என்ஏன் அல்அன்
அம்ஆம் எம்ஏம் ஓமோ டுமேூர்
கடதற ஐஆய் இம்இன் இர்ஈர்
ஈயர் கயவு மின்னவும் வேற்றுமை
இடையு மசையு மெச்சமு முருபே.

இச்சூத்திரம் பெயர்வினைகட்கெய்து முருபாமாறுணர்த்திற்று (இ-ள்) அன்முதலாக ய ஈறாகக்கூறினவும் இவைபோல்வனவும், வேற்றுமையுருபுகளும், இடையெனும் சொற்களும், அசையெனும் சொற்களும்; பெயரெச்ச வினையெச்ச வுருபுகளும், பெயர்வினையுருபுகளாம்.

பெயர்வினையென்னக்கூறுதது, அவ்வவற்றின் வழக்கினை நோக்கிப், பார்த்துரை வேண்டுதலின், பொதுவிலக்கணக்கூற்று, என்க. "அவைதாம்-பெயர் ஐ ஒடு கு, இன் அது கண்விளி யென்னுமீற்ற" என வேற்றுமை எழினுருபுணர்க. "அம்மோடாம் தம் நம் நும்மே அல் ஆல் வான் பாக்குத்தில்லே-எம்மோடே மன்னேபானே யும்மீரெட்டிடைச் சொலென்ப" என இடைச்சொற் கூற்றறிக. "இகமியாமதிமோ வாழியிகுஞ்சின் முன்னிலையசைச்சொல்" "இகமியா வரோபோமாதோடிருந்தோரு மேழசைச்சொல் - புகலுங்காலொப்பிலாத போலுமப் பொருட்டேயாகும்" என அசைச்சொற்பாடறிக. "செய்த செய்கின்ற செய்யும்" எனவும் "செய்து செய்பு செய்யாச் செய்யூச்-செய்தெனச் செயச்செயின் செய்யிய செய்யியர்-வான்பான் பாக்கின்" எனவும் எச்சவுருபாவதாய்க.

29. பண்புங் குணமும் பகர்ந்திரு சொல்லின்
நீங்கா வாகி நிற்ப விசேடணம் ;
ஒப்பு முறழ்வும் பிறழ்வு மன்ன.

(இ-ள்) பண்பும்=பொருளின் தன்மையும், குணமும்=புலகரணப்பற்றுகிய பல்வகை உயிரின் குணமும், பகர்ந்து=பிரித்துரைத்து, இருசொல்லின் நீங்காவாகி=இருவகையாய பெயர்வினைச் சொற்களிலிருந்து நீங்காதவையாகி, நிற்ப=அப்பெயர்வினைகளோடு கூடி நிற்பன, விசேடணம்=விசேஷணம் ஆம்; இவற்றின் சாம்யமும், உவமையும், எதிர்வேறுபாடும் ஆகிய பண்பும் குணமும், அன்ன=அவைபோலவே விசேஷணமாம். ஒப்புமுறழ்வும் பிறழ்வுங்கூறியது, உயிர்பொருள் இவற்றின் கர்மக்கிரியா கியூனமுதலவாற்றுனென்க:-(உ-ம்) "நிற்கறுப்பதோர் அருங்கடிமலையள்" "நீ சிவந்திறுத்த நீரழிபாக்கம்" என்பதிற் "கறுப்புஞ் சிவப்பும் வெகுளிப்பொருள" வாகி ஒப்பின் உயிர்க்குணம் பொருட்குணம் விளங்கும். "பொன்போலுங் கள்ளிப்பொறி பறக்கும்" "மானவேன் முட்டை-கானவேன்முட்டை" என்பவற்றில், பொன்மாற்றுறைக்கப் பறக்கலும் முறையாக உறழ்ந்தும் தேய்ந்துலாவற் சாம்யமாய், பொறிபறக்கப் பொன்னுருகுவபோல், பொறிக்கட் பொற்பேதை செல்லவியைந்தனள், என இரங்கற்பாலுய்த்ததும், வேல் தைத்துயிர் நீங்குவது போல வேலான்முள் தைத்து உயிர் வாடுகை மாத்திரம் சாம்யமாய் அச்சத்துயர்வுகூறியதும், "போலும்" "போம்" என்னும் விசேஷணமுணர்த்திய தறிக. "கைதொழூஉப் பழிச்சிக்கடியன்" என்பதில் பழிச்சல்=வாழ்த்துப் பொருள்கொடுத்துப் பிறழ்ந்தமையும் அறிக.

30. தன்னைக் கிளத்த வெல்லா வெழுத்தும்
விதிப்பள வின்றி வருமுறை யானே
கரங்கா ரங்கான் சாரியை பெற்றும்
பெயர்வினை யிடத்து ளரய வீற்றய
லாவோ வாகலு மன்னவும் கொள்ளப்
பண்பும் சொல்லும் பலதிரி பேற்கும்.

இஃது எழுத்திற்கும் சொல்லிற்குமாய சிறப்பு விதி கூறிற்று. (இ-ள்) தன்னைக்குறிக்குமிடத்து எல்லா வெழுத்துக்களும், மேலேசொன்ன மொழிநிலை மயக்கவிதி முதலாகிய தவிர்ந்து வருவதும், கரம், காரம், கான் சாரியைபெற்று வருவதும், ளரயவீற்று அயற்கணின்ற ஆகாரம் ஓகாரம் ஆவதும் இவைபோன்ற திரிபினைப்பெறுவதுடன், பண்புப்பெயர்களும் சொற்களும் பலதிரிபினைப்பெறுவதும் கொள்க. அகரம் அகாரம் எனவும். ஆகாரமெனவும், ககரம், ககாரம், காகாரம் எனவும், அஃகான், மஃகான் எனவும்

சாரியை பெற்றவாறறிக. கெப்பெரிது, லளம் கான், என்புழி எகர மீறுயதும் ளமயக்கமும் காண்க. செம்மை+ஆம்பல்=சேதாம்பல், செம்மை+அன்=செய்யான், கரியன், புதுமை+ஒடு=புத்தோடு இவபோல்வனவும், தண்டை என்பது தட்டையெனவும், பொத்தரூர் என்பது போத்தரூர் எனவும், "நன்றென்றேன்றியேன்" தீயேன் என்பது தியேன் எனவும், தயிர் என்பது தயிரு எனவும், பிறவும் "தோன்றல் திரிதல் கெடுதல்" விகாரமேற்றுப்பயில்வனவும் பிராகிருத நெறியிற் காண்க. நல்லான், நல்லாள், நல்லார், நல்லாய் என்பன நல்லோன், நல்லோள், நல்லோர், நல்லோய் எனவருதலு முணர்க.

(இன்னும் வரும்.)

கோயமுத்தூர் பத்மநாபய்யர்.

III
கம்பர் சிலேடைக்கவி.

நீரெலாஞ் சேற்று நாற்றம் நிலமெலாங் கல்லுமு
[ன்னும்
ஊரெலாம் பட்டிதொட்டி யுண்பதோ கம்பஞ்
[சோறு
பேரெலாம் பொம்மன் றிம்மன் பெண்களோ
[ணுயும்பேயும்
சாருலாங் கொங்கு நாட்டைக் கனவிலு நினைக்
[கொணுதே.

என்ற கவியை புலவர் பெருமான் கம்பநாட்டாழ்வார் கொங்குதேயத்தில் விஜயம்செய்த காலைக் கொங்கை யிகழ்ந்தும் புகழ்ந்தும் சிலேடையாகக் கூறியதாகக் கொண்டு "சிங்கை நேசன்" என்பார் அடியில் வருமாறு பொருள் கூறினர் அதுவருமாறு :- நீரெலாம் - ஆறுகுளம் முதலிய நீர்நிலைகளெல்லாம், சேற்று - சேற்றினிடத்தில், நாற்றம் - மடவார்கள் கொங்கையின்கண்ணுள்ள சீதக்களபச் செழுஞ்சேற்றின் வாசனையும், நிலமெலாம் - குறிஞ்சி மருதம் நெய்தல் பாலை முதலிய நிலங்களிலெல்லாம், கல்லும் - நவரத்தினங்களும் (திணைமயக்கத்தாற் றேன்றியவை) உள்ளும் ஊரெலாம் - எத்தலத்தாரும் நினைக்கக்கூடிய நகர்கள்தோறும், ‡ பட்டி - விக்கிரமார்க்கனது மந்திரியாகிய பட்டிக்குச்சமானமான புத்திமான்களும், தொட்டி - சாமானிய வீடுகளன்றி ஒவ்வொரூரிலும் தொட்டிக்கட்டு மாளிகைகளும், உண்பதோ - செவிவழியாக உண்டானந்திப்பது, கம்பன்சோறு - கம்பர் சமைத்துவைத்த வுணவாகிய ராமாயணப் பிரசங்கமும், பேரெலாம் - அங்கு வாசம் செய்யும்படியானவர்களுடைய பெயர்களெல்லாம், பொம்மன் - (பொன்+மன்) பொன்னுக்கு மன்னுகிய திருமாலும் அல்லது குபேரனும், திம்மன் - (திண்+மன்) வலிமைபொருந்திய பீமசேனனும் அல்லது திம்மனுகிய ஆஞ்சனேயனும், பெண்களோன் - பெண்களைச் சேனையாகவுடைய மன்மதனுமாக நிறைந்துள்ளன, ஆயும் பேயும் சாருலாம் - ஆராய்ந்து பெய்யும் மேகங்கள் சஞ்சரிக்கின்ற, கொங்குநாட்டை - இத்தன்மை பொருந்திய சிறப்புற்ற கொங்குதேயத்தைக், கனவிலும் - சொப்பனத்திலும் மறவாது ஒள் நாதே - ஒளிபொருந்திய அரசனே (எனச்சோழனை முன்னிலைபாக்கி) நினைக்க - நினைப்பிராக. (சோழராஜனை முன்னிலையாக்கி கொங்கின் வளப்பங்களைக் கூறியதாம். அல்லதூஉம் :- கனவிலும் நினைக்கொணுதே - மேன்மைபொருந்திய வில்லைத்தாங்கிய ஸ்ரீராமன், அர்ஜுனன் முதலியோரும் கொங்குநாட்டைச் செயித்தலரிதெனினும் பொருந்தும் எனச்சிங்கை நேசரென்பார் "மலையைத்துளைத்தெலியை" ப்பிடித்திருக்கிறுர். இக்கவிக்குப் பொருளுரைக்க இவ்வளவு பிரயாசைப்படுவானேன். தமது வித்வ சாதுரியத்தால் மனோராஜ்யம் செய்து பொருளுரைப்பானேன். மேற்கண்டபடி வெகு தூரமான விஷயங்களையெல்லாம் வருவித்துப் பொருளுரைக்க அக்கவியில் பதங்களில்லவே? மேலும் ஊரெல்லாம் பட்டி தொட்டி என்பதற்கு ‡ இக்குறிப்பின்படி பொருளுரைத்திருக்கிறுர். பட்டி என்பதற்கு விக்கிரமாதித்தன் மந்திரி எனப்பொருள் கொண்டது அந்த இடத்தில் பொருந்தவில்லையே? தொட்டி என்பதற்கு மாளிகையெனப் பொருள் நிகண்டிலாவது அகராதியிலாவது தேடித்தேடியும் கிடைக்கவில்லை. பட்டி தொட்டி முள்வேலிகள் நிறைந்த சிற்றூர் என்பது நேரான பொருள். இதைவிட்டுப் பொருந்தாப் பொருள் கொள்வதால் என்ன பயன்? இக்கவி ஆசிரியரின் கருத்தது ஆமோ? ஒருபோதுமாகாது. இக்கவியை சிலேடைக்கவி எனக்கொண்டு பொருளுரைப்பதைக்காட்டிலும் கொங்கை யிகழ்ந்தே புலவர் திலகர் கூறினரெனக்கொண்டு பொருளுரைப்பது மிகவும் உசிதமாயிருக்கின்றது. தவிர சிலேடைக்கவி எனக்கொண்டு பொருளுரைக்குங்கால் "முறையின் வைப்பே யுலக மலையாமை" எனும் அழகு குன்றிப்போம். ஆதலாலவ்வாறு பொருள் கொள்ளுதல் அத்துணைச் சிறப்பன்று. நிற்க : "சிங்கை நேசர்" இயற்றியிருக்கும் இலக்ஷக்கணக்கான சிலேடைகளில் ஒன்றிலாவது தூரமான விஷயங்களை வருவித்து வலிந்து பொருள் கொள்ளும்படியாக வில்லாமல் உபயார்த்தமுள்ள பகாப்பதங்களையும் பகுபதங்களையுமாகக் கொண்ட கவிகளாகவே யிருக்கின்றது. உதாரணமாக சிங்கைநேயரியற்றிய கரைசைச் சிலேடையில்,

"கூவிரி வீதிச்சேலுங் கொண்டல்களு மெப்போ
[தும்
காவிரி வனஞ்சேர் கரைசையே" எனவும்,
"செய்பவள மேவுஞ் சேருமாங் காரத்துள்
ஒப்பமனைச் சிகரத்துட் சிறக்கும்." எனவும்,

சிலேடைகளிருக்கின்றனவே. இங்ஙனந்தலையால் கண்ட கவியில் சிலேடையிருக்கின்றதா? இல்லையாகையால் புலவர் திலகர் "கொங்கை" யிகழ்ந்தே இக்கவியை கூறினரென்று கொள்வதே முக்காலும் பொருந்தும். இனி விரிக்கிற் பெருகுமென அஞ்சி விடுத்தோம்.

இங்ஙனம்,

கலாவினோதன்.

IV
புலாலால் மறுத்தல்.

நண்பர்காள் !

புலாலென்பது ஜீவப்பிராணிகளின் தசை. புலாலருந்தவேண்டுமானல் ஏதாவது ஒரு ஜீவனை வதைக்காது, அதன் மாமிசத்தை புசிக்கமுடியாதென்பது நம் நேயர்களறிந்தவிஷயமே. ஜீவஹிம்சை செய்யக்கூடாதென ஒவ்வொரு வேதங்களும் முறையிடுகின்றதல்லவா? அவ்வித வேதங்களையே அனுசரித்திருக்கிற நாம் அதனை மறுத்து, புலாலருந்துவதாயிருப்பின், சாஸ்திர விரோதமும், அதனுல் தேவகோபத்திற்கும் உள்ளாகி நரக வீட்டை நாகரீகப்படுத்தி அழுந்த இடமுண்டாக்குகிறதே ! மேலும்,

"அன்பின் வழியது உயிர் நிலையஃதிலார்க்கென்புதோல் போர்த்த உடம்பு" அதாவது அன்புள்ள உடம்பே உயிருள்ள உடம்பு, அன்பில்லா உடம்பே உயிரில்லா உடம்பு, என்றும், தேவர்களாயிருந்தாலும் தத்துவஞானிகளாயிருக்கவேண்டுமானால் மானிட சரீரம் எடுத்தேதீரும் என்றும் சுருதிகள் முறையிட, அப்பேர்ப்பட்ட தத்துவ ஞானனுஷ்டான சந்தானமுடைய மனிதனை, பகுத்தறிவில்லாப்பறவை, நீர்வாழ்வன, மிருகம், முதலிய பலவித ஜீவராசிகளைக் கொன்று புசிப்பது, அஜ்ஜீவ ஜந்துக்களிலும் தாழ்மையான தாவர வஸ்துக்களைவிட கேவலமான ஜென்மத்திற்கொப்பிடலாம். ஆகையால் கொலைக்கு மேற்பட்ட பாவம் வேறில்லை. கொல்லாமையே புண்ணியத்திற்கெல்லாம் மேலான புண்ணியமென்று, திருவள்ளுவர்,

"அறவினை யாதெனிற் கொல்லாமை கோறல்
பிறவினை எல்லாந் தரும்" என்றும்,
"கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
யெல்லா வுயிருந் தொழும்" என்றும்,

மாணிக்கவாசகர்,

"கொல்ல நினைப்பதுவுங் குற்றமு மற்றொழிய
செல்வ வயற்கழனி தென்றிருவாரூர்" என்றும் பாடியிருக்கிறார்கள். இங்ஙனம் கொலை செய்வதனால் நெடுநாள் நீங்குதற்கரிய துன்பத்தைக் கொடுக்கும். அத்துன்பத்தை இம்மையில் அனுபவியாவிடினும் மறுமையில் அனுபவித்தேதீரும்.

"கொல்பவரை தரிசித்தலும் பாவம். தீய முகம் நேசித்தலும் பாவம்" என்றும் ஆடு பன்றி கோழி அருந்துவோர்க்கெல்லாம் அருள் வீடில்லையென்றும், அவர்களுக்கிம்மையிலுந் துன்பம் மறுமையிலு மேல்நிரயம், நன்மையில்லை யோரிடத்தும், என்றும்"

"மாமிசம் தின்போரெல்லாம் மானிடப் புலையராவர் - அம்மாவென்றுமாருயிரை அறுத்தருந்தி இம்மானுடரெல்லாம் இன்பமுற்றிருக்கின்றார் - அம்மாவென்னும் சப்தம் கேட்டகன்ற மாந்தவற்கு-பொம்மா நிரயமென்றால் புசித்தவற்கென் சொல்வதோ ?"

என வள்ளலாரும் கூறியிருக்கிறார். இவையால் ஜீவகாருண்யம் முக்திக்கோர் வழியன்றே?

நண்பர்காள் ! யுக்தி அனுபவத்தைப் பார்ப்போம். பகுத்தறிவுள்ள நமக்கு நம்முயிர்க்கு யாதொரு கேடுமில்லாத ஓர் காயம் கொள்ளுமேயானால் நம் ஜீவன் எவ்விதம் பரிதாபப்படுகிறது என்பது நம்மனோர் எல்லோர்க்கும் யதார்த்தத்தில் அனுபவ சாட்சியாய்த் தெரிந்த விஷயமன்றோ ? இதனைச் சகியாத நாம் நம்முயிர் போகச் சகிக்கப்போமா ? சகிக்கமாட்டோமே ! நம்முடைய உயிரை நாம் எவ்வளவு பெரிதாயும் அருமையாகவும் நேசிக்கிறோமோ, அத்தன்மைபோல் மிருகாதிகட்கும் தம் ஜீவன்பேரில் பட்சமிருக்குமே ! அன்றியும் நம் வருத்தங்களை இன்னொருவரிடம் சொல்லி, வேண்டும் மணிமந்திரௌஷத மார்க்கங்கள் செய்துகொள்ளுகிறோம். யாதும் அறியாததும் வாய் பேசாததும் தீங்கற்றதுமான பசுபக்ஷியாதி புஷ்கர ஜந்துக்கள், தம்குறைகளை யாரிடம் சொல்லி நீக்கிக்கொள்ளும் ? இவ்வித நியாயத்தைத் தெரிந்திருந்தும், நாம் ஜீவஹிம்சை செய்து புசிப்பதானது, மந்தமதிக்கேறிய மௌட்டியமன்றோ ? இதற்காக "முட்குத்தி நொந்தறிக்கிலோர் பிறவுயிரை-உட்புகுத்தியூன்தின்பதேன்" என திருவள்ளுவர் கூறியிருக்கிறார்.

மீன் தின்பது மௌடீகமென்றும், பலஹீனமென்றும், ஆடு தின்பது காமக்குரோதாதிகளதிகரிக்குமென்றும், மாடு தின்பது தயை தாட்சண்யம் உண்டாகாதென்றும், பன்றியைப் புசித்தால் மனிதன் அருள் நீங்கி மிருத்யு அருள் குடிப்புகுமென்றும், சிற்சில தத்துவ சாஸ்திரிகளாலறிய வருகிறது. அன்றியும், அமெரிக்காவில் நடந்த மத சம்பந்தமான பிரசங்கத்தில், இந்து மதமே சிரேஷ்டமெனப் பேசியதாய் சில பத்திரிகை மூலம் நேயர்கள் அறிந்திருக்கலாம். அம்மதத்தை அனுசரித்தவர்களான நாம், பொறுமையை பொக்கிஷமாக்கி பொன்னுலகு சேர வேண்டுமாயின், புலாலருந்தலாகாதென வெளியாகிறதல்லவா ?

பெரும்பாலும் மகம்மதியர்கள் நலத்திற்கும் கஷ்டத்திற்கும் புலாலுண்ணும் விஷயத்தையே முக்கியமாக ஆசரிதது வருகிறார்கள். இது அவர்கள் வேதத்துக்கும் விரோதமே!

கிருஸ்தியானிகள் கூட அவர்கள் வேதத்தில் "கொலை செய்யாதிருக்குக" என்றுள்ள கற்பனையை நினைத்திலர் போலும்?

சகோதரர்களே ! நாம் ஒவ்வொரு வேதங்களை நோக்கினும் எல்லாம் இங்ஙனமாகவே இருக்கும். ஆதலால் நம் பிரபஞ்ச நண்பர்களில் யாராயினும் புலாலருந்துபவராயிருப்பின் இன்று முதல் அதனை நிறுத்தியும் அருந்தாத நண்பர்கள் அருந்துபவரைத் தடுத்தும், நம் முயற்சியை பூரிப்பிக்க செய்வீர்களென நம்புகிறோம்.

இங்ஙனம்,

K. S. Ramakrishna Pillay.

ஓர் சுவப்நாவஸ்தை.

(6-வது சஞ்சிகை 167-வது பக்கத்தொடர்ச்சி)

ஆகாசபாவனுபூதம்-அகரண ஹேதோற்பவம்-
அத்புத அநர்வயமாத்திரை.

அன்பர்களே! சென்ற சஞ்சிகையில் 'கதாகத சம்மிச்ர கோஷ்டியாபந்தம்' என்பதை விவரித்து, இதில் மற்ற மூன்றினையும் சுருக்கிச்சொல்லி விடுகிறேன்.

'பூதம்' என்றால், பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம் எனுமைந்தினையும் குறிப்பிக்கிறது. இதனின் சப்த, ஸ்பர்ச, ரூப, ரச, கந்தம் என்பவற்றைக் கடையிலிருந்து முறையாக வைத்தால், மேலையவற்றின் குண மேற்படும். இவ்விதம் பிருதிவிக்கு 5 குணங்களும் ஏற்படும். இந்த சப்தாதிகளே மேற்படி பஞ்சபூதங்களின் சூக்ஷ்மமென்றும், தன் மாத்திரைகளென்றும் சொல்லப்படும். இவைகளின் உற்பத்தி மாயா சபலப்பிரம்மத்திலிருந்தேயாம் மாயையானது அவ்யக்தம், பிரதானம், மூலப்பிரகிருதி என மூன்று பிரேரேபணையாகி, சத்வரஜஸ்தமோகுண வைஷம்யரூபமான மகத்தத்வ மேற்பட்டு, வைகாரியம், தைஜஸம், பூதாதியாய அகங்கார தத்வம் பிறந்தது. வைகாரிக முதலானவற்றையே சத்வ ரஜஸ்தமோ குணமெனக்கூறுவர். ஆகிலும் இவற்றின் பேதம் விரிக்கின், வெகு நுட்பமாக ஆராய்ந்தறியவேண்டுவதினால், இச்சந்தர்ப்பத்தில் இம்மட்டில் அநுவதிக்க, தாமஸாகங்காரமே விகாரப்பட்டு சப்த தன்மாத்திரையாயிற்று இந்த சப்த தன்மாத்திரையிலிருந்து ஆகாசமுண்டாயிற்று, பிறகு "ஆகாசாத் வாயு:," வாயுரக்நி:, "அக்நோராப:" "ஆப: ப்ருதிவி" என்ன மற்றைய நான்கும் உற்பத்தியாயிற்று. இதன் நியாயம் ஒன்றிலிருந்து ஒன்று ஊால் வண்டல் நியாயமாக ஏற்பட்டு, பிருதிவி அடி வண்டலாகவும், ஆகாசம் மேற்றெளிவாகவும் நிற்க, யாம் எல்லாவரும் கண்ணுற்காணும் விஷயம். இதே நியாயப்படி, சரீரதத்வம், அஸ்தி, ரக்தம், மஜ்ஜைசர்

மம், கேசம் என்னும் பஞ்சபூதம் இவற்றின் அகங்காரமே சுக்ல சுரோணித நாடி என்பன. இந்த நாடியான மகதத்வமே ஞானசக்தி இச்சா சக்தி கிரியாசக்தி என மாயா சபலம்; இவற்றின் ஸ்தானமே மூளை, இதயம், கோசம் என்பன. இக்கோசமே மூலாதாரம், சுவாதிஷ்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்ஞையெனும் ஆறினையும் ஆதாரமாயுள்ளது. இவற்றுமேலேதான் இதயத்தின் கதாகதம். இவ்விதயத்தின் கதாகதத்தாலேதான் மூளையின் நடை ஆகவே ஷட்கிரியாவமைப்பே கோசம். இக்கோசவிச்சாவமைப்பே இதயம். இவ்விதய ஞானவமைப்பே மூளை. இது சரீர ஸ்தூல விஷயம். இவற்றின் ஜாக்ர நியாயம் எல்லாரும்அறியும் அநுபவ விஷயம். இவ்வாறு தரங்களின் மூலஸ்தான சூக்ஷ்ம விஷயம் யோகாம்சமாகையால் விவகரிக்க இது சந்தர்ப்பமல்ல. சுவப்நாவஸ்தையில் ஷடாதார கோசம் ஆலசியதமோ குணத்தால் தளர்ந்திருக்க, அநாகத விதைய நாடி துடிக்க, விசுத்யாநாடி பஞ்ச வாயுவினால் பீடிக்கப்பட்டு, ஆக்ஞாநாடியைத்தாக்கி மூளையைத்தமோ குண ரஜஸ்ஸம்மந்தத்தினால் மடக்கி ஆலசியத்தால் சாபலிய அநுபவத்தைத் தரச்செய்கிறது. மேலைய மூலாதார நாடியானது சர்ம வியாபகமாய் பகிர் துவாரங்களைச் சம்மந்தித்தது. சுவாதிஷ்டானமானது ஜரிப்பிக்கும உள் உதர வியாபகமாய் நடைபெறும். மணிபூரகமானது ரக்தக்குழாய்பற்றிவியாபகமாய் நடைபெறும். அநாகதமானது இதயமொன்றையே ஆட்சிசெய்யும். விசுத்தி சுவாஸாசய வியாபகம் ஆக்ஞையானது பிரம்மரந்திரம் மூளை வியாபகம். சுவப்நாவஸ்தையில் மூலாதாரமானது சாமான்யம் பந்தமாய்விடும் ஆகையால் எப்பொழுது ஆக்ஞாநாடிக்கண் இச்சையானது ஆலசிய தமோகுணத்தால் பாதிக்கப்படுகிறதோ. அப்பொழுது ஞானமானது இச்சா பூர்த்தியின்றி பிரதி பிம்ப நியாயமாக வற்படுகின்றது. இப்பிரதி பிம்பத்தை மற்றைய நாடிகள் அநுகூலிக்கவே கேவலம் சப்தாநுகாணமாக சுவப்நமேற்படுகின்றது இதுதான் ஆகாசபாவனு பூதம் என்பது.

பயமானது ஜீவசுவபாவம். இது விட்டசம்மந்தம், விடாத சம்மந்தம், விட்டும் விடாத சம்மந்தமாகி, ஜீவனை பிரகிருதிக்கண் சாபல்யபிக்கச்செய்கின்றது. சுவப்நத்தில் இந்த பயச்சாபல்யமானது விட்டும் விடாத சம்மந்தத்தினால் பூதாகாசதன்மாத்திரையைப் பீடிக்க ஞானபூர்த்தியின்றி மனனமாத்ரமாக வற்படுகிறது. மனதோ உள்ளதும் இல்லாததுமானவற்றை ஹேதோத்தேசமாக உருவகப்படுத்தும் திறமையினையுடையது. அபூர்த்தியான ஞானமே அகாரணமாகையினால், ஷை மனனத்தோடு கூடி அகாரணஹேதோத்பவ சுவப்ந நியாயமாகிறது,

சிலவேளை சுவப்நம் தோன்றுவானேன்? சிலவேளை தோன்றாமலிருப்பானேன்? என்னும் கேள்விகளுக்குப் பல்வோர் பல நியாயங்களைக் கூறுகின்றனர். விட்டத்திற்குக் கூறுக்காகப்படுக்கக்கூடாதென்பர். மலமூத்ர பந்தத்தினால் சுவப்நம் தோற்றுமென்பர். ஜாக்ரத்தில் வற்பட்ட மிக்க வாஞ்சையே காரணமென்பர். இதுபோல் பனவெல்லாம் ஒருவாறு சரியாகலாம். ஆனாலும் சுவப்நமானது அத்புதாவஸ்தையா யிருக்கிறது. சிலர்க்கு சுவப்நமானது ஜாக்ரத்தில் பலித்துவிடுகிறது. ஆகையால் பூர்வ வாஸனையும் பிரத்யக்ஷ வாஸனையும் ஈசுவராக்ஞையுமே இதன் மூலகாரணம். பிரத்யக்ஷமும் பூர்வ வாஸனை கைவல்லியமாகையால், காரணம் இரண்டேதான். இவ்விரண்டும் ஜீவப்ரகிருதி மாயா சம்மந்தாநு சம்மந்தமாகலாலும், மாயை யுற்பத்தி காரணம் "மகாத்புதா ரிர்வசனீய பா" என்பதே நிச்சயமாகையாலும் அதன் சம்மந்தமும் "சங்காப்யசங்காப்யுபயாத்மிகாஹோ—பின்னாப்யபின்னாப்யு பயாத்மிகாஹோ" என்றபடி யாகையாலும, சுவப்நமானது "அத்புத அனந்வய மாத்ரா" நியாயமாயது. இந்தப் பிரபஞ்ச சஞ்சிகையானது வார பத்திரிகையாக மாற்றப்படுமாகையால், இது கடைச்சஞ்சிகையானதால், எடுத்த விஷயத்தை முடிக்கவேண்டுமென்ற கருத்துடன், திருஷ்டாந்தங்களை விவரிக்காமல், தத்வரீதியாகச் சுருக்கி முடித்துவிட்டேன். ஆகையினால் நண்பர்களெல்லோரும் மன்னிப்பாராக:—

C. R. Padmanabha Iyer.

VI

லௌகீக தந்த்ர தர்ம்மம்.

அத்யாயம் V.

கைமுதலைப்பற்றிய முக்கியமான கருத்துகள்.

1. மேலேசொன்ன அத்யாயத்தால் 'கைமுதல்' என்பதின்னதென்று சாமான்யமாக யார்க்கும் புலப்பட்டிருக்கும். இதைப்பற்றி யாதொரு சந்தேகமு மேற்படாதபடி விளக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் 'கைமுதல்' என்பதின் சிறந்த விதிகளைச் சற்று ஆராய்வோம்.

எப்படி ஐசுவரியமென்பது பணமல்லவோ, அப்படியே பணம் என்பதும் கைமுதலல்லவென்று, முன்னமே சொன்னோம். சில லேவாதேவை திருஷ்டாந்தங்களும் சொல்லப்பட்டது. ஆனால், கைமுதல் எதைப் பொறுத்தது? என்று யோசித்தால், தொழில் வல்லமை ஒன்றையே பொறுத்ததென்று, தாராளமாக யாவரும் ஒத்துக்கொள்ளத்தக்க விஷயம். ஆகிலும், தொழில் வன்மையானது கைமுதலினுடைய அளவிற்றான் பிரபலித்து வருகிறதென்பது முதல் கருத்து. இக்கருத்து யாதொரு பேதமுமின்றிச் சாதாரணமான திருஷ்டாந்த பூர்வமாக விளங்கியிருந்தாலும், இதன் வாஸ்தவத்தை அறிந்துகொள்வது முக்கிய கடமை. ஒரு அலுவல் செய்யவேணுமானால், தொழிலேற்பட வேண்டுமென்பது திண்ணம். ஆகையால், தொழிலேற்படுத்துவதான், கைமுதல் போடலென்பது, சர்வசாதாரணமாய் அறியத்தக்கது. சாகுபடி விஷயத்தில் முதல் போடுவதானது புமியைப்பண் படுத்தி விளைவை சங்கிரகிக்கச்செய்யும், குடித்தனத் தொழிலேற்படுத்துவதாம். அவ்வாறே, விகற்ப சாதனங்களைச்செய்யும் விஷயத்திலும், யந்நமே கைமுதலாம். ஆகவே, கைமுதலுக்கு மிஞ்சின தொழில் வற்படாதென்பதும், கைமுதலானது தொழிலேற்பாட்டுக்கு நிமித்தியாகாரணமென்பதும் எளிதில் விளங்கும். ஆனால், உலகத்தில் மொத்தமாக, அதிகம் கைமுதல் போட்டிருப்பதால் லாபம் ஏராளமாகக் கிடைக்கிறது என்று, சொல்வது வழக்கமாயினும், முதலே லாபத்தைக் கொடுக்காது என்பதும், அம்முதலைப்பற்றிய தொழிலின் அளவே லாப ஆஸ்பதமென்பதும், தெரிந்த விஷயம். இப்படி தெரிந்திருந்தும் ராஜாங்கத்தார முதலின்றித் தொழிலேற்படுத்தக் கூடுமென்பது தப்பான எண்ணம். ராஜாங்கத்தார் ஜனங்களை அதிகம் உழைக்கச்செய்யவா? அல்லது உழைப்பின் திறமையை அதிகரிக்கச்செய்யவா? காரியமான விஷயம் இவையல்ல. ஏதோ ஒருவாறு உதவி செய்யலாம் ஆகிலும் ஜனங்கள் கஷ்டமெடுத்து புத்திசாலிகளாய் விசேஷ சாமர்த்தியமடைந்து, திண்ணைக்கமிட்டியை விட்டு, உழைப்பாளிகளானாலொழியத் தலையெடுப்பது அசாத்தியம். ராஜாங்கத்தார், இறக்குமதியை நிறுத்திவிடவோ, அல்லது அவ்விரக்குமதிச் சாக்குகளுக்கு அதிக வரி நியமிக்கவோ, செய்துவிட்டால், தேசத்தில் தொழில் விருத்தியாகி ஜனங்களெல்லாம் ஐசுவரியவான்களாவார்களென்பது, "முடவன்-கொம்புத்தேன்" விஷயமே. ஆனால், மேற்சொன்ன நிர்ப்பந்தமானது சுதேசத்தொழிலபிவிருத்தியில், ஏதோ பிரயோஜனப்படக்கூடும். ஆகிலும், சுதேசத்தொழிலானது, விதேசத்தோடு போட்டிபோடக்கூடிய சாமார்த்தியத்தைப் பெற்றிருந்தாலொழிய, நீடித்து நிலைக்கமாட்டாது. ஜனங்கள் சரக்கு நலத்தையும் மலிவையுமே கருதுவது சாதாரணம். ஆகையால், சுதேசத்தொழிலானது, நயமானதும் விலை சரசமானதுமாகிய சாதனங்களை வேண்டிய அளவிற்கொடுத்தாலொழிய, நாளடைவில் மழுங்கிப்போம். இது எப்படியானாலும், தாராள வர்த்தகத்துக்கும வர்ஜ்ஜியத்துக்கும் என்ன சம்மந்தம்? வர்ஜ்ஜிய லாபத்தாலேயா தொழிலேற்படக்கூடியது? அல்லது சரக்கு மலிவது? சூக்ஷ்மமாக ஆலோசித்தால், சுதேசத்தொழிற் சரக்குகளுக்கு யாதொரு ரக்ஷையும் வேண்டுவதில்லை. "தன் காசு செல்லாவிட்டால் தட்டானையா கட்டியடிப்பது"? இது என்ன நியாயம்? தொழிலானது வேறுற்றால் பராமரிக்கப்பட்டது. ஆகவே, அரைக்காசு கிடைத்தாலும் லாயம் லாபமே! இருப்பெல்லாம் முதல்! விற்றதெல்லாம் லாமேயாம். விதேசவர்ஜ்ஜனம் சுதேசலாபமென்பது எப்படியிருக்கிறதென்றால், எதிராளி கண்ணிரண்டும் போய்விட்டால் காமிட்டதே கொள்ளையென்

ஞும் நியாயமாகிறது. எதிராளி வந்துவிட்டானென்று தன் வியாபாரத்தை முடக்குவது? போட்டியாகாதென்றல்ல: தன் சரக்கு விலை போகாதென்னும் காரணமான கருத்து கொண்டேதான் தொழிலை விட்டுவிடவேண்டி வரும். ஆகையால் தப்பு தனதேயன்றி ராஜாங்கத்தாருடையதல்லவென்று யாவரும் அறிந்துகொள்வது அவசியம்.

2. கைமுதலானது தொழிலுக்கு ஒருவரையறை ஏற்படுத்துகிறது என்றதினாலேயே, அவ்வரையறையை ஏற்படுத்தும் என்ற நிச்சயமில்லை. சரக்குகள் விற்பனையாகாமலோ தொழிலாளிகள் குறைந்தோ, கைமுதல் பிரயோஜனப்படாமலிருக்கலாம். தொழிலாளிகள் ஏற்படாமற்போனால், கிடைத்தவரைக்கொண்டுதானே தொழில் செய்விக்கவேண்டி வரும், ஒருவேளை தொழிலாளிகளின் குடும்பத்தினரும் தொழில் செய்வார்களேயானால் இவர்களைப் பராமரிக்கும் பாரம் இராது. அல்லது வேறு தொழிலாளிகளையும் சேர்க்கலாம் இவ்விதம் செய்தால் அதிக லாபம் கிடைக்கும். ஆனால் முதலிலற்பம் குறைவுபட்டால், தொழிலாளிகளின் சம்பளத்தைக்குறைத்து அவர்களைக்கொண்டு காரச்சூரியாக வேலை செய்விக்க வேண்டிவரும். இது முக்கியமாய் கவனிக்கத்தக்க விஷயம் சர்க்காரால் தொழிலாளிகளைக் கொண்டுவரவும், கைமுதலை வருமானவரி முதலியவற்றால் அதிகரிப்பிக்கவும் கூடும். இப்படி ஒரு பண்டு ஏற்படுமானால் பண்டுக்கு வட்டி செல்லுந்தோறும் அந்தபண்டைக் கையாடி, தொழிலை விருத்தி செய்து சார்த்தகப்படுத்தலாம் வருமானவரி கொடுப்பது வாஸ்தவமாகக் கையிருக்கும் முதலிலிருந்தல்ல; செலவு முதலிலிருந்தேதான் சாதாரண நடவடிக்கை. அதிகம் லாபம் கிடைக்குமானால் தன மூலியமாக தொழிலாளிகள் மேன்மைப்பட்டு பண்டும் நிலைபெறலாம்.

3 எப்படி தொழிலானது கைமுதலைப் பொறுத்ததோ அப்படியே கைமுதலானது தொழிலை விருத்திசெய்ய உதவும். ஆனால் மேற்படி முதலில் ஒரு பகுதி யந்திரங்களிலும் நிலத்திலும் மற்றும் போடப்பட்டிருப்பதினால் அப்பகுதிக்குரிய அளவில் தொழில் விருத்தியில்லாமலிருக்கலாம். சாதாரணமாக முதல் அதிகமாக இருக்கையில் மேற்கண்ட விதமே யாகும். ஆயினும் அவ்விதமான முதலானது தொழிலாளிகளுக்கு நன்மையையே அளிக்கும். வேலைசெய்யத் தகுந்தவர்களும் முதலுமிருந்தால் அவர்களைக்கொண்டு ஏதோ ஒரு விதமான வேலை செய்விக்கலாம், ஆனால் சிலபேர் இது தப்பான அபிப்ராயமென்பார்கள். ஏனென்றால், முன் செய்தவையே அழிச்சலாகாமலிருக்கையில், இன்னும் அதிகமான தொழிலால் செய்வித்த சாமான்களை எவ்வாறு அழிச்சல் செய்வது? தக்க விலை கிடைக்காதது மாத்திரமல்ல, அச்சாமான்களை ஹீனவிலைக்குக் கொடுக்கவேண்டியும் வரும். இல்லாவிட்டால், அச்சாமான்களை ஒரு மூலையில் துருப்பிடிக்கப் போட்டுவிடவேண்டி வரும் என்கிறார்கள். ஆனால், அவருடைய அபிப்ராயம் தப்பென்று எளிதில் அறியலாம்,

கருணை பெற்ற ராஜாங்கத்திற்கு முதலும் தொழிலாளிகளுமுண்டானால், அம்முதலைப்பல விஷயங்களில் பிரயோஜனப்படுத்தலாம் அதிகம் தொழில்களையும் ஏற்படுத்தி மனிதருக்கு ஒரு பயனைக் கொடுக்கலாம் அவ்விதமே முதல் மிக்க தனவான்களும் செய்யலாம். ஆனால் முதலாளிகளெல்லாம் தொழிலாளிகளைவிடத் தங்களுக்கு விசேஷ மதிப்பு இல்லையென்று முதலைத் தொழில் விஷயங்களுக்கு உபயோகித்து வந்தால் முதல் நிஷ்பிரயோஜனமாவதில்லை யாகிலும் முன்செய்தவைகளே விற்பனையாகாமலிருக்க, அதிகம் உண்டான சரக்குகளை எவ்வாறு யார் விலைக்குக்கொள்வார்கள்? சரக்குகள் விலை போகாமலிருந்தால் பாக்கியாய்விடும்; அப்பொழுது முதலை முன்னிருந்தபடியே குறைத்துவிட வேண்டி நேரிடும் என்பது ஒரு கக்ஷி நியாயம் முன் எடுத்த விஷயத்தில் தனவான்கள் யாதொரு வைபவங்களை விரும்பமாட்டார்கள். அப்பொழுது தொழிலாளிகள் லாப உத்தேசமாகத் தங்கள் வரும்படியை முதலாக மாற்ற விரும்பினால், தொழிலாளிகள் பயனடைவார்கள். அதனால் முதலாளிகளுக்கு நஷ்டமொன்றுமில்லாமற்போனாலும், தொழிலாளிகள் படிப்படியாக நல்ல நிலைமைக்கு வந்துவிடுவார்கள்—ராஜ்ஜியமும் ஐசுவரியமடைந்தாற்போலாகும்—தொழிலாளிகள் அதிகரித்தால் வேலையும் அதிகரிக்கும் இல்லாமற்போனால் தொ

ழிலாளிகளே தனவான்களாவார்கள்—ஆகையால் ஐசுவரியமானது வைபவங்கள் வேண்டுவோரைப் பொறுத்ததல்லவென்பது தெளிவாக அறியத்தக்கது.

4. கைமுதல் என்பதின் இரண்டாவது கருத்தென்னவென்றால் அம்முதல் எவ்விதத்தினால் உண்டாவது என்பது தான். இவ்விஷயம் முன்னமே ஒருவாறு விளங்கியிருக்கும்; ஆகிலும் சாதாரணமாக, முதலானது சங்கிரகித்தலால் உண்டாகிறது என்று, யாவரும் அறிவர். வரவெல்லாம் செலவழித்தால் முதலென்பது எவ்வாறுகும்? ஆகாராதிகளுக்கு ஒருவன் சேகரம் செய்வதும் முதலாகாது. ஏனென்றால், இச்சேகரமானது மேல் விளைவு வரும் வரையில் தான் நிற்கும். நிலம் சாகுபடி செய்பவர்களை விசாரித்தால், ஆகாரத்திற்கு மாத்திரம் சேகரித்தால் போதாது: வித்துக்கும் சேகரித்து வைக்கவேண்டுமென்பர். இன்னும் எவ்வளவோ மட்டுப்பட்ட இதர செலவுகட்கும், கிஞ்சித்தாகிலும் சேகரம் வேண்டாமா? இதற்கே இப்படியானால், பிறரைக்கொண்டு தொழில் செய்வித்துப் பயனடைய விரும்புகிறவர்கள், மிக்கவும் முதல் சேகரம் செய்பவர்களாகவே யிருக்க வேண்டும். ஒன்றிலோ, செலவில் அதிகம் வரவு வேண்டும்: இல்லாமற்போனால், வரவினைவிடச் செலவு மட்டாக இருக்கவேண்டும். இவ்விரண்டுமின்றிச் சேகரம் செய்ய ஏலாது: கைமுதலும் உண்டாகாதென்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்கத்தக்கது.

நாகரிகமில்லாதமுன்னைய நாள்களில் திரவியவான்கள் யாரென்றால், திரவியத்தைச் சேர்த்தவனல்ல; பெலவானுக்கு கொள்ளைக்கு அக்ர தாம்புலம் வாங்கினவனேயாம், இல்லாமற்போனால். அடிமைகளைக்கொண்டு வேலை வாங்கி, அவர்களுக்கு அன்ன வஸ்திராதிகள் மட்டும் கொடுத்து மீந்தவற்றைப் பொக்கிஷத்திற் போட்டவனாகும். இந்த பொக்கிஷமும், யுத்தம் நேர்ந்தால், பெலவான் பொக்கிஷத்தில் ஐக்கியமாகி வந்தது.

இவை மாத்திரமன்றியில், எடுத்துக்கொண்ட முயற்சியளவில் அடங்கி நில்லாமல் வேறுவழிகளால் முதல் சேருவதும் எவ்வளவோ அநுபவ திருஷ்டாந்தமாக அறியலாம், ஆனால் மொத்தமாக, முதலானது சேகரம் செய்யும் திறமையைப் பொறுத்தது என்று கருதுவோமானால் அரைப்பட்டினி கிடந்தும் படு லுப்தத்தனம் செய்தும் முதல் சேர்ப்பதும் அக்கருத்துள் அடங்குமாதலால், முதல் சேகர மென்பதற்கே பழியேற்படும் ஆகையால் தொழிலால் அதிகம் பிரயோஜனமுண்டாகும்படி செய்வதும் தனக்கும் பிறர்க்கும் இயன்றளவில் பிரயோஜனப்படுவதும் நீங்கலாகப்பாக்கியாகும் சேகரமே சாசுவதமானதும் சர்வ சாஸ்திர சம்மதமானதுமான 'முதல்' என்னப்படும் அதாவது, படுலுப்தன் என்னுமலும், மட்டுமிதமாகச் செலவு செய்து, பாக்கியான சேகரமே 'கைமுதல்' என்பது லௌகீக தந்த்ரநியாயமாம்.

C. R. P.

VII

பொருமை.

170-வது பக்கத்தொடர்ச்சி.

அப்படி பொருமையுள்ள அம்மூவரும் ஒருநாள் ஒரு கணவாய் வழியாய்ப் போய்க்கொண்டிருக்கையில் அவர்கள் எதிரில் பையொன்று காணப்பட்டது. அது யாராவது வழிப்போக்கர் போட்டுவிட்டுப்போனதாயிருக்கவேண்டும். அம்மூவரும் தாங்கள் ஏறிச்சென்ற வண்டியை விட்டிறங்கி அப்பையின் சமீபத்தில் பார்த்து பணப்பையென்று மூவரும் அறிந்து இதைப்பங்கிட்டெடுத்துக்கொண்டு வீட்டிற்குத்திரும்பிப்போய் சுகமாகக் காலம் கழிக்கலாமென்றார்கள். அது அவர்கள் வெளிக்குப்பேசின பேச்சேயன்றி வேறல்ல. மனதில் இம்மூவருக்கும் எண்ணம் வேறாயிருந்தது. ஆகையால் ஒருவரும் அதைத்தொடாமலிருந்தார்கள் "கொடுப்பதழுக்கறுப்பான் சுற்றமுடுப்பதூஉ முண்பதூஉ மின்றிக்கெடும்" என்பதுபோல அது தனக்கில்லாமல்போனாலும் போகட்டும் அதை வேறொருவர் அநுபவியாமலிருந்தால் போதுமென்று மூவரும் கருதியிருந்

தனர். ஆயினும் அதைவிட்டு அப்புறம்போக ஒருவருக்கும் மனமில்லை. அதை மற்றிருவர்க்கும் பங்கிட்டுக்கொடுப்பது மூவருக்கும் வருத்தமாயிருந்தபடியால் என்ன செய்யவேண்டுமென்று யோசித்துக்கொண்டு இரவும் பகலுமாய் அங்கேயே நின்றுகொண்டிருந்தார்கள். இப்படியிருக்கையில் தர்மகேசரி என்னும் அந்த தேசத்தரசன் வேட்டையாடிவிட்டு தன் சைன்னியங்களுடன் அவ்விடம் வந்தனன். அவ்வரசன் இப்படி பொறாமை யடைந்திருப்பவர்களைக்கண்டு, "என்ன செய்தி? பையைக்கீழேபோட்டு அதை 3 பேராக சுற்றிக்கொண்டிருக்கிறீர்களே."? யென்று வினவினான். அவ்வரசனைக்கண்டு அவர்கள் திகில் அடைந்தனர். பிறகு உண்மையைச் சொல்லாவிடில் கொடிய தண்டனை சம்பவிக்குமென்று சொல்ல அவர்கள் அச்சமுற்று நடந்த செய்தியை உள்ளபடி சொல்ல ஆரம்பித்தனர்.

"அரசனே! எங்கள் மூவரையும் ஒரே பேய் பிடித்திருக்கின்றது. அதற்குப்பொறாமை என்று பெயர். ஆயினும் நாங்கள் மூன்றுபேரும் மாத்திரம் ஒன்றாயிருந்தால் அதற்குச் சம்மதந்தான். இக்கொடிய நோயை யாவரேனும் நீக்குவார்களாயின் அவர்களுக்கு இப்பூவுலகத்தில் நல்ல கீர்த்தியுண்டாகும். "அவ்விடத்தழுக்காறுடையானைச் செய்யவான் தவ்வையைக்காட்டிவிடும்" என்றபடி எல்லாத்துன்பங்களையும் விளைப்பதற்கு இந்த நோய்தான் ஹேதுவென்று எங்களுக்கே நன்றாய்ப்படுகின்றது. ஆயினும் நாங்கள் என்செய்வோம். எங்களால் நீக்கமுடியவில்லை. மேலும் "பணமென்றால் பிணமும் வாயைத்திறக்கும்" என்பது தாங்கள் கேட்டதில்லையோ? அதினால் வழியில் கிடந்த இப்பணப்பையை ஒருவரும் எடுக்காமல் மனம் கலங்கி நிற்கிறோம்என்றார்கள். துஷ்டநிக்கிரஹ சிஷ்டபரிபாலகனான அவ்வரசன் அதுகேட்டு "நல்லது பெரியோர்களே! உங்கள் நோய்க்கு என்னிடத்தில் ஒரு மருந்துண்டு. அந்நோய் யார்யாருக்கு தேகத்தில் நன்றாய் ஊன்றிப்போயிருக்கின்றதோ, அதை உள்ளது உள்ளபடி ஒளியாமல் தெரிவிப்பீர்களாயின் அதற்குத்தக்க பலமுள்ள மருந்தைக்கொடுத்து நிவர்த்திசெய்ய மாட்டுவேன்" என்றான். அதுகேட்டு சுப்பன், "அய்யோ? என் பொறாமை நோயை நான் என்னவென்று சொல்லுவேன்! அது தலைக்கேறிப்போயிருக்கிறது. உலகத்தில் ஒருவருக்குநன்மையுண்டாவது நான் கண்ணாரப்பார்த்து பொறுக்கமாட்டேன்" என்றான். அதன்மேல் லக்ஷ்மணன் "அப்படியா? ஆயினும் என்னைக்காட்டிலும் நீ மிகவும் யோக்யன்தான். பிறர் நலமடைவது பார்க்கப் பொறாமலிருப்பது பெரிதல்ல. எவனாவது ஒருவன் மற்றொருவருக்கு ஒத்தாசை செய்தால் அதையும் நான்பொறுக்கமாட்டேன்" என்றான். லக்ஷ்மணனிவ்வாறு கூறியதற்கு கிருஷ்ணன் "ஆனால் இவ்விஷயத்தில் நீங்களிருவரும் இன்னும் குழந்தைகளாயிருக்கின்றீர்கள். இந்த வியாதி இப்போதுதான் உங்களிடத்து ஆரம்பித்திருப்பதுபோல் தோன்றுகிறது. ஒருவன் மற்றொருவனுக்குதவி புரிவதையும் பொறுக்கமாட்டாமலிருப்பது இவ்வளவு மேன்மையல்ல. உலகத்தில எவனாவது கேட்காமலிருக்கும்போது உதவி செய்பவனையும் பார்க்கப்பொறுக்கமாட்டேன்." என்றான்.

(தொடரும்.)

E. V. S. Row.

VIII

லோகோபகாரிகள்.

மருஹூர் நியாயம்.

(179-வது பக்கத்தொடர்ச்சி.)

தூசரவர்கள் :- ரஸவிஷயம் ராமாயணமாகிறபடியால், இன்றைத்தினம் கனம் லோ. உ. ச. நாயகர் அவர்கள் குதிரைக்குறடா கொண்டுவந்து எல்லோரையும் சந்தோஷிக்கச்செய்ய இருக்கிறார். ஆகையால் இச்சபையோரெல்லாம் அமைவுற்றுக் கேட்பாராக.

கனம் லோ. உ. ச. அவர்கள் எழுந்ததும் (கரகோஷம்)

கனம்நாயகர் - ஐயா லோகோபகாரிகளே! மனுஷியனுக்கும் மிருகத்திற்கும் அநேக வித்தியாசம். மிருகத்திற்கு மனுஷியனைப்போலப் பகுத்தறிவென்பதே கிடையாது. இப்பகுத்தறிவை வெளியிடவேண்டிய பாஷையும் கிடையாது. இஃது இப்படியிருக்க, பாஷையினால் ஒருவன் தன்னுடைய சிந்தாக்கிராஹிய விஷயங்களை வெளிப்படச்சொல்லச் சக்தியற்றவனானால், அவனை மனுஷியனல்லவென்றே சொல்லலாம். பாஷையானது தெய்வீகமாய் மனுஷியனுக்கு லபித்திருப்பது: குழந்தைப்பருவமுதல் 'அம்மா' 'அப்பா' வென்று அன்னைதொட்டாரம்பித்து அவை பரியந்தம் அடிமேல் அடிவைத்துப்படிப்படியாகவோங்கிப் பரிணமிப்பதுவே பாஷையாம். இவ்வைபவத்தைத்தான் பிராகிருதமென்றும் வழக்கு என்றும் சொல்கிறார்கள். எழுதப்படிக்கக்கற்று, மேற்படி இயற்கையாயமைந்த வழக்கியல் நடையை, உள்ளது உள்ளபடி எழுதுவதே அழகாயிருக்கும். இவ்வழக்கியலிற்றான் நவரச பாவங்கள் நன்காய்ச் சுவபாவமாகப்படிந்திருக்கிறது. எந்தக்கவிதாவானவன் இவ்வியல்பாயுள்ளவற்றை எழுதுவதில் வல்லவனோ, அவனைத்தான் வாக்கி வாக்மி என்று சொல்கிறார்கள். ஆகையினால் வசன நடையானது அவனவன் அறையிலும் அம்பலத்திலும் ஆடியதுபோலவே யமைவதாகையினால், இவ்வசனநடையை இலக்கணவழிகளாலிசைத்தெழுதுவதுதான், வித்வான்களின் சாமர்த்தியம். வேறுவிதமாகப் படிப்பாளிகள் எழுதியதுபோல நாமும் எழுதவேண்டுமென்று ஆரம்பித்தால் நமது இதயமே கெட்டுப்போம். இந்த விஷயத்தை முக்கியமாய்க் கவனித்து, எழுதுவோரும் படிப்போரும் சன்மானித்து வர வேண்டியது அவசியம். இது தெரியாமல், சன்மானிப்பவர்கள் தலைவிரிகோலமாய் ஆடுவார்களானால், குதிரைக்குறடாவை யுபயோகிக்கவேண்டியது, யார்க்காக யார்உபயோகிக்கவேணும்? ஒருக்காலும் மாணாக்கரின்மேல் உபயோகிக்க ஏலாது. ஆகையினால் பிரபஞ்சத்தில் அடிபட்டுத் தேர்ந்தவனே ஆசானாவான். அப்படிப்பட்டவனைத்தான், பிள்ளைகளைப் பயிற்றிவைக்கவும், சன்மானிக்கவும் பிரகரிக்கவும், ஏற்படுத்தவேண்டியது. இதுவே வசனநடைக் குதிரைக்குறடா விவரம். (கரகோஷம்)

பலிஷ்டன் :- கனம் நாயகரவர்கள் சொன்னது ஏகதேசம் சரியாகவிருக்கிறது. ஆனாலும் குருவுக்கே தான் குறடா வுபயோகிக்கத்தகும் என்பது என் மனதிற்கேற்கவில்லை- (அப்படிச் சொல்லவில்லை.) மாணாக்கரோடு சேர்ந்து குருவும் 'பாச்சி' 'சோச்சி' யென்று எழுதவும் படிக்கவும் வேண்டுமோ? (இல்-இரும் இரும்!)

கனிஷ்டன் :- குழந்தைகளுடைய மழலைச் சொற்களைச் சுட்டி யெழுத நேர்ந்தவிடத்து, 'பால்' 'சோறு' என்பதைவிட 'பாச்சி' 'சோச்சி'

யென்று எழுதுவதே யழகாம். (மெத்தகரகோஷம்.)

தாசரவர்கள் - பலிஷ்டர் பேசினது ஒருவித ஙியாயமே. ஆனாலும் சுவபாவத்தைச்சிதைப்பது அழகல்ல. திருஷ்டாந்தமாக ஒரு கதை சொல்கிறேன் :- காளிதாசரவர்கள் சொல்லிவிட்ட காவியத்தை முடிக்க லக்ஷண கவியை போஜராஜா நியமித்தபோது, அனந்தபட்டன் என்பவர் அரண்மனைக்கெதிரே யிருந்த ஓர் கூரைமேலேறி நின்றுகொண்டு அஷ்டமிசந்திரனுக்கு நேராக அறைவரடியாகிய எருமுட்டைப்பகுதியொன்றை மூங்கின்மேல் கோர்த்து, சந்திரனை நாக்கி நோக்கிக்குதிக்கையில், அரசன் யாது காரணமென்று வினவ, சுவாமீ! லக்ஷணகவி காளிதாச வரகவியோடு ஒத்து முடிந்தால், இவ்வெரு முட்டைப் பகுதியும் சந்திரனோடு சேர்ந்து மதியைப் பூர்ணமாக்குவதில் சந்தேகமென்னவென்றார். (சொல்வதைக்கேளும்! கேளும்!) ஆகையினால் வரத்தால் ஏற்பட்ட பிராகிருதமே லக்ஷணமன்றி, லக்ஷணம் பிராகிருதப் பிரஸாதமாகவேயாகாது. (கரகோஷம்)

கனிஷ்டன் :- நாயகர் நாலு பக்கமும் திரிந்து திரிந்து, நாலும் நன்றுபறிந்தவர். தாசரவர்களும் மிகவாதி. ஆகையால், இவர்கள் மெத்த சிரமமெடுத்துக்கொண்டு, இவ்விடத்தில் தயவுசெய்து பிரசங்கித்ததானது, நாமெல்லோரும் பெற்ற புண்ணியமென்றே சொல்லலாம்: மேற்படியார்க்கு மும்முறை வந்தனமளிப்போமாக :-

(கரகோஷ விளம்பனம்)

தாசரவர்கள் : இன்று சுதினமாக முடிவுபெற்று இத்துடன் இச்சபை கலையவும்.

4-12-09. *S. Sastri,*

சென்றமதி பிரபஞ்சத்தில் சகோதரி சுப்புலக்ஷ்மியம்மாள் கைச்சாற்றின்மேல் இரண்டு விடுகதை வினக்கள் வரையப்பட்டிருந்ததைக் கண்டு களிப்புற்ற நான் அவ்விடுகதை வினக்களுக்கு சரியானபொருள் எனக்குத் தெரிந்தவாறு பிரபஞ்சத்தில் வரைவது வீணாகாதென நினைத்து வரையத்துணிந்தேன்.

அப்பொருள்களாவன :- முதலாவதற்கு "வீணை" யெனவும், இரண்டாவதற்கு "வலை" யெனவும், பொருள்படும்.

விடுகதை வின.

சிற்றுடை யுடுத்திருக்கும் சிறுமியல்ல
சிறந்தநா லணிந்திருக்கும் அந்தணரல்ல
ஒற்றைத்தலைக் கெண்ணேயிடும் பணிக்கனல்ல
ஒண்கழுத்தில் மணியுண்டு ரிஷபமல்ல
சிற்றூரப் புரமெரித்தார் முன்னே நிற்பார்
சிறந்தபணி விடைக்குதவார் தீயரல்லர்
பொன்பாதம் பூண்டிருக்கும் விஷ்ணுவுமல்ல
பூவுலகிலுள்ளோரே இக்கவியைப் புகலுவீரே.

II

படிமுழுதுந் தரித்தங்கே மன்றுளாடி
பக்தரு முக்தருமங்கே பணிந்துநாடி
திடமுடைய நான்முகனும் அரியுந்தேடி
தேவரெல்லாம் போற்றரிய திங்கள்சூடி
வடமணியும் மூலைப வர்க்கம்போல
வடிவுடைய திருமேனி தழும்புபட்டு
படிமுழுது மாளுவிக்க வல்லார்தாமே
பரமனார் தானுமல்ல பகருவீரே.

C. G. S. Sundram.

IX

குடி.

170-வது பக்கத்தொடர்ச்சி.

குடியினால் தாதுபுஷ்டி யுண்டாகமாட்டாதா? நன்று சொன்னீர் புருஷார்த்தத்துக்கெல்லாங்காரணமான அறிவானது நஷ்டியையடையதாதுவென்னும் மிந்திரியங்கள் மாத்திரம் புஷ்டியடைவதென்றால் அது உண்மையாமோ? முற்றிலுமில்லை. ஒருக்காலங்ஙனமாவதாயிருந்தாலும் அது தளகர்த்தனில்லாப் படைபோலும் ஞானமில்லாக் கல்விபோலுமாகும் நல்லது, இதற்கு வஸ்துவென்றும் சரக்கென்றும் அமுதமென்றும் பெயருண்டென்றும், அவ்வித அருமைப்பெயரானது சித்தர்களாலும் யோகிகளாலும் தங்கள் ஸ்வானுபவத்திலிடப்பட்டிருக்கின்றதென்றும் சொல்லிக்கொள்ளுகிறார்களே, சரி, சரி "தான்கெட்டதுமல்லாமல் சந்திரபுஷ்கரணியையுங் கெடுத்தான்" என்றாற்போல நமது சிரத்தின் நடுவே விளங்குவதான ஸஹஸ்ரதள கமலத்தின் மலரினது நுனியிலுள்ள சந்திரமண்டலத்தை அக்கினி பீஜாக்ஷர உச்சாரணத்தால் இளகப்பண்ணியதிலிருந்து ஒழுகுகின்றதையல்லவா அமுதமென்றும் தேவாமுதமென்றும், வஸ்துவென்றும் அரியவஸ்துவென்றும் சொல்லுவதைவிட்டு கேவலம் புளித்துநுரைகொண்ட நீரையா அவ்வாறுகூறினர்? இல்லை! இல்லை! மேலும் குடிப்பதால் மூளை ஜன்னி ரோகங்கண்டு தங்கள் நிஷ்டைகளுக்கும், யோக சாதனைக்கும் பங்கம் நிகழுமென அவர்களறியார்களா? நிற்க: இக்குடியர்கள் தாங்கள் கெட்டதன்றியில் தங்கள் முன்னோர்களது பெருமையையும் கெடுத்துவிடுகிறார்கள். இதற்கு சான்றாகவோர் கதை என் ஞாபகத்துக்கு வருகிறது அது வருமாறு :- ஓர் ஏகாதசி தினத்தில் ஓர் அக்ரஹாரத் தெருவழியாக அவ்வீதி விப்பிரகுல பிரம்மாசாரியொருவன் வெற்றிலைபாக்கு புகையிலைபோட்டு மென்றுகொண்டும் அடிக்கடி எச்சிலை தாராளமாய் நடுத்தெருவில் உமிழ்ந்துகொண்டும் போனான். அவ்வீதியிலோர் வீட்டுத்திண்ணையில் கூடியிருந்த சில விப்பிரகுலோத்தமர்கள் இப்பிரம்மசாரியையழைத்து அடா? சேஷா!! இன்று வெள்ளிக்கிழமையும் ஏகாதசியுமாச்சதே! இதேது விடிந்து நான்கு நாழிகைக்குள் வெற்றிலைபாக்கு தாரணம்! என, அப்பிரம்மச்சாரி சேஷன்விப்பிரக்குழாத்தை நோக்கி ஐயன்மீர்! நான் வெங்காயத்தைக் கடித்துக்கொண்டு பழயது சாப்பிட்டேன் அதனாலுண்டான வாய்நாற்றத்தை போக்கிக்கொள்ள தாம்பூலந்தரித்தேனென்றான். சபாஷ்!!! அதேது விடிந்தவுடனே பழயது கிடைத்தது! என விப்பிரர்கள் கேட்க, பூசுரர்களே!! இன்று என் தோட்டத்தில் போய் ஏர் உழவேண்டிய வேலையதிகம் அதினால் எழுந்தவுடன் பழயது சாப்பிட்டேன் எனச்சேஷன் விடையளிக்க, பிராமணர்கள் பின்னும் சேஷா!! அதேது நீ உழுவது என, சிறான் அந்தணர்களே!! என் பண்ணையாள்கள் மிகவும் சிறுவர்கள் நான் நேற்று அரசமரத்தால் செய்வித்த கலப்பையை எடுத்து ஏர் உழ அசக்தர்கள் ஆனதால் நானே உழவேண்டியதாயிற்று என்றான். பலே! பலே!! சேஷா கலப்பை அரசமரத்தில்தான் செய்யவேணுமோ? கருவேல், வெள் வேல் மரங்களில்லையா? என, ஐயன்மீர்! என் தோட்டத்திலிருந்த கருவேல் வெள்வேல் முதலிய மரங்களையெல்லாம் வெட்டி வீடு கட்டிவிட்டேன்; அவைகளில்

லை என் மூன்றுந்தலைமுறை மாமனுரால் வைக்கப்பட்டு என் முன்னோர்களாலேயே செம்மையாக வளர்க்கப்பட்ட இவ்வரசமரம் முற்றிலை சேருள்ளது; ஆனதால் அதில் கலப்பை செய்தேன். தவிர நானின்று ஒரு துண்டு நிலத்தில், அதிகமாக கருந்துளசி முளைத்திருப்பதாலதை உழுது களையவேண்டியிருப்பதால் இவ்வரசை கலப்பையாக்க நேர்ந்தது என்றான். விப்பிரர்கள் ஹரிஹரி! எனக்காதைப்பொத்திக்கொண்டு; சேஷனை நோக்கி அடே? இன்று வெள்ளிக்கிழமையாயிற்றே! அதிலும் ஏகாதசி அல்லவா? இன்று கிருஷ்ண துளசியினோர் தளத்தைக்கிள்ளினாலும் "ஸ்ரீ கிருஷ்ணரின் தலையைக் கிள்ளியதுபோலென்று புராணங்கள் முறையிடுகின்றனவே" அங்ஙனமிருக்க நீ துளசி வனத்தையே களையப்போகிறேன் என்கிறாயே? ஈதென்ன அநியாயம் என, சேஷன்-ஆம் அப்பாஆம்! சொல்லுகிறவர்களுக்கென்ன வாய் வலிக்குதோ கஷ்டப்படுகிறவனுக்கல்லவா மெய்வருத்தம் தெரியும். நான் சென்ற ஒருமாதத்துக்குமுன் ஷை துண்டு நிலத்தை யுழுது அதில் "கஞ்சா" சாகுபடி செய்ய அவ்விதைகளை விதைத்தேன் அச்செடிகள் முளைத்து நான்குவிரற்கடை உயரம் வளருமுன் பாழுங்கருந்துளசி அதில்முளைத்து களைகட்டிக்கொண்டது, அக்களையை, களைய நானே அரசங்கட்டை கலப்பைகொண்டு உழ நேர்ந்தது. அச்சிறுவர்கள் பயிருழவுழச் சக்தியற்றவர்கள் என்றான். இதைக்கேட்ட அந்தணர்கள் அதியாச்சரியங்கொண்டு அடேசேஷா? துளசிவனத்தைப் பாழாக்கி கஞ்சாவை விளைவிப்பதேது? என்றனர். அதற்கு பிரம்மச்சாரி, வேதியர்காள்! எனக்கோர் கஞ்சாகுடிக்கும் துருக்கச்சி ஸ்நேகம். அவளுக்கு கஞ்சா விலைக்கு வாங்கிக்கொடுப்பதென்றால் ஒருவருஷத்துக்குப்பணமதிகமாகச்செல்லுகின்றது. அதற்குப்பணவருவாயில்லை. மேலும், கடைகளில்வாங்கும் கஞ்சா அவ்வளவு சிலாக்கியமுமில்லை யாதலால் அதை சாகுபடி செய்கிறேன் என்றான். இதைக்கேட்டோர் முன்னிலுமதிக வியப்படைந்து பலே!! பலே!! இவ்வளவு லக்ஷணத்தில் துருக்கச்சி ஒன்று கூடவாவென மறையோர் வினவ, அதற்கு விப்பிரகுல சிகாமணியாகிய பிரம்மச்சாரி ஆம், காணும்! அத்துருக்கச்சி என் தகப்பனாரிடம் நெடுநாளாய் ஸ்நேகமிருந்தாள் இப்போது நானெப்படி அவளைத் தள்ளிவிடுகிறது என வாயகூசாமல் விடை பகர்ந்தான், என்ற கதையைப்போல குடியர்கள் தங்கொள்கைக்குச்சான்று பகன்று தங்குலகோத்திரத்தையும் கெடுத்துவிடுகிறார்கள்.

சரி! சரி! ஐபா, இவ்வண்ணங் கேடாகிய குடியை அனேக ஜனங்களேன் அனுசரிக்கிறார்கள். அந்தக் கேட்டைச் சொல்வேன் கேள். பகுத்தறியும் சக்தியற்ற வண்டினங்கள் விளக்கைப்பார்த்து மலரென வந்து விழுந்து மடிவதுபோல ஒருவரைப்பார்த்தொருவர் விளையாட்டாகக்கொண்ட துரப்பியாசமானது, வினையாய் மூண்டதேபொழிய, வேறு சல்லடை கொண்டு சலித்து சலித்துக் தடவிப்பார்த்தாலும் இகபரசுகங்கள் யாதொன்றும் உண்டெனக் காணப்படவில்லை. ஆகலால் அன்பர்களே! இந்த வியாஸத்தைக் கொஞ்சம் தயைசெய்து படித்து நிதானித்துப் பார்ப்பீராகில் இந்தக்குடியின் விஷயம் இவ்வளவு அற்பந்தானென்பது தங்களுக்கே தோன்றாமல் போகத்தக்கதல்ல. அங்ஙனந்தோன்றியும் வழக்கத்தை மாற்றுவது கடினமாயிருக்கும்பக்ஷத்தில்,

"ஐயநா னஞ்சினேனிந் நறவினின ரியகேடு
கையிஞலன் றியேயுங் கருதுதல் கருமமன்றால்
வெய்யதா மதுவையின்னும் விரும்பினே னென்
[வீரன்
செய்யதா, மறைகளன்ன சேவடி சிதைக் கவெ
[ன்றான்.

என்று வானர வேந்தனாகிய **சுக்கிரீவன்** உறுதிமொழி கூறியபடி ஒருறுதி மொழியை முன்னிட்டுக்கொண்டாவது இந்தக்கொடிய குடியென்பதற்குச் சற்று மிடங்கொடாமல் நமக்குக் கடவுள் கொடுத்த வாணாளை வீணாளாக்காமல் நந்நாளாகக்கொண்டு சுகித்திருப்போமாக.

சுபம்! சுபம் !! இஷ்டர்களே வந்தனம்.

E. K. S. Manian.

பிழை திருத்தம்.

சென்ற நவம்பர் மாத சஞ்சிகையின் 170 வது பக்கத்தின் 1-வது பேஜ் 13-வது வரியில் பிழை.

அந்தப்பாரணைக் களி என்பதை, திருத்தம் அந்தப்பாரணை கனி என்றும்,

14-வது வரியில் பிழை. வர்க்கத்தில் என்பதை திருத்தம்: வர்க்கத்திலும் அந்தக்கனிவர்க்கத்தில் என்றும் திருத்திக்கொள்ளவும்.

E. K. S. M.

விடுகவி வெண்பா.

ஆகங் கருத்திருக்குமா ண்டகைய வீரனல்ல
போக மதுக்குடிக்கும் போகியல்ல-மோகமுடன்
செய்யபண்கள் பாடிவருந் தேவரம்மை தானு
[மல்ல
பையவிதன் பேர்பகரு வீர்.

ஸகோதரி சுப்புலக்ஷிமியம்மாள்.

X

வேசிகளைத் தேவதாசிக ளென்று கொள்ளும் மயக்கத்தெளிவு.

"பறவை மிருகங்கண் முறை பார்க்குதோ வேசி
முறை பார்க்கவே பிழைப்பு மோசம் -
அப்பன் வருவா னதன்பின்பு மகன் வருவான்
தப்புமுறை யென்று நீ தள்ளாதே.
கொடுக்குமட்டும் வாங்கிக் கொடாதிருந்தால்
[விட்டு
முடுக்கல்லோ வேசிமுறை-
வேதிபராயுள்ளார்கள் வேசியரைக் கண்டாக்
[கால்
காதவழி விலகல் காரியங்காண்-
- - - - வேசியிவட்
கிந்தபொருளை வட்டிக் கிந்தோமே- நாமிருக்க
வாய்ந்தமச்சு வீடுகட்டி வைத்தோமா-கூந்தலிள
[ம்
பேடைமயில் போலனைய பெண்டாட்டிக்கே யுட
[மை
சோடினையாய்ப் பூட்டிச் சுகித்தோமா-ஆடுகொ
[ண்டு
விட்டோமோ மாடுகொண்டு விட்டோமோ தெ
[ய்வத்துக்
கிட்டோமோ தேகியென்பார்க் கீந்தோமோ-அ
[ட்டதிக்கும்
நாடிப்புகழ் பெரிய நாகமன்மேற் பாமாலை
சூடித்தியாகஞ் சொரிந்தோமோ-தேடுநிதி
தன்னைக் கொடுத்துத் தரித்திரத்தை வாங்கினோ
மென்ன வியாபார மென்போரும்-

\- - - - ஈங்கிவளுக்
கீயும்வகை காணே மிரதம் பொன்னுக்குவது
பாயமென்று மித்தம் பலகூட்டித்-தீயிற்
குகையிலே வைத்துக் குனிந்தூதிவாதப்
புகையி லடிபட்டுப் புகைந்து-திசைதெரியா
மாலைக்கண்ணாகி மதிமயங்கித் தங்கள் தங்கள்
காலைக்கண்ணாக்கி வழிகாண்பாரும்-
\- - - - மானனையா
ளிட்டமருந்தா விருமல் பிடித்தோயாமற்
குட்டியிட்ட நாய்போற் குரைப்பாரும்.''

என்று விறலிவிடு தூதினும்,

''தையலில்லம் புகும்போதென் சுகன்குரலைக்
[கேட்டொதுங்கித் தாழ்வாரத்திற்
பையவொன்றிச் செவிகொடுத்தேன் பாலனைப்
[பார்த் தக்கோதை பணமீயென்று
ளையனிறந்திடி லெல்லா முனதென்று னவன்றா
[ங்கு மமையம் பார்த்தோர்
சையமெடுத்த வன்றலைமேற் போடுவாய் போடு
முன்னோன் றழுவே னென்றாள்.'' (25)

ஆவியனையாளை யோர்போது பிரிந்தவளில்ல
[மணுகுங்காலை
மேவுபாங்கியைக் கண்டாண் டுணையின்றி வருந்
[தினளோ மின்னாளென்றே
னாவிதனுக்குண்டோகாண் மயிர்பஞ்ச மலப்பஞ்
[சநாய்க்குமுண்டோ
தேவிதனக்குண்டோவாண் பஞ்சமென்று லிதன்
[பொருளைத் தெரிகிலேனே'' (4)
(கணிகையாரியல்பு)

என்று நீதிநூலினும்,

''அரவினது கடிபடலா மலாலமுண் டிடலாம
[யில் வேல்பட்டிங்
குருவிவரச் சகித்திடலாஞ் சென்னாயின் கடிக்கு
[றலா முறுத்துநோக்கி
வெரிவிவரும் பேய்பிடிக்க மகிழ்ந்தாடல் செய்தி
[டலாம் விடவேல் சேர்த்துத்
திருகிவரும் கட்கணையாற் றிருப்புமன வேசிய
[ரைத் தீண்டொணாதால்''

என்று பல ஆன்றோர்கள் வாக்கிலும் போந்த பிரமாணங்களை நோக்கும்போது இவர்களைக் கனவிலும் நினைக்கலாமா? இவர்களைப் பற்றி யிகழ்ந்துரையாத நூல்களில்லை. "விறலிவிடு தூது" "நொண்டிநாடகம்" "பரத்தையர் மாலை" முதலிய பிரபந்தங்களெல்லாம் பெரும்பாலும் இவர்களைப்பற்றியே பிரசித்தமாயினவென்பது நிச்சயம். பெரிய பெரிய நூல்களும் இவர்களைப்பற்றிப் பிரஸ்தாபிக்கும்போது எத்தனையோ யிகழ்ந்து பேசுகின்றன. அருணகிரிநாதர் "திருப்புகழில்" ஏராளமாய்க் காணலாம். இவை படித்தவர்கள் யாவரும் அறிந்தவிஷயமே. இவர்களின்பந் துய்க்கப்புகுந்த கனதனவான்களிற் கெட்டுப்போகாது தப்பிப்பிழைத்தவர்களருமையினுமருமை. ஆடவர்கள் கெட்டுப்போவதற்குப் பெரும்பாலும் வேசிகளே காரணம். இவர்கள் கொடுக்கும் காமநோயினால் எத்தனையோ பாவங்களும், கெடுதிகளும் நேர்ந்து யாவராலும் மிகழப்பட்டுக் கொடிய நரகத் துன்பத்தையும் அனுபவிக்க நேரிடுமென்பது உண்மைநூற் சம்மதம். இவர்களால் விளைகின்ற பல துரோகங்களையும் விரித்துரைக்கிற் பெருகுமாதலால் அவற்றுள் பிரதானமாகிய புத்திர துரோகத்தையும், அன்ய புத்திரப்ராப்தியையும் சிறிது ஈண்டெடுத்துக் காட்டுவாம்.

வேசிகளின்பமே யின்பமெனக்கருதி அவர்களைக் காலைக்கட்டிக்கொண்டிழுக்கின்ற சில கனவான்களுடைய கர்ப்பமானது அவ்வேசிகளுடைய சூலிற்றங்கிப் புத்திரோற்பத்தியுண்டாகிறது. அப்புத்திரர்கள் "வேசிபுத்திரர்கள்" என்று யாவராலு மிகழப்படுவதுமன்றித் தங்கள் சொத்துகளுக்கும், கருமத்திற்கும் பாத்யதைப் படாமல் ஜாதிப்பிரஷ்டர்களாய் விடுகிறார்கள். ஆனதால் புத்திரத் துரோகிகளாகின்றார்கள். மனைவிகளாகிய கற்புடைய ஸ்திரீகள் நாயகரது வேசிகமனத்தையும், யாவராலும் சகிக்கற்கரிய காமநோயையும் அடக்கமுடியாமல் தயங்குகின்றனர். வேசிகளுக்குப்பிறந்த சொந்தபுத்திரர்களோ தந்தைக்குக்கருமஞ்செய்கிற வழக்கமில்லை. செய்தாலும் பிரஷ்டர்களானதால் சாஸ்திரப்படி பலிக்கிறதில்லை. ஐயோ! கேவலம் வேசிகள் கவனத்தால் சொந்த புத்திரர்களைப் பிரஷ்டர்களாக்கிவிட்டு அன்னிய புத்திரர்களைச் சொந்த புத்திரராகக்கொண்டு மஹாபாவங்கட்கும், பெருந்துக்கங்கட்கும் ஆளாகி வருந்துகின்றது ஞாயமா? இதுபற்றியே "கூத்தியார் பிள்ளை கொள்ளிவைக்குமா? நீட்டு வெற்றிலை காவியேறுமா?" என்று பழமொழியு மிருக்கிறது.

''வேசியர் போகநோக்கின் மிகுதுயர்மனைவிக்
[கெய்தும்
தோசமிங் கிதன்மேலில்லை தோற்று புத்திரனும்
[வேசி
யாசை நன்மகனு யெல்லா மற்றவனுக வேறு
கோசநன் மகனேவந்து கூடுவ னவைக்கு மே
[லாய்''

என்றே ரான்றோர் வாக்கும் பரிமளிக்கின்றது.

இங்ஙனம் புத்திரத்துரோகமும், அன்னிய புத்திரப்பிராப்தியும் வருமென்பது கருதித்தான் நல்லொழுக்கத்தோடும் சிவானுக்கிரகம் பெற்று வாழ விரும்புகிற எவர்களும் வேசிகமன முதலிய விபசாரம்செய்யக்கூடாதென்றும், விபசாரதாகிய துர்க்குணமுள்ள மனைவியர்களையும் உடனே விலக்கிவிட வேண்டுமென்றும் வேதாகமங்கள் முறையிடுகின்றன.

''மனைவிதன் மனதிலெண்ணும் வண்ணமதெண்
[ணியந்த
வினைதனைச் செய்பாளாயின் விளக்குக விளக்கி
[யுந்தான்
தினையள வென்னுந்தாழ்க்கிற் செப்புக சினந்து
[மப்பால்
கினைகில ளென்னிலன்றே நீக்குக வொழுக்கந்தா
[னே''

என்று சுவேதகிரி மான்மியத்திலும்,

''வலிதினி லொருவன் கன்னியங்கற்பின் மகளி
[ரைப்புணர்ந்திடி னவட்குப்
பொலிவறுமாசு பூத்தவெற்றிழைக னுழைது
[கில் புனைகென வழங்கி
நலிவொடும் வருந்த வடிசிலோர் பிண்டநல்கி
[நாள் கழித்துழி பூப்பிற்
குலனொடுமவளைக் கூட்டுககருப்பங் கொண்டிடி
[னீக்குதல் குணனே'' (14)

(39-வது இல்லொழுக்கங்கூறிய அத்தியாயம்.)

என்று காசிகாண்டத்திலும் போந்த பிரமாணங்கள். துர்க்குணமுள்ள மனைவியர்களையே நீக்கிவிடவேண்டுமென்று போதிக்கின்றதே. இங்ஙனமிருக்க மஹா துர்க்குண முள்ளவர்களும் பாவமே சொரூபமாயிருப்பவர்களுமாகிய வேசிகளை நீக்காமலிருக்கலாமா?

(தொடரும்.)

இங்ஙனம்,

C. K. N. Swamy.

XI

வைத்தியக் குறிப்புகள்.

(6-வது சஞ்சிகை 179-வது பக்கத்தொடர்ச்சி.)

தேகசுத்தி விஷயம் சொன்னதுபோலவே வாஸஸ்தல சுசியும் வேண்டியது. ஸ்தல சுசி விஷயங்கள் 'சுகாதார விளக்கம்' என்னும் புஸ்தகங்களிற் செம்மையாக விவரித்திருப்பதால் இச் சஞ்சிகையில் எழுதுவது அனாவசியம். உலகத்தில் "வாதப்ரஷ்டோ வைத்ய சிரேஷ்ட" என்று சாதாரணமாகச் சொல்வது வழக்கம். ஆகையால் 'வாதம்' என்பதின்னதென்று சுருக்கமாய் எழுதிவிட்டுப்பின்னுல் வைத்திய பாகத்தை எழுதிவருவேன்.

வாத விஷயம்.

'வாதம்' என்பது 'இரசவாதம்' என்பதின் முதற்குறை. 'இரசம்' என்ருல் பாதரசமல்ல : சத்வம் அல்லது சத்து என்று அர்த்தம். அதாவது ஒரு லோஹத்திலிருந்து சத்தை எடுத்து மற்றொரு லோஹத்தினுடைய சத்தோடு சேர்த்துத் தங்கமோ வெள்ளியோவாகச் செய்வது தான். சேர்த்துவிக்க ஆசிடையிட்டு ஊதவேண்டிய வஸ்துக்களும் பலவாருக மஹான்கள் கூறியிருக்கினறனர். இந்த உளவு அறியாதவர்கள் அநேகர்கெட்டலைந்துழல்கிருர்கள். இப்படிப்பட்டவர்களைப்பற்றி அகஸ்தியர் சொல்வதாவது :-

வாதிவாதி வாதிவாதி வண்டலை யறிந்திடான்
ஊதியூதி யூதியூதி யொளிமழுங்கி யுளறுவான்
வீதிவீதி வீதிவீதி விடையெருப் புரக்குவான்
சாதிசாதி சாதிசாதி சாகரத்தைக் கண்டிடான்—

என்கிருர்.

இக்கவிதையை வெள்ளைத்தமிழாக ஞானோபதேசமாகக்கூறியிருந்தாலும், இக்கவியொன்றினுலேயே இரசவாத சூட்சும தத்வத்தையும் கூறிவிட்டார். இத்தத்வமானது பிரம்மோபதேசவிச்சின்னமாகையால் இவ்விடத்தில் சொல்லத்தகுந்ததல்ல. ஆனுல், பதினெண் சித்தர்களும் கூறிய இரசவாத சாஸ்திரத்தை இக்காலத்தில் இங்கிலீஷ் படித்தாராய்ந்த சாஸ்திரக்ஞர் பொய்யென்று சுலபமாகச் சொல்லிவிடுகின்றனர். தாயுமானவரும்கூட "வெந்தழலினிரதம்வைத்தைந்து லோஹத்தையும்வேதித்துவிற்றுண்ணலாம்" என்றும், திருவள்ளுவநாயனுரும்-பரிமுப்புச்சூத்திரத்தில் வாதமார்க்க சூட்சுமம் சொல்லி, "காடெல்லாந் திரிந்தயர்ந்தலையவேண்டாம்" என்றும், "மனைவியோடிருந்தவனென்பிறவியாகும்" என்றும் முடித்துவிட்டார். இதனுல் வனமூலிகைகளால் வாதம் பலிக்குமென்றும், துறவிக்கே வாதம் பலிக்குமென்றும் சாதாரணமாக நினைக்கும் நினைவானது தப்பென்று விளங்கும்.

லோஹங்கள் சுயமானது (*Elements*) என்பது மேலைத்தேசத்தார்கொள்கை. ஆனுல் நமது சித்தபுருஷாள் அநுபவமுறையானது என்னவென்ருல் 'லோஹம்' என்பது ஒரே பொருள் : அவ்வஸ்து இரும்பொன்றுதான்; மற்ற லோஹங்கள் இதன் சத்வபேதம் என்று சாஸ்திர முறையாகச் சொல்லியிருக்கிருர்கள். வைத்ய அகராதியில் 'இரசவாதம்' என்பது "இரும்பைப்பொன்னுக்கும் வித்தை" யென்று சொல்லியிருக்கிறது. "கரும்பொன்னு மிரும்பினமம்" எனநிகண்டிலும் காணலாம். இக்கரும்பொன்னுகிய அயத்தின் வெண்மைச்சத்தே 'வெண்பொன்' அல்லது 'வெள்ளி': அயத்தின் செம்மைச்சத்தே

'செம்பொன்' அல்லது 'செம்பு': இவ்விரண்டின் ஆசிட்டு விளக்கிய கலப்பெடைக் கூட்டேதான் 'தங்கம்'. இவ்விதம் செய்கையில், பாதரசமோ வாலைரசமோ சேர்ந்தால் வங்கம் குத்தியூதினுல் வாதம் ஓடியேபோம். இரும்பிலிருந்து ஈயமும் ஆகிறது. இதில் ஆசிடையிட்டு விளக்கல் மூன்றுவிதம்: க்ஷாரம், லவணம், பாஷாணம் என்பன. க்ஷார முறையால் எடை (*Specific gravity*) யும், லவணமுறையால் வர்ணமும் (Metalic lustre), பாஷாண முறையால் கழிவு (Refuse) நீக்கமும் உண்டாகும். இதுவே வாதமார்க்கம்.

இம்மார்க்கமானது வைத்திய பாகத்திற்கு மெத்த உபயோகமாகிறது. "திடமான வாதியென்ருற் செய்வான்பாரே" என்று அகஸ்தியர் 'மாத்திரை' செய்யும் திறமை கூறியிருக்கிருர். 'மாத்திரை' என்பது 'குளிகை, (pills) எனப் பொருளாயினும் 'உருக்கினக்கட்டு' களுக்கே இயற்பெயராக வழங்கி வருகிறது. இம்மாத்திரைகளைத் தலைமுறை தலைமுறையாக வழங்கலாம். காற்றினுனும், நீரினுலும், நெருப்பினுலும் கெடாத ஔஷதமே மாத்திரை. இத்தகைய ஔஷதம் எத்தனை தேடினுலும் ஆங்கிலேய முறைகளில் எள்ளளவும் இல்லை. ஆகையினுல் இந்துவைத்திய சாஸ்திரமானது மெத்தச்சிறந்ததென்பது ஸ்பஷ்டமாய் அறியத்தக்க விஷயம். இம்மாத்திரைகளையே (Talisman) என்று மேனுட்டார் கூறுகிருர்கள்.

(இன்னும் வரும்.)

ஓர் வைத்தியன்.

XII

கீசகவதம்

மூன்ருவது களம்.

(140-வது பக்கத்தொடர்ச்சி.)

விராடராஜன் வைபவத்துடன் பிரவேசிக்க.

சேவகன்-வழி! வழி! விலகு! விலகு! உம்! உம்! விலோ! விலோ!

விராடன்-சேவக விந்தச் சிங்கா தனத்தை
மாதவ ரவர்க்குத் தருதி!
(சேவகன் எடுக்க
விரைவில்! (அளிக்க.

கங்கபட்டர் உட்கார்ந்து-
சித்திரப் படங்கள் சிறந்து விளங்க
வெத்திறத் தோறு மிறுமாப் படைய
நற்றிற முளதிந் நாடக சாலை!

விராடன்- உத்திரை பிறந்த காவினி லிவந்து
இத்திறச் சாலை யேற்பித் ததனு
லிப்பொழு தவணன் னடனம் பயில
வாய தைய !

கங்கபட்டர்- விகிதம்! விகிதம்!
வேண்டது தானே!

மந்திரி- விமல வாரிய !
அவிநயர் தமக்கினி தருணி னவர்கள்
நவின நடனம் செய்வர்.

கங்கபட்டர்- நல்லது!

விராடன்-சேவக! சந்தனம் சிந்தா தெடுத்து
மந்திரி கைக்கொடு! மகிழ்ந் தெல்லாரும்

ஒக்கு மாறு தாம்பூல மளிக்க! (மந்திரி
சந்தன முதலின ஈக.
ர்-கொஞ்சங் கூடக் கொடும்!
சி- கூசாதேயும்!
எனது பங்குங் கூட இருக்கட்டும்!
எல்லாவரும் சந்தன புஷ்ப தாம்பூலம் புனைக.)
(நடனம் தொடங்க. வாத்தியம்.)

(பிரகந்நளே, உத்தரை, கோமளே, சுமதி
முதலாயினர் பிரவேசிக்க)

கோமளே - நீதான் போவேன்!

உத்தரை - நன்றயிருக்கிறது! நான்மாட்டேன்.

சுமதி - சுருதி சேர்த்தாய்விட்டது! கோமளாய்! இதென்ன தர்க்கம்! நாம் கற்றதைக் காண வன்ரே, ராஜன் விஜயமாயிருக்கிறார்?

(கோமளே நடனம் செய்க.)

இராகம் - வசந்தம். ஆதிதாளம்.

இங்கித லீலாமிர்தம் - வேணு
சுந்தர காண மிர்தம்.
மந்தர மானஸ தந்தர வைபவ
விச்சின் னௌபாஸன வேதாந்த விசுருதம் (இங்.

பிரகந்நளே - அம்மா உத்தராய்! தாமத மேன்? பெற்ற தகப்பனுரிடம் குழந்தைகள் தாம் கற்ற வித்தையைக் காட்டினாலல்லவா, அவர்கள் மிகவும் பிரியப்படுவார்கள்! ஒன்றும் சிந்திக்காதே! சீக்கிரம் வா!

(உத்தரை நடனம் செய்க.)

இராகம்-கல்யாணி. ஆதிதாளம்.

நீஇஇ-இஇவர மளிமதன கோபாலாஅஅ
அஅஇப-சுபகதி தருவிமல (நீஇ)

1. காஅஅ-மா-காரா
ரீ-மா-காரா
ஸ்ரீங்-காரா
லீ-லா-பே-தா (நீஇ)

2. மாய மாகிமன மாகி யாதிஞரு
மாதி யாகியறி வாகி நீகமுறு (நீஇ)

3. ஸ்ரீஇஇ இஇகர நளின தளநய-ந,
மிருது வசன தருணியி தரமண
தவசர ணவிணைக டராம லடியனே [விடு,
ரெணுகினேவு வரவுபா யமளி (நீஇ)

4. நீஇஇஇஇ யிதமுட-னெனே யினுமணே [யாஅஅ,
அஅவிதமுனுப காரமல ராமவினி [வாதுபுரி
யாஅது வரலநீதியல தாகுமது மனமூ [அஅ,
யதுகுலப் ரியமுக விமலவி கிதசுக
சுருதிமுர ளியமிர்த காண லோல(நீஇ)

சந்யாசி - கா-ண-லோ-லநீஇ (இருபக்கங்களி லும் சிரக்கம்பனம் செய்க)

தீக்ஷிதர்-ஹா! ஹா! என்ன ரஸம்! என்ன ரஸம்! (பக்கத்தில்) கால் நாலானல் ஓலமாகத்தானிருக்கும்!

ஓய்! ஓய்! ஒரே இழுப்பாக இழுக்கப்போகிறது! சற்று நிதானியும்!

சேவகன் மறைவில் } இராகம்-யமுனு. ரூபகம்.

"ப்ரேமை மீருது- கிருபை பாரடி
பெண்ணே-ரதிக், கண்ணே."

தீக்ஷிதர்- சபாஷ்!
ஹா! ஹா! சித்ரம்! சித்ரம்! பாட்டுப்பாடினால் இப்படிப் பாடவேணும்! சபாஷ்! சபாஷ்!

சந்யாசி-ஓய்! ஓய்! ராஜசபை! கொஞ்சம் ஞாபமிருக்கட்டும்!

தீக்ஷிதர்-சரி! சரி! சந்யாசியோடு சேர்ந்தால் சர்வமும் தத்தம் பண்ணிவிடவேணும்?

சேவகன்-சத்து!

விராடன்- பார்க்கப் பார்க்கப் பக்குவ மாக
பவிப்ப தாவிது பாடினர் யாவர்?

உத்தரை- பிரகந்நளே யெனுமிப் பேதை பாடி [னள்.
தாளத்தோடே தானவ ளியையின்
ஏதில ரிவளே யெதிர்ப்பது மரிது!

விராடன்-உத்தம ரேயிம் முத்து வடத்தை,
யுமது கையா லுபசர மாக,
பிரகந்நளே யெனுமிப் பிரியை கழுத்தி
லணியும்! (கொடுக்க)

கங்கபட்டர்- அம்மா! அன்புடன் கைக்
ளும்! (ஆரம்போட

ஓர் வீராவேசம் கேட்க.
முண்டாத்தட்டுதல்-டாட்டா!

வீரதொனி-யாஅஅஅஅஅஅஅஅஅர்!
போஓஓஓஓ-உப்!
(எல்லாரும் வியந்து வெளிவர)

அரங்கத்திற்குப் போம் வழி.

ஜனங்கள்-பிடி! பிடி! அடி! கட்டு!

சிலர் - பரபி! பத்துப்பேரைக் கொன்றன!

விராடன்-அரவ மென்ன வறிந்துவா சேவக!
(சேவகன் ஏகி-வர)

சேவகன்-வாசவ னென்னெரு மல்லனு-மவன்
யாசகம் செய்வனு மல்லேயே-யதி
லேசகம் செய்தவ ரில்லேயா-மினி
யோசனே யென்னமோ சொல்லேயே!

விராடன்-அற்புதம்! அற்புதம்! ஆனந்த வடிகாள்!
என்னு மில்லா திப்போ தியங்க
என்ன செய்வேம்? எமதறி வின்றிச்
சமர்த்த னுகச் சமரே செய்யச்
சொன்னர் யாவர்?

மந்திரி - சோதனே செய்து
சீக்கிரம் சேர்வன். (தெருவும்.
(பலாயனன் சட்டுவமெடுத்து ஓட)

பலாயனன்- சொல்லச் சொல்லப்
போகாமற் போக்கி நித்தனங் காட்டவா!
சட்டுவ மெடுத்துச் சமர்த்தெலாஞ் சரியப்
பல்லே யுதிர்த்துப் பருந்தாட் டாட்டிக்
கொல்ல வல்லா ரில்லே யென்ற?

தெருவழி ஒருவன்-இவனென்ன மடையன்! என் கால் வீண நசுங்கிப்போயிற்று! இவனே யென்ன வெட்டிக்கொண்டு போகிறது? என்ன ஆத்திரம்? அரமனே யாளென்றல் ஐந்து கொம்பா? மந்திரி வருகிறார்! மாட்டிவிடுகிறேன்.

மந்திரி-நீயே னிவிடம் நின்று நலிந்தாய்?

ஒருவன்-சுவாமி! சுவாமி சட்டுவ மெடுத்துப்
பலாயன னேட, யானு மோடி
யவனேப் பற்ற, வென்னே யவனும்
விரலே யழுத்தி, விரைவிற் போனன்!

மந்திரி திரும்பி-பிரயவர மகிப! பலாயன னிப் [போ
சிலகத் தோடே சேர்ந்தா னென்னத்
தெருவழி யேகத் தெரிந்த செய்தி
யறிந்து வந்தேன்.

விராடன்- அனியா யம்மே!
இனிய வடிசி லினியார் செய்வர்?
வீண்வம் புக்கேன் வெகுளிச் சென்ற [ன்?
நமனுக் கிரையா நாச மாவனே!
பாவம்! பாவம்! பரிசா ரகனே!
விரைவிற் போவம், விபுத வரசே!

டர்-பொருகிறவீரன் போர்செய் தாலும்
ருகிற விதிதான் வழித்தங் கும்மோ?
க்பலாயன னின்றிவ னுவி பறிப்பன்;
பரிபவம் வேண்டாம் புரவல!
ர் மடையனை யறிவேன்; மற்போர் புரிவன்.
ராடன்-என்னி, னினிமேற் றாமத மின்றி
யரங்க மணைதும், அனைவரு மாக. (அனை
வரும் வர.

(மற்போர்க் களம்)

வாசவன்-நில்! நில்! நானொரு நல்ல புத்தி
சொல்வது கேட்டுச் செருசெய லாம்நீ!
சட்டுவ மெடுத்துச் சமைக்குந் தொழில்
[விட்
டிப்போர் புரிய வெவரே யேவினர்?
உன்னுட னெதிர்த்தா லுலகோர் சிரிப்பர்!
உயிர்மே லாசை யுள்ள து நிஜமேல்,
ஒன்று மூளரா தோடிப் போநீ!

பலாயனன்-மட்டுகள் சொல்லின் முட்டாளே!
[யுனை
விட்டே னல்லன்! துட்டப் பயலே!
பொட்டா வுன்னைப் புடைத்துப், பறக்க
விட்டாற், பாவ மொட்டிக் கொளுமோ?
முட்டியு மூரனும் மூடிக் கொள்நீ!
மூத்தா னுன்னை முகக்கப் போறுள்!

வாசவன்-மிச்சந் தின்னுங் குச்சப் பயலே!
அச்ச முறுமிவ் வடியினை மாற்றி
விட்டுப், பின்னர் வீரம் பேசே! (மற்
போர் செய

(அரங்கத்துளார் தம்மிற்புகலல்.)

கரகர வென்று சாரிகள் சுற்றக்
கடிதொடர் கையைக் கட்டி யிழுக்க!
நிலத்தை யுதைத்து நிமிர்ந்து குனிய!
வலசார் காட்டி யிடசா ரகல!
வாசவன் முதுகுதை யுண்டது வளையுது!
பிடித்தான் மடையன்! பின்கட் டாகக்
காலைத் தட்டிக் கடுகி யடித்தான்!
மருமம் பாய்ந்தான் மடையன் றானே!

(வசவன் வீழ- அனைவரும் எலுமிச்சம்
பழமெறிந் தார்க்க)

விராடன்-பலே! பலே!பலாயனு! சபலம்!சபலம்!
கைகொடு! இந்தா கனக வளைகள்.

(கைகொடுத்து வளையீந்து தேர்மேல்
வைத்துச் செல்ல)

(மூன்றும் அங்கம் பின்வரும்.)

Legal Notes.

சட்டக்குறிப்புகள்.

திருநெல்வேலியில் ஓர் தாசியின்மேல் ஓர் காரியஸ்தன் தன்னை அடிதடி செய்ததாகக்கேஸ் கொண்டுவரவே, மேற்படி கேஸ் விசாரணை காலத்து, தாசியானவள் காரியஸ்தனை "நீர் உமது எஜமானனுடன் புணரும்படி வற்புறுத்தின தற் கிசையாததினாலல்லவா இந்தக்கேஸ் என்மேல் கொண்டுவரக்காரணம்?" என்று எதிர் சவால் செய்தாளாம். இது விஷயமாக மேற்படி காரியஸ்தனுடைய எஜமானன் தாசியின் மேல் மான நஷ்டக்கேஸ் கொண்டுவரவே ஐகோர்ட்டாரவர்கள் சாக்ஷிகளைக் கேள்விகள் கேட்கும் சுதந்திரம் தாசிக்கிருந்தபடியால் அதன்படி கேட்டகேள்வி விஷயம் மான நஷ்டமாகாதென்று தீர்மானித்துவிட்டார்களாம்.

லாயர்.

இக்கேசில் சட்ட விஷயமானது எப்படியிருந்தாலும், காரியஸ்தன் செய்ததாகக் கேட்ட

கேள்வியானது, எஜமானன் செய்யச்சொல்லியிருக்கலாம், என்ற பொது அபிப்பிராயத்தை வெளியிடாமற் போகாது. "ஓர் ஸ்திரீயானவள் தான் 'தாசி' என்னும் நாணமில்லாத்தன்மையினாலேயே அவதூறு யார்பேரிலும் சொல்லலாம்." என்ற எண்ணத்திற்குத் தக்கபடி டிக்ரியும் ஏற்பட்ட விஷயமானது எல்லோர்க்கும் மனக்கவலையை விளைவிக்க ஏதுவாமே!

சிறுவனோடு செய்த உடன்படிக்கை.

மஞ்சகுப்பம் ஜில்லா திண்டிவனம் தாலூக்காவில் A என்கிற ஒருவன் சிறு வயதுள்ள மைனராகிய B என்பவனுக்குத் தன் நிலங்களை விற்றுப்போடுவதாய் ஒப்புக்கொண்டு, நிலங்களையும் விற்றுப்போட்டான். நிலங்கள தக்ஷணமே சுவாதீனம் செய்யப்பட்டன. சிலதினங்களுக்குப்பிறகு, A என்பவன் தன் நிலங்களைச் சுவாதீனம் செய்துகொள்ள திண்டிவனம் டிஸ்டிரிக்ட் முன்சீப் முன் வியாஜ்யம் கொண்டுவந்தான். முன்சீப் அவர்கள் மைனராயிருந்த B என்பவனுக்கு விற்றது விற்பனையாகாது என்று வாதி பக்கம் தீர்ப்புச்செய்து, நிலங்களுக்குச் சொந்தக்காரன் A என்பவன் தானென்று தீர்ப்புச்செய்தார். பிறகு அப்பீல் செய்ய, கடலூர் டிஸ்டிரிக்ட் ஜட்ஜியும் முனிசீபு தீர்ப்பையே அனுசரித்துவிட்டார். ஐகோர்ட்டாருக்கு இரண்டாவது அப்பீல் செய்யப்பட்டது. ஐகோர்ட் ஜட்ஜிகளும் பிரிவிக்கௌன்சில் (Privy Council) ரூலிங்கை யனுசரித்து மைனருக்கு விற்ற சொத்து விற்பனைக் குத்தகாது என்று தீர்மானம் செய்து விட்டார்கள்.

சு. ப.

News and Notes

வர்த்தமானங்கள்.

கோயமுத்தூர் காலரீலை

பனியதிகம். பிளேக்வியாதி விட்டவாலை. இராமநாதபுரத்தில் குடியேறின ஜனங்கள் அக்கிராமத்தில் நோய் குடிபுகவே, திரும்பவும் கோயமுத்தூர் வருகின்றனர். இதைக்கண்டு வெளியூர்களுக்குப்போனவர்களும் திரும்பிவருகின்றனர். ஆனால் வந்தவர்கள் க்ஷேமமாகவிருக்கின்றது ஓர் சுபகரமாம். திருப்பூருக்கு பிளேக் ஆபிசருடன் சர்கூட்வந்திருந்த குதிரைக்காரன் அந்நோயால் திருப்பூரில் மாண்டுபோனான்.

கொத்தமங்கலத்தில் மணிபகாரனைக் கொலை செய்த கேஸ் 1. 6. எதிரிகள் விடுபட்டார்கள். மற்ற 4 குற்றவாளிகளுக்கும் மரணதெண்டனை விதிக்கப்பட்டது.

பரமத்தி லஞ்சக்கேசில் கோர்ட்டு கலையும் வரை காவலும் 500 ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்ட போலீஸ் இன்ஸ்பெக்டரும் சப் இன்ஸ்பெக்டரும் அப்பீல் செய்து விசாரணை முடிந்தது. தீர்ப்பு விவரம் பின்னால்வரும்.

கரூர் சப் மாஜிஸ்ட்ரேட் வியாசராவ் அவர்களுக்கு லஞ்சம் வாங்கிக்கொடுத்ததாக பிரைவேட் வக்கீல தாந்தோணிராவவர்கள் மேல் நடந்தகேசில் தாந்தோணிராவவர்களுக்கு 3மாத காவல்தண்டனையும் 1000ரூ. அபராதமும்விதிக்கப்பட்டது.

கரடிவாவி இராமசாமி நாயுடுவின் கேசுகள் அப்பீலில் அநுகூலமாகி மேற்படி நாயுடு அவர்கள் விடுதலையடைந்தார்.

...ரி ரயில்வேக்கிளையில் டிராலி வண்டி ...லும் டன்னலுள்தாக்கி டிராலியிலிருந்த ...ளில் ஒருவர் கொலையுண்டார். இருவர் ...பட்டார்கள்.

கோயமுத்தூர் கஜானாவில் 1144 ரூபாய் ...ங்கிய பை காணமற் போயிற்று. இவ்விஷ...த்தில் இரண்டு ஷராப்புகளையும் மேற்படி தொகையைச் செலுத்திவிடும்படி தாசில்தாரவர்கள் உத்தரவு செய்திருக்கிறதாக வதந்தி. போலீசார் விசாரணை எவ்விதம் முடிவு பெறுமோ தெரியாது.

டேராடுன் காலேஜ் பிராஞ்சு கோயமுத்தூர் பழய தாலூகா கச்சேரியில் கட்டடம் முடியும் வரையில் வைக்கப்படுமென வதந்தி.

உடுமலைப்பேட்டையிலும் வெள்ளக்கிணற்றிலும் ஜின்னிங்கு பாக்டரிகள் ஏற்பட்டுவிட்டன. குனூரிலும் ஒன்று ஸ்தாபனமாகுமென உத்தேசம்.

காங்கயத்தில் ஓர் ஆசாரியொருவன் இஞ்சன் வகைரு உதவியின்றி 1 அடி சுற்றளவுள்ள நான்கு இருப்புக்குழாய் வழியாகக் கிணற்று சலத்தை உயரவரச்செய்யும் யந்திரமொன்றை நிருமித்திருக்கிறானாம். இது இன்னும் வெளிவரவில்லை. இவ்வெந்திரமானது தேர்ச்சியடைந்து விலைபெற்றால் குடிகளுக்கு மிக்க நன்மையுண்டாமென யாம் சொல்லத்தேவையில்லை.

கோயமுத்தூர் முனிசிபாலிடிக்கு ம-ா-ஸ்ரீ டிப்டி கலெக்டர் ராஜாசார் அவர்களைச் சேர்மனாக நியமனம்.

வெளியூர் வர்த்தமானம்.

இவ்வருஷத்தில் லாகூரிற் கூடிய மகாஜன சபையில் முக்கியமாக சட்டசபை மெம்பர்களைத்தெரிந்தெடுப்பதில் மகமதியர்க்கு விசேஷ பாத்தியதையை விளைவித்திருக்கிறதென்றும் ஜாதீய உணர்ச்சியைக் கிளப்பியிருக்கிறதென்றும் குறை கூறப்பட்டிருக்கிறது. யார் எவ்வித அபிப்ராயங் கொண்டாலும், வெகுநாளாய் நிலைபெற்று வந்த இச்சபையானது அடியோடே அற்றுப்போவது நன்மையோ தீமையோ என்பதை எல்லாவரும் மனப்பூர்வமாயறிவார்கள்.

இமோத்கிரி பர்வத வழியாக சீனத்துடன் வியாபாரம் செய்ய இருப்புப்பாதை போடலாம் என்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறதாம்.

ஸ்பானியா தேசத்தில் புயலாற் பெருத்த சேதமென பத்திரிகைகள் கூறுகின்றன.

நியூயார்க்கில் லௌசிராபின் விட்ஸ் என்னும் ருஷிய மாது சிரோன்மணி இறக்கடித்த முயலொன்றை மின்சாரப் பிரயோகத்தினால் பிழைக்கச் செய்தனளாம். மனிதரையும் பிழைக்கவைக்கலாமென்று சொல்லுகிறாளாம். இது மெத்த விநோதமும் உபகாரமுமாம்.

கலிகாலத்திற்கேற்ற நவீனப்பிறப்புகள்:— இரங்கூனுக்கடுத்த இமாயு என்னுமிடத்தில் ஒரு பெண் இரட்டைப்பிள்ளைகளைப் பெற்றாள். பிறந்தவை இரண்டும் பெண்பிள்ளைகளே. வாழைப்பழங்களிரண்டு ஒட்டி ஒரே தோலோடிருப்பதுபோலவே அப்பிள்ளைகளின் மார்பிரண்டும் ஒட்டியிருந்தும் மற்ற அங்கங்களில் உதடு

முயலின் உதட்டைப்போலவும் நாசி சிறுத்தும் இருந்தனவாம். அவைகள் பிறந்த கொஞ்சநேரத்திற்குப் பின் இறந்துபோய்விட்டன. மேலும் சுவிஜ்ஜர்லாந்து என்னுந் தேசத்தில் ஒருபெண் ஒரு பிள்ளையைப் பெற்றாள். அதற்கு யானையைப்போல் மூக்கிலிருந்து 5 அங்குலம் துதிக்கை தொங்குகிறது. இவைகளெல்லாங் கவனிக்க கலிகாலத்திற்கு நல்ல உதாரணங்களென்றே புலப்படுகின்றன.

ஒரு விநோதப் பிறவி— கோலார் நாட்டைசேர்ந்த கொத்தூரில்பிறந்த ஒரு ஆண் குழந்தை இரண்டு தலை, நான்கு கை, நான்குகால், ஒரு வயிறு, ஒரு தொப்புள், இவைகளுடன் காணப்படுகுன்றனதாம். ஒருதலை கிழக்கையும் மற்றொரு தலை மேற்கையும் நோக்குகின்றனவென்றும், தாயும் குழந்தையும் சௌக்கியமாயிருப்பதாயும் சொல்லப்படுகின்றது.

பிராமணஸ்திரீ கேஸ்— மறையூர் கமலாம்பாளென்னும் 18 வயதுள்ள பிராமணஸ்திரீயை மாந்திரீக நடேசய்யர் இட்டுக்கொண்டு பழனி, மதுரை, தேவகோட்டை, திருவண்ணாமலை, முதலியவிடங்களுக்குப்போய் ஸ்தலவாசஞ்செய்துவிட்டு பிறகு பிரான்சிலாக்கா அம்பகரத்தூருக்குக் கொண்டுவந்து ஒளித்துவைத்திருக்க மேற்படியாள் புருஷன் இ. பி. கோ. 498-வது செக்ஷன்பிரகாரம் சப்மாஜிஸ்டிரேட்முன் கொண்டுவந்தகேசில் மாந்திரீக நடேசய்யர் மாயவரம் சப்மே மிஸ்டர் T. S. முத்துசாமய்யரவர்களால் ஆறுமாதங் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பெற்றார். இக்கேஸ் மாயவரம் டிவிஷனல் மாஜிஸ்டிரேட்டாரவர்களிடம் அப்பீலுக்கு வந்ததில் டிப்டி மேபரவர்கள் மேற்படி கமலாம்பாள் அவள் புருஷன் மாந்திரீகன் இவர்களை நேரில் பார்வையிட்டு கீழ்க்கோர்ட்டு தீர்ப்பை உறுதிசெய்தார்கள்.

திருவனந்தபுரம் அக்கவுண்ட் ஆபிசில் 6500 ரூபாய் களவு போனதால் குமாஸ்தா அனந்தகிருஷ்ணய்யர் மேல் கேஸ் நடந்துவருகிறது.

அலிபூர் வெடிகுண்டு கேசில் 5 ...லை: மற்றவர்க்கு தண்டனை:-

டிரான்ஸ்வால் இந்தியரின் கஷ்ட... நிதிக்காக மிஸ்டர் டாடா 25000 ரூ. ந...டை யளித்திருக்கிறார்.

1910-ஸ்ரீ மே மீ ஓர் பெரிய வால் ந...திரம் உண்டாகப்போகிறதாம். அது நிமி...துக்கு 1736 மைல்கள் வீதம் பூமியை நோக்...சஞ்சரிக்குமாம்.

பிரான்சில் தரையில் போவது போலவே நீரிலும் போகக்கூடிய மோடார் வண்டி கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறதாம்.

ஸர் ராமேச சந்திர தத்தர் காலஞ்சென்றுவிட்டது தேசத்தோர்க்கு ஓர் பெருத்த துயரமாம்.

நாசிகையில் ஜில்லா கலெக்டர் மிஸ்டர் ஜாக்ஸனைக் கொலை செய்தது மகாபாதகம். இவர் நமது தேசத்தாருக்கு மெத்த வேண்டினவர். இத்தகைய கொலைஞர்களாகிய பாபிகளுடைய வர்க்கமே தொலையாதா!

நூதன பத்திரிகை வரவு:- சுதேசபந்து: இஃது மதிராசில் வாரீந்தரப் பத்திரிகையாக பிரசுரமாகிவருகிறது? வருட சந்தா ரூபாய் 5. கடியாரம் ஒன்று இனாம்.

புத்தக வரவு:- ஸ்ரீதர வெங்கடேசார்யரவர்கள் திவ்விய சரித்திரமொன்று வரப்பெற்றோம். லோகாநுகூலன் பத்திராதிபர் பிரம்மஸ்ரீ C. S. ராதாகிருஷ்ணய்யரவர்கள் மேற்படி சரித்திரத்தை உலகோர்பயனடையும்படி பிரசுரித்திருப்பதைக்கண்டு மகிழ்ந்தோம். மேற்படி ஆசார்ய புருஷரின் சீலமும், அமைவும், ஆதரணையும், அன்பும், பக்தியும், கர்மவைராக்கியமும், எல்லாவர்க்கும் அங்கை நெல்லிக்கனிபோல் சத்ய சந்தானு தர்மத்தை விளக்கிச் சத்குரோபாசனையைப் புகட்டக்கூடியதாகவிருக்கிறது.-

ஓர் முக்கிய அறிவிக்கை.

சகல சுகுண தனசம்பன்னர்களான எமது தேசாபிமானிகளே! இந்தக் கோயமுத்தூர் ஜில்லாவில் திருப்பூரானது வர்த்தக விஷயத்தில் ஒரு முக்கியமான ஸ்தலமாயிருப்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயம் இது ஒரு ரயில்வே ஸ்டேஷனாயிருப்பதுமன்றியில் ஈரோடு சத்தியமங்கலம் கோபிசெட்டிபாளையம் பவானி புளியம்பட்டி. சென்னிமலை ஊத்துக்குழி தாராபுரம் காங்கயம் உடுமேல்பேட்டை நகமம் புள்ளாச்சி கோமங்கலம், குவூர் பிர்க்கா கிராமங்கள் பல்லடம் திருப்பூர் பிர்க்கா கிராமங்கள் ஆகிய இவற்றின் மத்தியிலுமிருக்கிறது. மெற்படியூர்களிலிருந்து விளையும் பருத்தியானது இவடம்தவராமல் வருகிறது- இவ்வூரில் பஞ்சரைக்கும் கம்பெனி ஒன்றும், பஞ்சு மூட்டைசெய்யும் கம்பெனி ஒன்றும், ஆக இரண்டுதான் இருக்கிறது. மேற்படியூரிலிருந்து பருத்தியைக் கொண்டுவந்து மூட்டை கட்டுவதற்காக மாத்திரம் திருப்பூர் உபயோகமாகிறதென்றால், இதைவிட மனோவருத்தத்தைக் கொடுப்பதும், காரியாலோசனையில்லாததும் வேறு எதாவது உண்டா? ஐயா! மேற்படி ஊர்களில் கனவான்கள் இல்லையா? தனவான்களில்லையா? ஆலோசனை புத்தி சக்தி சாமர்த்தியமுள்ளவர்கள் யாவரும் இல்லையா? எவ்வளவோ புண்ணியவான்கள் இருக்கிறார்களே நமது தேசம் பாதாளத்திற்குப் போகவேணுமா? புண்ணியவான்கள் எல்லாவரும் ஒருமைப்பட்டு ஒரு நூலாபீசு எற்படுத்துவது உசிதமல்லவா? சுமார் 1250000ரூபாய் மூலதனம் ஏற்படுத்தி 10000பங்குகளாகப் பங்கு ஒவ்வொன்றுக்கும் 125 ரூபாய் வீதம் சேகரம் செய்வது முடியாத காரியமா? கேவலம் 15ரூபாய் கந்தாயமுள்ள குடியானவனும் பங்காளியாகலாமே, ஏழை எளிமையர் 1000பேர் மரியாதையாகப் பிழைக்க வழியேற்படுமே. முதலாளிகளுக்கு லாபம் கிடைக்கமாட்டாதென்று ஒரு சம்சயம் ஏற்படலாம், இவ்விடம் பருத்தியைக்கொண்டுவரும் செலவையும் பிறகு அப்பருத்தியைப் பஞ்சாகப் பண்ணி நூல்செய்ய இதாவிடங்களுக்கு அனுப்பும செலவையும் மறுபடியும் அந்த நூலைத் தருவிக்கும் செலவையும் பார்த்தால் என்னகுறைந்தாலும் 100க்கு மாதம் 1க்கு3 ரூபாய் லாபத்திற்குக் குறைபடாதென்பது எமது அபிப்பிராயம் ஆகையால் நமது தேசாபிமானிகள் யாவரும் அவரவர் சம்மதத்தை உடனே அடியிற்கண்ட விலாசத்திற்குத் தெரிவிக்கக்கொருகிறோம் மேற்படி கம்பெனியைச் சட்டப்பிரகாரம் ரிஜிஸ்டர் செய்வித்து லிமிடெட்' ஆகச்செய்து தொழில் நடத்திவரலாம். மேறபடி சம்மதம் தெரிந்தமேல் இதாவிஷயயங்களுக்கு வேண்டியஎற்பாடுகள் செய்துவிவரமான நோட்டீசு அனுப்பபபடும். இதுவரை 1500 சம்மதங்கள் கிடைத்திருககிறது

பிரபஞ்ச பத்ரிகை எடிடர் திருப்பூர் என்று மேல்விலாசம எழுதியனுப்பவும்

அ. கெ. ற. ச. வே. வே. பெ. ச. ந ல. ௦. ஜி ஹ

காசி பட்டுப் பீதாம்பரங்கள்.

சுத்தமான பட்டு! சகாயவிலைகள் !! நாணயமான ஜரிகை !!!

பிடித்தமில்லாததைத் திருப்பிப்பெற்றுக்கொள்வோம்.

கீழேகண்ட பட்டு தினுசுகள் எல்லா நிறத்திலும் கிடைக்கும்.

பட்டு சேலைகள்.—16 முழம் நீளம் $2\frac{1}{2}$ முழ அகலம் விளிம்பும் முந்தியுஞ் ஜரிகை வேலைகள் உடல் சாதா, விலை ரூபாய் 20 முதல் 50 வரை.

அதேமாதிரி சேலை உடலிலும் ஜரிகைப்பூ புட்டா போட்டது. ரூபாய் 25 முதல் ரூபாய் 100 வரை.

ரவிக்கைகள்.—விளிம்பும் முந்தியும் ஜரிகை வேலைகள் உடல் சாதா ரூபாய் 2முதல் ரூபாய் 8 வரை.

உடலிலும் புட்டா ஜரிகை பூவேலை செய்தது ரூபாய் 3 முதல் 20 வரை.

துப்பட்டாக்கள்.— 6முழ நீளம் $2\frac{1}{2}$ முழ அகலம் விளிம்பும் முந்தியும் ஜரிகை வேலை உடல் சாதா ரூபாய் 8 முதல் 25 வரை.

அதேமாதிரி உடலிலும் சரிகை பூவேலைகள் ரூபாய் 14முதல் 50 வரை.

சவுக்கங்கள்.—$2\frac{1}{2}$ முழ நீளம் $2\frac{1}{2}$ முழ அகலம் சுத்தி ஜரிகை மூலையில் மாங்காய் ரூபாய் $6\frac{1}{2}$முதல் 15வரை.

அதேமாதிரி உடலிலும் பூக்கள் போட்டது ரூபாய் 9முதல் 30 வரை.

வெண்பட்டு வேஷ்டிகள்.— 6, 7. 8, 9, முழம் நீளம் $2\frac{1}{2}$, $2\frac{3}{4}$, 3 முழம் அகலம் சுத்த வெண்பட்டு கோயமுத்தூர் வேஷ்டிமாதிரி சிகப்பு சன்னக்கம்பி போட்டது விலை ரூபாய் $8\frac{1}{2}$ முதல் 20 வரை, அதேமாதிரி வேஷ்டிகள் சிகப்பு சன்னக்கம்பிக்குப் பதிலாக ஜரிகையால் சன்னக்கம்பி போட்டது ரூபாய் 12முதல் 30 வரை.

டை சவுக்கங்கள். — $2\frac{1}{2}\times2\frac{1}{2}$ முழம் சிகப்புக் கம்பிக் கரை போட்டது ரூபாய் 5முதல் 8வரை. ஜரிகைக் கம்பி போட்டது ரூபாய 9முதல் 15வரை.

ஷை. வெண்பட்டு வேஷடிகள் — ருத்திராக்ஷக்கரை போட்டதும் அதேவிலைக்குக கிடைக்கும்.

பட்டுத் தலைக்குட்டைகள்.— $4\frac{1}{2}\times4\frac{1}{2}$ முழம் சதுரம் வெண்பட்டு ஜரிகைக் கரை ரூபாய் 13 முதல் 25 வரை எல்லாக் கலரிலும் கிடைக்கும், மத்தியில் ஜரிகைப்புட்டா பூ போட்டும் கிடைக்கும்.

வைதீகர்களுக்கு சம்பிளி மடிதாவளிகள்.— 6. 7, 9, 12, 15 முழம் நீளம் அணா 10 முதல் ரூபாய் 5வரை.

சுத்தமான கம்பளி போர்வைகள்— 6 முழம் நீளம் 3 முழம் அகலம் எல்லா நிறத்திலும ரூபாய் 5 முதல் 8, வரை.

சாஷ்மீர் கம்பளி நயம் சால்வைகள்.— ஷை அகல நீளம் எல்லா நிறத்திலும் சாதா ரூபாய் 8முதல் 15 வரை பட்டினால் விளிம்பும் முந்திவும் ஜரிகைவேலைசெய்தது மூலையில் மாங்காய் போட்டது ரூபாய் 10 முதல் 20 வரை. ஜரிகையில் அதேமாதிரிவேலைசெய்தது ரூபாய் 12 முதல் 50வரை.

உருத்திராக்ஷங்கள்.— 6 முகம் 33 உள்ள மாலை ரூபாய் 1முதல 5வரை. 7, 8, 9, 10, 11, 12, 13, 14, 15, 16 முகம் தனி மணிகள் ரூபாய் 5முதல் 25வரை. 108 கொண்ட ஜபமாலை அணா 5முதல் ரூபாய் 5வரை.

வயிரவர் காசிக்கயிறு.—1 நெ. 100க்கு ரூபாய்3 2நெ ரூபாய் $2\frac{1}{2}$, 3 நெ. ரூபாய் 2, ஷை சிறிது அணா 6, அதிக சிறிது அணா 4.

பெண்குழந்தைகள் விளையாடும் பித்தளை பாத்திரங்கள் செட்டு.— பித்தளை வெங்கலத்தால் செம்பு, குடம் கரண்டி முதலிய 27 சாமான்கள் அடங்கியது, சிறிது ரூ. 2, பெரிது ரூபாய் 4.

நயம் பால்காயம்.—சுத்தமானது தோலா 1க்கு அணா2

சகலவிதமான ஜர்மன் சாமான்களும் யானை தந்தம் காப்புகளும் கிடைக்கும்.

தளுக்குப் பொட்டு,—என்ற குச்சிலியப் பொட்டு 1000ம் ரூபாய் 1-4-0.

விலை ஜாப்தா இனமாக அனுப்பப்படும்.

சிங்கப்பூர். பினங்கு, முதலிய வெளிதேசத்தார் ஆர்டருடன் முன்பணம் அனுப்பவேண்டும்.

கடிதங்கள் தமிழில் எழுதலாம்.

விலாசம்:— மானேஜர்,
பட்டுப் பீதாம்பரக் கம்பெனி, காசி.
BENARES CITY.

The Coimbatore Friends' Association (Limited.) Printers.

கோயமுத்தூர் பிரண்ட்ஸ் அசோஸியேஷன் (லிமிடெட்.) அச்சுயந்திரசாலை.

இக்கம்பெனியின் மூலதனம் ரூ. (20,000) பங்கு 1க்கு 5-ரூபாய் வீதம் (4000) பங்குகளாகப்பிரித்து, இந்தியன் கம்பெனீஸ் 1882 வருஷத்திய 6-வது ஆக்டுப்படி 1908 வருஷம் மே மாதத்தில் ரிஜிஸ்தர் செய்து நடத்தப்பட்டு வருகிறது.

இக்கம்பெனியில் இங்கிலிஷ் தமிழ் இரண்டு பாஷைகளில், நேர்த்தியாய் பல கலர்களில் அச்சிடுவதும் கில்ட்செய்வதும் பாங்குகளுக்கும் மண்டிகளுக்கும் கணக்குப்புத்தகங்கள் முதலானதும் தயார்செய்து தோல்காலிகோ முதலிய பயிண்டும் செய்யப்படும். இப்போது அனேக பங்குகள் சேர்ந்திருக்கிறது. கொஞ்சம் பங்குகள்தான் பாக்கியிருக்கிறது. இஷ்டமுள்ளவர்கள் மே-டி. கம்பெனியின் மானேஜருக்கு எழுதி அப்ளிகேஷன் பாரங்கள் தருவித்துக்கொள்ளலாம். ரூல்ஸ் புக்குவேண்டுவோர் 4 அணா அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

இக்கம்பெனியானது நிர்வாகசபையார் அவர்களால் நடத்தப்பட்டுவருகிறது. 1908 வருஷம் ம் மாசம்முதல் 1908 வருஷம் டிசம்பர் மாசம் 31-தேதிவரைகூடிய 8 மாதத்திற்கு மாதம் 1க்கு, 100க்கு ரூ. 3-9-5வீதம் லாபம்தேறியிருக்கிறது.

இதன் பிராஞ்சு ஆபீஸ் திருப்பூரில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது.

ஜி. அனுமந்தராவ்,
மானேஜர்.

விளம்பரம்.

இதனால் சகலமான கனவான்களுக்கும் தெரியப்படுத்துவது யாதெனில்,

கோயமுத்தூர் இரங்கேகவுண்டன்வீதி (சின்னக்கடைவீதி) மேல்புரம் சிரேணியில் 487, 488 நெ. கதவிலக்கமிட்ட மெத்தைக்கட்டடத்தில் புதியதாக ஒரு கரூர் ஜவுளிக்கடையில் சேலம், ஜலகண்டாபுரம், தஞ்சாவூர், கும்பகோணம், ராசீபுரம், பவானி, நரசிங்கன்பேட்டை தாராபுரம், குற்றாலம், கொறநாடு, அய்யம்பேட்டை, காஞ்சீபுரம், ஆரணி, மதுரை, உப்பாடை, காக்கிநாடா, நெல்லூர், சென்னை, பனாரஸ், உள்ளூர் முதலிய இடங்களில் தயாராகும் முதல்தரமான ஜவுளி இனுசுகளை சுவல்ப லாபத்திற்கு கரூர் விலைக்கு விற்கப்படும்.

மேற்படி கடையில் விற்கும்படியான சரக்குகள் நயமாயும் கெட்டி சாயமுள்ளதாயுமிருக்கும். கோறும் சரக்குகளில் வித்தியாசமும் மாறுபாடுமில்லாமல் விற்கப்படும். எங்கள் கடையிலிருக்கும் சரக்குகளை எங்கள் ஏஜண்டுகள் மேற்படி இடங்களுக்குச் சென்று எங்கள் கடைக்கென்றே தயார்செய்யப்பட்டிருப்பதால் நெசவு அழுத்தமாகவும் சரக்குகள் திடமாகவும் விலை சரசமாகவுமிருக்கின்றன. எல்லாருடைய அநுகூலத்தின்பொருட்டே யாவர்க்கும் ஒரே விலையாக சுவல்ப லாபத்திற்கு விற்கவேண்டுமென்பதே எங்கள் முக்கிய கருத்து. இன்னும் வேண்டிய விஷயங்களுக்கு எங்கள் கடையின் ஏஜண்டுகளாகிய மகா-ா-ஸ்ரீ K. தேவதத்தய்யர், B. வரதராஜுலு செட்டியார் இவர்களிடத்தில் நேரில் கேட்டுத்தெரிந்துகொள்ளலாம்.

☞ நல்ல முதல்தரமான கஸ்தூரியும் விற்கப்படும்.

V. R. K. & Co.,
Merchants & Commission agents,
Coimbatore and Vellakkener.

161408

இவ்வச்சாபீசில் விற்பனைப்புத்தகங்கள்.

			ரூ.	அ.	பை
தேடச்சிறந்த தெரிசனம் (சிரோட்டயமகவந்தாதி.)	(By Editor)	... ...	0	1	
நன் னூல்யாப்பதிகாரம்	Do	... ...	0	3	(
சிவமகாபுராணம். (வேலாயுதபண்டிதரால்)		... ...	3	0	(
சிவில் புரோசிஜர் கோட். (புதிது)		... ...	0	12	(

கர்தாயம் செலுத்தி வரவு வைக்கும் இரசீது புஸ்தகம் 9 பை. முதல் 2 அணு வரை

ADVERTISEMENTS.

(Per-annum) 1-வருஷத்திற்கு	Full page (முழுப்பக்கம்)	Rs.	10	0	0
	Full Column (அரைப்பக்கம்)		6	0	0
	Half Column (கால்பக்கம்)		3	0	0

விஞ்ஞாபனம்.

எமது அருமை நேயரே! இச்சஞ்சிகை தொடங்கின. உத்தேசமெப் தங்களைப்போல்பவர், எமது நுண்மையறிவிற்கெட்டியதிரட்டிவரைந்துள் றை இனிதிற்கொண்டு, ரிஷிப்ரோக்தமாங் கதை பலவும் வரைந்த விட நேர்ந்த பிழையை மன்னித்து, தெய்வீகமான ஷை கதைகளை அதிசயே யின்றி தர்மார்த்தகாம மோக்ஷமெனும் புருஷார்த்தங்களை எல்லாவருட யும் பொருட்டு, வனப்பெட்டினின் வாய்ந்ததமிழ்க்கவியால் எழுதத்து எமதுபிரயத்நம் சபலமாக, இந்தச்சஞ்சிகையனைத்தருவிக்கவும், தங்களு சிநேகிதர் பலர்க்குந்தெரிவித்து அவரைப்பெறுமாறு செய்யவும், விநய வமாய்ப்பிரார்த்திக்கின்றனம்.

G. HANUMANTHA RAO & Co.,

COIMBAT

The Coimbatore Friends' Association (Limited) Branch-Tirupur.

(1)	(2)	(1)	(2)